தாய்வீடு

229

ISSN 2369-3657

THAIVEEDU | APRIL | 2026

தாய்வீடு | ஏப்பிரல் | 2026



மேற்கு ஆசியாவின் உடைந்த துண்டுகள்...
■ ரதன்

சர்வதேச அரசியல் நகர்வுகளின் உள்ளும் புறமும்
■ எம்.எம். ஜெயசீலன்

தமிழில் முன்னோடிப் பெண் எழுத்தும் பண்டிதை விசாலாட்சி அம்மாள் நாவல்களும்
■ கால சுப்ரமணியம்

ISSN 2369-3657

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS

10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666
srinada21@gmail.com
RE/MAX ACE
#3 - 1286 KENNEDY ROAD, TORONTO, ON M1P2L5
OFFICE: 416-270-1111 - FAX:416-270-7000

Siva Shanmuganathan
Broker
416-545-7482

Joy Selvanayagam
Broker
416-358-6928

Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated

Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Galaxy
Real Estate Ltd. Brokerage*
80 Corporate Drive, Suite 210 Toronto On M1H 3G5 Bus: 416-284-5555 (24 hours)

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

MORTGAGE ALLIANCE
Lic# 10530
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
Address:
50 New Delhi Drive Unit 113, Markham, Ontario L3S 0B5
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
*Independently Owned and Operated.
Tel: 905-475-4750 Fax: 905-475-4770

Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
Find me on: facebook vela4homes
www.vela4homes.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
Bus: (905) 201-9977 *Independently Owned and Operated
Grand Master Club Award Winner-2021 HIGHER STANDARDS
Chairman's Club Award Winner-2017 HIGHER STANDARDS
Supreme Club Award Winner 2018,2019,2020 HIGHER STANDARDS
Chairman's Club Award Winner-2016 HIGHER STANDARDS
Chairman's Club Award Winner-2015 HIGHER STANDARDS
HOMELIFE HIGHER STANDARDS

தாய்வீடு

Publisher & Editor
PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர்
பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர்
கருணா

ஆலோசகர் குழு
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பிரசாத் சொக்கலிங்கம்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

ஓவியங்கள்
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

அட்டைப்பட வடிவமைப்பு
பிரசாத் சொக்கலிங்கம்

வடிவமைப்பு
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

படங்கள்
istock.com,

தட்டச்சு
சாம் டானியல்.

ஒப்புநோக்கல்
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

அஞ்சல் முகவரி
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

ஆக்கங்கள் அனைத்துக்கும்
ஆக்கியோரே பொறுப்பு.
பெயர் தோற்றாத ஆக்கங்களுக்கு
ஆசிரியரே பொறுப்பு.

உண்மைக்கு மாற்று இல்லை

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து திணித்த எதேச்சாதிகாரமான போர் ஒரு மாதத்தைக் கடந்தும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் எதிர்பார்த்ததுபோல, தலைவர்களை இழந்த ஈரான் தலைகுனிந்து அடங்கிப்போகவில்லை. மாறாக, தன் சக்தி அத்தனையையும் திரட்டித் தற் காப்புப்போர் நடத்துகிறது. ஈரானின் எதிர்ப்புச்சக்தியும் போர் உத்திகளும் இஸ்ரேலையும் அமெரிக்கா வையும் நிச்சயமாகத் திக்குமுக்காடச் செய்துள்ளன. இந்த நிலை ஈரானின் ஆதரவாளர்களை மட்டு மல்லாது, உலக ஒழுங்கையும் உலக அமைதியையும் விரும்பும் உலகின் பெரும்பான்மையான மக்க ளையும் உற்சாகமடையச் செய்துள்ளது.

ஈரான் தனது குடிமக்களின் கருத்துச் சுதந்திரத்தை மூர்க்கமாக ஒடுக்குகின்ற, மத அடிப்படைவாத நாடென்பதில் மாற்றுக்கருத்தெதுவும் இருக்கமுடியாது. இருந்தபோதும், அது இறையாண்மையுள்ள, தனி அரசைக் கொண்ட ஒரு நாடு. அத்தகையதொரு நாட்டின்மீது, என்னதான் காரணங்கள் கூறப்பட்டாலும், அனைத்துலக ஒழுங்குகளையும் கட்டமைப்புகளையும் மட்டுமல்லாது, அமெரிக்கச் சட்டங்களையும் மீறி, ஒருதலைப்பட்சமாகத் தாக்குதல் தொடுப்பதென்பது அபாயகரமான முன்னுதாரணம்.

இதே போன்றதொரு, சட்டத்தை மீறிய, எதேச்சாதிகாரமான நடவடிக்கையை வெனிசுவெலாவில் செயற்ப டுத்திய அமெரிக்காவின் தலைமை, ஈரானிலும் தனது நடவடிக்கையில் தான் எதிர்பார்த்த உடனடி வெற்றியைப் பெற்றிருந்தால், அடுத்து கியூபா, கிறீன்லாந்து எனத் தனது ஆக்கிரமிப்புக் கரத்தைத் தங் குதடையின்றி விரித்திருக்கும். எதிர்பாராத வகையிலான ஈரானின் எதிர்ப்புசக்தி அமெரிக்கத் தலைமையைக் கொஞ்சம் நிதானிக்க வைத்திருக்கிறது என்பது தற்காலிகமாகவேனும் ஆறுதலளிப்பதே.

இந்த நிலையில், இந்தப் போர், அதன் பாதிப்புகள் பற்றிய உண்மை நிலைவரங்களைக் கண்டடைவது குதிரைக் கொம்பாகவே உள்ளது. ஈரான் மீதும், ஈரானிலிருந்தும் அன்றாடம் ஏவப்படும் நூற்றுக்க ணக்கான ஏவுகணைகளுக்கு நிகராகவும், சில வேளைகளில் அதை மிகும் வகையிலும், தகவற்போர் கட் டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. இவ்வாறு பல்வேறு வழிவகைகளாலும், பல்வேறு ஊடகங்களூடாகவும் வெளியிடப்படும் பரப்புரைகளிலே எது 'உண்மை ?', 'எது பொய் ?' என்று உய்த்தறிவது பொதுமக்களுக்கு மட்டுமல்லாது ஊடகங்களுக்கும் பெருஞ்சவாலாக உள்ளது.

'போரில் முதலில் மரணிப்பது, உண்மைதான்' என்பது கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க நாடகர் ஏஸ்கிலஸ் சொன்னது. அக்கூற்று முன்னெப்போதையும்விட இப்போது உண்மையாக உள்ளது. அமெரிக்க அதிபர் போர் பற்றி நாளாந்தம் முன்னுக்குப் பின் முரணாகவும் ஒன் றுக்கொன்று பொருத்தமற்றும் கருத்துகளையும் தகவல்களையும் வெளியிடுகிறார். அவற்றுள் பெரும் பான்மையானவற்றுக்கு எந்த ஆதாரமோ உண்மைத்தன்மையோ இருப்பதில்லை. பங்குச் சந்தைகளில் தில்லுமுல்லுகளைச் செய்து தனது குடும்பத்தினருக்கும் தனது சகாக்களுக்கும் கொழுத்த இலாபத்தை ஈட்டிக் கொடுப்பதே அவரின் கூற்றுகளின் நோக்கம் என்ற சந்தேகம் நிலவுகிறது.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தன் பங்குக்கு, 'ஈரான் கொத்துக் குண்டுகளை வீசுகிறது. அது போர்க்குற்றம்,' என்று கூறுகிறார். ஆனால், கொத்துக்குண்டுகளுக்கு எதிரான 2008-ஆம் ஆண்டின் அனைத்துலகத் தீர்மானத்தில் இஸ்ரேலோ, அமெரிக்காவோ, ஈரானோ கைச்சாத்திடவில்லை. அதேவேளை, இஸ்ரேல் லெபனான் மீது பொஸ்பரஸ் குண்டுகளை வீசுவதற்கு ஆதாரம் உள்ளது. இத் தனைக்கும் வேதியியல் ஆயுதத் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இஸ்ரேல் கைச்சாத்திட்டுள்ளது. இந்த உண் மைகளெவையும் வெளியே வந்துவிடாதபடி, இஸ்ரேல் தனது குடிமக்கள் மீது கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. தலைமைகளின் இந்தப் பொய்ப்பரப்புரைகள் போதாதென்று, மழைக்குப்பின் காளான் முளைப்பதுபோல எண்ணற்று முளைத்திருக்கும் சமூக ஊடகச் செய்திப்போராளிகள், தத்தமது கற் பனைக்கு எட்டியவாறு பொய்ச்செய்திகளை உருவாக்கி உலவவிட்டுவருகிறார்கள். அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் நூறாண்டுக்கும் மேலான பாரம்பரியத்தைக்கொண்ட மரபுவழி ஊடகங்களை டிரம்பின் ஆதரவாளர்களான பெருமுதலாளிகள் கைப்பற்றி அவற்றின் குரல்வளையை நெருக்க ஆரம்பித்திருக்கி றார்கள். இந்த ஊடகங்களும் இனிவரும் காலங்களில் தமது நடுநிலைமையை இழந்து பரப்புரைப் பீரங் கிகளாகவே செயற்படும் என்ற அச்சம் நிதர்சனமானது.

இந்த நிலையிலே மரபுவழியான தமிழ் ஊடகங்களும் தமக்குக் கிடைத்த தகவல்களை உறுதிப்படுத் தாமல் வெளியிட்டுவருவது விசனத்தைத் தருகிறது. ஆதிக்கபலம் கொண்டவர்கள் அப்பட்டமான பொய் களுக்கு 'மாற்று உண்மைகள்' எனச் சாயம்பூச முனைகிறார்கள். அந்த நாசச்செயலுக்கு நாமும் துணை போகலாகாது.

இந்தப் போரால் பெரும்பாதிப்புக்குள்ளாகப்போவது வளர்முக நாடுகளின் மக்கள்தாம். எனவே அவர்க ளுக்கு, போர்பற்றிய உண்மையான தகவல்களை எடுத்துச்சொல்லவேண்டியது ஊடகங்களின் கடமை மட்டுமல்ல, அறமும் ஆகும்.

தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...

உண்மைக்கு மாற்று இல்லை 3

சமஷ்டிமுறை தொடர்பிலான ஒரு நூற்றாண்டு விவாதமும் மாகாணசபைகள் அதிகாரப் பரவலாக்கல் அலகாக மாறிய கதையும் 5
- வீரகத்தி தனபாலசிங்கம்

தமிழகச் சட்டமன்றத் தேர்தல் – வெற்றியைத் தீர்மானிக்கும் காரணிகள் 9
- நெல்லை ஜெயசிங்

மேற்கு ஆசியாவின் உடைந்த துண்டுகள்: ஈரான் போர் – அவசரக் குறிப்புகள் 13
- ரதன்

உலகின் முதலாவது செயற்கை நுண்ணறிவுப் போர் இதுவா 20
- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஈரான் மீதான தாக்குதல்: உலக ஆதிக்கத்தைத் தக்கவைக்கும் நடவடிக்கைகளின் ஒரு கட்டம்! 24
- ரவீந்திரன் துரைசிங்கம்

மக்கள் தேசம் கியூபா 28
- சிவா முருகுப்பிள்ளை

எப்ஸ்டீன் கோப்புகள்: பாலியல் துஷ்பிரயோக வலையமைப்புகளும் அதிகாரமும் செல்வாக்கும் மிக்க உலகளாவிய நபர்களும்! 33
- ரூபன் சிவராஜா

மொழியின் அரசியல்: 2 மொழியும் காலனித்துவ அரசும் 39
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

நீர் அரசியல் – சர்வதேச நதிப் படுகைகளின் அதிகாரச் சமநிலை 46
- அருள்கார்க்கி

வெள்ளை மேலாதிக்க அடையாளத்தின் மற்றொரு பிரதி One Battle After Another 51
- ரதன்

இந்தியத் துணைக்கண்டத்தில் மேற்கத்திய மருத்துவத்தின் நுழைவு 54
- பால. சிவகடாட்சம்

மகப்பேற்று காலப் பராமரிப்பும் பெண்களின் வாழ்நாள் ஆரோக்கியமும் 59
- நடராசா சிறிரஞ்சன்

மரணத்துக்கு ஓர் 'இடைவேளை' – Cryonics எனும் உயிர் உறைபாதுகாப்புத் தொழினுட்பம்! 61
- சந்திரகௌரி சிவபாலன்

எழுபதுகளில் ஏழு பழக்கங்கள் 64
- குமார் புனிதவேல்

கேகாலை மாவட்டக் கல்வி அவலநிலை தொடருமா? 67
- நிசன்குமார் கோபிநாத்

உடன்பாடான சூழல் ஒன்றைக் கட்டியெழுப்பல் 72
- அகமட் பிஸ்தாமி

பதின்மவயதினருக்கும் உங்களுக்கும் இடையே... 75
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

ஸ்பேஸ்எக்ஸ் பணிக்குழு – 12 80
- குரு அரவிந்தன்

மனச்சாட்சியை அலட்சியம் செய்யாதே! சர்வதேச மனச்சாட்சி நாள் 83
- சி. நற்குணலிங்கம்

வயோதிபர்கள் நாட்டின் சுமைகளல்ல, நாட்டின் வருமான மூலாதாரங்கள் 86
- இராசகுமார் வினோதன்

ஓர் ஈழ நாட்குறிப்பு – 2 91
- ஓவியர் ஜீவா

துளிர்கால வீட்டுப் பராமரிப்பும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் 94
- செந்தூரன் புனிதவேல்

வசந்தகால வீட்டுப் பராமரிப்பு 97
- வேலா சுப்ரமணியம்

கண்(நூறு): கண்டவையும் காணாதவையும் 99
- பாக்கியநாதன் அகிலன்

காலமும் அரசியலும் கலந்த கட்டுமானம்-2 102
- சொர்ணவேல்

ஈழத்து ஆய்வொழுங்கில் எஸ்.எச்.எம். ஜெமீலின் கல்விப்பணியும் வரலாற்று எழுத்தியலும் 106
- இக்பால் அலி

இலங்கையின் முதலாவது இராணுவத் தளபதி அன்ரன் முத்துக்குமாரு 113
- வே. விவேகானந்தன்

பிடல் காஸ்ரோ – சேகுவேரா: புரட்சியின் இரு முகங்கள் 116
- பழனிநாதன் நிவேதனன்

ஃபிடல் காஸ்ட்ரோ நூற்றாண்டு – 3 கியூபாவின் மருத்துவச் சர்வதேசியம் 120
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

உன்னைப்போல் ஒருவன் ஜெயகாந்தன் 127
- சு. வேணுகோபால்

இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்: நடேசய்யரின் நூல் மீதான ஆய்வுக்குறிப்புகள் 130
- மு. நித்தியானந்தன்

பேரினவாதத் திட்டமிடலும் இனக்கலவரம் எனும் சொல்லாடல் அரசியலும் 140
- சி. கிருஸ்ணபிரியன்

கனடியச் சிறார் இலக்கியவெளியில் பொன்னையா விவேகானந்தன் 146
- ஜெ. கார்த்திக்

ஒடுக்குமுறைகளுக்கு எதிரான நூறுகோடி மக்களின் எழுச்சி 148
- சமதை பெண்நிலைவாத நண்பிகள்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் 151
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் – 10 155
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

தமிழ் இலக்கியத்தின் திருப்புமுனை திரிகூடராசப்பரின் திருக்குற்றாலக் குறவஞ்சி 158
- இராஜேந்திரம்பிள்ளை சிவலிங்கம்

சர்வதேச அரசியல் நகர்வுகளின் உள்ளும் புறமும் 161
- எம்.எம். ஜெயசீலன்

ஈழ இலக்கியத்தில் 'முனைப்பு' சிற்றிதழின் இடம் 166
- ஜிஃப்ரி ஹாசன்

வானத்தின் கீழே பூரணம் ஒன்றுமில்லை: ஈழத்துப் புலவர் சரிதையும் கவிதைத் திரட்டும் 170
- செல்லத்துரை சுதர்சன்

தமிழில் முன்னோடிப் பெண் எழுத்தும் பண்டிதை விசாலாட்சி அம்மாள் நாவல்களும் 178
- கால சுப்ரமணியம்

புதுவையில் புதுமைச் சித்தரான பாரதி 189
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 192
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

மறுபக்கம் 197
- மண்டைதீவு கலைச்செல்வி

முலையறுகாதை! பெண் துயரப் பெருங்கதை 200
- மா. சித்திவினாயகம்

பறவைமனம் 205
- ஆதிலட்சுமி சிவகுமார்

போலிப் பாட்டியும் பேத்தியும் 209
- ஈற்றாலோ கல்வீனோ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

வீரகத்தி தனபாலசிங்கம்



tg.theeban@gmail.com

சமஷ்டிமுறை தொடர்பிலான ஒரு நூற்றாண்டு விவாதமும் மாகாணசபைகள் அதிகாரப் பரவலாக்கல் அலகாக மாறிய கதையும்

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலை புலிகள் இயக்கத்துக்கும் இடையில் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தூதுக் குழுவுக்கு தலைமை வகித்த அன்றைய அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அண்மையில் 'இலங்கையின் சமாதான செயன்முறை; ஒரு உட்பக்க நோக்கு' (The Sri Lanka Peace Process; An Inside View) என்ற தலைப்பில் 400 பக்க நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த நேரத்தில் அரசாங்கம் சமாதானச் செயன்முறையை முன்னெடுத்ததில் எந்தளவுக்கு நேர்மையை வெளிக்காட்டியது என்பதைப் பற்றி எமக்கு தனியான அபிப்பிராயம் இருக்கிறது என்ற போதிலும், அரசாங்கத்தின் தலைமைப் பேச்சாளராக பங்கேற்றவர் என்பதால் பேராசிரியரின் நூல் பரவலான கவனத்துக்கு உரியதாக இருக்கிறது.

நூலின் முதல் அத்தியாயத்தின் முதற் பந்தியிலேயே அவர் இலங்கையில் அதிகாரங்களை பகிர்ந்துகொள்வது தொடர்பிலான யோசனையின் தோற்றுவாய் குறித்து தெரிவித்த கருத்து இன்று (சகல தமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகளும் தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையின் அடிப்படையில் நிலையான தீர்வொன்று காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நிற்கும் பின்புலத்தில்) சகல சமூகங்களைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

தனது நூலில் ஆராயப்படும் அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சமஷ்டிமுறை என்ற தொனிப்பொருட்கள் அவற்றின் தோற்றுவாயை இனத்துவத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளில் கொண்டிருக்கவில்லை என்று எழுதியிருக்கும் பேராசிரியர், இலங்கைக்கு பொருத்தமான ஒரு ஆட்சிமுறைக் கட்டமைப்பாக சமஷ்டிமுறை முற்றிலும் வேறுபட்ட ஒரு பின்புலத்திலேயே முன்மொழியப்பட்டது என்பதை நினைவுபடுத்துகிறார்.

தொடக்கத்தில் சமஷ்டி முறை யோசனை தமிழர்களின் அபிலாசைகளுடன் அல்ல, கண்டிச் சிங்களவர்களின் அபிலாசைகளுடனேயே தொடர்புபட்டதாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'1927 நவம்பரில் டொனமூர் ஆணைக்குழுவின் வருகை இலங்கைத் தீவின் அரசியலமைப்பு வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. ஆணைக்குழுவைச் சந்தித்து யோசனைகளை முன்வைத்த கண்டி தேசிய சபை (The Kandy National Assembly) பின்வருமாறு குறிப்பிட்டது:

'எமது கோரிக்கை இன அடிப்படையிலானதோ அல்லது ஒரு சிலரின் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்தை கொண்டதாகவோ இல்லை. ஒரு தேசம்

> **"எமது கோரிக்கை இன அடிப்படையிலானதோ அல்லது ஒரு சிலரின் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்தை கொண்டதாகவோ இல்லை. ஒரு தேசம் அதன் சொந்தத்தில் வாழ்வதற்கும் தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்வதற்குமானதே இந்த கோரிக்கை. பல்வேறு மாநிலங்களின் (States) மக்கள் மற்றையவர்களின் பிராந்தியங்களுக்குள் ஊடுருவாமல் சொந்தத் தேசியத்தைக் (Nationality) கட்டியெழுப்புவதற்கு சமஷ்டிமுறை வகைசெய்யும்."**
>
> *- ஜீ.எல். பீரிஸ்*

அதன் சொந்தத்தில் வாழ்வதற்கும் தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்வதற்குமானதே இந்த கோரிக்கை. பல்வேறு மாநிலங்களின் (States) மக்கள் மற்றையவர்களின் பிராந்தியங்களுக்குள் ஊடுருவாமல் சொந்தத் தேசியத்தைக் (Nationality) கட்டியெழுப்புவதற்கு சமஷ்டிமுறை வகைசெய்யும்' என்று பீரிஸ் எழுதியிருக்கிறார்.

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறைக்காக குரலெழுப்பி இந்த (2026) வருடத்துடன் சரியாக ஒரு நூற்றாண்டு நிறைவடையும் நிலையில் பேராசிரியர் இதைக் குறிப்பிட்டிருப்பதில் ஒரு பொருத்தப்பாடும் இருக்கிறது.

டி.பி.எஸ். ஜெயராஜ்:

கனடாவில் வாழும் இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் '100 வருடங்களுக்கு முன்னர் பண்டரநாயக்க விடுத்த சமஷ்டி ஆட்சி முறைக்கான அறைகூவல்' என்ற தலைப்பில் அண்மையில் ஒரு கட்டுரையை ஆங்கிலத்தில் கொழும்பு டெயிலி மிறர் (Daily Mirror) பத்திரிகையில் எழுதியிருந்தார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் சமஷ்டி ஆட்சி முறைக்காக குரலெழுப்புவதற்கு நீண்டகாலத்துக்கு முன்னதாகவே 1920-களின் முற்பகுதியில் இளம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் அந்த தசாப்தத்தின் பிற்பகுதியில் டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலையில் கண்டிச் சிங்களப் பிரதிநிதிகளும் சமஷ்டி முறைக்காக குரல் கொடுத்தனர் என்றும் வடக்கு-கிழக்கு மாகாணம் ஒன்று உட்பட மூன்று மாகாணங்களுடனான சமஷ்டி இலங்கை யோசனையை கண்டிச் சிங்களவர்கள் முன்வைத்தனர் என்றும் அரசியலமைப்புச் சட்ட நிபுணரான கலாநிதி றொஹான் எதிரிசிங்க' சமஷ்டி முறை; மாயைகளும் யதார்த்தங்களும் (Federalism; Myths and Realities) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டதை மேற்கோள் காட்டியே ஜெயராஜ் தனது கட்டுரையை ஆரம்பித்தார்.

'அந்த யுகத்தின் அரசியல் தலைவர்கள் மத்தியில் தலை சிறந்த அறிவுஜீவியான பண்டாரநாயக்க ஒரு வகையான சமஷ்டி முறை மாத்திரமே இலங்கையின் ஆட்சி முறைப் பிரச்சினைக்கு தீர்வாக இருக்கமுடியும் என்று முன்கூட்டியே 1926-ஆம் ஆண்டளவில் வாதாடினார்.

"பிரிட்டிஷார் ஆட்சி செய்த காலத்தில் இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்கள் சமஷ்டி முறையையோ அல்லது தனி நாட்டையோ கோரவில்லை. பதிலாக அந்தக் கோரிக்கைகளை தமிழ்த் தலைவர்கள் பிரிட்டிஷார் இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னர் மாத்திரமே முன்வைத்தனர்."

'கரையோரச் சிங்களவர்களுக்கும் மலை நாட்டுச் சிங்களவர்களுக்குமாக இரு அலகுகளையும் தமிழர்களுக்காக வடக்கு-கிழக்கில் ஒரு அலகையும் கொண்ட ஒரு சமஷ்டி ஏற்பாட்டை 1927-ஆம் ஆண்டில் கண்டிச் சிங்களவர்கள் முன்மொழிந்தனர்.

'சிங்களவர்களினால் முன்மொழியப்பட்ட போது சமஷ்டிமுறையை இலங்கைத் தமிழர்கள் நிராகரித்தார்கள். தங்களுக்கு கிடைத்த அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை தமிழ் அரசியல் தலைவர்கள் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்காக சமஷ்டிமுறையை வழங்குமாறு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் கோரிக்கையை முன்வைத்திருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கக்கூடிய சகல சாத்தியப்பாடுகளும் இருந்தன.

'பிரிட்டிஷார் ஆட்சி செய்த காலத்தில் இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்கள் சமஷ்டி முறையையோ அல்லது தனி





நாட்டையோ கோரவில்லை. பதிலாக அந்தக் கோரிக்கைகளை தமிழ்த் தலைவர்கள் பிரிட்டிஷார் இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னர் மாத்திரமே முன்வைத்தனர்' என்று அவர் எழுதியிருந்தார்.

பண்டாரநாயக்கவின் யாழ்ப்பாண சொற்பொழிவு:

நூறு வருடங்களுக்கு முன்னர் 'மோர்ணிங் லீடர்' (The Morning Leader) பத்திரிகைக்கு ஆறு கடிதங்களை எழுதிய பண்டாரநாயக்க இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறையே பொருத்தமானது என்று தமிழர்களை நம்பவைப்பதற்கு 'யாழ்ப்பாண சொற்பொழிவை' நிகழ்த்த 1926 ஜூலை 17-ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்குச் சென்றார். அன்றைய தினம் 'எமது அரசியல் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு சமஷ்டி முறையே' என்ற தலைப்பில் உரை யாற்றிய அவர் இனவேறுபாடுகளைக் கையாளுவதற்கும் பிராந்திய சுயாட்சியே சீரான வழி என்று வாதிட்டார்.

சமஷ்டி முறைக்காக குரல்கொடுக்க தன்னுடன் இணைந்து கொள்ளுமாறு அவர் விடுத்த வேண்டுகோளை தமிழர்கள் நிராகரித்தார்கள். யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் (பிறகு அது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸாக பெயர் மாற்றம் பெற்றது) சமஷ்டிமுறை யோசனையை எதிர்த்தது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பிரகாசமான கல்வியைப் பெற்றதன் பின்னர் 1925-ஆம் ஆண்டில் நாடு திரும்பிய பண்டாரநாயக்க இலங்கை தேசிய காங்கிரஸின் உறுப்பி னராக இருந்த அதேவேளை, அரசியல் சுயாட்சி இலக்கை அடைவதற்காக முற்போக்கு தேசியக் (Progressive National Party) கட்சியை ஆரம்பித்தார். அந்த கட்சியின் யாப்பு பண்டாரநாயக்கவின் மனதில் இருந்த சமஷ்டி ஆட்சிமுறை பற்றிய திட்டவரைவு ஒன்றை உள்ளடக்கியதாக இருந்தது.

கரையோரச் சிங்களவர்களையும் மலைநாட்டுச் சிங்களவரையும் தமிழர்களையும் நாட் டின் பிரதான குழுக்களாகக் குறிப்பிட்ட அந்த யாப்பு ஒவ்வொன்றும் முற்று முழுதான சுயாட்சியைக் கொண்ட ஒன்பது மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

பண்டாரநாயக்கவின் யோசனையை அவரின் நெருங்கிய நண்பரான கல்விமான் ஜேம்ஸ் ரி. இரத்தினத்தை தவிர, முற்போக்கு தேசிய கட்சியின் சகல உறுப்பினர்களும் ஆதரித் தனர். சமஷ்டிமுறை தொடர்பிலான யோசனை அந்த காலகட்டத்தில் இனவாத உணர்வு களையோ அல்லது சிங்களவர்களிடமிருந்து எதிர்ப்பையோ கிளப்பவில்லை. அந்த யோசனைக்கு கடுமையான எதிர்ப்பு ஒரு சிங்களவரிடமிருந்து அல்ல, தமிழரிடமிருந்தே வந்தது என்று ஜெயராஜ் எழுதினார்.

லெனார்ட் வூல்வ்:

இது இவ்வாறிருக்க, காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பிரபல்யமான பிரிட்டிஷ் சிவில்சேவை அதிகாரியாக இருந்த லெனார்ட் வூல்வ் 1930-களின் பிற்பகுதியில்

"1938-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் லெனார்ட் வூல்வ் கரையோரச் சிங்கள மாகாணம், கண்டியச் சிங்கள மாகாணம், தமிழ் வடக்கு மாகாணம், தமிழ் கிழக்கு மாகாணம் என்று நான்கு கன்ரோன்களையும் மலைநாட்டில் இந்திய வம்சாவளி தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தேயிலைத் தோட்டப் பகுதிகளை உள்ளடக்கி ஐந்தாவது கன்ரோன் ஒன்றையும் உருவாக்கலாம் என்று யோசனையை முன்வைத்தார்."



இலங்கைக்கு சுவிட்சர்லாந்தின் கன்ரோன் (Canton) முறையே அதிபொருத்தமானது என்ற கருத்தை முன்வைத்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

1938-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் லெனார்ட் வூல்வ் கரையோரச் சிங்கள மாகாணம், கண்டியச் சிங்கள மாகாணம், தமிழ் வடக்கு மாகாணம், தமிழ் கிழக்கு மாகாணம் என்று நான்கு கன்ரோன்களையும் மலைநாட்டில் இந்திய வம்சாவளி தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தேயிலைத் தோட்டப் பகுதிகளை உள்ளடக்கி ஐந்தாவது கன்ரோன் ஒன்றையும் உருவாக்கலாம் என்று யோசனையை முன்வைத்தார்.

மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் தேசிய நலன்களைப் பேணுவதற்காக அவர்களுக்கென்று தனியொரு கன்ரோனை பரிந்துரைத்த ஒருவர் என்றால் நாமறிந்தவரை அது லெனார்ட் வூல்வ் மாத்திரமேயாவார்.

கன்ரோன் முறையை அறிமுகப்படுத்தக்கூடிய அளவுக்கு இலங்கை பெரிய நாடு அல்ல என்ற வாதம் முன்வைக்கப்படும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த அவர் இலங்கையின் பரப்பளவு சுவிட்சர்லாந்தின் பரப்பளவை விடவும் 10 ஆயிரம் சதுரமைல்கள் அதிகம் என்று சுட்டிக் காட்டியதுடன் இனத்துவ அடிப்படையிலான சனத்தொகையைப் பொறுத்தவரை சுவிட்சர்லாந்தில் ஜேர்மன் மொழி பேசுபவர்களை இலங்கையில் சிங்களவர்களுடனும் பிரெஞ்சு மொழி பேசுபவர்களை தமிழர்களுடனும் இத்தாலி மொழி பேசுபவர்களை முஸ்லிம்களுடனும் ஒப்பிட்டார்.

இவை ஒரு காலனித்துவ நிருவாகியாக இருந்த முற்போக்கு வாதியான ஆங்கிலேயர் ஒருவர் ஏழு ஆண்டுகள் இலங்கையில் வாழ்ந்து அதன் மக்களை நெருக்கமாக அறிந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களின் விளைவாக முன்வைத்த யோசனைகளாகும்.

பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து அன்றைய தமிழ்த் தலைவர்கள் சமஷ்டிமுறைக்காக குரல்கொடுத்துப் போராடியிருந்தால் இலங்கையின் அரசியல் வரலாறு நிச்சயமாக வேறுபட்டதாக இருந்திருக்கும்.

டொனமூர் அரசியலமைப்பு:

1931-ஆம் ஆண்டில் டொனமூர் அரசியலமைப்பின் மூலமாக சர்வஜன வாக்குரிமையும் பிராந்திய அடிப்படையிலான பிரதிநிதித்துவமும் அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து பண்டாரநாயக்கவின் அரசியல் நோக்கில் மாற்றம் ஏற்பட்டது.

(தொடரும்...)



Thanabalasingham.V@thaiveedu.com



தமிழகச் சட்டமன்றத் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் காரணிகள்

தமிழகத்தில் 17-வது சட்டமன்றத்திற்கான தேர்தல் ஏப்பிரல் மாதம் 23-ஆம் திகதி நடைபெற இருக்கிறது. தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 12 கட்சிகள் உட்பட, ஏராளமான கட்சிகள் தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு களத்தில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. இக் கட்சிகளின் வெற்றியைப் பல்வேறு காரணிகள் தீர்மானிக் கின்றன.

கூட்டணி பலம்:

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த அறுபது ஆண்டுக ளுக்கு மேலாக திமுக, அதிமுக ஆகிய இரண்டு கட்சிகளும் தனித்தே ஆட்சி புரிந்து வந்தபோதும், தேர்தல் என வரும் போது அவை ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்தே போட்டியை எதிர்கொண்டு வந்துள்ளன. இன, மத, சாதி, அடிப்படையில் தமிழக மக்கள் வாழ்ந்து வருவதால் கட்சி களின் எண்ணிக்கை சமூகரீதியாக அதிகரிக்கலாயிற்று. இதனால், எந்தவொரு கட்சியும் 50 சதவீத வாக்கு களையோ பிரதிநிதிகளையோ பெற முடியாத நிலை நீடிக்கிறது. இதனால் பெரிய கட்சிகள், ஏனைய கட்சி களைக் கூட்டணிக்குள் இணைத்துக் கொண்டு தங்களின் வெற்றியை உறு திப்படுத்த முயல்கின்றன.



ஏப்பிரல் 23-இல் நடைபெற இருக்கும் தேர்தலில் வெற்றி பெற, இரு பெரும் திராவிட கட்சிகளும், நீண்ட இழுபறிக்கு பின்னர் கூட்டணியை அமைத்துக்கொண்டுள்ளன. கடந்த 2021-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் திமுக, தனித்துப் பெற்ற வாக்குகள் 37.70 சதவீதம் மட்டுமே. கூட்டணிக் கட்சிகளின் 7.68 சதவீத ஆதரவு காரணமாக, 45.38 சதவீத வாக்கு களைப் பெற்ற, திமுக 133 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க முடிந்தது. எதிர்க் கூட்டணியான அதிமுக இணைந்த தேசிய ஜனநாயக கூட்டணி, 39.71 சதவீத வாக்குகள் பெற, அதிமுக ஆட்சியை இழந்தது. இரு பெரும் திராவிட கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்ட கூட்டணி கட்சிகள் மட்டும் பெற்ற வாக்கு சதவீதம் 14.10 ஆகும். இவ்வாறு திராவிட கட்சிகள், ஆட்சி அமைக்க, கூட்டணி கட் சிகளின் வாக்குகள் மிகவும் அவசியம் என்பதால், கூட்ட ணியின் பலமே வெற்றியைத் தீர்மானிக்கும் மிக முக்கிய சக்தியாக இருக்கிறது.

மேலும், சினிமா கவர்ச்சியில் விஜய் அவர்களால் தொடங்கப் பட்ட தமிழக வெற்றி கழக கூட்டணியில், குறிப்பிடத்தக்க கட்சிகள் இணையாத நிலையில், அக்கூட்டணி குறிப்பிடத் தக்க வெற்றியைப் பெற முடியாத நிலை காணப்படுகிறது. அக்கட்சியை தேசிய ஜனநாயக கூட்டணிக்குள் கொண்டு வர, பாஜக பெரு முயற்சி மேற்கொண்டமை தேசிய அளவில் பேசுபொருளாக பார்க்கப்பட்டது. தேர்தல் முடிவில் தவெக, தங்களுக்கு இரண்டாம் இடம் கிடைக்கும் என நம்புகிறது.

நாம் தமிழர் கட்சி, சீமான் தலைமையில் தனித்து களம் காண்பதால், அதுவும் பெரிய வெற்றியைப் பெற முடியாத நிலை காணப்படுகிறது. எனினும் அக்கட்சி வாக்கு களைப் பிரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், குறைவான வாக்கு வித்தியா சத்தில்

வெற்றி பெற வேண்டிய நிலை வரும் என்பதால், மிகச் சிறிய கட்சிகளையும் கூட்டணிக்குள் இணைக்கும் அவசியம் பெரிய கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வழியில், இருபதுக்கு மேற்பட்ட கட்சிகள் திமுக கூட்டணியில் இணைந்திருப் பதால், பலம் பொருந்திய திமுக கூட்டணி வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் களத்தில் சாதியின் முக்கியத்துவம்:

தமிழகத்தில் பெரிய கட்சிகளின் தலைவர்கள் சாதிய அடை யாளத்தை வெளிப்படையாக காட்டிக்கொள்ளாத போதும், சாதிய கணக்கினை மனதிற்கொண்டு வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் போக்கு காணப்படுகிறது. மறுபுறம், சிறு கட்சிகள் சாதியை மட்டுமே முன்னிறுத்தி தேர்தல் அரசியல் செய்வதையும் காணலாம். சாதிய வேறுபாடுகளைக் களைய வேண்டிய இன்றைய காலகட்டத்தில், அரசியல் இலாபத் திற்காக மக்களின் சாதிய உணர்வுகளைத் தூண்டி, சிறு சிறு கட்சிகளை உருவாக்கி, அரசியல் பேரங்களை தொடர்ந்து நடத்தி வரும் அருவருப்பான போக்கையும் இன்றைய தேர்தல் முறையில் காண முடிகிறது. இடதுசாரி கட்சிகள் நீங்கலாக, பெரிய கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளும் தொகுதியில் வசிக்கும் பெரும்பான்மை சாதிய பலத்தின் அடிப்படையில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போக்கையும் பெருமளவில் காணலாம்.

பெரியார் மண்ணில் சாதியம் அழிந்துவிடவில்லை. 188 பொது பிரிவினருக்கான தேர்தல் தொகுதிகள் உண்டு என கூறப்பட்டபோதும், அத்தொகுதிகளில் பெரும்பான்மையாக உள்ள சமூகம் சார்ந்தவர்களே வெற்றி பெற முடியும் என்ற நிலை இன்றும் நீடிக்கிறது. எனவே சாதியம் தமிழகத்தில் தேர்தல் வெற்றியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக் கிறது.

மத அரசியல்:

இதுவரை தமிழக தேர்தல் அரசியலில் மதம் அல்லது மதரீ தியான பிரிவினை வாதம் இடம்பெறவில்லை. ஆனால், தற்போது இந்துத்துவ கொள்கை கொண்ட பாஜக, தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்ற எண் ணத்தில் மதத்தை முன்னிறுத்தி வரும் போக்கை காண முடிகிறது. இலங்கையில் பௌத்த மதத்தை அரசிய லுக்குப் பயன்படுத்துவதைப் போன்று இந்தியாவிலும் பெரும் பான்மை மக்கள் பின் பற்றும் இந்து மதத்தை முன்நிறுத்தி தேர்தல் பிரச்சாரத்தை நடத் தும்யுக்தியை பாஜக கையாண்டு வருகிறது. இதன் தாக்கம் காரணமாக இதுவரை திராவிடம் மட்டும் பேசிவந்த ஆண்ட கட்சிகளும், ஆளும் கட் சிகளும் கூட மதத்தை தேர்தலுக்கு பயன்படுத்தும் நிலைமை உருவாகியுள்ளது. திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதை பிரதமர் உட்பட பாஜக-வினர் தேர்தல் யுக்தியாக பயன்படுத்தி வருவது கவனிக்கத்தக்க விடயமாகும். இதனால், மக்களை வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், சமையல் எரிவாயு விலை உயர்வு போன்ற பொதுப் பிரச்சினைகள் பின்னுக்கு தள்ளப் பட்டுவிட்டன. மதத்தால் மக்களைப் பிளவுபடுத்தும் இச்செயல் மக்களாட்சியின் மாண்புகளை சிதைப்பதுடன், பன்முகத்தன்மை கொண்ட இந்திய நாட்டின் வளர்ச்சிக்கும் பாதகமாக அமையும். பெரும்பான்மை சமூகத்தின் இந்துமத வாக்குகளைப்பெற பாஜக உட்பட சில கட்சிகள் முயல் கின்றன. மறுபுறம் சிறுபான்மை, இஸ்லாம், கிறிஸ்தவ வாக்குளைப் பெற திமுக உட்பட சில கட்சிகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. எனவே, இம்முறை மதம் ஒரு தேர்தல் கருவியாகப் பயன்படுத்தும் நிலை உருவாகி யுள்ளது.

தேர்தலில் பணம்:

இந்தியா வளர்ந்து வரும் நாடு, என்பதுடன் அடித்தட்டு மக்கள் அதிகம் வாழும் நாடுமாகும். உலக சனநாயகத் திற்கு வழிகாட்டும் இந்தியாவில் கோடிகளில் பணம் இருந்தால் மட்டுமே தேர்தலில் வெற்றிபெற முடியும் என்பது, கசப்பான உண்மையாகும். தமிழகத் தேர்தல் களம் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு வேட்பாளர் அதிகபட்சம் 40 இலட்சம் செலவிட, தேர்தல் ஆணையம் அனுமதிக்கிறது. ஆனால், நடைமுறையில் கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்ப டுவது அனைவரும் அறிந்த உண்மையாகும். பல்வேறு செல வினங்களுக்கு மத்தியில், வாக்காளர்களுக்குப் பரிசுப்பொ ருட்களுடன் ரொக்கப்பணம் கொடுப்பதும் நிகழ்கிறது. இதனால், பெருமளவு பணம் செலவு செய்யும் கட்சி, மற்றும் வேட்பாளர் வெற்றி பெறும் நிலை இருப்பதால் தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பதில் பணமும் முக்கிய இடத்தைப் பெற்று வருகிறது.

சாதாரண ஏழை ஒருவன் தேர்தலில் போட்டி யிடும் எண்ணம் இந்தியாவில் எக்காலத் திலும் நிறைவேறாத கனவாகும். தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே கட்சிகள் பெருமளவு பணத்தை நன்கொடை யாகச் சேகரிக்கும் போக்கு இங்கே இருந்து வருகிறது. ஆளும் பாஜக, அதிக அளவாக பல ஆயிரம் கோடிகளை நன்கொடையாகப் பெற்றுப் பண வசூலில் முதல் இடத்தில் இருப் பதாக புள்ளி விபரம் மூலம் தெரியவருகிறது. கட்சிகள் பல வழிகளில் சேகரிக்கும் பணம், தேர்தலின் போது



செலவிடப்படுவது வழக்கமான ஒன்றாகும். பொதுவுடமை கட்சிகள் மட்டுமே தேர்தலில் குறைந்தளவு பணத்தைச் செலவிட்டு வருகின்றன. தேர்தல் களம் பல்வேறு யுக்தி களைக் கொண்டிருப்பதால் பணத்தின் அளவு தேர்தல் வெற்றியை நிர்ணயிப்பதில் முக்கிய இடத்தைப் பெற்றுவரு கிறது.

தேர்தல் அறிக்கை:

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்பதைக் குறிப்பிட்டு தேர்தல் அறிக்கை வெளியிடுவது பல கட்சி ஆட்சி முறையில் வழக்கமான நடைமுறையாகும். ஆனால், தமிழக கட்சிகள் குறிப்பாக ஆட்சியில் அமரக்கூடிய திராவிடக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள், வளர்ச்சியை விட நடைமுறையில் சாத்தியம் இல்லாதவற்றைக் கூறுவதாக இருக்கின்றன. இலவச வாக்குறுதிகள், வரம்பு மீறி அதிகமாக இருக்கின்றன. தமிழக அரசுக்கு ஒன்பது இலட்சம் கோடிக்கு மேல் கடன் சுமை இருப்பதை இவர்கள் கருத்தில் கொள்வது இல்லை. திராவிட கட்சிகளும் அதன் வேட்பாளர் களும் கோடிகளில் புரள்வதால் மக்களின் வறுமையை, ஏழ்மையை தங்களுக்குத் தேவையான வகையில் பயன்ப டுத்திக் கொள்வதைக் காணலாம். மக்களின் மறதி என்பது கட்சிகளின் மூலதனமாகிறது. நிறைவேற்றப்படாத கடந்த காலத் தேர்தல் அறிக்கைகளை, வாக்குறுதிகளை மக்கள் நிகழ்காலத்தில் மறந்து விடுகின்றனர்.

கட்சிகள், தேர்தல் வெற்றியை மட்டுமே கருத்தில் கொண்டு தேர்தல் அறிக்கைகளைத் தயாரிக்கின்றன. கட்சிகளிடையே அது ஒரு போட்டியாகவே பார்க்கப்படுகிறது. தங்களின் தேர்தல் அறிக்கையைத் தேர்தல் கதாநாயகனாக முன்னெ டுக்கும் கட்சிகளும் தமிழ் நாட்டில் உண்டு. மக்களும் அதனைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கிவிட்டனர். தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலும், வாக்களிக்கும் நிலை இருப்பதால், வரும் தேர்தலில் கட்சிகளின் தேர்தல் அறிக் கைகள் முக்கியத்துவம் பெறும் என நம்பப்படுகிறது.

தேர்தல் வாக்குறுதிகள்:

தேர்தல் அறிக்கை போன்றே கட்சித் தலைவர்களின் தேர்தல் வாக்குறுதிகளும் கவனம் பெற்று வருகின்றன. அதன் காரணமாக தலைவர்கள் வாக்குறுதிகளைப் போட்டி போட் டுக்கொண்டு வழங்கி வருகின்றனர். அவை தேர்தலில் வெற்றியைத் தேடித்தரும் என நம்புகின்றனர். வாக்காளர் களைப் பொறுத்தவரையில், ஆட்சி அமைக்க வாய்ப்புள்ள கட்சிகள் தரும் வாக்குறுதிகளை அதிக அளவில் நம்புகின் றனர்.

தமிழக மக்களின் பெரும் பகுதியினர் ஏழைகளாவர். அதனால், அதற்கு அமைய தேர்தல் வாக்குறுதிகள் இலவ சங்களை நோக்கிச் செல்கின்றன. மாதந்தோறும் இலவச மாகப் பணம் வழங்கப்படும் என ஒவ்வொரு கட்சியும் அறிவித்து வருகிறது. முன்பு இலவசங்களை எதிர்த்த பாஜக உட்பட, பிரதமரும் கூட தற்போது இலவச அறிவிப்புகளை அறிவிப்பதில் ஆர்வம் காட்டுவதைக் காண முடிகிறது. வாக் குறுதியின் உண்மைத்தன்மையை வாக்காளர்கள் புரிந்து கொள்ளாத நிலைமையும் காணப்படுகிறது. எனினும், கட்சி களும் அதன் தலைவர்களும் அளிக்கும் வாக்குறுதிகள், தேர்தல் வெற்றிக்கு காரணமாகி விடுகிறது.

அரசியல் ஆளுமைகள்:

திராவிட அரசியலில் மிகப் பெரும் ஆளுமைகளாக இருந்த கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா இருவரும் இல்லாத சூழ்நிலையில், தமிழகத்தில் 17-வது சட்டமன்றத் திற்கான தேர்தல் நடைபெற இருக்கிறது. ஆளுமைக்கான வெற்றிடம் இல்லை என்பதை நிரூபிக்கும் போட்டியாளர்



“தமிழக மக்களின் பெரும் பகுதியினர் ஏழைகளாவர். அதனால், அதற்கு அமைய தேர்தல் வாக்குறுதிகள் இலவசங்களை நோக்கிச் செல்கின்றன. மாதந்தோறும் இலவசமாகப் பணம் வழங்கப்படும் என ஒவ்வொரு கட்சியும் அறிவித்து வருகிறது. முன்பு இலவசங்களை எதிர்த்த பாஜக உட்பட, பிரதமரும் கூட தற்போது இலவச அறிவிப்புகளை அறிவிப்பதில் ஆர்வம் காட்டுவதைக் காண முடிகிறது”

> “தமிழக வாக்காளர்கள், மக்களைக் கவரும் தலைவர்களைக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு வாக்களிக்கும் போக்கு இருப்பதைக் காணலாம். கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதா போன்ற ஆளுமைகள் தற்போது இல்லாவிட்டாலும், உள்ளவர்களில் சிறந்த ஆளுமையை நோக்கி நகரும் மன நிலை வாக்காளர்களிடம் இருக்கிறது”

களாக திரு. ஸ்டாலினும், திரு. பழனிச்சாமியும் களத்தில் உள்ளனர். இவர்களுடன் நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான், தவெக தலைவர் நடிகர் விஜய் எனப் பல ஆளுமைகள் களத்தில் உள்ளனர். இதனிடையே ஜெயலலிதாவின் நிழலாகக் கடந்த 30 வருடங்களாக இருந்த சசிகலா என்ற பெண்மணி, சிறையிலிருந்து விடுதலையாகி வெளியில் வந்து தற்போது புதிய கட்சி தொடங்கி அவரும் களத்தில் இருக்கிறார்.

தமிழக வாக்காளர்கள், மக்களைக் கவரும் தலைவர்களைக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு வாக்களிக்கும் போக்கு இருப் பதைக் காணலாம். கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதா போன்ற ஆளுமைகள் தற்போது இல்லாவிட்டாலும், உள்ள வர்களில் சிறந்த ஆளுமையை நோக்கி நகரும் மன நிலை வாக்காளர்களிடம் இருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் முதல்வர் ஸ்டாலின், ஆளுமைகளின் வரிசையில் முன்னிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, கட்சி தலைவர்களின் ஆளுமையும், தேர்தல் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைகிறது. இவற்றுடன் வேட்பாளரின் செல்வாக்கு, தொகுதி மக்க ளிடம் உள்ள அறிமுகம் என்பனவும் வெற்றிக்கு வழி வகுக் கின்றன.

நலத்திட்டங்கள்:

தற்போதைய திமுக அரசின் நலத்திட்டங்கள், கடந்தகால அதிமுக அரசின் நலத்திட்டங்கள் சீர்தூக்கிப் பார்க்கப்படும் எனவும் கூறப்படுகிறது. தற்போதைய திமுக அரசு செயற்ப டுத்திவரும் நலத்திட்டங்கள் குறிப்பாக, பெண்கள் உரி மைத்தொகை, பெண்கள் இலவச பேருந்து பயணம், மாணவிகள் உதவித்தொகை என்பன அக்கட்சியின் வெற்றிக்கு காரண மாக அமையும் என நம்பப்படுகிறது. அதாவது நேரடி நலத் திட்டங்கள், வாக்காளர்களின் முடிவை நேரடியாகப் பாதிக் கின்றன என்பதாகும்.

இன்றைய அரசின் செயற்பாடுகளின் மீது மக்களுக்கு திருப்தி இருப்பின், மக்கள் அக்கட்சியை வெற்றிபெறச் செய்வர். அதிருப்தி ஏற்படின், மக்கள் எதிராக வாக்களித்து, எதிர்க்கட்சிகளை வெற்றிபெறச் செய்வர். எனவே, ஆளும் கட்சியின் செயற்பாடு வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதாக அமைகிறது.

சிறுபான்மையினரின் வாக்கு:

தமிழகத்தில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஏறக்குறைய 14 சதவீதமாக இருக்கின்றனர். இவர்களின் வாக்குகள் கடந்த காலங்களில் கட்சிகளின் வெற்றிக்கும் ஆட்சி அமைக் கவும் முக்கிய பங்கினை வகித்துள்ளன. 2021 தேர்தலில் 37.70 சதவீத வாக்குகளைப் பெற்ற திமுக, அதிமுக பெற்ற வாக்குகளை விட மேலதிகமாக பெற்ற வாக்குகள் 4.41 சதவீ தமாகும். இதற்கு சிறுபான்மையினரின் வாக்குகள் முக்கிய காரணங்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது. சில தொகுதி களில் 15 முதல் 30% வாக்குகளைச் சிறுபான்மையினர் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த தேர்தலில் 20 முதல் 30 தொகுதிகளில் இவர்களின் நேரடி தாக்கத்தைக் காணக்கூடியதாக இருந்துள்ளது. கடந்த தேர்தலின்போது நெருக்கடியான தொகுதிகளில் திமுக-வின் வெற்றிக்கு சிறுபான்மையினர் காரணமாக இருந் துள்ளனர். இதன் காரணமாக இம்முறை சிறுபான்மையினரின் வாக்குகள் திமுக-விற்கு செல்வதைத் தடுக்க, விஜய் களம் இறக்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின் றனர். இம்முறை சில நூறு வாக்குகள் வேட்பாளர்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் என நம்பப்படுவதால், சிறுபான் மையினரின் வாக்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேற்குறிப்பிட்ட காரணிகள் தேர்தல் வெற்றி தோல்வியை நிர் ணயிக்கின்றன. இவை நீங்கலாக, வேறு சில காரணிகளும் சிறிய அளவில் தேர்தல் வெற்றியில் பங்கு கொள்வதைக் காணலாம். குறிப்பாக உள்ளூர் பிரச்சினைகள், வேளாண் தேவைகள், வேலைவாய்ப்பு, தொழில் பெருக்கம் என்பனவும் கவனம் பெறுகின்றன. ஆளும் அரசின் செயற்பாடு, ஆட்சிக்கு எதிரான மனநிலை, நிறைவேற்றாத வாக்குறுதிகள், ஊழல் பாதிப்பு, என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேலும் அண்மைக்காலங்களில் அனைத்து துறைகளிலும் ஊடகச் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுறது. அரசிய லிலும் அண்மைக்காலங்களில் மிக ஆழமாக ஊடகங்கள் செல்வாக்குச் செலுத்தி வருவதைக் காணலாம். எனவே, நவீன சமூக ஊடகத்தைப், பெரிய அளவில் பயன்படுத்தும் கட்சிகள், தமிழகத் தேர்தலிலும் வெற்றிக்கு அவற்றைப் பயன்படுத்தும் என எதிர்பார்க்கலாம். கட்சிகளின் செயற்றிட் டங்களை வாக்காளர்களிடம் கொண்டு சேர்ப்பதில் ஊட கங்கள் பெரும் பங்கு வகிப்பதால், தேர்தல் களத்தில் ஊட கங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவ்வாறு பல்வேறு காரணிகள், வரும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்வதில் பெரும் பங்காற்றும் என நம்பப்படுகிறது.



jeyasingh@thaiveedu.com



ரதன்

tg.theeban@gmail.com

மேற்கு ஆசியாவின் உடைந்த துண்டுகள்: ஈரான் போர் - அவசரக் குறிப்புகள்

ஈரான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையிலான நேரடி ராணுவ மோதல்கள் தீவிரமடைவதற்கு முன்பாக, 2025 டிசம்பர் 28 அன்று ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் மாபெரும் உள்நாட்டுப் போராட்டங்கள் வெடித்தன. நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்து, ஈரானிய 'ரியால்' (Rial) மதிப்பு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்ததே இதற்கு உடனடி காரணமாக அமைந்தது. இந்தப் போராட்டங்கள் கடந்த 2009 (பச்சை இயக்கம்), 2017, 2019 மற்றும் 2022 (மஹ்சா அமினி) ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மக்கள் எழுச்சிகளின் தொடர்ச்சியாகவே பார்க்கப்படுகின்றன. 2026 ஜனவரி மாத நிலவரப்படி, ஈரானிய பாதுகாப்புப் படையினரின் கடுமையான ஒடுக்குமுறையினால் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டதோடு, பல்லாயிரக்கணக்கானோர் சிறையிலடைக்கப்பட்டனர். ஈரானின் இந்த வன்முறை வரலாறு புதியதல்ல; 1980-களில் நடந்த ஈரான்-ஈராக் போரின் இறுதிக்கட்டத்தில் (1988-இல்), ஈரானிய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் மீது இத்தகைய மாபெரும் ஒடுக்குமுறை ஏவப்பட்டது. குறிப்பாக, முஜாஹிதீன்-இ-கல்க் (MEK) அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் பல்வேறு இடதுசாரி இயக்கங்களின் தலைவர்கள் என சுமார் 5,000 முதல் 30,000 பேர் வரை எவ்வித விசாரணையுமின்றி அப்போது தூக்கிலிடப்பட்டனர். தற்போதைய 2026-இன் போராட்டங்களும் அந்த வரலாற்று வடுக்களின் தொடர்ச்சியாக, ஆட்சி மாற்றத்தை வலியுறுத்தி ஒட்டுமொத்த தேசத்தையும் உலுக்கி வருகின்றன.

இது ஈரானுக்கு புதியதல்ல. 'ஷா' வின் வெளியேற்றத்தின் பின்னர் அங்கு தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். ஈரான் மற்றும் பெரும்பாலான அரபு நாடுகளில், தொழிலாளர்கள், பெண்கள், மாணவர்கள் மற்றும் பிற சமூகக்குழுக்களின் கோரிக்கைகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாது. வெளிப்படையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட கருத்து வேறுபாடுகளும் சுதந்திரமான கருத்துகளும் அடக்குமுறை காரணமாக கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சாதாரண மக்கள் அமைதியாகவும் நேரடியாகவும் வீட்டுவசதி, வேலைவாய்ப்பு, மற்றும் வாழ்வதார உரிமைகளைக் கோரமுடியாதுள்ளது. ஒரு முக்கியமான உதாரணம் ஈரானியப் பெண்களின் தொடர்ச்சியான ஹிஜாப் மீதான போராட்டங்கள் ஒடுக்கப்பட்டன. 2022 இறுதியில் இது செப்ரெம்பர் 'பெண்கள், வாழ்க்கை, சுதந்திரம்' Women, Life, Freedom' கிளர்ச்சியாக உருவாகி உச்ச கட்டத்தை அடைந்தது.

ஈரானில் 'நடுத்தர வர்க்க ஏழைகள்' என அழைக்கப்படுபவர்கள், கல்வியறிவும் சமூக விழிப்புணர்வும் மிக்கவர்கள்; ஆனால் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டும், சமூக ரீதியாக மதிப்பிறக்கப்பட்டும் உள்ளனர். இவர்கள் அதிகாரத்திற்கு எதிராகத் தொடர்ச்சியான எதிர்ப்பலைகளைத் தெரிவித்து வருவதால், எப்போதும் ஒருவிதப் பாதுகாப்பற்ற சூழலிலேயே வாழ்கின்றனர். சமீபத்தில் நடைபெற்ற போராட்டங்களிலும் இவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ஈரான், தனது நாணய மதிப்பை பெருமளவில் இழந்துள்ளது. இதனால் ஏற்பட்ட பணவீக்கம், உட்கட்டமைப்பு சீர்குலைவு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு

> ***"ஈரான், தனது நாணய மதிப்பை பெருமளவில் இழந்துள்ளது. இதனால் ஏற்பட்ட பணவீக்கம், உட்கட்டமைப்பு சீர்குலைவு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு போன்ற சவால்களை அந்நாட்டு மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். அன்றாட வாழ்வில் நிலவும் அடக்குமுறை, பாகுபாடு மற்றும் இருத்தலியல் பாதுகாப்பின்மை போன்ற காரணிகளே அவ்வப்போது இத்தகைய சமூக வெடிப்புகளுக்கு வழிவகுக்கின்றன."***

போன்ற சவால்களை அந்நாட்டு மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளின் வேர் உண்மையில் அரசியல் சார்ந்தது. அன்றாட வாழ்வில் நிலவும் அடக்குமுறை, பாகுபாடு மற்றும் இருத்தலியல் பாதுகாப்பின்மை போன்ற காரணிகளே அவ்வப்போது இத்தகைய சமூக வெடிப்புகளுக்கு (ஆர்ப்பாட்டங்களுக்கு) வழிவகுக்கின்றன. குறிப்பாக, தலைநகர் தெஹ்ரான் உள்ளிட்ட நகரங்களில் உள்ள வணிகர்கள் நாணய மதிப்பிறக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை உயர்வால், விற்பனை விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இது விற்பனைக் குறைவை ஏற்படுத்தியதால், வணிகர்களும் இந்தப் போராட்டங்களை முன்னெடுக்கத் தூண்டப்பட்டனர். இப்போராட்டங்களில் இடதுசாரிகள் ஓர் ஒருங்கிணைந்த கட்சியாகவோ அல்லது குழுவாகவோ பங்கேற்காமல், தனிநபர்களாகவே கலந்துகொண்டனர்.

அமெரிக்க அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் ஈரானின் பொருளாதார அழுத்தத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன என்பதில் ஐயமில்லை. இருப்பினும், இந்தப் பிரச்சினை சமூகத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றிவிட்டது. தற்போதைய நெருக்கடியானது, முறையான ஊழல் (Systemic Corruption) மற்றும் நீண்டகால நிர்வாகத் தோல்விகளின் நேரடிப் பிரதிபலிப்பாகவே பார்க்கப்பட வேண்டும். இது ஒரு தற்காலிகச் சிக்கல் என்பதைத் தாண்டி, கட்டமைக்கப்பட்ட சீர்குலைவாக மாறியுள்ளது.

ஆனால், இந்தப் போராட்டங்கள் நிலையான ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட அரசை மேலும் தீர்க்கமாக்கின்றது. அதிகாரத்தின் வெற்றிடத்தை நிரப்பவும், அரசியல் விளைவை வடிவமைக்கவும் தூண்டியது. இது அரசு அதிகாரத்தின் மட்டத்தில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தியது. மத ஆட்சி அப்படியே இருந்தது, அதேநேரத்தில் ஆழமடைந்து வரும் பொருளாதார, சமூக மற்றும்சுற்றுச்சூழல் நெருக்கடிகள் தொடர்ந்தன. இது அரசுக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு அந்நியத்தை தோற்றுவித்தது.

2017 டிசம்பர் மற்றும் 2018 ஜனவரி மாதங்களில் (ஈரானிய 'டே' மாதம்) வெடித்த எழுச்சிகளும், அதனைத் தொடர்ந்த முன்னேற்றங்களும் ஒரு முழுமையான புரட்சியாக அல்லாமல், ஒரு நீண்ட புரட்சிகரப் பாதையில் மிக முக்கியமான அடையாளங்களாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும். பொதுவாக, புரட்சிகள் என்பவை வெறும் உள்நாட்டு நிகழ்வுகள் மட்டுமல்ல; அவை சர்வதேச சக்திகளால் வடிவமைக்கப்படுபவை. பெரும்பாலும் சர்வதேசத் தலையீடுகளே அப்புரட்சிகளின் இறுதி விளைவுகளைத் தீர்மானிக்கின்றன.

1979 இஸ்லாமியப் புரட்சி வெற்றி பெற்ற சில காலங்களிலேயே, ஷா மன்னரை வெளியேற்ற உதவிய பல்கலைக் கழகப் புத்திஜீவிகள் மற்றும் இடதுசாரிகள் குறிவைக்கப்பட்டனர். அவர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பல புத்திஜீவிகளும் இடதுசாரித் தலைவர்களும் உயிருக்குப் பயந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர்.

தற்போது புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஈரானிய இடதுசாரித் தலைவர்களுக்கும் (உதாரணமாக: Fedaian Khalq, Tudeh Party), ஈரானுக்குள் தங்கியிருந்து தொடர்ந்து களத்தில் போராடும் இடதுசாரிகளுக்கும் இடையே ஆழமான கருத்து மற்றும் செயல்முறை முரண்பாடுகள் நிலவுகின்றன. இவர்களுக்கிடையே முறையான தகவல் தொடர்புகளோ அல்லது ஒருங்கிணைப்போ இல்லாதது போராட்டக் களத்தில் ஒரு பலவீனமாகவே பார்க்கப்படுகிறது.

சன்கேசர் காரிடாரும் அமெரிக்க வியூகமும்:

2025-இல் போர் மேகங்கள் சூழ்ந்த நிலையில், அமெரிக்கா சன்கேசர் காரிடாரை (Zangezur Corridor) தன்வசப்படுத்தியது. ஆர்மீனியா வழியாகச் செல்லும் 42 கிலோமீட்டர் நீளம் கொண்ட இந்தப் பாதை, அஜர்பைஜானின் இரு முக்கியப் பகுதிகளை இணைப்பதுடன் ஈரானின் எல்லைக்கு மிக அருகிலும் அமைந்துள்ளது. தரைவழி இராணுவ நகர்வுகளை அமெரிக்கா மேற்கொள்ள நேரிட்டால், இந்தப் பாதை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நுழைவுவாயிலாக அமையும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானுக்குள் வாழும் சிறுபான்மையினர் மற்றும் அகதிகள் மூலமாகப் பெருமளவு உள் நாட்டுத் தகவல்களைத் திரட்டியுள்ளன. ஈரானின் மக்கள் தொகையில் சுமார் 40% சிறுபான்மையினர் (அஜர்பைஜானிகள் 24%, குர்துகள் 10%, லூர்கள் 6%) வாழ்கின்றனர்.



> ***“ஈரான் மீதான நேரடிப் போர் அல்லது நீண்டகால ஆக்கிரமிப்பு ஏற்பட்டால், அது அமெரிக்க டாலரின் (US Dollar) ஆதிக்கத்தைச் சிதைக்கக்கூடும். குறிப்பாக சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் ‘டாலர் நீக்கம்’ முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், ஒரு பெரிய போர் அமெரிக்கப் பொருளாதாரத்திற்குப் பெரும் சுமையாக மாறும்.”***

இருப்பினும், ஈரானின் பலமிக்க இராணுவக் கட்டமைப்பை (10 லட்சம் பாசிஜ் (Basij) படையினர், 1.5 லட்சம் புரட்சிகரப் படையினர் மற்றும் 3.5 லட்சம் வழக்கமான இராணுவத்தினர்) தரைவழியாக எதிர்கொள்வது சவாலானது என்பதை அமெரிக்கா உணர்ந்துள்ளது.

மத்திய கிழக்கில் நாடற்ற இனமாக வாழும் குர்து (Kurds) மக்களின் ஆதரவு இன்றி வடக்கிலிருந்து முன்னேறுவது கடினம் என்பதை அமெரிக்கா அறிந்துள்ளது. ஈராக்கின் குர்திஸ்தான் பகுதியிலுள்ள எர்பில் (Erbil) நகரில் அமெரிக்க விமானத்தளம் அமைந்துள்ளதும், அவர்கள் சுதந்திரத்திற்காக அமெரிக்காவைச் சார்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஹென்றி கிசிஞ்சர் முன்னரே அறிவுறுத்தியபடி, இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் பெரும் பலமாக குர்து இனத்தவர் உள்ளனர். ஆனால், ஈரானிய குர்துகள் ஈரானில் ஆட்சி மாற்றத்தை விரும்புவதை விட, தங்களின் தனி நாட்டுச் சுதந்திரத்தையே முதன்மையான இலக்காகக் கொண்டுள்ளனர்.

இறுதியாக, அமெரிக்கா தனது மூன்று முன்னாள் அதிபர்களின் பெயர்களைக் கொண்ட பிரம்மாண்டமான விமானந் தாங்கி கப்பல்களை (Aircraft Carriers) இந்து சமுத்திரம் மற்றும் செங்கடல் பகுதிக்கு அனுப்பி, ஈரானைச் சுற்றியுள்ள இராணுவ அழுத்தத்தை உச்சகட்டத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

வரலாற்றின் சில புள்ளிகள்:

1956 ஜூலை 26 அன்று, எகிப்திய அதிபர் கமால் அப்துல் நாசர் சூயஸ் கால்வாயைத் தேசியமயமாக்கினார். அஸ்வான் மேல் அணை (Aswan High Dam) கட்டுமானத்திற்கு பிரிட்டனும் பிரான்சும் நிதியுதவி அளிக்க மறுத்ததே இதற்குக் காரணம். எகிப்து, சோவியத் ஒன்றியம் மற்றும் செக்கோஸ்லோவாக்கியாவுடன் கொண்டிருந்த நெருக்கமான உறவே மேற்கத்திய நாடுகளின் இந்த முடிவுக்குப் பின்னணியாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து, பிரிட்டனும் பிரான்சும் இஸ்ரேலைத் தூண்டிவிட்டு சினாய் தீபகற்பத்தின் வழியாக சூயஸ் கால்வாயைக் கைப்பற்றச் செய்தன. ஆனால், நாசர் ஒரு ராஜதந்திர நகர்வை மேற்கொண்டார். கால்வாயின் வடக்குப்பகுதியில் பழைய மற்றும் துருப்பிடித்த கப்பல்களை மூழ்கடித்தார். இதனால் ஐரோப்பியக் கப்பல்கள் கால்வாயைக் கடக்க முடியாமல் போக்குவரத்து முற்றிலும் முடங்கியது. இந்த முடக்கத்தால் பிரிட்டனின் 'ஸ்டெர்லிங் பவுண்ட்' மதிப்பு சரிந்ததுடன், அந்நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. இறுதியில் அமெரிக்காவின் அழுத்தம் மற்றும் ஐ.நா. தலையீட்டால் பிரிட்டன் பின்வாங்கியது. சூயஸ் கால்வாய் மீண்டும் எகிப்தின் வசமானது. இது ஒரு பிராந்திய சக்தி உலக வல்லரசுகளைப் பணிய வைத்ததற்குச் சான்றாக அமைந்தது.

அன்று சூயஸ் கால்வாய் முடக்கப்பட்டதைப் போலவே, இன்று ஈரான் போர் காரணமாக மத்திய கிழக்கின் கடல்சார் போக்குவரத்து, குறிப்பாக செங்கடல் மற்றும் பாரசீக வளைகுடா பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. எகிப்து அன்று கப்பல்களை மூழ்கடித்துப் போக்குவரத்தைத் தடுத்தது. ஈரான் இன்று தனது ஏவுகணைத் தொழினுட்பம் மற்றும் கடற்படை பலம் மூலம் ஹோர்முஸ் நீரிணையை (Strait of Hormuz) அச்சுறுத்தி வருகிறது. இது உலகளாவிய எண்ணெய் விநியோகத்தையும், கப்பல் காப்பீட்டுச் செலவுகளையும் (Shipping Insurance) கடுமையாகப் பாதித்துள்ளது.

1956-இல் பிரிட்டன் சந்தித்த அதே 'பொருளாதார வீழ்ச்சியை' (Currency Devaluation), இன்று ஈரான் மீது அமெரிக்கா ஏவும் பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்த முயல்கின்றன. ஆனால், ஈரான் கடல்வழிப் பாதையை முடக்குவதன் மூலம் உலகப் பொருளாதாரத்திற்கே அச்சுறுத்தலை உருவாக்குகிறது.

1956-இல் சூயஸ் போரினால் பிரிட்டனின் 'ஸ்டெர்லிங் பவுண்ட்' (Sterling Pound) சரிவைச் சந்தித்தது. அதுவரை உலகளாவிய இருப்பு நாணயமாக (Reserve Currency) இருந்த பவுண்ட் தனது மதிப்பை இழந்தது. ஈரான் மீதான நேரடிப் போர் அல்லது நீண்டகால ஆக்கிரமிப்பு ஏற்பட்டால், அது அமெரிக்க டாலரின் (US Dollar) ஆதிக்கத்தைச் சிதைக்கக் கூடும். குறிப்பாக சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் ‘டாலர் நீக்கம்’ முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், ஒரு பெரிய போர் அமெரிக்கப் பொருளாதாரத்திற்குப் பெரும் சுமையாக மாறும். சூயஸ் நெருக்கடியின் போது, பிரிட்டனின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்காவே அதற்கு ஆதரவளிக்கவில்லை. இது பிரிட்டனை உலக அரங்கில் தனிமைப்படுத்தியது. தற்போதைய சூழலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சில நாடுகள் மற்றும் வளைகுடா நாடுகள் அமெரிக்காவின் நேரடிப் போர் முனைப்பை முழுமையாக ஆதரிக்கத் தயங்குகின்றன. அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக இறங்கினால், அது அதன் உலகளாவிய தலைமைத்துவத்திற்கு (Global Hegemony) முற்றுப்புள்ளி வைப்பதாக அமையலாம். பிரிட்டன் இராணுவ ரீதியாகப் பலமாக இருந்தாலும், அன்று எகிப்தின் கொரில்லாத் தாக்குதல்கள் மற்றும் சர்வதேச அழுத்தம் ஆகியவற்றால் பின்வாங்க நேரிட்டது. ஈரான் 1.5 மில்லியன் வீரர்களைக் கொண்ட வலுவான இராணுவத்தையும், ஆளில்லா விமானங்கள் (Drones) மற்றும் ஏவுகணைத் தொழினுட்பத்தையும் கொண்டுள்ளது. ஈராக் அல்லது ஆப்கானிஸ்தான் போர்களை விட ஈரான் போர் அமெரிக்காவிற்குப் பன்மடங்கு அதிக உயிர்ச்சேதத்தையும் பொருள் சேதத்தையும் ஏற்படுத்தக்கூடும். வரலாற்று ஆசிரியர்கள் சூயஸ் நெருக்கடியைப் ‘பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இறுதிச் சங்கு’ எனக் குறிப்பிடுகின்றனர். அமெரிக்கா ஈரானில் தோல்வியையோ அல்லது மிக நீண்ட தேக்கநிலையையோ (Stalemate) சந்தித்தால், அது ‘அமெரிக்கத் தனித்துவம்’ மற்றும் உலகக் காவலன் என்ற அதன் பிம்பத்தைச் சிதைக்கும். இது ஒரு புதிய பன்முனை உலகிற்கு வழிவகுக்கும்.

ஈரானில் 1951-53 காலகட்டத்தில் எண்ணெய் வளத்தைத் தேசிய மயமாக்கிய பிரதமர் முகமது மொசாடெக்கை, அமெரிக்காவின் CIA மற்றும் பிரிட்டிஷ் உளவுத்துறையான MI6 ஆகியவை இணைந்து 'ஆபரேஷன் அஜாக்ஸ்' மூலம் பதவியிறக்கி, முகமது ரேசா ஷா பஹ்லவியைச் சர்வாதிகாரியாக அமர்த்தின. ஆனால் 1979 புரட்சியின் மூலம் ஈரானிய மக்கள் அவரைத் தூக்கியெறிந்தனர். இதேபோன்ற சதித்திட்டங்கள் 1954-இல் குவாத்தமாலாவிலும் (ஜேக்கபோ அர்பென்ஸின் நிலச்சீர்திருத்தத்திற்கு எதிராக), 1960-இல் காங்கோவிலும் (பாட்ரிஸ் லுமும்பாவின் படுகொலை மற்றும் மோபுடுவின் நியமனம்) அரங்கேற்றப்பட்டு, அந்த நாடுகள் முப்பதாண்டு கால உள்நாட்டுப் போர்களுக்கும் சீரழிவுகளுக்கும் தள்ளப் பட்டன. சமீபத்திய உதாரணமாக, 2011 செப்ரெம்பர் தாக்கு தலுக்குப் பிறகு சுமார் 2.3 டிரில்லியன் டாலர்களைச் செலவ ழித்த போதிலும், 20 ஆண்டுகாலப் போராட்டத்தின் முடிவில் 2021 ஓகஸ்டில் தலிபான்களிடமே மீண்டும் ஆட்சியை ஒப்ப டைத்துவிட்டு அமெரிக்கா ஆப்கானிஸ்தானிலிருந்து வெளி யேறியது. இத்தகைய வரலாற்றுத் தோல்விகளை முன்வைக் கும் அரசியல் விஞ்ஞானிகள், ஈரான் மீதான தற்போதைய அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு முயற்சியும் 1956 சூயஸ் கால் வாய் நெருக்கடியில் பிரிட்டன் சந்தித்த அதே பேரழிவையும் அதிகார வீழ்ச்சியையுமே அமெரிக்காவிற்குப் பரிசாக அளிக் கும் எனக் கருதுகின்றனர்.

2003-ஆம் ஆண்டு ஈராக்கில் அணு ஆயுதங்களைத் தேடுவ தாகக் கூறி நுழைந்த அமெரிக்கா, குர்துப் படைகளால் பிடிக்கப்பட்ட சதாம் உசேனைக் கைப்பற்றித் தூக்கிலிட்டது. இதேபோல் 2011-இல், 1953 ஈரானியத் தேசியமயமாக்கலைப் போன்றே சில மேற்கத்திய நிறுவனங்களை லிபியா தேசிய மயமாக்கியதை அடுத்து, நேட்டோ (NATO) படைகளைத் தூண்டிவிட்டு முஅம்மர் கடாபியை அமெரிக்கா படுகொலை செய்தது; அதன் விளைவாக இன்றும் லிபியா ஒரு சிதைந்த தேசமாகவே உள்ளது. 1961-இல் கியூபாவில் 'பன்றி வளை குடா' (Bay of Pigs) படையெடுப்பு தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, தசாப்தகாலப் பொருளாதாரத் தடைகள் மூலம் கியூப மக்களைப் பட்டினியில் தள்ளி அந்நாட்டைக் கைப் பற்ற அமெரிக்கா முயன்று வருகின்றது. தற்போதைய சூழலில், ஈரானியப் போரில் அமெரிக்கா தோல்வியைத் தழுவினால், தனது சர்வதேச மதிப்பை நிலைநாட்டிக்கொள்ள ஒரு 'ஆறு தல் வெற்றிக்காக' கியூபாவை முழுமையாகக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கக்கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

ஹோர்முஸ் நீரிணை:

ஈரான் இரு விடயங்களை இதுவரை செய்துள்ளது. ஹோர் முஸ் நீரிணையை மூடியது. இரண்டாவது அமெரிக்க இராணு வத் தளங்கள் இருந்து மத்திய கிழக்கு நாடுகள் மீது தாக்கு தல்களை நடத்தி இராணுவத் தளங்களைச் சீர்குலையச் செய்துள்ளது. அது மட்டுமல்லாமல் அமெரிக்கச் சார்பு மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதார மையங்களையும் சேதப் படுத்தியுள்ளது. 20 வீதமான எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஹோர்முஸ் நீரிணையின் ஊடாகவே செங்கடலுக்கு செல்கின்றது. ஜப்பான், தென் கொரியா, இந்தியா போன்ற நாடுகள் ஹோர்முஸ் நீரிணையிலேயே தங்கியுள்ளன. மற் றைய ஆசிய நாடுகளும் இலங்கை உட்பட இதனால் பாதிப் புக்குள்ளாகியுள்ளன. இதனால் எண்ணெய் விலை சர்வதேச அரங்கில் அதிகரித்துள்ளது. இது உலகெங்கும் பொருளா தார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. போர் இன்னமும் மூன்று வாரங்களுக்கு நீடித்தால் மற்றும் ஹோர்முஸ் நீரிணை தொடர்ந்து மூடப்பட்டிருந்தால் உலகம் பெரும் பொருளா தார நெருக்கடியைச் சந்திக்கும். இதன் மூலம் ஈரான் தனக்கு சாதகமாக சில சர்வதேச முடிவுகளை எடுக்க சாத்தியப் படுத்தும்.

நூறு மைல் நீளமான ஹோர்முஸ் நீரிணை உலகப் பொருளா தாரத்தின் மிக முக்கியமான ஒரு பகுதியாகும். 2025-ஆம் ஆண்டில், தினசரி சுமார் 20 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெ யும் எண்ணெய் சார்ந்த பொருட்களும் இந்த நீரிணை வழி யாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இது உலக எண் ணெய் வர்த்தகத்தில் 25 சதவீதமாகும். மேலும், உலக வர்த் தகத்தின் 19 சதவீத திரவ இயற்கை வாயுவும் (LNG) இதன்



"ஈரானில் 1951-53 காலகட்டத்தில் எண்ணெய் வளத்தைத் தேசிய மயமாக்கிய பிரதமர் முகமது மொசாடெக்கை, அமெரிக்காவின் CIA மற்றும் பிரிட்டிஷ் உளவுத்துறையான MI6 ஆகியவை இணைந்து 'ஆபரேஷன் அஜாக்ஸ்' மூலம் பதவியிறக்கி, முகமது ரேசா ஷா பஹ்லவியைச் சர்வாதிகாரியாக அமர்த்தின்."



மூலமே விநியோகிக்கப்படுகிறது. 2025-ஆம் ஆண்டின் தரவு களின்படி, ஹோர்மூஸ் நீரிணை வழியாகச் செல்லும் எண் ணெயில் 80 சதவீதம் ஆசிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய் யப்பட்டுள்ளது. இந்த மிகப்பெரிய விநியோக இடைவெளியை, அமெரிக்கக் கண்டத்தில் உள்ள எண்ணெய் வளத்தால் தற் காலிகமாகக் கூட ஈடுகட்டவோ அல்லது மாற்றீடு செய்யவோ முடியாது. ஏனெனில், ஆசியாவின் சுத்திகரிப்பு நிலையங்கள் பெரும்பாலும் மத்திய கிழக்கின் கச்சா எண்ணெய் வகைக் கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அமெரிக்கா வெனிசுலாவின் எண்ணெய் வளத்தைத் தன்வசப்படுத்துவ தன் மூலம், இந்தச் சந்தையைக் கைப்பற்றவும் தனது எரிசக்தி ஆதிக்கத்தை நிலைநாட்டவும் தொடர்ந்து முயன்று வருகிறது.

IEA அமைப்பில் உள்ள நாடுகள் (தென் கொரியா, ஜப்பான் போன்றவை) தங்களது நிகர எண்ணெய் இறக்குமதியில் குறைந்தது 90 நாட்களுக்குத் தேவையான இருப்பை வைத் திருக்க வேண்டும் என்பது கட்டாயம். 2025 - 26 காலப்பகு தியில் ஹோர்மூஸ் நீரிணை போன்ற பகுதிகளில் பதற்றம் ஏற்படும்போது, இந்த நாடுகள் தங்கள் இருப்பை சந்தைக்கு விடுவிப்பது விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த உதவும். ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள் ஆசியா விலேயே அதிகப்படியான அவசரகால இருப்பைக் கொண் டுள்ளன. ஜப்பான் சுமார் 100 முதல் 150 நாட்களுக்குத் தேவையான எண்ணெயைச் சேமித்து வைத்துள்ளது. இந்தியா IEA-வின் முழுநேர உறுப்பினர் அல்ல (இணை உறுப்பினர் மட்டுமே). இந்தியாவின் தற்போதைய மூலோபாய இருப்பு சுமார் 9.5 முதல் 12 நாட்கள் வரை மட்டுமே போதுமானது. இது ஜப்பான் போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவு.

ஹோர்முஸ் நீரிணையில் ஈரான் நான்கு வகையான கண்ணி வெடிகளை நிலைநிறுத்தியுள்ளது: கடல்சார் கண்ணிவெ டிகள் (Seabed Mines), லிம்பெட் கண்ணிவெடிகள் (Limpet Mines), நங்கூரமிடப்பட்ட கண்ணிவெடிகள் (Moored Mines) மற்றும் மிதக்கும் கண்ணிவெடிகள் (Floating Mines) ஆகிய வையே அவை. மெரிக்க அதிபர் ட்ரம்ப் இவற்றை முறியடித் துவிட்டதாகக் கூறினாலும், தற்போதைய சூழலில் பிரிட்டன் உள்ளிட்ட நட்பு நாடுகளின் இராணுவ உதவியை அமெ ரிக்கா நாடியுள்ளது. ஹோர்மூஸ் நீரிணை தொடர்ச்சியாக மூடப்பட்டால் உலகளவில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படும். குறிப்பாக ஆசியாக் கண்டத்து நாடுகள் பெரும் சிக்கலுக்குள் தள்ளப்படும். விநியோகச் சங்கிலி பாதிக்கப் படும். சூழ்நிலைகளும் அவற்றின் மாறுபட்ட பொருளாதார விளைவுகளும் ஆட்சி மாற்றங்கள், கொந்தளிப்பு நிலை, வன்முறைகள் போன்றவற்றை தோற்றுவிக்கும். ஒரு 'புதிய இயல்பு நிலையாக' மாற்றவே அரசுகள் முனையும்.

இந்த நெருக்கடியை சமாளிக்கும் மாற்றாகக் கருதப்படும் சவூதி அரேபியாவின் 'கிழக்கு-மேற்கு' குழாய்ப் பாதை மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் 'புஜைரா' (Fujairah) குழாய்ப் பாதை ஆகியவை, தற்போது நாளொன்றுக்கு ஒன்று முதல் இரண்டு மில்லியன் பேரல் எண்ணெயை மட்டுமே கடத்தும் திறன் கொண்டவை. உலகளாவிய எரிசக்தித் தேவையில் இது மிகச்சிறிய அளவே என்பதால், நீரிணையை மூடுவதன் மூலம் சர்வதேச நெருக்கடியை ஏற்படுத்த முடியும் என்ற ஈரானின் பிடிவாதமான நிலைப்பாட்டை இச்சூழ்நிலை மேலும் உறுதிப்படுத்துகிறது. மறுபுறம், ஈரானின் உள்நாட்டு அரசி யல் சூழல் முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் கொந்தளிப்பைச் சந்தித்து வருகின்றது. கடந்த ஓராண்டிற் கும் மேலாகத் தொடர்ந்து வரும் மக்கள் போராட்டங்கள், 1979 புரட்சிக்குப் பிறகு அந்நாடு கண்டுள்ள மிகப்பெரிய மக்கள் எழுச்சியாகக் கருதப்படுகிறது. தொடர் பொருளா தாரச் சரிவு மற்றும் வன்முறை சார்ந்த ஒடுக்குமுறைகளால், ஈரானிய ஆட்சியின் மீதான நம்பகத்தன்மை மக்களிடையே பெருமளவு சிதைந்துள்ளது. எனவே, உள்நாட்டில் கலவரங் கள் வெடித்தால் அரசு தன்னைக் காத்துக்கொள்வது பெரும் சவாலாக அமையும். குறிப்பாக, முதலில் குறிப்பிட்டவாறு ஈரானின் தற்போதைய பொருளாதார நிலையால் சிறு முதலா ளிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தூண்டுதல் உள்நாட்டுக் குழப்பங்களுக்கு முக்கியக் காரணி யாக அமையலாம். அதே வேளையில், சர்வதேச அழுத்தங் களுக்கு இடையே ஈரானாலும் ஹோர்முஸ் நீரிணையை நீண்ட காலத்திற்கு மூடிவைத்திருக்க முடியாது என்பதே எதார்த்த மான நிலை.

வர்த்தக மற்றும் விவசாய பாதிப்புகள்:

நைட்ரஜன் உர உற்பத்தியின் அடிப்படை மூலப்பொருளாக இயற்கை எரிவாயு திகழ்கிறது. அதேவேளையில், மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கான தாவர அடிப்படையிலான உணவு விநியோகச் சங்கிலி பெரும்பாலும் ஹோர்முஸ் நீரிணையைச் சார்ந்தே அமைந்துள்ளது. இப்பாதையில் ஏற்படும் ஏதேனும் ஒரு இடையூறு, சர்வதேச அளவில் சோயா உள்ளிட்ட அத்தி யாவசியப் பயிர்களின் உற்பத்தியில் கடும் சரிவை ஏற்படுத்தும். குறிப்பாக, நைட்ரஜன் பற்றாக்குறையானது பயிர் வளர்ச்சியில்

> ***“ஈரானின் பிரதான எண்ணெய் ஏற்றுமதி மையமாகவும், இயற்கை துறைமுகமாகவும் விளங்கும் கார்க் தீவு (Kharg Island) மீது அமெரிக்கா நடத்தியுள்ள தாக்குதல், அந்நாட்டின் பொருளாதார முதுகெலும்பைச் சிதைக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.”***

தேக்கத்தை உண்டாக்கி, ஒட்டுமொத்த விளைச்சலையும் வீழ்ச்சியடையச் செய்யும். இதன் நேரடி விளைவாக, சந்தை யில் காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை பன்மடங்கு உய ரும் அபாயம் உள்ளது. வரலாற்று ரீதியாக, இலையுதிர்கால அறுவடைக்கு முந்தைய காலப்பகுதிகளில் வெடிக்கும் போர் கள், பல நாடுகளின் உணவுப் பாதுகாப்பில் நீண்டகாலத் தட்டுப்பாட்டையும், ஈடுசெய்ய முடியாத பொருளாதாரத் தாக் கங்களையும் உருவாக்குகின்றன.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல், உலகளாவிய பொருளாதாரக் கட்டமைப்பில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது. குறிப்பாக, அலுமினிய வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கவனிக்கத்தக்கவை. அமெரிக்காவின் அலுமி னிய வர்த்தக மதிப்பீடு குறுகிய காலத்திலேயே 9% அதிகரித் துள்ள அதேவேளையில், எகிப்து போன்ற முக்கியச் சந்தை களில் விவசாயத்திற்கு அத்தியாவசியமான யூரியா உரத்தின் விலை 37% வரை உயர்ந்துள்ளது. உலகின் நிரூபிக்கப்பட்ட எண்ணெய் இருப்புகளில் 50 சதவீதத்தை மத்திய கிழக்கு நாடுகள் கொண்டுள்ள நிலையில், தற்போதைய மோதல்கள் எரிசக்திச் சந்தையை வெகுவாகப் பாதித்துள்ளன. இதன் விளைவாக, இயற்கை எரிவாயுவின் விலை உலகளவில் 50 சதவீதமாகவும், ஆசியச் சந்தைகளில் 91 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. இத்தகைய விலை ஏற்றங்கள் மற்றும் விநி யோகத் தடைகள், சுமார் 859 பில்லியன் கொள்கலன்கள் அல்லது தற்போதைய சந்தை மதிப்பில் சுமார் 86 டிரில் லியன் டொலர் மதிப்பிலான வர்த்தகப் பாதிப்புகளைக் குறிக் கின்றன.

சந்தை மாற்றங்கள்:

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால், அப்பிராந்தி யத்தின் பங்குச் சந்தைகள் கடும் சரிவைச் சந்தித்துள்ளன. இந்தச் சந்தை ஏற்ற இறக்கங்கள், அங்குள்ள முன்னணி நிறு வனங்களின் செயற்பாடுகளையும் முதலீட்டு நிலைத்தன்மை யையும் பெருமளவு பாதித்துள்ளன. இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி, மத்திய கிழக்கில் குவிந்துள்ள பெரும் மூல தனத்தைத் தனது சந்தையை நோக்கி ஈர்க்க அமெரிக்கா தீவிரமாக முயன்று வருகின்றது. குறிப்பாக, உலகளாவிய வணிக மையமாகத் திகழும் துபாய் போன்ற நகரங்களின் எதிர்காலம், மிகக்குறுகிய காலத்திலேயே பெரும் உறுதி யற்ற நிலையை எட்டியுள்ளது. இத்தகைய நெருக்கடியைப் பயன்படுத்தி, துபாய்க்கு நிகரானதொரு சர்வதேச வர்த்தக மையத்தைத் தனது சொந்த மண்ணிலேயே கட்டமைக்க அமெரிக்கா முனைப்புக் காட்டி வருகின்றது.

மூலதனச் சந்தை அழுத்தம்:

தற்போதைய போர்ச் சூழல் முதலீட்டாளர்களின் நம்பிக் கையை வெகுவாகக் குறைத்துள்ளதோடு, பிராந்திய அளவி லான நிதி ஓட்டத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது. கட்டாரின் இயற்கை வாயு உற்பத்தி நிலையம் (ஈரானின் தாக் குதலால் பலத்த சேதமடைந்துள்ளது. குறிப்பாக, கட்டாரின் மிக முக்கியமான இயற்கை எரிவாயு உற்பத்தி மையமான 'றாஸ் லபான் இன்டஸ்ரியல் சிற்றி (Ras Laffan Industrial City), ஈரானின் தாக்குதலால் பலத்த சேதத்தைச் சந்தித் துள்ளது. இந்தத் தாக்குதலின் நேரடி விளைவாக, கட்டார் அரசுக்கு சுமார் 20 பில்லியன் டொலர் வருமான இழப்பு ஏற் பட்டுள்ளது. போரினால் சேதமடைந்த இந்த உற்பத்தி நிலை யத்தை மீண்டும் முழுமையாகச் சீரமைத்து, சீரான செயற் பாட்டிற்குக் கொண்டுவரக் குறைந்தது மூன்றாண்டு கள் காலமெடுக்கும் என அந்நாடு அதிகாரபூர்வமாகத் தெரிவித் துள்ளது. இத்தகைய நீண்டகால உற்பத்தி முடக்கம், உலக ளாவிய இயற்கை எரிவாயு விநியோகச் சங்கிலியில் மீள முடியாத பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் எனப் பொரு ளா தார நிபுணர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

சேதங்கள்:

மத்திய கிழக்கில் நிலவும் போர்ப் பதற்றங்களுக்கு மத்தி யில், அமெரிக்காவின் இராணுவக் கட்டமைப்புகள் எதிர்கொண் டுள்ள பாதிப்புகள் குறித்து நியூயார்க் டைம்ஸ் (மார்ச் 11, 2026) அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி, இப்பிராந்தியத்தில் உள்ள 17 அமெ ரிக்கத் தளங்கள் ஈரானின் தாக்குதல்களால் சேதமடைந் துள்ளன. இதில் குறிப்பாக, சவூதி அரேபியாவில் உள்ள பிரின்ஸ் சுல்தான் விமானத் தளம் (Prince Sultan Air Base), குவைத்தின் அலி அல் சலேம் விமானத் தளம் (Ali Al Salem Air Base) மற்றும் கேம்ப் புயரிங் (Camp Buehring) ஆகிய முக்கியத் தளங்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, மத்திய கிழக்கிலேயே அமெரிக்காவின் மிகப்பெரிய இராணுவ மையமான கத்தாரிலுள்ள அல் உதித் விமானத் தளம் (Al Udeid Air Base) ஆகிய முக்கியத் தளங்கள் இத் தாக்குதலில் இலக்காக்கப்பட்டுள்ளன. இவை தவிர, மத்திய கிழக்கிலேயே மிகப்பெரிய அமெரிக்கத் தளமான கத்தாரில் உள்ள அல் உதித் விமானத் தளம் (Al Udeid Air Base) மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்தாக்குதல்கள் அமெ ரிக்காவின் ரேடார் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளைப் பலவீனப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதைச் செயற்கைக்கோள் புகைப்படங்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஈரானின் பிரதான எண்ணெய் ஏற்றுமதி மையமாகவும், இயற்கை துறைமுகமாகவும் விளங்கும் கார்க் தீவு (Kharg Island) மீது அமெரிக்கா நடத்தியுள்ள தாக்குதல், அந்நாட்டின் பொரு ளாதார முதுகெலும்பைச் சிதைக்கும் அபாயத்தை ஏற்படுத் தியுள்ளது. 2026 மார்ச் 17 நிலவரப்படி, ஈரானில் 61,000-க்கும் மேற்பட்ட பொதுக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளதோடு, தலைநகர் தெஹ்ரானில் மட்டும் 18,000-க்கும் அதிகமான குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் தரைமட்டமாக் கப்பட்டுள்ளன. இவற்றுடன், ஈரானின் தொன்மை வாய்ந்த அடையாளங்களான யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்ற தளங் கள் மற்றும் 56 அருங்காட்சியகங்கள் உள்ளிட்ட கலாசார பாரம்பரியச் சின்னங்களும் இப்போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குவைத், சவூதி அரேபியா, கட்டார் போன்ற நாடுகளில் உள்ள இயற்கை வாயு தயாரிப்பு நிலை யங்கள், எண்ணெய் கிடங்குகள் போன்றன சேதமடைந்துள்ளன.



முடிவுரை:

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலினால் முன்னெடுக்கப்படும் இப் போரானது சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பான ஒரு சட்டவி ரோதப் பலப்பிரயோகமாகும். ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை; அங்கு மத அடிப்படைவாதமற்ற ஒரு ஆட்சி மாற்றம் தேவையெனக் கரு தப்பட்டாலும், அமெரிக்காவின் உண்மையான நோக்கம் தனக்குச் சாதகமான ஒரு பொம்மை அரசாங்கத்தை அல்லது சர்வாதிகாரத் தலைமையைப் பிரதிஷ்டை செய்வதே ஆகும். ஜனநாயகத்தின் மீதும் மக்கள் உரிமைகள் மீதும் அமெரிக்கா விற்கு உண்மையான அக்கறை இருக்குமானால், சவூதி அரே பியா உள்ளிட்ட மன்னராட்சி நடக்கும் ஒடுக்குமுறை நாடு களை அது ஆதரிக்காது. தற்போது இப்போரானது 15 நாடு களை உள்ளடக்கிய ஒரு பிராந்திய மோதலாக உருவெடுத் துள்ளது. இதில் ஈரான், இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட 12 நாடுகள் நேரடியாகப் போர்க்களத்தில் ஈடுபட்டுள்ள நிலை யில், ஐக்கிய இராச்சியம், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடு கள் இராணுவ மற்றும் தொழினுட்ப ஆலோசனைகளை வழங்கி மறைமுகமாகப் பங்கெடுக்கின்றன.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல் திட்டங்களை முன்கூட்டியே அறிந்திருந்தும், ஈரான் தனது உயர்மட்டத் தலை வர்களைப் பாதுகாக்கத் தவறியது அதன் உளவுத்துறை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு கட்டமைப்பில் உள்ள பாரிய ஓட்டைகளையே காட்டுகிறது. எதிரி நாடுகளால் ஈரானின் இரகசிய நகர்வுகளை எளிதில் ஊடுருவ முடிந்தமை, அதன் இராணுவக் கட்டமைப்பு முறையாக நிர்மாணிக்கப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறது. அதேநேரம், அண்டை நாடுகளுடன் ஈரான் கொண்டுள்ள தீர்க்க முடியாத பகை, மத்திய கிழக்கு நாடுகளைப் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது. ஈரானின் பதில் தாக்குதல் தங்களைச் சிதைக் கும் என்று தெரிந்தும், அமெரிக்காவின் தளத்தினைக் கொண் டுள்ள இந்நாடுகளால் ஒரு சமாதான ஒப்பந்தத்தை அமெரிக் காவிடம் வலியுறுத்த முடியாமல் போனது ஏன்? உண்மை யில், மத்திய கிழக்கு நாடுகள் மீதான ஈரானின் தாக்குதல் அமெரிக்காவிற்குப் பெரும் மூலதன இலாபத்தையும், ஆயுதச் சந்தைக்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இஸ்ரேல் ஈரானையும் தாக்கி ஹிஸ்புல்லாவையும் தாக்கு வேன் என்ற பெயரில் லெபனானுக்குள் தரைவழியே செல் கின்றது. அகண்ட இஸ்ரேல் என்பதற்குள் லெபனானும் அடங்கு கின்றது. ஹிஸ்புல்லாவின் இருத்தல் இஸ்ரேலுக்கு அவசியம். இஸ்ரேலுக்கு வெளியே உள்ள பாலஸ்தீன அகதிகளை அழிப்பதற்கும், லெபனானின் பெரும் பகுதியைக் கைப்பற்று வதற்கும் ஹிஸ்புல்லா அவசியம்.

போரின் முடிவில் ஈரான் வெற்றி பெற்றாலும், ஈரானின் அடிக் கட்டுமானமே ஆட்டங்கண்டுள்ளது. ஏற்கனவே, வருட ஆரம் பத்தில் ஆட்சியாளர்களுக்கு எதிராகப், போராட்டங்கள் நடை பெற்றுள்ளன. போரின் முடிவில் ஈரானுக்குள் பொருளாதாரப் பிரச்சினையும், வறுமையும் ஏற்படும். இது மேலும் ஈரானை உள்நாட்டு யுத்தம் ஒன்றுக்குள் தள்ளும். இஸ்ரேல் தொடர்ந்து ஈரானிய தலைவர்களை அழித்து வந்தால் ஒரு அரசியல் தலைமை வெற்றிடம் ஏற்படும். அமெரிக்கா விரும்புவது மற் றொரு லிபியாவை. போரில் ஈரான் வென்றாலும் லிபியா போன்ற நிலைமையே ஏற்படும்.

அமெரிக்காவின் போர் வியூகம் என்பது வெறும் வெற்றியை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல; மாறாக, போரினால் சிதைக்கப்பட்ட மத்திய கிழக்கை மீண்டும் புனரமைப்பதன் மூலம் தனது பொருளாதார இலக்குகளை எட்டும் ஒரு நீண்ட காலத் திட்டமாகும். போரில் பின்னடைவுகளைச் சந்தித்தா லும், மறுசீரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் மற்றும் முதலீடுகள் இறுதியில் அமெரிக்காவையே சென்றடையும். இஸ்ரேல், அமெரிக்காவின் இராணுவ பலத்தைப் பயன்படுத்தி மத்திய கிழக்கை ஒரு பலவீனமான பிராந்தியமாக மாற்றி யுள்ளது. இது இஸ்ரேலுக்குத் தற்காலிகப் பாதுகாப்பையும் வெற்றியையும் தந்தாலும், பிராந்திய ஸ்திரத்தன்மையைச் சிதைத்து, அமெரிக்காவிற்கான பொருளாதார மூலதனத்தை உறுதிப்படுத்தும் ஒரு கருவியாகவே இப்போர் தளம் மாறி யுள்ளது.

மத்திய கிழக்கின் தற்போதைய போர்ப் பதற்றங்களுக்கு மத்தியில், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரு பெரும் வல்லரசு களும் இச்சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக உன்னிப் பாகக் கவனித்து வருகின்றன. டச்சு-அமெரிக்க அரசியல் விஞ்ஞானியும் யேல் பல்கலைக்கழகப் பேராசிரியருமான நிக் கோலஸ் ஜான் ஸ்பைக்மேன் (Nicholas John Spykman) முன் மொழிந்த 'ரிம்லான்ட்' கோட்பாட்டின்படி, 'யார் ரிம்லான்ட் டைக் (மேற்கு ஐரோப்பா முதல் மத்திய கிழக்கு வழியாகக் கிழக்கு ஆசியா வரையிலான கடலோரப் பகுதிகள்) கட்டுப் படுத்துகிறார்களோ, அவர்களே யுரேசியாவை ஆள்கிறார்கள்; யுரேசியாவை ஆள்பவர்களே உலகின் தலைவிதியையும் தீர் மானிக்கிறார்கள்.' இந்தப் போரின் முடிவில் அமெரிக்கா பொருளாதாரச் சிக்கல்களில் ஆழ்ந்தால், இந்த ரிம்லான்ட் பகுதியின் மீதான பிடியை உறுதிப்படுத்தி சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் உலகளாவிய அதிகார மையங்களாக உருவெடுக்கும் சூழல் உருவாகும்.



rathan@thaiveedu.com



உலகின் முதலாவது செயற்கை நுண்ணறிவுப் போர் இதுவா!

சுப்ரமணியம் ஜெயசீலன்

மனித இனம் தோன்றிய காலம் முதலே, இவ்வுலகம் பல்வேறு காலகட்டங்களில் எண்ணற்ற போர்களைச் சந்தித்து வந்துள்ளது. இதிகாசப் புராணக் காலங்கள் தொடங்கி நவீன யுகம் வரை, மனித நாகரிகத்தின் வரலாறு போர்களுடனேயே பின்னிப் பிணைந்து பதிவாகியுள்ளது. ஆரம்பகாலக் கற்கருவிகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட மோதல்கள், காலப்போக்கில் வில், அம்பு, ஈட்டி மற்றும் வாள் என உருமாற்றம் பெற்றன. தொழினுட்ப வளர்ச்சியின் தொடர்ச்சியாகத் துப்பாக்கிகள், அணு ஆயுதங்கள், இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் எனப் போர் உத்திகளும் அவற்றின் தாக்கங்களும் பாரிய மாற்றங்களைச் சந்தித்துள்ளன. அந்த வகையில், நவீன உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஒரு மிக முக்கியமான புவிசார் அரசியல் நிகழ்வாக இன்றைய ஈரான் - அமெரிக்கப் போர்ச் சூழல் கருதப்படுகிறது.

இந்தப் போரில் ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் மோதிக் கொள்கின்றன. இஸ்ரேலும் அமெரிக்காவும் ஈரான் மீது தாக்குதல் நடத்துகின்றன. இந்தப் போர் நம் மனித வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயமாகக் கருதப்படுகின்றது என்றால் அது மிகைப்படப் போவதில்லை. பொதுவாக செயற்கை நுண்ணறிவு இது வரையில் தரவுகளைப் பகுப்பாய்விற்கு உட்படுத்தும் ஓர் உத்தியாக காணப்பட்டது. எனினும் தற்பொழுது இந்தப் போரின் வேகத்தைக் கூட்டும் ஓர் முக்கிய ஏதுவாக இந்த செயற்கை நுண்ணறிவைக் குறிப்பிட முடியும். நிகழ் நேரத்தில் இலக்குகளை நிர்ணயித்து தானியங்கி அடிப் படையில் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குவது மற்றும் எதிரி நாடுகள் பொழியும் ஏவுகணைகளை முன்கூட்டியே கண்டறிந்து அவற்றை வானிலேயே தாக்கி அளிக்கும் நுட்பங்களும் ஆச்சரியத்தை ஏற்படுத்து கின்றன. இந்த போர் நுட்பங்கள் செயற்கை நுண்ணறிவின் அசுர வளர்ச்சியின் அங்கமாக அமைந்துள்ளன.

இதுவரை காலமும் செயற்கை நுண்ணறிவானது பிரதானமாக தரவுகளை ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான ஓர் கருவியாக பயன்படுத்தப்பட்டது. எனினும் அண்மையில் ஆரம்பமான இந்தப் போரில் செயற்கை நுண்ணறிவு பிரதான வகிபாகத்தை கொண்டுள்ளது. இரண்டு தரப்பைச் சேர்ந்த இராணுவங்களும் செயற்கை நுண்ணறிவுத் தொழி னுட்பத்தை பயன்படுத்துகின்றன.

ஈரானிய இலக்குகளை துல்லியமாக திட்டமிடுதல், நூற்றுக்கணக்கான விமானங்களை ஒருசேர கண்காணித்து அவற்றை ஒருங்கிணைத்தல், கண்டம் விட்டு கண்டம் பாயக் கூடிய ஏவுகணைகளை எவ்வாறு இடை மறிப்பது போன்ற போரின் மிக முக்கியமான தீர்மானங்களை எடுப்பதில் இந்த செயற்கை நுண்ணறிவுத் தொழினு ட்பங்கள் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளன என்பது ஆச்சரியமான விடயம் ஆகும்.

காசாவில் இஸ்ரேலிய இராணுவம் அல்லது IDF-இன் நடவடிக்கைகள் முன்னோடியாக இருந்தால், ஆபரேஷன் ரோரிங் லயன் அல்லது அமெரிக்க பதிப்பில் எபிக் ஃப்யூரி, வரலாற்றில் முதல் முழு அளவிலான செயற்கை நுண்ண றிவுப் போர் என அடையாளப்படுத்த முடியும்.

எனினும் எவ்வாறான தேவைகளுக்காக இரு தரப்புகளும் செயற்கை நுண்ணறிவினை இந்தப் போரில் பயன் படுத்தின என்பது குறித்த விவரங்கள், நிச்சயமாக, கடுமையான ரகசியமாக பேணப்பட்டிருக்கும். ஆனால் அவற்றில் சில படிப்படியாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

இவை சினிமா பணியிலான இயந்திர மனிதர்களின் தாக்குதல்கள் கிடையாது, ஆனால் புலனாய்வு ஆய்வாளர் களினால் பல தசாப்த காலத்தில் கூட ஆய்வுக்கு உட் படுத்தி தீர்மானங்களை எடுக்க முடியாத விசாலமான தரவுகளை ஆய்வுக்கு உட்படுத்திய துல்லியமான தீர்மான ங்களை பரிந்துரைக்கும் உதவி அமைப்புகளாக இந்த செயற்கை நுண்ணறிவு தொழினுட்பத்தை அடையாளப் படுத்திடலாம். இந்த தகவல்கள் சில முக்கியமான தீர்மான ங்களை எடுப்பதற்கு வழிவகுக்கின்றது.

மனிதரின் சிந்தனை ஆற்றலை சவாலுக்கு உட்படுத்தக் கூடிய வியக்கத்தகு வேகத்தில் தற்போதைய போரில் இலக்குகள் அடையாளம் காணப்பட்டு, தாக்குதல் நிர்ணயிக்கப்பட்டு நடத்தப்படுவதாக பிரித்தானிய ஊடகமான தி கார்டியன் இந்த வாரம் தெரிவித்திருந்தது.

இந்த மாற்றம் நவீன போரியல் கோட்பாட்டில் ஒரு வியக்கத்தகு மாற்றத்தைக் குறிக்கிறது, இது மிகவும் துல்லியமானது, சிக்கனமானது என்பதுடன் ஆபத்தான தாகும்.

செயற்கை நுண்ணறிவு ஓர் இலக்கை ஆரம்பத்தில் அடையாளம் காண்பதற்கும் அதனை தாக்கி அழிப்பதற்கும் இடையிலான நேரத்தை நிச்சயமாக கணிசமாகக் குறைக்கிறது.

உதாரணமாக இரண்டாம் உலகப் போரின்போது, வான்வழி உளவுத்துறை போன்ற தகவல்களைச் சேகரிப்பதற்கும் குண்டுவீச்சுப் பணியை மேற்கொள்வதற்கும் இடையிலான நேரம் ஆறு மாதங்கள் வரை ஆகலாம்.

கடந்த காலத்தைப் பார்க்கும்போது, ஈராக் மீதான அமெரிக்க படையெடுப்பின்போது இலக்குகளை அடையாளம் காண 2,000 வீரர்கள் கொண்ட ஒரு உளவுத்துறை பிரிவு தேவை என்று லண்டன் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஈரானில் தற்போதைய நடவடிக்கையில், அதே பணிக்கு 20 பேர் மட்டுமே தேவைப்பட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

தற்கால இராணுவக் கட்டமைப்புகளில் செயற்கை நுண்ணறிவு (AI) மிக முக்கியமானதொரு மைல்கல்லாக உருவெடுத்துள்ளது. போர்க்களத்தில் பயன்படுத்தப்படும் ட்ரோன்கள் (Drones) மூலம் திரட்டப்படும் ஆயிரக்கணக்கான மணிநேரக் காணொளிகளை மனிதக் கண்களால் முழுமையாக ஆய்வு செய்வது சவாலானது. இச்சூழ்நிலையில், மேம்பட்ட மென்பொருள் கட்டமைப்புகள் இக்காணொளிகளை மிகக்குறுகிய காலத்தில் பகுப்பாய்வு செய்து, வாகனங்கள், மக்கள் நடமாட்டம் மற்றும் பல்வேறு ஆயுத வகைகளைத் துல்லியமாக அடையாளம் காண உதவுகின்றன.

இத்தகைய தொழினுட்பங்கள், புலனாய்வுத் துறை ஆய்வாளர்களுக்குத் தேவையான தீர்மானகரமான தரவுகளை (Critical Data) உடனுக்குடன் வழங்கி, கள நிலவரத்தைத் தெளிவுபடுத்துகின்றன. குறிப்பாக, சர்வதேசப் பாதுகாப்புத் துறையில் முன்னணியில் உள்ள பலந்திர் (Palantir) போன்ற நிறுவனங்களின் தரவுப் பகுப்பாய்வு மென்பொருட்கள், சிக்கலான தகவல்களை ஒருங்கிணைப்பதன் மூலம் முடிவெடுக்கும் திறனை (Strategic Decision-making) மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது கள நிலவரத்திற்கேற்ப மிக விரைவான முடிவுகளை எடுக்கவும், துல்லியமான இலக்குகளைத் தேர்ந்தெடுக்கவும் (Target Acquisition) இராணுவத் தளபதிகளுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

கடந்த 2023 ஆம் ஆண்டில், அமெரிக்கப் பாதுகாப்புத் துறை துணைச் செயலாளர் கேத்லீன் ஹிக்ஸ், பென்டகனின் அதிரடியான 'ரெப்ளிகேட்டர்' (Replicator) திட்டம் குறித்த விபரங்களை வெளியிட்டார். இத்திட்டத்தின் கீழ், ஆயிரக்கணக்கான தன்னாட்சி ட்ரோன்கள் (Autonomous Drones), ஆளில்லா கப்பல்கள் மற்றும் தரைவழி வாகனங்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் நேரடி மனிதக் கட்டுப்பாடுகள் இன்றி, செயற்கை நுண்ணறிவின் துணையுடன் போர்க்களத்தில் சுயாதீனமாக இயங்கும் திறன் கொண்டவை. நாடுகளின் இராணுவ எண்ணிக்கைப் பலத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில், அதிநவீனத் தொழினுட்பத்தைக் கொண்டு மிகக்குறுகிய காலத்தில் இத்தகைய 'ஆளில்லாப் படைப் பிரிவுகளை' உருவாக்குவதே இந்த மூலோபாயத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

இந்தப் பணியில் ஈடுபட்ட சிலரேனும் ஈரான் போரில் பங்கேற்றிருக்க வாய்ப்பு உள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில், அமெரிக்கா மத்திய கிழக்கு பகுதிக்கு LUCAS ஆளில்லா விமானக் கூட்டங்களை இயக்கும் ஒரு படையை அனுப்பியுள்ளது. அரிசோனாவின் Spekter-Works நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த ட்ரோன்கள், ஒவ்வொன்றும் சுமார் 35,000 டொலர் மதிப்பிலானவை மற்றும் முற்றிலும் தன்னிச்சையாக இயங்கக் கூடியவை. இவை வானில் பறக்கும்போதே தங்களுக்குள் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதுடன், இலக்குகளைப் பிரித்துக்கொண்டு, தரையிலிருந்து எந்தக் கட்டுப்பாடும் இன்றி ஈரானிய ரேடார் அமைப்புகளைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில், அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் (Pete Hegseth) உயர்மட்ட ராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பிய ஒரு குறிப்பு (Memo), இந்த விவகாரத்தை ஒரு நேரடி உத்தரவாக மாற்றியது.

அதில் அவர், ‘முன்னரங்கப் படை முதல் பின்வரிசைப் படை வரை அனைத்துத் தளங்களிலும், அமெரிக்க ராணுவம் ஒரு ‘AI-First’ (செயற்கை நுண்ணறிவுக்கு முதலிடம் அளிக்கும்) போர்ப்படையாக உருவெடுப்பதன் மூலம், செயற்கை நுண்ணறிவுத் துறையில் அமெரிக்காவின் ராணுவ ஆதிக்கத்தை விரைவுபடுத்த பாதுகாப்புத் துறைக்கு நான் உத்தரவிடுகிறேன்’ என்று குறிப்பிட்டுள்ளார்.’

அமெரிக்கா மட்டும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தவில்லை. இஸ்ரேல், வெளிநாட்டு அறிக்கைகளின்படி, இந்த வாரம் ஹப்சோரா (‘நற்செய்தி’) மற்றும் லாவெண்டர் (Lavender) என அழைக்கப்படும் செயற்கை நுண்ணறிவு அமைப்புகளையும் பயன்படுத்தியது, இது கடந்த இரண்டு ஆண்டுகளில் காசாவில் இலக்குகளை அடையாளம் காணவும் கண்டறியவும் உதவியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2023-ஆம் ஆண்டு தி கார்டியன் (The Guardian) இதழால் பரவலாக மேற்கோள் காட்டப்பட்ட, இஸ்ரேலிய புலனாய்வு ஊடகமான +972 மேகசின் (+972 Magazine) நடத்திய புலனாய்வின்படி, ‘கோஸ்பெல்’ (Gospel) என்ற அமைப்பு

அணுசக்தி நிலையங்கள், எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் புரட்சிகர பாதுகாப்புப் படைத் தலைமையகங்கள் போன்ற கட்டடங்கள் மற்றும் வசதிகளைத் தாக்குவதற்கான பரிந்துரைகளைத் தானாகவே உருவாக்குகிறது.

இது ஆயிரக்கணக்கான ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள், தகவல் தொடர்பு தரவுகள் மற்றும் மனித உளவுத் தகவல்களை ஆய்வு செய்து, ஆயுதப் படையினர் பயன்படுத்தும் இடங்களையும் கட்டமைப்புகளையும் அடையாளம் காண்கிறது.

அந்த அறிக்கைகளின்படி, 'கோஸ்பெல்' (Gospel) அமைப்பு கட்டடங்களைக் குறி வைத்தால், 'லேவண்டர்' அமைப்பு மனிதர்களைக் குறிவைக்கிறது. இது ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த தரவுத்தளமாகும். இது சமூகத் தொடர்புகள் மற்றும் இருப்பிட வரலாறு உள்ளிட்ட பெருமளவிலான கண்காணிப்புத் தரவுகளை ஆய்வு செய்து, தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய நபர்களை அடையாளம் காண்கிறது.

இந்த மாதிரி (Model), ஒவ்வொரு நபருக்கும் 1 முதல் 100 வரை ஒரு மதிப்பெண்ணை வழங்குகிறது. அந்த மதிப்பெண் ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டும்போது, 'லேவண்டர்' அந்த நபரை ஒரு ராணுவ இலக்காகக் குறிக்கிறது.

'வேர் ஈஸ் டாடி?' (Where's Daddy?) என்று அழைக்கப்படும் மற்றொரு அமைப்பு, இவ்வாறு குறிக்கப்பட்டவர்களை பின்தொடர்ந்து, அவர்கள் ஒரு குறிப்பிட்ட குடியிருப்பு கட்டடத்திற்குள் நுழையும்போது அதை இயக்குபவர்களுக்கு (Operators) உடனுக்குடன் எச்சரிக்கை அளிப்பதன் மூலம் இந்தச் செயல்முறையை முழுமையாக்குகிறது.

இஸ்ரேல், தெஹ்ரானில் உள்ள கிட்டத்தட்ட அனைத்து போக்குவரத்து கேமராக்களையும் ஹேக் செய்து, அவற்றின் காட்சிகள் டெல் அவிவில் உள்ள சேவையகங்களுக்கு அனுப்பப்பட்டன. அந்த இடத்திலிருந்து, கடந்த சனிக்கிழமை ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்ட வீட்டிற்கு வந்த மூத்த அதிகாரிகளின் மெய்க்காப்பாளர்களின் நடமாட்டத்தை தானாகவே கண்காணிக்க முடிந்தது. அவர்களின் பணி அட்டவணைகள் மற்றும் பயண வழிகள் போன்ற விவரங்களை AI அடிப்படையிலான வழிமுறைகள் பகுப்பாய்வு செய்தன.

+972 பத்திரிகை புலனாய்வு தகவல்களின் அடிப்படையில், ஈரானின் மூத்த தலைமையின் செல்லுலார் மற்றும் தகவல் தொடர்பு நெட்வொர்க்குகளை பகுப்பாய்வு செய்ய AI அமைப்புகள் இஸ்ரேலுக்கு உதவியது, இது தெஹ்ரானின் மையப்பகுதியில் கமேனி மற்றும் பல மூத்த ஈரானிய அதிகாரிகளை குறிவைத்து கொல்ல வழிவகுத்தது என தெரிவிக்கப்படுகின்றது.

2025 செப்டெம்பர் மாதம்தான் மைக்ரோசாஃப்ட் நிறுவனம், இஸ்ரேல் ராணுவத்தின் உயரடுக்கு சமிக்ஞை புலனாய்வுப் பிரிவான Unit 8200, தனது அஸுர் (Azure) கிளவுட் சேவைகளைப் பயன்படுத்துவதைத் தடுத்தது. காசா மற்றும் மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனியர்களைக் கண்காணிக்கும் ஒரு பாரிய கண்காணிப்பு அமைப்பிற்காக (mass surveillance system), தரவுகளைச் சேமிக்கவும் செயலாக்கவும் இந்தச் சேவைகள் பயன்படுத்தப்பட்டதைக் கண்டறிந்த பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வளவு விசாலமான மூலத் தரவுகளிலிருந்து (raw data) அர்த்தமுள்ள தகவல்களைப் பிரித்தெடுப்பதற்கான ஒரே வழி செயற்கை நுண்ணறிவு மட்டுமேயாகும்.

ஆபரேஷன் ரோரிங் லயன் (Operation Roaring Lion) என்பது, ஐ.டி.எஃப்-இன் (IDF) 'பினா' (Bina) என்று அழைக்கப்படும் புதிய செயற்கை நுண்ணறிவுப் பிரிவு செயற்படும் முதல் நடவடிக்கையாகும். சில மாதங்களுக்கு முன்புதான் நிறுவப்பட்ட இந்தப் பிரிவு, ஒரு பிரிகேடியர் ஜெனரல் தலைமையில் இயங்குகிறது. இந்தப் படைப்பிரிவில் இதற்கு முன்பு பணியாற்றிய பெரும்பாலான இராணுவப் பிரிவுகளை ஒன்றிணைத்து இந்தப் புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் நோக்கம் 'ஒரு போர் டாங்கியை 100 டாங்கிகளாகவும், ஒரு வீரரை 100 வீரர்களாகவும் மாற்றுவதாகும் என ஐ.டி.எஃப்-இன் (IDF) சி4ஐ (C4I) மற்றும் சைபர் பாதுகாப்பு பிரிவின் தலைவரான மேஜர் ஜெனரல் அவியாட் டாகன் குறிப்பிடுகின்றார்.

தற்காப்பு அரங்கில் நுழையும் செயற்கை நுண்ணறிவு:

செயற்கை நுண்ணறிவு அமைப்புகளின் செயற்றிறன் எவ்வாறு பொதுமக்களின் உயிர்களைக் காப்பதில் செயலாற்றுகின்றது என்பதை இஸ்ரேலிய மக்கள் இந்த வாரம் உணர்ந்து கொண்டனர்.



"கட்டுப்பாடற்ற தொழினுட்பப் போட்டியானது, இறுதியில் மனித நாகரிகத்தை ஒரு மீள முடியாத அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும் என்பதை எவராலும் மறுக்க முடியாது. வல்லரசுகளுக் கிடையிலான இந்த அதிகாரப் போர், அறிவியலின் மகத்தான வளர்ச்சியை மனித குலத்தின் வீழ்ச்சிக்கான கருவியாக மாற்றி விடுமோ என்ற அச்சமே இன்று உலகெங்கும் மேலோங்கி நிற்கிறது."

பல்வேறு இடங்களிலிருந்து இஸ்ரேலை நோக்கி ஒரே நேரத்தில் பல வகையான ஏவுகணைகள் ஏவப்படும்போது, செயற்கை நுண்ணறிவு மிக விரைவாக 'சென்சார் ஃபியூஷன்' (sensor fusion) எனப்படும் தரவு ஒருங்கிணைப்பைச் செய்கிறது. எளிமையாகச் சொன்னால், கடல், வான் மற்றும் தரைப்பகுதிகளில் உள்ள இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க ரேடார்கள் மற்றும் உணர்திறன் கொண்ட கருவிகளிடமிருந்து (sensors) இது தரவுகளைப் பெறுகிறது. பின்னர், எந்த இலக்கைத் தாக்கி அழிக்க எந்த இடைமறிப்பு ஏவுகணையை (interceptor) ஏவினால் வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கும் என்பதை சில மில்லி விநாடிகளுக்குள் இது தீர்மானிக்கிறது.

அதே நேரத்தில், மற்றொரு அமைப்பு தானாகவே துல்லியமான உளவுத் தகவல்களை உருவாக்கி, ஈரானிய ஏவுகணை ஏவுதளங்கள் கண்டறியப்பட்ட சில நொடிகளிலேயே அவற்றைத் தாக்குவதற்குப் படைகளுக்கு உதவுகிறது.

இஸ்ரேலிய ராணுவத்தில் (IDF), வானில் நிலவும் குழப்பமான சூழலைத் தெளிவுபடுத்துவது - அதாவது பொருட்களை அடையாளம் காண்பது, பறந்து வரும் ஏவுகணைகளைக் கண்காணிப்பது மற்றும் அவற்றை இடைமறித்து அழிப்பதை நிர்வகிப்பது - இஸ்ரேலிய விமானப்படையின் தொழினுட்பப் பிரிவான ஓஃபெக் 324-இன் (Ofek 324) பொறுப்பாகும். வான்வெளியின் முழுமையான சித்திரத்தை உருவாக்கும் துல்லியமான அல்காரிதமிக் செயலாக்கங்கள், இந்தப் பிரிவால் உருவாக்கப்பட்ட இரண்டு கணினி அமைப்புகளால் மேற்கொள்ளப்படுகின்றன.'

ஒன்று, பழைமையான அமைப்பாகும்; இது இஸ்ரேலிய வான்பரப்பிற்கு மேலோ அதற்கு அருகிலோ பறக்கும் ஒவ்வொரு விமானத்தையும் பற்றிய 'வான்வழிச் சித்திரத்தை' (sky picture) வழங்குகிறது. இரண்டாவது அமைப்பு, இஸ்ரேலை நோக்கி வரும் ஏவுகணை அச்சுறுத்தல்களைப் (ballistic threats) பற்றிய நிகழ்நேர படத்தை (real-time picture) உருவாக்குகிறது. இவற்றுடன் இணைந்து, ஒட்டுமொத்த வலையமைப்பையும் ஒருங்கிணைத்து வழிநடத்தும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு (command-and-control system) செயற்படுகிறது.

அமெரிக்கா மற்றும் சீனாவிற்கான ஒரு சோதனைக் களம்:

ஈரானுடனான இந்தப் போர், மேற்கத்திய நாடுகளின் செயற்கை நுண்ணறிவு தொழினுட்பத்திற்கான ஒரு நேரடிச் சோதனைக்களமாக (live testing ground) மாறியுள்ளது.

ஆனால், சீனாவும் ஒரு எதிர்காலப் போருக்குத் தன்னைத் தயார்படுத்தி வருகிறது; அந்தப் போரில் வெற்றி என்பது அதிக எண்ணிக்கையிலான டாங்கிகள் அல்லது விமானங்களைக் கொண்ட தரப்பிற்கு அல்ல, மாறாக மிக வேகமான மற்றும் திறமையான அல்காரிதம்களைக் (Algorithms) கொண்ட தரப்பிற்கே சொந்தமாகும்.

பெய்ஜிங்கைப் பொறுத்தவரை, செயற்கை நுண்ணறிவு என்பது வெறும் ஒரு துணைக்கருவி மட்டுமல்ல, அதுவே நவீன ராணுவ உத்தியின் மையக்கருவாகத் திகழ்கிறது. 'ஸ்வார்ம்' (Swarm) எனப்படும் திரள் தொழினுட்பத்தில் சீனா உலகளாவிய ரீதியில் முதன்மையாளராக கருதப்படுகிறது. அதன் அரசுக்குச் சொந்தமான CETC நிறுவனம், 200-க்கும் மேற்பட்ட ட்ரோன்களை ஒரே நேரத்தில் ஏவும் திறனை உருவாக்கியுள்ளது. இந்த ட்ரோன்கள் மனிதத் தலையீடு இன்றி தங்களுக்குள் தகவல் பரிமாற்றம் செய்து கொள்கின்றன; உளவு பார்த்தல் மற்றும் தாக்குதல் பணிகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றன; மேலும் ஒரு சில ட்ரோன்கள் இழந்தாலும், அதை ஈடுகட்டித் தொடர்ந்து செயற்படுகின்றன.

மேற்கத்திய AI அமைப்புகளைப் போலல்லாமல், சீனா தனது முடிவெடுக்கும் செயல்பாட்டில் 'ஹியூமன் இன் தி லூப்' (human in the loop) எனப்படும் மனிதக் கண்காணிப்பை அவசியமாகக் கருதவில்லை. ஒரு ட்ரோன் திரள், தானாகவே இலக்கை அடையாளம் கண்டு கூட்டாகத் தாக்குதல் நடத்தும் முடிவை கோட்பாட்டளவில் எடுக்க முடியும்.

பரந்த அளவில் பார்த்தால், கடந்த பத்தாண்டுகளில் உலகம் முழுவதும் நடக்கும் வன்முறை மோதல்களில் ட்ரோன்கள் மிகவும் பிரபலமான ஆயுதமாக மாறியுள்ளன. உக்ரேன் போரை மாற்றியமைத்த செயற்கை நுண்ணறிவு தொழினுட்பங்களில் ஒன்று ஆட்டேரியன் (Auterion) நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 'ஸ்கைநோட்' (Skynode) ஆகும். இது ட்ரோன்களில் பொருத்தப்படும் ஒரு AI வழிசெலுத்தல் அமைப்பாகும் (navigation system), இது ஜிபிஎஸ் (GPS) இல்லாமலேயே இயங்க அனுமதிக்கிறது. ரஷ்யா ஜிபிஎஸ் சிக்னல்களை முடக்கினாலும், இந்த அமைப்பு தனது நினைவகத்தில் சேமிக்கப்பட்டுள்ள செயற்கைக்கோள் வரைபடங்களுடன் நிலப்பரப்பைக் காட்சி ரீதியாக ஒப்பிட்டுப் பார்த்து, உக்ரேன் ட்ரோன்கள் இலக்குகளைக் கண்டறிய உதவுகிறது.

இவ்வாறாக, உலக வல்லரசுகள் அதிநவீனப் போர் தொழினுட்பங்களைக் கட்டவிழ்த்து விடுவதில் காட்டி வரும் தீவிரப் போட்டி, ஒட்டுமொத்தப் பூவுலகையும் சொல்லொணாத் துயரத்திற்கும் முன்னெப்போதும் இல்லாத ஒரு பாதுகாப்பற்ற சூழலுக்கும் தள்ளியுள்ளது. செயற்கை நுண்ணறிவும், தன்னாட்சி ஆயுதக் கட்டமைப்புகளும் நவீனப் போர்க்களத்தின் முகத்திரையை முற்றிலுமாக மாற்றியமைத்துள்ள போதிலும், அவை மனித இனத்தின் இருப்புக்கே (Human Existence) பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளன என்பதே நிதர்சனம்.

எதிர்காலத்தில், தற்போதுள்ள கருவிகளை விடவும் பன்மடங்கு அழிவுத் திறன் கொண்ட தொழினுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படலாம். இத்தகைய கட்டுப்பாடற்ற தொழினுட்பப் போட்டியானது, இறுதியில் மனித நாகரிகத்தை ஒரு மீள முடியாத அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும் என்பதை எவராலும் மறுக்க முடியாது. வல்லரசுகளுக்கிடையிலான இந்த அதிகாரப் போர், அறிவியலின் மகத்தான வளர்ச்சியை மனித குலத்தின் வீழ்ச்சிக்கான கருவியாக மாற்றிவிடுமோ என்ற அச்சமே இன்று உலகெங்கும் மேலோங்கி நிற்கிறது.



jeyaseelan.s@thaiveedu.com

ஈரான் மீதான தாக்குதல்: உலக ஆதிக்கத்தைத் தக்கவைக்கும் நடவடிக்கைகளின் ஒரு கட்டம்!

ரவீந்திரன் துரைசிங்கம்



ஈரானில் 1979-ஆம் ஆண்டு நடந்த இஸ்லாமியப் புரட்சிக்குப் பிறகு அரசியல் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக பல கட்டுப்பாடுகள் இருந்தது என்பது உண்மை. மனித உரிமை அமைப்புகளான Amnesty International மற்றும் Human Rights Watch போன்றவை பல முறை அரசியல் கைதிகள், ஊடகக் கட்டுப்பாடு, பெண்களின் உரிமைகள் உள்ளிட்ட பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியுள்ளன. அதே நேரத்தில், ஈரான் முழுமையாகச் சிதைந்த நாடாகவும் அல்ல. கல்வி, மருத்துவம், அறிவியல் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. எனவே ஈரானின் நிலைமை முழுமையாக நல்லதோ அல்லது முழுமையாக மோசமோ என்று ஒரே கோட்டில் விளக்க முடியாத ஒரு சிக்கலான அரசியல் அமைப்பாகவே பார்க்கப் படுகிறது.

சோவியத் ஒன்றியத்தில் ஜோசப் ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் (1930-கள்) நடந்த 'Great Purge', கட்டாய விவசாயக் கூட்டுறவு, குலாக் (Gulag) சிறை முகாம்கள் போன்ற நடவடிக்கைகளால் பல மில்லியன் மக்கள் உயிரிழந்தனர். சீனாவில் மாவோ சேதுங்கின் 'Great Leap Forward' (1958 - 1962) திட்டத்தாலும், பின்னர் நடந்த 'கலாசாரப் புரட்சி' (Cultural Revolution, 1966 - 1976) கால அரசியல் கலவரங்களாலும் 20 - 40 மில்லியன் மக்கள் வரை உயிரிழந்ததாக பல வரலாற்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதனுடன் ஒப்பிடும்போது, ஈரானில் 1979 புரட்சிக்குப் பிறகு நடந்த அரசியல் அடக்குமுறைகளில் ஆயிரக்கணக்கானோர் அல்லது பத்தாயிரக்கணக்கானோர் உயிரிழந்ததாகவே பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களின் காரணமாக உயிரிழக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கை இதைவிடப் பல மடங்கு அதிகமாகலாம்.

மேற்கத்திய கூட்டாளிகளும் அதிகாரமைய ஆட்சி முறைகளும்:

சவுதி அரேபியா முழுமையான அரச மன்னராட்சி (absolute monarchy) ஆகும். அங்கு அல்-சவூத் அரச குடும்பமே அரசையும் அரசியலையும் முழுமையாகக் கட்டுப்படுத்துகிறது. கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன் மற்றும் ஓமான் போன்ற நாடுகளும் அரச குடும்பங்களால் ஆளப்படும் மன்னராட்சிகளாகும். இங்கு அரசர்கள் அல்லது எமீர்கள் முக்கிய அதிகாரங்களை வைத்திருக்கின்றனர். சில நாடுகளில் பாராளுமன்றம் இருந்தாலும், இறுதி அதிகாரம் அரச குடும்பங்களிடமே உள்ளது. இவை முழுமையான ஜனநாயக அரசுகள் அல்ல. Freedom House போன்ற அமைப்புகளின் மதிப்பீட்டில் இந்நாடுகள் 'Not Free' அல்லது 'Partly Free' என்ற வகைப்படுத்தல்களில் இடம்பெறுகின்றன. இங்கு அரச குடும்பங்களே அதிகாரத்தை வைத்திருக்கும் அரசியல் அமைப்புகள் காணப்படுகின்றன. மேற்கத்திய நாடுகளுடன் நெருக்கமான அரசியல் உறவுகளைக் கொண்டிருப்பதால், இந்நாடுகள் மீது கடுமையான விமர்சனங்கள் பல நேரங்களில் முன்வைக்கப்படுவதில்லை இந்த நாடுகள் மேற்கின் தாளத்துக்கு ஆடுவதால் இவை விமர்சிக்கப்படுவதில்லை.

வெளிநாட்டு அழுத்தமும் உள்நாட்டுப் பதற்றமும்:

1979 புரட்சிக்குப் பிறகு அமெரிக்கா மற்றும் சில மேற்கத்திய நாடுகள் ஈரானுக்கு பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன. குறிப்பாக 2006-ஆம் ஆண்டுக்குப் பிறகு,

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மேற்கத்திய நாடுகள் ஈரானின் அணுத் திட்டத்தைக் காரணமாகக் கொண்டு நிதி, வங்கி மற்றும் எண்ணெய் ஏற்றுமதித் துறைகளில் கடுமையான தடைகளை விதித்தன. உலக வங்கி மற்றும் IMF அறிக்கைகள் இந்த தடைகள் ஈரானின் பொருளாதார வளர்ச்சியை மிகவும் பாதித்ததாகக் குறிப்பிடுகின்றன. இதேபோல் கூபா (1960-களிலிருந்து) மற்றும் வெனிசுவேலா போன்ற நாடுகளும் நீண்டகாலப் பொருளாதாரத் தடைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. மேற்கத்திய அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தத் தடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

வரலாற்றில் பல இடங்களில் மேற்கத்திய நாடுகள் பிற நாடுகளின் அரசியலில் தலையீடு செய்த சம்பவங்கள் உள்ளன. உதாரணமாக, 1953-ஆம் ஆண்டு ஈரானில் பிரதமர் மொசாதெக் தலைமையிலான அரசை CIA மற்றும் MI6 ஆதரவு கொண்ட நடவடிக்கையால் கவிழ்த்த சம்பவம் பல வரலாற்று ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா போன்ற பகுதிகளில் குளிர்ப்போர் காலத்தில் பல அரசியல் தலையீடுகள் நடந்ததாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. மேற்கத்திய நாடுகளின் அரசியல் கோட்பாடுகளுடன் இணங்காத அல்லது அவர்களின் ஆதிக்கத்திற்கு உட்படாத அரசுகள் இருந்த இடங்களில் இத்தகைய தலையீடுகள் நடைபெற்றதாகப் பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

> ***“ஈரானில் அரசுக்கு எதிராக சில அரசியல் இயக்கங்கள், வெளி நாட்டில் வாழும் புலம் பெயர் அமைப்புகள் மற்றும் சில எதிர்ப்புக் குழுக்கள் இருந்தாலும், முழு சமூகமே ஒரே திசையில் நகர்கிறது என்று கூறுவதற்கு உறுதியான ஆதாரங்கள் இல்லை.”***

சர்வதேச அரசியலில் பெரிய சக்திகள் தங்களின் அரசியல் மற்றும் பொருளாதார நலன்களுக்கு ஏற்ப பிற நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பது புதிதானது அல்ல. மேற்கத்திய நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கோட்பாடுகளுடன் இணங்காத நாடுகளுக்குப் பொருளாதாரத் தடைகள், தூதரக அழுத்தம் மற்றும் அரசியல் தனிமைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் சில அரசுகள் வெளிநாட்டு அழுத்தங்களை எதிர்கொள்வதற்காக உள் நாட்டில் கட்டுப்பாடுகளை அதிகரிப்பதும், பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடுமைப்படுத்துவதும் நடைபெறுகிறது. அதே நேரத்தில் பொருளாதாரத் தடைகள் பொதுமக்களின் வாழ்வாதாரத்தைப் பாதித்து, அரசுகளுக்கு எதிராக மக்களிடையே அதிருப்தியை உருவாக்குகின்றன. இதனால் வெளி நாட்டு அழுத்தம், உள்நாட்டு அரசியல் பதற்றம் மற்றும் மக்கள் எதிர்ப்பு ஆகியவற்றைச் சமாளிக்க சில நாடுகள் மேற்கத்திய நாடுகளின் அரசியல் தாளத்துக்கு இணங்க வேண்டிய சூழலும் உருவாகிறது.

இராணுவத் தலையீட்டின் விளைவுகள்: ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் உதாரணங்கள்:

ஈராக் (2003), லிபியா (2011), ஆப்கானிஸ்தான் (2001) போன்ற இடங்களில் மேற்கத்திய இராணுவத் தலையீடுகள் நடந்தபின் நீண்டகால அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நாடுகளில் அரசியல் நிலைமை பல ஆண்டுகள் நிலைநிறுத்தப்படாமல் இருந்தது என்பது சர்வதேச ஆய்வுகளில் குறிப்பிடப்படுகிறது. இதனால் ‘இராணுவ தாக்குதல் மூலம் ஜனநாயகம் உருவாகுமா ?’ என்ற கேள்வி தொடர்ந்து எழுகிறது. ‘நடக்காத ஒன்று நடக்கும்’ என்ற வாக்குறுதிகளை முன்வைத்து நடத்தப்படும் இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் வேறு அரசியல் நோக்கங்களும் இருக்கலாம் என்கிற விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

இன்றைய உலக அரசியலில் தகவல் போர் (information war) மிகவும் முக்கியமான கருவியாக உள்ளது. மேற்கத்திய அரசுகள் மற்றும் ஊடகங்கள் ஒரு போரை ‘பயங்கரவாதம்’, ‘மதவெறி’, அல்லது ‘சுதந்திரத்திற்கான போராட்டம்’ என்று விளக்கி பொதுமக்களின் ஆதரவைப் பெற முயற்சிக்கின்றன. அதேபோல் வெளிநாடுகளில் வாழும் சில புலம்பெயர் ஈரானியர்கள் சமூக ஊடகங்களில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் உடனே சுதந்திரமும் ஜனநாயகமும் உருவாகும் என்று கூறி மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் வரலாற்றில் ஈராக் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் நடந்த நிகழ்வுகள் காட்டியது என்னவென்றால், வெளிநாட்டு ராணுவத் தலையீட்டுக்குப் பிறகு ஜனநாயகம் உடனடியாக உருவாகாமல், அரசியல் குழப்பமும் உள்நாட்டு மோதல்களும் அதிகரித்ததே என்பதாகும்.

தகவல் போர்:

ஒரு நாட்டில் பெரும்பாலான மக்கள் வெளி நாட்டு சக்திகளுக்கு ஆதரவு செய்கிறார்கள் என்ற கூற்று வரலாற்றில் அரிதாகவே இருக்கிறது. ஈரானில் அரசுக்கு எதிராக சில அரசியல் இயக்கங்கள், வெளிநாட்டில் வாழும் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் சில எதிர்ப்புக் குழுக்கள் இருந்தாலும், முழு சமூகமே ஒரே திசையில் நகர்கிறது என்று கூறுவதற்கு உறுதியான ஆதாரங்கள் இல்லை. வரலாற்றில் இலங்கையின் உள்நாட்டுப் போரில் 30-க்கும் மேற்பட்ட தமிழ் ஆயுத இயக்கங்கள் உருவானது போல, ஒரு நாட்டின் மத்திய அரசு பல வீனப்படுத்தப்பட்டால் பல்வேறு இன, அரசியல் அல்லது பிராந்திய அடிப்படையிலான ஆயுதக் குழுக்கள் உருவாகும் அபாயம் உள்ளது. அதனால் ஈரான் போன்ற பெரிய மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாட்டில் அரசியல் அமைப்பு திடீரென சிதைந்தால், ஒரே இயக்கம் ஆட்சி பிடிப்பதற்குப் பதிலாக பல நூற்றுக்கணக்கான ஆயுதக் குழுக்கள் உருவாகும் அபாயம் உள்ளது.

மேற்கிற்கு எதிரான அரசியல் மற்றும் பொருளாதாரக் கூட்டணிகளில் உள்ள கூபா, வெனிசுவேலா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் மீது மேற்கத்திய நாடுகள் விதிக்கும் பொருளாதாரத் தடைகள், அரசியல் அழுத்தங்கள், இராணுவ அச்சுறுத்தல்கள் மற்றும் கடுமையான விமர்சனங்கள் மனித உரிமை அல்லது ஜனநாயகக் காரணங்களுக்காக மட்டுமல்ல; உலக அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் முயற்சிகளின் ஒரு பகுதியாகவும் உள்ளது. குளிர்போர் காலத்திலிருந்து இன்று வரை அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள்



தங்களுக்கு எதிரான அரசியல் அல்லது பொருளாதார மாதிரிகளைக் கொண்ட நாடுகளைத் தனிமைப்படுத்தும் கொள்கையைப் பயன்படுத்தியுள்ளனர். இதன் மூலம் தங்களின் உலகளாவிய அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு அமைப்புகளின் மேலாதிக்கத்தைத் தக்கவைத்து வந்துள்ளனர்.

சுயநிர்ணய உரிமை:

ஒரு நாட்டின் சுயநிர்ணய உரிமை நடைமுறையில் அந்த நாட்டின் விருப்பத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை; உலக அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் அதிகார மையங்களின் தாக்கத்தாலும் அது நிர்ணயிக்கப்படுகிறது. தற்போதைய உலக அமைப்பில் மேற்கத்திய நாடுகளே முக்கிய அதிகார மையமாக இருப்பதால், பல நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார தீர்மானங்கள் அந்த ஆதிக்கத்தின் கீழ் பாதிக்கப்படுகின்றன. எனவே இந்த ஒரே மைய ஆதிக்கம் குறைந்து, பல அதிகார மையங்கள் உருவாகும் பல துருவ (multipolar) உலக அமைப்பு உருவானால், சிறிய மற்றும் நடுத்தர நாடுகளுக்குத் தங்கள் சுயநலன்களையும் சுய நிர்ணய உரிமைகளையும் பாதுகாக்க அதிக வாய்ப்புகள் கிடைக்கும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது நடத்தும் தாக்குதல்களுக்கு அவர்கள் முன்வைக்கும் முக்கிய காரணம் 'பாதுகாப்பு அச்சுறுத்தலை நீக்குவது' அல்லது 'மத்திய கிழக்கில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவது' என்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இந்த நடவடிக்கைகள் ஒரு நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றி, மேற்கத்திய நலன்களுக்கு ஏற்ப செயற்படும் அரசை உருவாக்குவதற்கான முயற்சியாகவே தெரிகிறது. 'ஆட்சிமாற்றம்' என்ற இந்தக் கொள்கை புதிய ஒன்றல்ல; இது கடந்த பல தசாப்தங்களாக அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு பகுதியாக பல நாடுகளில் முயற்சிக்கப்பட்டுள்ளது.

அரசியல் சீர்குலைவு, உள்நாட்டுப் போர்கள்:

அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் போர் நடத்தும் திறன், ஆயுதத் தொழினுட்பம், நிதி வளம் மற்றும் உலகளாவிய இராணுவத் தளங்கள் போன்றவற்றில் மிகப்பெரிய முன்னிலை உள்ளது. மனித இழப்புகளின் அளவிலும் இந்தப் போர்கள் பெரும்பாலும் ஒருதலைப்பட்சமாக அமைந்துள்ளன. ஆனால் 'இத்தகைய தாக்குதல்கள் உண்மையில் அந்த நாடுகளில் ஜனநாயகத்தை உருவாக்கியுள்ளனவா?' என்ற கேள்வியை எழுப்பினால், ஈராக், லிபியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளின் சமீபத்திய வரலாறு இதற்கு நேர் மறையான பதிலை வழங்கவில்லை. அந்த நாடுகளில் 'சுதந்திரம் வரும்' என்ற வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதிலும், அதன் பின் ஏற்பட்டது அரசியல் சீர்குலைவு, உள்நாட்டுப் போர்கள், உடைந்த அரசியல் அமைப்புகள் மற்றும் பல ஆண்டுகள் நீண்ட மனிதாபிமான நெருக்கடிகளே.

வியட்நாம் போரை எடுத்துக்கொண்டால் அதன் மனித இழப்பின் அளவு இந்த உண்மையைத் தெளிவாகக் காட்டுகிறது. சுமார் இருபது ஆண்டுகள் நீண்ட அந்தப் போரில் அமெரிக்கா சுமார் 58,000 வீரர்களை இழந்தது. அதே நேரத்தில் வியட்நாம் தரப்பில் படையினரும் பொதுமக்களும் சேர்த்து சுமார் 30 இலட்சம் பேர் உயிரிழந்தனர். இதனால் அந்தப் போர் ஓர் இராணுவ மோதல் மட்டுமல்ல; ஒரு நாட்டின் சமூகமும் மனித வாழ்வும் மிகப்பெரிய அளவில் சிதைந்த பேரழிவாகவும் வரலாற்றில் நினைவு கூரப்படுகிறது.

அசமச்சீர் இராணுவ சக்தி:

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான இராணுவ சக்தியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது ஓர் அசமச்சீர் (asymmetric) சக்தி நிலை என்பதைக் காட்டுகிறது. தொழினுட்பம், விமானப்படை, கடற்படை, செயற்கைக்கோள் கண்காணிப்பு மற்றும் உலகளாவிய இராணுவத் தளங்கள் போன்றவற்றில் அமெரிக்கா உலகின் மிகப்பெரிய இராணுவ சக்தியாக உள்ளது. அதே நேரத்தில் ஈரான் இந்த அளவிலான பாரம்பரிய இராணுவத் திறனைக் கொண்டிருக்கவில்லை. இதனால் ஈரான் நேரடிப் போரை விட ஏவுகணைகள், ட்ரோன்கள், கடல் வழித் தடுப்பு, பிராந்திய கூட்டாளிகள் மற்றும் கெரில்லாப் போர் போன்ற அசமச்சீர் போர் முறைகள் மூலம் தன் எதிரியை சமநிலைப்படுத்த முயல்கிறது.

வியட்நாம் போரில் பல மில்லியன் வியட்நாமியர்கள் உயிரிழந்த போதிலும், அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதிப்பு ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாக இருந்தது. இருந்தபோதிலும் உலக வரலாறு அந்தப் போரின் முடிவை 'வியட்நாம் வெற்றி' என்று பதிவு செய்கிறது. இதே போன்ற நிலை ஈராக், லிபியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலும் காணப்பட்டது. இராணுவ ரீதியில் மிகப்பெரிய சக்தி இருந்தபோதிலும், அரசியல் மற்றும் சமூக ரீதியில் அந்தப் போர்களின் முடிவுகள் எதிர்பார்த்த நிலைத்தன்மையை உருவாக்கவில்லை.

ஆக்கிரமிப்பு vs பாதுகாப்பு நடவடிக்கைகள்:

இந்த தாக்குதல்கள் உலக சட்டத்துக்கும் சர்வதேச ஒப்பந் தங்களுக்கும் முரணாக நடந்துள்ளன என்ற குற்றச்சாட்டு களும் முன்வைக்கப்படுகின்றன. அதே நேரத்தில் மேற்கத் திய ஊடகங்களில் இந்த நிகழ்வுகள் பெரும்பாலும் 'பாது காப்பு நடவடிக்கை' என்ற கோணத்தில் மட்டுமே விளக்கப்ப டுகின்றன. உதாரணமாக, ரஷ்யா உக்ரைனில் நடத்திய நடவ டிக்கைகள் 'ஆக்கிரமிப்பு' என்று வர்ணிக்கப்படும்போது, இஸ்ரேல் லெபனானில் அல்லது பிற நாடுகளில் நடத்திய நட வடிக்கைகள் 'பாதுகாப்பு நடவடிக்கைகள்' என விவரிக்கப்ப டுகின்றன. இந்த மொழி வேறுபாடு உலக அரசியல் விளக் கங்களில் இரட்டை அளவுகோல்கள் பயன்படுத்தப்படுகின் றன என்ற விமர்சனத்துக்கு இடமளிக்கிறது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், 'ஈரானின் எதிர்கால அரசியல் அமைப்பில் அமெரிக்கா பங்கு பெற வேண்டும்' என்றும், 'ஈரான் மக்கள் தங்கள் நாட்டை மீண்டும் கைப்பற்ற வேண்டும்' என்றும் கூறியதாகத் தகவல்கள் வெளியாகியுள் ளன. இஸ்ரேல் தலைமைத்துவம் 'ஈரானின் இராணுவத் திறனை முழுமையாக அழிக்க வேண்டும்' என்று அறிவித் துள்ளது. இந்தப் பேச்சுகள், ஒரு நாட்டின் அரசியல் எதிர் காலத்தை வெளிநாட்டு சக்திகள் தீர்மானிக்கலாம் என்ற எண்ணத்தை வெளிப்படுத்துகின்றன.

காசா முறை:

அதே நேரத்தில் மேற்கத்திய நாடுகள் தங்களைக் கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளின் பாது காவலர்கள் என்று கூறிக்கொண்டாலும், நடைமுறையில் அந்தச் சுதந்திரம் பல நேரங்களில் ஒரே திசையில் மட்டுமே செயற்படுகிறது. அமெரிக்கா அல்லது இஸ்ரேல் நடத்தும் போர்களை ஆதரிப்பவர்கள் 'ஜனநாயகத்தைப் பாதுகாக்கிற வர்கள்' என்று பாராட்டப்படுகிறார்கள்; ஆனால் அதே போர் களை விமர்சிப்பவர்கள் உடனே தீவிரவாத ஆதரவாளர்கள் அல்லது வெளிநாட்டு பிரச்சாரத்தின் கருவிகள் என்று குற் றம்சாட்டப்படுகின்றனர்.

அமெரிக்கா தற்போது தேஹ்ரானுக்கு 'காசா முறை'யைப் பயன்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டுகளும் எழுகின்றன. சில நாட்களுக்கு முன்பு வரை ஈரானில் நடந்த போராட்டங் களை மனித உரிமைக் கோணத்தில் பேசிக்கொண்டிருந்த அரசியல் மற்றும் ஊடக அமைப்புகள், இப்போது அதே நாட்டின் மீது கடுமையான இராணுவ நடவடிக்கைகளை ஆதரிக்கின்றன. இதனால் மனித உரிமை பற்றிய அந்த அக்கறை உண்மையானதா? அல்லது அரசியல் நோக்கத் துக்கான கருவியா? என்ற கேள்வி எழுகிறது.

நாம் வெறுக்க வேண்டும் என்று தொடர்ந்து பிரச்சாரம் செய் யப்படும் நாடுகளில் ஏதாவது ஒன்று 160 பள்ளி மாணவி களை கொன்றிருந்தால், உலக ஊடகங்கள் அதை எவ்வளவு பெரிய சலசலப்புடன் எடுத்துரைத்திருக்கும் என்பதைக் கற் பனை செய்து பார்க்கலாம். ஆனால் தற்போதைய போரில் பல ஊடகங்கள் மனிதாபிமானப் பார்வையை விட போரை நியாயப்படுத்தும் கதைகளை முன்னிலைப்படுத்துகின்றன. எதிரியாக வர்ணிக்கப்பட்ட மக்களுக்கான இரக்கம் அந்தக் கதைகளில் இடம்பெறுவதில்லை.

பொதுமக்கள் உயிரிழப்பு:

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானில் நடத்தும் விமானத் தாக் குதல்கள் பல இடங்களில் இராணுவ இலக்குகளைத் தாண்டி குடியிருப்புப் பகுதிகள், மருத்துவமனைகள், பள்ளிகள் மற் றும் தேஹ்ரானின் மேஹ்ராபாத் சர்வதேச விமான நிலையம் அருகிலுள்ள பகுதிகளையும் பாதித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகின்றன. இந்தத் தாக்குதல்களில் பொதுமக்கள் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. ஆரம்பத்தில் கூறப் பட்ட 'ஆட்சிமாற்றம்' இலக்கை அடைய முடியாத நிலையில், ஈரானைப் பயமுறுத்திச் சரணடையச் செய்வதற்கான அழுத் தப் போராக இந்த மோதல் மாறிவருகிறது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், ஈரானின் அடுத்த தலைவரைத் தேர்வு செய்வதில் தானும் நேரடியாகப் பங்கு பெற வேண்டும் என்று கூறியதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன; இதை அவர் வெனிசுவேலாவில் நடந்த அரசியல் மாற்றத்துடன் ஒப்பிட்டுள்ளார். இது 'ஜனநாயகத்தை முன் னேற்றுவது' என்ற பெயரில் ஒரு நாட்டின் தலைவர்களைக் கடத்தி அல்லது கொன்று, பின்னர் அந்த நாட்டில் அமெரிக் காவிற்குக் கீழ்ப்படிதலாக இருக்கும் தலைவர்களை நிறுவு வது போன்ற அரசியல் நடைமுறையை நினைவூட்டுகிறது.

ஈரானின் இருப்பு :

ஈரானின் ஏவுகணைத் திறனை அழிக்கப் போரைத் தொடங் குவது மிகவும் ஆபத்தான நடவடிக்கையாகும். ஏனெனில் ஈரான் இதுவரை தன் பாதுகாப்பைப் பாரம்பரிய இராணுவத் தடுப்புத் திறன்-ஏவுகணைகள் மற்றும் பிராந்தியக் கூட்டாளி கள் மூலம் காக்க முடியும் என்ற நம்பிக்கையிலேயே அணு ஆயுதம் தேவையில்லை என்று கூறி வந்தது. ஆனால் அந்த பாரம்பரியப் பாதுகாப்புத் திறனை வெளிநாட்டுத் தாக்கு தல்கள் முறியடித்தால், ஒரு பெரிய நாடான ஈரான் தனது இருப்பே அச்சுறுத்தப்படுகின்றது என்ற உணர்வில் 'இறுதி பாதுகாப்பு' என அணு ஆயுதத்தைத் தேட வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படலாம்.

ஒரு நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே மனிதர் காரணம் என்றும், அந்த 'கெட்ட மனிதரை' அகற்றினால் அமைதி மற்றும் ஜனநாயகம் தானாக உருவாகும் என்றும் கருதுவது மிகவும் எளிமையான அணுகுமுறையாகும். பல மேற்கத்திய அரசியல் விளக்கங்களில் ஒரு நாட்டை 'ஒரு மோசமான தலைவர் பிடித்துக் கொண்டிருக்கிறார்' என்று கூறி, அவரை அகற்றினால் பிரச்சினை தீரும் என்ற கதை உருவாக்கப்படுகிறது. ஆனால், சர்வதேச அரசியல் பல அதிகார மையங்கள், சமூக இயக்கங்கள், மத மற்றும் அரசியல் அமைப்புகள் போன்ற சிக்கலான காரணிகளால் உருவாகிறது. எனவே ஒரு தலைவரை அகற்றுவதால் ஒரு நாட்டில் ஜனநாயகம் தானாக உருவாகும் என்ற கருத்து உண்மையை மிக எளிமைப்படுத்தி விளக்கும் அரசியல் கதையாகவே பார்க்கப்படுகிறது.



Raveendran.T@thaiveedu.com

மக்கள் தேசம்
கியூபா

- சிவா முருகுப்பிள்ளை



கொரோனா எனும் பெரும் தொற்றுப் பரவி உலகத்தின் அனைத்துப் பகுதியிலும் மக்கள் இறந்து கொண்டிருக்கும் காலத்தில் எம்.எஸ். பிறீமர் என்ற உல்லாசப் பயணிகள் கப்பல் 1500 மேற்பட்ட உல்லாசப் பயணிகளுடன் கரீபியன் கடலில் அமெரிக்காவின் ஆதிக்கத்தில் இருக்கும் போட்டரிக் கோவில் இருந்து இங்கிலாந்து நோக்கிப் பயணித்துக் கொண் டிருக்கிறது. இக்கப்பலில் பயணித்தவர்களில் 45 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை அக்கப்பலில் பயணித்துக் கொண்டிருந்த அனைவரையும் பெரும் பீதிக்கு உள்ளாக்கியது. எப்படியாவது மரணத்தில் இருந்து தப்பித்து விடவேண்டும் என்ற எண்ணம் எல்லோரிடமும் மேலிட, கப்ப லில் இருந்த மாலுமிகள் அமெரிக்காவைத் தொடர்பு கொண்டு மனிதாபிமான உதவி கோரினார்கள். ஆனால் கொரோனா அச்சத்தில் உறைந்து போயிருந்த அமெரிக்கா அந்தக் கோரிக்கையை நிராகரித்து, தனது துறைமுகத்துக்குள் அக் கப்பல் நுழைவதனைத் தடுத்திருந்தது. தொடர்ந்து போட்ட ரிக்கோ, டொமினிக்கன் றீ பப்ளிக் போன்ற நாடுகளிடம் உதவிகோர அவர்களும் மறுத்து விட்டார்கள்.

இறுதியாக அவர்கள் கியூபாவிடம் உதவி கோரினார்கள். உலகமே வறுமையான நாடு என்று எண்ணிக் கொண்டிருக் கும் நாடு எந்த மறுப்பும் இன்றி அக்கப்பலில் இருந்த அனைத்துப் பயணிகளையும் தமது துறைமுகத்திற்குள் நுழைவதற்கு அனுமதியளித்தது. இத்தனைக்கும் அமெரிக் காவின் சொல்கேட்டு பிரித்தானியா கியூபா மீது பொருளா தாரத் தடையை விதித்திருந்த காலமும் நோட்டோ நாடுகள் கியூபா நாட்டின் ஆட்சியை இல்லாமல் செய்யவேண்டும் என்று செயற்பட்டு வரும் காலமும் அதுதான். இத்தனைக்கும் இந்த உல்லாசக் கப்பலும் அதில் உள்ள பயணிகள் பலரும் பிரித்தானியாவிற்குச் சொந்தமானவர்கள்.

பிரித்தானியாவின் உல்லாசப் பயணிகளைக் கப்பலுடன் ஏற் றுக்கொண்ட கியூபா மனிதாபிமான அடிப்படையில் செயற் பட்டு அந்த உயிர்க்கொல்லி நோயிடம் இருந்து தமது ஆரம்ப நிலை மருத்துவத்தைக் கொண்டு, சிகிச்சை அளித்துக் காப் பாற்றியது. ஏனையவர்களையும் உணவு இருப்பிடம் என்றா கவும் பொறுப்புடன் விருந்தோம்பியது. நிலமைகள் சீரடைந் ததும் கப்பலுக்குத் தேவையான எரிபொருளையும் நிரப்பி பய ணிகளின் செலவிற்குப் பணமும் கொடுத்துப் பிரித்தானியா விற்கு வழி அனுப்பியும் வைத்தது.

இந்த மனிதாபிமானச் செயற்பாடுகள், மனிதநேயச் செயற்பா டுகள் போன்றவற்றைச் செய்த கியூபாவில் இன்று எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. இதுவரை வெனிசுலாவில் இருந்து கியூபாவிற்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருளை அமெரிக்கா தடை செய்ததால் கியூபாவிற்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனைப் பிரித்தானியாவும் அதன் கூட்டாளி நாடுகளும் பார்த்துக் கொண்டுடிருக்கிறார்கள்.

இப்படியாவது கியூபாவைப் பொருளாதார ரீதியாக முடக்கி மக்கள் மத்தியில் குழப்பம், சலசலப்பு ஏற்படுத்தி, மனிதா பிமான மக்களரசை இல்லாமல் செய்ய வேண்டும் என்று துடிகின்றன அமெரிக்காவும் அத னோடு கைகோர்த்துக்கொண்டி ருக்கும் ஏகாதிபத்திய அரசு களும்.





> ***“கியூப அரசு போரை முன்னிலைப்படுத்துவதனை விடுத்து இராஜதந்திர நகர்வின் மூலம் மனிதாபிமானப் பேச்சுவார்த்தை என்ற உலக ஒழுங்கிற்குள் தன்னை இணைத்துக் கொண்டு தன்னையும் தனது மக்களையும் தற்காத்து வருகின்றது.”***

அமெரிக்காவோடு சேர்ந்து அதன் கூட்டாளி நாடுகளும் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தபோதும் கியூபா அவை எல்லாவற்றையும் முறியடித்து தனது வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கி நிகழ்த்தி வருகின்றது. கியூபா ஒரு மக்கள் தேசமாகவே தன்னை கட்டமைத்து வைத் திருக்கிறது. எத்தனை தடைகள், எத்தனை அழுத்தங்கள் வந் தபோதும் அந்நாட்டு மக்களின் அர்ப்பணிப்பு அந்த நாட்டை இன்றுவரை வீழ்ந்து போகாமல் வைத்திருக்கின்றது. ஆனா லும் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் கடந்த காலங் களில் பொருளாதாரத் தளம்பலை ஏற்படுத்தி, பட்டினிச் சாவை விதைத்து, மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணி, நடைமுறை அரசை இல்லாமல் செய்து தாம் விரும் பும் பொம்மை அரசை கியூபாவில் நிறுவுவது என்ற கனவோடு இருந்தது போலவே இப்போதும் கியூபா பிரதானமாக வரு மானம் பெறும் சுற்றுலாத் துறையை நலிவடையச் செய்வ தற்கு எரிபொருள் தளம்பலை ஏற்படுத்தி அதன் ஊடாக புதிய சிக்கலை உருவாக்குவது, தாம் நினைப்பதனைச் சாதிப்பது என்ற தற்துணிவோடு செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் கியூபா மீண்டு எழுமா? இல்லையா? என்ப தனை ஆராயும் வகையுடையதாகவே இக்கட்டுரை அமை கின்றது.

கியூப மக்கள் எதற்கும் விலை போகாத வீரர்களாக இன்று வரை அரசுடன் சேர்ந்து செயற்பட்டு வருகின்றனர். கியூப அரசு போரை முன்னிலைப்படுத்துவதனை விடுத்து இராஜ தந்திர நகர்வின் மூலம் மனிதாபிமானப் பேச்சுவார்த்தை என்ற உலக ஒழுங்கிற்குள் தன்னை இணைத்துக் கொண்டு தன் னையும் தனது மக்களையும் தற்காத்து வருகின்றது. இனி வருங்காலத்திலும் அது அதனையே செய்யும் என்று நடை முறையில் அதன் நகர்வுகள் எடுத்துக் காட்டுவதாக அமை கின்றன.

கியூபா உலக அரசிலை மிகுந்த கவனத்தோடு கையாண்டு வந்திருக்கின்றது. அது எப்போதும் போர் பற்றிய ஆபத்தை உணர்ந்ததோடு மட்டுமல்லாமல் அது உலக நாடுகளுக்கு ஏற்படுத்திவிடக்கூடிய பாரிய விளைவுகள் பற்றியும் சிந்தித்து வந்துள்ளது. இதனை பிடல் காஸ்ரோ கியூப தேசிய சட்டமன் றத்தில் ஆற்றிய உரை மூலமாக அறிந்து கொள்ளலாம். இங்கு அவர் உரையாற்றும் போது ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொள்ளும் எந்தவொரு தாக்குதலும் உலகளாவிய அணு ஆயுதப் போருக்கு வழிவகுக்கும் எனக் கடுமையாக எச்சரித்ததோடு, ஈரானின் அணுசக்தித் திட்டத் திற்கு எதிராக விதிக்கப்பட்ட தடையைக் காரணம் காட்டி அமெரிக்கா ஈரான் மீது யுத்தத்தைத் தொடங்கினால் அது ‘அணு ஆயுதப் பேரழிவை’ ஏற்படுத்தும் என்றும் கூறினார். அதேவேளை அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபா மாவிடம், ஈரான் மீதான தாக்குதல் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஒரு போர் மூண்டால், முதலில் இஸ்ரேல் குண்டு வீசக்கூடும் என்றும், அதற்கு ஈரானிடம் இருந்து கிடைக்கும் பதிலடி ஈராக் போரை விட மிகக் கடுமையானதாக இருக்கும் என்றும் காஸ்ட்ரோ எச்சரித்தார். கூடவே கடற் பரப்புகளில் ஈரானிய வர்த்தகக் கப்பல்களை அமெரிக்கா அல்லது இஸ்ரேலியப் படைகள் சோதனை செய்ய முயன்றால், அது ஏவுகணைத் தாக்குதல்களுக்கு வழிவகுக்கும் என்றும், அதுவே போரின் தொடக்கமாக இருக்கும் என்றும் அவர் கணித்தார். இத்த கைய மோதல் உலக நாடுகளுக்குப் பரவி அணுவாயுதப் போராக மாற்றமடையும் ஆபத்து உள்ளது என்றும் அவர் தனது கருத்தை ஆணித்தரமாக முன்வைத்தார். அவரது தீர்க்க தரிசனம் மிக்க பார்வையை இன்று தொடங்கியிருக்கும் ஈரான்-இஸ்ரேலுக்கு இடையிலான யுத்தம் தெளிவாக்கியிருக்கிறது.

உண்மையில் காஸ்ரோவின் எதிர்பார்ப்பு உலகம் அமைதியா கவும் சமாதானமாகவும் இருக்க வேண்டும் என்பதுதான். அதற்கான பல்வேறு முயற்சிகளை கடந்த காலங்களில் தனது செயற்பாடுகள் ஊடாக முன்னொடுத்து வந்திருக்கிறார். ஆனால் அத்தகைய சமாதானத்தை விரும்பும் நாட்டை இல்ல மால் செய்துவிடப்போவதாக அமெரிக்காவின் தற்போதைய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருப்பது எத்தகை மிலேச்சத்தனமானது, எத்தகை வக்கிரமானது என்பதனை உலகில் வாழுகின்ற ஒவ்வொரு மக்களும் கியூபாவின் வர லாற்றினை அறிந்து கொள்வதன் ஊடாக இதனை உணர்ந்து கொள்ள முடியும்.

மெக்ஸிகோ வளைகுடா மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல் ஆகியவற்றின் ஜலச் சங்கமத்தில் அமைந்துள்ள கியூபா, யுகடன் தீபகற்பத்தின் கிழக்கே, புளோரிடா மற்றும் பஹாமாஸ் இரண்டிற்கும் தெற்கே, ஹிஸ்பானியோலாவிற்கு மேற்கே, ஜமைக்கா மற்றும் கேமன் தீவுகளுக்கு வடக்கே அமைந்

துள்ளது. இது 4195 தீவுகள், சிறுதீவுகள் மற்றும் மண்திட்டுக்களைக் கொண்ட மிகப்பெரிய நாடாகும். மிகப்பெரிய நகர மான ஹவானா கியூபாவின் தலைநகரமாக விளங்குகின்றது. ஹைட்டி மற்றும் டொமினிகன் குடியரசிற்குப் பிறகு கரீபியனில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகக் கியூபா விளங்குகிறது. இங்கு சுமார் 10 மில்லியன் மக்கள் வசித்து வருகின்றனர்.

பொ.ஆ.மு. 4-ஆம் நூற்றாண்டு முதல் மக்கள் வசித்து வருவதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும் இத்தீவு கலாசார ரீதியாக, இலத்தீன் அமெரிக்காவின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. இஸ்பானிய மொழி பேசும் ரோமன் கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக இங்கு வசித்து வருகின்றபோதும் இதுவொரு மதச்சார்பற்ற நாடு.

15-ஆம் நூற்றாண்டில் ஸ்பானிஸ் காலனித்துவத்தின் போது குவானாஹடபே மற்றும் டைனோ என்ற பூர்வீக இனங்கள் அங்கு வாழ்ந்து வந்தனர். 1898-ஆம் ஆண்டு ஸ்பானிஸ்-அமெரிக்கப் போர் வரை கியூபா ஸ்பானிய பேரரசின் காலனி ஆதிக்கத்தின் ஒரு பகுதியாக இருந்தது, அதன் பிறகு அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப்பட்டு 1902-இல் சுதந்திரம் பெற்றது.

1933-இல் கியூப ஜனாதிபதியாக இருந்த ஜெராடோ மச்சாடோவிற்கு எதிரான இராணுவப் புரட்சியில் முக்கிய பங்காற்றிய பல்ஜென்சியோ பட்டீஸ்டா இராணுவத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் ஊடாக தொடர்ச்சியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகளை ஆட்டிப் படைப்பவராக விளங்கினார். 1940-இல் ஜனாதிபதியாகிய பட்டீஸ்டா தனது பதவிக்காலம் முடிந்தவுடன் 1944-இல் அமெரிக்காவிற்குச் சென்றார். 1952-இல் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நாடு திரும்பிய பட்டீஸ்டா, தேர்தல் தனக்குச் சாதகமாக அமையாது என்பதைத் தெரிந்து இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார். பட்டீஸ்டாவின் கொடுங்கோலாட்சியில் 20,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

> ***“உலக அரங்கில் அரசியல் ஜனநாயக நாகரிகத்தைப் பின்பற்றி வரும் கியூபா, அமெரிக்காவினதும் அதன் நட்பு நாடுகளினதும் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டு சுயசார்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தி வளர்ச்சியடைய எத்தனித்துக் கொண்டிருக்கிறது.”***

பட்டீஸ்டாவின் சர்வாதிகார அரசாங்கம் ஜனவரி 1959-இல் கியூபப் புரட்சியின் போது ஜூலை 26 இயக்கத்தால் தூக்கியெறியப்பட்டு, பிடல் காஸ்ட்ரோவின் தலைமையில் சேகுவேராவின் இணைப்பில் சோசலிச ஜனநாயக ஆட்சி நிறுவப்பட்டது. கியூபா சோசலிச ஜனநாயக ஆட்சியை முன்னிறுத்தித் தனது அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொண்டு வந்ததன் காரணமாகவே அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் நிலவிவந்த பனிப் போர் காலத்தில் சோவியத் யூனியனுக்குச் சார்பாக கியூபா நின்றது. இதனை விரும்பாத அமெரிக்கா இன்றுவரை கியூபாவைத் தனது நிரந்தர எதிரியாகக் கருதி அந்நாட்டின் மீது பாரிய பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றது.

ஆனால் கியூபா உலகில் சமாதானமும் சகவாழ்வும் நிலவவேண்டும் என்ற சிந்தனையோடு செயற்பட்டு வருகின்றது என்பதனை அது உலக நாடுகளுடன் கொண்டிருக்கும் நல்லுறவும் மற்ற நாடுகளுக்குச் செய்யும் மனிதாபிமான உதவிகளும் சான்றுபகர்கின்றன.

உலக அரங்கில் அரசியல் ஜனநாயக நாகரிகத்தைப் பின்பற்றி வரும் கியூபா, அமெரிக்காவினதும் அதன் நட்பு நாடுகளினதும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு சுயசார்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தி வளர்ச்சியடைய எத்தனித்துக்கொண்டிருக்கிறது.



El Presidente de la Républica Gerardo Machado y Morales, ex General del Ejercito Mambí, en 1928.

1990-களில் சோவியத் யூனியன் என்ற கட்டமைப்பு அமெரிக் காவின் ஏதேச்சதிகாரத்தினால் உடைக்கப்பட்டு கலைக்கப் பட்டதைத் தொடர்ந்து, கியூபா கடுமையான பொருளாதாரச் சரிவை எதிர்கொண்டது. இது அந்நாட்டின் சிறப்புக்காலம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் கியூபா என்ற நாடு அமெரிக்காவிடம் சரண்புக வேண்டும் அல்லது இல்லாது அழிந்துபோகவேண்டும் என்று உலக நாடுகள் எதிர்பார்த்துக் காத்திருந்த போது, பிடல் காஸ்ரோவின் தலைமையில் தமக் குரிய உணவைத் தாமே உற்பத்தி செய்வது என்ற சுயசார்புப் பொருளாதாரத்தை முன்னிறுத்தி மீண்டெழத் தொடங்கியது. இது உலகத்தையும் அமெரிக்காவையும் ஆச்சரியத்தில் அழ்த்தியது. கியூபாவும் உலகம் வியந்து பார்க்க மருத்துவம், விவசாயம் போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டு பாரிய வளர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனாலும் அமெரிக்கா இன்றுவரை கியூபாவின் மீது தனது எதிர்ப்புணர்வைக் காட்டியே வருகின்றது. அதனை வெளிப்ப டுத்துவதாகவே கியூபாவை அமெரிக்காவின் இன்னொரு மாநிலமாக்குவேன் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்த கருத் தும் அதனை வலுப்படுத்தும் நோக்குடன் வெனிசுலாவிலி ருந்த கியூபா பெற்றுக் கொள்ளும் எரிபொருளைத் தடைசெய் தமையும் அமைகின்றன.

கியூபாவின் புரட்சிகர அரசியல் வரலாற்றில், 49 ஆண்டுகள் அந்நாட்டை வழிநடத்திய பிடல் காஸ்ட்ரோ, 2008-ஆம் ஆண்டில் தனது சகோதரரான ரவுல் காஸ்ட்ரோவிடம் அதிகா ரபூர்வமாக ஆட்சிப் பொறுப்புகளை ஒப்படைத்து ஓய்வுபெற் றார். ரவுல் காஸ்ட்ரோவின் பத்தாண்டு காலப் பதவிக்காலத் தைத் தொடர்ந்து, 2018-ஆம் ஆண்டில் மிக்வேல் டியாஸ்-கேனல் (Miguel Díaz-Canel) கியூபாவின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1959-ஆம் ஆண்டு நடைபெற்ற வர லாற்றுச் சிறப்புமிக்க கியூபப் புரட்சிக் குப் பிந்தைய தலைமுறையில் பிறந்த ஒருவர், நாட்டின் மிக உயரிய அரசியல் பொறுப்பை ஏற்பது இதுவே முதல் முறையாகும். கியூபாவின் இந்தப் பரி மாற்றமானது, 'புரட்சிகரத் தலைமுறை' என அழைக்கப்படும் காஸ்ட்ரோக்களின் வழித்தோன்றல்களிடமிருந்து, சோசலிச விழுமியங்களை உள்வாங்கிய ஒரு புதிய தலைமுறைக்கு அதிகாரம் வெற் றிகரமாகக் கைமாறியுள்ளதைக் குறிக் கும் ஒரு தீர்க்கமான அரசியல் நகர் வாகும். மிக்வேல் டியாஸ்-கேனலின் பத வியேற்பு, கியூபக் கம்யூனிஸ்ட் கட்சி யின் சித்தாந்தத் தொடர்ச்சியை மீள உறுதிப்படுத்துவதோடு, சமகால உலக ளாவிய சவால்களுக்கு முகங்கொடுக் கும் வகையில் கியூபாவின் பொருளா தார மற்றும் சமூகக் கட்டமைப்பை மீளு ருவாக்கம் செய்யும் ஒரு புதிய சகாப் தத்தின் தொடக்கமாகவும் பார்க்கப்படு கிறது. குறிப்பாக, 'காஸ்ட்ரோ' என்ற குடும்பப் பெயரிலான தனிநபர் ஆளுமைக்கு அப்பாற்பட்டு, நிறுவனமயப்பட்ட கூட்டுத் தலைமைத்துவத்தை நோக்கி கியூபா நகர்வதை இந்த மாற்றம் உலகிற்குப் பறைசாற்றுகிறது.

இத்தகைய அரசியல் உறுதிப்பாட்டின் பின்னணியில், கியூபா வும் அதன் மக்களும் நீண்டகாலமாகப் பல்வேறு சர்வதேச மற்றும் அரசியல் அடக்குமுறைகளுக்கு உட்பட்ட போதிலும், அத்தகைய சவால்களைத் தனது அசைக்க முடியாத போராட்டக் குணத்தினால் முறியடித்து மீண்டு வந்துள்ளனர். இதன் விளைவாக, தற்காலச் சூழலில் சுயாதீனமான வளர்ச்சியை எட்டும் நோக்குடன் பல்வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் கியூபா தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. குறிப்பாக, கல்வியறிவு, உற்பத்திப் பொருளாதாரம், ஏற்று மதித் துறை, பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவத் தொழி னுட்பம் போன்ற அடிப்படைத் தளங்களில் தனித்துவமான கவனத்தைச் செலுத்தி, சர்வதேச அளவில் வியக்கத்தக்க முன்னேற்றங்களை அது தொடர்ச்சியாகக் கண்டடைந்து வரு கின்றது.

கியூபாவின் வளர்சியைக் குறிப்பிட்டுப் பார்க்கும் போது, 6 வயது தொடக்கம் 16 வயதுவரை கட்டாயக் கல்வி நடைமுறை யில் கொண்டுவரப்பட்டு அனைவருக்கும் இலவசக் கல்வியை வழங்கி கல்வி அறிவு வீதத்தினை 98-இற்கும் அதிகமாக முன்னிலைப்படுத்தி வருவது முக்கியமான விடயமாகும். அதேவேளை இலவச மருத்துவ சேவையினை முன்னெடுத்து வருகின்றமையோடு தாய்சேய் நலத்திட்டத்தில் கரிசனை கொண்டு செயற்படுவது தாய் சேய் இறப்பு வீதம், வீழ்ச்சி நிலை, ஆயுட்கால அதிகரிப்பினையும் உறுதிப்படுத்துகின்றது.

இதனை விட மருத்துவக் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்த மருத்துவத்துறையில் பல முன்னேற்றகரமான

"2018-ஆம் ஆண்டில் மிக்வேல் டியாஸ்-கேனல் (Miguel Díaz-Canel) கியூபாவின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1959-ஆம் ஆண்டு நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கியூபப் புரட்சிக்குப் பிந்தைய தலைமுறையில் பிறந்த ஒருவர், நாட்டின் மிக உயரிய அரசியல் பொறுப்பை ஏற்பது இதுவே முதல் முறையாகும்."





செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை கியூப நாட்டுக்கு மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றுக்கும் பயனுடையதாக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. இதனைக் கடந்த காலங்களில் கொலரா, வாந்திபேதி, கெரோனா, எபொலா போன்ற நோய்கள் உலக நாடுகளில் பரவியபோது கியூபா தனது மருத்துவக் குழுக்களை அனுப்பி அந்த நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்குரிய மருத்துவ நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்திருந்தமை மனிதாபிமான உதவிகள் எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

ஜனநாயக உரிமை வேண்டிப் போராடித் தமது சுயநிர்ணய உரிமையைக் கண்டடைந்த கியூபாவை அமெரிக்கா இன்று வரை நசுக்கி அதன் ஆணிவேரைப் பிடுங்குவதற்கே முயற்சித்து வருகின்றது. அதற்கு அமெரிக்காவின் நட்பு நாடுகளும் உடந்தையாக இருக்கின்றன. பல பொருளாதாரத் தடையினை விதித்து கியூபாவை நலிவடையச் செய்வதற்கான முயற்சியை அமெரிக்கா கைவிடுவதாகவும் இல்லை. மனித உரிமைகள் ஆய்வகம் 2023-ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில் 88 சதவீதமான மக்கள் வறுமையில் வாழ்வதாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் இந்த ஒப்பீடானது பல நாடுகளைச் சுரண்டி கொழுத்துப்போயிருக்கும் அமெரிக்காவுடனான ஒப்பீடாகப் பலரும் கருதுகின்றனர். உண்மையில் ஒரு மனிதரின் இயல்பான வாழ்க்கையோடு ஒப்பிடும் போது கியூப மக்கள் நிறைவான, சிறப்பான வாழ்க்கையை வாழ்வதாகவே கருதப்படுகிறது.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் விதிக்கும் பொருளாதரத் தடைக்கு மத்தியில் கியூபா எழுந்து நிற்பதோடு மட்டுமல்லாமல் சுயமரியாதையை இழக்காத வீரர்கள் வாழும் நாடாகவும் நிறைவான வாழ்வை வாழும் மக்கள் வாழ்கின்ற சிறந்த நாடாகவும் உலகில் தன்னை அடையாளப்படுத்தி நிற்கின்றது.

அதனைவிடவும் உலக சுகாதர அமைப்புகள் அஞ்சிநின்ற போதெல்லாம் எவ்வகையான நோய்த் தொற்றுக்குள்ளான நாடுகளிலும் தனது உதவிக்கரத்தை நீட்டி அவர்களை அரவணைத்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல் இன்றுவரை அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளையும் வழங்கி வருகின்றது. இது அந்நாட்டின் மருத்துவச் செழுமையை வெளிப்படுத்தி நிற்பதோடு, அவர்கள் மருத்துவத்துறைக்குச் செலுத்தும் மரியாதையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இதற்கு கியூபாவின் 'ஹென்றி ரீவ்' என்ற அவசரகால மருத்துவப்படை செய்துவரும் அற்பணிப்பான செயற்பாடுகளே காரணம். அவர்கள் தொற்றா நோய், தொற்று நோய் தொடர்பான விழிப்பணர்வுகள், குடிநீர் சுத்திகரித்தல், சுகாதாரப் பழக்கவழக்கமுறைகள் போன்றவற்றைக் கற்பித்தல், ஆகிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். நிதியுதவியை விட மனிதவள உதவியை எப்போதும் செய்து வரும் கியூபாவையும் அந்நாட்டு மருத்துவக் குழுவையும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக சுகாதார அமைப்புப் போன்றவை பெரிதும் பாராட்டி வருகின்றனர்.

ஒரு தேசத்தின் உண்மையான வலிமை என்பது அதன் இராணுவக் கட்டமைப்பில் தங்கியிருக்கவில்லை; மாறாக, நெருக்கடியான காலகட்டங்களில் உலகளாவிய சமூகத்திற்கு அது நீட்டும் உதவிக்கரத்திலேயே பொதிந்துள்ளது என்பதைக் கியூபா மெய்ப்பித்துள்ளது. வல்லரசு நாடுகள் தற்காப்புக் கொள்கையினால் தத்தமது எல்லைகளை மூடிக்கொண்ட தருணங்களில், மனிதாபிமானத்தை முதன்மைப்படுத்தி, நோய் வாய்ப்பட்ட பயணிகளுடன் தத்தளித்த 'எம்.எஸ். பிரீமர்' கப்பலுக்குத் தனது கதவுகளைத் திறந்துவைத்த கியூபாவின் செயற்பாடு, ஏகாதிபத்திய மேலாதிக்கத்திற்கு எதிரான ஒரு தார்மீக அறப்போராட்டமாகும். தசாப்தங்களாகத் தொடரும் கடுமையான பொருளாதாரத் தடைகள், ஒரு நாட்டின் வளர்ச்சியை மந்தப்படுத்தலாமே தவிர, அத்தேசத்தின் அடிப்படை மனிதநேயப் பண்புகளை ஒருபோதும் சிதைக்க முடியாது என்பதற்கு கியூபாவின் 'மருத்துவ ராஜதந்திரம்' ஒரு சிறந்த சான்றாகும். குறுகிய அரசியல் வன்மத்தை விட மனித உயிர்களே மேலானவை என்பதை உலகுக்கு உணர்த்திய கியூபாவிற்கு எதிராக விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள், உண்மையில் ஒட்டுமொத்த மனிதகுலத்தின் கூட்டு மனச்சாட்சியின் மீதான தாக்குதலாகும்.

வருங்கால உலக ஒழுங்கு என்பது அதிகாரக் குவிப்பைக் கொண்டாடும் ஒன்றாக அமையாமல், சமூக நீதியையும் மனிதாபிமானத்தையும் பகிரும் நாடுகளைப் பாதுகாப்பதாக அமைய வேண்டும். கியூபாவின் குரல் ஒடுக்கப்படுவது என்பது, எதிர்காலத்தில் நிகழக்கூடிய உலகளாவிய சுகாதார நெருக்கடிகளில் நமக்காக எழக்கூடிய ஒரு உன்னத மருத்துவக் குரலை மௌனமாக்குவதற்குச் சமமாகும். எனவே, கியூபாவின் இறையாண்மையைப் பாதுகாப்பதும், அதன் மனிதநேயப் பயணத்திற்குத் தோள் கொடுப்பதும் உலகெங்கிலும் உள்ள முற்போக்குச் சக்திகளின் தார்மீகக் கடமையாகும்.



James@thaiveedu.com

எப்ஸ்டீன் கோப்புகள்:

பாலியல் துஷ்பிரயோக வலையமைப்புகளும் அதிகாரமும் செல்வாக்கும் மிக்க உலகளாவிய நபர்களும்!

ரூபன் சிவராஜா



பரந்தளவிலான எப்ஸ்டீன்-சுவடிப் பதிவுக் கோப்புகளின் வெளிப்படுத்தல், பாலியல் சுரண்டல் எவ்வாறு கட்டமைப்பு அடிப்படையிலும் உலகளாவிய வலையமைப்பாகவும் இயங்கியது என்பதைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான அடித்தளமாக உள்ளது. பொருளாதார, சமூக மற்றும் நிறுவன அதிகாரக் கட்டமைப்புகள் நீண்டகால துஷ்பிரயோக முறைகளை எவ்வாறு செயற்படுத்தின என்பதை அம்பலப்படுத்துகிறது. மட்டுமல்லாமல், குற்றவாளிகளைச் சட்ட, சமூகப் பொறுப் பேற்பிலிருந்து பாதுகாக்கவும் உதவியுள்ளன என்பதை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளன.

சமகால சர்வதேச அரசியலை மையம்கொண்டுள்ள பெரும்புயல்களில் ஒன்று 'எப்ஸ்டீன் கோப்புகளின் (Epstein files) சுவடிப்பதிவுகளாகும் (Documents). இந்தக் கோப்புகள் பெரும் அதிர்ச்சிகரமான தவவல்களைச் சான்றுகளோடு அம்பலப்படுத்தியுள்ளன. இந்தக் கட்டுரை மூன்று விடயங்களை உள்ளடக்கி இந்த விவகாரத்தினைப் பேசவிழைகிறது. யார் இந்த எப்ஸ்டீன், எவ்வாறான சுவடிப்பதிவுகள் வெளியிடப்பட்டுள்ளன (அவற்றின் உள்ளடக்கம்), இதன் விளைவுகள் எத்தகையன என்பதே இந்த விவகாரத்தினைச் சற்று விரிவாகப் பேசுவதற்குரிய அடிப்படைகளாகும். அத்தோடு இந்தக் கட்டுரை ஜெஃப்ரி எப்ஸ்டீன் விவகாரத்தின் மீது ஒரு குறுக்கு வெட்டுப் பார்வையாக அமைகின்றது.

ஜெஃப்ரி எப்ஸ்டீன் (Jeffrey Edward Epstein, 1953 - 2019) அமெரிக்காவைச் சேர்ந்த பெரும் தொழிலதிபர். பாலியல் குற்ற வாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்ட நபர். சிறுமிகளைக் குறி வைத்து மனிதக் கடத்தல் (Human trafficking) மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களை மேற்கொண்ட ஒரு பரந்த வலையமைப்பிற்குத் தலைமை தாங்கிய ஒருவர் (Network Driven Structural Sexual Abuse). இத்தகு மானிட விரோதக் கொடூரங்களில் இவரோடு உலகின் பல செல்வாக்குமிக்க நபர்களும் தொடர்புபட்டிருந்துள்ளனர் என்பதை எப்ஸ்டீன் கோப்புகள் அம்பலப்படுத்தியுள்ளன.

பாலியல் வணிகம், சிறுமிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள்:

உலகளவில் தொழிலதிபர்கள், செல்வந்தர்கள் மற்றும் அரசியல் அதிகாரமும் செல்வாக்கும் கொண்ட பலவான்கள், பல்துறைப் பிரபலங்கள், கல்வியாளர்கள் உட்பட்டவர்களை இவர் நண்பர்களாகக் கொண்டிருந்திருக்கின்றார். இத்தகு பல்துறைப் பிரமுகர்களிற் பலருக்கும் இவருக்குமிடையான நட்பிலும் தொடர்பிலும் பாலியல் வணிகம் (Sex trafficking), சிறுமிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் (Sexual abuse against childrens) போன்ற பின்னணிகள் இருந்துள்ளன. நிலவியிருந்த இந்தத் தொடர்புகளில் உலகளாவிய ரீதியில் பல பிரபலங்களின் பெயர்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பா, ஆசிய நாடுகளின் அரசியல் அதிகாரம்

கொண்டிருக்கும் பலரின் பெயர்களின் பட்டியல்களைக் காணமுடிகிறது.

1980-களில் Bear Stearns என்ற நிறுவனத்தில் ஒரு பங்காள ராக எப்ஸ்டீனது தொழிற்றுறை ஈடுபாடு தொடங்கியது. தொடர்ந்து, செல்வந்த வாடிக்கையாளர்களுக்கான நிதிநிறுவனம் ஒன்றினைத் தொடங்கினார். இவற்றுக்கூடாக டொனால்ட் ட்ரம்ப், பில் கிளிண்டன், மைக்கேல் ஜாக்சன் மற்றும் பிரித்தானிய இளவரசர் ஆண்ட்ரூ உள்ளிட்ட அதிகாரமும் புகழும் மிக்க வட்டாரங்களுக்குள் நுழையும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

சிறுமிகள் பலரிடம் மசாஜ் மற்றும் பாலியல் சேவைகளை வழங்கும்படி நிர்ப்பந்தித்து அவர்களுக்குப் பணம் வழங்க முயன்றதாக (2005) அவர் மீது குற்றம்சாட்டப்பட்டது. இந்த வழக்கின் இறுதியில், குறைந்த வயதுடையவர்களிடமிருந்து பாலியல் சேவைகளைப் பெற்றதற்காக இவருக்கு ஒன்றரை வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டினை அவர் ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் வயதுவந்த பெண்கள் என்று தான் நினைத்ததாகத் தெரிவித்திருந்தார்.

2005-இல் அமெரிக்காவின் புளொறிடா மாநில காவல்துறை எப்ஸ்டீன் மீது விசாரணைகளைத் தொடங்கியது. 14 வயதுச் சிறுமி ஒருவரின் தாயார் தன் மகளை எப்ஸ்டீன் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சுமத்தி வழக்குத்தொடுத் ததைத் தொடர்ந்து அவ்விசாரணை தொடங்கப்பட்டது. குறைந்த வயதுடையவர்களுடன் சட்டவிரோதமான பாலியல் தொடர்பு கொண்ட பல சம்பவங்களுக்காக இவர் மீது (2006) காவல் துறை குற்றம் சாட்டி, விசாரணைகளை முன்னெடுத்தது.

2009-ஆம் ஆண்டு எப்ஸ்டீன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். சிறைவாசத்திற்குப் பிறகு, அவர் பல வழக்குகளைச் சந்தித்தார். அவற்றிலிருந்து விடுபடுவதற்கு (குற்றம்சாட்டியவர்கள்) பாதிக்கப்பட்டவர்களுடன் சமரச மற்றும் நட்டஈடு வழங்கும் உடன்படிக்கைகளில் (Private settlements with the victims) ஈடுபட்டார். மனிதக் கடத்தலில் (குறைந்த வயதுடையவர்களை) ஈடுபட்டதற்காக மீண்டும் 2019-இல் குற்றம் சாட்டப்பட்டார். 2019-இல் சிறையில் தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அது தற்கொலையா, அல்லது திட்டமிட்ட கொலையா என்பது குறித்த வலுவான சந்தேகங்கள் இன்றுவரை நிலவுகின்றன. இரண்டாவது வழக்கு விசாரணைகள், சிறை மற்றும் தற்கொலை செய்துகொண்ட காலம் ட்ரம்ப் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலம் என்பது குறிப்பிடத்தக்கது. ட்ரம்பும் எப்ஸ்டீனும் கூட்டாளிகள் என்பதன் பின்னணியிலும் இது திட்டமிட்ட கொலை என்ற சந்தேகம் வலுவாக நிலவுகின்றது.



14 வயதுச் சிறுமி ஒருவரின் தாயார் தன் மகளை எப்ஸ்டீன் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சுமத்தி வழக்குத் தொடுத்ததைத் தொடர்ந்து அவ்விசாரணை தொடங்கப்பட்டது. குறைந்த வயதுடையவர்களுடன் சட்ட விரோதமான பாலியல் தொடர்பு கொண்ட பல சம்பவங்களுக்காக இவர் மீது (2006) காவல்துறை குற்றம் சாட்டி, விசாரணைகளை முன்னெடுத்தது.

துன்புறுத்தலிலிருந்து உயிர் தப்பி நீதிக்காகப் போராடிய பெண்ணின் நூல்:

2011-ஆம் ஆண்டு விர்ஜீனியா ராபர்ட்ஸ் ஜியூஃப்ரே (Virginia Roberts Giuffre, 1983–2025), எனும் பெண் தனது 16-வது வயதில் எப்ஸ்டீனினால் தான் பாலியல் மனிதக் கடத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட தனது கதையைப் பொது வெளியிற் பகிர்ந்தார். புளொரிடாவில் டொனால்ட் ட்ரம்பிற்குச் சொந்தமான ஸ்பா ஒன்றில் தான் பணிசெய்து வந்த போது எப்ஸ்டீனின் காதலியும் தொழிற் கூட்டாளியுமான Ghislaine Maxwell இனை முதலிற் தான் சந்தித்தாகக் கூறினார்.

விர்ஜீனியா, எப்ஸ்டீன் வலையமைப் பின் மனிதக்கடத்தல், பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து தப்பிப் பிழைத்த பெண்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. எப்ஸ்டீன், பிரித்தானிய முன்னாள் இளவரசர் அன்ட்ரூ உள்ளிட்ட அதிகாரம் மிக்க பல ஆண்கள் மீது பாலியற் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வழக்குத் தொடுத்ததன் மூலம் இந்த விவகாரத்திற்கு முதல் எச்சரிக்கை மணி அடித்தவரும் இவரே. இவர் ஏப்பிரல் 2025 தனது 41 வயதில், மேற்கு அவுஸ் திரேலியாவின் நீர்காபியில் உள்ள தனது பண்ணையில் தற்கொலை செய்து கொண்ட துயரம் நிகழ்ந்தது.

அவரது மரணத்திற்குப் பிறகு 2025 ஒக்ரோபரில், Nobody's Girl: A Memoir of Surviving Abuse and Fighting for Justice (எவருடைய பெண்ணும் அல்ல: துன்புறுத்தலிலிருந்து உயிர்தப்பி நீதிக்காகப் போராடியவளின் நினைவுகள்) எனும் தலைப்பிலான அவருடைய சுய சரிதை நூல் (நினைவுக் குறிப்புகள்) வெளியிடப்பட்டது. இந்நூலின் குறிப்புகள் எப்ஸ்டீன், மக்ஸ்வெல் மற்றும் அவர்களது வலையமைப்பினரால் அவர் எதிர்கொண்ட துஷ்பிரயோகங்களை விரிவாக விவரிக்கிறது. முன்னாள் பிதமர் ஒருவரின் பெயர் குறிப்பிட்டு அவர், தனைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியதாகவும் அந்நூலில் ஜியூஃப்ரே பதிவுசெய்துள்ளார்.

தனது 16 வயதில் ஃப்ளோரிடாவில் உள்ள டொனால்ட் ட்ரம்ப் பின் Mar-a-Lago விடுதியில் தான் மசாஜ் பணியாளராக இருந்த போது கிஸ்லைன் மேக்ஸ்வெல் (Ghislaine Maxwell) மூலம் இந்த வலையப்பில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதாக கூறுகின்றார். பின்னர் தான் எப்ஸ்டீனின் வலையமைப்பின்



ஒரு பகுதியாக ஆக்கப்பட்டதாகவும், 2001 மற்றும் 2002-இல் இளவரசர் ஆண்ட்ருவுடன் மூன்று முறை பாலியல் உறவில் தான் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டதாகவும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாலியல் அடிமை:

எப்ஸ்டீனின் கட்டுப்பாட்டில் தான் 'ஒரு பாலியல் அடிமையாக இறந்து விடுவேனோ' என அஞ்சியதாகவும், பலமுறை நிகழ்ந்த உடல், மன, மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களைப் பற்றியும் பதிவுசெய்துள்ளார். இளம் பெண்களைப் பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்திய செல்வந்தர்கள், செல்வாக்கு மிக்கவர்களைக் கொண்ட ஒரு வலையமைப்பை அந்நூல் விவரிக்கிறது. அத்தோடு, பாலியல் வணிகக் குற்றத்திற்காக தண்டனை அனுபவித்து வரும் கிஸ்லைன் மக்ஸ்வெல்லின் பங்கையும் விளக்குகிறது. ஒட்டுமொத்தமாக அந்த நினைவுக் குறிப்புகள் ஜியூஃப்ரே எதிர்கொண்ட கொடூரமான துஷ்பிரயோகங்களையும் அதன் நீண்டகால விளைவுகளையும் வெளிப்படுத்துகிறது.

2002 - 2005 காலப்பகுதியில் பல சிறுமிகளைப் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு மீண்டும் 2019-இல் கைதுசெய்யப்பட்டார். வழக்கின் படி, பெரும் எண்ணிக்கையிற் சிறுமிகளைப் பாலியல் வணிகம், மனிதக் கடத்தலுக்கு உட்படுத்தும் பாரிய வலையமைப்பை எப்ஸ்டீன் உருவாக்கியிருந்தார். இந்தச் சிறுமியரிற் பலர் 14 வயதினை உடைய குழந்தைகள்.

எப்ஸ்டீனின் இணையரான Ghislaine Maxwell மீது 2021-இல் வழக்குத் தொடரப்பட்டது. பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்துவதற்கு சிறுமிகள், இளம் பெண்களை இவர் ஆட்சேர்ப்புச் செய்துகொடுத்தார் என்பது இவர் மீதான குற்றச்சாட்டு. நவம்பர் 2021-இல் கிஸ்லேன் மக்ஸ்வெல்லுக்கு எதிரான நீதிமன்ற வழக்கு நியூயோர்க்கில் தொடங்கியது. இளம் பெண்கள் மற்றும் குறைந்த வயதுடைய பெண்களை ஆட்சேர்ப்பிலும், அவர்களை எப்ஸ்டீனிடம் அழைத்துச் செல்லவும் உதவியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து 2022-இல் இவருக்கு 20 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஜெஃப்ரி எப்ஸ்டீன் மற்றும் டொனால்ட் ட்ரம்ப் 1980-களின் இறுதி பகுதியில் இருந்து 2000-களின் ஆரம்பம் வரை நெருங்கிய உறவில் இருந்தவர்கள். ஃப்ளோரிடாவை மையமாகக் கொண்ட செல்வந்த, வணிக சமூக வட்டாரத்தின் அங்கத்தினர் என்று அறியமுடிகிறது.

வெளியிடப்பட்டுள்ள கோப்புகளில் எப்ஸ்டீன் தொடர்பான காவல்துறை விசாரணைகளின் நீதிமன்றப் பதிவுகளும் அடங்குகின்றன. அத்தோடு அவரது வாடிக்கையாளர் - தொடர்புகளின் பட்டியலும் (Client lists) அடங்குகின்றன. அந்தப் பட்டியல்கள் அவரை அறிந்திருந்த நபர்கள் பற்றிய முழுமையான விபரங்களை உள்ளடக்கியவை. இந்த நபர்கள் சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்களையும் இப்பதிவுகள் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளன.

கல்வியாளர்களின் பெயர்கள்:

இடதுசாரி தத்துவ அறிஞர் நோம் சோம்ஸ்கியின் பெயரும் அடிபடுகின்றன. பெண்களின் மீதான துஷ்பிரயோகத்தைச் சுற்றிய 'கொதிநிலையை' எவ்வாறு சமாளிப்பது, மற்றும் ஊடகங்களில் எப்ஸ்டீன் பற்றிய 'மிக மோசமான' சித்தரிப்புகளை எப்படி எதிர்கொள்வது என்பதில் எப்ஸ்டீனுக்கு ஆலோசனை வழங்கியதற்கான ஆதாரங்கள் வெளிவந்துள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கல்வியாளர்கள், கோட்பாட்டாளர்கள், சிந்தனையாளர்கள், படைப்பாளிகள், எழுத்தாளர்கள், எதிர்ப்பரசியற் செயற்பாட்டாளர்கள் மத்தியில் நன்மதிப்பைக் கொண்டிருந்தவர் சோம்ஸ்கி. இந்த விவகாரத்தில் ஒரு பாலியற் கொடூரனுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்பது அவர் மீதான மதிப்பையும் பெருமிதத்தையும் அடியோடு குறைந்துள்ளது.

The Conversation இணையத்தில் ஆய்வாளர் Brian Herman எழுதிய ஒரு கட்டுரையில் (20.02.2026) அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் ஆய்வுகளுக்குரிய அனுசரணை நிதி தொடர்பான தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் தனியார் நிதிக்கொடையாளர்கள் குறித்த விடயங்கள் எப்ஸ்டீன் கோப்புகளோடு தொடர்புபடுத்திப் பேசப்பட்டுள்ளன. Yale, Columbia, UCLA உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்கள் எப்ஸ்டீனுடன் இருந்த தொடர்புகள் வெளிச்சத்திற்கு வந்தபின், பேராசிரியர்களை இடைநிறுத்தம் செய்துள்ளதோடு, சிலர் சார்ந்து மாற்று ஏற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளன. அரிசோனா பல்கலைக்கழகம் திட்டமிட்டிருந்த ஒரு அறிவியல் மாநாட்டில் பங்குபெற்றவிருந்த பேச்சாளர்கள் சிலரின் பெயர்கள் எப்ஸ்டீன் பதிவுகளில் இடம்பெற்றிருந்த காரணத்தினால் அந்த அறிவியல் மாநாட்டை நிறுத்தியது. பல பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களின் இடைநிறுத்தங்கள், இரத்து செய்யப்பட்ட நிகழ்வுகள் மற்றும் நிர்வாக விளைவுகள் பல்கலைக்கழகங்கள் நன்கொடைகளைக் கையாளும் முறைமைகளின் பலவீனங்களை வெளிப்படுத்துகிறது.

> ***தமது பாலியல் தேவைகளுக்காகச் சிறுமிகளைப் பயன்படுத்திய அதிகாரமும் செல்வாக்குமுடைய நபர்களின் பட்டியல் இருக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது. ஆனால் அத்தகைய சான்றுகளுடனான கோப்புகள் இன்னும் வெளிவரவில்லை.***

பல பல்கலைக்கழக முதல்வர்கள் நிதிக்கொடை பெறும் நோக்கில் எப்ஸ்டீனை சந்தித்திருக்கின்றனர். அனைவருக்கும் அவர் வாக்குறுதி அளித்த நிதியை பெரும்பாலும் வழங்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. பல்கலைக்கழகங்களில் ஆய்வு நிதி எப்படியாக ஈட்டப்படுகிறது என்றும் அக்கட்டுரை தகவல்களை வழங்குகின்றது. 53 - 55 வீதம் அமெரிக்க மத்திய அரசாங்கத்திடமிருந்தும், 25 வீதம் பல்கலைக்கழக நிதியிலிருந்தும், 8 வீதம் தனியார் அறக்கட்டளைகள், 6 வீதம் தொழில்துறை மற்றும் 3 வீதம் தனிநபர் நன்கொடையாளர் களிடமிருந்தும் ஈட்டப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் மொத்த நிதி ஈட்டலில் தனிநபர் நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்படுவது மிகச் சிறிய பங்கை வகித்தாலும், அது பெரும் தார்மீக அறநெறிசார் ஆபத்துக்கு அது இட்டுச் செல்லக்கூடியது. சர்ச்சைக்குரிய நன்கொடையாளர்களுடன் தொடர்பு ஏற்பட்டால் அது மிகப்பெரிய ஒழுக்க சிக்கல்களை உண்டாக்க முடியும்.

உத்தியோகபூர்வமான நன்கொடை மேலாண்மை அமைப்புகள் இருந்தாலும், அவை பல்கலைக்கழகத்துக்கு பல்கலைக்கழகம் மாறுபடுகின்றன. பெருந்தொகை நன்கொடைகள் சீரான மதிப்பாய்வு செய்யப்படுவதால், சிறுதொகை நன்கொடைகள் சில நேரங்களில் உத்தியோகபூர்வ செயல்முறை விலக்கலுக்கு உட்படும் அபாயம் உள்ளது. அறம் சார் நெறிமுறைத் தரத்தை பராமரிக்க பல்கலைக்கழகங்கள் கடுமையான பின்னணி ஆய்வுகள், மேம்பட்ட பயிற்சி மற்றும் அனுமதியில்லாத நன்கொடையாளர் தொடர்பைத் தடைசெய்யும் நடைமுறைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இது உணர்த்துகின்றது. ஆய்வுகளை மேம்படுத்தும் பொருட்டிலான நிதித்தேவை அதிகமுள்ள சூழலில், ஆய்வு சார் அறத்திற்கும் பொருளாதாரத் தேவைக்குமிடையிலான சமநிலையைப் பேணுவது சவாலானது. தமது ஆய்வுசார் கருப்பொருட்கள் பல்கலைக்கழக மூலோபாயங்களுடன் பொருந்தவில்லை என்றால், சில ஆராய்ச்சியாளர்கள் உத்தியோகபூர்வ முறைமைகளை மீறி நிதி தேடுவதுதுண்டு.

எப்ஸ்டீனுக்குச் சொந்தமான தனியார் தீவுகள்:

ஜெப்ரி எப்ஸ்டீன் அமெரிக்க வெர்ஜின் தீவுகளின் அருகே உள்ள இரண்டு தனியார் தீவுகளை வைத்திருந்தார். அவை Little St. James Island மற்றும் Great St. James Island என்று அழைக்கப்படுகின்றன. முதல் தீவினை அவர் 1998-இல் 8 மில்லியன் அமெரிக்க டொலருக்குக் கொள்வனவு செய்த



தாகக் கூறப்படுகின்றது. 2019-இல் அதன் பெறுமதி 70 மில்லியன் டொலராக உயர்ந்திருந்தது. 2023-இல் பெரும் கோடீஸ்வரரான ஸ்டீஃபன் டெக்கோஃப் இவ்விரண்டு தீவுகளையும் 60 மில்லியன் டொலருக்குக் கொள்வனவுசெய்து, வாங்கி, அங்கு சொகுசு சுற்றுலா விடுதி அமைக்கும் திட்டத்தை அறிவித்தார். ஆனால் 2026 வரை எந்தக் கட்டுமானமும் தொடங்கப் படவில்லை எனப்படுகிறது. எப்ஸ்டீனின் மீது குற்றம் சாட்டிய பெண்களிற் பலர், Little St. James தீவில் தம்மீதான துஷ்பிரயோகங்கள் நடைபெற்றதாக வாக்குமூலமளித்துள்ளனர்.

மறைக்கப்பட்ட விபரங்கள்?

2025 நவம்பர் எப்ஸ்டீன் விசாரணைக்கு உட்பட்ட மீதமுள்ள சுவடிப்பதிவுக் கோப்புகளை வெளியிட வேண்டுமென்று கோரி கொங்கிரஸ் அவை நிறைவேற்றிய தீர்மானத்தில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கையெழுத்திட்டார். எப்ஸ்டீன் கோப்புகளிலிருந்து தணிக்கை செய்யப்பட்ட பதிப்பை 2025 டிசம்பர் 19 மற்றும் 23-ஆம் திகதிகளில் நீதித்துறை அமைச்சகம் வெளியிட்டது. தொடர்ந்து 30 ஜனவரி 2026, எப்ஸ்டீன் கோப்புகளிலிருந்து 30 இலட்சம் சுவடிப்பதிவுகள், 2000 காணொளிகள், 180 000 ஒளிப்படங்களும் வெளியிடப்பட்டன.

பலர் பாலியல் வன்முறையில் ஈடுபட்டமை, தமது பாலியல் தேவைகளுக்காகச் சிறுமிகளைப் பயன்படுத்திய அதிகாரமும் செல்வாக்குமுடைய நபர்களின் பட்டியல் இருக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது. ஆனால் அத்தகைய சான்றுகளுடனான கோப்புகள் இன்னும் வெளிவரவில்லை.

எப்ஸ்டீன்-விவகாரம் உலகளாவிய ஒரு பெரும் அரசியல், சட்ட மற்றும் சமூக பதற்றநிலையைத் தோற்றுவித்துள்ளது. 2025 இறுதியிலும் 2026-இன் ஆரம்பத்திலும் வெளியிடப்பட்ட சுவடிப்பதிவுகள் மில்லியன் கணக்கான பக்கங்களைக் கொண்டவை. அவை எப்ஸ்டீனின் வலையமைப்புகள் எத்தனை பாரியவை, பரந்து விரிந்தவை என்பதை வெளிச்சமிட்டுள்ளன. எப்ஸ்டீன் பாலியல் வணிக, துஸ்பிரயோக வலையமைப்புச் சார்ந்த குற்றச்சாட்டுகள் சட்ட ரீதியாக எத்தகு தவறாகக் கையாளப்பட்டுள்ளன என்பதையும் அம்பலப்படுத்துகின்றன. அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள், செல்வந்தர்கள், பெருந் தொழிலதிபர்கள், கலைத்துறை ஆளுமைகள், கல்வியாளர்கள் எனப் பல மட்டங்களில் உலகளாவிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

எப்ஸ்டீன்-விவகாரம் உலகளாவிய ஒரு பெரும் அரசியல், சட்ட மற்றும் சமூக பதற்றநிலையைத் தோற்றுவித்துள்ளது. 2025 இறுதியிலும் 2026-இன் ஆரம்பத்திலும் வெளியிடப்பட்ட சுவடிப்பதிவுகள் மில்லியன் கணக்கான பக்கங்களைக் கொண்டவை. அவை எப்ஸ்டீனின் வலையமைப்புகள் எத்தனை பாரியவை, பரந்து விரிந்தவை என்பதை வெளிச்சமிட்டுள்ளன.

முக்கிய நபர்களின் விபரங்கள் மறைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. பாதிக்கப்பட்ட 43 பேர் முழுப்பெயர் மற்றும் தொடர்புத் தகவல்களுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு மேலும் அவர்கள் சார்ந்த சில ஒளிப்படங்களும் வெளியிடப்பட்டன. கோப்புகள் பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும் என்பதற்குப் பரவலான ஆதரவு இருந்தாலும், அவற்றின் உள்ளடக்கம் வெவ்வேறு அரசியல் அடையாளங்களின் அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது.

ட்ரம்ப் ஆதரவுக் குழுக்கள் இந்த கோப்புகளை டிரம்ப் மீது நடத்தப்படும் ஆழ் நிலை அரச சதி (Deep state conspiracy) ஒன்றின் அங்கமாகப் பார்க்கின்றன. வெளியிடப்பட்டுள்ள பதிவுகளில் டொனால்ட் ட்ரம்ப்-இனது பெயர் 30000 தடவைகளுக்கு மேல் குறிப்பிடுகின்றன. ஆனால் ட்ரம்ப் ஆதரவாளர்கள் இதை ஒரு அரசியல் தாக்குதலாகவே அர்த்தப்படுத்துவதில் முனைப்புக் கொண்டுள்ளனர். பில் கிளின்டனின் பெயரும் பலமுறை இடம்பெற்றிருக்கின்றபோதும், அவரும் தான் எந்தத் தவறும் இழைக்கவில்லை என்கிறார்.



அமெரிக்க அரசியலில் நிகழக்கூடிய விளைவுகள்:

எப்ஸ்டீனுடன் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக பலரும் பெரும் விளைவுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. அவற்றில் பிரித்தானிய இளவரசர் ஆன்ட்ரூ கொண்டிருந்த உறவு மற்றும் பாலியல் வன்முறை சார்ந்த குற்றச்சாட்டுகளின் விளைவாக தனது இளவரசர் பட்டத்தை இழந்துள்ளார். நீதிமன்றப் பதிவேடுகளில் தனது பெயர் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு எப்ஸ்டீனிடம் ஆன்ட்ரூ கேட்டிருந்ததற்கான சான்றுகளும் வெளிவந்துள்ளன.

மைக்ரசொப்ற் நிறுவுநர் பில் கேற்ஸ், பிபிசி-க்கு வழங்கிய நேர்காணலில், தனக்கு எப்ஸ்டீனுடன் இருந்த உறவு குறித்துப் பகிர்ந்துள்ளார். ஒரு பாலியல் குற்றவாளியுடன் சமூகத் தொடர்பு வைத்திருந்தமை தனது பெரிய தவறு என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். தானும் முன்னாள் மனைவியும் நடத்திய நலத்திட்ட அறக்கட்டளைக்கான நிதி திரட்டும் நோக்கத்திற்காக மட்டுமே எப்ஸ்டீனுடன் தனது தொடர்பு இருந்ததாகவும் கூறியுள்ளார்.

எப்ஸ்டீன் சுவடிப் பதிவுகள் அமெரிக்க அரசியலில் ஏற்பட்ட மிகப்பெரிய விளைவுகளில் ஒன்று, குடியரசுக் கட்சி மட்டத்தில் ட்ரம்ப் தனது பிடியை மெல்ல இழந்துவருவதான தோற்றம் தெரிகின்றது என நோர்வேஜிய CIVITA சிந்தனையகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் Eirik Løkke கருதுகின்றார். இது, அமெரிக்காவின் வலதுசாரி அரசியலில் ஒருவகை மாற்றத்திற்கு வழிகோலும் எனவும் அவர் நம்புகின்றார்.

2026 கொங்கிரஸ் அவைத் தேர்தல் இடம்பெறவுள்ள சூழலில், இந்த அம்பலப்படுத்தல் தகவல்கள் தேர்தல் அலையில் அடிபட்டுப்போகும் என்ற எதிர்பார்ப்பு, குடியரசுக் கட்சியினர் மத்தியில் நிலவுகின்றது. அதேவேளை ஜனநாயகக் கட்சிக்கு இந்த அம்பலப்படுத்தற் கோப்புகளின் உள்ளடக்கம், குறிப்பாக ட்ரம்ப் சார்ந்த தகவல்களை வாக்காளர் மனதிற் பதியவைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இத்தகைய அரசியல், தேர்தல் இலாப நோக்குகளுக்கு மத்தியில் எப்ஸ்டீன் வலையமைப்பின் பாலியல் துன்புறுத்தல்களாற் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி இன்னும் சாத்தியமாகாத, முன்னேற்றம் காணாத ஒன்றாகவே இருக்கின்றது.

அமெரிக்க நீதித்துறை அமைச்சகம் ஏறத்தாழ 3.5 மில்லியன் சுவடிப்பதிவுகளை வெளியிட்டுள்ளது. மேலதிகமாக இன்னும் 2.5 மில்லியன் வரையான சுவடிப்பதிவுகள் வெளியிடப்படவில்லை. கடல்போன்றதொரு தகவல் வெள்ளத்தில் வெகுஜனத்தை மூழ்கடிப்பதன் மூலம் சட்டமீறல்கள், குற்றங்கள் பற்றிய முக்கிய தகவல்களை மறைக்கின்ற உத்தியுடன் ட்ரம்ப் நிர்வாகம் (அமெரிக்க நீதித்துறை அமைச்சகம்) செயற்படுகின்றது என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன.

சிக்கல்கள்: கெடுநோக்கு இணக்கப்பாடு தகவற்சுமை கவனச்சிதறல்:

இத்தகு பெருந்திரள் சுவடிக் கோப்புகளின் வெளியீட்டின் அடிப்படைச் சிக்கல்கள் பல்வகைமையின. முழுமையற்ற மற்றும் தாமதமான வெளியீடானது தகவலை பெரும் அளவில் புதைத்து மறைப்பதற்கான கெடுநோக்கு இணக்கப்பாடு (Malicious compliance) சார்ந்த அணுகுமுறையோ என்ற சந்தேகமும் நிலவுகின்றது. Malicious compliance என்பது விதிகளையும் சட்டங்களையும் கொள்கைகளையும் கடுமையாகப் பின்பற்றுகின்ற அதேவேளை அப்பின்பற்றலின் விளைவு எதிர்மறையான, வீணான அல்லது அர்த்தமற்ற விளைவுகளை உண்டாக்கும் என்று அறிந்து மேற்கொள்வதாகும். இந்த எப்ஸ்டீன் கோப்புகளின் வெளியீட்டு விவகாரத்தைப் பொறுத்தவரை விளக்கமாகச் சொல்லப்போனால் எல்லாம் சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டுச் செய்வதான தர்க்கத்தைக் கொண்டிருக்கும். ஆனால் அதன் நோக்கமும் விளைவும் எதிர்மறையாக அமையும்.





Information overload தகவற்சுமையையும் தகவற்குழப்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட மூலோபாய சூதாட்டம் இது என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. ட்ரம்ப் நிர்வாகம் இரண்டு உளவியல் செயல்முறைகளைக் கையாள்கிறது என (The conversation) கவனச்சிதறல் (Attention exhaustion மற்றும் துருவப்படுத்தல் (Polarization) ஆகிய இரண்டு அணுகுமுறைகளை ட்ரம்ப் நிர்வாகம் இந்த விவகாரத்திற் கைக்கொள்கின்றது எனப்படுகின்றது.

இத்தகைய ஆகப்பெரும் தகவல் வெள்ளத்தை மடைதிறந்து விடுவதானது ஏற்கனவே அமெரிக்க உள்ளக நெருக்கடிகளுக்கு (புகலிட-குடியேற்ற அரசியற் சிக்கல்கள், சுகாதார காப்பீட்டுப் பிரச்சினைகள், அமெரிக்காவின் வெளியுறவு நடவடிக்கைகள்) மத்தியில் மக்கள் எப்ஸ்டீன்-விவகாரத்தில் மக்களின் கவனம் குவிப்பதைக் கடினமாக்கக்கூடியது. அதாவது கவனச் சிதறல்களுக்கு வழிவகுக்கக்கூடியது. வெளிவரும் தகவல்களை உரிய முறையில் தொகுத்துப் புரிதலுக்குரிய வாய்ப்பினை தகவற் பெருந்திரள் அல்லது தகவற்சுமை இல்லாமற் செய்கின்றது.

உசாத்துணை:

- What are the Epstein files ?- And What's in Them | 19.02.2026 | Britannica
- Epstein files: why the Trump administration is taking a big gamble by releasing millions of documents | 12.02.2026 | The Conversation | Katie Pruszynski
- The Guardian view on Epstein, power and accountability: Full transparency is the least survivors deserve | 04-02-2026 | Editorial
- Individual donors provide only a small slice of university research funding – but Jeffrey Epstein's ties with academics show why screening matters | 20.02.2026 | The Conversation | Brian Herman



rooban.s@thaiveedu.com

தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ

மொழியின் அரசியல் : 2

மொழியும் காலனித்துவ அரசும்



tg.theeban@gmail.com

அறிமுகக் குறிப்புகள்:

இலங்கை போன்ற நாடுகளில், காலனித்துவ ஆட்சி வன்முறையால் மட்டும் நிலை நிறுத்தப்படவில்லை. அது நிர்வாக நுண்ணறிவால் நிலைநிறுத்தப்பட்டது. சமூகத் தைப் பார்க்கவும், வகைப்படுத்தவும், பதிவு செய்யவும் ஒழுங்குபடுத்தவும் தேவை யான அரசின் திறனிற்கு மொழி மையமாக இருந்தது. பிரித்தானியப் பேரரசின் பெரும் பகுதியைப் போலவே, சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கையிலும், காலனித்துவ அதிகாரம் வழக்கமானதாகவும், இயல்பாக்கப்பட்ட நடைமுறையாகவும் மாறியது. இந்த அதிகாரம் தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளவும், தொடர்ச்சியாகத் தகவ மைத்துக் கொள்ளவும் முதன்மைத் தளமாகப் பயன்படுத்தியது அதன் நிர்வாகக் கட்டமைப்பையே ஆகும். ஆங்கிலம் என்பது காலனித்துவ அரசால் பயன்படுத்தப் படும் மொழி மட்டுமல்ல, அது காலனித்துவ அதிகாரத்தின் நீட்சியின் வழித்தடம்.

> ***இலங்கையில் பிரித்தானிய மொழிக் கொள்கை தற்செயலானதோ, நடைமுறைக்கு ஏற்றதோ, தீங்கற்றதோ அல்ல. அது கட்டமைப்பு ரீதியானது. ஆட்சியாளருக்கும் ஆளப்படுபவருக்கும் இடையே தூரத்தை உருவாக்குவதன் மூலமும் இடைநிலை உயரடுக்குகளை உருவாக்குவதன் மூலமும் அரசின் அன்றாட செயற்பாட்டில் படிநிலையை உட்பொதிப்பதன் மூலமும் ஆங்கிலம் ஆட்சியின் ஒரு கருவியாகச் செயற்பட்டது.***

இலங்கையில் பிரித்தானிய மொழிக் கொள்கை தற்செயலானதோ, நடைமுறைக்கு ஏற்றதோ, தீங்கற்றதோ அல்ல. அது கட்டமைப்பு ரீதியானது. ஆட்சியாளருக்கும் ஆளப்படுபவருக்கும் இடையே தூரத்தை உருவாக்குவதன் மூலமும் இடைநிலை உயரடுக்குகளை உருவாக்குவதன் மூலமும் அரசின் அன்றாட செயற்பாட்டில் படிநிலையை உட்பொதிப்பதன் மூலமும் ஆங்கிலம் ஆட்சியின் ஒரு கருவியாகச் செயற்பட்டது. இது மொழியின் பிந்தைய காலனித்துவ அரசியலை தீர்க்கமாக வடி வமைத்தது.

அரசியல் கோட்பாட்டாளர் ஜேம்ஸ் சி. ஸ்காட், நவீன அரசுகள் சமூகங்களை நிர்வகிப் பதற்காக அவற்றைத் 'தெளிவாக' (legible) மாற்ற முயல்கின்றன என்று வாதிட்டார். தெளிவுக்கு எளிமைப்படுத்தல் தேவைப்படுகிறது. நில உரிமை, அடையாளங்கள், வரிவிதிப்பு, சட்டம் ஆகியன இவற்றில் சில. மொழி இந்த செயற்பாட்டில் மிகவும் சக் திவாய்ந்த கருவிகளில் ஒன்றாகும். இலங்கையில் பிரித்தானிய நிர்வாகிகள் இதை நன்கு புரிந்து கொண்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் காலனித்துவ ஆட்சியின் ஒருங்கிணைப்பு - குறிப்பாக கண்டி ஒப்பந்தம் (1815) மற்றும் கோல்ப்ரூக்-கேமரூன் சீர்திருத்தங்கள் (1833) ஆகியவற்றைத் தொடர்ந்து - உள்ளூர் மொழியியல் உல கங்களில் (linguistic worlds) ஆழமாகப் பதிந்திருந்த பரவலாக்கப்பட்ட அதிகார அமைப்புகளை அகற்ற வேண்டியிருந்தது. சிங்களமும் தமிழும் வெறும் தகவல் தொடர்பு மொழிகள் மட்டுமல்ல; அவை அப்பகுதிகளின் வழக்கமான சட்டங்கள், உள்ளூர் அறிவு மற்றும் சமூகச் சுயாட்சியின் காவிகளாகத் திகழ்ந்தன. எனவே காலனித்துவ அரசு ஒரு மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டு மாயின், இந்த மொழிகளோடு பிணைந்திருந்த உள்ளூர் அதிகார மையங்களை அகற்றுவது அவசியமானது. ஆங்கிலத்தை ஒரே நிர்வாக மொழியாகத் திணிப்பதன்

மூலம், உள்ளூர் அறிவுத் தளங்களை அரசுக்குத் 'தெளிவற்றதாக' மாற்றி, அவற்றின் செல்வாக்கை ஒழிப்பதே பிரித்தானியரின் இலக்காக இருந்தது.

-

ஆங்கிலத்தில் ஆட்சி செய்வதன் மூலம் காலனித்துவ அரசு இந்த உள்ளூர் மொழியியல் உலகங்களைத் தவிர்க்க அனுமதித்தது. ஆங்கிலம் ஏகாதிபத்திய சொற்களில் சமூகத்தை தெளிவாக்கியது. நிலத்தை ஆய்வு செய்யலாம், வரி விதிக்கலாம், பூர்வீக உரிமைக் கருத்துகளைக் குறிப்பிடாமல் மாற்றலாம். நிர்வாகம் சுருக்கமாகவும், தரப்படுத்தப்பட்டதாகவும், மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டிலும் மாறியது.

இந்த முறை இலங்கைக்கு மட்டும் தனித்துவமானது அல்ல. பிரிட்டிஷ் இந்தியாவில், ஆங்கிலம் அதே செயற்பாட்டைச் செய்தது. நைஜீரியாவில், பிரித்தானிய நிர்வாகிகள் நிர்வாகத்திற்கான பூர்வீக மொழிகளை வெளிப்படையாக நிராகரித்தனர். அவை ஏகாதிபத்திய ஆட்சிக்குச் சேவை செய்வதற்குத் தடையாக இருக்கும் என்றும், அவை 'உள்ளூர் உணர்வுகளுடன் மிகவும் ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன' என்றும் அவர்கள் வாதிட்டனர். உள்ளூர் மொழிகளில் பொதிந்துள்ள அந்த 'உணர்வு' அல்லது 'பண்பாட்டுத் தொடர்பு', பிரித்தானியரின் மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தைச் சிதைக்கக்கூடும் என்பதே அவர்களின் பிரதான அச்சமாக இருந்தது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் காண்பது ஒன்றே: ஆங்கிலம் என்பது ஒருபோதும் நடுநிலையான மொழி அல்ல. அது நிர்வாகத்திற்கும், ஆளப்படும் மக்களுக்கும் இடையே ஒரு 'மூலோபாயத் தூரத்தை' உருவாக்கத் திட்டமிட்டே பயன்படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் ஒரு பிரித்தானிய அதிகாரி எழுதியது போல், 'ஆங்கிலத்தின் பயன்பாடு நிர்வாகத்தின் சீரான தன்மையை உறுதி செய்கிறது; பூர்வீக வழக்கங்கள் குறித்த குழப்பங்களை நீக்குகிறது.' இங்கே 'குழப்பம்' என்று அவர் விவரித்தது, உண்மையில் பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த உள்ளூர் சுயாட்சியை ஆகும்.

> ***இலங்கையில் பிரித்தானிய சட்டச் சீர்திருத்தங்கள் முதன்மையாக ஆங்கிலத்தில் இயங்கும் நீதிமன்றங்கள் மூலம் நிர்வகிக்கப்படும் ரோமன்-டச்சு மற்றும் ஆங்கில சட்டத்தின் குறியீட்டு முறைகளை அறிமுகப்படுத்தின. சட்ட ஆவணங்கள் - நிலப் பத்திரங்கள், ஒப்பந்தங்கள், நீதிமன்ற தீர்ப்புகள் - பெரும்பாலான மக்களால் அணுக முடியாத மொழியில் தயாரிக்கப்பட்டன.***

உயரடுக்கு உருவாக்கத்தில் ஆங்கிலத்தின் வகிபாகம்:

காலனித்துவ நிர்வாகத்திற்கு இடைத்தரகர்கள் தேவைப்பட்டனர். உள்ளூர் ஒத்துழைப்பாளர்கள் இல்லாமல் பிரித்தானிய அதிகாரிகள் பரந்த பிரதேசங்களில் நேரடியாக ஆட்சி செய்ய முடியாது. ஆங்கிலக் கல்வி என்பது அத்தகைய இடைத்தரகர்கள் உருவாக்கப்பட்ட வழிமுறையாகும். ஆங்கிலத்தை நிர்வாக மொழியாக மாற்றியதன் மூலம், காலனித்துவ அரசு மொழித் திறனை மூலதனத்தின் ஒரு வடிவமாக மாற்றியது. சிவில் சேவைக்கான பதவிகள், மதகுரு பணி, சட்ட அதிகாரம், தொழில்முறை முன்னேற்றம் ஆகியவை ஆங்கிலம் சரளமாகப் பேசுவதை சார்ந்திருந்தன. இதனால் மிஷனரி பள்ளிகளும் உயரடுக்கு நிறுவனங்களும் அரசு அதிகாரமாக மாறியது.

இலங்கையில் இது சிங்களவர்கள், தமிழர்கள், பறங்கியர்களைக் கொண்ட ஒரு சிறிய ஆனால் செல்வாக்குமிக்க ஆங்கில மயமாக்கப்பட்ட உயரடுக்கை உருவாக்கியது. இந்த உயரடுக்கை ஒன்றிணைத்தது இனம் அல்ல, மாறாக மொழியியல் நோக்குநிலை. ஆங்கிலம் அதிகாரம், நவீனத்துவம் ஆகியவற்றின் பிரதிபிம்பமானதோடு சட்டபூர்வமான மொழியாக மாறியது. சிங்களமும் தமிழும் கலாசாரத்தின் இயங்கியலாக, உள்நாட்டுக் களங்களுக்கான மொழிகளாகத் தள்ளப்பட்டன.

காலனித்துவ சமூகங்கள் பற்றிய ஃபிரான்ஸ் ஃபானனின் பகுப்பாய்வு இங்கே கவனிப்புக்குரியது. காலனித்துவம் ஒரு 'பூர்வீக உயரடுக்கை' உருவாக்குகிறது என்று ஃபானன் வாதிட்டார், அதன் சக்தி இயல்பான சமூகத் தலைமையை விட காலனித்துவ நிறுவனங்களுக்கு அருகாமையில் இருந்து பெறப்படுகிறது. மொழி இந்த அருகாமைக்கு மையமானது. இலங்கையில் ஆங்கில மயமாக்கப்பட்ட உயரடுக்கு இந்த நிலையை எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில் பிரித்தானியர் காலத்தில் தோற்றம் பெற்ற உயரடுக்கு ஆங்கிலம் பேசியது. இதனால் சமூக ரீதியாக உயர்ந்ததாகவும் கட்டமைப்பு ரீதியாக சார்ந்தாகவும் இருந்தது.

இந்த முறை உலகளவில் பிரதிபலித்தது. கென்யாவில், ஆங்கிலம் பேசும் ஆபிரிக்கர்கள் காலனித்துவ சிவில் சேவையில் ஆதிக்கம் செலுத்தினர். கானாவில், ஆங்கிலக் கல்வி அரசு வேலைவாய்ப்புக்கான நுழைவாயிலாக மாறியது. பிரித்தானியப் பேரரசு முழுவதும், மொழி ஒரு வடிகட்டியாகச் செயற்பட்டது. அதன் மூலம் அதிகாரம் மேல்நோக்கியும் வெளிப்புறமாகவும் பாய்ந்தது. இதன் விளைவு வெறும் சமத்துவமின்மை மட்டுமல்ல, வெறுப்பும் இதனோடு சேர்ந்து வெளிப்பட்டது. ஆங்கிலம் பேசும் உயரடுக்கினர், சுதேசிய யதார்த்தங்களிலிருந்து விலகி, ஒத்துழைப்பாளர்களாகக் காணப்பட்டனர். இந்தக் கருத்து பின்னர் தேசியவாத எதிர்வினையைத் தூண்டியது - ஆனால் அதை உருவாக்கிய அமைப்பு காலனித்துவமாகும்.

காலனித்துவ சட்டம், மொழி எவ்வாறு ஆதிக்கத்தின் ஒரு கருவியாக செயற்பட்டது என்பதைத் தெளிவாக விளக்குகிறது. இலங்கையில் பிரித்தானிய சட்டச் சீர்திருத்தங்கள் முதன்மையாக ஆங்கிலத்தில் இயங்கும் நீதிமன்றங்கள் மூலம் நிர்வகிக்கப்படும் ரோமன்-டச்சு மற்றும் ஆங்கில சட்டத்தின் குறியீட்டு முறைகளை அறிமுகப்படுத்தின. சட்ட ஆவணங்கள் - நிலப் பத்திரங்கள், ஒப்பந்தங்கள், நீதிமன்ற தீர்ப்புகள் - பெரும்பாலான மக்களால் அணுக முடியாத மொழியில் தயாரிக்கப்பட்டன. தேவையேற்படுமிடத்து மொழிபெயர்ப்பு இருந்தது. ஆனால் அது சீர்ற்றதாகவும் காலனியாதிக்க விருப்பப்படியும் இருந்தது. சட்டத்தின் அதிகாரம் என்பது



ஆள்பவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான ஒரு பகிரப்பட்டப் புரிதலில் கட்டமைக்கப்படவில்லை; மாறாக, அது அரசின் நடைமுறைச் சக்தியில் மட்டுமே தங்கியிருந்தது. மக்கள் அச்சட்டங்களைப் புரிந்து கொண்டதால் கீழ்ப் படியவில்லை; மாறாக, அந்நிய மொழியில் இயங்கிய அந்தச் சட்டக் கட்டமைப்பால் அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டதால் மட்டுமே கீழ்ப்படிந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கண்டியைச் சேர்ந்த ஒரு மனுதாரர் முன்வைத்ததாகக் கூறப்படும், 'சட்டம் நம்மைக் கேட்காத ஒரு மொழியைப் பேசுகிறது' என்ற புகாரானது, சாதாரண குடிமக்களுக்கும் காலனித்துவ சட்டக் கட்டமைப்புக்கும் இடையே நிலவிய ஆழமான பிளவை மிகத் துல்லியமாகப் பிரதிபலிக்கிறது. இந்த அந்நியப்படுத்தல் உணர்வு அக்காலகட்டத்தில் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் ஒரு பொதுவான மனநிலையாகவே காணப்பட்டது. நீதிமன்றங்கள் மற்றும் சட்ட நடைமுறைகள் மக்களின் அன்றாட வாழ்வியலில் இருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு, வெளிப்புற மானவையாகவும், வலிந்து திணிக்கப்பட்டவையாகவும் மாறின. குறிப்பாக, மொழியியல் ரீதியான இடைவெளி, சட்டத்தை ஒரு பாதுகாப்புக் கேடயமாகப் பார்ப்பதற்குப் பதிலாக, ஒரு புரியாத புதிராகவும், அச்சுறுத்தும் அதிகாரமாகவும் மாற்றியது.

> ***இலங்கையில், ஆங்கில சட்டம் சுதேசிய மொழி பேசுபவர்களை சட்டபூர்வ சார்புடையவர்களாக நிலைநிறுத்தியது. இது ஒரு நீடித்த பாடத்தைக் கற்பித்தது. நீதி, மொழி மூலம் மத்தியஸ்தம் செய்யப்பட்டது, மேலும் அந்த மொழியே அதிகாரமாகவும் இருந்தது.***

இதே காலப்பகுதியில் பிற காலனிய அனுபவங்கள் இந்தக் கதையாடலை வலுப்படுத்துகின்றன. அல்ஜீரியாவில், பிரெஞ்சு மொழி நீதிமன்றங்கள் அரபு மொழி பேசுபவர்களை ஓரங்கட்டின, மேலும் பூர்வீக சட்ட மரபுகளை சட்டப்பூர்வமற்றதாக்கியது. இந்தியாவில், ஆங்கில நீதிமன்றங்கள் இதேபோல் சுதேசிய மொழிபேசும் மக்களை அந்நியப்படுத்தின. மஹ்மூத் மம்தானியின் 'பிரிக்கப்பட்ட அதிகாரம்' - நகர்ப்புற உயரடுக்கினருக்கான சிவில் சட்டம், கிராமப்புற குடிமக்களுக்கான வழக்கமான அதிகாரம் - என்ற கருத்து இந்த மாறும் தன்மையை நன்கு பிரதிபலிக்கிறது. இலங்கையில், ஆங்கில சட்டம் சுதேசிய மொழி பேசுபவர்களை சட்டபூர்வ சார்புடையவர்களாக நிலைநிறுத்தியது. இது ஒரு நீடித்த பாடத்தைக் கற்பித்தது. நீதி, மொழி மூலம் மத்தியஸ்தம் செய்யப்பட்டது, மேலும் அந்த மொழியே அதிகாரமாகவும் இருந்தது. காலனித்துவ மொழிக் கொள்கை சமூகப் படிநிலையை மட்டுமல்ல, இடஞ்சார்ந்த சமத்துவமின்மையையும் மறுவடிவமைத்தது. பாடசாலைகள், நீதிமன்றங்கள், அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள நகர்ப்புற மையங்களில் - குறிப்பாக கொழும்பில் - ஆங்கில மொழி நிர்வாகம் அதிகாரத்தை குவித்தது. பெரும்பாலும் சிங்கள மொழி பேசும் கிராமப்புறங்கள் ஆங்கில மொழியின் கட்டாயமாதலை எதிர்கொண்டன. இதனால் அரசு அந்நிய மொழிபேசும் வெளியாளாகவே தெரிந்தது.

இந்த நகர்ப்புற-கிராமப்புற பிளவு ஆழமான அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியது. கிராமப்புற மக்கள் காலனித்துவ அரசைத் தங்களது நலன்களைப் பேணும் ஒரு சேவை சார்ந்த அமைப்பாக போதும் உணரவில்லை. மாறாக, வரிவிதிப்பு, கட்டாய உழைப்பு மற்றும் நில அபகரிப்பு ஆகியவற்றின் மூலம் தங்களது வளங்களைச் சுரண்டும் ஒரு பிரித்தெடுக்கும் கருவியாகவே அதனைப் பார்த்தனர். இந்த சந்திப்புகளின் மொழியாக ஆங்கிலம், அவமானத்துடனும் விலக்குடன் தொடர்புடையதானது. இவ்வியல்புகள் பிற காலனித்துவ சூழல்களிலும் வெளிப்பட்டது. சூடானில், ஆங்கில மொழி நிர்வாகம் பிராந்திய சமத்துவமின்மையை ஆழப்படுத்தியது. உகாண்டாவில், ஆங்கில ஆட்சி நகர்ப்புற உயரடுக்குகளுக்கு சலுகை அளித்து, கிராமப்புற சமூகங்களை ஓரங்கட்டியது. இலங்கையில், ஆங்கிலம் பேசும் உயரடுக்குகளுக்கு எதிரான வெறுப்பு வெறுமனே கலாசாரமாக இருக்கவில்லை. அது வாழ்ந்த அனுபவத்தில் வேரூன்றியது. மொழி அரசுக்கும் சமூகத்திற்கும் இடையிலான தூரத்தைக் குறித்தது.

பிரித்தானிய நிர்வாகிகள், ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை நியாயப்படுத்துவதற்கு 'நடுநிலைமை' என்ற கருத்தாக்கத்தை ஒரு வலுவான கேடயமாகப் பயன்படுத்தினர். தாங்கள் ஆங்கிலத்திற்குத் தனிச்சலுகைகள் அளிக்கவில்லை என்றும், சிங்களம் அல்லது தமிழ் மொழியைப் பயன்படுத்துவதை ஒருபோதும் தடுக்கவில்லை என்றும் வாதிட்ட அவர்கள், ஒரு நடுநிலையான மத்தியஸ்தராகவே தங்களைக் காட்டிக்கொண்டனர். இக்கூற்று சித்தாந்த ரீதியாக மிகுந்த

செல்வாக்கு செலுத்திய போதிலும், நடைமுறையில் அது ஆழமாகத் தவறாக வழிநடத்துவதாகும். உண்மையில், ஆங்கிலம் என்பது ஒருபோதும் நடுநிலையான மொழியாக இருக்கவில்லை; அது முழுக்க முழுக்க மேலாதிக்கத் தன்மை கொண்டது. மிஷனரி கல்வி, நகர்ப்புறத் தொடர்புகள் மற்றும் காலனித்துவ அரசின் ஆதரவைப் பெறக்கூடிய ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திற்கு மட்டுமே இது முன்னுரிமை அளித்தது. இச்செயற்பாடு, பூர்வீக மொழிகளை அதிகாரத்தின் மையக் களங்களிலிருந்து திட்டமிட்டு இடம்பெயர்த்தது. இந்த 'நடுநிலைமை' குறித்த கட்டுக்கதை, அதன் பின்னால் ஒளிந்திருந்த அதிகாரப் படிநிலையை (Hierarchy) தந்திரமாக மறைத்தது. காலனித்துவ நிர்வாகிகள் சமூக சமத்துவமின்மையை முறைப்படியாக மீண்டும் உருவாக்கிக் கொண்டிருந்த போதிலும், 'நடுநிலைமை' என்ற போலிப் பிம்பம் அத்தகைய ஏற்றத்தாழ்வுகளுக்கான பொறுப்பிலிருந்து அவர்கள் நழுவுவதற்கு வழிவகுத்தது.

இந்த கட்டுக்கதை காலனித்துவத்திற்குப் பிந்தைய நினைவகத்தில் நீடிக்கிறது. அமைதியைக் காக்கும் ஒரு 'பாலமாக மொழி' என்று ஆங்கிலம் பெரும்பாலும் ஏக்கத்துடன் நினைவு கூரப்படுகிறது. இந்த ஏக்கம் ஆங்கிலம் உருவாக்கிய கட்டமைப்பு விலக்கையும் அது உருவாக்கிய வெறுப்பையும் புறக்கணிக்கிறது. நைஜீரியாவில், சுதந்திரத்திற்குப் பிறகு ஆங்கிலம் இனக்குழுக்களிடையே நடுநிலை மொழியாகத் தக்க வைக்கப்பட்டது. இது உடனடி மோதலைத் தவிர்த்தது. அது காலனித்துவ வர்க்க படிநிலைகளைப் பாதுகாத்தது. நடுநிலைமை தொடர்ச்சியாக மாறியது. சுதந்திரத்துக்குப் பிறகு இலங்கை ஆங்கிலத்தை நிராகரித்தது. ஆனால் ஆட்சிக்கு ஒரு அதிகாரபூர்வ மொழி தேவை என்ற நம்பிக்கையைத் தக்கவைத்துக் கொண்டது. அதன் உள்ளடக்கம் மாறியபோதும், அதன் காலனித்துவ தர்க்கம் நீடித்தது. இங்கே கவனிக்க வேண்டியது யாதெனில், மிகவும் நீடித்த காலனித்துவ மரபு ஆங்கிலம் அல்ல, மாறாக நிர்வாகத்திற்கு ஒரு மொழி தேவை என்பதே. பயனுள்ள நிர்வாகத்திற்கு ஒரே மொழி தேவை, அது சீராகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை காலனித்துவ ஆட்சி இயல்பாக்கியது.

பன்மொழி ஆட்சி திறமையற்றது, ஒழுங்கற்றது அல்லது பின்தங்கியதாக நிராகரிக்கப்பட்டது. இந்த அனுமானம் அதிகாரத்துவ பயிற்சி, நிறுவன வடிவமைப்பு மற்றும் உயரடுக்கு கற்பனையை வடிவமைத்தது. சிங்கள தேசியவாதிகள் பின்னர் மொழியியல் சீர்திருத்தத்தைக் கோரியபோது, அவர்கள் இந்த முன்மாதிரியை சவாலுக்குட்படுத்தவில்லை. எந்த மொழி மையப் பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்பதை மட்டுமே அவர்கள் சவாலுக்குள்ளாக்கினர். ஆனால் இந்தக் காலனித்துவ வார்ப்புரு - ஒரு மொழி, ஒரு நாடு - அப்படியே இருந்தது. இந்த அர்த்தத்தில், சிங்களம் மட்டும் சட்டம் காலனித்துவ ஆட்சியிலிருந்து ஒரு தீவிரமான முறிவு அல்ல, மாறாக அதன் சுதேசிய மொழித் தொடர்ச்சியாகும். ஆங்கிலம் சிங்களத்தால் மாற்றப்பட்டது, ஆனால் மொழியியல் ஆதிக்கத்தின் கட்டமைப்பு நீடித்தது. இந்த தொடர்ச்சி முக்கியமானது. காலனித்துவத்திற்குப் பிந்தைய மொழிச் சீர்திருத்தம் அதை அகற்றுவதற்குப் பதிலாக விலக்குகளை மீண்டும் உருவாக்கியது ஏன் என்பதை இது விளக்குகிறது. காலனித்துவ அரசு இலங்கைக்கு எவ்வாறு ஆட்சி செய்வது என்பது மட்டுமல்ல - மொழி மூலம் எவ்வாறு ஆட்சி செய்வது என்பதையும் கற்றுக் கொடுத்தது.

பிரித்தானியக் காலனித்துவ அரசு மொழி பற்றிய மூன்று பாடங்களைத் தருகிறது:

- அந்த மொழியை, ஆட்சியை சரளமாகப் பேசுபவர்களுக்கு மட்டுமே தெளிவாக்குவதன் மூலம் அதிகாரத்தை மையப்படுத்த முடியும்.
- அந்த மொழியால், அதிகாரத்திற்கு மொழியியல் அருகாமையில் இருந்து பெறப்பட்ட சட்டபூர்வமான உயரடுக்குகளை உருவாக்க முடியும்.
- அந்த மொழியை, விலக்குதலை நிர்வாகத் தேவையாக முன்வைப்பதன் மூலம் சமத்துவமின்மையை இயல்பாக்க முடியும்.

இந்தப் பாடங்கள் சுதந்திரத்திற்குப் பிந்தைய 'பின்காலனித்துவ' அரசியல்வாதிகளால் உள்வாங்கப்பட்டு, மீண்டும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. உண்மையில், 'சிங்களம் மட்டும்' (Sinhala Only) கொள்கையானது புதியதொரு மொழியியல் ஆதிக்கத்தைக் கண்டுபிடித்துவிடவில்லை; மாறாக, ஏற்கனவே கட்டமைக்கப்பட்டிருந்த ஒரு மேலாதிக்கக் கருவியின் திசையை அது மாற்றியமைத்தது, அவ்வளவே. இந்த தொடர்ச்சியை அங்கீகரிப்பது பின்காலனித்துவப் பொறுப்பை விடுவிப்பதில்லை. அது அதை கூர்மைப்படுத்துகிறது. ஆங்கில ஆதிக்கத்தின் அநீதி, 'சிங்களம் மட்டுமே' என்ற அநீதியை நியாயப்படுத்தாது. இரண்டும் ஒரே நம்பிக்கையிலிருந்து வெளிப்பட்டன. அரசு திறம்பட ஆட்சி செய்ய ஒரே மொழியில் பேச வேண்டும். இந்த நம்பிக்கை இலங்கையின் மொழியியல் துயரத்தின் மையத்தில் உள்ளது.

ஆங்கிலக் கல்வியும் காலனித்துவ உயரடுக்கின் உருவாக்கமும்:

பிரித்தானிய ஆட்சியின் எலும்புக்கூட்டுக்கான கட்டமைப்பை காலனித்துவ நிர்வாகம் வழங்கியது என்றால், ஆங்கிலக் கல்வி அதன் உயிர்நாடியை வழங்கியது. பாடசாலைகள், கல்லூரிகள், தேர்வுகள், சான்றிதழ்கள் மூலம்தான் காலனித்துவ அரசு சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் தன்னை மீண்டும் உருவாக்கியது. பிரித்தானியப் பேரரசின் பிற இடங்களைப் போலவே, இலங்கையிலும், ஆங்கிலக் கல்வி ஒரு போதும் ஒரு மொழியைக் கற்றுக்கொள்வது பற்றியது அல்ல. இது வர்க்க உருவாக்கத்தின் ஒரு தொழினுட்பமாகவும், இடைத்தரகர்களை உருவாக்குவதற்கான ஒரு பொறிமுறையாகவும், காலனித்துவ ஆட்சியை விட நீண்ட காலமாக சமூக படிநிலைகளை மறுகட்டமைப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகவும் இருந்தது.

காலனித்துவ இலங்கையில் ஆங்கிலக் கல்வி ஒரு தனித்துவமான உயரடுக்கை உருவாக்கியது, அதன் அதிகாரம் காலனித்துவ அரசுக்கு மொழியியல், கலாசார அருகாமையில் இருப்பதை விட செல்வம் அல்லது பரம்பரையில் குறைவாகவே தங்கியிருந்தது. கலவையில் பல இனத்தவரையும் மொழியால் ஒன்றுபட்டதுமான இந்த உயரடுக்கு நிர்வாகம், சட்டம், மருத்துவம் மற்றும் அரசியலில் ஆதிக்கம் செலுத்தியது. அவ்வாறு செய்வதன் மூலம், அது சுதேச மொழி பேசும் மக்களிடையே ஆழ்ந்த வெறுப்பை உருவாக்கியது. பிற்கால சிங்கள தேசியவாத எழுச்சிக்கான சமூக அடித்தளங்களை நட்டது. முக்கியமாக, ஆங்கிலக் கல்வி சிலருக்கு

> ***அமெரிக்க மிஷனரி பள்ளிகளின் அடர்த்தி காரணமாக யாழ்ப்பாணம் ஆங்கிலக் கல்வியின் மையமாக உருவெடுத்தது. இது காலனித்துவ சேவையில் விகிதாசாரமற்ற எண்ணிக்கையில் நுழைந்த உயர்கல்வி பெற்ற தமிழ் நிபுணர்களின் ஒரு கூட்டத்தை உருவாக்கியது.***



இலங்கையில் அமெரிக்க மதபோதகர்கள், 1916

சலுகைகளை வழங்கவில்லை. அது தகுதி, புத்திசாலித்தனம், தலைமை போன்றவற்றை மொழியியல் அடிப்படையில் மறு வரையறை செய்தது.

ஆங்கிலக் கல்வியின் அரசியல் நோக்கம் குறித்து பிரித் தானிய காலனித்துவ அதிகாரிகள் வெளிப்படையாக இருந் தனர். இலக்கு வெகுஜன அறிவொளி அல்ல, மாறாக தேர்ந் தெடுக்கப்பட்ட பயிற்சி. மக்களுக்கு ஆங்கிலத்தில் கல்வி கற்பிப்பது விலை உயர்ந்தது, ஆபத்தானது, தேவையற்றது. நிர்வாகத்தில் உதவுவதற்காக உள்ளூர்வாசிகளின் ஒரு சிறிய குழுவிற்கு கல்வி கற்பிப்பது திறமையானது.

தோமஸ் பாபிங்டன் மெக்காலேயின் பிரபலமான இந்திய கல்வி பற்றி ஒரு நிமிடம் (1835) இந்த தர்க்கத்தை தெளிவு டன் வெளிப்படுத்தியது. இந்தியாவிற்காக எழுதப்பட்டாலும், அதன் அனுமானங்கள் இலங்கை உட்பட பேரரசு முழுவதும் கல்விக் கொள்கையை வடிவமைத்தன. இக்கொள்கையின் மூலம் மெக்காலே, 'இரத்தத்திலும் நிறத்திலும் இந்தியர்களா கவும், ஆனால் ரசனைகள், கருத்துகள், ஒழுக்கம் மற்றும் அறிவுத்திறனில் ஆங்கிலேயர்களாகவும்' விளங்கும் ஒரு புதிய 'இடைத்தரகர்' வர்க்கத்தை உருவாக்க முற்பட்டார். இலங் கையில் காலனித்துவக் கல்விக் கொள்கையானது, பிரித் தானியப் பேரரசின் அதே உலகளாவிய வார்ப்புருவையே பின்பற்றியது. இக்கல்வி முறைமை, காலனித்துவ நிறுவனங் களை மிகக் குறைந்த செலவில் இயக்குவதற்குத் தேவை யான எழுத்தர்கள், நில அளவையாளர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள் மற்றும் இளநிலை நிர்வாகிகளை உருவாக் குவதையே முதன்மை இலக்காகக் கொண்டிருந்தது. இங்கே மொழித்திறன் என்பது வெறும் தகவல் தொடர்பு கருவியாகக் கருதப்படவில்லை; அது தனிநபரின் விசுவாசம், ஒழுக்கம் மற்றும் ஏகாதிபத்திய உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றிலி ருந்து பிரிக்க முடியாத ஒன்றாகக் கட்டமைக்கப்பட்டது. இதன் விளைவாக, ஒரு பரந்த அளவிலான அறிவுஜீவிச் சமூகம் உருவாவதற்குப் பதிலாக, அதிகாரத்தை எட்டுவதற்கான ஒரு குறுகிய 'கல்வி வழித்தடம்' மட்டுமே உருவாக்கப்பட்டது. பெரும்பாலும் கிறிஸ்தவ மிஷனரிகளால் நடத்தப்பட்ட ஆங் கில வழிப் பள்ளிகள், அதிகார மையங்களுக்கான பிரதான நுழைவாயில்களாக உருவெடுத்தன. இதற்கு நேர்மாறாக, தாய்மொழிக் கல்வி முறைமை எஞ்சியிருந்த போதிலும், அது காலனித்துவ நிர்வாகப் படிநிலையில் முன்னேறுவதற் கான எந்தவொரு வாய்ப்பையும் அல்லது வழியையும் வழங் கவில்லை.

இலங்கையில் ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதில் மிஷனரி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகித்தன. ஆங்கிலிகன், மெத டிஸ்ட், கத்தோலிக்க மற்றும் அமெரிக்க மிஷனரி பள்ளிகள் கடலோர மற்றும் நகர்ப்புறங்களில், குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் பிற நிர்வாக மையங்களில் பெருகின. இந்தப் பள்ளிகள் ஆங்கில-நடுத்தரக் கல்வி, மேற்கத்திய பாடத்திட்டங்கள் மற்றும் காலனித்துவ வேலைவாய்ப்புக்கான பாதைகளை வழங்கின. இருப்பினும், அணுகல் சீரற்றதாக இருந்தது. மிஷன்களுக்கு அருகாமையில் இருந்த குடும் பங்கள், பள்ளிப்படிப்பை ஆதரிக்கும் வளங்கள் அல்லது ஆங்கிலத்தை மதிக்கும் சமூக வலைப்பின்னல்கள் பயனடை வதற்கான வாய்ப்புகள் அதிகம். காலப்போக்கில், இது சலுகை களின் புவியியலை உருவாக்கியது: நகர்ப்புற, கடலோர மற்றும் மிஷன் அடர்த்தியான பகுதிகள் கல்வி மையங்க ளாக மாறின, அதே நேரத்தில் கிராமப்புற உட்புறங்கள் பின் தங்கியிருந்தன.

குறிப்பாக, அமெரிக்க மிஷனரி பள்ளிகளின் அடர்த்தி கார ணமாக யாழ்ப்பாணம் ஆங்கிலக் கல்வியின் மையமாக உரு வெடுத்தது. இது காலனித்துவ சேவையில் விகிதாசாரமற்ற எண்ணிக்கையில் நுழைந்த உயர்கல்வி பெற்ற தமிழ் நிபுணர் களின் ஒரு கூட்டத்தை உருவாக்கியது. சிங்கள உயரடுக்கு கள், குறிப்பாக கொழும்பு மற்றும் கீழ்நாட்டிலிருந்து, ஆங்கி லிகன் மற்றும் கத்தோலிக்க நிறுவனங்கள் வழியாக இதே போன்ற பாதைகளைப் பின்பற்றினர். காலனித்துவ அரசு இந்த ஏற்றத்தாழ்வை ஒரு பிரச்சினையாகக் காணவில்லை. மாறாக, வெகுஜனத் தொகுதிகளுக்குப் பதிலாக அரசுக்கு



உடுவில் பெண்பள்ளி 1880

விசுவாசமாக இருக்கும் உயரடுக்கினரை உருவாக்குவதன் மூலம் பிரித்தாளும் தர்க்கத்தை அது வலுப்படுத்தியது.

ஆங்கிலக் கல்வியின் மோசமான பின்விளைவுகளில் ஒன்று தகுதியின் மறுவரையறை ஆகும். காலனித்துவ ஆட்சியின் கீழ், நுண்ணறிவு, திறன் மற்றும் தலைமைத்துவம் ஆகிய வற்றில் ஆங்கிலத்தின் சரளமான தன்மை அளவிடப்படுவது அதிகரித்தது. தேர்வு முறைகள் ஆங்கில இலக்கியம், இலக் கணம் மற்றும் மேற்கத்திய அறிவு முறைகளில் தேர்ச்சி பெற் றதற்கு வெகுமதி அளித்தன. சுதேசிய மொழி அறிவுசார் மரபுகள் ஓரங்கட்டப்பட்டன. இந்த மாற்றம் ஆழமான சமூக விளைவுகளை ஏற்படுத்தியது. பாரம்பரிய உயரடுக்குகள் - சமய அறிஞர்கள், கிராமத் தலைவர்கள், பூர்வீக சட்ட வல்லு நர்கள் - ஆங்கிலம் படித்த நிபுணர்களுடன் ஒப்பிடும்போது கௌரவத்தை இழந்தனர். சமூக அங்கீகாரத்தை விட சான்றி தழ்களில் அடித்தளமாகக் கொண்ட புதிய அதிகார வடி வங்கள் தோன்றின.

பியர் போர்த்தியோவின் 'பண்பாட்டு மூலதனம்' (cultural capital) பற்றிய கருத்து இங்கு பயனுள்ளது. வேலைவாய்ப்பு, அந்தஸ்து மற்றும் செல்வாக்காக மாற்றக்கூடிய மூலதனத் தின் ஒரு வடிவமாக ஆங்கில புலமை செயற்பட்டது. இந்த மூலதனத்தை அணுக முடியாதவர்கள் திறமை அல்லது அனுபவத்தைப் பொருட்படுத்தாமல் கட்டமைப்பு ரீதியாக விலக்கப்பட்டனர். இந்த இயக்கவியல் இலங்கைக்கு மட்டும் தனித்துவமானது அல்ல. காலனித்துவ கானாவில், ஆங்கி லக் கல்வி கிராமப்புற சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்ட மேற் கத்திய மயமாக்கப்பட்ட புத்திஜீவிகளை உருவாக்கியது. கென்யாவில், ஆங்கிலம் பேசும் ஆப்பிரிக்கர்கள் மதகுரு மார்கள் மற்றும் நிர்வாகப் பாத்திரங்களில் ஆதிக்கம் செலுத் தினர். பேரரசு முழுவதும், மொழியால் மறுசீரமைக்கப்பட்ட வர்க்கம் உருவானது. இருப்பினும், இலங்கையில் இந்த மறு சீரமைப்பு குறிப்பாகத் தெரிந்தது, ஏனெனில் தீவின் நீண்ட கால இலக்கிய மரபுகள் சிங்களம் மற்றும் தமிழில் இருந்து வந்தன. இந்த மரபுகள் அதிகாரக் களங்களிலிருந்து இடம் பெயர்ந்தமையானது வெறுப்பை அதிகரித்தது. சுதேசிய மொழி பேசும் மக்கள் ஏழைகளாக உணரவில்லை. அவர்கள் மதிப்பிழந்தவர்களாக உணர்ந்தனர்.

ஒரு முக்கியமான சிக்கலை ஒப்புக் கொள்ள வேண்டும். இலங்கையில் ஆங்கிலம் படித்த காலனித்துவ உயரடுக்கு இனரீதியாக ஒரே மாதிரியாக இல்லை. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் அனைவரும் ஆங்கிலக் கல்வியில் பங்கேற்று அதிலிருந்து பயன டைந்தனர். அவர் களை ஒன்றிணைத்தது இனம் அல்ல, மொழி மற்றும் கலா சார நோக்குநிலையே.

> ***இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், சிங்கள தேசியவாத விமர்சகர்கள் ஆங்கிலக் கல்வியை விலக்கு முறையாக அதிகளவில் தாக்கினர். செய்தித்தாள்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் நாட்டை ஆண்ட 'அந்நிய மொழி' குறித்து புலம் பின. ஆங்கிலக் கல்வி தார்மீக மதிப்புகளையும் கலாசார பெருமையையும் அரித்ததாக பௌத்த சீர்திருத்தவாதிகள் வாதிட்டனர்.***

இது ஒரு முரண்பாடான விளைவை உருவாக்கியது. ஆங்கி லக் கல்வி இனக் கோடுகளைக் கடந்து சென்றாலும், ஒவ் வொரு சமூகத்திலும் உயரடுக்கினருக்கும் மக்களுக்கும் இடை யிலான சமூக தூரத்தையும் ஆழப்படுத்தியது. ஆங்கிலம் பேசும் மற்றும் அதன் கதையாடலில் ஆட்சி செய்த சிங்கள உயரடுக்கினரை சிங்கள விவசாயிகள் வெறுத்தனர். கால னித்துவ அலுவலகங்களை ஆக்கிரமித்த தமிழ் நிபுணர் களை தமிழ் தொழிலாளர்கள் வெறுத்தனர். ஆங்கிலம் பகி ரப்பட்ட அடையாளத்தின் அடையாளமாக அல்ல, மாறாக வர்க்கப் பிரிவின் அடையாளமாக மாறியது.

இலங்கையில், ஆங்கிலம் பேசும் உயரடுக்கு, சுதேச வாழ்க் கையிலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு கலாசார உலகில் அதி களவில் வசித்து வந்தது. அவர்களின் சமூக கிளப்புகள், செய்தித்தாள்கள், இலக்கிய குறிப்புகள், அரசியல் கதையா டல்கள் ஆங்கிலத்தில் இயங்கின. அவர்கள் பெரும்பாலும் தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறினாலும், அவர்களின் கதையாடல் பெரும்பான்மையினருடன் அரிதா கவே எதிரொலித்தது. இந்த துண்டிப்பு பின்னர் அரசியல் ரீதியாக ஆபத்தானது என்பதை நிரூபித்தது.

ஆங்கிலக் கல்வி வெறும் குறியீட்டு ரீதியாக மட்டுமல்ல. அது வாழ்க்கை வாய்ப்புகளை கட்டமைத்தது. காலனித்துவ வேலைவாய்ப்பு வாய்ப்புகள் - சிவில் சர்வீஸ் பதவிகள், சட் டப் பயிற்சி, கற்பித்தல் பதவிகள், மருத்துவத் தொழில்கள் - ஆங்கிலப் புலமையுடன் பெருமளவில் பிணைக்கப்பட்டுள் ளன. தாய்மொழிக் கல்வி வாழ்வாதாரம் அல்லது மதப் பாத் திரங்களுக்கு அப்பால் சில பாதைகளை வழங்கியது.

இது சமூகவியலாளர்கள் நற்சான்றிதழ் மூடல் (Credential closure) என்று அழைப்பதை உருவாக்கியது. வாய்ப்பிற் கான அணுகல் சிறுபான்மையினர் மட்டுமே பெறக்கூடிய தகு திகளால் கட்டுப்படுத்தப்பட்டது. காலப்போக்கில், இந்த மூடல் வெறுப்பாக மாறியது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், சிங்கள தேசியவாத விமர்சகர்கள் ஆங்கிலக் கல்வியை விலக்கு முறையாக அதி களவில் தாக்கினர். செய்தித்தாள்கள் மற்றும் துண்டுப் பிரசு ரங்கள் நாட்டை ஆண்ட 'அந்நிய மொழி' குறித்து புலம்பின. ஆங்கிலக் கல்வி தார்மீக மதிப்புகளையும் கலாசார பெரு மையையும் அரித்ததாக பௌத்த சீர்திருத்தவாதிகள் வாதிட் டனர். ஆயினும்கூட, ஆரம்பகால விமர்சகர்கள் ஆரம்பத்தில் கல்வியை நிராகரிக்கவில்லை. அவர்கள் ஆங்கிலத்தின் ஏக போகத்தையே நிராகரித்தனர். அவர்கள் அணுகல், கண்ணி யம் மற்றும் அங்கீகாரத்தைக் கோரினர். எல்லாவற்றிலும் பிர தானமாக அது மற்றவர்களை விலக்குவதில்லை என்ற உறு திமொழியை எதிர்பார்த்தனர். இவை குறித்து பிற்கால முன் னேற்றங்களின் சோகம் இந்த விமர்சனம் எவ்வாறு தீர்க்கப் பட்டது என்பதில் உள்ளது.

இலங்கையின் அனுபவம் ஒரு பரந்த காலனித்துவ முறைக்கு பொருந்துகிறது. இந்தியாவில், ஆங்கிலக் கல்வி மேற்கத் தியமயமாக்கப்பட்ட உயரடுக்கொன்றை உருவாக்கியது, அவர்கள் தேசியவாத இயக்கங்களை வழிநடத்தினர், ஆனால் கிராமப்புற மக்களுடன் இணைவதற்குப் போராடினர். நைஜீரி யாவில், ஆங்கிலக் கல்வி இன்றும் நீடிக்கும் கூர்மையான பிராந்திய மற்றும் வர்க்கப் பிளவுகளை உருவாக்கியது. அல் ஜீரியாவில், பிரெஞ்சுக் கல்வி உள்ளூர் மக்களை மிகவும் ஆழமாக அந்நியப்படுத்தியது, சுதந்திரத்திற்குப் பிந்தைய அரபுமயமாக்கல் ஒரு மைய அரசியல் திட்டமாக மாறியது.

இந்த உதாரணங்கள் ஒரு பொதுவான சிக்கலை விளக்கு கின்றன. காலனித்துவக் கல்வி ஒரு பொதுவான சங்கடத்தை உருவாக்குகிறது, அவர்கள் பேரரசை அறிவுபூர்வமாக சவால் செய்ய முடியும், ஆனால் காலனித்துவத்திற்குப் பிந்தைய சமூகங்களை சிரமத்துடன் மட்டுமே நிர்வகிக்க முடியும். அவர் களுக்கு அதிகாரம் அளிக்கும் மொழியும் அவர்களை தனி மைப்படுத்துகிறது. இலங்கையின் சிங்களம் மட்டும் சட் டத்தை, இந்தக் கல்வி ஒழுங்கிற்கு எதிரான தாமதமான கிளர்ச்சியாக ஓரளவு படிக்கலாம். ஆனால் காலனித்துவ மரபு ரிமைக்கு எதிரான பல கிளர்ச்சிகளைப் போலவே, இது கட்ட மைப்பை விட அறிகுறியை குறிவைத்தது.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், ஆங்கிலக் கல்வி யால் உருவாக்கப்பட்ட வெறுப்பு அரசியல் ரீதியாக சக்தி வாய்ந்ததாக மாறியது. உயர்குடி அதிகாரத்திற்கும் மக்கள் உணர்வுக்கும் இடையிலான இடைவெளியை சர்வசன வாக் குரிமை அம்பலப்படுத்தியது. சுதேசிய மொழி பேசும் வாக் காளர்கள் ஆங்கிலம் பேசும் தலைவர்களை அந்நியர்களா கவும், திமிர்பிடித்தவர்களாகவும், பதிலளிக்காதவர்களாகவும் அதிகளவில் பார்த்தனர்.

வர்க்க சமத்துவமின்மை, கிராமப்புற புறக்கணிப்பு, கலாசார அவமானம் போன்ற ஆழமான குறைகளை வெளிப்படுத்தும் சுருக்கெழுத்தாக மொழி மாறியது. ஆங்கிலக் கல்வி இவை அனைத்தையும் ஒரே நேரத்தில் அடையாளப்படுத்தியது. இந்த எதிர்விளைவு 1956-இல் திடீரென எழவில்லை. இது பல தசாப்த கால கல்வி அடுக்குப்படுத்தலின் உச்சக்கட்டமாகும். பெரும்பான்மையினரின் மொழியுடன் பள்ளிப்படிப்பு, நிர்வா கம் மற்றும் வேலைவாய்ப்பை இணைப்பதன் மூலம் கல்விப் படிநிலையை அகற்றுவதாக சிங்களம் மட்டும் உறுதியளித்தது. ஆனால் அவ்வாறு செய்வதன் மூலம், அது தலைகீழாக மாற்ற முயன்ற காலனித்துவ தர்க்கத்தை அது மீண்டும் உரு வாக்கியது. அதிகாரம் ஒரு மொழியின் வழியாகப் பாய வேண் டும் என்ற நம்பிக்கையை அது அகற்றாமல், ஒரு மொழியி யல் உயரடுக்கை மற்றொரு மொழியினால் மாற்றியது.

காலனித்துவக் கல்வி முறை இலங்கைக்கு மூன்று நீடித்த மரபுகளை விட்டுச் சென்றது:

- மொழியைத் தெரிந்திருத்தல் தகுதியாகக் கொள்ளப்பட் டது. இத்தகுதி ஆட்சேர்ப்பு, தலைமைத்துவம், அதிகா ரத்தை பெறுதல் ஆகியற்றுக்கு உதவும் என்ற நம்பிக்கை.
- ஆங்கிலம் பேசும் உயரடுக்கினருக்கும் உள்ளூர் மக்களுக் கும் இடையிலான ஆழமான வர்க்கப் பிளவு. இது உயரடுக் கினர் மீதான வெறுப்பையும் தேசியவாதத்தையும் தூண்டு கிறது.
- மொழியியல் படிநிலைக்கான ஒரு நிறுவன வார்ப்புரு கட்ட மைக்கப்பட்டது. பின்னர் காலனித்துவத்திற்குப் பிந்தைய தேசியவாதத்தால் இது மீண்டும் உருவாக்கப்பட்டது.

இலங்கையின் இம்மொழியியல் மற்றும் சமூகவியல் மரபைப் புரிந்துகொள்வது மிக அவசியமானது. முறையான வரலாற் றுப் பின்னணி இன்றிப் பார்க்கும்போது, 'சிங்களம் மட்டும்' கொள்கையானது வெறும் பகுத்தறிவற்ற பேரினவாதமாக மட்டுமே தோற்றமளிக்கும். ஆனால், காலனித்துவக் கல்வி முறையினாலும், 'நற்சான்றிதழ் மூடல்' (Credential Closure) முறையினாலும் கட்டமைக்கப்பட்ட உண்மையான சமூக அநீதி களைக் கருத்தில் கொள்ளும்போது, இச்சட்டம் ஒரு முற்றி லும் மாறுபட்ட பரிமாணத்தைப் பெறுகிறது. அதாவது, தசாப் தங்களாகத் தொடர்ந்த அந்தப் புறக்கணிப்பையும் அநீதி யையும் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட, ஆனால் முற்றிலும் துன் பகரமான ஒரு தவறான முயற்சியாகவே 'சிங்களம் மட்டும்' கொள்கை வெளிப்படுகிறது. பழைய காலனித்துவ மேலா திக்கக் கட்டமைப்பைத் தகர்ப்பதற்குப் பதிலாக, அதே அதி காரப் படிநிலையைப் பயன்படுத்தி மற்றொரு மொழியைத் திணித்தமையானது, ஓர் அநீதியை இன்னோர் அநீதியால் ஈடுசெய்ய முயன்ற வரலாற்றுத் துயரமாகும். இத்தகைய நுட்ப மான புரிதல், இலங்கையின் இன-மொழிப் பிணக்குகளின் ஆழமான வேர்களைத் துல்லியமாக அடையாளம் காண நமக்கு உதவுகிறது.

காலனித்துவ அரசு தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவ தற்கு, மொழியை எவ்விதம் ஒரு நுட்பமான ஒழுங்கமைப்புக் கருவியாகப் பயன்படுத்தியது? வெறும் நிர்வாக நடைமுறைக ளுக்கு அப்பாற்பட்டு, 'மொழியியல் ரீதியாக அதிகாரத்தை வரிசைப்படுத்துதல்' என்ற இந்தச் செயல்முறை, ஒரு தேசத் தின் சமூகக் கட்டமைப்பில் ஆழமான பிளவுகளை வரைய றுக்கும் ஒரு 'விரிசலாக' எவ்வாறு உருவெடுத்தது என்பதை அடுத்த பகுதியில் பார்க்கலாம்.



meenilankco@thaiveedu.com



நீர் அரசியல்

சர்வதேச நதிப்படுகைகளின் அதிகாரச் சமநிலை

அருள்கார்க்கி

அறிமுகம்:

'அடுத்த உலகப்போர் ஒன்று நடக்குமானால் அது தண்ணீ ருக்காகத்தான் இருக்கும்' - ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்செயலாளர் புட்ரோஸ் புட்ரோஸ் காலி (Boutros Boutros-Ghali) பல தசாப்தங்களுக்கு முன்னர் விடுத்த இந்த எச்சரிக்கை, இன்று வெறும் சொல்லாட் சியாக அன்றி, உலக நாடுகளின் தேசிய பாதுகாப்பு மூலோபாயங்களில் (National Security Strategies) ஒரு நிதர்சனமான அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது.

புவிப்பரப்பில் 71% நீரால் சூழப்பட்டிருந்தாலும், 'நீலக் கோள்' என்று அழைக்கப்படும் நமது பூமியில் மனிதப் பயன்பாட்டிற்கு உகந்த நன்னீர் என்பது வெறும் 2.5% மட்டுமே. இதிலும் பெரும் பகுதி பனிப்பாறைகளாகவும், துருவப் பகுதிகளிலும் உறைந்துள்ள நிலையில், மனித நாகரிகத்தின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் திரவ நிலையில் உள்ள நன்னீரின் அளவு ஒரு சதவீதத்திற்கும் குறைவானதாகும். இந்தப் பின்னணியில், 'நீர் அரசியல்' (Hydro-Politics) என்பது வெறும் வளப் பகிர்வு (Resource Sharing) பற்றிய தொழினுட்ப விவாதம் மட்டுமல்ல; அது 21-ஆம் நூற்றாண்டின் இறையாண்மை, அதிகாரம், பொருளாதார மேலாதிக்கம் மற்றும் இருத்தலியல் (Existentialism) குறித்த ஒரு சிக்கலான அரசியல் சதுரங்க மாகும்.

சர்வதேச ஆய்வுகளின்படி, 'நீர் அரசியல்' என்பது மூன்று பிரதான முனைகளில் விரிவடைகிறது:

- ✓ புவிசார் அரசியல் போட்டி (Geopolitical Competition): எல்லை தாண்டிய நதிகள் (Transboundary Rivers) பாயும் பகுதிகளில், மேலோட்ட நாடுகளுக்கும் (Upper Riparian States) கீழ்நிலை நாடுகளுக்கும் (Lower Riparian States) இடையே நிலவும் அதிகாரப் போட்டி.
- ✓ பொருளாதார ஆயுதமாக்கல் (Economic Weaponization): நீரை ஒரு பண்டமாக (Commodity) மாற்றி, அதன் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அண்டை நாடுகளின் விவசாயம் மற்றும் தொழில்துறையை முடக்கும் உத்தி.
- ✓ காலநிலை பாதுகாப்பு (Climate Security): புவி வெப்ப மடைதலால் வற்றாத நதிகள் பருவகால நதிகளாக மாறும் சூழலில், எஞ்சியிருக்கும் வளங்களைக் கைப் பற்ற முன்னெடுக்கப்படும் தற்காப்புப் போர்முறை.

இருபதாம் நூற்றாண்டில் கச்சா எண்ணெய் (Black Gold) உலக அரசியலைத் தீர்மானித்ததைப் போலவே, இருபத்தி யோராம்நூற்றாண்டில் 'நீலத் தங்கம்' (Blue Gold) என அழைக்கப்படும் நன்னீர், நாடுகளுக்கு இடையிலான உற வுகளையும் மோதல்களையும் தீர்மானிக்கப் போகிறது. இது வெறும் சூழலியல் சார்ந்த பிரச்சினை அல்ல; மாறாக, இது தேசிய பாதுகாப்பின் ஒரு அங்கமாக 'நீர் பாதுகாப்பு' (Water Security) எனும் புதிய கோட்பாட்டை உருவாக்கி யுள்ளது. நன்னீர் பற்றாக்குறை என்பது இனி ஒரு இயற்கை நிகழ்வு மட்டுமல்ல, அது திட்டமிட்டு உருவாக்கப்படும் அல்லது அரசியல் காரணங்களுக்காகக் கையாளப்படும் ஒரு 'மூலோபாயத் தட்டுப்பாடு' (Strategic Scarcity) ஆகும். இத்தகைய பின்புலத்தில், நீர் அரசியல் எவ்வாறு உலகளாவிய மோதல்களின் மையப்புள்ளியாக மாறுகிறது என்பதையும், சர்வதேச சட்டங்கள் இதனை எதிர்கொள் வதில் உள்ள பலவீனங்களையும் ஆராய்வது சமகா லத்தின் மிக முக்கியமான தேவையாகும்.

நீர் அரசியலும் அதிகாரச் சமநிலையும்:

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சர்வதேச உறவுகள் ஆகிய இரண்டையும் இணைக்கும் பாலமாக தாமஸ் ஹோமர்-டிக்சனின் 'வளப் பற்றாக்குறை கோட்பாடு' (Environmental Scarcity Theory) அமைகிறது. இக்கோட் பாட்டின் படி, நன்னீர் போன்ற அத்தியாவசிய வளங்களின் பற்றாக்குறை என்பது வெறுமனே ஒரு இயற்கை நிகழ்வு மட் டுமல்ல; அது சமூகக்கட்டமைப்பிற்குள் பாரிய அழுத் தங்களை உருவாக்கி, வன்முறையாக வெடிக்கக் கூடிய

ஒரு காரணியாகும். ஹோமர்-டிக்சன் இதனை மூன்று பரிமாணங்களில் விளக்குகிறார்: முதலாவதாக, 'வழங்கல் பற்றாக்குறை' (Supply-induced scarcity), இது காலநிலை மாற்றம் அல்லது சூழல் சீர்கேட்டினால் நீர் இருப்பு குறைவதைக் குறிக்கிறது. இரண்டாவதாக, 'தேவைப் பற்றாக்குறை' (Demand-induced scarcity), இது அதீத மக்கள்தொகை பெருக்கம் மற்றும் நுகர்வுப் பண்பாட்டினால் நீர் தேவை அதிகரிப்பதைக் காட்டுகிறது. மூன்றாவதாக, 'கட்டமைப்புப் பற்றாக்குறை' (Structural scarcity), இது இருக்கும் நீர் வளங்கள் அதிகார வர்க்கத்தினாலோ செல்வாக்கு மிக்க நாடுகளாலோ சமமற்ற முறையில் பகிரப்படுவதைக் குறிக்கிறது. இந்த மூன்று கூறுகளும் ஒரு புள்ளியில் இணையும்போது, அது ஒரு தேசத்திற்குள் உள்நாட்டுக் கலகங்களையும், அண்டை நாடுகளுடன் வளங்களைக்கைப்பற்றுவதற்கான திறந்தநிலை மோதல்களையும் தோற்றுவிக்கின்றது. குறிப்பாக, நன்னீர் என்பது ஒரு நாட்டின் உயிர்வாழ்வோடு நேரடித்தொடர்புடையது என்பதால், அதன் பற்றாக்குறை தேசியப் பாதுகாப்பிற்கு விடுக்கப்படும் நேரடி அறைகூவலாகவே இக்கோட்பாட்டில் பார்க்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, சர்வதேச நதிநீர்மோதல்களைப் புரிந்துகொள்வதற்கு மார்க் செய்டூன் மற்றும் ஜேரோன் வார்னர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட 'நீர் மேலாதிக்கக் கோட்பாடு' (Hydro-Hegemony) மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இக்கோட்பாடு, எல்லை தாண்டிய நதிப் பாயும் பகுதிகளில் (Transboundary basins) நிலவும் அதிகாரப்போட்டியைப் பகுப்பாய்வு செய்கிறது. ஒரு நதி பல நாடுகளின் ஊடாகப்பாயும்போது, அந்த நதிப்பாதையில் உள்ள மிகவும் வலிமையான நாடு-அது புவியியல் ரீதியாக மேலோட்டநாடாக (Upper Riparian) இருக்கலாம் அல்லது பொருளாதார ரீதியாக வலுவான கீழ்நிலை நாடாக (Lower Riparian) இருக்கலாம்-எவ்வாறு தனது அதிகாரத்தை நிலைநாட்டுகிறது என்பதை இது விளக்குகிறது. நீர் மேலாதிக்கம் என்பது வெறுமனே இராணுவ பலத்தை மட்டும் சார்ந்தது அல்ல; அது 'கடினமான அதிகாரம்' (Hard power) மற்றும் 'மென்மையான அதிகாரம்' (Soft power) ஆகியவற்றின் கலவையாகும். வலிமையான நாடுகள் தங்களுக்குச் சாதகமான ஒப்பந்தங்களை உருவாக்குவதன் மூலமும், நீர் மேலாண்மை தொடர்பான தொழினுட்பத் தரவுகளைத் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலமும் அண்டை நாடுகளைத் தங்களுக்கு அடிபணிய வைக்கின்றன. இந்த மேலாதிக்கப் போக்கு, சர்வதேச சட்டங்களின் வலிமையைக் குறைத்து, ஒரு பிராந்தியத்தில் நீரை ஒரு 'அரசியல் நாணயமாக' (Political currency) மாற்றிவிடுகிறது. இதன் விளைவாக, பலவீனமான நாடுகள் தங்களின் அடிப்படைத் தேவைகளுக்காகக்கூட இந்த மேலாதிக்கச் சக்திகளின் முடிவுகளில் தங்கியிருக்க வேண்டிய ஒரு 'அடிமைத்தனமான சூழல்' உருவாகிறது.

இந்த இரண்டு கோட்பாடுகளும் ஒன்றிணையும்போது, நீர் அரசியல் என்பது வெறும் வள மேலாண்மை பற்றிய விவாதம் அல்ல என்பது தெளிவாகிறது. வளப்பற்றாக்குறை ஒரு நாட்டை விரக்திக்குத் தள்ளும்போது, அந்த நாடு தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த மேலாதிக்கப் போக்கைக் கையாள்கிறது. இது பிராந்திய அமைதியைக் குலைப்பதுடன், நன்னீரை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தும் (Weaponization of water) ஆபத்தான மனநிலையை உருவாக்குகிறது. குறிப்பாக, ஆசிய மற்றும் ஆபிரிக்கநதிப்படுகைகளில் இந்த இரண்டு கோட்பாடுகளும் எவ்வாறு நடைமுறையில் செயற்படுகின்றன என்பதை ஆராய்வது, எதிர்காலப் போர்களுக்கான சாத்தியக்கூறுகளை முன்கூட்டியே கண்டறிய உதவும். நீர் என்பது ஒரு பொதுச் சொத்து என்ற நிலையிலிருந்து மாறி, அது ஒரு 'மூலோபாய ஆயுதம்' என்ற நிலையை எட்டியிருப்பதே இக்கோட்பாடுகள் நமக்கு உணர்த்தும் கசப்பான உண்மையாகும்.

நைல்நதிப் பிரச்சினை: ஆபிரிக்காவின் நீர் யுத்தமும் புவிசார் அரசியல் நெருக்கடியும்:

உலகிலேயே மிக நீண்ட நதியான நைல் நதி, ஆபிரிக்காவின் பத்து நாடுகளுக்கு ஊடாகப் பாய்ந்தாலும், அதன் நீர் பகிர்வு தொடர்பான மோதல் பிரதானமாக எகிப்து, எத்தியோப்பியா மற்றும் சூடான் ஆகிய நாடுகளுக்கிடையிலேயே நிலவுகிறது. வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே 'நைல்நதியின் நன்கொடை' என அழைக்கப்படும் எகிப்து, நைல் நதி நீரின் மீது தனக்கு மட்டுமே முழுமையான இறையாண்மை இருப்பதாகக் கருதி வருகிறது. 1929 மற்றும் 1959-ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், நைல் நதி நீரின் பெரும்பகுதியை எகிப்திற்கும் சூடானுக்கும் வழங்கின. இருப்பினும், நைல்நதியின் 85% நீர் எத்தியோப்பியாவின் உயர் நிலங்களிலிருந்து உருவாகும் 'நீல நைல்' (Blue Nile) மூலமே கிடைக்கிறது. வரலாற்று ரீதியாக இத்தகைய 'கீழ்நிலை மேலாதிக்கத்தை' (Lower Riparian Hegemony) அனுபவித்துவந்த எகிப்திற்கு, எத்தியோப்பியா தனது எல்லையில் கட்டத்தொடங்கிய 'மறுமலர்ச்சி அணை' (Grand Ethiopian Renaissance Dam - GERD) ஒரு பாரிய இருத்தலியல் அச்சுறுத்தலாக (Existential Threat) உருவெடுத்துள்ளது.

எத்தியோப்பியாவைப் பொறுத்தவரை, இந்த அணை என்பது வெறும் கட்டுமானத் திட்டம் மட்டுமல்ல; அது அந்த நாட்டின் வறுமையை ஒழிப்பதற்கும், ஆபிரிக்காவின் மின்சார மையமாக மாறுவதற்குமான ஒரு 'தேசிய கௌரவ' அடையாளமாகும். ஏறத்தாழ $4.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த அணை, ஆபிரிக்காவின் மிகப்பெரிய நீர்மின் நிலையமாகத் திகழ்கிறது. எத்தியோப்பியா தனது 'மேல்நிலை நாடு' (Upper Riparian) என்ற புவியியல் சாதகத்தைப் பயன்படுத்தி, நைல் நதி





நீரைத் தேக்கிவைப்பதன் மூலம் தனது பொருளாதாரத்தை மேம்படுத்த முயல்கிறது. ஆனால், எகிப்தின் அச்சம் என்னவெனில், இந்த அணையின் நீர்த்தேக்கத்தை நிரப்பும் காலப்பகுதியில் நைல்நதியின் நீர்வரத்து கணிசமாகக் குறையும் என்பதாகும். இது எகிப்தின் விவசாயத்துறையை முற்றிலுமாக முடக்குவதுடன், அந்நாட்டின் பத்து கோடி மக்களின் குடிநீர் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கும். எகிப்து இதனைத் தனது 'தேசிய பாதுகாப்பு' தொடர்பான விவகாரமாகக் கருதுவதால், தேவைப்பட்டால் இராணுவ நடவடிக்கைகளையும் எடுக்கத் தயங்கப்போவதில்லை என்ற எச்சரிக்கையை மீண்டும் மீண்டும் விடுத்து வருகிறது.

சூடானைப் பொறுத்தவரை, இந்த விவகாரத்தில் அது ஒரு இக்கட்டான நிலையில் உள்ளது. ஒருபுறம், இந்த அணை தனது நாட்டின் வெள்ளக் கட்டுப்பாட்டிற்கும், மலிவான மின்சாரத்திற்கும் உதவும் என்று சூடான் நம்பினாலும், மறுபுறம் அணையின் பாதுகாப்பு மற்றும் நீர் விநியோகம் தொடர்பான உறுதியான ஒப்பந்தங்கள் இல்லாதது அதன் கவலையை அதிகரித்துள்ளது. இந்த முத்தரப்பு மோதலில் சர்வதேச நாணயநிதியம், உலக வங்கி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் மத்தியஸ்தம் செய்ய முயன்றபோதிலும், 'நீர் மேலாதிக்கம்' தொடர்பான விட்டுக்கொடுப்பற்ற போக்கினால் இணக்கப்பாடுகள் எட்டப்படாமல் உள்ளன. நைல் நதிப் பிரச்சினை என்பது வெறும் தொழினுட்பரீதியான நீர் மேலாண்மைப் பிரச்சினை அல்ல; அது ஆபிரிக்கக் கண்டத்தில் யார் 'பிராந்திய வல்லரசு' (Regional Power) என்பதைத் தீர்மானிக்கும் ஒரு அதிகாரப் போட்டியாகும்.

இறுதியாக, நைல் நதி விவகாரம் சர்வதேச நீர்ச்சட்டங்களின் பலவீனத்தையே உலகிற்குப் பறைசாற்றுகிறது. ஒரு நாடு தனது எல்லைக்குள் இருக்கும் வளத்தைப் பயன்படுத்துவதற்கு முழு உரிமை உண்டா அல்லது அண்டை நாடுகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்காத வகையில் செயற்பட வேண்டுமா என்ற தார்மீக மற்றும் சட்ட ரீதியான விவாதம் இங்கே எழுகிறது. காலநிலை மாற்றத்தினால் மழை வீழ்ச்சி சீரற்றுப்போகும் இன்றைய சூழலில், நைல் நதி நீர் குறைவடைவது இப்பிராந்தியத்தில் ஒரு பாரிய 'நீர் யுத்தத்திற்கு' (Water War) வழிவகுக்கலாம். தண்ணீரின் பின்னாலுள்ள இந்த அதிகார அரசியல் ஆபிரிக்காவின் எதிர்கால அமைதியைத் தீர்மானிக்கப் போகும் மிக முக்கியமான காரணியாகும்.

தெற்காசியாவின் புவிசார் நீர் அரசியல்: சிந்து மற்றும் பிரம்மபுத்திரா நதி மோதல்கள்:

தெற்காசியாவின் நீர் அரசியல் என்பது வெறும் வளப் பகிர்வு பற்றிய விவாதம் மட்டுமல்ல; அது அணு ஆயுத பலம் கொண்ட நாடுகளுக்கிடையிலான இறையாண்மை மற்றும் பிராந்திய மேலாதிக்கம் குறித்த ஒரு தீர்க்கமான மோதலாகும். இப்பிராந்தியத்தின் நீர் பாதுகாப்பு என்பது பிரதானமாக சிந்து (Indus) மற்றும் பிரம்மபுத்திரா (Brahmaputra) ஆகிய இரண்டு பாரிய நதிப்படுகைகளைச் சுற்றியே சுழல்கிறது. இதில் 'சிந்து நதி நீர் ஒப்பந்தம்' (Indus Waters Treaty - 1960), உலக வங்கி மத்தியஸ்தம் செய்த உலகிலேயே மிகவும் வெற்றிகரமான நதிநீர் ஒப்பந்தமாகக் கருதப்பட்டாலும், அண்மைக்காலமாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான எல்லைப் பதற்றங்கள் இந்த ஒப்பந்தத்தின் நிலைத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளன. பாகிஸ்தானைப் பொறுத்தவரை, சிந்து நதி என்பது அதன் விவசாயம் மற்றும் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். ஆனால், இந்தியா தனது எல்லையில் முன்னெடுக்கும் 'கிஷன் கங்கா' (Kishanganga) மற்றும் 'ரட்டில்' (Ratle) போன்ற நீர்மின் திட்டங்கள், பாகிஸ்தானுக்குச் செல்லும் நதிநீரின் அளவைக் குறைக்கும் என அந்நாடு அஞ்சுகிறது. இங்கு நீரை ஒரு 'தந்திரோபாய ஆயுதமாக' (Strategic Weapon) பயன்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளது, இது இரு நாடுகளுக்கிடையிலான 'நம்பிக்கையீன இடைவெளியை' (Trust Deficit) மேலும் விரிவுபடுத்துகிறது.

மறுபுறம், பிரம்மபுத்திரா நதிப்படுகையில் நிலவும் சூழல் இன்னும் சிக்கலான ஒரு 'நீர் மேலாதிக்க' (Hydro-hegemony) சவாலை இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு விடுத்துள்ளது. திபெத்பீடபூமியில் 'யார்லுங் சாங்போ' (YarlungTsangpo) என அழைக்கப்படும் பிரம்மபுத்திரா நதியின் மேல்பகுதியில் சீனா கட்டி வரும் தொடர்ச்சியான அணைகள் மற்றும் நீரைத் திசைதிருப்பும் திட்டங்கள், தெற்காசியாவின் நீர் சமநிலையை முற்றிலுமாகச் சிதைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளன. சீனா ஒரு 'மேல்நிலை நாடு' (Upper Riparian State) என்ற தனது புவியியல் பலத்தைப் பயன்படுத்தி, நதி நீரின் ஓட்டம் மற்றும் பருவமழை தரவுகளைப் பகிர்ந்து கொள்ள மறுப்பது ஒரு 'தகவல் போராக' (Information Warfare) உருவெடுத்துள்ளது. குறிப்பாக, போர்க்காலங்களிலோ இயற்கை அனர்த்தங்களின்போதோ சீனா தன்னிச்சையாக அணைகளைத் திறந்தால் அல்லது நீரைத்தடுத்தால், அது வடகிழக்கு இந்தியா மற்றும் பங்களாதேஷில் பாரிய வெள்ளப்பெருக்கையோ கடும் வறட்சியையோ ஏற்படுத்தக்கூடும். இது ஒரு வகை 'டிஜிட்டல் நீர் இராஜதந்திரம்' (Digital Water Diplomacy) மூலம் சீனா பிராந்திய நாடுகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முயல்வதைக் காட்டுகிறது.

பங்களாதேஷைப் பொறுத்தவரை, அது சிந்து மற்றும் பிரம்மபுத்திரா ஆகிய இரண்டின் தாக்கத்தையும் எதிர்கொள்ளும் ஒரு 'கடைநிலை நாடு' (Lowest Riparian) ஆகும். இந்தியாவின் 'நதிகள் இணைப்புத் திட்டம்' (River Linking Project) போன்ற உள்நாட்டு நீர் முகாமைத்துவ முயற்சிகள், பங்களாதேஷிற்கு வரும் நன்னீரின் அளவைக் குறைத்து, அந்நாட்டின் டெல்டா பகுதிகளில் கடல் நீர் உட்



புகுவதற்கும் (Salinity Intrusion), சூழலியல் அழிவிற்கும் வழிவகுக்கும் என அந்நாடு கவலை கொள்கிறது. தெற்காசியாவில் நீர் என்பது நில எல்லைகளைப் போலவே உணர்ச்சிகரமான ஒரு விடயமாக மாறியுள்ளது. இங்கு ஒவ்வொரு அணையும் ஒரு இராணுவத் தளம் போலவே பார்க்கப்படுகிறது. நாடுகளுக்கிடையிலான அரசியல் பகைமை, நதிநீர் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் பெரும் தடையாக இருப்பதோடு, சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தைப் புவிசார் அரசியல் சதுரங்கத்தில் ஒரு பணயமாக மாற்றியுள்ளது.

இறுதியாக, தெற்காசியாவின் நீர் அரசியல் என்பது ஒரு 'பூச்சிய-கூட்டு விளையாட்டாக' (Zero-sum game) மாறிவருவது இப்பிராந்தியத்தின் அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலாகும். காலநிலை மாற்றத்தினால் இமயமலைப் பனிப்பாறைகள் வேகமாக உருகி வரும் நிலையில், நதிநீர் வரத்து எதிர்காலத்தில் மேலும் சீரற்றதாக மாறும். இத்தகைய சூழலில், நாடுகளுக்கிடையிலான கூட்டு முகாமைத்துவம் (Joint Management) மற்றும் வெளிப்படையான தகவல் பரிமாற்றம் இல்லாதது, தண்ணீருக்கான ஒரு பாரியமோதலுக்கு வித்திடலாம். 'சிந்து' மற்றும் 'பிரம்மபுத்திரா' ஆகிய நதிகள் பிராந்தியத்தை இணைக்கும் பாலங்களாக அமையாமல், நாடுகளைப் பிரிக்கும் ஆழமான அகழிகளாகவே இன்றும் நீடிக்கின்றன. தெற்காசியாவின் எதிர்காலப் பாதுகாப்பு என்பது இராணுவ பலத்தில் மட்டுமல்ல, நதிநீரை எவ்வாறு நீதியாகப் பகிர்ந்து கொள்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது.

நன்னீர் தட்டுப்பாடும் காலநிலை மாற்றமும்:

காலநிலை மாற்றம் என்பது 2-ஆம் நூற்றாண்டின் நீர் அரசியலை முன்னெப்போதும் இல்லாத வகையில் சிக்கலாக்கியுள்ளதுடன், உலகளாவிய நீர் முகாமைத்துவக் கட்டமைப்புகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. புவி வெப்பமடைதலின் நேரடி விளைவாக இமயமலை, ஆண்டிஸ் மற்றும் ஆல்ப்ஸ் போன்ற பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகி வருவது, குறுகிய காலத்தில் நதிப்படுகைகளில் பாரிய வெள்ளப்பெருக்குகளையும் நிலச்சரிவுகளையும் ஏற்படுத்தினாலும், நீண்டகால நோக்கில் இது நதிகளின் நீரோட்டத்தை நிரந்தரமாகச் சிதைக்கும் பேராபத்தைக் கொண்டுள்ளது. வற்றாத நதிகள் யாவும் பனிப்பாறைகளின் வரத்து குறைவினால் வெறும் பருவகால நதிகளாக (Seasonal Rivers) மாறும் அபாயம் உள்ளது. இத்தகைய சூழலில், நன்னீர் என்பது ஒரு 'புதுப்பிக்கத்தக்க வளம்' என்ற நிலையிலிருந்து மாறி, மீளப் பெறமுடியாத ஒரு 'அரிதான வளம்' என்ற நிலையை அடைகிறது. இது நாடுகளுக்கிடையிலான 'வளப்போட்டியை' (Resource Competition) தீவிரப்படுத்துவதுடன், ஏற்கனவே உள்ள நீர் பகிர்வு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் பெரும் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது; ஏனெனில், வரலாற்றுரீதியான தரவுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட பழைய ஒப்பந்தங்கள், இன்றைய சீரற்ற காலநிலை மாற்றங்களுக்குத் தீர்வுகாணப் போதுமானவையாக இல்லை.

குறிப்பாக, நதிகள் கடலோடு கலக்கும் கழிமுகப் (Delta) பகுதிகளில் காலநிலை மாற்றம் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. கடல் மட்ட உயர்வு காரணமாக, நன்னீர் நிலைகளிலும் ஆற்றுப்படுகைகளிலும் உப்பு நீர் உட்புகுவதற்கு (Salinity Intrusion) ஏதுவாகிறது. இது கழிமுகப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களைச் சிதைப்பதுடன், அங்கு வாழும் மக்களின் குடிநீர் பாதுகாப்பையும் கேள்விக்குள்ளாக்குகிறது. இதனை வெறும் ஒரு இயற்கை அனர்த்தமாகப் பார்க்காமல், 'தட்ப வெப்பப் பாதுகாப்பு' (Climate Security) எனும் தேசிய பாதுகாப்பு ரீதியான கண்ணோட்டத்தில் அணுக வேண்டியது இன்று அவசியமானதாகும். காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் நீர் தட்டுப்பாடு என்பது சமூகங்களுக்குள் பாரிய இடப்பெயர்வுகளையும், 'கால நிலை அகதிகளையும்' உருவாக்குவதன் மூலம் பிராந்திய ஸ்திரத்தன்மையைக் குலைக்கிறது.

மேலும், ஒரு நாடு தனது எதிர்கால நீர் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேலோட்டப் பகுதிகளில் அணைகளைக் கட்டி நீரைத் தற்காப்பு நோக்கில் முகாமை செய்யும்போது, அது நதியின் கீழ்நிலைப் பகுதிகளில் உள்ள கழிமுகங்களின் வாழ்வாதாரத்தை நேரடியாகப் பாதிக்கிறது. இத்தகைய 'தேசியவாத நீர் முகாமைத்துவம்' என்பது சர்வதேச இராஜதந்திர உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தி, தண்ணீரை ஒரு போர் ஆயுதமாக மாற்றும் நிலைக்குத் தள்ளுகிறது. இனிவரும் காலங்களில் நீர் முகாமை என்பது வெறும் தொழினுட்பக் கட்டமைப்புகளுடன் மட்டும் நின்றுவிடாமல், அது ஒரு 'நீல இராஜதந்திரமாக' மாறவேண்டியது கட்டாயமாகும். சர்வதேச நதிநீர் முகாமைத்துவ அமைப்புகள், காலநிலை மாற்றத்தின் சவால்களை உள்வாங்கிய புதிய பகிர்வு முறைகளை உருவாக்கத் தவறுமானால், எதிர்காலப் போர்கள் நன்னீரின் ஒவ்வொரு துளிக்காகவும் நடப்பதைத் தவிர்க்க முடியாது.

நீர் சந்தைப்படுத்தல் மற்றும் பெருநிறுவன ஆதிக்கம்:

நவீன நீர் அரசியல் என்பது வெறும் நாடுகளுக்கு இடையிலான எல்லைப் பிணக்குகளுடன் மட்டும் சுருங்கி விடவில்லை; அது பொதுமக்களுக்கும் பன்னாட்டு பெருநிறுவனங்களுக்கும் இடையிலான ஒரு தீவிரமான சமூகப் போராட்டமாகவும் உருவெடுத்துள்ளது. இருபத்தியோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியம் போன்ற அமைப்புகளின் கொள்கை வழிகாட்டுதல்களின் கீழ், நன்னீர் ஒரு 'அடிப்படை உரிமை' என்பதிலிருந்து மாற்றப்பட்டு, அது ஒரு 'பொருளாதாரப் பண்டமாக' (Commodity) மறுவரையறை செய்யப்பட்டது. இத்தகைய நவதாராளவாத

அணுகுமுறை, ஏழை மற்றும் வளரும் நாடுகளின் நீர் பாதுகாப்பை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. நீரைச் சந்தைப்படுத்துதல் என்பது, நீர் விநியோகத்தை அரசாங்கங்களின் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றி, லாப நோக்கம் கொண்ட தனியார் பெருநிறுவனங்களின் கைகளில் ஒப்படைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது சமூகத்தின் விளிம்புநிலை மக்கள் தங்களின் அடிப்படைத் தேவையான நீரைப் பெறுவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கி, அவர்களை 'நீர் வறுமைக்குள்' (Water Poverty) தள்ளுகிறது.

இதற்கு வரலாற்று ரீதியான மிகச்சிறந்த உதாரணமாகப் பொலிவியாவின் 'கொச்சபாம்பா நீர் போர்' கருதப்படுகிறது. 1999-ஆம் ஆண்டில் கொச்சபாம்பா நகரின் நீர் விநியோகக் கட்டமைப்பு தனியார் மயமாக்கப்பட்டபோது, குடிநீரின் விலை மக்களின் வருமானத்தில் பெரும் பகுதியைச் செலவிடும் அளவிற்கு உயர்த்தப்பட்டது. மழைநீரைச் சேகரிப்பதற்குக் கூட கட்டணம் விதிக்கப்பட்ட அந்த அநீதியான சூழலில், மக்கள் வீதியில் இறங்கிப் போராடித் தனியார் பெருநிறுவனத்தை வெளியேற்றினர். இச்சம்பவம் நீரை வணிகமாக்கும் முயற்சிக்கு எதிரான உலகளாவிய எதிர்ப்புக் குறியீடாக மாறியது. எனினும், இன்றும் பல ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் 'நீலத் தங்கம்' எனப்படும் நன்னீர் வளங்களைச் சுற்றியுள்ள நிலங்களை ஆக்கிரமிப்பதும், நிலத்தடி நீரைச் சுரண்டி போத்தல்களில் அடைத்து விற்பனை செய்யும் 'போத்தல் நீர் அரசியல்' மூலமும் பெரு நிறுவனங்கள் தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றன. இது உள்ளூர் நீர் ஆதாரங்களை வற்றச்செய்வதுடன், அந்தப் பிரதேச மக்களின் பாரம்பரிய நீர் உரிமைகளைப் பறிப்பதாகவும் அமைகிறது.

இறுதியாக, பெருநிறுவனங்களின் இந்த ஆதிக்கமானது 'நீர் மேலாதிக்கம்' எனும் கருத்தாக்கத்தைப் புவிசார் அரசியலிலிருந்து தனிமனித வாழ்வாதாரத் தளத்திற்குத் தள்ளியுள்ளது. நன்னீர் ஆதாரங்களை முகாமை செய்யும் அதிகாரத்தை தனியார் பெருநிறுவனங்கள் பெறும்போது, அந்நாட்டின் குடிமக்களின் உயிர்வாழ்வு அந்த நிறுவனங்களின் லாபக்கணக்குகளில் தங்கியிருக்க வேண்டிய சூழல் உருவாகிறது. இது ஜனநாயக விழுமியங்களுக்குப் புறம்பானது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நீர் தட்டுப்பாடு அதிகரிக்கும்போது இது பெரும் உள்நாட்டு சமூகக் கலவரங்களுக்கு வழிவகுக்கும். எனவே, நீர் அரசியலை ஆய்வு செய்யும் போது, நாடுகளுக்கிடையிலான எல்லை தாண்டிய மோதல்களைப் போலவே, பெருநிறுவனங்கள் முன்னெடுக்கும் இந்த 'நிசப்தமான சுரண்டலையும்' அடையாளம் காண்பது அவசியமாகும். நீரை ஒரு வணிகப்பொருளாகப் பார்ப்பதை விடுத்து, அதனை ஒரு 'பொதுச் சொத்தாக' அங்கீகரிப்பதன் மூலமே சமூக நீதியையும் நீர் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடியும்.

எதிர்காலப் பார்வை:

நன்னீர் பற்றாக்குறை என்பது இனி வெறும் ஒரு சூழலியல் சார்ந்த சவால் மட்டுமல்ல, அது உலகளாவிய அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் விடப்பட்டுள்ள நேரடி அறைகூவலாகும் என்பதை இந்த ஆய்வு தெளிவுபடுத்துகிறது. கடந்த காலங்களில் நில எல்லைகளுக்காகவும், கச்சா எண்ணெய் வளங்களுக்காகவும் போரிட்டுக்கொண்ட நாடுகள், இனிவரும் காலங்களில் தங்களின் தேசிய இருப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக நன்னீர் ஆதாரங்களை மையமாக வைத்தே தங்களின் வெளியுறவுக் கொள்கைகளை வகுக்கப் போகின்றன. காலநிலை மாற்றத்தினால் பனிப்பாறைகள் உருகுவதும், பருவமழை சீரற்றுப் போவதும் நதிப்பகிர்வு தொடர்பான மோதல்களை இன்னும் தீவிரமாக்கும் ஒரு 'இயக்கச் சக்தியாக' (Catalyst) மாறியுள்ளது. இத்தகைய சூழலில், நீர் மேலாதிக்கம் செலுத்தும் நாடுகள் உலக அரசியலைத் தீர்மானிக்கும் புதிய 'வளவல்லரசுகளாக' உருவெடுக்கும் அதேவேளை, கீழ்நிலை நாடுகள் தங்களின் அடிப்படைத் தேவைகளுக்காகத் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களையும், புவிசார் அரசியல் அழுத்தங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

எதிர்காலப் பார்வையில், நீர் அரசியலை வெறும் வளப்பகிர்வாகப் பார்க்காமல், ஒரு 'சர்வதேச அமைதி மூலோபாயமாக' (Hydro-Diplomacy) அணுக வேண்டியது அவசியமாகும். 1997-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் நதிநீர் சாசனம் போன்ற சர்வதேச சட்டங்கள் இன்னும் வலுப்படுத்தப்பட வேண்டும். நதிகளைத் தனிப்பட்ட நாடுகளின் சொத்தாகவோ தேசிய எல்லைகளாகவோ பார்க்காமல், பிராந்தியங்களை இணைக்கும் 'பொதுவான வாழ்வாதாரப் பிணைப்புகளாக' அங்கீகரிக்கும் ஒரு புதிய புவிசார் அரசியல் பார்வை உலகிற்குத் தேவைப்படுகிறது. குறிப்பாக, பெருநிறுவனங்களின் ஆதிக்கத்திலிருந்து நீரை ஒரு 'பொதுச் சொத்தாக' மீட்டெடுப்பதும், விளிம்புநிலை மக்களின் நீர் உரிமையை உறுதிப்படுத்துவதும் எதிர்காலச் சமூக நீதிக்கு மிக அவசியமானதாகும். தொழினுட்ப வளர்ச்சியின் மூலம் கடல் நீரை நன்னீராக்குதல் மற்றும் கழிவுநீரை மறுசுழற்சி செய்தல் போன்ற கண்டுபிடிப்புகள் ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்டாலும், நாடுகளுக்கிடையிலான அரசியல் வெளிப்படைத்தன்மையும், கூட்டு முகாமைத்துவமுமே (Joint Management) நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும்.

இறுதியாக, தண்ணீருக்கான போர்கள் என்பது தவிர்க்க முடியாத ஒன்றல்ல, அது மனிதகுலத்தின் கூட்டுத் தெரிவுகளில் தங்கியுள்ளது. ஒரு நாட்டின் நீர் பாதுகாப்பு என்பது அண்டை நாட்டின் நீர் பாதுகாப்பைச் சிதைப்பதன் மூலம் கிடைக்காது, மாறாக இரு நாடுகளும் இணைந்து வளங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலமே சாத்தியமாகும். நன்னீரின் ஒவ்வொரு துளியும் ஒரு நாட்டின் இறையாண்மையைத் தீர்மானிக்கும் 'அரசியல் நாணயமாக' மாறப்போகும் இந்த நூற்றாண்டு, மனித நாகரிகத்திற்கு ஒரு பெரும் பாடத்தைக் கற்பிக்கவுள்ளது: இயற்கையின் வளங்களை ஆயுதமாக மாற்றினால் அதன் இறுதிப் பாதிப்பு மனித இனத்திற்கே சேரும். எனவே, ஒரு புதிய 'நீல இராஜதந்திரத்தின்' மூலம் மட்டுமே நாம் எதிர்வரும் காலங்களில் தண்ணீருக்கான பேரழிவுகளைத் தவிர்த்து, உலகை ஒரு பாதுகாப்பான இடமாக அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க முடியும்.



Arulkarki@thaiveedu.com

வெள்ளை மேலாதிக்க அடையாளத்தின் மற்றொரு பிரதி

One Battle After Another

- ரதன்

ஒரு திரைப்படம் என்பது அதன் கருப்பொருளைப் போலவே, அது வெளியாகும் காலமும் மிக முக்கியமானது. டொனால்ட் ட்ரம்ப்பின் இரண்டாம் வருகைக்குப் பிறகு, ICE (Immigration and Customs Enforcement) எனப்படும் அமெரிக்கக் குடிவரவு மற்றும் சுங்க அமலாக்கப் பிரிவின் அதிரடி நடவடிக்கைகள் உலகெங்கும் உள்ள ஊடகங்களில் முக்கியச் செய்திகளாகின. அலபாமா, கலிபோர்னியா, ஜோர்ஜியா உள்ளிட்ட பல மாகாணங்களில் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்தன. சட்டவிரோதமாகத் தங்கியிருந்ததாகக் கூறி, குடிவரவாளர்கள் பலரை இந்தப் படைப்பிரிவினர் பலவந்தமாகக் கைது செய்த நிகழ்வுகள் பெரும் விவாதங்களை உருவாக்கின. ஐஸ்க்கு எதிரான போராட்டங்களில் சிலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். நிறவாதக் கருத்துகள் குடியரசுக் கட்சி சார்பு ஊடகங்களால் பிரசுரிக்கப்பட்டன, பிரச்சாரப்படுத்தப்பட்டன. குறிப்பாக மினசோட்டா மாநிலத்தில் சோமாலியக் குடிவரவாளர்களுக்கு எதிரான பிரச்சாரங்களை குறிப்பிடலாம். ஐஸ்ஸின் நடவடிக்கைகள் இன்றும் தொடர்ந்தவண்ணமுள்ளன. ஐஸ்ஸின் நடவடிக்கைகளைப் போன்ற காட்சிகளை உள்ளடக்கிய படம் 2025-இல் வெளிவந்துள்ளது. இப்படம் 2026 மார்ச் மாதம் நடைபெற்ற ஒஸ்கார் விருது விழாவில் சிறந்த படத்துக்கான விருதையும் பெற்றுள்ளது. இப்படம் One Battle After Another.

தோமஸ் பின்சனின் (Thomas Pynchon) வைன்லான்ட் (Vineland) நாவலை மையமாகவைத்து வெளிவந்த திரைப்படமே One Battle After Another. இப்படத்தின் நெறியாள்கை போல் தோமஸ் அன்டர்சன். இவர் கலிபோர்னியா மாநிலத்தில் பிறந்து வளர்ந்தவர். கலிபோர்னியா மாநிலத்தின் தென் எல்லையில் மெக்சிக்கோ அமைந்துள்ளது. இக்களமானது இவருக்கு மிகவும் நெருக்கமானது.

தாமஸ் பின்சனின் 'வைன்லான்ட்', 1960-களின் வசீகரமான எதிர்-கலாசார இயக்கத்தின் வீழ்ச்சியையும், 1980-களின் ரீகன் சகாப்தத்தில் உருவான வலதுசாரி பழைமைவாதத்தின் எழுச்சியையும் மிக நுட்பமாகச் சீர்தூக்கிப் பார்க்கிறது. ஹிப்பி புரட்சியின் தோல்வியையும், அதன் விளைவாக உருவான சமூக மனச்சிதைவையும் ஒரு முன்னாள் தம்பதியினரின் கடந்தகால நினைவுகள் வாயிலாகக் கூர்மையான முரண்-விமர்சனமாகப் பின்சன் முன்வைக்கிறார். அரசியல் கனவுகள் சிதைந்துபோகும் சூழலில், அர்த்தமுள்ள வாழ்வைத் தேடி அலையும் மனித மனம் இறுதியில் குடும்ப உறவுகளின் பிணைப்பையே தன் அடைக்கலமாகக் கண்டடைகிறது. இதில் வரும் பாத்திரங்கள் வெறும் கற்பனை மாந்தர்களாக அன்றி, வரலாற்றின் கனத்த மௌனங்களைச் சுமந்தபடி ஆசிரியரின் சமூக-அரசியல் விமர்சனங்களோடு இணைந்து ஒரு பெரும் சித்திரமாக விரிவடைகின்றன.

இத்திரைப்படம் நாவலின் முழுமையான தழுவல் அல்ல. ஒரு தளர்வான தழுவலாகவேயுள்ளது. அன்டர்சன் திரைக்கதையமைத்து இயக்கியுள்ளார். அன்டர்சன் நாவலின் மையக் கருவை மட்டுமே கருத்திற் கொண்டு, இன்றைய சமகால அரசியல் வெளிப்பாடாக படத்தின் திரைக்கதையை அமைத்துள்ளார்.

பிரெஞ்ச் 75' (French 75) என்பது மெக்சிகோ-அமெரிக்க எல்லையில் அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளவர்களை மீட்பதற்காகப் போராடும் ஒரு இடதுசாரி தீவிரவாத அமைப்பாகும். இவ்வமைப்பு இனவெறி மற்றும் சமூக வன்முறைகளுக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. இதன் உறுப்பினர்களான பட் (Bud) மற்றும் பேர்பிடியா (Perpedia) ஆகிய இருவரும் காதலர்கள். சான் டியாகோ நகருக்கு அருகிலுள்ள ஓடே மேசா (Otay Mesa) தடுப்பு





முகாம் மீது இப்படை ஒரு தாக்குதலை நடத்துகிறது. அங்கே காவல் அதிகாரியாகப் பணியாற்றிய ஸ்டீவன் லொக்ஜோவை (Steven Loxjo), பேர்பிடியா பாலியல் ரீதியாக அவமானப் படுத்துகிறார். காலப்போக்கில், பேர்பிடியா மற்றும் பட் இணை யருக்கு வில்லா பெர்கிசன் (Willa Bergson) என்ற பெண் குழந்தை பிறக்கிறது. மற்றொரு தாக்குதலின் போது பேர் பிடியா அதிகாரிகளிடம் சிக்கிக்கொள்கிறார். அங்கு மீண்டும் அதிகாரியாக வரும் ஸ்டீவன் லொக்ஜோ, 'பிரெஞ்ச் 75' அமைப்பின் ரகசியங்களைக் காட்டிக்கொடுத்தால் பேர்பி டியாவை விடுதலை செய்வதாகக் கூறுகிறார். ஆனால், எதற் கும் பணியாத பேர்பிடியா அங்கிருந்து தப்பி மெக்சிகோ விற்குச் செல்கிறார். இதற்கிடையில், தன் மகள் வில்லாவைப் பாதுகாப்பாக வளர்ப்பதற்காக பட் தனது அடையாளத்தை மாற்றிக்கொண்டு, வேறு பெயரில் கலிபோர்னியாவிற்குத் திரும்புகிறார்.

15 வருடங்கள் கடந்துவிடுகின்றன. இப்பொழுது ஸ்ரீவன் லொக்ஜோ கேர்ணலாகப் பதவியுயர்வு பெற்று விடுகின்றார். ஆனாலும் அவர் பிரெஞ்ச் 75 குழுவை மறக்கவில்லை. அவர்களை உன்னிப்பாக நோட்டமிடுகின்றார். அவர்களைக் கைது செய்யவேண்டும் என்ற வெறி அவருக்குள்ளது. இப் பொழுது அவர் சமூகத்தின் உயர் வகுப்பினருக்கான ஒரு இரகசிய செயற்பாட்டுக் குழுவில் இணைவதற்கு விண்ணப் பிக்கின்றார். Christmas Adventures Club என்பதே அக்குழு வாகும். இக்குழுவில் இணைவதற்கு பல கட்டுப்பாடுகள் உள்ளன. குறிப்பாக வேறு நிறத்தவரைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. அவர்களுடன் கொண்ட உறவினால் பிள் ளைகள் பிறந்திருக்கக்கூடாது. அமெரிக்க அரசுக்கு எதிரா கச் செயற்படக்கூடாது. சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டி ருக்கக்கூடாது போன்ற நிபந்தனைகள் உண்டு. அக்குழு வின் உயர்மட்டக்குழுவினர் ஸ்ரீவன் லொக்ஜோவை நேர் காணல் செய்தபோது அவர் தான் தூய்மையானவர் என்று குறிப்பிடுகின்றார். எனினும், அக்குழுவிற்கு கிடைத்த சில தகவல்களை ஆய்வு செய்ய மற்றொரு அதிகாரியை நிய மிக்கின்றனர். வில்லா பெர்குசன், ஸ்ரீபன் லொக்ஜோவிற்கும் பேர்பிடியாவிற்கும் பிறந்த பிள்ளை என்ற விபரத்தை ஆய்வு செய்யவே அந்த அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீவன் லொக்ஜோவிற்கு இருக்கும் ஒரே வழி, வில்லா பெர்குசனை ரகசியமாகக் கண்டுபிடித்து, அவள் தன் மகள் அல்ல என்பதை நிரூபிக்க ஒரு போலி டி.என்.ஏ (Fake DNA) சான்றி தழைத் தயாரிப்பது அல்லது அந்த உண்மையை அறிந்தி ருக்கும் வில்லாவையே நிரந்தரமாக அழிப்பது மட்டுமே.

படத்தின் இறுதியில் ஸ்ரீவன் லொக்ஜே தன்னை பேர்பிடியா பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகக் கூறுகின்றார். தான் போதை மருந்தின் தாக்கத்திலிருந்தபோது தன்னைக் கட்டா யப்படுத்தி உறவு கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். தனக்கு நினைவு திரும்பியபோது, தான் இதனை உணர்ந்து கொண்ட தாகவும் சொல்கின்றார். Christmas Adventures Club குழு உறுப்பினர் ஏன் இவ்வாறு செய்தார்கள் எனக் கேட்டபோது, தன்னிடம் உள்ள மூளைத் திறனும், பவரையும் (Power) பெறுவதற்காகவே அவ்வாறு செய்தார்கள். அப்போது பிறக் கும் குழந்தை மூளைத்திறன் அதிகமாகவும், வீரியமுள்ள பிள்ளையாகவும் பிறக்கும் என்பதே அவரது கருத்து. இதனை இயக்குநர் ஒரு விமர்சன நோக்குடன் கூறவில்லை. மாறாக இது ஒரு நிறவாதக் கருத்தாகவே வெளிப்படுகின்றது. Christmas Adventures Club சம்பந்தப்பட்ட காட்சிகளிலுமே ஒரு நிறவாதம் வெளிப்படுகின்றது.

பிரென்ச் 75 குழுவை பிம்பப்படுத்திய முறை அக்குழு ஒரு சட்டவிரோதக் கும்பலாகவே காட்டப்படுகின்றது. இவ்வமைப் பிடம் தூய அரசியல் கருத்துகள் இல்லை எனக் கூறப்படு கின்றது. இதன் உறுப்பினர்கள் நல்லொழுக்கமற்றவர்கள், தங்கள் நலன் மட்டும் கொண்டவர்களாகவே காட்சிப்படுத் தப்பட்டுள்ளது.

பாதிக்கப்படும் மக்களுக்கான ஒரு அமைப்பாக வெளிப் படுத்தப்படவில்லை. Christmas Adventures Club (கிறிஸ் துமஸ் சாகசக் குழு) போன்று பல பழைமைவாதக் கருத்து களைக் கொண்ட குழுக்கள் அமெரிக்காவில் இயங்குகின்றன. இவற்றை ஒரு தூய்மையான அமைப்பாக காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. இந்த இரு குழுக்களுக்குமான ஒரு முரண்நிலை படத்தின் அடித்தளத்தையே கேள்விக்குட்படுத்துகின்றது. இது பொருள் இல்லாமல் ஒரு பிரதிபலிப்பு போல் வெளிப் படுகின்றது.

மூல நாவல் நிக்சன் காலத்தை வெளிப்படுத்துகின்றது. படத் தில் காலம் குறிப்பிடப்படவில்லை. எனினும், இது 1980-களாக இருக்கலாம். நாவலில் தீவிரவாதம் எவ்வாறு தோல்வி யடைந்தது என்பது கூறப்பட்டுள்ளது. படத்தில் அது வெளிப் படவில்லை. ஸ்ரீவன் லொக்ஜே பாத்திர அமைப்பு அவரை ஒரு மேலாதிக்க சக்தியின் ஒரு மூளைத்திறன் அதிகம் கொண்ட ஒரு கதாநாயகராகவே பிம்பப்படுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் ஆபிரிக்க அமெரிக்கரான பேர்பிடியா பெவர்லி ஹில்ஸ் ஒரு வன்முறைகள் கொண்ட பெண்ணாகவும், வெள்ளை இனத்தவரின் மூளைத்திறன் மற்றும் சக்தி கொண்ட







பிள்ளை பிறக்கவேண்டும் என்பதற்காக லொக்ஜேவுடன் கட்டாய பாலியல் உறவு அதுவும் அவர் போதை மருந்தின் தாக்கத்திலிருக்கும் போது கொண்டதாக காட்டப்படுகின்றது. இந்த எண்ணக் கருத்தே மிக மோசமான நிறவாத மாகும். ஒரு பாத்திரம் என்பது ஒரு காலப்பகுதி மற்றும் ஒரு கருத்தின் கலவையாகவிருக்கும். ஆனால், இங்கு படத்தின் முக்கிய பாத்திரங்களான ஸ்ரீவன் லொக்ஜே, பேர்பிடியா பெவர்லி ஹில்ஸ் ஆகியவற்றின் மையம் நிற வாதத்தால் மறைக்கப் படுகின்றது. அதே போன்று கிறிஸ்தவ சகோதரிகளைப் பிம்பப்படுத்திய முறையும் வன்முறையானது. குறிப்பாக இவர்கள் ஆபிரிக்க அமெரிக்கர்கள் என்பதனால்தான் இவ்வாறான வெளிப்பாடா என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாமல் உள்ளது.

கறுப்பினப் பெண் ஒரு வெள்ளை அதுவும் பாதுகாப்பு அதி காரியுடன் கட்டாய பாலியல் உறவு கொண்ட சம்பவங்கள் எதுவும் அமெரிக்காவில் நடைபெற்றதாக தெரியவில்லை. ஆனால், இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பாலஸ்தீனிய ஆண்கள் தங்களது விந்துகளை சிறைக்கு வெளியே சிறை அதிகாரிகளுக்கு தெரியாமல் பாதுகாப்பாக அனுப்புவார்க ள். தங்களது சந்ததிகள் பெருக வேண்டும் என்பதே அவர்க ளது நோக்கம். இதனையறிந்த இஸ்ரேலிய சிறையதிகாரிகள் பாலஸ்தீனியக் கைதிகளின் விந்துகளுக்குப் பதிலாக இஸ் ரேலிய சிறை அதிகாரிகளின் விந்துகளை மாற்றி அனுப்பிய சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இப்படம் வெளியாகிய காலத்தில் 2025 செப்ரெம்பர் 25-ஆம் நாள் கியூபாவில் அசட்டா செக்கூர் (Assata Shakur) இறந்தார். இவர் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்து பின்னர் Black Liberation Army (BLA) உறுப்பினராக செயற்பட்ட வர். இவ்வமைப்பு ஒரு மார்க்சிய அமைப்பாகும். இவர் இரு பொலிசாரைச் சுட்டதாக கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றுள்ளார். தான் அவர் களைச் சுட்டுக்கொல்லவில்லை எனத் தொடர்ந்து கூறிவந்தார். 1979-ஆம் ஆண்டு சிறையிலிருந்து தப்பி கியூபாவில் தஞ்சம் கோரியிருந்தார். பிடல் காஸ்ரோ அவருக்கு அரசியல் தஞ்சமளித்தார். பேர்பிடியா பெவர்லி ஹில்ஸ் பாத்திரம் இவரை நினைவுபடுத்துகின்றது.

படத்தில் ஸ்ரீவன் லொக்ஜேவாக சீன் பென் மிகச் சிறப்பாக நடித்துள்ளார். பட் ஆக நடித்த லியோனார்டோ டிகாப்ரியோவும் (Leonardo DiCaprio) இயல் பாக நடித்துள்ளார். இவர்களது இருவரது நட்சத்திர அந்தஸ்தும் இப்படத் துக்கு வணிகரீதியான வெற்றியைப் பெற்றுக்கொடுத்துள்ளது. மெக்சிக்கோ எல்லை என்பது புலம் பெயர் கனடிய தமிழர்களுக்கு நெருக்கமானது. ஆயி னும் கொடுமையான அனுபவங்கள் பலருக்கு உள்ளன.

ஆண்டர்சன் தனது காட்சிக் கோணங்களின் வாயிலாக அதிகாரத்தின் பாசி சத் தன்மையை நுணுக்கமாகக் கையாண்டுள்ளார். ஒருபுறம் வன்முறையை ஒரு தற்கொலைக்கு நிகரான அல்லது நம்பிக்கையற்ற செயற்பாடாக அவர் சித்திரிக்க முயன்றாலும், மறுபுறம் 'கிறிஸ்மஸ் அட்வென்சர்ஸ் கிளப்' போன்ற அமைப்புகளின் செயற்பாடுகள் டொனால்ட் ட்ரம்ப்பின் தீவிர வலதுசாரி அரசியல் போக்குகளைத் தழுவி நிற்கின்றன. வெள்ளை இனத்தவர்களை அறிவுஜீவிகளாகவும் அமைப்பின் பாதுகாவலர்களாகவும் முன்னிறுத்தும் அதே வேளையில், கறுப்பின மக்களைக் கட்டுக்கடங்காத வன்முறை சக்தி களாக உருவகப்படுத்துவது படத்தின் அரசியலைச் சர்ச்சைக்குள்ளாக்கு கிறது. எதிர்-கலாசாரத்தை வெளிப்படுத்த முயன்ற ஒரு படைப்பு, இறுதியில் அதிகாரத்தின் பழைய படிநிலைகளை (Hierarchies) மீண்டும் உறுதிப்படுத் தும் ஒரு கருவியாகவே மாறியுள்ளது. வன்முறை மீதான இயக்குநரின் விமர் சனம், பாதிக்கப்பட்டவர்களின் போராட்டத்தை அங்கீகரிப்பதைக் காட்டிலும், மேலாதிக்கம் கொண்டவர்களின் அதிகாரத்தைப் பாதுகாக்கும் ஒரு தர்க்க மாகவே (Logic) இங்கு எஞ்சியிருக்கிறது.

rathan@thaiveedu.com



இந்தியத் துணைக்கண்டத்தில் மேற்கத்திய மருத்துவத்தின் நுழைவு

■ பால. சிவகடாட்சம்

tg.theeban@gmail.com

ஐரோப்பியர் வருகையின்போது சுதேச மருத்துவத்தின் நிலை:

மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலான அன்னிய ஆட்சிக் காலத்தில், அரசாங்க ஆதரவு இல்லாத நிலையில் இந்தியா மற்றும் இலங்கையின் சுதேச மருத்துவம் தனது முந்தைய வலிமையை மெதுவாக இழந்தது. இதன் விளைவாக, அடிப்படை நோய்ச் சிகிச்சைகளையேனும் வழங்கக்கூடிய பொது மருத்துவமனை எதுவும் இல்லாத சூழல் உருவானது.

இந்தியாவில், பொது மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும் சில குறிப்பிட்ட சாதி மற்றும் குடும்பங்களுக்குள் மட்டுமே பரம்பரை உரிமையாகப் பரிமாறப்பட்டன. இந்த மூடப்பட்ட அமைப்பு மருத்துவத்துறையின் பரவலான வளர்ச்சியைத் தடுத்த முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம். பல தலைமுறைகளாக மருத்துவத்தில் ஈடுபட்ட குடும்பங்களின் வாரிசுகள், தங்கள் அறிவைப் பெரும்பாலும் வாய் மொழியாகவும் நேரடி அனுபவத்தின் மூலமாகவும் பெற்றனர். இதனால் பண்டைய மருத்துவ நூல்களை முறையாகப் படித்து ஆராய வேண்டிய அவசியம் குறைந்தது.

ஏராளமான கையெழுத்து மருத்துவ ஏடுகள் படிப்படியாகப் புறக்கணிக்கப்பட்டன. அவற்றைப் பாதுகாத்துக் கொண்டிருந்த குடும்பங்கள் அவற்றை வெளியோருடன் பகிர மறுத்தன. வாரிசு இல்லாத வைத்தியக் குடும்பங்களின் ஏடுகள் வீடுகளுக்குள்ளேயே அழிந்துபோயின. இதனால் நூற்றாண்டுகளாகச் சேமிக்கப்பட்டிருந்த மருத்துவ அறிவும் அறுவைச் சிகிச்சை நுட்பங்களும் கூட்டு நினைவிலிருந்து மறைந்து போனது.

மேற்கே வேகமாய் வளர்ந்த மருத்துவம்:

இலங்கையில் போர்த்துகீசியரும் பின்னர் டச்சுகாரரும் ஆட்சி செய்த காலகட்டத்தில், ஐரோப்பிய மற்றும் தெற்காசிய மருத்துவக் கோட்பாடுகளுக்கு இடையில் ஆரம்பத்தில் பெரிய வேறுபாடு காணப்படவில்லை. ஆனால் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் ஐரோப்பாவில் மருத்துவ அறிவியல் வேகமாக முன்னேறியது.

ஆண்ட்ரியாஸ் வெசாலியஸ் (1514 - 1564) மனித உடற் கூறியல் ஆய்வுகளை முற்றிலும் புதிய திசையில் கொண்டு சென்றார். அவரின் பணிகள் உடற்கூறியல் பற்றிய பழைய நம்பிக்கைகளை மாற்றின. வில்லியம் ஹார்வி (1578 - 1657) 1628-ஆம் ஆண்டு வெளியிட்ட இரத்த ஓட்டம் குறித்த ஆய்வு நூல் மேற்கத்திய மருத்துவ வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது. இந்தக் கண்டுபிடிப்புகள் அறுவைச் சிகிச்சைத் துறையில் நம்பிக்கையையும் துல்லியத்தையும் அதிகரித்தன.





தரங்கம்பாடி
டான்ஸ்போர்க் கோட்டை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறுவைச்சிகிச்சைத் துறையில் புரட்சியை ஏற்படுத்திய புதுமையான கண்டுபிடிப்புகள் அலை போலக் காணப்பட்டன. அறுவைச்சிகிச்சையின் போது மயக்க மருந்து கொடுக்கும் நடைமுறை 1850-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1870-ஆம் ஆண்டு கிருமி நீக்கம் செய்யும் நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தக் காலகட்டத்தில், ஐரோப்பிய மருத்துவர்கள் அறுவைச்சிகிச்சை முறைகளில் அதிக ஆர்வம் காட்டினர். இது பல்கலைக்கழகங்களில் அறுவைச்சிகிச்சையை முறையாகக் கற்பிப்பதற்கும், அறுவைச்சிகிச்சை நிபுணரின் சமூக மற்றும் தொழில்முறை நிலையைப் படிப்படியாக உயர்த்துவதற்கும் வழிவகுத்தது.

சாதியமும் மூடநம்பிக்கைகளும்:

சமகால இந்தியா மற்றும் இலங்கையின் மருத்துவ நிலப்பரப்பு ஓர் இருண்ட படத்தை வரைகிறது. அறுவைச்சிகிச்சை நடைமுறைகளுக்கும் எலும்பு முறிவைச் சீர்செய்வதற்கும் நோயாளிகள் முடிதிருத்தும் தொழிலாளர்களையும் மட்பாண்டம் செய்வோர்களையுமே நம்பியிருந்தனர்.

டென்மார்க்கின் காலனித்துவ ஆட்சியின் போது, தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டில் அமைந்துள்ள தரங்கம்பாடியில், 1790-இல் நடத்தப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், வடுகர், நாவிதர், வெள்ளாளர் என மருத்துவப்பணி புரிந்தோர் வகைப்படுத்தப்பட்டனர். இது சுதேச மருத்துவத்தில் புரையோடிப்போன சாதியத்தின் தாக்கத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்குப் பயணம் செய்த பிரெஞ்சு நாட்டவரான டேவர்னியர், தாம் சென்ற இடங்களில் பொது மருத்துவமனைகள் இல்லாத நிலையை பதிவு செய்துள்ளார். மழை காலத்தைத் தொடர்ந்து, கிராமப் பெண்கள் தங்கள் குடும்பத்தவர் எதிர்கொள்ளும் பொதுவான உடல் நலக் கோளாறுகளுக்கு மருந்தாக அறியப்பட்ட மூலிகைகளைச் சேகரிக்க வயல்களுக்குச் செல்வார்கள். காலை நேரங்களில் நகர மையங்களில் ஒரு சில மூலிகை மருத்துவர்கள் அமர்ந்துகொண்டு, அந்த வழியாகப் போவோர் வருவோரை அழைத்து அவர்களது நோய்கள் பற்றிக் கேட்டறிந்து, தேவையான மருந்துகளைக் கொடுத்தும் காயங்களுக்குக் கட்டுப்போட்டும் சிகிச்சை அளிப்பர். எனினும் முறையான மருத்துவமனை எதனையும் தன்னால் காணமுடியவில்லை என்று டேவர்னியர் எழுதிவைத்துள்ளார்.

மருத்துவ அறிவியலின் தேக்கம்:

இந்தச் சூழலில், இந்தியா மற்றும் இலங்கைக்கு வந்த ஐரோப்பிய மருத்துவர்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், இந்தியர்களுக்கு மருத்துவ அறிவியலில் பரிச்சயம் இல்லை என்பதை ஆவணப்படுத்தினர். அவர்கள் சந்தித்த உள்ளூர் மருத்துவர்கள் பெரும்பாலும் திறமையற்றவர்களாக மனித உடற்கூறியல், உடல் செயல்முறைகள் மற்றும் தொற்றுநோயியல் பற்றிய விரிவான புரிதல் இல்லாதவர்களாக அறியப்பட்டனர். 1775-இல் இந்தியாவிற்கு வந்த பியர் சோனெராட், கொலரா போன்ற தொற்றுநோய்களின் போது உள்ளூர் மருத்துவர்கள் பலரைக் காப்பாற்ற முடியவில்லை என்று பதிவு செய்தார்.

1786-ஆம் ஆண்டு டென்மார்க்கின் காலனித்துவ ஆட்சியின் போது, அந்நாட்டைச் சேர்ந்த டி.எல். ஃபோலி என்பவர் தரங்கம்பாடியில் அறுவைச்சிகிச்சை நிபுணராகப் பணிபுரிந்தார். அந்தக் காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் அணுகக்கூடிய மருத்துவ வசதிகள் எவ்வளவு மோசமடைந்து இருந்தன என்பதை அவரது பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. 'இந்தக் காலகட்டத்தில், இந்திய மருத்துவர்களுக்கு மருத்துவ விஞ்ஞானம் குறித்த குறைந்த அறிவு மட்டுமே இருந்தது. உடற்கூறியல் புரிதல் இல்லாத நபர்களால் அறுவைச்சிகிச்சைகள் செய்யப்பட்டன. சாதி அமைப்பு, மத நடைமுறைகள் மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளிலிருந்து விடுபடுவது தமிழர்களால் சமாளிக்க முடியாத ஒரு சவாலாக இருந்தது.

'இறந்த உடலை வெட்டிப் பிரிக்கும் செயல் 'தீட்டுப்படுத்தும்' என்ற நம்பிக்கையால் ஒரு தடைசெய்யப்பட்ட நடைமுறையாக இருந்தது. இதனால் பிரேத பரிசோதனை என்ற கருத்தை நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஒருவரது மரணத்துக்கு விஷம் காரணமாக இருத்தல்கூடும் என்னும் சந்தேகங்கள் எழுந்தாலும், இறந்தவரின் உறவினர்கள் பிரேதப் பரிசோதனை செய்வதற்கு அனுமதிப்பதில்லை. இதன் விளைவாக, திடீர் மரணத்திற்கான காரணத்தைப் புரிந்துகொள்வதில் சிக்கல் ஏற்பட்டது. இது மருத்துவ முன்னேற்றங்களைத் தடுத்தது மட்டுமல்லாமல், கொலையாளிகள் தப்பிக்கவும், அப்பாவிகள்

தண்டனை பெறவும் வழிவகுத்தது' என்று டி.எல். ஃபோலி தனது பதிவுகளில் குறிப்பிட்டுள்ளார்.

'எலும்பு முறிவுகளுக்குக் கட்டுப் போடுவதில் தேர்ச்சி பெற்ற வர்களாக உள்ளூர் மருத்துவர்கள் சிலர் அறியப்பட்டு இருந் தனர். எனினும் இவர்களது கட்டுகள் பெரும்பாலும் ஆபத்தான விளைவுகளுக்கு வழிவகுத்தன. இருபது பேரில் பத்தொன் பது பேர் எலும்பு முறிவுக்குத் தவறான முறையில் பற்றுப் போட்டதால் இரத்த ஓட்டம் தடைபெற்று திசு அழுகலுக்கு ஆளானார்கள். தமிழ் மருத்துவர்களிடம் போவதற்கு முன்னர் நோயாளிகள் தன்னை அணுகியிருந்தால், அவர்களின் குண மடைதலை எளிதாக்கியிருக்க முடியும்' என்கிறார் ஃபோலி.

தொற்றுநோய்கள் மற்றும் உள்நாட்டு மருத்துவத்தின் சவால்:

இந்தியா, இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளில், ஐரோப் பிய காலனித்துவ சக்திகளால் புதிதாக நிறுவப்பட்ட வர்த்த கப் பாதைகளில் பயணித்த போர் வீரர்கள், அடிமைகள் மற்றும் வர்த்தகர்களின் நடமாட்டத்தால் தொற்றுநோய் கள் பரவின. 1817-ஆம் ஆண்டு வங்கதேசத்தில் பரவிய காலரா அடுத்தடுத்த ஆண்டுகளில் இலங்கை மற்றும் பர்மா போன்ற நாடுக ளுக்கும் பரவி கணிசமான உயிர் இழப் புகளை ஏற்படுத்தியது.

காலரா மற்றும் பெரியம்மை போன்ற வேகமாகப் பரவும் தொற்றுநோய் களைக் கட்டுப்படுத்த உள்ளூர் மருத்துவர்களுக்குப் போதுமான அறிவோ பயிற்சியோ இருக்க வில்லை. இந்தத் தொற்றுநோய் கள் தெய்வக் குற்றத்தால் ஏற் படுத்தப்பட்டவை என்ற அவர்க ளின் நம்பிக்கை மாற்று வழிகளைத் தேடுவதைத் தடுத்தது.

1867-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தீப கற்பத்தில் வாந்திபேதி பரவியபோது, பாரம்பரிய மருத்துவர்கள் தலையிடத் தயங் கினர் என்பதையும் இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மேற்கத்திய மருத்துவத்தை நோக்கித் திரும்பியதையும் காலரா கமிஷன் அறிக்கையின் மூலம் அறியமுடிகின்றது.



Dr. John Scudder (1793–1855) and his wife, Harriet Waterbury Scudder (1794–1849)

அலோபதி மருத்துவத்தை அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் காட்டிய மிஷனரிகள்:

இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் அலோபதி மருத்துவத்தைப் பரப்புவதில் கிறிஸ்தவ மிஷனரிகள், குறிப் பாக அமெரிக்காவைச் சேர்ந்த அமைப்புகள், முக்கிய பங்கு வகித்தன. அமெரிக்க மிஷனரிகளுடன் இணைந்து செயற் பட்ட மருத்துவர்கள், கிறிஸ்தவ மிஷனரி நோக்கங்களை முன் னெடுத்துச் செல்லும் அதே நேரத்தில் மக்களுக்குச் சுகாதார சேவைகளையும் வழங்க வேண்டும் என்ற நோக்குடன், பல்வேறு பகுதிகளில் அலோபதி மருத்துவ மருந்தகங் களைத் தொடங்குவதற்கான முன்முயற்சிகளை எடுத்தனர். இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை, தனிநபர் சிகிச்சை களைக் கடந்து பொதுமக்களுக்குச் சேவை செய்யும் பொது சுகாதார மையங்களை நிறுவும் அளவிற்கு விரிந்தது. இவ் வாறு சுகாதார சேவையையும் மதப் பிரசாரத்தையும் இணைத் துச் செயற்படுவது, கிறிஸ்தவத்தைப் பரப்புவது என்ற அவர் களின் பிரதான இலக்குடன் முழுமையாக ஒத்துப் போகும் முயற்சியாக அமைந்தது.

இந்த இயக்கத்தின் முக்கிய நபராகக் கருதப்படும் டாக்டர் ஜான் ஸ்கடர், இலங்கையில் அலோபதி சிகிச்சை மையங் களைத் தொடங்கியவர்களுக்கு முன்னோடியாக விளங்கு கிறார். அமெரிக்க மிஷனரி குழுவால் அனுப்பப்பட்ட டாக்டர் ஸ்கடர், 1820-ஆம் ஆண்டு ஜூன் 18 அன்று இலங்கைக்கு வந்தடைந்தார். அவரது முயற்சிகளின் விளைவாக, யாழ்ப் பாணத் தீபகற்பத்தில் அமைந்துள்ள பண்டத்தரிப்பு கிரா மத்தில் முதல் அலோபதி சிகிச்சை மையம் நிறுவப்பட்டது.

டாக்டர் ஸ்கடரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அமெரிக்க மிஷனுடன் தொடர்புடைய மற்றொரு மருத்துவப் பயிற்சியாளரான டாக்டர் சாமு வேல் ஃபிஸ்க் கிரீன், 1847-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு வந்து பண்டத்தரிப் பில் தனது சொந்த மருந்தகத்தை நிறுவினார். இவ்வாறு மேற்கொள் ளப்பட்ட இந்த முயற்சிகள், தெற்கா சியாவில் சுகாதாரத் துறையில் மேற்கத்திய மருத்துவ நடைமுறை களை ஒருங்கிணைப்பதில் முக்கி யமான கட்டங்களாக அமைந்தன.

மேற்கத்திய மருத்துவத்தின் செயற் றிறனை உள்ளூர் மக்களுக்கு நேரடி யாக உணர்த்துவதற்கு டாக்டர் சாமு வேல் கிரீனுக்கு ஒரு முக்கியமான சந் தர்ப்பம் கிடைத்தது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறந்த அறிஞராகப் பெயர் பெற்றிருந்த முத்துத்தம்பி நீண்ட காலமாகக் கடுமையான குடல் நோயால் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். பலராலும் கைவிடப்பட்டிருந்த நிலையில், டாக்டர் கிரீன் அவருக்குக் குடலில் வெற்றிகரமாக அறுவைச்சிகிச்சையை மேற்கொண்டு குணப் படுத்தியபோது, உள்ளூர் மக்களின் நன் மதிப்பையும் ஆழ்ந்த நம்பிக்கையையும் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வு, மேற்கத்திய மருத்துவ நடைமுறைகள் குறித் துப் பொதுமக்களிடையே நம்பிக்கையை உருவாக்கும் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது.

1848-ஆம் ஆண்டில் அமெரிக்க மிஷனின் ஆதரவுடன் யாழ்ப் பாணத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டது. உள்ளூர் மாணவர்களுக்கு மேற்கத்திய மருத்துவக் கல்வியை வழங்குவதே அதன் முதன்மை நோக்கமாக இருந்தது. அந்தக்



மருத்துவர் கிரீனிடம் பயின்ற முதல் வகுப்பு மாணவர்கள்

கல்லூரியின் தொடக்க வேந்தராக டாக்டர் கிரீன் பொறுப் பேற்றார். இது அப்பிராந்தியத்தின் கல்வி நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாகக் கருதப்படுகிறது. மேலும், இந்த நிறுவனம் தென்கிழக்கு ஆசியாவில் உருவான மேற் கத்திய மருத்துவக் கல்லூரிகளுக்கு முன்னோடியாக அங்கீ கரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மிஷனரிகள் மத்தியில் முடிவெடுக்கும் பொறுப் பில் இருந்த தலைவர்கள் நடத்திய விரிவான ஆலோசனை களின் போது, ஒரு முக்கியமானதும் அவசியமானதுமான தீர்மானம் எடுக்கப்பட்டது. அதாவது, மேற்கத்திய மருத்துவக் கல்வி தமிழ் மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்றும், குறிப்பாகத் தமிழ் பேசும் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அந்தக் கற்பித்தல் அமைய வேண்டும் என்றும் அந்த முடிவு தெளி வாக வலியுறுத்தியது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், டாக்டர் கிரீன் 1864-ஆம் ஆண்டுமுதல் யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி வாயிலாக மருத்துவக் கல்வியைக் கற்பிக்கத் தொடங்கினார். இந்த முயற்சி இந்திய மொழிகளில் அலோபதி மருத்து வம் கற்பித்தலுக்கான தொடக்கப்படி யாக விளங்கியது.

தமிழில் அலோபதி மருத்துவம் பயிலும் மாணவர்களின் கல்வி மேலும் எளிதாக வும் பயனுள்ளதாகவும் அமைய வேண்டும் என்பதற்காக, டாக்டர் கிரீன் ஆங்கில மருத்துவ அறிவியல் தொடர்பான எட்டு நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டார். இந்த முயற் சிக்கு அவரது மாணவர்கள் சிலரும் உறு துணையாக இருந்தனர். இவ்வாறு மொழி பெயர்க்கப்பட்ட நூல்களில் சில யாழ்ப்பாணத்தில் அச்சிடப் பட்டன; மீதமுள்ளவை நாகர்கோவிலில் அமைந்திருந்த லண் டன் மிஷன் பிரஸ்ஸில் அச்சுத் தயாரிப்பைப் பெற்றன.

சாமுவேல் கிரீனின் பதவிக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங் கம் யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றது. இந்தத் தீர்மானம் பல் வேறு பின்விளைவுகளை ஏற்படுத்தியது. குறிப்பாக, யாழ்ப் பாணப் பகுதியில் பாரம்பரிய மருத்துவ நடைமுறைகள் மீண் டும் செல்வாக்குப் பெறத் தொடங்கின. இது கிறிஸ்தவ மிஷனரி யைச் சேர்ந்த சிலருக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது.



Dr. Samuel Fisk Green

மேரி லீட்ச் மற்றும் மார்கரெட் லீட்ச் ஆகிய இரு சகோதரிகள், 1880 முதல் 1887 வரையிலான ஏழு ஆண்டுகள் இலங்கையில் கிறிஸ்தவ மிஷனரி களுக்காகத் தங்கள் பணியை அர்ப்பணித் தனர். அவர்கள் இது பற்றிக் குறிப்பிடு கையில்,'யாழ்ப்பாணத்தில் செயல்படும் பெரும்பாலான பாரம்பரிய மருத்துவர்கள் சைவப் பூசாரிகளுடன் நெருக்கமாக உள்ளனர். தற்போது, யாழ்ப்பாணத்தில் வாழும் பலர் சிகிச்சை மற்றும் பராமரிப் புக்காக சுதேச மருத்துவர்களையே நாடு கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில், யாழ்ப்பாணம் ஒருநாள் கிறிஸ்தவ பெரும் பான்மை சமூகமாக மாறும் என நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?' என்று கேள்வி எழுப்புகின்றனர்.

ஆழ்ந்த மதநம்பிக்கை உடைய லீட்ச் சகோ தரிகள், கடுமையான தொற்றுநோய்கள் பர வும் காலகட்டங்களில், கிறிஸ்தவ மிஷனரிக ளுடன் இணைந்து மருத்துவ மிஷனரிகளும்

செயற்பட வேண்டும் என்பதில் உறுதியான கருத்தைக் கொண்டிருந்தனர். இவ்வாறு செயற்படுவது, பொதுமக்களுக்குத் தேவையான ஆறுதலையும் பராமரிப்பையும் வழங்குவதோடு, கிறிஸ்தவ இரக்கமும் கருணையும் நடைமுறையில் வெளிப்படும் என்றும் அவர்கள் கருதினர்.

1888-ஆம் ஆண்டு ஜனவரி முதல் 1889-ஆம் ஆண்டு ஜனவரி வரையிலான காலப்பகுதியில், யாழ்ப்பாணத்தில் சுமார் 2000 பேர் தொற்றுநோய்களால் பாதிக்கப்பட்டிருந்ததை லீட்ச் சகோதரிகள் கண்டறிந்து, அந்த நிலைமைகளை விரிவாக ஆட்சியாளரிடம் எடுத்துரைத்தனர். அவர்களின் பதிவுகளின் படி, ஆளுநர் சேர் ஆர்தர் கார்டன் மற்றும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் டபிள்யூ.சி. ட்வைனம் ஆகியோர், டாக்டர் சாமுவேல் கிரீன் தலைமையிலான மருத்துவப்பணி போன்ற ஒன்றை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டனர் என்பதை ஊகிக்க முடிகின்றது.

லீட்ச் சகோதரிகள் பதிவு செய்த அவதானிப்புகள், தமிழ் மக்களிடையே நடைமுறையில் இருந்த பாரம்பரிய மருத்துவ மரபுகள் முற்றிலும் மறைந்துவிடவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. அதே நேரத்தில், பெரும்பாலான ஐரோப்பிய மருத்துவர்களும் கிறிஸ்தவ மிஷனரிகளும், காலனித்துவ ஆட்சியின் கீழ் வாழ்ந்த மக்களிடையே மேற்கத்திய மருத்துவ முறைகளை அதிக அளவில் பரப்பி ஊக்குவிப்பதையே தங்களின் முக்கிய இலக்காகக் கொண்டிருந்தனர். இந்த அணுகுமுறை, கிறிஸ்தவத்தைப் பரப்பும் முயற்சியுடன் இணைந்ததோடு மட்டுமல்லாமல், காலனித்துவ ஆட்சியாளர்களின் அரசியல் மற்றும் பண்பாட்டு மேலாதிக்கத்தை உறுதிப்படுத்த உதவும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே உருவானதாகக் கருதப்படுகிறது.



Miss Mary W. Leitch with young girls at the Uduvil Girls' Boarding School in Jaffna, Ceylon, during the 1880s.

இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால், பெரியம்மை போன்ற சில நோய்களுக்கு உள்நாட்டு மருத்துவர்களிடத்தில் ஏற்கனவே பயனளிக்கும் மருந்துகளும் சிகிச்சைமுறைகளும் நடைமுறையில் இருந்தன. இருப்பினும், அவ்வாறான உள்ளூர் மருத்துவ அறிவையும் அனுபவத்தையும் ஏற்றுக்கொள்ளவும் அதற்கு உரிய ஆதரவு வழங்கவும் ஐரோப்பிய மருத்துவர்களும் காலனித்துவ ஆட்சியாளர்களும் தயக்கம் காட்டினர். இதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக, பதினேழாம் நூற்றாண்டில் வங்காளப் பகுதியில் நடைமுறையில் இருந்த 'டிக்கா' என அழைக்கப்பட்ட பாரம்பரிய பெரியம்மை தடுப்பு முறையைக் குறிப்பிடலாம். இந்த முறையில், முதிர்ந்த பெரியம்மை புண்ணிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட சிறிதளவு சீழ், இரும்பு ஊசியின் நுனியில் தடவப்பட்டு, பின்னர் தோள்பட்டைத் தசையின் கீழ் அல்லது நெற்றிப் பகுதியில் மெதுவாகச் செருகப்படும். அதன் மேல், வேகவைத்த அரிசியால் தயாரிக்கப்பட்ட பசை பூசப்பட்டுப் பாதுகாப்பாக மூடப்படும். இந்தப் பாரம்பரிய பெரியம்மை தடுப்பு நடைமுறை, ஒரு குறிப்பிட்ட பிராமண சமூகத்தினரால் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

1798-ஆம் ஆண்டில், பிரெஞ்சு மருத்துவரான எட்வர்ட் ஜென்னர், பெரியம்மைக்கு எதிரான பாதுகாப்பை அளிக்கும் 'கௌபாக்ஸ்' (மாட்டம்மை) தடுப்பூசியைக் கண்டறிந்து மருத்துவ வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையை உருவாக்கினார். இதனைத் தொடர்ந்து, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஜென்னரின் கௌபாக்ஸ் தடுப்பூசி இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டது. 1802 - 1803 வரையான ஆண்டுகளில், இந்தியர்களிடையே முன்னர் நடைமுறையில் இருந்த பாரம்பரிய அம்மைத் தடுப்பு முறைகளைத் தடை செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இருப்பினும், பாரம்பரிய மருத்துவர்களின் கடும் எதிர்ப்பை ஆட்சியாளர் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் சூழலில், பிரிட்டிஷ் மருத்துவரான டாக்டர் ஷூல்பிரெட், உள்ளூர் அம்மைத் தடுப்பு முறைகளைச் செய்துவந்த பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டே ஐரோப்பிய தடுப்பூசியை வழங்க ஊக்குவித்ததன் மூலம் எதிர்ப்பை ஓர் அளவிற்குச் சமாளித்தார். இவ்வாறான மாற்றங்களின் விளைவாக, காலப்போக்கில் பாரம்பரிய அம்மைத் தடுப்பு நடைமுறை பெரும்பாலும் மறக்கப்பட்டுவிட்டது.

Sivakadadcham@thaiveedu.com



நடராசா சிறிரஞ்சன்

மகப்பேற்று காலப் பராமரிப்பும் பெண்களின் வாழ்நாள் ஆரோக்கியமும்

ஒவ்வொரு பிள்ளை பிறக்கும் போதும் தாயின் ஆயுட்காலம் ஏறக்குறைய மூன்று வருடங்களால் குறைகிறது என்றதொரு விடயத்தை சில வருடங்களுக்கு முன்னர் பி.பி.சி. அறிவியல் பக்கத்தில் வெளிவந்த கட்டுரை ஒன்றில் காணமுடிந்தது. அதை வாசித்ததும் எனக்குச் சற்றுக் குழப்பமாக இருந்தது.

ஒவ்வொரு பிரசவத்தின் போதும் தாயின் ஆயுட்காலம் அதிகரிக்கிறதா ? அல்லது குறைகிறதா ? என்பதே அந்தக் குழப்பம். எமது அனுபவத்தின்படி அதிக குழந்தைகளைப் பெற்ற தாய்மார்கள் அதிக காலம் வாழ்வதைக் கண்கூடாகக் காண முடிகிறது. அவர்களில் பலர் ஒப்பீட்டு ரீதியில் அதிக நோய்நொடியின்றி வாழ்வதையும் அவதானிக்க முடிகிறது. இந்த விடயத்தை நண்பர்கள் வட்டத்தில் கதைத்தபோது, அவர்களில் பலர் இதற்கு ஒத்த கருத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

அவ்வாறெனில், பி.பி.சி அறிவியலில் வந்த கட்டுரை தவறானதா என்று யோசித்தால் அது தவறானதாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. அது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். எனவே, அவர்கள் ஆய்வு செய்த இடங்களில் அப்படியானதொரு நிலமை காணப்பட, எமது இடங்களில் அதற்கு எதிர்மறையானதும் மிகவும் சாதகமானதுமான நிலை காணப்படுகிறது என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையில், நம்நாட்டில் இவ்வாறானதொரு சாதகமான நிலை காணப்படுவதற்கு என்ன காரணம் என்பதை அறிதல் அவசியமாகிறது.

இவ்வாறானதொரு சாதகநிலை காணப்படுவதற்கு காரணம் எதுவாக இருக்கும் என்று சிந்திக்கும்போது, பெண்கள் பருவமடையும்போது, பின்னர் மாதவிடாயின்போது, கர்ப்பமாகும்போது, குழந்தை பிறந்தவுடன் மற்றும் அதைத் தொடர்ந்து வரும் காலங்களில் அவர்களைப் பாராமரிக்கும் முறை முதலியவைதான் அவற்றிற்குக் காரணமாக அமையலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. அதிலும் குறிப்பாக, அவர்களுக்குக் கொடுக்கும் உணவு வகைகள், குளிப்பு முழுக்கு மற்றும் அக்காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கும் ஒய்வு போன்றவையும் இதற்கான காரணங்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பாக, அக்காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கும் விசேட உணவுகள் இங்கு முக்கியமாகக் கருத்தில் கொள்ளத்தக்கவை. 'காயம்' என்று அறியப்படும் பல்தரப்பட்ட சரக்குச் சாமான்களைக் கொண்டு அரைத்துத் தயாரிக்கப்படும் உணவுப் பொருள் இதில் முக்கிய பங்கு வகிப்பதாக இருத்தல் வேண்டும். அத்துடன், பல்தரப்பட்ட சடங்குகளும் இவற்றுடன் இணைந்து செய்யப்படுகின்றன. இவற்றால் அப்பெண்ணுக்கு ஏற்படும் அங்கீகார உணர்வு, தன்னைச் சுற்றி பலர் இருக்கிறார்கள் என்ற பாதுகாப்பு உணர்வு போன்ற பற்பல விடயங்களும் அப்பெண்ணின் உடல், உள மேம்பாட்டுக்கு உதவுபவையாக அமையக் கூடும்.

இச்சந்தர்ப்பத்தில் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் யாதெனில், தற்காலத்தில் நாம் இவற்றை உரிய முறையில் கடைப்பிடித்துச் செயற்படுத்துகிறோமா என்பதாகும். முன்னைய காலத்தில், இப்பராமரிப்பு முறைகள், 'காயம்' முதலிய உணவுகளைத் தயாரித்தல் போன்றவற்றில் கைதேர்ந்த பலர் நம்மிடையே இருந்தனர். அவர்களின் எண்ணிக்கை தற்போது வெகுவாகக் குறைந்து வருகிறது. இளையவர்கள் இவற்றில் ஆர்வம் காட்டாமை, அந்த நுட்பங்களில் கைதேர்ந்தவர்கள் பலருக்கு வயதாகிவிட்டமை மற்றும் பலர் இறந்து போனமை



tg.theeban@gmail.com





போன்றவை இதற்கு முக்கிய காரணங்களாகும். இதை வேறொரு வகையில் கூறுவதாயின், எம்மிடையே காணப்பட்டதொரு அரும்பெரும் அறிவார்ந்த விடயம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகிறது என்பதாகும். எனவே, அழிந்துவரும் இந்த அறிவுப் பொக்கிசத்தை கட்டிக்காக்க வேண்டியது எமது தலையாய கடமையாகிறது.

இது தொடர்பில் முதலில் செய்யப்பட வேண்டியது, இவ்வறிவு கொண்டவர் களை அடையாளம் கண்டு அவர்களின் முக்கியத்துவத்தை அவர்களுக்கும் எமது சமூத்தவர்களுக்கும் புரியவைத்து அவர்களுக்கு உரிய மதிப்பை வழங் குதலாகும். இரண்டாவதாக, அவர்களின் பெயர் விபரங்களைப் பதிந்து வைத் தல் வேண்டும். மூன்றாவதாக, அவர்களைக் கொண்டு, உணவு தயாரிப்பு, பாராமரிப்பு முறைகள் போன்ற தொடர்புடைய விடயங்களை, இளைய தலைமு றையினருக்கு கற்பித்தல் வேண்டும். நான்காவதாக அவற்றை முறையாக ஆவணப்படுத்திக் கைந்நூல் ஒன்றைத் தாயரித்து வெளியிடுதல் வேண்டும். ஐந்தாவதாகக் கலைஞர்கள் முதலியோரைப் பிரதேச பண்பாட்டு விழாக்களில் கௌரவிப்பது போன்று இவர்களையும் கௌரவித்தல் நன்று.

இவ்வாறான பராமரிப்பு முறைகளால்தான் தாயின் ஆயுட்காலம் அதிகரிக் கிறதா என்பதை உறுதி செய்வதற்கு கள ஆய்வு செய்தல் அவசியம். கள ஆய்வில் அவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டால் அதனைப் பிரசித்திப்படுத்தல் வேண்டும். அடுத்ததாக இவ்வுணவு மற்றும் பராமரிப்பு முறைகள் எவ்வாறு தாயின் ஆரோக்கியத்தை வலுப்படுத்துகிறது என்பதைத் துறைசார்ந்த நிபுணர் களின் உதவியுடன் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்துதல் அவசியம். அவ்வாய்வு முடிவுகளை உள்ளூர் மற்றும் சர்வதேச விஞ்ஞான ஆய் விதழ்களில் பிரசுரித்தல் வேண்டும்.

அடுத்ததாக, அவ்வாறு முறையான பராமரிப்பில் வளர்ந்த தாய்மார்களால் பெற்றெடுக்கப்படும் பிள்ளைகளின் ஆரோக்கியமானது, அவ்வாறான பராம ரிப்பு முறைகள் இன்றிப் பிறக்கும் பிள்ளைகளின் ஆரோக்கியத்திலும் பார்க்க சிறந்ததாக உள்ளதா ? என்பதை ஆய்வு செய்து உறுதிப்படுத்துதல் வேண்டும்.

மகப்பேற்றுக்குப் பிந்தைய காலத்தை ஒரு சாதாரண மருத்துவத் தேவையாகக் கருதாது, பெண்ணின் வாழ்நாள் ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கும் ஒரு முக்கி யக் கட்டமாக நாம் அணுக வேண்டும். எனவே, தாய் மற்றும் சேய் நலப் பரா மரிப்பை ஒரு முறையான தொழில்முறைச் சேவையாக எமது சமூகத்தில் அறி முகப்படுத்துவது காலத்தின் தேவையாகிறது. இச்சேவையை இரு நிலைகளில் முன்னெடுக்கலாம்: முதலாவதாக, போதிய பயிற்சியும் பாரம்பரிய அறிவும் கொண்டவர்களை இல்லங்களுக்கே அனுப்பி, தாய்க்குத் தேவையான சத் தான உணவுகள் மற்றும் உடல் தேற்றும் முறைகளை உறுதி செய்தல். இரண் டாவதாக, நவீன வசதிகளுடன் கூடிய மகப்பேற்று நல மையங்களை அமைப் பதன் மூலம், ஒரு பெண் தனது பிரசவத்திற்குப் பிந்தைய காலத்தை மிகுந்த கௌரவத்துடனும் மன அமைதியுடனும் கழிப்பதற்கான சூழலை உருவாக்க முடியும். இத்தகைய பராமரிப்பு முறைகள் வெறும் மருத்துவமனைச் சூழலாக இல்லாது, பெண்ணின் உடல் சுயாதிக்கத்தையும் உணர்வுபூர்வமான தேவைக ளையும் மதிக்கும் 'நலவாழ்வு இல்லங்களாக' இயங்குதல் அவசியம். இது ஒரு பெண் தனது ஆரோக்கியத்தை மீட்டெடுப்பதில் ஒரு வலுவான சமூக மற்றும் தொழில்முறை ஆதரவு இருப்பதை உறுதிப்படுத்தும். இச்சேவைகள் உரிய முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுப் பிரபலமடையும் போது, உள்ளூர் மக்கள் மட்டுமன்றி நாட்டின் ஏனைய சமூகத்தினரும் இவற்றைப் பெறுவதற்கு முன்வரும் சாத்தியக்கூறுகள் உள்ளன. பெண்களின் ஆரோக்கியம் என்பது வெறும் புள்ளிவிவரம் அல்ல; அது ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்வின் அடையாளமாகும்.



Nadarasa.sriranjan@thaiveedu.com

சந்திரகௌரி சிவபாலன்

மரணத்துக்கு ஓர் ‘இடைவேளை’ Cryonics எனும் உயிர் உறைபாதுகாப்புத் தொழினுட்பம்!



tg.theeban@gmail.com

மரணத்திற்குப் பின் மனிதர்கள் மீண்டும் உயிர்த்தெழ முடியுமா? முதுமையையும் காலத்தையும் வென்று ஒரு மனிதரால் பல நூற்றாண்டுகள் கடந்து வாழ இயலுமா? இத்தகைய வினாக்கள் மனித நாகரிகத்தின் தொடக்கத்திலிருந்தே விடை தெரியாத மர்மங்களாகத் தொடர்ந்து வருகின்றன.

மரணத்திற்குப் பிந்தைய வாழ்வு குறித்த மனிதரின் தேடல், பண்டைய எகிப்திய நாகரிகத்தில் உடல்களைச் சிதையாமல் பாதுகாக்கும் மம்மியாக்க முறையாகவும், தமிழ் சித்தர் மரபில் ஒரு உடலிலிருந்து மற்றொன்றுக்கு உயிர் ஆற்றலை மாற்றும் ‘கூடு விட்டுக் கூடு பாய்தல்’ எனும் கோட்பாடாகவும் பதிவாகியுள்ளது.

பண்டைய காலந்தொட்டு மனிதர்களிடம் நிலவி வரும் மரணத்தை வெல்லும் வேட்கையின் நவீன வடிவமே உயிர் உறை பாதுகாப்புத் தொழினுட்பம் (Cryonics) ஆகும். இன்றைய மருத்துவத்தால் குணப்படுத்த முடியாத நோய்களுக்கான தீர்வுகள் எதிர்கால மருத்துவ முன்னேற்றத்தில் சாத்தியமாகலாம் என்ற நம்பிக்கையில், உயிரிழந்தவர்களின் உடலை மீச்சிறு வெப்பநிலையில் (Cryopreservation) சிதையாமல் பாதுகாப்பதே இத்தொழினுட்பத்தின் அடிப்படை நோக்கமாகும். அவ்வாறு பாதுகாக்கப்பட்ட உடல்களை வருங்கால நவீன மருத்துவத்தின் உதவியுடன் மீண்டும் நல்வாழ்வு நிலைக்குக் கொண்டுவர இயலும் எனும் விஞ்ஞானக் கருதுகோளை இக்கட்டுரை அறிமுகப்படுத்துகிறது.

எட்ட முடியாத இலட்சியங்களையும் வருங்காலத்தின் நனோ தொழினுட்பம் (Nanotechnology) போன்ற புரட்சிகர மாற்றங்களையும் நேரில் காணும் ஆர்வம் பலருக்கும் உண்டு. இத்தகைய கனவுகளை நனவாக்க, மரணத்தை ஒரு நிரந்தர முடிவாகக் கருதாமல், ஒரு தற்காலிகத் தடையாகக் கருதி விஞ்ஞானத்தின் துணையோடு அதனை வென்று மீண்டும் வாழ்வைத் தொடங்குவதற்கான ஒரு தேடலாக இத்தொழினுட்பம் அமைகிறது.

கிரையோனிக்கின் (Cryonics) வரலாறு, அறிவியல் அடிப்படை, தொழினுட்ப செயல்முறை, நெறிமுறைப் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால சாத்தியக்கூறுகள் ஆகியவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது. தற்போதைய அறிவியல் ஆதாரங்கள் கிரையோனிக்கை முழுமையாக உறுதிப்படுத்தவில்லை. ஆனாலும், உயிரியல் மற்றும் நனோ தொழினுட்ப வளர்ச்சிகள் இதன் சாத்தியத்தை மறுபரிசீலனை செய்யத் தூண்டுகின்றன.

நோயால் இறந்தவர்களைப் பதப்படுத்திப் பாதுகாப்பாக வைத்து அந்த நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்ட பின் அந்த உடலில் ஏற்பட்ட நோய்க்கு மருத்துவம் பார்த்து அவரை மீண்டும் வாழ வைப்பதுதான் இந்த கிரையோனிக் முறை. இந்தச் சொல் கிரேக்க மொழியிலே இருந்து வந்தது.

கிரையோனிக்ஸ் நடைமுறையானது ஒருவர் மருத்துவ ரீதியாகவும் சட்டபூர்வமாகவும் இறந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னரே தொடங்கப்படுகிறது. குறிப்பாக, இதயத் துடிப்பும் சுவாசமும் நின்றவுடன் ஏற்படும் ‘மருத்துவ மரண’ (Clinical Death) நிலையில் இப்பணி ஆரம்பிக்கின்றது. இத்தொழினுட்பமானது, உயிரிழந்த ஒருவரின் உடல் அல்லது குறிப்பிட்ட உறுப்புகளை மிகக் குறைந்த வெப்பநிலையில் உறைய வைத்துப் பாதுகாப்பதன் மூலம், எதிர்கால மருத்துவ முன்னேற்றங்கள் வாயிலாக அவர்களை மீண்டும் உயிர்ப்பிக்க முடியும் என்ற கருதுகோளின் அடிப்படையில் இயங்குகிறது. உதாரணமாக, புற்றுநோய் போன்ற இன்றைய மருத்துவத்தால் குணப்படுத்த முடியாத நோய்களால் இறந்தவர்களின் உடல்களைப் பாதுகாத்து, வருங்காலத்தில் அவற்றுக்கான தீர்வுகள் கண்டறியப்படும்போது அவர்களை மீண்டும் நல்வாழ்வுக்குக் கொண்டு வருவதே இதன் இலக்காகும்.

இருப்பினும், கிரையோனிக்ஸ் தொழினுட்பம் பிரதான விஞ்ஞான சமூகத்தால் (Mainstream Scientific Community) பெரும் சந்தேகத்துடனேயே அணுகப்படுகிறது. உயிரணுக்களை உறைய வைக்கும்போது ஏற்படும் திசுச் சேதங்கள் மற்றும் மூளையின் நனவுநிலையை மீண்டும் மீட்டெடுப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, இது பெரும் பாலும் ஒரு 'போலி விஞ்ஞானமாக' (Pseudoscience) வகைப் படுத்தப்படுகிறது.

தற்போது உலகளவில் உயிர் உறைபாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் அமெரிக்காவின் Alcor Life Extension Foundation மற்றும் Cryonics Institute ஆகிய நிறுவனங்கள் முன்னோடிகளாகத் திகழ்கின்றன. இவற்றுடன் ரஷ்யாவின் KrioRus மற்றும் ஐரோப்பாவின் சில வளர்ந்து வரும் அமைப்புகளும் இணைந்து இத்துறையில் பங்காற்றி வருகின்றன. தற்போது உலக நாடுகளின் சுமார் ஏழு முக்கிய இடங்களில் இத்தகைய அதிநவீன வசதிகள் கொண்ட மையங்கள் செயற் பட்டு வருகின்றன.

இறந்த சில நிமிடங்களில் வேலை ஆரம்பிக்கப்படும். முதலில் மூளை செயல் இழக்காமல் இருப்பதற்காகத் தேவையான அளவு ஒட்சிசன் மூளைக்குக் கொடுக்கப்படும். மூளை சேதம் ஏற்படாமல் இருக்க உடலை ice bath மூலம் விரைவாக குளிர்விக்கிறார்கள். உடலிலுள்ள இரத்தமும் நீரும் முழுமையாக வெளியேற்றப்படும். உடல் சிதையாமல் இருக்க இரத்தத்தை மாற்றி 'antifreeze' திரவம் (cryoprotectant) செலுத்தப்படுகிறது. இது பனிக்கட்டிகள் உருவாகாமல் காக்கிறது. இதையே vitrification என்று கூறுகிறார்கள் (கண்ணாடி போல் உறைதல்). பின் ஐஸ் கட்டிகளுக்குள் அந்த உடல் வைக்கப்படும். அதன் பின் அந்த உடலை - 196°C திரவ நைதரசன் நிறைந்த கொள்கலனுக்குள் வைப்பார்கள்.

புற்றுநோயாளி இறந்தால் புற்று நோய்க்குரிய மருந்தை அவ்உறுப்புக்குச் செலுத்தி நனோ தொழினுட்பத்தின் மூல மாக புதிய உறுப்பாக அதனை வளர்த்து அவருடைய உடலுக்குள் அந்த உறுப்பு மீண்டும் வைக்கப்படும். மூளைக்குத் தேவையான ஒட்சிசன் அளித்து பழைய நிலைக்குக் கொண்டுவர முடியும் என்பதுவே இவ்ஆராய்ச்சியாக இருக்கின்றது.

முழு உடலும் பதப்படுத்த 150,000 - 250,000 டொலர்கள் வரையும் தேவைப்படுகின்றது. மூளை மட்டும் பதப்படுத்த 80,000 - 100,000 டொலர்கள் வரையும் தேவைப்படுகின்றது. இதற்குப் பொதுவாக ஆயுள் காப்புறுதி மூலம் கட்டணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. 2025 கணிப்பீட்டின்படி 500 - 700 பேர் பதப்படுத்தப்பட்டிருக்கின்றதாக நம்பப்படுகிறது. எதிர் காலத்தில் செய்வதற்காகப் பதிவு செய்தவர்களின் தொகை ஆயிரத்துக்கும் மேற்பட்டது.

12.01.1967-இல் புற்றுநோயால் இறந்த கலிபோர்னியாப் பல் கலைக்கழக உளவியல் பேராசிரியர் ஜேம்ஸ் பேட்பேர்ட் (James Bedford) என்பவரே முதல் முதலாக கிரையோனிக் செய்யப்பட்டவர். இவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

ஜேர்மனியில் முதலாவதாக கிரையோனிக் முறையில் பதப் படுத்தப்பட்டவர் ஜேர்மனி பிரங்கபர்ட் நகரைச் சேர்ந்த 96 வயதான முன்னாள் பொறியியலாளர். இவர் 2019 பெப்பிரவரி மாதம் 17-ஆம் திகதி கிரையோனிக் ஜேர்மனிக் குழுவால் ஞாயிற்றுக்கிழமை காலை டீஅனிமேஷன் செய்யப்பட்டு ஆறு நாட்களின் பின் - 78 வெப்பநிலையில் அவருடைய உடலை வைத்திருந்து பெப்பிரவரி 23 அமெரிக்காவிலுள்ள நிறுவனத்துக்கு கொண்டு சென்று 5 நாட்களில் - 196°C குளிரூட்டப்பட்டு முறைப்படி செய்யவேண்டியவற்றைச் செய்து பதப்படுத்தினர். ஜேர்மனியில் 2020 - 2021 காலப்பகுதியிலேயே cryonics ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இங்கிலாந்தில் 14 வயதுச் சிறுமி குருதியில் வெள்ளை அணுக்கள் மிகுதியாக இருப்பதால் உண்டாகும் நோயாகிய லுகெமியாவால் (lukemiya) பாதிக்கப்பட்டு இறந்தார். அவருக்கு வாழ வேண்டும் என்னும் ஆசை இருந்தது. இவர் இறப்பதற்கு முன் 2016 -இல் பல சமூக நிறுவனங்களுக்குச் சென்று தன்னைப் பதப்படுத்தி வைக்குமாறு வேண்டிக் கேட்டுள்ளார். அதனால், அவர் இறப்பதன் முன்பே செய்யலாம் என்று சட்டப்படி ஒப்புக்கொண்ட சமூக நிறுவனங்கள் அவர் இறந்த பின் அந்தச் சிறுமியின் உடலை கிரையோனிக் செய்தார்கள்.





அறிவியல் அடிப்படையில் நோக்கும் போது:

- Cryobiology: செல்கள் குறைந்த வெப்பநிலையில் metabolic செயற்பாட்டை நிறுத்திக் கொள்ளும்.
- Vitrification: உறைநிலையில் ice crystal உருவாகாமல் கண்ணாடி போன்ற நிலைக்கு மாற்றப்படுகின்றது.
- Neuroscience: மூளையின் கட்டமைப்பு முழுமையாக பாதுகாக்கப்பட்டால், நினைவக மீளமைப்பு எதிர்காலத் தில் சாத்தியம் என்ற கோட்பாடு காணப்படுகின்றது.
- செல் உயிரியல் (Cell Biology): செல்களைக் குறைந்த வெப்பநிலையில் பாதுகாக்க முடியும் என்பது உறுதி (உதாரணம்: விந்தணு, கரு பாதுகாப்பு).
- Nanotechnology: எதிர்கால நனோ தொழினுட்பம் செல் சேதத்தைச் சரிசெய்யலாம் என்ற கருதுகோள்.

இது எந்த அளவில் சாத்தியப்படும்?

விந்தணு சேமிப்பு, கரு (Embryo) சேமிப்பு, உறுப்பு, திசு சேமிப்பு ஆகியன சாத்தியமாகியுள்ளன; உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் முழு மனித உடல் மீளுயிர்ப்பு இது வரை சாத்தியமாகவில்லை. மூளையின் அமைப்பு அப்படியே இருக்கும்வரை அதனுடைய தகவல்கள் எவ்வித மாற்றமும் இல்லாமல், அத்தகவல்களை மீட்டெடுக்க முடியும் என்று உயிர் உறை பாதுகாப்பு தொழினுட்பவியலாளர்கள் கூறு கின்றார்கள்.

சவால்கள்:

உறை பாதுகாப்பின் போது DNA மற்றும் செல்கள் சேத மடையலாம். மீளுயிர்ப்பு இன்னும் தெளிவாக நிரூபிக்கப்பட வில்லை. சட்டரீதியாக மரணித்த ஒருவரை மீண்டும் உயிர்ப் பிக்க முடியுமா? மரணத்தை இறுதி நிலையாகக் கருதுகின்ற மதங்கள் இதற்கு எவ்வாறு அங்கீகாரம் வழங்கும்? மீண்டு எழுகின்றபோது அக்கால உலகத்துக்கு ஏற்ப வாழ முடியுமா?

வீதியில் ரோபோக்கள் நடந்து கொண்டிருக்கும், வானத்தில் வாகனங்கள் பறக்கும், செயற்கை சூரியன் இருக்கும், சாரதி இல்லாமல் வாகனங்கள் செல்லும், இவ்வாறான சூழ்நிலை யில் மீண்டு எழுந்தவர்கள் எப்படி வாழமுடியும்? சில வய தானவர்களுக்கு எவ்வாறு முயற்சித்தாலும் தற்கால தொழி னுட்பத்தைக் கற்றுத் தர முடியாமல் இருக்கின்றது. ஏனென் றால், எம்முடைய மூளை பயிற்சியில் இருக்க வேண்டும். பதப்படுத்தப்பட்ட மூளை வெளியே வருகின்ற போது மேம் படுத்தல் இல்லாமல் மூளை இருக்கும். தண்ணீருக்குள் விழுந்து நீந்தத் தெரியாமல் தத்தளிப்பதைப் போல இருக்கும்.

உயிர் உறைபாதுகாப்பு (Cryonics) என்பது தற்போதைய நிலையில் ஒரு பரிசோதனை ரீதியான கருதுகோளாகவே (Experimental Hypothesis) வகைப்படுத்தப்படுகிறது. இது விஞ்ஞானம், தத்துவம் மற்றும் உயிர்-நெறிமுறையியல் (Bioethics) ஆகிய துறைகள் ஒன்றிணையும் ஒரு சிக்கலான ஆய்வுத் தளமாகும். இத்தொழினுட்பம் இன்னும் ஒரு முழு மையான மருத்துவ முறையாக அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும், வளர்ந்து வரும் நனோ தொழில்நுட்பம் (Nano technology) மற்றும் மூலக்கூறு உயிரியல் (Molecular Biology) துறைகளின் அபரிமிதமான முன்னேற்றங்கள், எதிர் காலத்தில் இதன் சாத்தியக்கூறுகளை விரிவுபடுத்தக்கூடும். வரலாற்றில் சாத்தியமற்றது எனக் கருதப்பட்ட பல விஞ்ஞா னக் கண்டுபிடிப்புகள் இன்று நிஜமாகியுள்ளன. அந்த வகை யில், மரணத்தை ஒரு தற்காலிகத் தடையாக மாற்ற முயலும் இந்த 'உயிர் உறைபாதுகாப்பு' முயற்சியும், எதிர்கால விஞ் ஞானம் நிகழ்த்தப்போகும் ஒரு பெரும் புரட்சியாக அமை யக்கூடும் என்பதைக் காலம் தீர்மானிக்கும்.

Chandragowry.Sivapalan@thaiveedu.com



முதுமையில் ஏழு பழக்கங்கள்

- குமார் புனிதவேல்



எண்பதுகளில் தாயகத்தில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு முகம் கொடுக்க முடியாது, தமது முப்பதாவது வயதுகளில் இலங்கையில் இருந்து வெளியேறி உலகின் பல நாடுகளிலும் குடியேறி வாழும் தமிழர்கள் தற்போது தமது எழுபதாவது வயதை அடைந்துள்ளார்கள். வாழ்க்கையில் அனைத்துமே மாற்றம் அடையும் என்பதுதான் உண்மை. வயது மாற்றத்தோடு ஆரோக்கியமும் மாற்றமடைவது இயல்பானதே. இந்த மாற்றங்களை தடுத்து நிறுத்த முடியாத நிலையில் அதற்கு முகம் கொடுக்க அனுசரணையான பழக்கங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனது நோக்கமாகும். பழக்கங்களைப் பகிருமுன் முதுமையில் வரும் மாற்றங்களைக் கவனிப்போம்.

முதுமை அடையும் வேளை உடலின் செல்கள் பழுதடைந்தால் அது மீண்டும் சுகம் அடைவது கடினது. அப்படி சுகமடைவதாயினும் கூடிய காலம் எடுக்கும். உதாரணத்திற்கு இளமையில் ஒரு காயம் ஏற்பட்டால் அது மாறுவதற்கு எடுக்கும் காலத்திலும் முதுமையில் கூடிய காலம் எடுக்கும். மேலும் சில சந்தர்ப்பங்களில் அந்தக் காயம் நிரந்தரமாக நிலைத்து விடுவதும் உண்டு.

வயது அதிகரிக்க அதிகரிக்க தசை இழப்பு அதாவது பலம் குறைவதுடன் அளவும் குறையத் தொடங்கும் இதனை சாகோபீனியா என்பார்கள். இதன் முக்கிய விளைவு முதுமையில் விரைவாகக் களைப்படைவார்கள்.

முதுமையில் தோன்றும் இன்னொரு விளைவு எலும்புகளில் தேய்மானம் தோன்றத் தொடங்கும். அதாவது எலும்புகளின் அடர்த்தி குறைந்து அது பலவீனமடையும். இதனால் எலும்பு முறிவுகள் தோன்றுவது இயல்பு.

பிறிதொரு குறைபாடு, முதுமையில் ஏற்படும் மூட்டு வலி. குறிப்பாக முழங்கால் மூட்டு வலி என்பதைப் பரவலாகக் கேட்டிருப்பீர்கள். இதற்குக் காரணம் எலும்புகளுக்கு இடையில் உள்ள ஜவ்வு தேய்வது. இந்த ஜவ்வினை ஆங்கிலத்தில் காட்டிலிஸ் எனக் குறிப்பிடுவர்.

இதனைவிட, உணவு செரிமானம் அடையாமல் அவதிப்படுவது முதுமையில் ஏற்படும் இன்னொரு பிரச்சினையாகும். இது உணவை செரிமானம் அடையச் செய்யும் அமிலம் குறையத் தொடங்குவதால் முதுமையில் ஏற்படுகின்ற பிரச்சினையாகிறது.

முதுமையின் இன்னுமொரு விளைவு இரத்தக் குழாய்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கி இறுகத் தொடங்கும். இதன் விளைவு இரத்த அழுத்தம் அதிகரிக்கத் தொடங்கும். மேலும் இரத்த ஓட்டம் குறைவதனால் ஞாபக சக்திக் குறைவும் ஏற்படுகின்றது.

மேலே குறிப்பிட்ட மாற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் எமது பழக்கங்களை மாற்றுவதால் அவற்றைப் பிற் போடுவதுடன், அத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் திறனையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

நான் இப்பிரச்சினையை இழிவுநிலைக்குக் கொண்டுவரக் கூடிய பழக்கவழக்கங்களை அறிந்து வைத்திருப்பதன் அடிப் படையில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அது உங்க ளுக்கும் பயனுள்ளதாக அமையும்.

பழக்கம் 1:

நீங்கள் பாலர் வகுப்பில் படிக்கையில் ஓர் ஆங்கிலப் பாடல் படித்திருப்பீர்கள். அது

'Early to bed, early to rise
Makes to all
Healthy wealthy and wise'

அதாவது, நேரத்தோடு துயின்று நேரத்தோடு விழித்தால் எங்கள் அனைவரையும் ஆரோக்கியத்துடனும் செல்வத்து டனும் இருப்பதற்கு வழிகொடுக்கும். எம்மில் பலர் வெகு நேரம் விழித்திருந்துவிட்டுப் பின் துயிலச் செல்லும் பழக்கம் உடைய வராய் உள்ளோம். உண்மையில் தூக்கம் என்பது வெறும் ஓய்வு மட்டுமல்ல என்பதை மனதில் நினைவு கொள்ளுங்கள் ஒருவர் தூங்கும்போது மெலடோனின் (Melatonin) என்னும் ஹார்மோன் (Harmone) சுரக்கும். அது சுரந்தால்தான் உடம்பு ஆறுதலாகத் துயிலும். அது சுரப்பதற்குப் படுக்கை அறை இருட்டாக இருப்பது அவசியம். ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் வேளையில் இரத்தோட்டம் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் வேளையில்தான் உணவு சீர ணிப்பதுடன் உடலுக்குள் உள்ள அசுத்தங்கள் வெளியேற்றப் படும். இந்த நச்சுக்கள் வெளியேறாத வேளையில் மூளையில் மறதி நோய் தோன்றத் தொடங்கும். இக்குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு என்ன பழக்கங்கள் அவசியம் என்று பார்ப்போம்.

முதலாவதாக, இரவு ஒன்பது அல்லது ஒன்பதரைக்கு முன் துயிலச் செல்ல முடிவு எடுங்கள். அதற்கு இரண்டு மணித்தியா லத்திற்கு முன் இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிடுங்கள். படுக்கச் செல்வதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் தொலைக்காட்சி பார்ப்பது, கைத்தொலைபேசி பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அவற்றிலிருந்து வரும் நீல நிறக் கதிர்கள் தூக்க ஹாமோன்கள் சுரப்பதைக் குறைத்துவிடும். உங்கள் படுக்கை அறை இருட்டாய் இருப்பது மிக அவசியம். சமையல் அறையில் சமைப்பது போல் குளியல் அறையில் குளிப்பதுபோல் படுக்கை அறையைப் படுப்பதற்குப் பாவி யுங்கள், படம் பார்க்கப் பாவிக்காதீர்கள். வேண்டுமானால் நித்திரை வரும் வரை ஒரு புத்தகத்தை வாசியுங்கள்.

பழக்கம் 2:

காலையில் எழுந்தவுடன் கொஞ்சம் நீர் அருந்துங்கள். அதுவும் இளம் சூடாய் இருப்பின் நலமாகும். காரணம் உடலில் உள்ள நீர், உணவு செமிப்பதற்குப் பயன்படுவ தனால் நீர் பற்றாக்குறை இருக்கும். நீங்கள் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய விடயம் உடம்பின் எடையில் ஐம்பது விகிதத்திற்கு மேலாகத் திரவம் இருக்கு மாயின் உடலில் உள்ள கழிவுகள் வெளியேற முடியா நிலை ஏற்படுவதுடன் இரத்தத்தின் அடர்த்தியும் கூடி விடுகின்றது.

இதனால் இதயம் அதிகம் சிரமப்பட்டு செயற்பட வேண்டியி ருக்கும். இரத்தம் கட்டியாவதால் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகரிக்கும். செரிமானம் பாதிக்கப்பட்டு மலச்சிக்கல் பெரும் பிரச்சினை யாய் உருவெடுத்துவிடும். உடம்பில் Metabolism எனும் வளர்சிதை மாற்றம் குறைவதனால் களைப்பாய் இருக்கும். இவை அனைத்தையும் தவிர்க்க இரவில் படுக்கப்போகும் போது ஒரு செம்பில் தண்ணீரை ஊற்றி படுக்கைக்கு அருகில் வைத்துத் தூங்குங்கள். காலை எழுந்தவுடன் அதை அருந்தி நாளைத் தொடங்குங்கள். நீர் சற்று வெகுவெதுப்பாய் இருந்தால் அது மேலும் நல்லது.

பழக்கம் 3:

இந்த அவசரமான உலகில் நேரப் பற்றாக்குறையால் சாப்பாட்டை மெல்லாமல் விழுங்கிவிட்டு ஓடுகிறோம். உணவின் செரிமானம் வாயில் மெல்லும்போதுதான் ஆரம்ப மாகின்றது. சரியாக மெல்லாமல் விழுங்கும் உணவு பெரிய பெரிய துண்டுகளாக வயிற்றினுள் செல்கின்றது. இத்துண்டு களைக் குடலில் சுரக்கும் செரிமானத் திரவத்தால் செமிக்க வைக்க முடியாது போய்விடும். உண்ணும் உணவு எவ்வளவு சத்துடையதாக இருப்பினும் அது சீரணித்து உடம்புடன் சேராவிடின் என்ன பலன். மெல்லாது உண்ட உணவு உடம் போடு ஒட்டாது போவதுடன் வாயு மற்றும் மலச்சிக்கல் பிரச்சி னைகளைத் தோற்றுவிக்கும். வேகமாக மெல்லாமல் சாப்பிடு கையில் வயிறு நிறைந்த திருப்தி வராமல் தேவைக்கு அதிகம் சாப்பிடவும் செய்வீர்கள். அதேவேளை உடம்பு மெலிந்தும் போகும். உடம்பின் ஆரோக்கியத்துக்காகச் செய்யும் மிக முக் கியமான செயற்பாடு சாப்பிடுவதாகும். சாப்பிடும் வேளையில் தொலைக்காட்சி பார்ப்பது கைத்தொலைபேசி பார்ப்பது ஆகி யவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பற்களில் ஏதும் குறைபாடு இருப்பின் பல் வைத்தியரை நாடி சீர்செய்து கொள்ளுங்கள். உணவை நன்றாக அரைத்துச் சாப்பிடுவதற்கு ஆரோக்கியமான பற்கள் அவசியம்.

பழக்கம் 4:

தினமும் நடப்பது போன்ற உடற்பயிற்சி உலகில் வேறு எதுவும் கிடையாது. உலகில் எந்த மிருகமும், யாரும் கொண்டு வந்து தர இருந்து சாப்பிட்டதை அறிய மாட்டோம். நான் Buddy எனும் ஒரு நாயை வளர்த்தேன். பதின்நான்கு வருடம் வரை வாழ்ந்த அந்த நாய் ஒரே இடத்தில் அசையாது இருந்ததை நான் பார்த்ததே இல்லை. அது எப்போதும் நடந்த படியும் ஓடியபடியும் இருக்கும். அதனால் அது இறக்கும்வரை மிகுந்த ஆரோக்கியத்துடனேயே இருந்தது. மூட்டு வலி, இடுப்பு வலி என்று சொல்லி நடப்பதை நிறுத்தாதீர்கள். நடப்ப தினால் இரத்தோட்டம் சீராகும். கால், இடுப்பு என முழு உடம்பின் மூட்டுகளும் சீராக செயற்படும். நடப்பதன் விளைவாக இரத்த அழுத்தம், சீனிச் சத்து எல்லாம் கட்டுப் பாட்டில் வைத்திருக்க உதவும். பகலில் சூரிய வெளிச்சத்தில்



நடந்தால் இரவில் தூக்கம் சிறப்பாக வருவதுடன் உணவுச் செரிமானமும் சிறப்பாக நடக்கும். மூளைக்குத் தேவையான இரத்தோட்டம் செல்வதனால் அதுவும் சிறப்பாகச் செயற்படும். எனவே தினமும் காலையில் சூரிய வெளிச்சத்தில் அரை அல்லது முக்கால் மணித்தியாலம் நடவுங்கள். இப்பழக் கத்தை ஆரம்பிக்கையில் முதல் நாளே முக்கால் மணித்தி யாலம் நடக்காமல் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்துப் படிப்படியாகக் கூட்டுங்கள். மூட்டுவலி இருப்பின் ஒரு கைத்த டியைப் பிடித்துக் கொண்டு நடவுங்கள். உங்களுக்கு வெளியே செல்ல முடியாவிடின் வீட்டிற்கு உள்ளேயே நட வுங்கள்.

பழக்கம் 5:

எண்ணெய் அல்லது சீனி மிகுதியாக உள்ள உணவுகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வயது அதிகரிக்கும் வேளையில் செரிமானம் குறையத் தொடங்கும். எனவே பொரித்த அல்லது எண்ணெய் மிகுதியாக உள்ள உணவுகளைத் தவிர்த்துக் கொள்வது நலம். பல வியாபார அமைப்புகளில் ஒரே எண்ணெய் பல முறை மீளப் பாவிப்பதினால் அதில் கொலஸ் ரோல் மிகையாக இருக்கும். இதனால் உங்கள் கல்லீரல் பெரிதும் பாதிப்படையும். அத்தகைய பிச்சினைகளைத் தவிர்ப்பதற்கு இயன்ற அளவிற்குக் கடை உணவுகளைத் தவிர்ப்பது நன்மை பயக்கும்.

சர்க்கரை உங்கள் எலும்புகளைப் பலவீனப்படுத்துவதுடன் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறையச் செய்யும். முற்றாக விலக் காவிடினும், இயன்ற அளவு இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

பழக்கம் 6:

நாள் முழுவதும் ஓர் இடத்தில் அமர்ந்து இருக்காதீர்கள். வேலை செய்யும் காலத்திலும் ஓய்வுக்காலத்திலும் ஒரே இடத்தில் இருப்பது மிகக் கொடுமையானதும் ஆபத்தானது மாகும். 'பாவிக்காதவைகள் பறிக்கப்படும்' என்பது ஓர் அடிப் படை நியதி. பலர் முதுமை வரும் போது ஓடி ஓடி உழைத்து விட்டோம், இது ஓய்வெடுக்கும் காலம் என்று தொலைக்காட்சி யுடன் இருப்பதால் மூட்டு வலி, கால் வலி, கழுத்து வலி போன்றவை ஏற்பட்டு பாரிய பிரச்சினைகளை முதுமையில் ஏற்படுகின்றது. எனவே ஏதாவது ஓர் இடத்தில் தொடர்ச்சியாக இருந்து வேலை செய்யும் போது, அரை மணித்தியலத்திற்கு ஒருமுறை எழுந்து நடமாடிவிட்டு மீண்டும் வேலையைத் தொடருங்கள். வளம் பெறும்.

பழக்கம் 7:

காப்பி, தேநீர் மது இவற்றின் பாவனையைக் குறைத்துக் கொள்ளுங்கள் தேநீர் கோப்பி இரண்டிலும் உள்ள கபீன் எனும் இரசாயனம் உங்கள் எலும்புகளை வலு இழக்க வைக்கும் தன்மை உடையது. இவற்றை குறைத்தல் அவ சியம். அத்துடன் மதுபானத்தை முற்றாகத் தவிர்த்துக் கொள் ளுங்கள். மது உங்கள் ஆரோக்கியத்திற்குப் பெரும் தீங்கு உண்டு பண்ணும்.

திருவள்ளுவர் சொன்னதுபோல,

'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதல் என்மற்றுச் சான்றோர் முகத்துக் களி'

அதன் பொருள்: தாய் முகம் சுளிக்கும் மதுவை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று ஒரு நாளைக்கு ஒரு தேநீர் அல்லது கோப்பி அருந்துங்கள் மற்ற வேளைகளில் நீர் மோர் அல்லது பழரசம் போன்றவற்றை அருந்துங்கள். நண்பர்க ளுடன் நெருங்கிப் பழகுங்கள், நண்பர்களுடன் கவலையைப் பகிர்வதனால் அது பாதி ஆகின்றது. அதேவேளை மகிழ்ச் சியைப் பகிரும் வேளையில் அது இரு மடங்காகிறது. கவலையைப் பகிர்ந்து மகிழ்ச்சியைப் பெருக்கி நீடிய வாழ்வு வாழ்வதற்கு வாழ்த்துக்கூறி முடிக்கிறேன்.



kumar.punithavel@thaiveedu.com

நிசன்குமார் கோபிநாத்

கேகாலை மாவட்டக் கல்வி அவலநிலை தொடருமா?

tg.theeban@gmail.com

கல்வி, என்பது வெறும் அறிவுசார் தேடல் மட்டுமல்ல; அது மானுட மேம்பாட்டிற்கான அடிப்படை உரிமையென உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. பல தலைமுறைகளாகத் தொடரும் சமூக-பொருளாதாரப் பின்தங் கிய நிலையை, ஒரே தலைமுறையில் மாற்றியமைக்கக்கூடிய ஆக்கபூர்வமான சக் தியாகக் கல்வி அடையாளப்படுத்தப்படுகிறது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாற்றில், அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை உறுதிப் படுத்துவது தேசிய இலக்காகக் கொள்ளப்பட்ட போதிலும், நடைமுறை யதார்த் தத்தில் பல்வேறு சமூக-பொருளாதாரக் காரணிகளால் சவால்கள் நீடிக்கவே செய் கின்றன. இலங்கை சுதந்திரம் அடைந்து 78 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள சூழ லில், அனைவருக்கும் சமமான கல்வியை உறுதிப்படுத்துவது இன்றும் ஒரு முக்கி யமான இலக்காகவே உள்ளது. இலங்கையின் 1978-ஆம் ஆண்டு அரசியலமைப் பின்படி, கல்வி என்பது ஓர் 'அடிப்படை உரிமை' என்பதை விட, அரசாங்கம் பின்பற்ற வேண்டிய ஒரு 'வழிகாட்டும் கொள்கையாகவே' வகைப்படுத்தப்பட் டுள்ளது. இத்தகைய கட்டமைப்புச்சார் சூழல், மலையகத் தோட்டப்புறங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மறைமுகத் தாக்கங்களை ஏற்படுத்தி யுள்ளது. குறிப்பாக, கேகாலை மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் மாணவர்கள், நவீன கல்வி வசதிகள் மற்றும் போதிய ஆசிரியர் வளங்களைப் பெற் றுக்கொள்வதில் இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர். திட்டமிடல் ரீதியான பல வீனங்கள் மற்றும் பிராந்திய மட்டத்திலான சவால்கள் இப்பகுதி மாணவர்களின் கல்விச் சமத்துவத்தைப் பாதிக்கும் காரணிகளாக அமைந்துள்ளன. எனவே, இந்தக் கட்டுரையின் நோக்கம் கேகாலை மாவட்டக் கல்வியின் அவல நிலையை ஆராய்தலும், கடந்த காலம் முதல் தற்காலம் வரையான அரசாங்கங்களின் அரசியல் தலையீடுகளைப் பகுப்பாய்வு செய்தலுமாகும்.

> ***இலங்கை சுதந்திரம் அடைந்து 78 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள சூழலில், அனைவருக்கும் சமமான கல்வியை உறுதிப்படுத்துவது இன்றும் ஒரு முக்கியமான இலக்காகவே உள்ளது. இலங்கையின் 1978-ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி, கல்வி என்பது ஓர் 'அடிப்படை உரிமை' என்பதை விட, அரசாங்கம் பின்பற்ற வேண்டிய ஒரு 'வழிகாட்டும் கொள்கையாகவே' வகைப்படுத்தப்பட்டுள்ளது.***

அடிப்படையில் கேகாலை மாவட்டமும் மலையகப்பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதில் எவ்வித மாற்று கருத்துமில்லை. கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த அநேகமான பாடசாலைகளில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளை களே கல்வியைப் பெற்று வருகின்றார்கள். இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக அடி மைப்படுத்தப்பட்ட சமூகங்கள் முழுமையான உரிமைகளை அனுபவிக்க முடி யாத சூழ்நிலையில், அவர்களின் பிள்ளைகளும் கல்வி உரிமை அற்றவர்களா கவே காணப்படுகின்றனர்.1945-ஆம் ஆண்டு C.W.W. கன்னங்கரவால் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டாலும் மலையகப் பிள்ளைகளுக்கு அதற்கான வாய்ப்பு எட்டப்படவில்லை என்பது நிதர்சனமான உண்மையாகும். அதற்கு விதி விலக்கு கேகாலை மாவட்டத்தின் கல்வி நிலை. 1960-இற்கு பின்னர் மலையகத் தில் கல்வி கற்கும் வசதிவாய்ப்பு படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்திருந்தாலும் இன்றுவரை அது முழுமையாகக் கிடைக்கின்றது என்று சொல்லிக் கொள்ளும் அளவிற்கு இல்லை.

இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் மலைய கத் தொழிலாளர்களின் பங்களிப்பானது, சில தருணங்களில் உரிய அங்கீகார மின்றி மறக்கடிக்கப்படுவது கவலைக்குரியதாகும். இந்நாட்டின் பொருளாதாரக்

கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் மலையகச் சமூகத்தின் சந்ததியினருக்கு, தரமான மற்றும் வளமான கல்வியை உறுதிப்படுத்துவதுஅரசின் கட்டாய கடமையாகும்.

கல்வி உரிமை என்பது வெறுமனே ஒவ்வொரு அரசாங்கமும் பாடசாலைகளை அமைப்பதல்ல அதற்கு மாறாக அனைவருக்கும் கல்வி சம உரிமையாக அடையாளப்படுத்தப்பட வேண்டும். அனைவருக்கும் கற்பதற்கான சம வாய்ப்புகளையும் அதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் போதே சமத்துவமான கல்வி; சம உரிமையுடையதாகக் கொள்ள முடியும். கல்வி ரீதியாக முதன்மையான பாடசாலையை உருவாக்குவதில் கேகாலை மாவட்டம் துர்பாக்கிய நிலையைச் சந்தித்துள்ளது என்னது நிதர்சனமான உண்மையாகும். வளப் பற்றாக்குறை, ஆசிரியர் இடமாற்றம் மற்றும் அரசியல் தலையீடு போன்ற சில காரணிகள் இதன் பின்னணியில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

எந்த ஒரு பாடசாலையிலும் வளங்கள் சரியாகக் கிடைக்கப்பெறுகின்ற சமயத்தில் பாடசாலை நிர்வாகக் குழுவால் பாடசாலையைச் சிறப்பாக வழி நடத்த முடியும். சரியான வளப் பயன்பாடு இல்லாத தன்மையினால் மாணவர்கள் கல்வியைக் கற்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதோடு, வளமான பாடசாலைக்குத் தடையாகவும் அமைகின்றது. குறிப்பாக தமிழ் பாடசாலைகளே இத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. பௌதீக வளம் பாடசாலைக்கு சரியாகக் கிடைக்கப்பெறாத தன்மையில் பாடசாலையின் கல்வி வளர்ச்சி சிக்கலாக அமைகின்றது. கேகாலை மாவட்டத்தில் தமிழ் மொழிமூல உயர்தர விஞ்ஞானப் பிரிவு வசதிகள் மிகச் சில பாடசாலைகளில் மட்டுமே காணப்படுவதுடன், பெரும் பாலான தோட்டப்புற மாணவர்கள் உயர்தர விஞ்ஞானக் கல்வியைத் தொடர அண்டை மாவட்டங்களை அல்லது தொலைதூர நகரங்களை நாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்றும் நீடிக்கிறது.

இத்தகைய சவால்கள் நிறைந்த சூழலில், கேகாலை மாவட்டத்தின் கல்வி நிலை எவ்வாறு மேம்பட முடியும் என்பது ஒரு பெரும் வினாக்குறியாகவே உள்ளது. குறிப்பாக, தமிழ் மொழி மூலப் பாடசாலைகளே இக்கட்டமைப்புசார் நெருக்கடிகளை மிக அதிகளவில் எதிர்கொள்கின்றன. உயர்தர விஞ்ஞானப் பிரிவைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதும், இருக்கின்ற ஒரு சில பாடசாலைகளிலும் நிலவும் ஆய்வுக்கூட வசதியீனம் மற்றும் பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் என்பன மாணவர்களின் உயர் கல்விக் கனவைச் சிதைப்பதாக உள்ளன. இதன் நேரடி விளைவாக, கேகாலை மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான மற்றும் மருத்துவப் பீடங்களுக்குத் தமிழ் மொழிமூல மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது என்பது தற்காலத்தில் ஓர் எட்டாக்கனியாகவே மாறி வருகின்றது. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் நிலவும் இந்த பாரிய கல்வி இடைவெளி, அம்மாவட்டத் தமிழ் மாணவர்களின் எதிர்காலத் தொழிற்றுறை வாய்ப்புகளையும் சமூக அந்தஸ்தையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. எனவே, ஒரு சில பாடசாலைகளுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்காமல், மாவட்டத்தின் மூலை முடுக்குகளில் உள்ள அனைத்துத் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுக்கும் வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளிப்பதன் மூலமே இந்நிலையை மாற்றியமைக்க முடியும்.

> ***சரியான வளப் பயன்பாடு இல்லாத தன்மையினால் மாணவர்கள் கல்வியைக் கற்பதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதோடு, வளமான பாடசாலைக்குத் தடையாகவும் அமைகின்றது.***

தேசிய பாடசாலைகளின் அந்தஸ்தைப் பெற்றுக்கொள்வது என்பது, தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் நீண்டகால எதிர் பார்ப்பாகவே இருந்து வருகின்றது. கடந்த 'நல்லாட்சி' அரசாங்கக் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட 'ஆயிரம் பாடசாலைகள்' திட்டத்தின்கீழ், சில தமிழ் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டன. இருப்பினும், அத்தகைய பாடசாலைகளைத் தரம் உயர்த்துவதற்கான தொடர் நடவடிக்கைகள் தற்போது கைவிடப் பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.





எடுத்துக்காட்டாக தெஹியோவிட்ட கல்வி வலயத்தைச் சேர்ந்த சிறி/ கணேசா தமிழ் மகா வித்யாலயம், தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயம், யட்டியந்தோட்ட சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் தெரணியகல பிரதேசத்தில் காணப்படும் கதிரேசன் தமிழ் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகப் பெயரளவில் அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்கான செயற்றிட்டங்கள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இப்பாடசாலைகளில் உயர்தரத்தில் கலைப்பிரிவு மாத்திரமே காணப்படுவதும், அத்துறையிலும் கற்பிப்பதற்குப் போதிய ஆசிரியர்கள் இல்லாதிருப்பதும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பாரிய முட்டுக்கட்டைகளாக அமைந்துள்ளன.

குறிப்பாக சமூகத்தில் உள்ள கல்வி கற்ற சில மத்தியதர வகுப்பினர் தங்களுடைய பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக மேல், மத்திய மாகாணங்களை நோக்கி இடம்பெயர்கின்றனர். இப்பிரிவினரில் ஆசிரியர்களும் உள்ளடங்குவதால் கேகாலை மாவட்டத்தில் காணப்படும் பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். அதனால் தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதோடு பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்குப் பாரிய சவாலாகவும் உள்ளது. அது மட்டுமன்றி ஆசிரியர் இடமாற்றக் கொள்கையில் முறையான கட்டமைப்பு இல்லாத காரணத்தாலும் அரசியல் தலையீடுகள் அதிகளவில் காணப்படுவதாலும் இதுவொரு பாரிய நெருக்கடியாகவே காணப்படுகின்றது.

ஏனைய மாவட்டப் பாடசாலைகளுடன் கேகாலை மாவட்டப் பாடசாலைகளை ஒப்பிடுகையில் வள ரீதியாகப் பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றது. குறிப்பாக சில பாடங்களுக்கு வகுப்பறைக் கற்றல் மட்டுமன்றிக் கற்பித்தலுக்கு அப்பால் சில நுணுக்கமான அவதானிப்புகளின் மூலம் சில பாடங்களைக் கற்பதற்கான வசதி கேகாலை மாவட்டத் தமிழ் பாடசாலைகளில் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றமை மிக முக்கியமானதொரு பிரச்சினையாக இருப்பதோடு பாடசாலைக் கல்வி முன்னேற்றத்தில் பெரும் சவாலாக உள்ளது. இன்று பாடசாலைக் கல்வி துரிதமாக வளர்ச்சி அடைந்துவருகின்ற நிலையிலும் நவீன வகுப்பறைகள் இல்லாத பாடசாலைகள் அதிகமாகவே உள்ளன.

> ***“ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும் பில்லியன் கணக்கில் வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்ட போதிலும், மலையகப் பிரதேசப் பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகள் இன்னும் நிறைவு செய்யப்படாமல் இருப்பதே அத்திட்டங்களின் பயனைத் தீர்மானிக்கும் காரணியாக உள்ளது.”***

தமிழ் பாடசாலைகளில் காணப்படும் வளங்களையும் சிங்களப் பாடசாலைகளில் காணப்படும் வளங்களையும் ஒப்பிட்டு நோக்குகையில் சிங்களப் பாடசாலைகளை விட தமிழ் பாடசாலைகளில் வளங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன என்பது கசப்பான உண்மையாகும். இதற்குச் சான்றாக, கேகாலை மாவட்டத்தில் இயங்கி வரும் பெரும்பாலான தமிழ்ப் பாடசாலைகளில் முறையான விஞ்ஞான ஆய்வுக்கூட வசதிகள் இல்லாமையைக் குறிப்பிடலாம். பாடசாலைக் காலத்தில் ஓர் ஆய்வுகூடத்தையே நேரில் கண்டிராத மாணவர்கள் இன்றும் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்பது வேதனைக்குரிய நிதர்சனமாகும். சில பாடசாலைகளில் ஆய்வுகூடங்களுக்கான சிறிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்பட்ட போதிலும், அவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான பாட ஆசிரியர்கள் போதியளவில் இல்லை. ஒருபுறம் பௌதீக வளப் பற்றாக்குறை, மறுபுறம் இருக்கின்ற வளங்களைச் சரியாகக் கையாள்வதற்கான ஆசிரியர் வளப் பற்றாக்குறை என இருமுனை நெருக்கடிகளுக்குள் இப்பாடசாலைகள் சிக்கியுள்ளன. இத்தகையதொரு பின்னணியில், மாணவர்களின் அறிவுத் திறனும் ஆக்கபூர்வமான சிந்தனை ஆற்றலும் எவ்விதம் விருத்தியடையும் என்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

இந் நிலையில் ‘எங்கே சமத்துவமான கல்வி? மலைக பிரதேச மாணவர்கள் கல்வி உரிமையை முழுமையாக அனுபவிக்கின்றார்களா?’ என்ற கோள்வியை கட்டாயம் எழுப்ப

வேண்டிய நிலை உள்ளது. அதே வேளை அரசியல் தலை யீடுகள் மலையக மாணவர்களின் கல்வியில் பாரிய நெருக் கடியை ஏற்படுத்தும் நிலையில் கல்வி எப்படி சம உரிமைக் குரியது என்ற ஐயம் தோற்றம் பெறுவது தவிர்க்கமுடிவ தில்லை. ஆதாரமாக,

கேகாலைக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் தெஹியோவிட்ட வலயத்தைச் சேர்ந்த கே/ தெஹி யட்டதேரிய தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் சிறி/ கணேசா தமிழ் மகா வித்தியாலயம் போன்ற பாட சாலைகளில் இதுவரை காலமும் பாடசாலைக்குச் சொந்த மான விளையாட்டு மைதானம் இல்லாத நிலை காணப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தன்மையில் எவ் வாறு மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடுகள் வளர்க்கப்படும், கற்பதைத் தவிர ஏனைய திறன்களை எவ் வாறு அவர்கள் வளர்த்துக் கொள்வது? எங்கே அரசாங்கத் தின் தேர்தல் கொள்கைகள்? அது வெறும் எழுத்து என் பதை மேற்குறிப்பிட்ட பாடசாலைகளின் நிலை தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

பாடசாலைகளின் அடிப்படைப் பௌதீக வளங்களைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அடுத்தடுத்து வரும் அர சாங்கங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஆட்சி மாற்றத் தின் போதும் பில்லியன் கணக்கில் வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்ட போதிலும், மலையகப் பிரதேசப் பாடசாலை களின் அடிப்படைத் தேவைகள் இன்னும் நிறைவு செய்யப்ப டாமல் இருப்பதே அத்திட்டங்களின் பயனைத் தீர்மானிக்கும் காரணியாக உள்ளது. ஒரு நாட்டின் மிக உயரிய சொத்து அந்நாட்டின் சிறுவர்களே; ஆனால், அவர்களுக்கான முறை யான கல்வியை வழங்குவதில் நிலவும் அரசியல் தலையீடு களும் திட்டமிடல் பாரபட்சங்களும் பெரும் தடையாக அமைந் துள்ளன.

கேகாலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளு மன்றத்திற்குத் தமிழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்ற போதிலும், தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் தற் போதைய பின்னடைவானது அவர்களின் செயற்பாடுகள் குறித்த கேள்விகளை எழுப்புகின்றது. கல்வி மேம்பாட்டிற் கான முறையான அழுத்தங்களை வழங்க வேண்டிய மக்கள் பிரதிநிதிகள், இவ்விடயத்தில் காட்டும் மெத்தனப் போக்கு மாணவர்களின் எதிர்காலத்தைப் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. இந்நிலை தொடருமானால், எதிர்காலச் சந்ததியினரின் சமூக-பொருளாதார நிலை இன்னும் அதல பாதாளத்திற்கே செல்லும். எனவே, மக்கள் தமது வாக்குரிமை யின் வலிமையை உணர்ந்து, சமூகப் பொறுப்புணர்வுடன் விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். தகுதி யற்ற பிரதிநிதித்துவங்களைத் தவிர்த்து, கல்வி மற்றும் சமூக மாற்றத்தில் உண்மையான அக்கறை கொண்டவர்களைத் தெரிவு செய்வதே இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழியாகும்.

கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற விசேட பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவி வருவது கேகாலை மாவட்டக் கல்வியின் மற்றொரு பெரும் பலவீனமாகும். அத்தகைய பாடங்களுக்குரிய தகுதி யான ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், வேறு பாடங் களைக் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கொண்டு விசேட பாடங் களைக் கற்பிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படு கின்றது. இதன் நேரடி விளைவாக, மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் பாரிய வீழ்ச்சியைச் சந்திக்கின்றன. இவ்வாறு பெறுபேறுகள் வீழ்ச்சியடையும் போது, சம்பந்தப்பட்ட பாடசா லைகள் 'அடைவுநிலை குறைந்த பாடசாலைகள்' என அடை யாளப்படுத்தப்படுகின்றன. இத்தகைய முத்திரை குத்தப்ப டுதல், அந்தப் பாடசாலைகளுக்குக் கிடைக்க வேண்டிய போதிய வசதி வாய்ப்புகளையும் அபிவிருத்தி நிதிகளையும் தடுத்தோ அல்லது தாமதப்படுத்தியோ விடுகின்றது. இவ் வாறான ஒரு நச்சுச் சுழற்சியானது, பின்தங்கிய பாடசாலை

“ஒரு நாட்டின் மிக உயரிய சொத்து அந்நாட்டின் சிறுவர்களே; ஆனால், அவர்களுக்கான முறையான கல்வியை வழங்குவதில் நிலவும் அரசியல் தலையீடுகளும் திட்டமிடல் பாரபட்சங்களும் பெரும் தடையாக அமைந்துள்ளன.”



களை மேலும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளுவதுடன், மாண வர்களின் கல்வி எதிர்காலத்தையும் கேள்விக்குள்ளாக்கு கின்றது.

மலையகச் சமூகத்தைப் பொறுத்தவரையில், பெரும்பாலான குடும்பங்கள் கடும் வறுமைக்கோட்டின் கீழேயே வாழ்கின் றன. இந்தப் பொருளாதார நெருக்கடியானது, பிள்ளைகளின் உயர்தரக் கல்வியைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக உள்ளது. வசதியுள்ள ஒரு சில பெற்றோர்கள் தமது பிள்ளை களை நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு அனுப்பி உயர்கல் வியைத் தொடரச் செய்தாலும், பெரும்பான்மையான பெற் றோர்களுக்கு அது எட்டாக்கனியாகவே உள்ளது. இத்த கைய சூழலில், தோட்டப்புற மாணவர்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே தரமான உயர்தரக் கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

தோட்டப்புறங்களில் தற்போது உயர்தர வகுப்புக் களைக் கொண்டுள்ள ஒரு சில பாடசாலைக ளிலும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பௌதீக வளக் குறைபாடுகள் போன்ற பாரிய சவால்கள் நிலவுகின்றன. இத்தகைய உட்கட்டமைப்புசார் பலவீனங்கள் காரணமாக, அம்மாணவர்களுக்கு முழுமையான மற்றும் தரமான கல்வியை வழங்கு வதில் இப்பாடசாலைகள் இன்றும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. இது ஒருபுறம் மாணவர் களின் கல்வி ஆர்வத்தைக் குறைப்பதுடன், மறுபுறம் அவர்களது எதிர்காலத் தொழிற்றுறை வாய்ப்புகளையும் முடக்கி விடுகின்றது.

ஒவ்வொரு குடிநபருக்கும் சமூகத்தின் அனைத் துத் தளங்களிலும் சம வாய்ப்புகள் வழங்கப்படு வதே உண்மையான சுதந்திரத்தின் அடையாள மாகும். அதிலும் குறிப்பாக, கல்வித்துறையில் சமத்துவமான வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்படு வது ஒரு நாட்டின் ஜனநாயகப் பண்பிற்கு மிக அவசியமானதாகும். மலையகச் சமூகத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திலும் கல்வி என்பது வெறும் அறிவு சார் கருவி மட்டுமல்ல; அது அச்சமூகத்தின் இருப்புக்கான ஆதாரமுமாகும். கல்வி வளர்ச்சி அடையும் போது மாத்தி ரமே, ஒரு சமூகம் நீண்டகாலமாகத் திணிக்கப் பட்ட அடிமைத்தன மனப்பான்மையிலிருந்து முழுமையாக விடுபட்டு, சுயமரியாதையுடனும் உரிமையுடனும் வாழக்கூடிய நிலையை எட்ட முடியும்.

மலையக மாணவர்களைப் பொறுத்தவரை, ஆரம்பக் கல்வி முதலே ஆசிரியர் பற்றாக்குறை, பௌதீக வளக் குறைபாடு போன்ற சவால்களுக்கு மத்தியிலேயே தமது கல்விப் போராட்டத்தைத் தொடங்குகின்றனர். இத்தகைய இடர்பாடு களைக் கடந்து, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட் சையில் (O/L) சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற போதிலும், உயர்தரத்தில் தாம் விரும்பிய பாடத்துறையைத் தெரிவு செய்வதில் அவர்கள் பாரிய தடைகளை எதிர்கொள்கின் றனர். குறிப்பாக, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற துறைகளில் பயில வேண்டுமாயின், அவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளை நாட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்ப டுகின்றனர். இருப்பினும், இம்மாணவர்களின் குடும்பப் பொருளாதாரச் சூழல் அத்தகைய நகர்ப்புறக் கல்விக்கான செலவுகளைத் தாங்கிக்கொள்ளும் நிலையில் இல்லை. இத்தனைப் போராட்டங்களையும் கடந்து, உயர்தரத்தில் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழகத் திற்குத் தெரிவு செய்யப்பட்டாலும், உயர்கல்வியைத் தொடர் வதற்கான வாழ்வாதாரச் செலவுகள் அவர்களது பொருளா தார நிலையை மேலும் நசுக்கிக் கொண்டிருக்கின்றன. இத னால், திறமையுள்ள பல மாணவர்கள் தமது உயர்கல்விக் கனவை பாதியிலேயே கைவிட வேண்டிய துரதிர்ஷ்டவசமான சூழல் இன்றும் நீடிக்கின்றது.

எனவே, மலையகப் பிரதேசப் பாடசாலைகள் எதிர்கொள் ளும் இந்த நீண்டகாலச் சவால்களைக் களைவதற்கு அர சாங்கம், சிவில் சமூக அமைப்புகள் மற் றும் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து காத்திரமான நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும். குறிப்பாக, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாடங்க ளுக்கான ஆசிரியர் நியமனங்கள் உடன டியாக அதிகரிக்கப்பட வேண்டியதுடன்; நவீன வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் மற்றும் நூலக வசதிகள் போன்ற உட்கட்ட மைப்பு மேம்பாடுகள் போர்க்கால அடிப் படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு கல்வி வலயத்திலும் போதிய ளவு பாடசாலைகளில் உயர்தர விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவுகள் அறிமுகப்படுத் தப்படுவதோடு, பெயரளவில் மாத்திர மன்றி நிர்வாக ரீதியாகவும் அவை முறை யான தேசிய பாடசாலைகளாகக் கட்ட மைக்கப்பட வேண்டும். அனைத்திற்கும் மேலாக, கல்வித்துறையில் நிலவும் தேவை யற்ற அரசியல் தலையீடுகள் முற்றாகத் தவிர்க்கப்பட்டு, தகுதியின் அடிப்படை யிலான நிர்வாகச் சீர்திருத்தங்கள் உறுதிப் படுத்தப்பட வேண் டும். இத்தகைய ஆக்கபூர்வமான மாற்றங் களின் மூலமே மலையகக் கல்வியின் தற்போதைய அவல நிலையை மாற்றியமைக்க முடியும். மலையகச் சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் கல்வி மாத்திரமே மிகச்சி றந்த அடித்தளமாகும். கல்வி வளர்ச்சி அடையும் போது மாத்திரமே, அச்சமூகம் சமூகச் சமத்துவத்தையும் உண்மை யான சுதந்திரத்தையும் வென்றெடுத்து, நாட்டின் தேசிய வளர்ச்சிக்கான தனது பங்களிப்பை இன்னும் வலுவாக வழங்க முடியும்.

> ***மலையகச் சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திலும் கல்வி என்பது வெறும் அறிவுசார் கருவி மட்டுமல்ல; அது அச்சமூகத்தின் இருப்புக்கான ஆதாரமுமாகும்.***

kobinath.n@thaiveedu.com





உடன்பாடான சூழல் ஒன்றைக் கட்டியெழுப்பல்

- அகமட் பிஸ்தாமி

கண்ணுக்குக் கவர்ச்சியான, மரியாதை செய்யப்படுகின்ற, திருப்திக ரமான, பாதுகாப்பான ஒரு சூழலில் வாழ்வதற்கு எல்லோரும் விரும் புவர். அசௌகரியங்களுடனும் அருவருப்புடனும் அச்சத்துடனும் வாழ யாரும் விரும்பமாட்டார்கள். குன்றும் குழியும் நிறைந்த பாதைகளில் பயணிப்பதை விட செப்பனிடப்பட்ட பாதைகளில் பயணிக்கின்ற பொழுது தானே வாகனங்களுக்கும் அதில் பயணம் செய்கின்றவர்க ளுக்கும் அசௌகரியங்கள் எதுவும் இல்லாமல் மறக்க முடியாத பயணமாக அது அமையும்.

அதுபோலதான் கற்றல் கற்பித்தல் சூழலும் நோக்கப்படுகிறது. எந்த விதமான பௌதீக வளங்களும் இல்லாமல் மனித வளங்களும் இல்லாமல் அலுப்போடும் அழுத்தத்தோடும் பாடவிதானங்களை மூளையில் திணிப்பதற்கு மாணவர்களின் இரு செவிகளையும் பலவந் தமாகப் பயன்படுத்தச்செய்து, அதிகாரத்துக்குட்படுத்தி, ஜீரணிக்க முடியாத, சுமக்க முடியாத எழுத்துப் பயிற்சிகளைக் கைகளுக்கு கொடுத்து பரீட்சையின் பொழுது அச்சத்தையும் நடுக்கத்தையும் உரு வாக்குவதால் கற்றல் ஒருபோதும் வேண்டாம் என வெறுக்கும் அளவுக்கு இன்றைய கல்விமுறை இளைய தலைமுறையினரிடம் வந்து சேர்ந்திருக்கிறது.

கற்றல் இயல்பானதாக, இனிமையானதாக, சுகமானதாக, சௌகரியமா னதாக, வாழ்நாள் நீடித்ததாக மாறவேண்டும். மாணவர்களது மனப் பாங்கு, நடத்தை, மனவெழுச்சி போன்ற அனைத்திலும் உடன்பாடான மாற்றம் (positive change) ஒன்றை நிலைநாட்ட வேண்டுமாயின் கற்றல் சூழல் ஆரோக்கியமானதாக அழகானதாக பாதுகாப்பானதாக ரம்யமானதாக இருக்க வேண்டும். இது சாதாரண எதிர்பார்ப்பு.

நாம் எமது அன்றாட வாழ்வுக்காக உழைத்துக் களைக்கின்ற பொழுது ஓய்வெடுப்பதற்காக எவ்வளவு அழகான அறையை, காற்றோட்டமான



கற்றல் இயல்பானதாக அமைய வேண்டுமாயின் இயல்பான கற்றல் சூழல் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். வகுப்பறைக்குள் மாத்திரம்தான் கற்றல் நிகழ வேண்டும் எனக் கருதக்கூடிய ஆசிரியர்கள் உள்ளவரை, பரீட்சையைக் காட்டிக் காட்டியே மாணவர்களது எதிர்காலத்தில் மண் போட்டு விடக் கூடிய நிலையை உருவாக்கிவிடுவார்கள் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இடத்தை அதற்குத் தெரிவு செய்கின்றோம்! அப்படியாயின் எமது வாழ்வில் திருப்புமுனையாக (turning point) அமையக் கூடிய கற்றல் நிகழும் சூழல் இதைவிட உயிர்த்துடிப்பு மிக்கதாக மனதைக் கவரக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது தர்க்க ரீதியாக உண்மை அல்லவா? தர்க்கம் கடந்து இயல்பு வாழ்க்கையிலும் அத்தகைய சூழலில் கற்கின்ற வர்கள் தான் கல்வியை அதற்கேற்றாற் போல நடைமுறைப்ப டுத்துவார்கள். கல்வியை விரும்புவார்கள். நேசிப்பார்கள். ஊக்குவிப்பார்கள். அதனை அகிலமெங்கும் பரப்புவதிலே பங்களிப்பார்கள். பணியாற்றுவார்கள்.

எந்த வசதிகளும் வாய்ப்புகளும் வளங்களும் கிடைக்காதவர் கள்தான் கல்வியைக் கசப்பாக உணர்வார்கள். கல்வியிலே வெறுப்பும் விரத்தியும் அதிருப்தியும் கொண்ட தரப்பாக இவர் கள்தான் மாறுவார்கள். இவர்கள் தமது அடுத்த தலைமு றைக்குக் கல்வி உரிய முறைப்படி கிடைப்பதிலே நம்பிக்கை இழந்தவர்கள். இவர்களது நம்பிக்கை இழப்புக்கு நியாயமான காரணிகளைக் கண்கூடாக கண்டவர்கள். கடந்து வந்தவர்கள். எனவே அவர்கள் கல்விக்கு ஊக்கமளிக்காதவர்களாகத் தமது வாரிசுகளையும் கல்வியின் பால் தூண்டாதவர்களாக இருப்பார்கள்.

இது ஒரு நாட்டின் வளமான எதிர்காலத்துக்குச் சாவு மணியா கவே இருக்கும். வரவேற்கத்தக்க ஒன்றாக ஒரு பொழுதும் இருக்காது.

உதாரணமாக இலங்கையில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த தலைநகரப் பாடசாலையாகிய ரோயல் கல்லூரியை எடுத்துக் கொண்டால் அதன் பௌதிகக் கட்டமைப்பு வள விநியோகம் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் அது கொண்டிருக்கின்ற செல்வாக்கு, பிரபல்யம், அனுசரணை, அதனுடைய பிம்பம் போன்றன மக்கள் மனதில் ஆழ வேரூன்றி இருப்பதன் காரண மாகத் தான் அதில் கற்க வேண்டும், நுழைய வேண்டும் என்ற ஆர்வம் பலரின் மத்தியிலும் ஏற்படுகின்றது. ஆனால் நாட்டில் இருக்கின்ற ஏனைய பாடசாலைகளிலும் அதே கலைத்திட் டம்தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பாடத்திட்டங்களும் பயிற்சி முறைகளும் ஒன்றாகத்தான் உள்ளன. இருப்பினும் அந்தப் பாடசாலை மாத்திரம் அவ்வளவு பிரபல்யம் வாய்ந்த ஒன்றாகக் காட்டப்படுவதற்கான பின்புலம் அதனுடைய அழகிய பௌதிகக் கட்டமைப்புத் தான். அங்கு உண்மை யாகவே பரீட்சை மையப்படுத்தப்பட்ட கல்வியின்பால் ஈர்க்கப் படுவதனை விடவும் வாழ்நாள் நீடித்த கல்வியை, வாழ்க் கைக்கான பயனுள்ள கல்வியை, வழிகாட்டல்களை, ஒழுக்க விழுமியங்களை, இங்கிதங்களை, தலைமைத்துவப் பண்புகளை, சமூக மரபுகளைக் கற்றுக் கொள்கின்றார்கள். பெற்றுக் கொள்கின்றார்கள். கண்டுகொள்கின்றார்கள். இவை அவர்களுடைய வாழ்க்கையில் நிச்சயம் நிரந்தர வாழ்வியல் மாற்றம் ஒன்றுக்கான ஊன்றுகோலாக அமைந்து விடுகின்றன.

வீட்டுச் சூழலாகட்டும் பாடசாலைச் சூழலாகட்டும் எந்தளவு தூரம் கற்பவர்களது மனதைக் கவரும் வகையில் நிர்மாணிக் கப்படுகிறதோ அங்கு தரமான கல்வி நிகழும் என்பதை மறுக்க முடியாது.

பாடசாலையை எடுத்துக் கொண்டால் ஒட்டுமொத்தப் பாடசாலைக் கட்டமைப்பும் அழகானதாகக் கண்களைக் கவ ரக்கூடியதாக இருக்க வேண்டும். வகுப்பறைகளை எடுத்துக் கொண்டால் குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களது வயது மட்டம், ஆசை ஆர்வங்கள் அவ்வாறே கலைத்திட்டம் பாடங்களுக்கு ஏற்ப காட்சிப்படுத்தல்கள் இருக்குமாயின் அங்கும் ஆரோக்கி யமான, தரமான கற்றல் நிகழும். அதேபோல வீட்டுச் சூழலும் கற்றலுக்கு உகந்ததாகத் தயார்ப்படுத்தப்படுகின்ற பொழுது கற்றலில் ஒருவகையான சங்கிலித் தொடரான இணைப் பாக்கம் ஏற்படும்.

வகுப்பறைக்கு வெளியில் கூட மாணவர்களது கலை இலக் கிய ரசனையை மேம்படுத்தும் வகையிலும் பூமியை வளப்ப டுத்துகின்ற பணியைச் செய்யக்கூடிய தன்மையை ஊக்குவிக் கக்கூடிய வகையில் பூந்தோட்டங்களை அமைப்பதற்கான செயற்றிட்டங்களை வகுப்பது, பயன் தரக்கூடிய மரங்களை நடுவதற்கு வழி காட்டுவது, பராமரிக்கச் செய்வது போன்றன, கற்றல் என்பது புத்தகங்களோடும் பரீட்சைகளோடும் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல; சூழலை நேசிப்பது, பலப்படுத் துவது, அழகூட்டுவது போன்றனவும் வாழ்நாள் நீடித்த கல்வி என்பதை மாணவர்கள் உணரவும் செயலாற்றவும் செய்யும். இது பாரம்பரிய கற்றல் கற்பித்தல் பாணிகளில் இருந்து சற்று விலகி தம்மைத்தாமே விடுவித்துக்கொண்டு இயல்பான, தரமான கற்றலை உறுதி செய்யக்கூடிய ஒரு சூழலை உரு வாக்குவதுதான் இன்றைய கல்வியின் நோக்கம் என்பதனை மாணவர்கள் உணர வேண்டும். அப்போதுதான் அவர்கள் தங் களுக்குரிய உண்மையான கல்வியைப் பெற்றுக் கொள்வ தற்கு முயற்சிப்பர்.

கற்றல் இயல்பானதாக அமைய வேண்டுமாயின் இயல்பான கற்றல் சூழல் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். வகுப்ப றைக்குள் மாத்திரம்தான் கற்றல் நிகழ வேண்டும் எனக் கரு தக்கூடிய ஆசிரியர்கள் உள்ளவரை, பரீட்சையைக் காட்டிக் காட்டியே மாணவர்களது எதிர்காலத்தில் மண் போட்டு விடக்

கூடிய நிலையை உருவாக்கிவிடுவார்கள் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

ஆனால், பரீட்சைக்கு அப்பால் ஒரு வாழ்க்கை நமக்காக இருக்கிறது என்ற பாடங்களைக் கற்றலுக்கூடாக கையளிக்க முடியுமாக இருப்பின் மாணவர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எதையாவது கற்றுக் கொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள். இத்தகைய கற்றல் தான் வாழ்நாள் நீடித்த கற்றலாக மாறுவதோடு பயனுள்ள கற்றல் சந்தர்ப்பங்களாகவும் மாறும்.

வேறுபட்ட வாழ்வியல் சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கக்கூடிய மாணவர்கள் தமது கற்றலை நேசிக்க, மதிக்கத்தக்க உடன்பாடான கற்றல் சூழல் நிச்சயம் உருவாகும் என்பது சர்வதேச தரம் வாய்ந்த ஆய்வுகள் வழியாக நிறுவப்பட்ட உண்மையாகும்.

இது தொடர்பாக மேலும் நோக்கும் போது,

- பௌதிகரீதியான வசதி வாய்ப்புகள் வளங்கள் கிடைக்கின்ற மாணவர்கள்
- மானசீக ரீதியாக உள்ளார்ந்த ஊக்கமும் உத்வேகமும் தூண்டலும் கிடைக்கின்ற மாணவர்கள்
- மனவெழுச்சிகளைக் கருத்தில் கொண்ட வகையில் உதவி, ஒத்தாசை கிடைக்கின்ற சூழலில் உள்ள மாணவர்கள்

நிச்சயம் தரமான, வளமான ஆரோக்கியமான கல்வியைப் பெற்றுக்கொண்டே இருப்பார்கள். இத்தகைய அருமையான சூழமைவை உருவாக்கிக் கொடுக்கும் பட்சத்தில்தான் மாணவர்களிடம் இயல்பாகக் காணப்படக்கூடிய கல்வியின் மீதான ஈடுபாட்டை அதிகரித்து கற்றலின் மீது திசை முகப்படுத்த முடியும். அது மட்டுமல்ல அவர்களுடைய உள்ளார்ந்த திறமைகளைக் கல்விகூடாக உச்ச நிலையில் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பமும் இங்குதான் உருவாகும். இத்தகைய சூழல் அமைகின்ற பொழுது அதிலே கற்கக்கூடிய மாணவர்கள் இயல்பாகத் தன்னுடைய திறமைகளைப் போட்டி போட்டுக் கொண்டு வெளிப்படுத்த முன்வருவார்கள். அவர்களை ஊக்குவித்து, வெகுமதி அளித்து முன்னோக்கித் தள்ளுகின்ற பட்சத்தில் கற்கின்ற பாடசாலை கற்பிக்கின்ற ஆசிரியர் வாழ்கின்ற சூழல் மட்டுமன்றி அந்த நாடும் நிச்சயம் பயன் பெறும்.

உளவியல் ரீதியாக நோக்கும் போது இத்தகைய பௌதிக வளங்கள் பெறாத மாணவர்கள் கற்கின்ற சூழலில் எதிர்மறையான நடத்தைகள் வெளிப்படுவதற்கும் சாத்தியப்பாடுகள் உள்ளன.

'எப்பொழுதும் இருட்டைத் திட்டிக் கொண்டிருப்பதை விடவும் ஒரு மெழுகுவர்த்தியைப் பற்ற வைத்தால்...' இருள் தானாக விலகிவிடும் அல்லவா...

இந்த யதார்த்தங்களைக் கருத்தில் கொண்டு, எமது மாணவர்களின் நிகழ்காலம் வளமாக அமைய எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய அவர்களது அடிப்படைக் கற்றலைப் பெறக்கூடிய வகுப்பறை, பாடசாலை, வீட்டுச் சூழல் ஆகிய மூன்றையும் உடன்பாடான சூழமைவாக மாற்றி அமைக்க முன்வருவோம். அதுவே எதிர்காலத்தில் நாட்டின் சிறந்த பிரஜைகளை உருவாக்கவும் நாட்டை வளமானதாக மாற்றவும் நாம் செய்யும் உபகாரமாக அமையும்.

bisthamy.ahamed@thaiveedu.com





12

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

சமூக வாழ்வு: சுதந்திரமும் கட்டுப்பாடுகளும்

- எஸ்.கே.விக்னேஸ்வரன்



tg.theeban@gmail.com

பிரபல்யத்திற்கு எதிரான வழக்கு:

ஓர் உயர்நிலைப் பள்ளியின் செய்தித்தாளில் ஒரு கருத்தோவியம் புன்னகையுடன் இருக்கும் இரண்டு முகம் கொண்ட ஒரு பெண்ணைக் காட்டியது. அதன் தலைப்பு: 'மிஸ் விஷி வாஷி, பிரபலத்தைத் தேடி!' ஒரு கல்லூரியின் செய்தித்தாளில் இதேபோன்ற ஒரு கருத் தோவியம் இப்படிக் கூறியது: 'மிஸ் பிரபலத்தைச் சந்திக்கவும், எங்கள் விடுதியின் வாசற் சாக்கு! (doormat)' இந்தக் கருத்தோவி யங்கள் பிரபலத்துக்காக ஓடுபவர்களிடம் நவீன இளைஞர்களின் அணுகுமுறைகளைச் சித்தரிக்கின்றன. அவர்கள் மதிக்கப்படுவ தில்லை; அவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். அத்துடன் அவம திக்கவும் படுகிறார்கள். இருப்பினும், பல பெற்றோர்கள் தொடர்ந்து மக்கள் தொகையின் அபிப்பிராயங்களுக்கு முன்னுரிமை அளித்து, தங்கள் பதின்ம வயதினருக்குப் பழைய கால அறிவுரைகளை வழங்குகிறார்கள்.

பதினாறு வயது இங்க்ரிட் கூறுகிறான்:

'ஆண்கள் சரி, பெண்கள் சரி இருவர் மத்தியிலும் பிரபலமாக இருப்பது எப்படி என்பது குறித்து என் அம்மாவிடம் ஓர் உறுதியான சூத்திரம் இருக்கிறது: 'எப்போதும் இனிமையாக இருங்கள், சிரித் துக் கொண்டே இருங்கள், உற்சாகமாக இருங்கள், ஆர்வம் காட் டுங்கள், பெண்களுடன் வாக்குவாதம் செய்யாதீர்கள், ஒரு பைய னுடன் முரண்படாதீர்கள்?. நான் என் அம்மாவிடம் சொன்னேன்: சுருக்கமாக, நீங்கள், நான் ஒரு போலியாக இருப்பதையே விரும்பு கிறீர்கள்.' அம்மா என்னை உற்சாகமின்றிப் பார்த்தாள். புன்னகைக் காமல் அவள் சொன்னாள், 'நீ இன்னும் ஒரு குழந்தைதான். வாழ்க் கையில் நல்லவர்களைப் பெற்றுக் கொள்வது எவ்வளவு முக்கியம் என்று உனக்குத் தெரியாது.'

போலியான பிரபலத்தை தாங்கள் நிராகரிப்பது, எங்கள் பதின்மர்க ளுக்கு ஒரு பெருமை. புகழ் மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். அது, குணநலன்களில் சமரசம் செய்ய வேண்டியிருக்கும் போதும், நிரந்தரமாக பாசாங்கு செய்யும் போதும் அதற்கான விலை மிக அதிகமாக இருக்கும். பிரபலத்தை வேண்டுமென்றே பின்பற்றக்கூடாது. அது வாழ்க்கையின் ஒரு துணை விளைபொருளாக மட்டுமே இருக்க முடியும், ஒரு குறிக் கோளாக அல்ல.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பிரபலத்தைத் தேடுவதற் குத் தூண்டக்கூடாது. நமது மதிப்புகள் ஒருவரின் சொந்த உணர்வு களின் மீதான நம்பிக்கையை ஆதரிக்க வேண்டும், தேவைப்படும் போது தனியாக நிற்பதற்கான அவர்களது தைரியத்தை ஆதரிக்க வேண்டும். மது அருந்துவதை மறுப்பது, புகைபிடிப்பதை மறுப்பது, துணிச்சலான பந்தயத்தைத் தவிர்ப்பது, அவர்களின் தரத்தைப் பராமரிப்பதில் என்று ஒரு கூட்டத்தை எதிர்த்துச் செல்ல எங்கள் பதின்மர்களுக்கு தைரியம் தேவைப்படும். அவர்கள் தமது வாழ்க் கையிலும், பாதுகாப்பிலும் சில சமயங்களில் பிரபலமற்றவர்களாக இருப்பதும், சில முதிர்ச்சியற்ற சகாக்களுடன் கிளிப்பிள்ளைகளைப் போல அவர்கள் பேசுவதும் தடுக்கப்படுவது, அவர்களின் திற னைப் பொறுத்தது. எங்கள் குழந்தைகளுக்கு நாங்கள் தெரிவிக்க வேண்டிய செய்தி இதுதான்: 'புகழை விட நேர்மையை நாங்கள் மதிக்கிறோம். சமூக வெற்றியை விடத் தனிப்பட்ட கண்ணியத்தை நாங்கள் மதிக்கிறோம்.'

பதின்மூன்று வயது ஜெனட், தனது நண்பிகளுடன் ஒரு வீட்டில் தங் கிச் செல்லக் கூடிய (sleepover party) ஒரு விருந்தை நடத்தினாள்.

அதற்கு அவள் பத்துப் பெண்களை அழைத்தாள். அவளுடைய தோழிகளில் ஒருவர் விருந்துக்கு வந்தால், அவர்களில் பலர் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று அவளுக்குத் தெரிவிக்கப்பட்டது. மன உளைச்சலிலும் மோதலிலும் இருந்த ஜெனட், விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தாள். ஆனால் அவளுடைய பெற்றோர் அதை எதிர்த்தனர். மற்றவர்களது அழுத்தம் காரணமாக ஒரு நண்பரை ஒதுக்கித் தள்ளக்கூடாது என்பதை அவர்கள் அவளுக்குத் தெளிவுபடுத்தினர்.

தந்தை கூறினார்: 'எங்கள் வீட்டில், ஒரு பிரபலத்தை விட ஒரு நண்பருக்கான விசுவாசம் முன்னுரிமை பெறுகிறது.'

மதிப்புகள் குறித்த ஒரு வியத்தகு நிலைப்பாடு, எங்கள் பதின்மவயதினரிடையே ஒரு வலுவான உறவை உருவாக்குகிறது. அது நமது பதின்மர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நமது வார்த்தைகளை அவர்கள் விரும்பாவிட்டாலும், அவர்கள் எமது செயலின் வலிமையை மதிக்கிறார்கள்; நமது நேர்மையை மதிக்கிறார்கள். தைரியத்தையும் நியாயத்தையும் நாம் வலியுறுத்துவதால் அவர்கள் பெருமையையும் கண்ணியத்தையும் பெறுகிறார்கள்.

ஆரம்ப 'டேற்றிங்'கிற்கு (Dating) எதிரான வழக்கு:

இளைஞர்கள், பிரபலமடைய வேண்டும் என்று விரும்பும் பெற்றோர்களால் பெரும்பாலும் 'டேட்டிங்' செய்யத் தள்ளப்படுகிறார்கள். அவர்கள் பன்னிரண்டு வயதுக் குழந்தைகளுக்கு 'சோடிப் பார்ட்டி' களை, பதினொரு வயதுக் குழந்தைகளுக்கு 'பாடட் பிராக்களையும் (padded Bra) அணிய வைத்து ஓர் இளம் பெண்ணின் வயதிற்கு நிகரானதாக இருக்கவும் அனுமதிக்கிறார்கள்.

பதின்மர்களை, இப்படிக் கலந்து நிற்பதற்குக் கட்டாயப்படுத்தக் கூடாது. அவர்களை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு விருந்துகளுக்கு, விரும்பும் பேஸ் போல் (base ball) விளையாட்டுக்கு, நடனத்திற்கு, வாசிப்புக்கு என்று அனுப்ப வேண்டும். இந்த விளையாட்டுகளில், அவர்கள் டேற்றிங்கிற்கு போக முதல், மீன்பிடித்தல் அல்லது 'ஸ்கூபா டைவிங்' (Scuba Diving) போன்றவற்றை நீண்ட காலம் தொடர அனுமதிக்கப்பட வேண்டும். 'சோடிப் பார்ட்டி'களும், 'டேற்றிங்கும்' பல சிறுவர் சிறுமிகளுக்கு சுமையாக இருக்கின்றன. பல இளைஞர்கள் தாமாக முன்வந்து அவற்றைத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். இதுபோன்ற காட்சிகளை ரசிப்பவர்கள் பெரியவர்கள்தான். அவர்களுக்குக் குழந்தைகளின் விகாரம் அழகாகத் தெரிகிறது. பன்னிரண்டு வயதில் இரவு நேர உடுப்புக்கள், மற்றும் மலர்க் கொத்துக்கள் என்பவை அபத்தமானவை. கூச்ச சுபாவமுள்ள, உணர்திறன் மிக்க மற்றும் தாமதமாகப் பூப்பெய்தும் பெண்பிள்ளைகள், அவர்கள் மலருவதற்கான நேரம் வருமுன்பே இதனால் காயப்படுத்தப்படலாம். நகைச்சுவை நடிகர் வூடி அலன் கூறியது போல்: 'குழந்தைப் பருவத்திலிருந்தே நான் ஒரு தோல்வியுற்றவனாக உணர்ந்தேன். பாலர் பாடசாலையுள் கூட நான் பால் குடிக்கத் தவறிவிட்டேன்.'

பின்வரும் கூற்றுகள் விரும்பத்தகாத அழுத்தத்திற்கான எடுத்துக்காட்டுகள்:

தந்தையிடம் இருந்து மகனுக்கு: 'உனக்குக் கிட்டத்தட்டப் பதினைந்து வயது, ஆனால் நான் உன்னுடைய கொமிக்ஸ் (comic) புத்தகங்களைப் பார்க்கும்போது, உனக்குப் பத்து வயதுதானா என்று நினைக்கிறேன். உன் வயதுடைய மற்றைய சிறுவர்கள் ஏற்கனவே பெண்களுடன் வெளியே செல்கிறார்கள்'

பதினைந்து வயதுச் சிறுமி ஒரு பத்திரிகைக் கட்டுரையாளருக்கு இவ்வாறு எழுதினாள்: 'என் அம்மா எப்போதுமே ஆண்களைப் பற்றிப் பேசுகிறாள். அவர்கள் என்னுடன் தொடர்பிலுள்ளார்களா என்று என்னைத் தொடர்ந்து கேட்டுப் பின் தொடர்கிறாள். அவள் தன் நண்பர்களின் மகன்களுடன் எனக்காக விருந்துகளையும், 'டேட்டிங்'க்களையும் ஏற்பாடு செய்கிறாள். எனக்கு அது சலிப்பாக இருக்கிறது. எனக்கு மிகவும் பிடித்தது குதிரைச் சவாரி. (நான் குதிப்பதில் மூன்று 'ரிப்பன்களை' வென்றுள்ளேன்.) நான் அதை என் அம்மாவிடம் சொல்லும்போது அவள் வருத்தப்பட்டு அழுகிறாள். அப்போது என்னில் ஏதாவது தவறு இருக்குமோ என்று உணர்கிறேன்.'

பதினான்கு வயது ஃபெர்ன் கூறுகிறாள்: 'நான் ஒரு முட்டாள் தனமான விருந்துக்குச் செல்வதை விட மாலை நேரத்தை வாசிப்பதிலேயே கழிக்க விரும்புகிறேன். ஆனால் என் அம்மா, புத்தகங்கள் என் சமூக வாழ்க்கையில் தலையிடுவதை தான் விரும்பவில்லை என்று என்னிடம் சொல்லிக்கொண்டே இருப்பாள்.'

பதினைந்து வயது மர்லின் கூறுகிறாள்: 'எனக்குப் பிடிக்காத ஒரு பையனுடன் செல்வதை விட எனது பெண் சினேகிதிகளுடன் ஒரு மாலை நேரத்தைச் செலவிடவே நான் விரும்புகிறேன். ஆனால் என் பெற்றோர் என்னை 'டேற்றிங்' செய்யும்படி தள்ளுகிறார்கள். நான் போதுமான அளவு வெளியே செல்வதில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். நான் டேற்றிங் செய்ய மறுத்தால், அவர்களுக்குக் கோபம் வருகிறது. 'மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு பையனைப் பிடிச்சிருக்கத் தான் வேணும் என்று அவசியமில்லை' என்று அவர்கள் சொல்கிறார்கள். எனக்கு ஒரு பையன் மீது எந்த உணர்வும் இல்லாதபோது, அவனை எனக்காகப் பணம் செலவழிக்க அனுமதிப்பது நேர்மையற்றது என்று நான் நினைக்கிறேன்.'

ஆரம்ப உயர்நிலை (Junior high): விவேகமான திட்டங்களும், கால அட்டவணைகளும்:

பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் முன்கூட்டிய சமூக, மற்றும் பாலியல் செயற்பாடுகளால் பீதியடைந்துள்ளனர்: 'பாடட் பிரா' (padded bra) போல்றூம் நடனம் (ballroom dance), பார்ட்டி கிளப்புகள் (party clubs), ஃபோமல் உடைகள் (formal wear) நிலையான டேற்றிங் (steady dating) போன்றவை. பல சமூகங்களில், பெற்றோர்களும் ஆசிரியர்களும் விவேகமான திட்டங்கள் பற்றியும் பதின்ம வயதினரது செயற்பாடுகளுக்கான பொருத்தமான கால அட்டவணைகளைப் பற்றியும் விவாதிப்பதற்காகக் கூடி வருகின்றனர். தற்போதைய போக்கை மாற்றுவது, அழுத்தப்பட்ட பாலியல் விழிப்புணர்வைத் தவிர்ப்பது மற்றும் ஆண்-பெண் ஆர்வங்கள் அவசரப்படாத வேகத்தில் வளர அனுமதிப்பது என்பவையே இதன் நோக்கமாகும்.

ஜூனியர் உயர்நிலைப் பாடசாலை மாணவர்களின் பெற்றோரின் பின்வரும் விவாதம் புதிய போக்கிற்கான ஒரு விளக்கமாக செயற்படும்:

திருமதி. A: எனது பன்னிரண்டு வயது மகள் அவளுடைய வகுப்பில் இளையவள். அவளுடைய பல பெண் தோழிகள் வசதி படைத்தவர்கள். அவள் அப்படி இல்லை. அவளுடைய ஆசிரியர் என்னை அழைத்து, என் மகளுக்கு 'பாடட் பிரா' வின் உணர்ச்சிபூர்வமான தேவை இருப்பதாகப் பரிந்துரைத் தார். நான் மிகவும் கோபமடைந்தேன், நான் மேல்நோக்கிப் பெருமூச்சுவிட்டேன். சில பெண்கள் தங்கள் போலித்தனங் களைக் கழற்றினால், என் மகளுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று நான் அவளிடம் சொன்னேன்.

திருமதி. B: என் பன்னிரண்டு வயது மகள் ஒரு ஆண்களும்-பெண்களும் கலந்துகொள்ளும் விருந்துக்கு அழைக்கப்பட் டாள். அது ஒரு முறையான 'RSVP' தேவைப்படும் விவகாரம். நான் திகைத்துப் போனேன். நான் பல பெற்றோரைத் தொடர்பு கொண்டேன், நாங்கள் ஒன்றாக ஜூனியர் உயர்நிலைப் பள்ளி யின் விருந்துகள் தொடர்பாக ஓர் உறுதியான முடிவை எடுத்துக் கொண்டோம்.

திருமதி. C: எங்கள் PTA ஆறாம், ஏழாம் வகுப்புகளில் நடனம், விருந்துக் கிளப்புகள் என்பற்றை அமைப்பதற்கு எதிராக வாக்களித்தது. சிறுவர் மற்றும் சிறுமிகள் ஜோடியாக விளை யாடாத பகல்நேர விருந்துகள் மட்டுமே அனுமதிக்கப்படும், வளர்ந்தோர்க்கான முறையான உடைகள், பூங்கொத்துகள், மற்றும் 'போல்ரூம் நடனம்' என்பவை எங்கள் பள்ளியில் பொருந்தாது.

திருமதி. D: எட்டாம் வகுப்பு வரை பந்து அறை அறிவுறுத்த லையும், ஒன்பதாம் வகுப்பு வரை ஜோடி விருந்துகளையும் ஒத்திவைக்க எங்கள் PTA முடிவு செய்துள்ளது. எங்கள் சிறுவர், சிறுமிகள் ஆக்கபூர்வமான திட்டங்களில் பழகுவதற் காக நாடகக் குழுக்கள், பாடகர் குழுக்கள், இசைக்குழு மற்றும் பள்ளிச் செய்தித்தாள் ஆகியவற்றை நிறுவுவ தற்கு நாங்கள் வாக்களித்துள்ளோம்.

திருமதி. E: எங்கள் எட்டாம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர் சிறுமிகளுக்கு லிப்ஸ்டிக் அனுமதித்தனர், ஆனால் ஒன்பதாம் வகுப்பு வரை கண்ணுக்கான ஒப் பனை செய்வதை அவர்கள் ஒத்திவைத்தனர். மூத்த உயர் நிலைப் பாடசாலைக்கு உரிய சமூக நிகழ்வுகளை நடத்தும் முறைகளை நாங்கள் எதிர்க்க முடிவு செய்தோம்.

திருமதி. F: என் மகள் ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறாள். நடனங்களை ஒழுங்கமைக்கவும், துணையாகவும் இருக்க நாம் அழைக்கப் பட்ட முதல் ஆண்டு இது. எங்கள் பாட சாலை 'போல்ரூம்' தொடர்பான அறிவு றுத்தலை வழங்குகிறது; பெற்றோர்கள் நடனம், 'விருந்துக்கிளப்', என்பவைகளை ஆதரிக்கிறார்கள். எங்கள் PTA ஆண் டுக்கு நான்கு 'பார்ட்டி' நிகழ்வுகளை முடிவு செய்தது. ஒவ்வொன்றும் மூன்று மணி நேரம் நீடிக்கும். அவை எல்லாமே பதினொரு மணிக் குள் முடிந்துவிடும்.

திருமதி. G: என் மகளும் ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறாள். இரட்டை 'டேற்றிங்', 'குழு டேற்றிங்' என்பவற்றை நாங்கள் அனுமதித்துள்ளோம். எங்கள் பாடசா லைக்கு நடனங்கள் தேவையில்லை. அவர்கள் டேற்றிங், சிறப்பு உடைகள் மற்றும் பூங்கொத்துகள் என்பவற்றைத் தடை செய்கிறார்கள்.

திருமதி. H: நான் சமீப காலம் வரை ஓர் அடிமையைப் போல உணர்ந்தேன். என் குழந்தைகளின் ஒழுங்கற்ற அட்டவணை என்னை ஒரு தனியார் வாகன ஓட்டியைப்போல மாற்றிவிட் டது. நான் அவர்களை, டேற்றிங், பியானோ பாடங்கள், தேவா லய பாடகர் குழு, டென்னிஸ், பாலே நடனம் போன்றவற்றிற்கு அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. எங்கள் PTA எங்களை உட்கார வைத்து, எங்கள் குழந்தைகளின் நேரம் மற்றும் எங்கள் சக்தியின் மீதான கோரிக்கைகளை மறுபரிசீலனை செய்ய வைத்தது. குழந்தைகளுக்கு அதிக ஓய்வு நேரம் தேவை என்றும், பெற்றோருக்கு அதிக ஓய்வு தேவை என்றும் நாங்கள் முடிவு செய்தோம். இப்போது, எங்கள் குழந்தை களுக்கு வாரத்திற்கு இரண்டு வழக்கமான செயற்பாடுகளுக்கு மேல் திட்டமிடப்படுவதில்லை. அவர்கள் மகிழ்ச்சியாக இருக் கிறார்கள், நாங்கள் திருப்தி அடைகிறோம். நான் மீண்டும் புத்தகங்களைப் படிக்கத் தொடங்கியுள்ளேன்.

உயர்தர, உயர்நிலை (Senior High): சுயாட்சி மற்றும் வழிகாட்டுதல்:

சீனியர் ஹை ஸ்கூலில், ஒரு டீனேஜர் வளர்ந்ததாக உணர் கிறார். அவர் சுதந்திரத்தை நெருங்கி வருகிறார், மேலும் தனது சுயாட்சியின் மீதான வரம்புகளை எதிர்க்கிறார். இருப் பினும் பெரியவர்கள் தங்கள் வழிகாட்டுதலைக் கைவிட முடி யாது. இந்த வயதில், டீனேஜர்கள் தங்கள் சமூக வாழ்க்கை யைக் கல்விச் சாதனைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் வகை யில் அதிகப்படுத்திவிடும் அபாயத்தில் உள்ளனர்.



பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடனான மோதல் கள் கிட்டத்தட்ட தவிர்க்க முடியாதவை. சீனியர் ஹை ஸ்கூல் மாணவர்களின் பெற்றோரின் பின் வரும் கூற்றுகள் சிலவற்றை விளக்குகின்றன.

வழக்கமான மோதல்கள் மற்றும் பயனுள்ள தீர்வுகள்:

- 'எங்கள் பதினைந்து வயது சிறு மியை டேற்றிங் செய்ய நாங்கள் அனுமதிக்கிறோம், ஆனால் அவளு டைய ஆண் நண்பர்களைச் சந் தித்து அவர்கள் எங்கு செல்கிறார் கள் என்பதை அறிந்து கொள்ள நாங்கள் வலியுறுத்துகிறோம். பதி னொரு மணிக்குள் தான் வீட்டிற்கு வருவேன் என்று எங்கள் மகளுக் குத் தெரியும். இந்த கட்டுப்பாடுகள் அவளுக்குப் பிடிக்காமல் இருக்கலாம், ஆனால் அவை அவளுக்குப் பாது காப்பாக உணர உதவும் என்று நாங் கள் நம்புகிறோம்.'

- 'எனது பதினாறு வயது மகள் எமது நள்ளிரவு ஊரடங்கு உத்தரவைக்

கேள்வி எழுப்பினாள். அவள் சொன்னாள்: 'எந்த நேரத்திலும் ஒருவர் சிக்கலில் மாட்டிக் கொள்ளலாம்.' என் கணவர் பதிலளித்தார், எந்த நேரத்திலும் உங்கள் நடத்தையை நான் நம்புகிறேன், ஆனால் உங்கள் நற்பெயரைப் பற்றி நான் கவலைப்படுகிறேன்.'

- 'எங்கள் மகள் டேற்றிங் செல்வதற்கு முன் எங்களுக்கு ஒரு குறிப்பை விட்டுச் செல்கிறாள். அவசரகாலத்தில் அவளை எங்கு தொடர்பு கொள்ளலாம் என்று அவள் அதில் எங்களிடம் கூறுகிறாள். இது ஒரு வேதனையான சூழ்நிலையைத் தீர்த்தது. எங்கள் தேடலை அவள் வெறுத்தாள். இந்தக் குறிப்பு ஒரு வெறும் தகவற் குறிப்பு மட்டுமே.'

- 'என் மகள் டேட்டிங் சென்று தாமதமாக வரும் போது அழைப்பெடுக்கிறாள். நான் ஒரு முறை அவளிடம் சொன்னேன்: நீங்கள் வெளியே இருக்கும்போது நான் கவலைப்பட்ட நேரத்திற்குப் பதிலாக எனக்கும் ஒரு நல்ல நேரத்தை நீங்கள் கொடுக்கவேண்டும். நீங்கள் வருவது தாமதமாகும் போது என்னை அழைக்கவும்.' நாங்கள் அவளைப் பற்றி அக்கறை கொள்கிறோம் என்பதை அறிந்ததில் அவளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று நினைக்கிறேன். அவளுடைய 'ஊரடங்கு நேரம்' சந்தர்ப்பத்தைப் பொறுத்து மாறுபடும். அவளை நாங்கள் மரியாதையுடன் நடத்துகிறோம். அவளும் அதே மாதிரி பதிலளிக்கிறாள்.'

- என் மகள் அந்தஸ்துக்காக டேற்றிங் செய்து வருவதை நான் கண்டுபிடித்தேன். ஒரு பேஸ்போல் நட்சத்திரம், ஒரு வகுப்புத் தலைவர், ஒரு ஸ்போர்ட்ஸ் கார் உரிமையாளர் போன்ற 'விஐபி' க்களுடன் காணப்படுவதற்காக, அவள் தன் சொந்த உணர்வுகளைப் புறக்கணித்தாள். டேற்றிங்கின் நெறிமுறைகள் பற்றி நான் அவளுடன் நீண்ட நேரம் பேசினேன். நான் சொன்னேன், 'டேற்றிங் என்பது ஒரு அலங்காரமோ அந்தஸ்தோ அல்ல. அது ஒரு மனித உறவு.' என்று. என் மகள் ஆச்சரியத்துடன் அதைச் செவிமடுத்துக் கேட்டாள். அவள் விஷயத்தைப் புரிந்துகொண்டாள் என்று நம்புகிறேன்.

- 'என் பதினாறு வயது மகள் டேற்றைத் தவிர்க்க விரும்பினாள். அவள் என்னைப் பாதுகாக்கச் சொன்னாள். இர்விங் அழைத்தால், எனக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லுங்கள்' என்றாள். நான் மறுத்துவிட்டேன். 'நான் கடற்கரைக்குச் செல்ல விரும்புகிறேன், இர்விங்கிடம் கார் இல்லை, விளக்கமோ மன்னிப்பு கேட்டலோ இல்லாமல் யாரையும் நிறுத்துவது நியாயமற்றது என்று நான் நினைக்கிறேன்,' என்று அவள் தற்காப்புடன் பதிலளித்தாள்.

  'கார் வைத்திருக்கும் ஒருவருடன் தான் நீங்கள் டேட்டிங் செய்ய விரும்புகிறீர்களா?'

  'ஆம்' அவள் சொன்னாள்.

  பின்னர், 'நான் அவரை அழைத்து எங்கள் தேதியை ரத்து செய்வது நல்லது என்று நினைக்கிறேன்' என்று அவள் மேலும் சொன்னாள்.

- 'மிகவும் சீராகப் போய்க்கொண்டிருக்கும் என் பதினேழு வயது மகளிடம், உனக்கு இன்னும் யாராவது இருக்கிறார்களா? என்று எப்படித் தெரியும் என்று கேட்டேன். அவள், தன் காதலனுடனான தன் உறவு சலித்துவிட்டதாக ஒப்புக் கொண்டாள். ஆனால் அவனை விட்டுக்கொடுக்கப் பயந்தாள்.

  நான் பதிலளித்தேன்: 'ஆம். அப்படி ஒரு முடிவை எடுப்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல'.

  'டேற்றிங் இல்லாத வார இறுதியை எதிர்கொள்வது பயமாக இருக்கிறது.'

  ஆமாம், என் மகள் வெளிப்படையான நிம்மதியுடன் என்னிடம் சொன்னாள். பின்னர் அவள் சொன்னாள்: 'அது எளிதான ஒன்றல்ல, ஆயினும் நான் அதைச் செய்யத்தான் வேண்டும்.'

- என் பதினெட்டு வயது மகள் என்னிடம் சொன்னாள்: 'இந்த முறை நான் காதலிக்கிறேன் என்று எனக்குத் தெரியும். ஜிம்மைப் பார்த்தாலே என் இதயம் படபட என்று அடிக்கிறது; என் முழங்கால்கள் நடுங்குகின்றன. நான் அவரைப் பார்த்தாலே உருகிவிடுகிறேன். நாங்கள் பேச வேண்டிய அவசியமே இல்ல.'

  'நீ பேச ஆரம்பிச்சிருக்க வேண்டும்' என்று சொல்ல நான் ஆசைப்பட்டேன். ஆனால் நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். அவன் இருப்பைக் கண்டு அவள் ரொம்பவே சந்தோஷப்படுகிறாள், அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள அவள் தன் காதலைப் பயன்படுத்தவில்லை. அவர்கள் பேசுவது இல்லை. அவர்கள் முத்தங்களை விட அதிகமாகத் தொடர்பு கொள்ள வேண்டும். அவனைப் பற்றி அவளுக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. அவன் குழந்தைகளை நேசிக்கிறானா?, அவனுக்குக் கோபம் வருமா?, மன அழுத்தத்தில் அவன் எப்படி நடக்கிறான்?, எல்லாம் சரியா நடக்கும்போது அவன் வசீகரமா இருக்கிறானா?, விஷயங்கள் தவறு நடக்கும்போது அவன் எப்படி அதைச் சமாளிக்கிறான்?, என் மகள் அவனுடன் நெருக்கமான உரையாடலை நடத்துவதற்கான ஒரு பொருத்தமான தருணத்திற்காக நான் காத்திருக்கிறேன். இப்போது அவள் மேகங்களுக்கு மேலால் உயரமாக் பறந்துகொண்டு இருக்கிறாள்.

- 'என் பதினேழு வயது மகள், ஒரு கால்பந்து ஹீரோவை டேற்றிங் செய்கிறாள். 'நான் அவரை நேசிக்கிறேன், இது ஒரு குருட்டுக் காதல் அல்ல' என்று அவள் சொல்கிறாள், ஆனால் அவளுடைய பார்வை ஒரு இருபது-இருபது (Twenty-Twenty) கூட அல்ல. அவள் அவனை ஒரு போதும் நன்றாகப் பார்த்ததும் கூட இல்லை. ஒளிவட்டம் காரணமாக அவள் அந்த மனிதனைப் பார்க்கவில்லை. அவனுடைய தசைகளைத் தவிர வேறு எதையும் அவனால் காட்ட முடியாது. கால்பந்து போட்டி 'சீசன்' முடிந்தபின் அவன் என்ன செய்வான்?, அவன் தனது சாதனைகள் பற்றி வாசித்துக்கொண்டிருப்பானா? உங்கள் மகள் தவறு செய்கிறாள் என்று நீ அஞ்சும்போது அமைதியாக இருப்பது மிகவும் கடினமானது. ஆனால், என் நேரடித் தலையீடு அவர்களை ஒருவரை ஒருவர் நோக்கி நெருங்கிச் செல்ல உதவும் என்பதை நான் நன்றாக அறிவேன். அவளுடைய உள்ளார்ந்த நல்ல ரசனை வெற்றி பெறும் என்பது என் நம்பிக்கை.'

- பதினாறு வயது ஈரா, தனது தந்தையிடம் ஜெப ஆலயத்தில் சேர தான் விரும்பவில்லை என்று தெரிவித்தான். அது மிகவும் கட்டுப்படுத்துவதாகவும், நேரத்தைக்கோருவதாகவும் அவள் உணர்ந்தாள்.

  தந்தை பதிலளித்தார், 'கட்டளைகளைக் கடைப்பிடிப்பது எளிதல்ல என்று எனக்குத் தெரியும். இது நிச்சயமாக உங்களது வாழ்க்கையை கடினமாக்குகிறது. ஆனால் இது எங்கள் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும், நீங்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.'

  ஈரா பதிலளித்தாள்: 'நான் வளர்ந்து வீட்டை விட்டு வெளியேறும்போது, நான் என் விருப்பப்படி செய்யப் போகிறேன்.'

  தந்தை பதிலளித்தார்: 'அப்போது கூட உங்கள் பெற்றோர், தாத்தா பாட்டி மற்றும் அவர்களுக்கு முந்தைய எண்ணற்ற தலைமுறையினர் கடைப்பிடித்த பாரம்பரியத்தை நீங்கள் கருத்தில் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.' ஈராவின் தந்தை தனது மகளின் கண்ணியத்தைத் தாக்காமல் குடும்பப் பாரம்பரியத்தை நிலைநிறுத்தினார். அவர் தனது மகளின் விருப்பத்தை ஒப்புக்கொண்டார், அவளது சிரமங்களுக்காக அனுதாபப்பட்டார், ஆனால் மதிப்புகளை வலியுறுத்தினார். வீட்டிற்கு வெளியே தனது மகளின் நடத்தையைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இருப்பினும், அவர் தனது எதிர்பார்ப்புகளைத் தெளிவாகவும் அவமானப்படுத்தாமலும் கூறினார். இறுதியில் ஈரா தனது தரங்களை மறு மதிப்பீடு செய்ய வேண்டும், தனது மனச்சாட்சியை சமாளிக்க வேண்டும், மேலும் தனது சொந்த முடிவை எடுக்க வேண்டும். இந்த வரம்புகளை நிர்ணயிப்பதன் மூலம், ஈராவின் தந்தை அவளது வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் உரிய போக்கில் அவன் ஆரற்றவேண்டியிருப்பவற்றைப்பற்றி விளக்கினார்.



நமது பொறுப்புக்கள், தரநிலைகளும் வரம்புகளும்:

பெரியவர்களாகிய நமது பொறுப்பு, தரநிலைகளை நிர்ணயித்து, மதிப்புகளை வெளிப்படுத்துவதாகும். நமது பதின்ம வயதினர்கள் நாம் எதை மதிக்கிறோம், எதை எதிர்பார்க்கிறோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும், நிச்சயமாக, அவர்கள் நமது தரநிலைகளை எதிர்ப்பார்கள், நமது விதிகளை எதிர்ப்பார்கள், நமது வரம்புகளைச் சோதிப்பார்கள். இது இருக்க வேண்டிய நிலைதான். ஏனென்றால், பெற்றோருக்குக் கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிவதன் மூலம் யாரும் முதிர்ச்சியடைய முடியாது. விதிகள் மீதான நமது பதின்மர்களின் வெறுப்பு எதிர்பார்க்கப்படவேண்டியதும் பொறுத்துக் கொள்ளப்பட வேண்டியதுமாகும். அப்படித்தான் அது நடக்கிறது. அவர்கள் நமது தடைகளை, விரும்புகிறார்களா ? என்பது எதிர்பார்க்கப்படுவதில்லை.

கட்டுப்பாடுகளை விதிக்கும் பழைய முறைக்கும், வரம்புகளை நிர்ணயிக்கும் புதிய முறைக்கும் இடையே ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது. கடந்த காலத்தில் பதின்மர்களது உணர்வுகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டன; கோபத்துக்கும் வாதத்திற்கும் மத்தியில், எதிர்ப்பை வரவேற்கும் மொழியில் கட்டுப்பாடுகள் அமைக்கப்பட்டன. நவீன அணுகுமுறையில், வரம்புகள் நமது பதின்மரின் சுயமரியாதையைப் பாதுகாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. வரம்புகள் தன்னிச்சையானவையோ அல்லது சலன புத்தியால் வருபவையோ அல்ல. அவை மதிப்புகளில் நங்கூரமிடப்பட்டுள்ளன மற்றும் குணநலன்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

உணர்வுகளுக்கும் செயல்களுக்கும் இடையிலான வேறுபாடு பதின்மர்களுக்கான புதிய அணுகுமுறையின் மூலக்கல்லாகும். உணர்வுகள் மற்றும் விருப்பங்களைக் கையாளும் போது நாம் விட்டுக்கொடுக்கிறோம். ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையைக் கையாளும் போது நாங்கள் கண்டிப்பாக இருக்கிறோம். எங்கள் டீனேஜர்களின் கருத்துகளையும் மனப்பான்மைகளையும் நாங்கள் மதிக்கிறோம், நாங்கள் அவர்களின் கனவுகளையும் ஆசைகளையும் குறைத்து மதிப்பிடுவதில்லை. ஆனால் அவர்களின் சில செயல்களை நிறுத்தி, திசைதிருப்பும் உரிமையை நாங்கள் கொண்டுள்ளோம்.

பெரியவர்களாகிய நாம் நமது பதின்மர்களின் நண்பர்களோ அல்லது விளையாட்டுத் தோழர்களோ அல்ல. நாம் அவர்களின் நட்பார்ந்த பாதுகாவலர்கள். அவர்களையும் சமூகத்தையும் பாதுகாக்கும் தரநிலைகள், மதிப்புகள் என்பவற்றை நிலைநிறுத்த வேண்டியிருக்கும் போது, அவர்களின் தற்காலிகமான பகைமையைத் தாங்கும் அளவுக்கு அக்கறையையும் வலிமையையும் கொண்டவர்களாக நாம் இருக்கிறோம்.



vickneaswaran.sk@thaiveedu.com

ஸ்பேஸ்எக்ஸ் பணிக்குழு

12

- குரு அரவிந்தன்

விண்வெளி சார்ந்த நிகழ்வுகள் மிக வேகமாக நடைபெறத் தொடங்கிவிட்டன. இரண்டு விண்கலங்களைக் குறுகிய காலத்தில் அனுப்ப வேண்டிய நிலையில் நாசா நிறுவனம் இயங்கிக் கொண்டு இருந்தது. ஒன்று ஆர்ட்டெமிஸ்-11-இன் சந்திரன் நோக்கிய பயணம். மற்றது ஸ்பேஸ்எக்ஸ்-12-இன் சர்வதேச விண்வெளி நிலையம் நோக்கிய பயணம். ஆர்ட்டெமிஸ்-11-இன் பயணம் தாமதமானதால் ஸ்பேஸ்எக்ஸ் க்ரு - 12-இன் பயணத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. காலதாமதத்திற்குப் பிறகு இந்தப் பயணம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின் சந்திரனைச் சுற்றி வரும் முதல் குழுவினருடன் கூடிய பயணத்திற்காக அமெரிக்காவின் நாசா நிறுவனம் சென்ற மார்ச் மாதம் விண்கலத்தை ஏவுதலுக்கான திகதியை வெளியிட்டிருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் ராக்கெட்டில் ஒரு தவறு கண்டறியப்பட்டதால் சந்திரன் நோக்கிய பயணம் தாமதமானது.

1970-களில் நடந்த அப்பல்லோ பயணங்களுக்குப் பிறகு முதல் முறையாக சந்திர மேற்பரப்பில் ஒரு மனித தரையிறக்கத்திற்கான மேடையை அமைப்பதற்கான முயற்சிக்கு முன்னோடி நோக்கமாக இந்தப் பயணம் அமைய இருந்தது. சுமார் 10 நாட்கள் நீடிக்க



thanavishnu@gmail.com

இருந்த இந்த ஆர்ட்டெமிஸ் - 11 பணி, அதன் விண்வெளி வீரர்களை இதற்கு முன்பு இருந்ததை விட விண்வெளியில் அதிக தூரத்திற்கு அழைத்துச் செல்ல இருந்தது. இவர்கள் சந்திரனில் தரை இறங்க மாட்டார்கள்.

ஹைட்ரஜன் கசிவு காரணமாக திருத்த வேலைகளுக்காகத் தாமதப்பட்ட இந்தப் பயணம் ஏப்பிரல் மாதம் 2026-ஆம் ஆண்டு நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொழினுட்ப சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அப்பால், மிசன் திட்டமிடுபவர்கள் சந்திரனின் சுற்றுப்பாதை சரியான பகுதியில் இருக்கும் வரை காத்திருக்க வேண்டும் என்பதால், அதற்கேற்ப ஏவுதலுக்கான நேரத்தை நிர்ணயிக்க வேண்டி இருக்கின்றது.

ஒரு விண்வெளிப் பயணத்தின் முழுமையையும் நீங்கள் பார்க்கும்போது, அதற்குத் தேவையான வாகனங்கள், வன்பொருள் மற்றும் மென்பொருளை மட்டுமல்ல, பயணத்திற்குத் தேவையான குழுவினரையும் தயார் செய்ய வேண்டி



இருக்கிறது. அடுத்துப் பார்த்தால், காலநிலையும் இதில் முக்கிய இடம் வகிக்கிறது. எனவே, பயணம் தாமதமாவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

ஆர்ட்டெமிஸ் - 11 சந்திரப் பயணத்தின் தாமதம் காரணமாக விண்வெளி நிலையத்திற்குச் செல்ல இருந்த ஸ்பேஸ்எக்ஸ் - 12-இன் பயணமும் தாமதமாகலாம் என எதிர்பார்க்கப்பட்டது. அதேசமயம், சர்வதேச விண்வெளி நிலையத்தில் பணியாற்று பவர்களின் பற்றாக்குறையை நிரப்ப வேண்டிய பணியும் நாசா நிறுவனத்திடம் இருந்தது. பணிக்குழு - 11-இல் ஒருவர் சுகவீன முற்றதால், அவர்கள் குறிப்பிட்ட நாட்களுக்கு முன்பாகவே பூமிக்குத் திரும்பியிருந்தனர். அதனால், விண்வெளி நிலையத்தில் மூவர் மட்டுமே தங்கியிருந்தனர். எனவே திட்டமிட்டபடி சில நாட்கள் தாமதத்தின் பின் ஸ்பேஸ்எக்ஸ் - 12-இன் பயணம் விண்வெளி நிலையத்தை நோக்கி வெற்றிகரமாகத் தொடர்ந்தது.

அமெரிக்காவில் உள்ள ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் நாசா நிறுவனம் ஆகியவை ஒன்று சேர்ந்து விண்வெளி ஆய்வுகளில் ஈடுபட்டு வருவது நீங்கள் அறிந்ததே. இவர்கள் விண்வெளிப்பயணம் சார்ந்து பல திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றார்கள். இவர்களின் திட்டங்களில் ஒன்றான வணிகக் குழுத் திட்டமான க்ரூ - 12 (Crew - 12) இன் கீழ் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு 12-வது செயற்பாட்டுக்குழு சுழற்சிப் பயணத்தைச் சென்ற பெப்பிரவரி மாதம் 13-ஆம் திகதி ஆரம்பித்தன. இது புளோரிடாவிலிருந்து பால்கன் 9 என்ற ரொக்கட் மூலம் ஏவப்பட்ட க்ரூ - 12, எக்ஸ்பெடிசன் 74 - 75-இன் ஒரு பகுதி யாகும். இந்த விண்கலம் எட்டு மாத பணிக்காக நான்கு குழு உறுப்பினர்களை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அழைத்துச் சென்றது.

விண்வெளி ஆய்வு சார்ந்து மனிதகுலம் ஒரு துணிச்சலான முயற்சியைத் தொடங்கியதால் சர்வதேச விண்வெளி நிலையம் விண்வெளியில் உருப்பெற்றது. இந்த நிலையம் 1984 மற்றும் 1993-ஆம் ஆண்டுக்கு இடையில் வடிவமைக்கப் பட்டது. 1980-களின் பிற்பகுதியில் தொடங்கி அமெரிக்கா, ரஷ்யா, கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பா நாடுகள் இந்தக் கட்டுமானத்தில் பங்குபற்றியிருந்தன. இந்த விண்வெளி நிலையத்தில் அறிவியல் ஆராய்ச்சி, பணியாளர்கள் வசிப் பிடம், சேமிப்பு, விண்கலக் கட்டுப்பாடு மற்றும் பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

சென்ற வருடம் ஆகஸ்ட் 2025-ஆம் ஆண்டு நிலவரப்படி, 26 நாடுகளைச் சேர்ந்த 290 நபர்கள் இந்த நிலையத்தைப் பார்வை யிட்ட தாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையம் 2030-ஆம் ஆண்டின் இறுதி வரை செயற்பாட்டில் இருக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது, அப்படி நடந்தால், அதன் பின் சீனாவின் விண்வெளி நிலையம்தான் ஒரே ஒரு விண்வெளி நிலையமாக விண்வெளியில் ஆதிக்கம் செலுத்தும்.

ஸ்பேஸ்எக்ஸ் - 12 விண்கலம் பெப்பிரவரி 13 வெள்ளிக்கிழமை காலை 5:15 EST மணிக்கு கேப் கனாவெரல் விண்வெளி நிலையத்தில் உள்ள விண்வெளி ஏவுதள வளாகம் 40-இலிருந்து விண் வெளி நோக்கி அனுப்பப்பட்டது. முன்பு இதற்காகப் பாவிக் கப்பட்ட ரொக்கெட்கள் விண்வெளியில் எரிந்து விடுவதால் மீண்டும் அவற்றைப் பாவிக்க முடிவ தில்லை. ஆனால், இப்போது நவீன தொழினுட்ப உதவியுடன் அவற்றைத் திரும்பவும் பாவிக்கக் கூடியதாக வடிவமைத்து இருக் கிறார்கள். அந்த வகையில் குறிப்பிட்ட உயரத்தை அடைந்த தும் விண்கலம் ரொட்கெட்டில் இருந்து பிரிந்து விண்வெளி நிலையம் நோக்கிச் சென்றது.

இந்தப் பிரிவைத் தொடர்ந்து, ரொக்கட் பூமியை நோக்கித் திரும்பியது. முதல் நிலை பூஸ்டர் கேப்பிற்குத் திரும்பி, ஏவுதளத்திற்கு நேரடியாக அருகில் அமைந்துள்ள புத்தம் புதிய தரையிறங்கும் மண்டலம் 40-இல் பாதுகாப்பாகத் தரை யிறங்கியது. இது விண்வெளிப் பயணத்தில் ஏற்பட்ட பெரிய தொரு முன்னேற்றமாகும். இதனால் ரொக்கட்டுகள் புதிதாகச் செய்வதற்கான செலவைக் குறைத்துப் பணத்தை யும், நேரத்தையும் மிச்சம் பிடிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அதுமட்டுமல்ல விண்வெளி மாசடைவதையும் இதன் மூலம் தவிர்க்க முடிகின்றது.

பால்கன் 9 இரண்டாம் கட்டத்திலிருந்து பிரிந்த பிறகு, க்ரூ டிராகன் ஃப்ரீடம் மற்றும் அதன் நான்கு பேர் கொண்ட குழுவினர் திட்டமிட்டபடி சுமார் 34 மணி நேரம் பூமியைச் சுற்றி வந்தார்கள். பின்னர் இறுதியில் பெப்பிரவரி 14 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3:15 EST மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையமான ஐ.எஸ்.எஸ் நிலையத்தைச் சென்றடைந்தார்கள்.

இந்த விண்கலப் பணிக்குழுவில் நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சியின் (ESA) விண்வெளி வீரர்கள் மற்றும் ரஷ்யாவின் ரோஸ்கோஸ்மோஸைச் சேர்ந்த ஒரு விண்வெளி வீரர் ஆகியோரை உள்ளடக்கிய நான்கு பேர் கொண்ட சர்வதேசக் குழுவைக் கொண்டுள்ளது. இந்தக் குழுவில் உள்ளவர்கள் இன்று சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தவர்க ளாக இருக்கின்றார்கள். காரணம் இந்தத் துறைதான் இனி வரப்போகும் காலங்களில் செவ்வாய் கிரகம் நோக்கிய பயணத்தில் உலக மக்களின் கவனத்தைக் கவரப்போகின்றது. காலம் வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது. குறுகிய காலத்தில் விண்வெளியில் பல சாதனைகளை நிலைநாட்டி விட்டார்கள்.

எம்மினத்தவர்கள் உலகிலே மருத்துவப் பதவிதான் அதியுயர் பதவி என்ற சிந்தனையில் இருந்து இன்னும் விடுபடவில்லை. அதற்கு ஒரு தனித்துவம் இருந்தாலும், இன்று புகழ் ஈட்டக்கூடிய, சாதனைகள் படைக்கக்கூடிய துறைகளில் விண் வெளித்துறைதான் முதலிடம் வகிக்கிறது. இவர்கள் ஒவ்வொரு வரும் இந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்கள். இத்துறையில் எம்மவர்கள் முயற்சி செய்தால் உங்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கலாம். உலகத்தின் கவனத்தை உங்கள் பக்கம் திருப்பவும் முடியும்.

இந்தப் பயணத்தில் ஒருவராக ரஷ்ய விண்வெளி வீரரான ஒலெக் ஆர்டெமியேவ் என்பவர் தான் முதலில் செல்ல விருந்தார். அதற்கான பயிற்சிகள் எல்லாம் அவர் முடித்திருந்தார். ஆனால் திடீரென க்ரூ - 12 பயணத்திலிருந்து அவர் நீக்கப்பட்டார், அதிகாரபூர்வமாக அவர் வேறு பணிகளுக்கு மாற்றப்பட்டதாக முதலில் அறிவிப்பு வந்தது. இருப்பினும், ஸ்பேஸ்எக்ஸ் இயந்திரங்கள், ஆவணங்கள் மற்றும் பிற தொழினுட்பங்களை தனது செல்பேசியால் புகைப்படம் எடுத்து, பின்னர் அந்தத் தகவலை பகிர்ந்ததன் மூலம் சர்வதேச ஆயுதப் போக்குவரத்து விதிமுறைகளை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டார். இதன் காரணமாக ஆர்டெமி யேவ் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டதாக புலனாய்வு செய்தித் தளமான 'தி இன்சைடர்' தெரிவித் துள்ளது. செல்போன் கையில் இருந்ததால், அளவுக்கு மிஞ்சிய அவரது ஆர்வமே அவரை இத்துறையில் இருந்து வெளியேற்றியது. ஆர்டெமியேவ்வுக்குப் பதிலாக விண்வெளி வீரர் ஆண்ட்ரி ஃபெட்யாவ் என்பவர் மாற்றப்பட்டார், அவர் க்ரூ டிராகனில் இரண்டு முறை பறந்த அனுபவம் கொண்ட முதல் ரஷ்யர் ஆவார். எனவே குறுகிய காலத்தில் இவர் புதிதாக மாற்றப்பட்டதால், இவருக்குப் பயிற்சிகள் தேவைப்பட வில்லை.

இந்தப் பயணத்தில் பணியின் தளபதியாக நாசா விண்வெளி வீரர் ஜெசிகா மெய்ர் இருக்கின்றார். மைனேயின் கரிபோவில் பிறந்த அவர், பிரவுன் பல்கலைக்கழகத்தில் உயிரியலில் இளங்கலைப் பட்டத்தையும், சர்வதேச விண்வெளி பல்கலைக்கழகத்தில் விண்வெளி படிப்பில் முதுகலைப் பட்டத்தையும், ஸ்கிரிப்ஸ் கடல்சார் நிறுவனத்தில் கடல் உயிரியலில் முனைவர் பட்டத்தையும் பெற்று, ஹார்வர்ட் மருத்துவப் பள்ளி மாசசூசெட்ஸ் பொது மருத்துவமனையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றினார். செப்ரெம்பர் 2019-இல் சோயுஸ் ஏஎஸ் - 15-இல் விண்வெளி சென்றார். அவர் சுற்றுப்பாதை ஆய்வகத்தில் 204 நாட்கள் செலவிட்டார். இதன் போது அவர் சக நாசா விண்வெளி வீராங்கனை மற்றும் ஆர்ட்டெமிஸ் - 11 நிபுணர் கிறிஸ்டினா கோச்சுடன் முதல் முழு பெண் விண்வெளி நடைபயணத்தில் பங்கேற்றார்.

இந்த ஸ்பேஸ்எக்ஸ் - 12 பயணத்தில் க்ரூ - 12-இன் விமானியாகப் பணியாற்றுவது நாசா விண்வெளி வீரர் ஜாக் ஹாத்வே. கனெக்டிகட்டின் தெற்கு விண்ட்சரில் பிறந்த அவர், அமெரிக்க கடற்படை அகாடமியில் பயின்றார் மற்றும் 2004-இல் இயற்பியல் மற்றும் வரலாற்றில் இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர் அவர் கடற்படையில் சேர்ந்தார், 2006-இல் கடற்படை விமானியாக நியமிக்கப்பட்ட பிறகு, கலிபோர்னி யாவின் லெமூரில் உள்ள கடற்படை விமான நிலையத்திற்கு நியமிக்கப்பட்டார். மொத்தத்தில், ஹாத்வே 30 வெவ்வேறு விமானங்களில் 2,500 விமான மணிநேரங்களைத் தனதாக்கிக் கொண்டார். மற்றும் 39 போர் விமானப் பயணங்களை முடித்துள்ளார். ஹாத்வே மார்ச் 2024-ஆம் ஆண்டு விண் வெளி வீரர் பயிற்சியை முடித்தார், க்ரூ - 12 என்ற இந்தப் பயணத்தில் விண்வெளிக்கு அவர் முதல் விமானியாக நியமிக்கப்பட்டார்.

ஸ்பேஸ்எக்ஸ் க்ரூ - 12-இல் இன்னும் இரண்டு பணி நிபுணர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். இவர்களில் ஐரோப்பிய விண்வெளி வீரர் சோஃபி அடினோட், பிரான்சின் கோஸ்னே - கோர்ஸ்-சர்-லோயரில் என்ற இடத்தில் பிறந்தவர். இவர் அங்கு விமான இயக்கவியல் படித்து 2004-ஆம் ஆண்டு பொறியியல் பட்டம் பெற்றார். மற்றவர் ரஷ்யாவின் ரோஸ்கோஸ்மோஸ் விண்வெளி வீரர் ஆண்ட்ரி ஃபெட்யேவ் ஆவார். ஹாத்வே மற்றும் அடினோட் விண்வெளி நிலையத் திற்குச் செல்வது இதுவே முதல் முறையாகும்.

'ஸ்பேஸ்எக்ஸின் க்ரூ டிராகன் விண்கலம் புளோரிடாவிலி ருந்து ஏவப்பட்டு, சுமார் 30 மணிநேரப் பயணத்திற்குப் பிறகு சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்தது. பெப்பிரவரி 14 காதலர் தினம் என்பதால், விண்வெளி நிலையத்திற்குச் சென்றடைந்த நான்கு வீரர்களும் அங்கிருந்த வீரர்களுடன் இணைந்து தங்கள் மகிழ்ச்சியையும் வாழ்த்துகளையும் பகிர்ந்து கொண்டனர்.

உசாத்துணை:
• https://en.wikipedia.org/wiki/SpaceX_Crew-12



kuruaravindan@thaiveedu.com

மனச்சாட்சியை அலட்சியம் செய்யாதே!

சர்வதேச மனச்சாட்சி நாள்

- சி. நற்குணலிங்கம்

தவறைச் சுட்டிக்காட்டும் விழிப்புணர்வே மனச்சாட்சி. எது சரி, எது தவறு என்பதைப் பகுத்தறியும் ஒருவரின் அறிவுத்திறனே அதன் அடிப்படை. நமது செயல்களும் நோக்கங்களும் தார்மீக ரீதியாகச் சரியானவையா என்பதை உணர்த்தி, அறத்தின் வழி நடக்கும் கடமை உணர்வைத் தூண்டும் விழிப்புணர்வு நிலைதான் மனச்சாட்சி என அறியப்படுகிறது.

> ***நம் மனச்சாட்சிக்குத் தெரிந்து நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், நம் வாழ்வின் நிம்மதியைத் தீர்மானிக்கிறது. ஏதோ ஒரு தருணத்தில் நம் உள்மனக் குரலைத் தள்ளி வைத்துவிட்டு நாம் எடுக்கும் முடிவுகள், பிற்காலத்தில் நம் உறக்கத்தைக் கலைக்கும் எண்ணங்களாக மாறக்கூடும்.***

வாழ்க்கை என்பது வெறும் நாட்களைக் கடத்துவதல்ல; அது நாம் தேர்ந்தெடுக்கும் விழுமியங்களால் (Values) ஆனது. எது சரி, எது தவறு என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட பார்வை மற்றும் வாழ்வியல் சூழலைப் பொறுத்து மாறுபடலாம். ஒருவருக்குச் சரியாகத் தெரிவது மற்றவருக்கு வேறாகத் தோன்றினாலும், அடிப்படை அறம் என்பது அனைவரிடமும் பொதுவானது. நம் புறச்சூழல் எப்படி அமைந்தாலும், நம் உள்மனம் காட்டும் சரியான பாதையில் பயணிக்கும்போதுதான் நாம் முழுமையான நிம்மதியை உணர முடியும். நமது அன்றாட ஓட்டத்தில் சில நேரங்களில் மனச்சாட்சியின் குரலைத் தற்காலிகமாகத் தள்ளி வைக்க வேண்டிய சூழல்கள் ஏற்படலாம். இருப்பினும், மற்றவர்களின் அங்கீகாரத்தை விட, நம் சொந்த மனச்சாட்சிக்கு உண்மையாக இருப்பதுதான் நமக்கு நீண்டகாலத் திருப்தியைத் தரும். அந்த உள்மனக் குரலுக்கு மதிப்பளித்து வாழும்போது, குற்ற உணர்வுகள் நீங்கி, நம் வாழ்வு இன்னும் அதிகத் தெளிவோடும் அமைதியோடும் மிளிரும்.

புற உலகை வேண்டுமானால் தற்காலிகமாக நம்மால் திசைதிருப்ப முடியும்; ஆனால், நம் உள்மனதின் குரலை ஒருபோதும் மறைக்க இயலாது. அது நமக்குள் எப்போதும் விழிப்புடன் இருக்கும் ஒரு நேர்மையான வழிகாட்டி. நம் மனச்சாட்சிக்குத் தெரிந்து நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், நம் வாழ்வின் நிம்மதியைத் தீர்மானிக்கிறது. ஏதோ ஒரு தருணத்தில் நம் உள்மனக் குரலைத் தள்ளி வைத்துவிட்டு நாம் எடுக்கும் முடிவுகள், பிற்காலத்தில் நம் உறக்கத்தைக் கலைக்கும் எண்ணங்களாக மாறக்கூடும். எனவே, எதற்கும் அஞ்சி வாழ்வதை விட, நம்





tg.theeban@gmail.com

மனச்சாட்சிக்கு உண்மையாக வாழ்வதே மேலானது. அந்தத் தெளிவான விழிப்புணர்வுடன் நாம் செயற்படும்போது, குற்ற உணர்வுகள் அற்ற, அமைதியான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கை நமக்கு வசமாகும்.

தனிமனித வாழ்வைத் தாண்டி, உலகளாவிய அமைதிக்கு மனச்சாட்சியே அடிப்படை என்பதை அங்கீகரிக்கும் விதமாகவே 'சர்வதேச மனச்சாட்சி நாள்' (International Day of Conscience) உருவாக்கப்பட்டது. இதற்கான வரலாற்றுப் பயணம் 2019 பெப்பிரவரி 5-ஆம் தேதி, நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் தொடங்கியது. 'உலக அமைதி மற்றும் அன்பின் கூட்டமைப்பு' (FOWPAL) சர்வதேச மனச்சாட்சிப் பிரகடனத்திற்கான உலகளாவிய பிரச்சாரத்தை அங்கேயே முன்னெடுத்தது. இதனைத் தொடர்ந்து, பஹ்ரைன் இராச்சியம் 'அன்பு மற்றும் மனச்சாட்சியுடன் கூடிய அமைதி கலாசாரத்தை ஊக்குவித்தல்' என்ற தீர்மான வரைவைச் சமர்ப்பித்தது. இக்கோரிக்கையை ஏற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA), 2019 ஜூலை 25 அன்று நடைபெற்ற தனது 73-ஆவது அமர்வில் (தீர்மானம் 73/329), அந்த வரைவுத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. இதன் மூலம், ஒவ்வோர் ஆண்டும் ஏப்பிரல் 5-ஆம் தேதியைச் சர்வதேச மனச்சாட்சி நாளாக அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இந்தத் தீர்மானத்தின்படி, முதலாவது சர்வதேச மனச்சாட்சி நாள் 2020-ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது. 'அமைதி கலாசாரத்தை உருவாக்குதல்' மற்றும் 'அன்பு மற்றும் மனச்சாட்சியுடன் செயற்படுதல்' ஆகியவையே இந்நாளின் அடிப்படைக் கருத்துருக்களாகும். சாதி, மத, இனப் பாகுபாடுகள் இன்றி, அடிப்படை மனித உரிமைகளை மதித்து, அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே இதன் சாராம்சம். சக மனிதர்களோடு எவ்வித வேறுபாடுமின்றி இணக்கமாகக் கலந்து வாழ்வதே உண்மையான நாகரிகம் என்பதை இது வலியுறுத்துகிறது. மனிதநேயத்தை மேம்படுத்துவதிலும், சமூக நல்லிணக்கத்தைப் பேணுவதிலும் நம் 'உள்மனச்சாட்சி' வகிக்கும் அளப்பரிய பங்கை இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது. வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் நமது மனச்சாட்சியின் மகத்துவத்தைப் போற்றி, அறத்தின் வழி நடக்கச் சிந்திப்பதற்கான ஒரு நல்வாய்ப்பாக இந்த நாளை நாம் கருதலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனப்படி, சர்வதேச மனச்சாட்சி நாள் என்பது வெறுமனே ஒரு நாள் கொண்டாட்டமல்ல; அது மானுடத்தின் நான்கு உன்னத நோக்கங்களை உள்ளடக்கிய ஒரு வழிகாட்டி. முதலாவதாக, வன்முறையற்ற சூழலை உருவாக்கி அன்பு, சகிப்புத்தன்மை மற்றும் ஒற்றுமையின் ஊடாக ஒரு 'உலகளாவிய அமைதி கலாசாரத்தை' நிலை நிறுத்துவதை இது முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது. இரண்டாவதாக, ஒவ்வொரு தனிமனிதனும் தனது செயல்களைச் சுயபரிசோதனை செய்து, எது சரி, எது தவறு என்பதைத் தனது உள்மனச்சாட்சியின்படி சிந்தித்துச் செயற்படும் விழிப்புணர்வைத் தூண்டுகிறது. மூன்றாவதாக, சாதி, மத, இனப் பாகுபாடுகளைக் கடந்து, சக மனிதர்களின் 'அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும்' மதிக்கும் உன்னதப் பண்பை மக்களிடையே விதைக்கிறது. இறுதியாக, வெறுப்புணர்வைக் களைந்து கருணை, பரிவு (Empathy) மற்றும் சமூகப் பொறுப்புணர்வோடும் செயற்பட மக்களை ஊக்கப்படுத்துவதன் மூலம், 'நீடித்த நிலையான உலகளாவிய வளர்ச்சிக்கு' இது வலுவான அடித்தளமிடுகிறது. சுருக்கமாகச் சொன்னால், நம் மனச்சாட்சியைச் சீரமைப்பதன் மூலம் ஒரு சிறந்த உலகைப் படைப்பதே இந்நாளின் சாராம்சம்.

மனச்சாட்சி என்பது பல்வேறு உன்னத விழுமியங்களின் சங்கமம்; அதுவே மனித வாழ்வின் ஆகச்சிறந்த பண்புமாகும். அத்தகையதொரு தார்மீகக் கட்டுக்கோப்பு இல்லையெனில், மனித மனதையோ அல்லது செயல்பாடுகளையோ ஒரு நெறிமுறைக்குள் வைத்திருப்பது சாத்தியமற்றது. 'அமைதி' என்பதை உலகளாவிய பார்வையில் நோக்கினால், அது வெறும் பிரச்சினைகளற்ற புறச்சூழ்நிலை மட்டுமல்ல; மாறாக, சவால்களுக்கு மத்தியிலும் ஒரு தனிநபர் பேணும் ஆழமான நிம்மதி மற்றும் அகத்தெளிவையே அது குறிக்கிறது. உண்மையில், 'உள் அமைதி' (Inner Peace) என்பது வெளிப்புறச் சூழல் எவ்வளவு நெருக்கடியாக இருந்தாலும், மனதைச் சமநிலையுடன் கையாள்வதாகும். இது தேவையற்ற பதற்றமின்மையையும் தெளிவான சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது. அமைதி என்பது வெறும் சத்தமில்லாத அமைதியான சூழல் அல்ல; மாறாக, பெரும் போராட்டங்களுக்கு மத்தியிலும் மனதை நிதானமாகவும், பயமற்ற நிலையிலும் வைத்திருப்பதே உண்மையான அமைதியாகும். இத்தகைய அகத் தெளிவே ஒரு மனிதனை எத்தகைய இக்கட்டான சூழலிலும் மனவலிமையோடும் மகிழ்ச்சியோடும் வாழ வழிநடத்துகிறது.

> ***"மனச்சாட்சி என்பது பல்வேறு உன்னத விழுமியங்களின் சங்கமம்; அதுவே மனித வாழ்வின் ஆகச்சிறந்த பண்புமாகும். அத்தகையதொரு தார்மீகக் கட்டுக்கோப்பு இல்லையெனில், மனித மனதையோ அல்லது செயல்பாடுகளையோ ஒரு நெறிமுறைக்குள் வைத்திருப்பது சாத்தியமற்றது."***

அமைதி என்பது மனித வாழ்வின் அடிப்படைத் தேவை மட்டுமல்ல, அது ஒருவரின் மனநலம் மற்றும் ஆன்மிகத்தோடு பின்னிப்பிணைந்த நிம்மதியான வாழ்வின் அடித்தளமாகும். தற்காலச் சூழலில் பகைமையற்ற நிலையைக் குறிக்கும் ஒரு முக்கியக் கருத்துருவாக இது திகழ்கிறது. இத்தகைய அமைதியை நிலைநிறுத்துவதில் 'மொழி' ஒரு வலிமையான கருவியாகச் செயற்படுகிறது; இது பன்முகத்தன்மை கொண்ட மக்களிடையே பாகுபாடுகளைக் களைந்து, அன்பையும் புரிதலையும் விதைப்பதன் மூலம் சமூக மோதல்களைத் தவிர்க்க உதவுகிறது.

மறுபுறம், சமூக நல்லிணக்கம் என்பது உலக நாடுகளிடையேயும், ஒரு நாட்டிற்குள் வாழும் பல்வேறு சமூகங்களிடையேயும் ஒற்றுமை, புரிந்துணர்வு மற்றும் சகவாழ்வை உறுதிப்படுத்தும் ஆணிவேராகும். குறிப்பாக, பல்லினச் சமூகங்களைக் கொண்ட நாடுகள் முரண்பாடுகளைக் களைந்து முன்னேற நல்லிணக்கம் மிக அவசியம். ஒவ்வொரு சமூகத்தின் அடிப்படை

உரிமைகளும் தேவைகளும் மதிக்கப்படும் போது மட்டுமே இந்த நல்லிணக்கம் சாத்திய மாகிறது; அவை மறுக்கப்படும்போதுதான் சமூக அமைதி குலைகிறது. எனவே, உரிமை களை மதிப்பதும் சகவாழ்வைப் பேணுவ துமே நிலையான முன்னேற்றத்திற்கான ஒரே வழியாகும்.

அடுத்து மனிதநேயத்தை எடுத்துக்கொண் டால், மனிதநேயம் என்பது வெறும் சொல் லல்ல; சக மனிதர்கள் மற்றும் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு, இரக்கம், கருணை, பாசம், நேர்மை, பிறர்நலம் பேணுதல் போன்ற உயர்ந்த பண்புகளைக் கொண்டிருத்தல், துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவுதல், அவர்களை மனிதர்களாக மதித்து நடத் துதல், தன்னலமின்றிச் செயற்பட்டு மற்றவர் களின் மகிழ்ச்சிக்கும் நலனுக்கும் பாடுப டுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது மனிதர்களை மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் அடிப்படைப் பண் பாகும்.

சர்வதேச மனச்சாட்சி நாளின் 2023-ஆம் ஆண்டிற்கான கருப்பொருள், 'அமைதி கலா சாரத்தைக் கட்டியெழுப்புதல்' (Building a Culture of Peace) என்பதாகும். இது உல கெங்கும் அமைதியை ஒரு வாழ்வியல் முறை யாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. 2024-ஆம் ஆண்டிற்கான குறிப்பிட்ட கருப்பொருள் (Theme) நேரடி யாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கள் நாளின் கருப்பொருளான 'எங்கள் உரி மைகள், நமது எதிர்காலம், இப்போது' (Our Rights, Our Future, Now) என்பது மனச் சாட்சி நாளின் நோக்கங்களுக்கு மிகவும் நெருக்கமானதாக அமைகிறது. உலகளா விய அமைதி, நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளுக்கான அழைப்பை இது ஆழ மாகப் பிரதிபலிக்கிறது. யார் என்ன சொன் னாலும், நமது உள்மனச்சாட்சிப்படி அறத் தின் வழி வாழ்வதில்தான் நமக்கான உண் மையான அடையாளம் அடங்கியிருக்கிறது.

நமக்குள்ளே உறையும் மனச்சாட்சிதான் நமது இன்பங்களையும் துன்பங்களையும் துல்லியமாகக் கணக்கிடும் நீதிபதி. 'புறத்தே சாட்சிகள் எவருமில்லை' என்று எண்ணி எவ ரும் களிப்படையத் தேவையில்லை; ஏனெ னில், நமக்குள் ஒரு மனச்சாட்சி இடை விடாது விழித்திருப்பதை ஒருபோதும் மறந் துவிடலாகாது. அது தற்காலத்தில் மௌன மாகத் தோன்றலாம்; ஆனால், வாழ்வின்

> ***"இந்த உலகத்தில் நாம் திருப்திப்படுத்த வேண்டிய ஒரே நபர் நமது உள்மனச்சாட்சிதான்; அதற்கு உண்மையாக இருந்து, அதன் கட்டளைகளுக்கு இணங்கி வாழ்வதே ஒரு மேன்மையான வாழ்வின் உண்மையான அடையாளமாகும்."***



அந்திமக் காலத்தில் நாம் தளர்ந்து படுத்திருக்கையில், அது நம்மிடம் மிக நிதானமாகவும் பக்குவமாகவும் பேசத் தொடங்கும். அன்று நம்மால் எவ்விதப் பதிலும் சொல்ல முடியாமல் மௌ னிக்க வேண்டியிருக்கும் என்ப தால், இப்போதே அதன் மெல்லிய மொழியை உணர்ந்து அறத்தின் வழி நடப்பதே சாலச்சிறந்தது. உண்மை யில், ஒரு மனிதனின் வாழ்நாள் முழு மைக்கும் துணைவரும் மிகச்சிறந்த நண்பன் அவனது மனச்சாட்சி மட் டுமே. இந்த உலகத்தில் நாம் திருப் திப்படுத்த வேண்டிய ஒரே நபர் நமது உள்மனச்சாட்சிதான்; அதற்கு உண் மையாக இருந்து, அதன் கட்டளைக ளுக்கு இணங்கி வாழ்வதே ஒரு மேன்மையான வாழ்வின் உண்மை யான அடையாளமாகும்.

வாழ்க்கைப் பயணத்தில் மற்ற மனிதர் களிடம் நல்லபெயர் பெறுவதை விட, உங்கள் சொந்த மனச்சாட்சியின் முன் னிலையில் நற்பெயர் பெற முயற்சி செய்யுங்கள். உங்கள் அகத்தின் குர லுக்கு மட்டும் உண்மையாக இருங் கள்; ஏனெனில், உலகத்திடம் உங் களை நிரூபிக்க வேண்டிய அவசியம் எக்காலத்திலும் இல்லை. வாழ்வில் எத்தகைய செல்வங்களை நீங்கள் இழந்தாலும், உங்கள் 'மனச்சாட்சி' எனும் உன்னத சொத்தை மட்டும் ஒரு போதும் இழந்துவிடாதீர்கள். தூய மனச்சாட்சி கொண்ட மனிதர்களுடன் உறவைப் பேணுங்கள்; அவர்களே உங்களை வாழ்வின் அடுத்தகட்ட உயர்விற்கு இட்டுச் செல்வார்கள். ஆகவே, மனச்சாட்சியின் மெல்லிய குரலை அலட்சியம் செய்யாமல், நற் செயல்களின் வழியே அறம் சார்ந்த வாழ்வை முன்னெடுக்க 2026-ஆம் ஆண்டு ஏப்பிரல் ஐந்தாம் நாள் அமையவிருக்கும் இந்த் சர்வதேச மனச்சாட்சி நாளில் உறுதியேற்போம். நம் அகத்தைச் சீரமைப்பதன் மூலம் ஒரு சிறந்த உலகைப் படைப்பதே இந்த் நாளின் உண்மையான சாராம்சம்.



natkunalingam@thaiveedu.com

இராசகுமார் வினோதன்

வயோதிபர்கள் நாட்டின் சுமைகளல்ல, நாட்டின் வருமான மூலாதாரங்கள்

> “வயோதிபர்களைச் சுமையாகப் பார்க்காமல், அவர்களைத் தேசத்தின் உயிருள்ள நூலகங்களாகவும் வழிகாட்டும் துருவ நட்சத்திரங்களாகவும் அங்கீகரிக்கும்போதுதான் ஒரு நாடு முழுமையான வளர்ச்சியை எட்ட முடியும்.”



ஒரு நாட்டின் உண்மையான வளர்ச்சி என்பது வெறும் வானளாவிய கட்டடங்களிலோ, அதிநவீன தொழிற்சாலைகளிலோ அல்லது டிஜிட்டல் தொழினுட்பங்களின் வேகத்திலோ தங்கியிருப் பதில்லை. மாறாக, அந்த நாட்டின் கலாசாரம், வரலாறு மற்றும் தலை முறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வந்த அனுபவ அறிவிலேயே அது ஆழமாக வேரூன்றி இருக்கிறது. இந்த அறிவுச் சங்கிலியின் மிக முக்கியமான கண்ணிகளாகத் திகழ்பவர்கள் வயோதிபர்கள். இன்றைய நுகர்வோர் கலாசாரம் புதியனவற்றைக் கொண்டாடுவதி லும், பழையனவற்றைத் தூக்கியெறிவதிலும் காட்டும் ஆர்வம், மனித வள மதிப்பீட்டிலும் ஊடுருவியிருப்பது கவலைக்குரியது. வயோதி பர்களை வெறும் காலாவதியானவர்கள் என்றும் சமூகத்தின் சுமை என்றும் கருதுவது ஒரு தேசம் தனக்குத்தானே இழைத்துக்கொள் ளும் மிகப்பெரிய பொருளாதார மற்றும் அறிவுசார் துரோகமாகும்.

உண்மையில், முதியவர்கள் என்பவர்கள் ஒரு சமுதாயம் பல நூற் றாண்டுகளாகப் போராடிப் பெற்ற அனுபவங்களின் திரட்சி; அவர் கள் காலத்தின் சாட்சிகள். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற நன்னூல் வாக்கு அறிவியலுக்கும் இயந்திரங்களுக்கும் பொருந்தலாம். ஆனால், ஒரு சமூகத்தின் ஆன்மாவிற்கும் வாழ்வியல் விழுமியங்களுக்கும் அது முழுமையாகப் பொருந்தாது. ஏனெனில், வேர்களை அறுத்துக்கொண்டு எந்தவொரு மரமும் உயரமாக வளர முடியாது. வாழ்வியல் அனுபவத்தைப் பொறுத்தவரை, முதியவர்க ளிடம் உள்ள அந்தப் பழையனவற்றின் உறுதியான அடித்தளத்தில் நின்றுகொண்டுதான், புதியனவற்றின் கோபுரங்களை நாம் எழுப்ப வேண்டும்.

நவீன உலகம் இன்று எதிர்கொள்ளும் பல சிக்கல்களுக்கு - அது உடல்நலக் குறைபாடாகட்டும் அல்லது சூழலியல் சீர்கேடாகட்டும் - தீர்வுகள் முதியவர்களின் அந்தச் சுருங்கிய கரங்களுக்குள் பொதிந் துள்ள பாரம்பரிய அறிவிலேயே ஒளிந்துள்ளன. அவர்களின் அனு பவ அறிவு என்பது ஒரு நாட்டின் மறைந்திருக்கும் மூலதனம். அந்த அறிவை ஒரு வருமான மூலாதாரமாக மாற்றுவதும், அவர்களைக் கௌரவப்படுத்துவதும் நாகரிகமடைந்த சமூகத்தின் கடமையாகும். வயோதிபர்களைச் சுமையாகப் பார்க்காமல், அவர்களைத் தேசத் தின் உயிருள்ள நூலகங்களாகவும் வழிகாட்டும் துருவ நட்சத்திரங் களாகவும் அங்கீகரிக்கும்போதுதான் ஒரு நாடு முழுமையான வளர்ச் சியை எட்ட முடியும்.

இன்றைய நவீன நுகர்வோர் கலாசாரம், மனித உறவுகளையும் வாழ் வியலையும் வெறும் பயன்பாட்டு மதிப்பு என்ற குறுகிய கண்ணாடி ஊடாகவே பார்க்கிறது. ஒரு தனிமனிதரின் மதிப்பு, அவர் எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறார் மற்றும் எவ்வளவு பொருளாதார லாபத்தை உடனடியாக ஈட்டித் தருகிறார் என்பதைக் கொண்டே தீர் மானிக்கப்படுகிறது. இத்தகைய உற்பத்தித் திறன் சார்ந்த அளவீடு கள், மனிதர்களை இயந்திரங்களாக உருவகம் செய்கின்றன. இதன் விளைவாகவே, சமூகத்தின் பெரும் பகுதியினர் முதியவர்களைச் சார்பு நிலையில் இருப்பவர்கள் என்ற ஒற்றைச் சொல்லுக்குள் முடக்கி விடுகிறார்கள். வேலை செய்யும் வயதில் இருப்பவர்களை மட்டும் வருமானம் ஈட்டுபவர்கள் என்று கொண்டாடும் சமூகம், வயோதிபர்களைப் பராமரிப்பு தேவைப்படும் ஒரு பாரமாகவும் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் ஒரு பொருளாதாரச் சுமையாகவும் சித்திரிக்கிறது.

tg.theeban@gmail.com

இந்த மேலோட்டமான மற்றும் தவறான பார்வை, முதியவர்கள் தங்களுக்குள் சேமித்து வைத்திருக்கும் விலைமதிப்பற்ற அறிவுச் சுரங்கத்தின் மதிப்பை முற்றாக உணரத் தவறி விடுகிறது. ஓர் இயந்திரம் தேய்மானம் அடையும் போது அதன் மதிப்புக் குறையலாம், ஆனால் ஒரு மனிதரின் அறிவு அனுபவ முதிர்ச்சியால் மெருகேறுகிறது என்பதை இந்தச் சமூகம் மறந்துவிடுகிறது. முதியவர்களை வெறும் பயனாளிகளாக மட்டும் பார்க்காமல், அவர்களை அறிவு வழங்குநர்களாக அடையாளப்படுத்த நாம் தவறிவிட்டோம். இந்தத் தவறான வகைப்படுத்தல் சமூகத்தில் ஒரு தலைமுறை இடைவெளியை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், முதியவர்களின் மன ஆரோக்கியத்தையும் அவர்களின் சுயமரியாதையையும் கடுமையாகப் பாதிக்கிறது. அவர்களைப் பொருளாதாரச் சுமையாகக் கருதும் எண்ணம், அவர்களின் பங்களிப்பைச் சுருக்கி விடுகிறது. உண்மையில், அவர்கள் கடந்த காலத்தின் எச்சங்கள் அல்ல; நிகழ் காலத்தைச் செழுமைப்படுத்தவும் வருங்காலத்தைத் திட்டமிடவும் தேவையான நிபுணத்துவ வழிகாட்டிகள். இந்தச் சமூகப் பார்வையில் மாற்றம் ஏற்படாதவரை, ஒரு தேசம் தனது மிகச்சிறந்த அறிவுசார் மூலதனத்தை வீணடித்துக் கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

“முதியவர்களிடம் உள்ள ஆழ்ந்த அனுபவ அறிவை, பழைமைவாதமானது அல்லது அறிவியலுக்குப் புறம்பானது என்று எளிதாக முத்திரை குத்தி, அவர்களைச் சமூகத்தின் விளிம்பிற்குத் தள்ளி ஓரங்கட்டும் போக்கு அதிகரித்து வருகிறது.”

நவீனமயமாக்கல் மற்றும் அதிவேக டிஜிட்டல் புரட்சியின் அதீத வளர்ச்சி, இன்று ஓர் அபாயகரமான போக்கை உருவாக்கியுள்ளது. முதியவர்களிடம் உள்ள ஆழ்ந்த அனுபவ அறிவை, பழைமைவாதமானது அல்லது அறிவியலுக்குப் புறம்பானது என்று எளிதாக முத்திரை குத்தி, அவர்களைச் சமூகத்தின் விளிம்பிற்குத் தள்ளி ஓரங்கட்டும் போக்கு அதிகரித்து வருகிறது. இந்தத் தவறான அணுகுமுறைக்கு மிக முக்கிய காரணியாக இருப்பது இன்றைய இளைய தலைமுறையினருக்கும் மூத்தோருக்குமான அந்தப் பிரம்மாண்டமான தலைமுறை இடைவெளி ஆகும். இன்று ஒரு சிறிய சந்தேகம் வந்தாலும், நம் விரல்கள் தேடுபொறிகளையே நாடுகின்றன. இணையத்தில் கிடைக்கும் துண்டுத் தகவல்கள் அறிவாகக் கருதும் இளைய சமூகம், தங்களுக்கு அருகிலேயே அமர்ந்திருக்கும் அனுபவக் களஞ்சியங்களைக் கவனிக்கத் தவறி விடுகிறது. தேடுபொறிகள் தரும் தகவல்கள் வெறும் புள்ளி விவரங்கள் மட்டுமே; ஆனால் முதியவர்கள் தரும் அறிவு என்பது பல்லாயிரம் தோல்விகளையும் வெற்றிகளையும் கடந்து வந்த நேரடி வாழ்வியல் பாடமாகும்.

மற்றொரு கசப்பான உண்மை, நமது முன்னோர்களின் அறிவு ஆவணப்படுத்தப்படாமை ஆகும். பாரம்பரிய மருத்துவ முறைகள், விவசாய நுணுக்கங்கள் மற்றும் வாழ்வியல் தத்துவங்கள் யாவும் பெரும்பாலும் ஒரு குருகுல முறையாகவோ அல்லது வாய்மொழியாகவோ ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டன. முறையான எழுத்துபூர்வமான பதிவுகள் அல்லது டிஜிட்டல் ஆவணங்கள் இல்லாததால், இந்த அறிவுச் சங்கிலி இன்று அறுந்து போய் நிற்கிறது. ஒரு முதியவரின் மறைவு என்பது வெறுமனே ஓர் உயிரின் இழப்பு மட்டுமல்ல; அது பல்லாயிரம் புத்தகங்கள் கொண்ட, ஈடுசெய்ய முடியாத ஒரு பெரிய நூலகமே எரிந்து போவதற்குச் சமமானது. அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படாதவை எல்லாமே மூடநம்பிக்கைகள் அல்ல; அவை இன்னும் நவீன அறிவியலால் எட்ட முடியாத ஆழமான உண்மைகளாக இருக்கக்கூடும். இந்த உண்மைகளை நாம் கண்டுகொள்ளாமல் விடுவது, எதிர்காலத் தலைமுறைக்கு நாம் செய்யும் வரலாற்றுத் துரோகமாகும். ஆவணப்படுத்தப்படாத அந்த அறிவை மீட்டெடுத்து, நவீன தொழினுட்பத்துடன் இணைக்கத் தவறினால், தேசம் தனது செழுமையான அடையாளத்தை மெல்ல மெல்ல இழக்க நேரிடும்.

இன்றைய நவீன உலகம் இரசாயனக் கலப்புள்ள மருந்துகளாலும் அவற்றின் பக்கவிளைவுகளாலும் சோர்வடைந்து போயுள்ளது. இதன் விளைவாக, உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் மீண்டும் இயற்கையை நோக்கியும் பாரம்பரிய மருத்துவ முறைகளை நோக்கியும் திரும்பத் தொடங்கியுள்ளனர். இந்தச் சூழலில், நமது சமூகத்தில் வாழும் முதியோர்களிடம் பொதிந்துள்ள சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி போன்ற மருத்துவ அறிவுகள் வெறும் வீட்டு வைத்தியங்கள் அல்ல; அவை உலகளாவிய நல்வாழ்வுச் சந்தையில் பல பில்லியன் டாலர் மதிப்புடைய ஒரு பெரும் பொருளாதாரப் புதையலாகும். ஒரு முதியவர் தனது வாழ்நாளில் கண்டடைந்த மூலிகைகளின் இரகசியங்களும் உடல் இயக்கவியல் குறித்த புரிதல்களும் முறையான அங்கீகாரம் பெறாத மறைந்திருக்கும் மூலதனமாக நம்மிடையே உள்ளன.

இந்த அறிவை நாட்டின் வருமான மூலாதாரமாக மாற்றுவதற்கு முதன்மையான வழி, காப்புரிமை மற்றும் ஆராய்ச்சித் துறையில் முதலீடு செய்வதாகும். நவீன மருத்துவத்தால் இன்னும் முழுமையான தீர்வைக் காண முடியாத பல நாட்பட்ட நோய்களுக்கு, முதியவர்கள் பயன்படுத்தும் மூலிகைச் சூத்திரங்களில் தீர்வுகள் ஒளிந்துள்ளன. பல தலைமுறைகளாக ரகசியமாகப் பாதுகாக்கப்பட்ட இந்த மூலிகைச் சேர்க்கைகளை, நவீன ஆய்வகச் சோதனைகளுக்கு உட்படுத்தி அவற்றின் வீரியத்தை உறுதிப்படுத்தலாம். இவ்வாறு தரப்படுத்தப்பட்ட மருந்துகளைப் பெரிய மருந்து நிறுவனங்கள் மூலம் சர்வதேச சந்தையில் அறிமுகப்படுத்தும்போது, அது நாட்டின் மருந்து ஏற்றுமதி வருமானத்தைப் பன்மடங்கு உயர்த்தும். ஒரு சிறிய கிராமத்து முதியவரிடம் இருக்கும் ஒற்றை மூலிகை அறிவு, உலகளாவிய சந்தையில் ஒரு புதிய மருந்துப் புரட்சியை ஏற்படுத்த வல்லது.

அடுத்ததாக, மருத்துவச் சுற்றுலா என்பது வருமானத்தை ஈட்டும் மற்றொரு பிரம்மாண்டமான துறையாகும். இன்று மேற்கத்தேய நாடுகளில் இயற்கை வழி வாழ்வியல் குறித்த ஆர்வம் அதிகரித்துள்ளது. இதனைப் பயன்படுத்தி, முதியவர்களின் நேரடி வழிகாட்டலில் இயங்கும் பாரம்பரிய நல்வாழ்வு மையங்களை உருவாக்கலாம். நம் ஊர்களில் பிரபல்யமான பாட்டி வைத்தியம், வர்மக் கலைகள், பாரம்பரிய ஒத்தடம், நஞ்சறுக்கும் முறைகள் மற்றும் எண்ணெய் மசாஜ் முறைகளை உள்ளடக்கிய இம்மையங்கள், வெளிநாட்டுப் பயணிகளைப் பெருமளவில் ஈர்க்கும். இம்மையங்களில் முதியவர்களை வெறும் தொழிலாளர்களாக அன்றி, தலைமை



மருத்துவ ஆலோசகர்களாக நியமிக்கலாம். அவர்களின் மேற்பார்வையில் இளம் தலைமுறையினர் இப்பணிகளைச் செய்யும்போது, அனுபவமும் நவீன வசதிகளும் இணைந்து தரமான சேவையை வழங்க முடியும்.

மேலும், இந்தப் பாரம்பரிய மருத்துவ அறிவு என்பது வெறும் மருந்துகளோடு நின்றுவிடாமல், தடுப்பு மருந்து என்ற கோணத்திலும் பொருளாதார வலுவை வழங்குகிறது. ஒரு சமூகம் நோயற்றதாக இருக்கும்போது, அரசாங்கம் சுகாதாரத் துறைக்காகச் செலவிடும் பெரும் தொகை மிச்சமாகிறது. முதியவர்கள் கற்றுக்கொடுக்கும் உணவு முறைகளும், மூலிகைப் பயன்பாடுகளும் மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, தேசத்தின் மனித வளத்தைப் பாதுகாக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், முதியோர்களின் மருத்துவ அறிவை ஆவணப்படுத்தி, அதைத் தொழில்முனைவோடு இணைப்பதன் மூலம், ஒரு நாடு தனது பாரம்பரியத்தைச் சர்வதேச வர்த்தக முத்திரையாக மாற்றி, நிலையான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும்.

உணவே மருந்து, மருந்தே உணவு எனும் உயரிய தத்துவத்தை வெறும் வாசகமாக அன்றி, வாழ்வியலாகவே கடைப்பிடித்தவர்கள் நமது முதியவர்கள். இன்றைய இயந்திரமயமான உலகில், துரித உணவுகளின் ஆதிக்கத்தால் மனித சமூகம் பல்வேறு உடல்நலச் சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வரும் வேளையில், முதியவர்களிடம் பொதிந்துள்ள உணவு சார்ந்த அறிவு ஒரு தேசத்தின் பொருளாதார மீட்சிக்கான திறவுகோலாகத் திகழ்கிறது. நவீன ஊட்டச்சத்து நிபுணர்கள் இன்று முன்மொழியும் பல ஆரோக்கியக் கோட்பாடுகளை, நமது பாட்டிமார்கள் தங்களின் சமையலறைகளில் பல தசாப்தங்களுக்கு முன்னரே நடைமுறைப்படுத்தியுள்ளனர். இந்த அறிவை வெறும் சமையல் கலையாக மட்டும் பார்க்காமல், ஓர் உணவுப் பொருளாதாரமாக மாற்ற வேண்டிய தருணம் இது.

முதலாவதாக, முதியவர்களின் வழிகாட்டலில் சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவு முறைகளை மீட்டெடுப்பது ஒரு மிகப்பெரிய வருமான வழியாகும். இன்றைய உலகச் சந்தையில் ஆர்கானிக் மற்றும் குளூட்டன் அற்ற உணவுகளுக்கு அதீத தேவை ஏற்பட்டுள்ளது. முதியவர்கள் நன்கு அறிந்த கம்பு, கேழ்வரகு, சாமை போன்ற சிறுதானியங்களின் சாகுபடி முறைகள் மற்றும் அவற்றைச் சுவை குன்றாமல் சமைக்கும் பக்குவங்கள் இன்று பெரும் வணிக மதிப்பைப் பெற்றுள்ளன. முதியவர்களை உணவு ஆலோசகர்களாகக் கொண்டு பாரம்பரிய உணவகங்களை உருவாக்குவதன் மூலமும் பதப்படுத்தப்பட்ட பாரம்பரிய உணவுப் பொதிகளை உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்துவதன் மூலமும் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தைப் பெருக்க முடியும். இது துரித உணவுகளால் ஏற்படும் வாழ்க்கைமுறை நோய்களுக்கான ஒரு மாற்றீடாக அமைவதோடு, ஆரோக்கியமான மனித வளத்தையும் நாட்டிற்கு வழங்குகிறது.

இரண்டாவதாக, முதியோர்களிடம் உள்ள பாரம்பரிய உணவுப் பாதுகாப்புத் தொழினுட்பம் என்பது ஒரு தனித்துவமான அறிவுச் சொத்தாகும். இன்றைய உணவுத் துறையில் இரசாயனப் பாதுகாப்பிகள் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன. ஆனால், நமது முதியவர்கள் எவ்வித இரசாயனமும் இன்றி உப்பில் ஊறவைத்தல், வெயிலில் உலர்த்துதல், இயற்கையான எண்ணெய் மற்றும் மூலிகைகளைப் பயன்படுத்தி உணவைப் பல்லாண்டுகள் கெடாமல் பாதுகாக்கும் நுணுக்கங்களை அறிந்து வைத்துள்ளனர். வற்றல், ஊறுகாய், வடகம் மற்றும் கருவாடு போன்ற தயாரிப்புகளை இவர்களின் மேற்பார்வையில் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டது எனும் தர அடையாளத்துடன் சர்வதேச சந்தையில் அறிமுகப்படுத்தலாம். இது நுகர்வோருக்குப் பாதுகாப்பான உணவை உறுதி செய்வதுடன், உள்ளூர் சிறுதொழில் முனைவோருக்கு மிகப்பெரிய இலாபகரமான சந்தையைத் திறந்து விடும்.

மேலும், இந்த உணவு சார்ந்த அறிவு என்பது கலாசாரச் சுற்றுலாவையும் ஊக்கப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் தனித்துவமான சுவைகளைத் தேடி வரும் பயணிகளுக்கு, முதியவர்கள் மூலம் அசல் சுவையை வழங்குவது நாட்டின் சுற்றுலா வருவாயை அதிகரிக்கும். இவ்வாறு முதியவர்களின் உணவு அறிவை நவீன சந்தைப்படுத்தல் உத்திகளுடன் இணைப்பதன் மூலம், ஒரு நாடு தனது பாரம்பரிய உணவுகளைச் சர்வதேச பிராண்டுகளாக மாற்றி, மிகப்பெரிய அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும். சுருக்கமாகச் சொன்னால், முதியவர்களின் சமையலறை இரகசியங்கள் என்பவை ஒரு தேசத்தின் பொருளாதாரத்தை ஆரோக்கியமான பாதையில் கொண்டு செல்லும் உந்துசக்திகளாகும்.

ஒரு நாட்டின் ஆன்மா அதன் கலைகளிலும் பண்பாட்டு விழுமியங்களிலுமே குடிகொண்டுள்ளது. இன்று நாம் நவீன தொழில்நுட்பங்களை நோக்கி ஓடிக்கொண்டிருந்தாலும், மனிதகுலம் தனது வேர்களைத் தேடி மீண்டும் கலை மரபுகளை நோக்கித் திரும்பத் தொடங்கியுள்ளது. மறைந்து வரும் நாட்டுப்புறக் கலைகள், பாரம்பரியக் கைவினைத் திறன்கள் மற்றும் நுணுக்கமான கட்டடக்கலை இரகசியங்கள் யாவும் இன்று நமது சமூகத்தில் வாழும் முதியவர்களிடமே எஞ்சியுள்ளன. இவர்கள் வெறும் கலைஞர்கள் மட்டுமல்ல; ஒரு தேசத்தின் தனித்துவமான அடையாளத்தைச் சுமந்து நிற்கும் உயிருள்ள கலைக்கூடங்கள். இந்த அறிவை முறையாகப் பயன்படுத்தினால், அதனை ஒரு வலிமையான படைப்பாற்றல் பொருளாதாரமாக மாற்றியமைக்க முடியும்.

முதலாவதாக, கைவினைப் பொருட் சந்தை என்பது, மிகப் பெரிய வருமான வழியாகும். இன்று இயந்திரங்களால் தயாரிக்கப்படும் பொருட்கள் சந்தையில் மலிந்து கிடக்கின்றன. ஆனால், கைகளால் மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட மர வேலைப்பாடுகள், மட்பாண்டங்கள், கைத்தறி நெசவு மற்றும் பனை ஓலைப் பொருட்கள் போன்றவற்றுக்குச் சர்வதேச சந்தையில், குறிப்பாக மேலைநாடுகளில், மிக அதிக மதிப்பும் விலையும் உண்டு. இயந்திரங்களால் ஒருபோதும் எட்ட முடியாத அந்த நேர்த்தியை முதியவர்களின் அனுபவம் வாய்ந்த கரங்கள் வழங்குகின்றன. இவர்களது மேற்பார்வையில் இளம் கலைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, இந்தப் பொருட்களைப் பாரம்பரியச் சான்றிதழுடன் உலகச் சந்தையில் விற்கும் போது, அது மிகப்பெரிய அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும். இது உள்ளூர் கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதுடன், அழிந்து வரும் கலைகளைக் காப்பாற்றும் பொருளாதார உந்துசக்தியாகவும் அமையும்.

இரண்டாவதாக, கலாசாரச் சுற்றுலா ஒரு நாட்டின் வருமானத்தை ஈட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. வெளிநாட்டுப் பயணிகள் இன்று நவீன கட்டடங்களை விட, மண்ணின் பூர்வீகக் கலைகளையும், கலாசார அடையாளங்களையும் காண்பதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். முதியவர்கள் நன்கு அறிந்த நாட்டுப்புறப் பாடல்கள், கூத்துகள், கிராமிய நடனங்கள் மற்றும் அவர்களது பாரம்பரியக் கட்டடக்கலை நுணுக்கங்கள் ஆகியவற்றை ஒரு சுற்றுலாத் தொகுப்பாக மாற்றலாம். உதாரணமாக, முதியவர்களின் ஆலோசனையுடன் பழங்காலக் கட்டடக்கலை முறையைப் பயன்படுத்தி பாரம்பரிய கிராமங்களை உருவாக்குவது பயணிகளைப் பெருமளவில் ஈர்க்கும். அங்கு முதியவர்களே நேரடிப் பயிற்சியாளர்களாகவும் கதைசொல்லிகளாகவும் செயற்படும்போது, சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு மெய்யான அனுபவம் கிடைக்கிறது. இது நாட்டின் சுற்றுலாத் துறையைப் பன்முகப்படுத்துவதோடு, உள்ளூர் பொருளாதாரத்தைச் செழிக்கச் செய்யும்.

மேலும், இந்தக் கலை மரபுகள் என்பவை வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல; அவை ஒரு நாட்டின் மென் ஆற்றல் ஆகும். முதியவர்களிடம் உள்ள இந்தக் கலை நுணுக்கங்களை ஆவணப்படுத்தி, அவற்றை நவீன திரைப்படங்கள், வடிவமைப்புத் துறைகள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள் தயாரிப்பில் பயன்படுத்தினால், அது நாட்டின் வர்த்தக முத்திரையை உலகளாவிய ரீதியில் உயர்த்தும். சுருக்கமாகச் சொன்னால், முதியவர்களின் கலை அறிவு என்பது ஒரு வற்றாத வருமான ஊற்று. அதனைத் தொழில்முறைத் தரத்துடன் இணைக்கும்போது, அது தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் பண்பாட்டுப் பாதுகாப்பிற்கும் இணையாகப் பங்களிக்கும்.

ஒரு நாட்டின் வலிமை என்பது அதன் பொருளாதாரப் புள்ளிவிவரங்களில் மட்டும் இல்லை; அது அந்தச் சமூகத்தின் விழுமியங்களிலும், ஒழுக்கக் கட்டமைப்பிலுமே தங்கியுள்ளது. அந்த வகையில், வயோதிபர்கள் ஒரு சமூகத்தின் தார்மீக நங்கூரங்களாக செயற்படுகிறார்கள். ஒரு கப்பல் அலையடிக்கப்படும்போது அதை நிலைநிறுத்த நங்கூரம் எவ்வளவு அவசியமோ, அதுபோலவே நவீன உலகின் வேகமான மாற்றங்கள் மற்றும் கலாசாரச் சிதைவுகளுக்கு மத்தியில் ஒரு சமுதாயம் தனது தடம் மாறாமல் இருக்க முதியவர்கள் அவசியமாகிறார்கள். அவர்கள் பொருளாதார ரீதியாக நேரடியாகப் பங்களிக்காவிட்டாலும், ஒரு நாடு அமைதியாகவும் சீராகவும் இயங்குவதற்குத் தேவையான சமூக மூலதனத்தை அவர்கள் வழங்குகிறார்கள்.

> **“இன்றைய அவசர உலகில் பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்லும் சூழலில், குழந்தைகளின் மனவளர்ச்சியிலும் குணாதிசயங்களை வடிவமைப்பதிலும் தாத்தா–பாட்டிகளின் பங்கு ஈடுசெய்ய முடியாதது. அவர்கள் சொல்லும் கதைகளும், புகட்டும் வாழ்வியல் பாடங்களும் வெறும் பொழுதுபோக்கு அல்ல; அவை ஒரு நேர்மையான மற்றும் பொறுப்புள்ள பிரஜையை உருவாக்குவதற்கான அத்திவாரங்கள்.”**

ஒரு குடும்பக் கட்டமைப்பில் முதியவர்கள் இருக்கும்போது, அங்கு கலாசார விழுமியங்களும் அற நெறிகளும் இயல்பாகவே அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகின்றன. இன்றைய அவசர உலகில் பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்லும் சூழலில், குழந்தைகளின் மனவளர்ச்சியிலும் குணாதிசயங்களை வடிவமைப்பதிலும் தாத்தா-பாட்டிகளின் பங்கு ஈடுசெய்ய முடியாதது. அவர்கள் சொல்லும் கதைகளும், புகட்டும் வாழ்வியல் பாடங்களும் வெறும் பொழுதுபோக்கு அல்ல; அவை ஒரு நேர்மையான மற்றும் பொறுப்புள்ள பிரஜையை உருவாக்குவதற்கான அத்திவாரங்கள். இத்தகைய வலுவான குடும்பக் கட்டமைப்பானது, இளைஞர்கள் தவறான பாதைகளில் செல்வதைத் தடுத்து, ஓர் அமைதியான மற்றும் குற்றங்களற்ற சமூகத்தை உருவாக்க மறைமுகமாக உதவுகிறது.

சமூக அமைதிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே ஒரு நேரடித் தொடர்பு உண்டு. எந்த ஒரு நாட்டில் குற்றங்கள் குறைவாகவும், சமூகப் பாதுகாப்பு அதிகமாகவும் இருக்கிறதோ, அங்குதான் சர்வதேச முதலீடுகளும் பொருளாதார ஸ்திரத்தன்மையும் சாத்தியமாகும். முதியவர்கள் தங்கள் அனுபவ முதிர்ச்சியால் சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் சமாதானத் தூதுவர்களாக விளங்குகிறார்கள். கிராமியக் கூட்டங்கள் முதல் குடும்பப் பஞ்சாயத்துகள் வரை அவர்களின் சொல்லுக்கு இருக்கும் மதிப்பு, பல சட்டச் சிக்கல்களையும் சமூக விரிசல்களையும்



தவிர்க்க உதவுகிறது. இந்த அமைதியான சூழல், ஒரு தேசத்தின் உற்பத்தித் திறனை உயர்த்துவதோடு, சட்ட ஒழுங்கை நிலைநாட்ட அரசாங்கம் செலவிடும் பெரும் தொகையை மிச்சப்படுத்துகிறது.

மேலும், முதியவர்கள் ஒரு நாட்டின் மனநலப் பாதுகாப்பாளர்களாகவும் திகழ்கிறார்கள். நவீன காலத்தில் இளைய தலைமுறை எதிர்கொள்ளும் மன அழுத்தம், தோல்வி, பயம் மற்றும் தனிமை போன்ற உணர்வுகளுக்கு, முதியவர்களின் ஆறுதலான சொற்களும் அவர்களின் வாழ்நாள் அனுபவங்களும் மிகச் சிறந்த மருந்தாகின்றன. இதுவும் கடந்து போகும் என்ற அவர்களின் நிதானம், ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த மன உறுதியை அதிகரிக்கிறது. இறுதியாக, வயோதிபர்கள் என்பவர்கள் வெறும் கடந்த காலத்தின் சாட்சிகள் அல்ல; அவர்கள் நிகழ்காலத்தின் ஒழுக்கச் சீர்குலைவைத் தடுக்கும் வேலிகள். அவர்களைப் போற்றுவது என்பது ஒரு நாடு தனது பாதுகாப்பான மற்றும் செழிப்பான எதிர்காலத்தை உறுதி செய்வதாகும்.

> **“நவீன காலத்தில் இளைய தலைமுறை எதிர்கொள்ளும் மன அழுத்தம், தோல்வி, பயம் மற்றும் தனிமை போன்ற உணர்வுகளுக்கு, முதியவர்களின் ஆறுதலான சொற்களும் அவர்களின் வாழ்நாள் அனுபவங்களும் மிகச்சிறந்த மருந்தாகின்றன.”**

வயோதிபர்களை ஒரு நாட்டின் சுமை என்று கருதுவது, ஒரு மரத்தின் வேர்களை அது மண்ணிற்குப் பாரமாக இருக்கிறது என்று எண்ணுவதற்கு ஒப்பானது. வேர்கள் வெளியே தெரிவதில்லை என்பதற்காக அவற்றின் முக்கியத்துவத்தை நாம் மறுக்க முடியாது; அந்த வேர்கள்தான் மரத்தின் கிளைகளையும், இலைகளையும், கனிகளையும் தாங்கி நிற்கின்றன. இக்கட்டுரையின் ஊடாக நாம் கண்டது போல, முதியவர்களிடம் பொதிந்துள்ள மருத்துவ அறிவு, உணவு மரபு மற்றும் கலைத் திறன்கள் என்பவை வெறும் கடந்த கால நினைவுகள் அல்ல; அவை நாட்டின் வருமானத்தை பன்மடங்கு உயர்த்தவல்ல உயிருள்ள பொருளாதார மூலதனங்கள்.

நவீன தொழினுட்பத்தின் வேகமும், முதியவர்களின் அனுபவ முதிர்ச்சியும் இணையும் புள்ளியில்தான் ஒரு தேசத்தின் உண்மையான முன்னேற்றம் ஒளிந்திருக்கிறது. அறிவியல் என்பது எதைக் கண்டுபிடிப்பது என்று சொல்லிக்கொடுக்கலாம், ஆனால் அந்தக் கண்டுபிடிப்பை எதற்காக, எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற அறத்தை முதியவர்களின் அனுபவமே கற்றுக்கொடுக்கிறது. அவர்களின் அறிவை ஆவணப்படுத்துவதும் அதனை நவீன சந்தைப்படுத்துதல் உத்திகளுடன் இணைப்பதும் வெறும் பொருளாதாரத் தேவை மட்டுமல்ல; அது நமது கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் ஒரு வரலாற்றுப் பொறுப்பாகும்.

இறுதியாக, வயோதிபர்களை வருமான மூலாதாரங்களாகப் பார்ப்பது என்பது அவர்களை வெறும் இயந்திரங்களாக மாற்றுவதல்ல; மாறாக, அவர்களுக்குத் தகுதியான கௌரவத்தையும், அங்கீகாரத்தையும், சமூகப் பங்களிப்பையும் மீண்டும் வழங்குவதாகும். ஒரு சமூகம் தனது மூத்தோரை எவ்வாறு நடத்துகிறது என்பதைக் கொண்டே அந்தச் சமூகத்தின் நாகரிகம் அளவிடப்படுகிறது. முதியவர்களின் நரைத்த முடிகளுக்குப் பின்னால் இருக்கும் அறிவின் வெளிச்சம், தேசத்தின் பொருளாதார இருளைப் போக்கும் வல்லமை கொண்டது. அவர்களின் அனுபவங்களை அறுவடை செய்வோம்; அதன் மூலம் ஒரு செழிப்பான, அமைதியான மற்றும் தன்னிறைவு பெற்ற தேசத்தைக் கட்டியெழுப்புவோம். வயோதிபர்கள் தேசத்தின் முதிர்ந்த கனிகள்; அவற்றைச் சரியாகப் பயன்படுத்தினால் தேசம் முழுமைக்கும் இனிப்பு நிச்சயம்.



Vinothan.R@thaiveedu.com

ஓர் எழு நாட்குறிப்பு - 2

- ஓவியர் ஜீவா



tg.theeban@gmail.com

பெரிய பரந்தனில் காலை சுகமாகவே விடிந்தது. நிலத்தை ஒட்டிய பகுதியில் பனிப்படலம் ஒரு வெண்திரையை படர விட்டிருந்தது. புள்ளினங்கள் குரலோசை இதமாகவே இருந்தது. கோவையின் நெரிசலான, இரைச்சலான பகுதியில் வாழும் எனக்கு இவை புதிய அனுபவங்கள். திடீரென்று 'நான் ஆணையிட்டால்' என்ற திரைப்படப் பாடல் உச்சஸ்தாயியில் ஒலிக்க, அலறி அடித்துக்கொண்டு என்ன விஷயம் என்று பார்க்க சாலைக்கு ஓடினேன். ஓர் ஆட்டோவிலிருந்துதான் இந்தப் பாடல் ஒலித்தது. கணீர்க் குரலில் ஒரு பெண்குரல் அன்று அப்போது நடந்துகொண்டிருந்த மாணவிகள் சைக்கிள் மாரத்தான் பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டது. சாலையில் மாணவிகளின் சைக்கிள் ஓட்டம் தொடர்ந்தது! காலை நடை, போரின்போது இடிந்தும், தரைமட்டமாகவும் கிடந்த வீடுகளைப் பார்க்கவும், விவேகானந்தனின் சொந்த ஊர் குறித்த மலரும் நினைவுகளைக் கேட்கவும் வாய்ப்பாக அமைந்தது.

மாவீரர் துயிலும் இல்லம் என்று பல ஊர்களில் காண நேர்ந்தது. கிளிநொச்சி அருகே கனகபுரம் என்ற பகுதியில் இருந்த ஓர் இடத்திற்கு சீயான் அழைத்துச் சென்றார். இரண்டு மூன்று ஏக்கர் நிலம் இருக்கலாம். முன்னால் ஒரு வளைவில் மாவீரர் துயிலும் இல்லம் என்று எழுதியிருந்தது. கால்நடைகள் புகாமல் இருக்க சுற்றிலும் கம்பிவேலி அமைப்பு. மைதானத்தின் நடுவில் ஒரு கற்குவியல் பத்தடி உயரத்திற்கு நிமிர்ந்து நின்றது. குவியல் முழுதும் மாவீரர்கள் புதைக்கப்பட்ட இடங்களின் மீது முன்பிருந்த அவர்கள் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கற்கள். அப்போதைய அரசு, நினைவுக்கற்களைப் பிடுங்கியெறிந்துவிட்டதாகச் சொன்னார்கள். அவற்றைச் சேகரித்து இந்த கற்குன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக் கொருமுறை அஞ்சலிக் கூட்டங்கள் பெரிய அளவில் நடைபெறுமாம். நினைவுக் கற்களின் மீது இருந்த ஆண் பெண் பெயர்களும் அவர்கள் பிறந்த - இறந்த வருடங்களின் குறிப்பும் மனதை நோகடிக்கச் செய்தன. நுழைவாயில் அருகே இருந்த மைல்கல் போன்ற அமைப்பிலிருந்த நினைவுச்சின்னத்தில் 'மாவீரர் துயிலும் இல்லம், கிளிநொச்சிக்கோட்டம்' என்று தலைப்பிட்டு, கீழே 'உஷ், மெதுவாக உங்கள் பாதங்களை பதியுங்கள். இங்கே வீரத்தின் வித்துகள் விதைக்கப்பட்டிருக்கின்றன' என்று பொறித்திருந்தனர். மெய்சிலிர்க்க வைத்த கணம் அது!

அந்தி மயங்கும் நேரத்தில் கிளிநொச்சிக்கு அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கும் நீராதாரமாகத் திகழும் இரணைமடுக் குளம் நீர்த்தேக்கத்தையும் காணும் வாய்ப்புக் கிடைத்தது! விவேகானந்தன் வீட்டில் எங்களுக்கு விருந்துபசாரம் வெகு நிறைவாக இருந்தது. அவருடைய தமக்கையார் பாண் (கொஞ்சம் பெரிய அளவிலுள்ள பிரட்) - பருப்பு, பால் பொங்கல், கொத்து, மீன், கோழி என்று சமைத்து வழங்கினார். கறுப்புத் தேயிலையும் வெள்ளமாக ஓடியது. ஒரு மாலை அவருடைய தங்கையார் வீட்டிலும் விருந்து!

மன்னார் நோக்கி செல்லலாம் என்று பயணத்தைத் தொடங்கினோம். செல்லும் வழியில் முழங்காவில் என்ற சிற்றூரில் வண்டியை நிறுத்தி எங்களுடன் வந்திருந்த அறவாணன் வீட்டுக்கு சென்றோம். அவனுடைய தந்தை, விவேகானந்தனின் தமக்கை மகன் உதயணன். போரில் கிட்டத்தட்ட உயிரிழந்த நிலையில் கிடந்தவர், தீவிர சிகிச்சைக்கு உள்ளாகி மீண்டும் உயிரோடு வந்தவர். இந்தக் கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார் அந்த இளைஞர். நெல்லுடன் பாக்கும் விளைகிறது. அவர்களுடைய விவசாயப் பணியை சிறிது நேரம் பார்வையிட்டுவிட்டு பயணத்தைத் தொடர்ந்தோம். இந்தப் பயணத்திலும் சரி, தொடர்ந்த நாட்களிலும் சரி, எப்படி நெல் எல்லா சாலைகளிலும் காயப்போடப்பட்டிருந்ததோ அதே போல ஏராளமான மாடுகளைக் காண நேர்ந்தது. நூற்றுக்கணக்கில் நிறைந்திருந்த நடமாடும் மந்தைகள் சாலைகளின் குறுக்கேயும் சாலைக்கு இரு மருங்கிலும் இருந்த வெட்ட வெளிகளிலும் மேய்ந்துகொண்டிருந்தன. இத்தனை மாடுகள் இருந்தும் இங்கே ஏன் பாலுக்கு பதில் பால்பொடியை பரவலாகப் பயன்படுத்துகிறார்கள் என்று வியந்துகொண்டு சென்றோம்.

மடு மரியாள் தேவாலயம், ஒரு காட்டுப்பகுதியில் மடு என்ற பகுதியில் இருக்கிறது. அங்கு செல்லும் சாலைக்கு இருபுறமும் அடர்ந்த காடுகள். கிட்டத்தட்ட 4 நூற்றாண்டுகள் வயதிருக்கும் தேவாலயம். தமிழ் மற்றும் சிங்கள கத்தோலிக்கர்களுக்கு மிகப்புனிதமான ஆலயம். ஓகஸ்ட் மாதத்தில் இடம் பெறும் இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் இன, மத பேதமின்றி கலந்து கொள்வர் என்று சொன்னார்கள். ஈழப்போர் தொடங்கியதில் இருந்து இவ்வாலயத்திற்கு செல்வோரின் தொகை பல மடங்கு குறைந்தது. இனப்போரின் தாக்கத்தினால் இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் இவ்வாலயச் சுற்றுவட்டத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்தனர். ஏப்பிரல் 2008-இல் ஆலயத்தை நோக்கி இலங்கை இராணுவத்தினர் தொடர்ச்சியாக நடத்திய பலத்த ஷெல் வீச்சினால் ஆலயம் கடும் சேதத்துக்குள்ளாகியது. இதனால் அங்கு அடைக்கலமடைந்திருந்த மக்கள்

அனைவரும் வேறு பாதுகாப்பான இடத்தை நோக்கி இடம்பெயர்ந்தனர். அந்த ஆலயத்தில் இறுதியாகத் தங்கியிருந்த பாதிரியார்கள் மற்றும் பணியாளர்களும் அங்கிருந்து வெளியேறினர். இதனை அடுத்து தற்காலிக நடவடிக்கையாக தேவாலயத்தில் 400 ஆண்டுகளாக வணங்கப்பட்ட அன்னையின் திருவுருவச் சிலையின் பாதுகாப்புக் கருதி அச்சிலை ஏப்பிரல் 4, 2008-இல் மன்னார் தேவன்பிட்டி புனித சவேரியர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.



இப்போதும் கடும் பாதுகாப்பின் கீழ்தான் ஆலயம் உள்ளது. இராணுவ வீரர்கள் வாயிலைப் பாதுகாத்து வருகின்றனர். புகைப்படம் எடுப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. உடைக் கட்டுப்பாடும் உண்டு. நாங்கள் சென்ற போது ஷார்ட்ஸ் அணிந்த சிலருக்கு உள்ளே செல்ல அனுமதி இல்லாத தால், லுங்கியை வாங்கி மேலே அணிந்து செல்லும் காட்சியை பார்த்தோம். தேவாலயம் சுத்தமாக, அமைதியான சூழலில் உள்ளது!

மன்னார் நகரை அடையும்போதே, ஒரு பெரிய விளம்பரப்பலகையில் 'ராமர் பாலம்' என்று சுற்றுலாத்துறையினர் எழுதி வைத்திருந்தனர். அந்த ஊரின் முக்கியமான ஒரு மரத்தை காணச்சென்றோம். பிரம்மாண்டமான அந்த பெருக்கமரம் (பயோபாப்) 700 வருடங்களுக்கு மேல் வயதானதாம். 21.10 மீட்டர் சுற்றளவும் 10.50 மீட்டர் உயரமும் கொண்ட ஓர் அற்புத படைப்பு இன்னும் உயிரோடு இருப்பது ஒரு அதிசயம்!

தலைமன்னார் துறை ரயில் நிலையம் கடலை கிட்டத்தட்ட தொட்டுக்கொண்டிருக்கிறது. 1894-இல் இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் ஒரு ரயில் பாலம் அமைக்கும் திட்டம் ஒன்று வெள்ளையர்களிடம் இருந்தது. தொழிலாளர்களையும் சரக்குகளையும் இலங்கைக்குக் கொண்டு வர ஒரு எளிய திட்டம். ஆனால் இது நிறைவேறாததால் 1914-இல் கட்டப்பட்ட தலைமன்னார் ரயில் நிலையத்தையும் தனுஷ்கோடியையும் இணைக்கும் வகையில் படகுப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. 1964-இல் வீசிய பெரும் புயல் தனுஷ்கோடி நகரத்தை முற்றிலும் அழித்ததுமில்லாமல் தலைமன்னாருக்கும் பெரும் சேதத்தை விளைவித்தது. மூன்று வருட இடைவெளிக்கு பிறகு மீண்டும் படகுப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டு 80-களில் ஏற்பட்ட போர்ச் சூழலால் மீண்டும் நிறுத்தப்பட்டது. இன்று படகுத்துறை கடற்காற்றினால் அரிக்கப்பட்டு உருக்குலைந்து கிடக்கிறது. நாட்டின் கடைசித் தண்டவாளத்துண்டு கடற்கரையை நோக்கி நீண்டுகொண்டிருப்பது ஒரு சோகக் கவிதையின் சித்திரமாகத் தோன்றியது. தலைமன்னார் துறை ரயில் நிலையம் இந்திய அரசாங்க கடனுதவித் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்டு இன்று இயங்குகிறது. ஆட்களேயற்ற நிலையமாக நாங்கள் சென்றபோது காட்சியளித்தது. பொதுவாக அங்குள்ள ரயில் வண்டிகளில் இந்தியாவைப் போல படுக்கை வசதிகள் இல்லை என்று சொன்னார்கள். எல்லாம் சீட்கள்தானாம்.



சுற்றிலும் அகழியுடன் கடலோரமாகக் காட்சியளிக்கிறது மன்னார் ஒல்லாந்தர் கோட்டை. இப்போது உள்ளே மராமத்துப் பணிகள் நடைபெறுகின்றன. வெளியே யாருமே இல்லாமல், ஒரு கழுதை மட்டும் மேய்ந்துகொண்டிருந்தது. மாடுகளின் எண்ணிக்கையைப் போல நான் வியந்தது கழுதைகளின் எண்ணிக்கையையும் தான். காட்டுப்பகுதிகளிலும் நகர்ப்புரங்களிலும் எஜமானர்கள் இல்லாமல் சுதந்திர ஜீவன்களாக உலா வருகின்றன கழுதைகள்.



இலங்கையில் உள்ள முக்கிய கோவில்களில் ஒன்று திருக்கேதீஸ்வரம், மன்னார் பகுதியில் இந்திய பெருங்கடலை நோக்கி அமைந்திருக்கிறது. இந்திய கோவில் கட்டடக்கலையைப் பின்பற்றிக் கட்டப்பட்டிருக்கும் கோவிலுக்கு வயது 2,500 என்று அங்கு நம்பிக்கை. இது இராவணன் கட்டியது என்பது இன்னொரு நம்பிக்கை. கோவிலுக்கு அருகில் இருக்கும் நீர்த்தேக்கம் மிக அழகியது. ஈழத்துக் கோவில்களில் சட்டை அணியக்கூடாது என்ற விதியுடன், இந்த கோவிலில் கட்டாயமாக வேட்டியும் அணியவேண்டும் என்பது ஒரு விதி. காற்சட்டை மேலே வேட்டியை கட்டிக்கொள்ளலாம். கோவில் வாசலிலேயே ஒரு பெரிய கூடையில் வேட்டிகளை வைத்திருக்கிறார்கள்.





நாம் அவற்றை அணிந்து கொண்டு உள்ளே சென்று விட்டு வெளியே வரும்போது அதே கூடையில் போட்டுவிட்டு வந்து விடலாம். இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது! போர்த்துகீ சியர்களால் சூறையாடப்பட்டு பூசைகள் நிறுத்தப்பட்ட ஆல யம் மீண்டும் ஆறுமுகநாவலரின் வேண்டுகோளின்படி சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் புனரமைக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் சென்றிருந்தபோது சிவராத்திரிக்கான ஏற்பாடுகள் வெகு விமர்சையாக நடந்துகொண்டிருந்தன.

தேவாரப்பாடல் பெற்ற 275 தலங்களில் திருக்கேதீஸ்வரம் ஒன்று.

‘கரையார்கடல் சூழ்ந்தகழி
மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங்
கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித்
தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக்
கூடாகொடு வினையே.’

என்று முடிகிறது ஒரு பாடல்!

அருகிலுள்ள விடத்தல் தீவு மீன்பிடித்துறைமுகம் மற்றும் புனரமைக்கப்பட்ட ஓடுபாதை ஓர் அழகிய கிராமத்தினுள் அமைந்திருந்தது. அழகான சிறு படகுகள் வரிசையாக நீரில் நிறுத்தப்பட்டிருந்தன. எளிய மீனவர்களுடன் ஒரு சிறிய அரட் டையுடன் பயணத்தை தொடர்ந்தோம்!

கிளிநொச்சிக்கு மிக அருகில் இருப்பது ஆனையிறவு. கல்கி யின் பொன்னியின் செல்வனில் குறிப்பிடப்பட்டிருந்த ஓர் ஊர். அந்தக் காலத்தில் பொருட்களை யானை மூலம் ஏற்றிச்செல்ல நீரில் அவற்றை இறக்கி கடந்து செல்வார்களாம். ஆனையி றவு இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு கடலோரச் சமவெளி ஆகும். யாழ்ப்பாணத் தீபகற்பத்தை வன் னிப் பெருநிலப்பரப்புடன் இணைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. ஈழப் போருக்கு முன்னதாக இலங் கையின் மிகப்பெரிய உப்பளம் இங்கே அமைந்திருந்தது. உப்பு உற்பத்தியினால் இங்கு சில இரசாயன தொழிற்சாலை களும் அமைந்திருந்தனவாம். ஒரு நூற்றாண்டாக இலங்கை யின் முக்கிய ராணுவத் தளமாக ஆனையிறவு திகழ்கிறது. ஈழப்போரின்போது இங்கிருந்து கண்மூடித்தனமாகச் செலுத் தப்பட்ட ஷெல்கள் கிளிநொச்சி சார்ந்த பல இடங்களில் வீடு களுக்கும் மனிதர்களுக்கும் பெரும் சேதம் விளைவித்தன.

ஆனையிறவு ராணுவ தளம் அனைத்து செயற்பாடுகளிலும் முக்கிய இடத்தை பிடித்திருந்ததால் ஈழப்போர் சமயத்தில், இதை கைப்பற்ற விடுதலைப்புலிகள் பெரிதும் முயன்றனர். 2000 ஆண்டு வரை இத்தளம் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1991-இல் விடுதலைப் புலிகள் இத் தளத்தைக் கைப்பற்ற பெரும் சண்டையிட்டுத் தோற்றனர். 2000, ஏப்பிரல் 22 அன்று இரண்டாம் ஆனையிறவுச் சண்டை யின்போது விடுதலைப் புலிகள் இத்தளத்தைக் கைப்பற்றி னர். விடுதலைப் புலிகளிடம் இருந்து இத்தளத்தை இலங்கை இராணுவம் 2009, ஜனவரி 10-ஆம் நாள் மீண்டும் கைப்பற்றி யது. சாலையின் முக்கியமானதொரு இடத்தில் அரசாங்கத் தால் ஓர் உடைந்த டேங்க் போன்ற ஒரு புல்டோசர் நினைவுச் சின்னமாக வைக்கப்பட்டிருக்கிறது. கோப்ரல் காமினி குண ரத்ன மெமோரியல் என்று பெயரிட்டு அந்த இடத்தை அழைக் கிறார்கள். சிங்கள ராணுவத்தின் பெருமித சின்னமாக அவர் கள் இதை கருதுகிறார்கள். அதன் காரணத்தை பின்னர் பார்ப் போம்!

(தொடரும்...)



jeeva@thaiveedu.com

கடும் குளிரின் பிடியிலிருந்து விடுபட்டு, இதமான தென்றலும் பசுமையும் துளிர்க்கும் வசந்த காலம் இதோ நம்மை வரவேற் கிறது. குளிர்காலத்தின் கடுமையான தாக்கத்தைத் தாண்டி இயற்கை மீண்டும் துளிர்க்கும் நேரமே துளிர்காலம். மரங் களும் மண்ணும் புதிய உயிர் பெறும் இந்நேரம், நம் வீடும் ஒரு புதிய கவனத்தையும் பராமரிப்பையும் நாடுகிறது.

குளிர்காலம் விட்டுசென்ற சேதங்கள் உள்ளனவா? பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியாக உள்ளனவா? முதலாவதாக உங்கள் வீட்டுக்காப்புறுதியை மீளாய்வு செய்யத் தவறாதீர்கள். நீண்ட கொடிய குளிர்காலம் முடிந்து, இதமான வெப்பக்காலம் துளிர்க்கும் இந்தத் தருணம் உங்கள் வீட்டின் மீது கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரமாகும். ஒரு முறையான பராம ரிப்புப் பட்டியலை (Maintenance Checklist) உருவாக்கிச் செயற்படுவது, உங்கள் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்ப டுத்துவதோடு பல நன்மைகளையும் வழங்கும்.

உங்கள் இல்லதின் சொத்தின் மதிப்பு உயரும். சீரான இடை வெளியில் பராமரிக்கப்படும் வீடுகள், சந்தையில் எப்போதும் கூடுதல் மதிப்பைப் பெறுகின்றன. சிறிய பராமரிப்புகள் உங்கள் வீட்டின் பெறுமதியை (Property Value) நிலையாக வைத்திருக்கும். வசீகரிக்கும் தோற்றமும் முறையான பராம ரிப்பும் உங்கள் இல்லத்திற்கு ஒரு புதிய பொலிவைத் தரும். இது உங்கள் வீட்டின் வெளிப்புறத் தோற்றத்தைச் (Curb Ap-peal) சிறப்படையச் செய்து, பார்ப்பவர்களைக் கவரும். குளிர் காலத்தின் பாதிப்புகளைக் கண்டறிந்து வீட்டைச் சரிசெய் வதன் மூலம், வரவிருக்கும் பருவகால மாற்றங்கள் மற்றும் அனர்த்தங்களின் (Disasters) தாக்கத்திலிருந்து உங்கள் இல் லத்தைப் பாதுகாக்கலாம்.

- செந்தூரன் புனிதவேல்



துளிர்கால வீட்டுப் பராமரிப்பும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும்

துளிர்காலத்தின் முடிவில் வெயில் காலம் தொடங்க இருப் பதால், உங்கள் வீட்டு குளிரூட்டி (Air Conditioner) முறையாகச் செயற்படுகிறதா என்பதை இப்போதே பரிசோ தித்துப் பாருங்கள். குளிரூட்டியின் வடிகட்டிகளைச் (Filters) சுத்தம் செய்வதுடன், அதற்கான மின் இணைப்புகள் மற்றும் தொடுப்புகள் பாதுகாப்பாக உள்ளனவா என்பதையும் கவனி யுங்கள். வெயில் காலம் தீவிரமடையும் போது திடீரென ஏற்படும் பழுதுகளைத் தவிர்க்கவும், மின்சாரச் செலவைக் குறைக்கவும் இந்த முன்கூட்டிய பராமரிப்பு பெரிதும் உதவும்.

- **மின்சாரப் பலகைப் பராமரிப்பு (Electrical Panel):**

பொதுவாக, மின்சாரம் தடைப்படும் வரை எவருமே மின்சாரப் பலகையை (Electrical Panel) கவனிப்பதில்லை. உருகி (Fuse) பழுதடைந்து அல்லது மின்சுற்றுத் துண்டிப்பான் (Cir-cuit Breaker) தானாக அணைந்து, வீடு இருளில் மூழ்கும்போ துதான் அதன் முக்கியத்துவம் நமக்குப் புரிகிறது. துளிர்காலப் பராமரிப்பின் ஒரு பகுதியாக, சில நிமிடங்கள் மின்சாரப் பலகையைச் சோதித்துப் பாருங்கள். ஏதேனும் எரிந்த வாடை வருகிறதா அல்லது மின் கம்பிகளில் தளர்வு (Loose connec-tion) உள்ளதா என்பதைக் கவனியுங்கள். ஏதேனும் சந்தே கங்கள் அல்லது குறைபாடுகள் தென்பட்டால், உடனடியாக ஒரு மின்சாரத் தொழினுட்ப வல்லுநரை (Electrician) அழைத்துச் சரிசெய்யுங்கள். இது மின் கசிவு மற்றும் தீ விபத் துகளைத் தடுக்க உதவும்.

- **கூரை இடைவெளிப் பகுதி (Attic Maintenance):**

கனேடிய வீடுகளில் கூரைக்கும் உட்கூரைக்கும் (Ceiling) இடைப்பட்ட பகுதியை 'அடிக்' (Attic) என்பார்கள். இதனைப் பராமரிப்பது மிகவும் அவசியமாகும்.

- **நீர் ஒழுக்கு:** பனிக்காலத்தில் கூரையில் பனி உறைந்து பின் உருகும்போது ஏதேனும் நீர் ஒழுக்கு ஏற்பட்டிருந்தால், அதனை இப்போதே கண்டறிந்து சரிசெய்யுங்கள். இது பெரும் பணச் செலவைத் தவிர்க்க உதவும்.
- **பூச்சிகள் மற்றும் எலிகள்:** கடும் குளிர்காலத்தில் எலிகள் வெப்பத்தைத் தேடி இந்தப் பகுதிக்குள் வந்து ஒதுங்க வாய்ப்புள்ளது. அவை பெருகி வீட்டின் மின்சாரக் கம்பி களைச் சேதப்படுத்தும் முன் அகற்றிவிடுவது நல்லது.
- **வெப்பக்காப்பு (Insulation):** வீட்டின் வெப்பம் வெளியேறா மலும், குளிர் உள்ளே வராமலும் இருக்க இப்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் வெப்பக்காப்புப் பொருட்கள் சீராக உள்ளதா என்று கவனியுங்கள். அதில் ஏதேனும் குறைபா டுகள் இருந்தால் அவற்றை நிவர்த்தி செய்வது உங்கள் வீட்டின் எரிசக்தி சேமிப்பிற்கு (Energy Efficiency) உதவும்.

- **அடித்தளப் (Basement) பராமரிப்பு:**

கனேடிய வீடுகளில் பேஸ்மன்ட் (Basement) எனப்படும் அடித் தளம் மிக முக்கியமானது. பருவநிலைகள் மாறும் வேளையில், மண்ணின் அழுத்தம் மற்றும் உறைபனி மாற்றங் களால் அடித்தளச் சுவர்களிலும் தரையிலும் சிறிய வெடிப் புகள் அல்லது நீர் கசிவுகள் (Leaks) ஏற்படுவது இயல்பு. அப் படியான விரிசல்களைக் கண்டதும் அலட்சியப்படுத்தாமல், உடனுக்குடன் கவனித்து நிவர்த்தி செய்யுங்கள். ஆரம்பத் திலேயே இவற்றைச் சரிசெய்வது வீட்டின் கட்டுமானத்தைப் பாதுகாப்பதுடன், பிற்காலத்தில் ஏற்படும் பெரும் பொருளாதார இழப்புகளையும் தவிர்க்க உதவும்.

- **கதவு மற்றும் ஜன்னல் தூய்மை:**

குளிர்கால முடிவில், பனிப்பொழிவு மற்றும் ஈரப்பதம் காரணமாக கதவு மற்றும் ஜன்னல் ஓரங்களில் சிறிய நீர் கசிவுகள் ஏற்பட்டிருக்கலாம். இதன் விளைவாக அந்த இடங் களில் பாசி (Mold) படர்ந்து அசிங்கப்படுத்துவதுடன் ஆரோக் கியத்திற்கும் கேடு விளைவிக்கலாம். அவற்றை முழுமை யாகத் துப்புரவு செய்து, மீண்டும் பொலிவு பெறச் செய்வதற்கு இந்தத் துளிர்காலமே மிகச் சிறந்த தருணமாகும். ஜன்னல் சட் டங்களைச் சுத்தமாக வைத்திருப்பது வீட்டின் அழகைக் கூட் டுவதுடன், உட்புறக் காற்றின் தூய்மையையும் உறுதி செய்யும்.



- **தேவையற்ற பொருட்களை அகற்றுதல் (Decluttering):**

காலப்போக்கில் நம் வீட்டில் பயன்படாத பல பொருட்கள் சேர்ந்து தேவையற்ற இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும். 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பதற்கேற்ப, இந்தப் பொருட்களை அகற்றுவதற்கு இதுவே சரியான தருண மாகும்.

உங்களுக்குப் பயன்படாத, ஆனால் நல்ல நிலையில் இருக்கும் பொருட்களைச் 'சல்வேஷன் ஆமி' (Salvation Army) போன்ற தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையாக அளிக்கலாம். இதன் மூலம் உங்கள் வீட்டின் இடவசதி அதிக ரிப்பதுடன், மற்றவர்களுக்கு உதவியதாகவும் இருக்கும். தேவையற்றவற்றைக் கழித்து வீட்டைப் பொலிவுபடுத்துங்கள்.

வீட்டிற்கு வெளியே கவனிக்க வேண்டியவை:

- **கூரை:**

நீங்கள் ஒவ்வொரு பனிக்கால முடிவிலும் கூரையில் ஏதாவது ஒழுக்கு வந்துள்ளதா? அல்லது திருத்தங்கள் செய்ய வேண்டுமா என்பதைக் கவனிப்பது மிகவும் முக்கியமாகும். பனிக்காலத்தில் மேலே உள்ள சிங்கில்ஸ் (Shingles) விலக்கபட்டிருக்கலாம். அவற்றை உடன் சரி செய்யுங்கள்.

- **கூரை மழைநீர் வடிகால்கள் (Gutters & Downspouts):**

கூரையில் உள்ள நீர் வழிந்தோடிகள் (Gutters) மற்றும் அவற் றிலிருந்து தரையை நோக்கிச் செல்லும் நீர் இறக்கிக் குழாய்களை (Downspouts) அவ்வப்போது சுத்தம் செய்வது மிகவும் அவசியமாகும். காலப்போக்கில் இவற்றில் தூசு மற்றும் குப்பைகள் சேர்வது இயல்பானது. குறிப்பாக, வீட்டைச் சுற்றியுள்ள மரங்களிலிருந்து விழும் இலைகள் வடிகால்களில் அடைப்பை ஏற்படுத்தும். இதனால் மழைநீர் தேங்கி, கூரையைச் சேதப்படுத்தலாம் அல்லது சுவர்கள் வழியாகக் கசியலாம். எனவே, இந்த வடிகால்களைத் துப்புரவு செய்வ துடன், ஏதேனும் ஓட்டைகள் அல்லது துருப்பிடித்த இடங்கள் இருந்தால் அவற்றையும் அடைத்துச் சரி செய்துவிடுங்கள்.

- **வெளிச்சுவர் அத்திவாரம்:**

வெளிச்சுவர் மற்றும் அத்திவாரத்தில் வெடிப்பு அல்லது முறிவு ஏற்பட்டால், அது வீட்டிற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தும். குறிப்பாக, வீட்டின் தரைத்தளம் அல்லது நிலவறையில் (Basement) நீர் கசிவு ஏற்பட்டுப் பல பாதிப்புகளை உரு வாக்கும். எனவே, வீட்டின் வெளிச்சுவர் ஓரமாகச் செடிகளை நடும்போதோ அல்லது பராமரிக்கும்போதோ கூடுதல் கவனம் செலுத்துங்கள். ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்ட பின் வருந் துவதை விட, முன்கூட்டியே கவனித்து உரிய பாதுகாப்பு நடவ டிக்கைகளை எடுப்பதே சிறந்தது.

- **கோல்கிங் பசை (Caulking):**

ஜன்னல்கள் மற்றும் கதவுகளின் வெளிப்புற விளிம்புகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பப் பயன்படும் பசையை 'கோல்கிங் பசை' (Caulking) என்பார்கள். கடும் குளிர் அல்லது அதீத வெப்பநிலை மாற்றங்கள் காரணமாக இந்தப் பசை இறுகி, காலப்போக்கில் வெடித்துப் போகக்கூடும். அவ்வாறு விரிசல்கள் ஏற்பட்டால், அதன் வழியாகக் காற்று அல்லது நீர் கசிந்து சுவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத் தலாம். எனவே, பழுதடைந்த பசையை நீக்கிவிட்டுப் புதிய பசையிட்டுத் திருத்துவது வீட்டின் ஆயுட்காலத்தை அதிகரிப் பதுடன், வீட்டின் அழகையும் சந்தைப் பெறுமதியையும் (Mar-ket Value) உயர்த்தும்.

- **வாகனத் தரிப்பிடம் (Garage):**

வாகனத் தரிப்பிடத்தின் கதவுகள் சரியாகச் செயற்படுகின் றனவா என்பதைக் கவனிப்பதுடன், அங்கு குவிந்துள்ள தேவையற்ற பொருட்களை உடனடியாக வெளியேற்றுங்கள். அங்கு தேவையற்ற பொருட்கள் சேர்வது, அவசர காலங் களில் வாகனத்தை இயக்குவதற்கு இடையூறாக அமைவ துடன், தேவையற்ற பூச்சிகள் அல்லது எலிகள் தங்குவதற்கும் இடமளித்துவிடும். எனவே, இடத்தைச் சுத்தமாக வைத்தி ருப்பது பாதுகாப்பானது.

- **புகை போக்கிகள்:**

இறுதியாக, உங்கள் வீட்டின் புகைப்போக்கிகளைக் கவனித்து, அவற்றில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் உடனடியாகச் சரிசெய்து கொள்ளுங்கள். குறிப்பாக, குளிர்கா லங்களில் வீட்டை வெப்பமாக வைத்திருக்க விறகுகளைப் பயன்படுத்தும் வீடுகளில் இவை கூடுதல் கவனத்திற்கு ரியவை. பனிக்காலத்தில் விறகு எரிப்பதன் மூலம் புகை போக்கியின் உட்புறத்தில் படியும் கரிமப் படிவுகள் (Soot) மற்றும் அடைப்புகளைச் சுத்தப்படுத்துவது மிக அவசியம். அவ்வாறு செய்யத் தவறினால், அது நச்சுப்புகை வீட்டிற்குள் பரவவோ அல்லது தீ விபத்து ஏற்படவோ காரணமாகிவிடும்.

'வரும்முன் காப்பதே சிறந்தது' என்ற பொன்மொழிக்கேற்ப, பாதிப்புகள் ஏற்பட்ட பின் வருந்துவதை விட, தகுந்த நேரத்தில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதே புத்திசா லித்தனமாகும். இந்தத் துளிர்காலத்தில் உங்கள் வீட்டின் ஒவ்வொரு பகுதியையும் முறையாகக் கவனித்துச் சீரமைப் பதன் மூலம், அதன் ஆயுளையும் மதிப்பையும் உயர்த்துவது அவசியமாகிறது. முன்கூட்டியே செய்யப்படும் இத்தகைய முறையான பராமரிப்புப் பணிகள், பிற்காலத்தில் ஏற்படும் தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பதுடன், உங்கள் இல் லத்தைப் பாதுகாப்பானதாகவும் என்றும் பொலிவானதாகவும் வைத்திருக்க உதவும்.

இனிமையான துளிர்காலத்தில் உங்களை வாழ்த்தி விடை பெறுகிறேன்.



senthuran.p@thaiveedu.com

வசந்தகால வீட்டுப் பராமரிப்பு

– வேலா சுப்ரமணியம்

கடந்தகாலக் கட்டுரைகளில் குறிப்பிட்டது போல் காலநிலைக்கு ஏற்றவகையில் வீட்டைப் பராமரித்து வந்தால் திடீரென ஏற்படும் பாரிய செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். அந்தவகையில் குளிர்காலம் முடிவடைந்து கோடைகாலத்தை எதிர்பார்த்து நிற்கும் எங்களுக்கு வசந்த காலத்தில் எந்தவகையில் வீட்டைப் பராமரிக்கலாம் அல்லது கோடைகாலத்திற்கு தயார்ப்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிடுவது பொருத்தமானது.

மரத்தளம் - Deck:

பொதுவாகக் குளிர்காலத்தில் தேங்கிக்கிடந்த பனிப்படிமானங்கள் கரையத் தொடங்கியதும் நீர், மரப்பலகைக்குள்ளேயோ அல்லது மரச் சட்டங்களுக்குள்ளேயோ உட்புகத் தொடங்கலாம். மரச்சட்டங்களில் உரிய எதிர்ப்புத் தன்மையற்றுப் போய்விட்டால் உட்புகும் நீரால் மரம் உரிய காலத்திற்கு முன்னர் உக்கிப் பழுதடைந்து விடும். இக்காலத்தில் நீர்க்கறை, பொருமல் என்பவற்றை அவதானிப்பதன் ஊடாக கோடைகாலம் வரும்போது உரியமுறைப்படி நீர் எதிர்ப்புக்குரிய பூச்சுக்களை பூச (Water Resistent Paint) எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் Mold, Moss போன்ற பங்கஸ் பிடிக்காமல் இருப்பதற்காக ஒருதடவை Power Washer உதவியுடன் கழுவியும் விடலாம்.



குளிரூட்டி - Air conditoner:

குளிரூட்டியைச் சுற்றி சருகுகள், குப்பை கூழங்கள் குவிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அவற்றைச் சுத்தப்படுத்துவதோடு குளிரூட்டியைச் சுற்றியுள்ள வலைப்பகுதியினை (Net) Garden hose மூலமோ அல்லது Vacum Cleaner-ன் உதவியுடனோ, சுத்தம் செய்து காற்றோட்டம் தடைப்படாதவாறு குளிரூட்டி இயங்கக்கூடிய நிலையை உறுதிசெய்தல் வேண்டும்.

அத்திவாரம் - Foundation:

பனி உருகி கரைந்தோடும் காலப்பகுதியாகவும் மழைப் பொழிவு அதிகமுள்ள காலமாகவும் இக்காலம் விளங்குவதால் பொதுவாக நிலக்கீழ் அறையில் தண்ணீர் உட்புகும் இடர் இக்காலத்தில் தான் அதிகமாக இருக்கும். எனவே, மயிரளவு (Hairline Crack) வெடிப்பினாற்கூட தண்ணீர் உட்புகும் வாய்ப்பு இருப்பதால், நிலைமை மோசமாகுமுன்னர் சற்று கூர்ந்து அவதானித்தால் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே எடுத்துவிடமுடியும்.

வாகனக் கொட்டகைக் கதவு:

வாகனக் கொட்டகைக் கதவு திறப்பதற்குப் பொதுவாக மோட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கலாம். அதன் தொடர்பைத் துண்டித்துவிட்டு கையால் கதவை ஒரு தடவை திறந்து பார்த்து, கதவு தடைகளின்றி இலகுவாக திறந்து மூடுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். தடைகள் இருந்தால் over head spring-ஐ சரிசெய்ய வேண்டிய தேவை இருக்கலாம். அத்துடன் உரிய முறையாக வேலை செய்கின்றனவா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

தண்ணீர் பீலிகள் - Gutters:

அடைபட்டு இருக்கக்கூடிய பீலிகளை நன்கு சுத்தம் செய்து இலகுவில் நீர் வழிந்தோடும் தன்மையை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் கீழ் நோக்கி விழும் குழாய்கள் (Downspout) உரிய முறையில் நீரை வெளியேற்றுகிறதா? என்பதையும் அவதானித்தல் நல்லது. முக்கியமாக அதன் அடியில் பொருத்தப்பட்டிருக்கும் Leader pipes அடைக்காதிருக்கின்றதா என்பதை உறுதி செய்வதோடு நீர் நேரடியாக அத்திவாரத்திற்கு அடியில் உட்புகாதவாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக அத்திவாரத்தில் இருந்து 5 அடிக்கு வெளியே நீர் சென்றடையும் விதத்தில் அவை பொருத்தப்பட்டிருப்பது சாலவும் சிறந்தது.



கூரை - Roof:

Chimney, Skylight-ஐ அண்டிய பகுதிகளில் நீர்க்கசிவு ஏற்பட லாம். இக்காலப்பகுதியில் Attic ஊடாக நீர்க்கசிவுக்கான அடையாளங்களை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். பொது வாக 15-20 வருடங்களுக்கு கூரையில் போடப்பட்டிருக்கும் Shingles நின்றுபிடிக்கும் என்றாலும், காற்று மற்றும் புறக்கார ணிகளால் பழுதடைந்துள்ள அல்லது இடைவெளியாக உள் ளவற்றை பழுதுபார்ப்பது அவசியம்.

மரங்கள்:

வீட்டைச் சுற்றி மரங்கள் இருப்பது ஆரம்பத்தில் நன்றாகத் தான் இருக்கும். ஆனால் காலப்போக்கில் அதுவே பெரிய பிரச்சினை ஆகிவிடும். வளர்ந்த மரங்கள் கூரையையோ, யன்னல்களையோ தாக்கி சேதங்களை உண்டு பண்ண வாய்ப்பு இருக்கின்றது. கொப்புகள் வளர்ந்து பாரம் ஏறமு தல் அவற்றை கத்தரிப்பதற்குரிய சிறந்த காலம் இதுவே. மரங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்தால் அதற்குரிய தொழில்சார் வல்லுனர்களை நாடுவதே சாலவும் சிறந்தது.

வாகனப்பாதை - Driveway:

வாகனப்பாதைக்கு குளிர்காலத்தில் உப்பால் குளிப்பாட்டி இருப்போம். இந்த வருடம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் போட்ட உப்பு தங்கி இருந்து அதற்குரிய பணியைச் (அரிப்பு) செய்து கொண்டே இருக்கும். Asphalt, Inter-lock, congrete என்று எந்த வகை வண்டிப் பாதையாக இருந்தா லும் இக்காலப் பகுதியில் Power washer உதவியுடன் முதலா வது வேலையாக வண்டிப் பாதையை நன்றாகக் கழுவி உப் பின் தன்மையை இல்லாது செய்தல் வேண்டும்.

குறிப்பாக Inter Lock உள்ளவர்கள் கல்லின் இடைவெளிக ளில் பூண்டுகள் முளைப்பதை அவதானிக்கலாம். எனவே அவை முளைக்க முன்னர் அதனைத் தடுக்கக்கூடிய விதத் தில் உரிய மண்ணைப் போட்டு (Brush stone dust) பாதுகாக் கலாம். Congrete வாகனப்பாதையாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது அதனை Seal பண்ணத் தவறக்கூடாது. Asphalt வாகனப் பாதையாக இருந்தால் இருக்கக்கூடிய வெடிப்புகளை, அடைத்த பின்னர் நல்ல வெப்பமான காலநிலை வரும்போது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Seal பண்ணத் தயாராதல் வேண்டும்.

கவனத்தில் கொள்ளவேண்டிய மேலும் சில...

- வெப்பமாக்கியுடன் பொருத்தப்பட்டிருக்கும் ஈரப்பதனாக் கியை (Cenral humidifier) முற்றாக நிறுத்தி விடுங்கள்.
- வெப்பமாக்கிக்கோ (Furnace), Fire place-க்கோ முதன்மை விளக்குகள் (Pilot Lamps) பொருத்தப்பட்டிருந்தால் அவற்றை நிறுத்தி விடலாம்.
- வெளி வளவிற்கோ அல்லது முன்வளவிற்கோ (Back Yard & Front Yard) போகும் குழாய்களின் நீரை நிறுத்தி இருந் தால் (Shut Off) அவற்றைத் திறந்துவிடலாம்.



- 3 மாதத்துக்கு ஒருமுறை வெப்பமாக்கிக்குரிய வடிகட் டியை (Filters) மாற்றிவிடவேண்டும் என்ற அடிப்படையில் அதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.
- யன்னல்களுக்குரிய வலைகளைச் (Net) சுத்தப்படுத்தி அல்லது அவசியம் ஏற்பட்டால் பிரதியீடு செய்து தயார்ப்ப டுத்திக் கொள்ளல் வேண்டும்.
- தண்ணீர் வெளியேற்றத்திற்குரிய வெளிப்புறப் பாதைகள் அடைபட்டிருந்தால் அவற்றை சுத்தம் செய்தல் வேண்டும்.
- பூக்கன்றுகள், காய்கறி வைப்பவர்கள் மண்ணைத் தயார் செய்து தேவை ஏற்பட்டால் பசளைகளைப் போட்டு தமது பணிகளை ஆரம்பிக்கலாம்.

velasubramaniam@thaiveedu.com



பாக்கியநாதன் அகிலன்

கண்(நூறு): கண்டவையும் காணாதவையும்



tg.theeban@gmail.com

ஜிப்பா / ஜூ(யு)ப்பா / நசனல்:

அண்மையில் பெங்களூரில் காவிய சஞ்ஜே கவிதை விழாவின் இறுதிநாள் இராப்போசனத்தின்போது சமகாலத் தென்னிந்திய இசையின் இரு வலிமை யான பிரதிநிதிகளான வாசுதீட்சித் மற்றும் பிந்துமாலினி தம்பதியினர் பரி மாற்றிய கேலியான உரையாடல் ஒன்றின் பின்னணியில் இருந்து உருவானதே இந்தக் குறிப்பு. நாமமர்ந்திருந்த உணவு மேசையில் கன்னட, தமிழ், மலையாளம் பேசும் நண்பர்கள் அமர்ந்திருந்தனர்.





வாசு கேட்டார் 'இப்போ குர்த்தா எனப் பொதுப்படையாக அழைக்கப்படும் ஆடைக்கு; உங்கள் மொழிகளில் என்ன பெயர் ?' என - தமிழகத் தமிழர்களும் மலையாளிகளும் ஜிப்பா (jippa) என்றார்கள், கன்னடத்தில் 'ஜிபா' (jibba) என்றார்கள், தெலுங்கில் அது 'யுப்பா' (juppa) என்றார் ள். இறுதியாக வாசு என்னிடம் கேட்டார், 'உங்களூரில் என்ன என்று கூறுவீர்கள்' - நான் சொன்னேன் 'நசனல்' (national). 'நசனலா ?', எல்லோரும் ஒருசேரச் சிரித்தார்கள்.Yes, it is n (N) ational என்றேன் மறுபடியும்.

ஜிப்பா (jippa) அல்லது ஜிபா (jibba) என்பது இந்தியத் துணைக்கண்டம் மற்றும் மத்திய ஆசியாவைப் பிறப்பிட மாகக் கொண்ட ஒரு பாரம்பரியமான, வசதியான மற்றும் தளர்வான மேலாடை (tunic) ஆகும். வட இந்தியாவில் இதற்கு 'குர்தா' (Kurta) என்ற சொல் மிகவும் பிரபலமாக இருக்கும் வேளையில், தென்னிந்தியாவில் 'ஜிப்பா' என்ற சொல் அல்லது அதனின்று மருவியசொற்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஜிப்பா, என்ற சொல் ஜீ(யு)ப்பா அராபிய மற்றும் 'கூபா' (qaba) என்ற பாரசீக மூலத்தையுடையது என்பர். நீண்ட மேலாடையைக் குறிக்கும் இந்த ஆடை மரபும், பெயரும் ஒரு பண்பாட்டுப் பகிர்வினூடாக இந்திய பண்பாட்டு வட் டகைக்குள் வந்துசேர்ந்துள்ளது. ஆனால் இதற்கு முன்பே ஜிப்பாவகை ஆடையை பண்டைய இந்திய சிற்பங்களில் இனங்காட்டுவோரும் உளர். அவர்கள் குப்தர் காலம் (பொ. ஆ. 06) அதற்கும் முன்னரான காலப்பகுதியில் இருந்து காட்சி ரீதியாக அதனை இனங்காண முற்படுகின்றனர். இவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது தென்னாசிய மரபில் ஒத்த மற்றும் வேறுபாடுகளோடு காணப்பட்ட மேலாடை மரபொன்றின் குறித்த காலகட்டத்தை ஒட்டிய பண்பாட்டு நிலைபேறு ஒன்றை அடையாளம் காணமுடிகிறது. அது ஒன்றிற்கு மேற்பட்ட மூலங்களின் இடைவினையில் சில மரபுகள் மேலோங்க சில



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 1947

மரபுகள் உள்ளடங்க உருக்கொண்டிருக்கும் எனப் புரிந்து கொள்ளலாம். அதேவேளை இந்த விவாதத்துள் இன்று மேலோங்கியுள்ள இஸ்லாமிய எதிர்ப்பு, இஸ்லாமிய பண் பாட்டு, வரலாற்று நீக்கத்தை மையமாகக் கொண்ட இந்து அடைப்படைவாத அலையும் செயற்படுகிறது என்பதில் ஐய மில்லை.

இதேவேளை இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சுவதேசி இயக்கத்தின் குறியீடுகளில் ஒன்றாக ஜிப்பா சூழமைக்கப் பட்டது என்பது சுவாரசியமானது. பிருத்தானிய ஆடைகள் - துணிகளுக்கு எதிராகக் காந்தி கையால் நூற்றெடுக்கப்பட்ட காதிதுணியை முன்னிறுத்தியபோது (1918-இல்) காதியா லான ஜிப்பா மேற்படி காலனிய எதிர்ப்பின் ஆடை வடிவ மாயும் சுயமரியாதையின் சின்னமாகவும் காட்சிநிலைப்படுத் தப்பட்ட எதிர்ப்பின் பிரகடனமாயும் நிலைபெற்றது. அது சுதந்திரப்போராட்ட அலையின் காட்சிரீதியான தோழமை யுணர்வின் (solidarity) பகுதியாயும் சாதி, மதம், இனத்துவம் வர்க்க வேறுபாடு கடந்த சமத்துவத்தின் பகிரப்பட்ட நடத்தை முறையாகவும் அமைந்தது. இன்னொரு வகையில் ஜிப்பா வும், வேட்டியும் இந்தியத் தன்மையின் அடையாளாமாக உருவாகின. பின்காலனிய இந்தியாவின் பிரதான நடப்பு வழக்காகவும் (fashion) ஆகின.

சுவாரசியமானது என்னவெனில் மேற்படி ஜிப்பா, நசனல் என இலங்கையில் பெயரிட்டு அழைக்கப்பட்டமையும் இலங்கை யின் காட்சித் தேசியவாதத்தின் அங்கமாக நிலைகொண்ட மையும் ஆகும். இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சியாள ரான அநகாரிகதர்மபால 1898-இல் ஆடை சீர்திருத்தச் சங்க மொன்றை நிறுவி அதனூடாக மேற்கத்தேய ஆடைகளுக்கு எதிராக 'ஆரியசிங்கள' ஆடைகளை ஆண்களுக்கும் பெண் களுக்கும் பிரயோகித்தார். அதன்படி ஆண்களுக்கு சாரத் தையும், பனியனையும் அவர் முன்வைத்தார். 1906-இல் அவ ரது பத்திரிகையான 'சிங்களபௌத்தய' சுதேசிய ஆடைகள் பற்றி தொடர்ச்சியாகப் பிரசாரம் செய்தது என்பதுடன் ஆடை

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 1956



என்பது 'தேசியப் பெருமையின் வடிவம்' எனவும் அவர் கூறினார்.

அவருக்குச் சற்றுப் பின்னால் கோட்பாட்டு ரீதியாக சுதேசிய ஆடை என்கிற நிலைப்பாட்டை உடைய இலங்கையின் சுதத்திரத்திற்கு பிற்பட்ட தேசிய அரச இயந்திரத்திற்கு அந்தந்த ஆடை மரபிலிருந்து ஒரு புதிப்பிக்கப்பட்ட (updated version of dress) ஆடை தேவைப்பட்டது. அது ஒருவகையில் வர்க்கரீதியான வேறுபாடுகளுடன் அதிகபட்சம் கண்ணுக்குத் தெரியாமல் தொடர்புபட்டிருந்தது எனக் கூறமுடியும். அது சாதாரணச் சிங்களவரிலிருந்து (common man) வர்க்கமேலுயுயர்வு பெற்ற மத்தியதர-மேட்டுக்குடி சிங்களவர்களுக்கான ஒரு சுதேசிய ஆடையை நாடி நின்றது. இந்த நாட்டம் தெட்டத்தெளிவாக 1950-களில் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவோடு சிங்களத் தேசியவாதத்தின் புதிப்பிக்கப்பட்ட வடிவத்தோடு சம்மந்தப்பட்டிருந்தது. ஆரம்பகாலகட்ட பண்டாரநாயக்கா அநகாரிக தர்மபாலவை விடவும் காந்தியக் கோட்பாடுகளது செல்வாக்குகளிற்குஉட்பட்டிருந்தார். ஓக்ஸ்போட் பல்கலைக்கழக காலத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தின்பால் அவர் ஈர்க்கப்பட்டிருந்தார். அவரது 'சுழலும் சக்கரமும் நெல் வயலும்' என்ற 1930-இல் பதாகை காந்திய வாத்தின் நேரடியான செல்வாக்கிற்கு உட்பட்டது தான். ஆனாலும் 1950-களிற் நாம் சந்திக்கும் பண்டாரநாயக்கா அவற்றிலிருந்து அடிப்படையில் வெளியேறியதையும், பதிலாக தனது நிகழ்கால அரசியல் நிலைப்பாட்டிற்கு வாய்ப்பானதை மட்டும் காந்தியத்திடமிருந்து பற்றிக் கொள்ளும் ஒருவராக இருக்கிறார்.



அத்தகைய ஒரு பின்னணியில்தான் அவரது சிங்கள பௌத்த ஆண் மகனுக்கான ஆடை இந்திய சுதந்திரப் போராட்ட பின்புலத்தில் உருவான ஜிப்பாவை உள்வாங்குதலை அடிப்படையாக்கிக் கொள்கிறது. அநகாரிகதர்மபாலவின் 'சாரமும் பனியனும்' அல்ல. பதிலாக 'நசனலும், வேட்டியும், உத்தரியமுமாக' அது மாறுகிறது. ஆனால் இலங்கையில் மேற்படி மேலாடையின் பெயர் ஜிப்பாவும் அல்ல ஜப்பாவும் அல்ல அது நசனல். பண்டாரநாயக்கா அதனைத் தேசிய ஆடை (National dress) என்றார். இலங்கைப் பாராளுமன்றத்தின் 1947 மற்றும் 1956 ஒளிப்படங்கள் இந்த மாற்றத்தைப் பறைசாற்றுகின்றன. பிறேம சாரே எப்பசிங்கே பண்டாரநாயக்காவை சாதாரண மனிதரின் யுகத்தை உருவாக்கியவர் என்று கூறினாலும், அநகாரிகதர்மபாலவின் 'சாரமும் பனியனுக்கும்' பண்டாரநாயக்காவின் 'வேட்டி, ஜிப்பா (நசனல்) என்ப தற்குமிடையில் கண்டிப்பாக ஒரு வர்க்கப் பிரிகோடு உண்டு.

மேற்படி ஆடை தேசிய ஆடையாக பிரகடனமானபோது, அதன் அடிப் படையிலிருந்து மேற்படி மேலாடை வடிவம் இலங்கையில் ஜிப்பாவாக அல்லாமல் நசனலாகிப் (national / national shirt) பிறந்தது. சிங்களத்தில் அது 'Jathika Baniyama' என்றும் கூறப்படுவதுண்டு. ஆனால் ஜனரஞ்சக ரீதியாக அது National என்றே பெரிதும் கூறப்படுகிறது. அது இன்னொரு வகையில் இந்தப் பெயர் இலங்கையின் உள்ளூர் வயமாக்கமும், தேசியவாதமும் எந்தளவிற்கு மேற்குவயப்பட்டது என்பதை எடுத்துக் காட்டும் ஒன்றாகவும் உள்ளது.

இதேவேளை, நசனல் என்ற சனரஞ்சப் பிரயோகத்திற்கு அப்பால் சிங்களவர்களிடம் 'ஜாதிக பனியம' என்ற ஒரு பிரயோகம் இருப்பதைப் போல ஈழத்தமிழர்களிடம் மேற்படி ஆடையைக் குறிக்க வேறு ஒரு சொல் கிடையாது. அது ஈழத்தமிழர்களிடம் நசனல்தான்.

அப்படியானால், சிங்களவர்களை விடவும் ஈழத்தமிழர்களிடம் மேற்கு மயமாகியிருத்தல் அதியபட்சம் உள்ளது எனக் கொள்ள முடியுமா?

இந்த இடத்தில் இந்திய உளவியலாளரும் சமூகவியலாளருமான அசிஸ் நந்தியின் காலனியம் பற்றிய பார்வை முக்கியத்துவமுடையதாகத் தோன்றுகிறது. அவர் காலனித்துவம் என்பது வெறும் அரசியல் அல்லது பொருளாதார அடக்குமுறை மட்டுமல்ல. பதிலாக அது ஒரு 'மனதின் காலனித்துவம்' என்று வாதிடுகிறார். இது தனி மனிதர்களின் அக அடையாளங்களையும், பண்பாட்டு சுயபிம்பங்களையும் முழுமையாக உருமாற்றுகிறது என்பதே அவரது கருத்தின் சாரமாகும். (The Intimate Enemy: Loss and Recovery of Self Under Colonialism by Ahis Nandy, 1983).

இப்பின்னணியில் நின்று இன்னொரு கேள்வியையும் கேட்கலாம் எனத் தோன்றுகிறது. பண்பாட்டின் மறு கண்டுபிடிப்புகள் அல்லது தகவமைத்தல்கள் (appropriation) அல்லது சுதேசியமாக்கம் என்பது மேற்படி மனதின் காலனியப்பாட்டை எவ்வளவு தூரம் காலனியநீக்கம் செய்துள்ளன? அல்லது சுதேசியமயமாக்கம் என்ற சட்டகமே காலனிய மயப்பட்டுள்ளதா நாமறியாமலே?

packiyanathan.ahilan@thaiveedu.com



காலமும் அரசியலும் கலந்த கட்டுமானம்

02

சொர்ணவேல்



தியோ ஏஞ்சலோபுலஸ் (Theo Angelopoulos): வரலாற்றின் ஆழ்துயரம் மற்றும் பிரெக்டியப் பார்வை:

யான்சோவின் கேமரா கிடைமட்ட நிகழ்காலத்தில் உலாவும்போது, தியோ ஏஞ்சலோபுலஸின் கேமரா காலத்திற்குள் செங்குத்தாகத் துளையிடுகிறது. 1970-களில், கிரேக்க இராணுவ ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தோன்றிய ஏஞ்சலோபுலஸ், 'அரசியல் நவீனத்துவத்தின்' மேலங்கியை ஏற்றுக்கொண்டார், ஆனால் அதில் ஒரு குறிப்பிட்ட கிரேக்க ஆழ்துயரத்தைச் செலுத்தினார்: உள்நாட்டுப் போரின் (1946-1949) தீர்க்கப்படாத அதிர்ச்சி மற்றும் இடதுசாரிகளின் திட்டமிட்ட ஒடுக்குமுறை. அவரது மார்க்சியம் என்ஸோ டிராவர்சோ (Enzo Traverso) 'இடதுசாரி ஆழ்துயரம்' (left-wing melancholy) என்று அழைப்பதன் மூலம் வகைப்படுத்தப்படுகிறது - இது கம்யூனிசத்தின் இழந்த ஆற்றலுக்கான துக்கம் மற்றும் வரலாற்றின் வெற்றியாளர்களால் திணிக்கப்பட்ட மௌனத்தின் மீதான விமர்சனம்.

தோற்கடிக்கப்பட்ட இடதுசாரிகளின் சூழல்:



ஏஞ்சலோபுலஸின் சினிமா 20-ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதிக்கு கிரீஸை ஆட்சி செய்த 'நிழல் அரசுக்கு' (parakratos) நேரடிப் பதிலாகும் - இது இடதுசாரிகளைப் பொது வாழ்விலிருந்து விலக்கிய கம்யூனிச எதிர்ப்பு வழிமுறைகளின் வலையமைப் பாகும். அவரது படங்கள் ஒரு 'எதிர்-வரலாறாக' செயல்படுகின்றன, உத்தியோகபூர்வ தேசியக் கதையிலிருந்து அழிக்கப்பட்ட பாரபட்சர்கள், கம் யூனிஸ்டுகள் மற்றும் நாடுகடத்தப்பட்டவர்களுக்குக் குரல் கொடுக்கின்றன. யான்சோவைப் போலல்லாமல் (அவரது கதாபாத்திரங்கள் பெரும்பாலும் அரு வமான சக்திகளுக்கான குறியீடுகள்), ஏஞ்சலோபு லஸின் உருவங்கள் ஒரு குறிப்பிட்ட வரலாற்றின் பேய்கள், அவை நிகழ்காலத்தை வேட்டையாடுகின்றன.

அவரது அழகியல் அணுகுமுறை பெர்டோல்ட் பிரெக்டின் 'விலகல்' (Verfremdungseffekt) கருத்தாக்கத்தால் ஆழமாக ஈர்க்கப்பட்டுள்ளது. உணர்வுபூர்வமான அடையாளத்தைத் தடுக்கவும், விளையாடும் வரலாற்றுச் சக்திகளைப் பார்வை யாளர் பகுப்பாய்வு செய்ய நிர்பந்திக்கவும் ஏஞ்சலோபுலஸ்



'இறந்த நேரம்' (dead time), தீவிர நீண்ட ஷாட்கள் (extreme long shots) மற்றும் பகட்டான நடிப்பு ஆகியவற்றைப் பயன்ப டுத்துகிறார். 'ஏஞ்சலோபுலஸ் ஷாட்' என்பது பொதுவாக நிமி டக்கணக்கில் நீடிக்கும் ஒரு தொடர்ச்சியான ஷாட் ஆகும், இது பெரும்பாலும் இடத்தை மட்டுமல்ல, காலத் தையும் கடந்து செல்லும் சிக்கலான கேமரா இயக் கங்களை உள்ளடக்கியது.

The Travelling Players (1975): தேசியக் கதையை மாற்றி எழுதுதல்:

The Travelling Players (O Thiasos) ஏஞ்சலோபு லஸின் தலைசிறந்த படைப்பாகவும் ஐரோப்பிய அரசியல் சினிமாவின் மூலக்கல்லாகவும் உள்ளது. 1939 முதல் 1952 வரையிலான ஆண்டுகளை உள் ளடக்கிய இப்படம், Golfo the Shepherdess என்ற இடையர் நாடகத்தை நிகழ்த்திக்கொண்டு கிரீஸ் முழுவதும் பயணிக்கும் நடிகர்கள் குழுவைப் பின் தொடர்கிறது. இருப்பினும், அவர்களின் நடிப்பு வர லாற்றின் வன்முறை ஊடுருவல்களால் தொடர்ந்து தடைபடு கிறது: மெடாக்சாஸ் சர்வாதிகாரம், நாஜி ஆக்கிரமிப்பு, உள் நாட்டுப் போர் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த வலதுசாரி ஒடுக்குமுறை.

இங்கு ஏஞ்சலோபுலஸின் முக்கிய அழகியல் புதுமை 'காலம் சார்ந்த நீண்ட காட்சிப் பதிவு' (temporal long take) ஆகும். ஒரு ஒற்றை, உடைக்கப்படாத ஷாட்டில், கேமரா ஒரு சதுக்கத்தைக் கடந்து 1940-களின் பாசிஸ் டுகளை வெளிப்படுத்தக்கூடும், பின்னர் அதே இடத்தில் 1950-களின் தேர்தல் பிரச்சாரகர்களைக் காட்ட தொடர்ந்து பான் (pan) செய்யக்கூடும். இந்த நுட்பம் கடந்த காலத்தின் 'கடந்த காலத் தன்மையை' மறுக்கிறது; வரலாறு என்பது முடிக் கப்பட்ட நிகழ்வுகளின் தொடர் அல்ல, மாறாக நிகழ்காலத்தின் மீது தொடர்ச்சியான, குவியும் சுமையாகும். கடந்த காலம் என்பது ஒரு ஃப் ளாஷ்பேக் அல்ல; அது இப்போதே உடன் இருக்கிறது.

அட்ரியஸ் (Atreus) வம்சத்தின் தொன்மத்தை (அக மெம்னான், கிளைடெம்நெஸ்ட்ரா, ஓரெஸ்டெஸ்) மையமாகக் கொண்டு படத்தைக் கட்டமைப்பதன் மூலம், ஏஞ்சலோபுலஸ் அரசியல் போராட் டத்தைத் துயர நாடக நிலைக்கு உயர்த்துகிறார். குழுவில் உள்ள கதாபாத்திரங்கள் தொன்ம உருவங்க ளுக்கு ஒத்திருக்கின்றன: அகமெம்னான் காட்டிக் கொடுக் கப்பட்ட பாரபட்சத் தந்தை, கிளைடெம்நெஸ்ட்ரா ஒத்து ழைக்கும் தாய், ஓரெஸ்டெஸ் கம்யூனிஸ்டுகளுடன்





இணையும் பழிவாங்கும் மகன். தொன்மம் மற்றும் வர லாற்றின் இந்த அடுக்கு, கிரேக்க வன்முறையின் சுழற்சி இயல்பை விமர்சிக்க ஏஞ்சலோபுலஸை அனுமதிக்கிறது. இப்படம் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியம் கிரேக்க இடதுசாரிகளை நசுக்க எவ்வாறு தலையிட்டது என் பதற்கான மார்க்சிய விமர்சனமாகும், ஆனால் இது கம்யூ னிஸ்ட் இயக்கத்திற்குள்ளேயே இருந்த உள் பிளவுகள் மற்றும் ஸ்டாலினிசக் கடினத்தன்மையையும் விமர்சிக்கிறது. 'பயணக் கலைஞர்கள்' தங்கள் நாடகத்தை ஒருபோதும் முடிப்பதில்லை, இடதுசாரிகள் தங்கள் புரட்சியை ஒருபோதும் முடிக்காதது போல.

The Hunters (1977) மற்றும் முதலாளித்து வத்தின் குற்றவுணர்வு:

The Hunters (Oi Kynigoi) படத்தில், ஏஞ்சலோ புலஸ் தனது கவனத்தை பாதிக்கப்பட்டவர்களிட மிருந்து வெற்றியாளர்களை நோக்கி மாற்றுகிறார். உள்நாட்டுப் போர் முடிந்து பல தசாப்தங்க ளுக்குப் பிறகு, பனியில் பாரபட்சன் ஒருவனின் கச்சிதமாகப் பாதுகாக்கப்பட்ட உடலை முதலா ளித்துவ வேட்டைக்காரர்கள் குழு (இராணுவம், தேவாலயம், அரசியல் உயரடுக்கு மற்றும் வணிக வர்க் கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள்) காண்கிறது. இன்னும் இரத்தம் கசிந்து கொண்டிருக்கும் அந்த உடல், கிரேக்க ஆளும் வர்க்கத்தின் அடக்கப்பட்ட குற்றவு ணர்வின் அடையாளமாகிறது.



இடதுசாரிகள் திரும்புவது குறித்த ஆளும் வர்க் கத்தின் பயம் பற்றிய ஒரு சர்ரியல் விசார ணையாக இப்படம் உள்ளது. அவர்கள் உடலின் மேல் நிற்கும்போது, அவர்களின் நம்பிக்கை அவிழ்கிறது, மேலும் அவர்கள் ஒத்துழைப்பு மற்றும் துரோகம் நிறைந்த தங்கள் சொந்த வரலாற்றை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். போருக்குப் பிந்தைய ஒழுங்கின் தார்மீகத் திவால்நிலையை அம்பலப்படுத்த ஏஞ்ச லோபுலஸ் பிரெக்டியன் 'விசாரணை' (trial) உத்தியைப் பயன்படுத்துகிறார். முதலாளித்துவ அரசின் ஸ்திரத்தன்மை, இறந்து கிடக்க மறுக்கும் புதைக்கப்பட்ட வன்முறையின் அடித்தளத்தில் கட்டப்பட்டுள்ளது என்று படம் கூறுகிறது. 'வேட் டைக்காரன்' வேட்டையாடப்படுபவனாகவும் இருக்கிறான்; அவர்கள் கொன்றுவிட்டதாக நினைத்த புரட்சியின் பேயால் அவர்கள் துரத்தப்படுகிறார்கள்.

Landscape in the Mist (1988) மற்றும் Ulysses' Gaze (1995): ஆழ்துயரத்திற்கான மாற்றம்:

1980-கள் முன்னேறி பனிப்போர் குறைந்தபோது, ஏஞ்சலோ புலஸின் சினிமா மிகவும் இருத்தலியல் பதிவை நோக்கி



நகர்ந்தது. Landscape in the Mist (Topio stin omichli), ஜெர் மனியில் ஒரு தொன்மத் தந்தையைத் தேடும் இரண்டு குழந் தைகளைப் பின்தொடர்கிறது, இப்பயணம் இழந்த கடவுளையோ அல்லது இழந்த அரசியல் இலட்சியத்தையோ தேடும் ஒரு தலைமு றைக்கான உருவகமாக மாறுகிறது. தலைப்பில் உள்ள 'மூடுபனி' (mist), கடந்த காலத்தின் தெளிவான எல்லைக்கோடு கரைந்துபோன உலகின் குழப்பத்தைக் குறிக்கிறது.

இந்த மாற்றம் Ulysses' Gaze (To Vlemma tou Odyssea) படத்தில் உச்சக்கட்டத்தை அடைகிறது, இது சோவியத் யூனியனின் வீழ்ச் சிக்குப் பிறகும் பால்கன் போர்களின் போதும் வெளியிடப்பட்டது. மனாக்கிஸ் சகோதரர்களின் மூன்று உருவாக்கப்படாத படச்சுருள்களைத் தேடி, போரினால் பாதிக்கப்பட்ட பால்கன்

முழுவதும் பயணிக்கும் ஒரு கிரேக்க-அமெரிக்கத் திரைப்படத் தயாரிப்பாளரை (ஹார்வி கீட்டல்) இப்படம் பின்தொடர்கிறது. 'முதல் பார்வையை' (first gaze) - ஒரு தூய்மையான, சித்தாந்தத் திற்கு முந்தைய பார்க்கும் முறை-த் தேடும் இந்தத் தேடல், சோசலிசக் கனவின் சிதைவின் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது.



படத்தின் மையப் படிமம், சினிமாவில் கம்யூனி சத்தின் வீழ்ச்சியின் மிகவும் பிரபலமான சித்தரிப் பாகக் கருதப்படுகிறது: பிரம்மாண்டமான, பிரிக் கப்பட்ட லெனின் சிலை, ஒரு படகில் கட்டப்பட்டு, டானூப் நதியில் மெதுவாக மிதந்து செல்கிறது. சிலை வெற்றியில் கவிழ்க்கப்படவில்லை (1989 செய்திச் சுருள்களில் உள்ளதைப் போல), ஆனால் அது ஒரு பேய் போன்ற நிலையில் மிதக்கிறது. கதாநாயகன் இந்த ஊர்வலத்தை முரண்நகை மற்றும் ஆழ்ந்த சோகத்தின் கல



வையுடன் பார்க்கிறான். இது ஒரு சகாப்தத்தின் இறுதிச்ச டங்கைப் பிரதிபலிக்கிறது. ஒருபோதும் வராத எதிர்கா லத்தை நோக்கி விரலை நீட்டும் லெனின் சிலை, வரலாற்றின் 'சிதைவின்' அடையாளமாகிறது. ஏஞ்சலோபுலஸ் இங்கே 'வர லாற்றின் முடிவு' (End of History) கதையாடலை விமர்சிக்கிறார்; கம்யூனிசத்தின் வீழ்ச்சி தாராள வாதக் கற்பனாவாதத்தைக் கொண்டுவரவில்லை, மாறாக இன அழிப்பு மற்றும் குழப்பத்தையே கொண்டு வந்துள்ளது. இப்படம் ஒரு கூட்டுப் பார்வையை இழந்ததற்கான புலம்பல் ஆகும், இது தனிமனிதனை இடிபாடுகளின் நிலப்பரப்பில் தவிக்க விடுகிறது.

இப்படம் புதிய 'கோட்டை ஐரோப்பாவை' (Fortress Europe) விமர்சிக்கிறது. எல்லை என்பது இப்போது கிழக்கு மற்றும் மேற்கிற்கு இடையிலான ஒரு கருத்தியல் கோடு அல்ல, மாறாக 'குடிமக்களை' அகதிகளின் 'வெற்று வாழ்க்கையிலிருந்து' (bare life) பிரிக்கும் ஒரு உயிரி அரசியல் தடையாகும். மிகவும் வேட்டை யாடும் காட்சி கிரேக்க-அல்பேனிய எல்லையில் நிகழ்கிறது: மூடுபனியில் ஒரு உயரமான கம்பி வேலி, மனித உருவங்கள் 'ஒரு கூர்மையான காகிதச் சங்கிலி' போல வலையில் ஒட்டிக்கொண் டிருக்கின்றன. உடல்கள் கிரேக்கத்திலோ அல்பே னியாவிலோ இல்லாமல், நாடற்ற இடைவெளியில் ஒரு வெள்ளை வெற்றிடத்தில் தொங்குகின்றன. இந்த உருவகம் இடதுசாரிகளின் வரலாற்று அதிர்ச்சியை (நாடுகடத்தல், துன்புறுத்தல்) அகதி களின் சமகால நெருக்கடியுடன் இணைக்கிறது. சர் வதேசவாதத்தின் மார்க்சியக் கனவு தோல்விய டைந்தது, அதற்குப் பதிலாக உடல்களை வணிக மயமாக்கும் (கடத்தல்காரர்கள் குழந்தைகளை விற்கி றார்கள்) மற்றும் எல்லைகளை இராணுவமயமாக்கும் நவதா ராளவாத ஒழுங்கு மாற்றப்பட்டுள்ளது.

(தொடரும்...)



Eternity and a Day (1998): எல்லைகள் மற்றும் உயிரி அரசியல்:

Eternity and a Day (Mia aioniotita kai mia mera) படத்தில், ஏஞ்சலோபுலஸ் உயிரி அரசியல் (bio-political) விமர்சனத்திற்குள் மேலும் நகர்கிறார். கதாநாயகன் அலெக்ஸாண்டர், இறக்கும் தறுவாயில் உள்ள ஒரு கவிஞர், அவர் தனது இறுதி நாளை ஒரு இளம் அல்பேனிய அகதிச் சிறுவனைக் காவல்துறை மற்றும் கடத் தல்காரர்களிடமிருந்து காப்பாற்ற செலவிடுகிறார்.



Swarnavel@thaiveedu.com

ஈழத்து ஆய்வொழுங்கில்

எஸ்.எச்.எம். ஜெமீலின்
கல்விப்பணியும் வரலாற்று எழுத்தியலும்



இக்பால் அலி

ஈழத்து ஆய்வொழுங்கில் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் பங்களிப்பு என்பது வெறும் ஆவணப்படுத்தல் மாத்திரமன்றி, சிதறிக் கிடந்த சமூக வரலாற்றை மீளுருவாக்கம் செய்த ஒரு பெரும் பணியாகும். குறிப்பாக, கிராமப்புற மானுட வாழ்வியலைப் பிரதிபலிக்கும் இஸ்லாமிய நாட்டார் பாடல்களைத் திரட்டி, சீர் செய்து, அவற்றை ஆவணமாக்குவதில் அவர் முன்னோடியாகத் திகழ்ந்தார். இலங்கை வானொலி வாயிலாகவும் பின்னர் நூல் வடிவிலும் இவர் முன்னெடுத்த நாட்டார் இலக்கிய முயற்சிகள், வாய்மொழி மரபுகளை எழுத்து மரபாக மாற்றிய முக்கியத் திருப்புமுனைகளாகும். 1980-களில் வானொலி ஊடாக இவர் ஆற்றிய தொடர் உரைகள், மீரா உம்மா, பக்கீர் பாவா போன்ற அடித்தட்டு நாட்டுப்புறக் கலைஞர்களைப் பொதுவெளிக்கு அறிமுகம் செய்தன. சுமார் 1500 நாட்டார் பாடல்களைச் சேகரித்து ஆவணப்படுத்தியமை, ஈழத்து இஸ்லாமிய இலக்கியப் பரப்புக்கு அவர் வழங்கிய மாபெரும் கொடையாகும்.

கிழக்கு இலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான பண்பாட்டுக்கூறுகள் மற்றும் இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு ஆகிய வற்றைக் கண்டறிந்து பதிவு செய்வதில் ஜெமீல் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டார். முஸ்லிம் சமூகத்தின் வரலாற்று நாயகர்கள், கலாசார விழுமியங்கள், வாழ்வியல் போராட்டங்கள் மற்றும் கல்விச் சிந்தனைகளைத் தனித்துவமான ஆவணங்களாக நிலைநிறுத்தியவர் அவர். அத்துடன், ஆய்வுத் தரவுகளைச் சுவைமிக்க தமிழ் மொழியில் வழங்கிய அவரது ஆளுமை, ஈழத்து வரலாற்று எழுத்தியலில் அவருக்கு ஒரு தனித்துவமான இடத்தை வழங்கியுள்ளது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மறுமலர்ச்சிக்குப் பங்காற்றிய முன்னோடி ஆளுமைகளை ஆவணப்படுத்துவதில் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் பங்களிப்பு ஈடு இணையற்றது. டி.பி. ஜயா, சேர் ராஸீக் பரீத், ஏ.எம்.ஏ. அஸீஸ், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் போன்ற அரசியல் மற்றும் கல்விப்புலம் சார்ந்தோர்களையும் பேராசிரியர் எம்.எம். உவைஸ், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பித்தன் ஷா, இளங்கீரன் சுபைர் போன்ற இலக்கிய ஆளுமைகளையும்; எம்.எஸ். காரியப்பர், முத்தலிபு வைத்தியர், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் உள்ளிட்ட சமூகச் சிந்தனையாளர்களையும் இன்றைய தலைமுறைக்கு அடையாளம் காட்டிய பெருமை இவரையே சாரும். வரலாற்று நாயகர்களின் பன்முக ஆளுமைகளை ஆய்வு

செய்ய விழைவோருக்கு ஜெமீல் அவர்களின் நூல்கள் ஒரு சிறந்த வழிகாட்டியாகும். நமது சமூகத்தின் 'முதுசங்கள்' ஆற்றிய பணிகளைப் பத்திரிகைகள் வாயிலாகத் தொடர்ச் சியாக எழுதி, பின்னர் அவற்றை நூல் வடிவாக்கி மக்கள் மயப்படுத்தியவர் அவர். சமூகத்தின் பூர்வீக அடையா ளங்களை ஆவணப்படுத்துவது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து, அவர் முன்னெடுத்த இந்த முன்னுதா ரணமான முயற்சிகள் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு புதிய ஒளியைப் பாய்ச்சி நிற்கின்றன.

இலங்கை முஸ்லிம்களின் 1400 ஆண்டுகால வரலாற்றில், காலனித்துவ எதிர்ப்பு மற்றும் சமூக மாற்றத்திற்கான பங்க ளிப்புகளை ஆவணப்படுத்துவதில் ஜெமீலின் எழுத்துகள் ஒரு 'சிறு வரலாற்று' அணுகுமுறையைக் கொண்டுள்ளன. அவர் வரலாற்றை வெறும் நிகழ்வுகளாகப் பார்க்காமல், அதன் பின்னாலிருந்த புறக்காரணிகளையும் தாக்கங்க ளையும் பகுப்பாய்வு செய்துள்ளார். ஈழத்துத் தமிழ் அறி ஞர்கள் மற்றும் ஆளுமைகள் குறித்து அவர் எழுதியுள்ள கட்டுரைகள், தனிநபர் வரலாற்றினூடாகச் சமூக வர லாற்றைக் கட்டியெழுப்பும் முயற்சியாகும். அவரது ஆய்வு முறைமையில் தென்படும் துல்லியம் மற்றும் தரவுச் சேகரிப்பு, அவர் கையாண்ட வரலாற்று எழுத்தியல் பண்புகளை உறுதிப்படுத்துகின்றன.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல், கல்வி மற்றும் கலாசார அடையாளங்களை மீளுருவாக்கம் செய்வதில் எஸ்.எச்.எம். ஜெமீலின் ஆய்வுகள் முக்கிய பங்கு வகிக் கின்றன. கொழும்பு சாஹிராக் கல்லூரியின் தோற்றம், கல்விச் சங்கங்களின் உருவாக்கம் மற்றும் 'துருக்கித் தொப்பி' விவகாரம் போன்ற அடையாளப் போராட் டங்களை வரலாற்று ரீதியாக இவர் தெளிவுபடுத்தியுள்ளார். காலனித்துவ ஆட்சியாளர்களுடனான முஸ்லிம்களின் உறவுகள் மற்றும் எம்.எஸ். காரியப்பர் (1899 - 1989) போன்ற அரசியல் ஆளுமைகளின் எழுபது ஆண்டுகாலப் பொதுவாழ்வை ஆவணப்படுத்தியதோடு, சுவாமி விபுலா னந்தர் முஸ்லிம் அறிஞர்களுடன் கொண்டிருந்த புல மைத்துவ உறவுகளையும் வெளிக்கொணர்ந்துள்ளார். குறிப்பாக, 1850 முதல் 1915 வரையிலான முஸ்லிம் எழுத் தாளர்களின் நூல்களைத் திரட்டி, ஐந்து பாகங்களாக இவர் வெளியிட்ட 'சுவடிகள் ஆற்றுப்படை' எனும் நூல் விபரப்பட் டியல் தொகுப்பு, ஈழத்து இஸ்லாமிய ஆவணமாக்கல் துறையில் ஒரு திருப்புமுனையாகும். பேராசிரியர் சு. வித்தி யானந்தன் மற்றும் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்றோரின் கல்விசார் பங்களிப்புகளை ஆய்வு செய்துள்ளமை, இவரது வரலாற்று எழுத்தியலில் நிலவும் பரந்துபட்ட தேடலை உறுதிப்படுத்துகிறது.

கல்விப்பணிகளும் நிர்வாகப் பங்களிப்பும்:

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள், கல்வித்துறையின் பல்வேறு நிலைகளிலும் பணியாற்றிப் பெரும் முதிர்ச்சி பெற்றவர். 1964-ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகவும், அருணாசலம் விடுதியின் உதவி விடுதிக் காப்பாளராகவும் தனது பணியைத் தொடங்கினார். பின்னர், 1965-இல் சாய்ந்தமருது மு.ம. வித் தியாலயத்தில் (தற்போதைய கல்முனை சாஹிறாக் கல்லூரி) ஆசிரியராகப் பணியாற்றினார். 1975-ஆம் ஆண்டு கல்முனை சாஹிறாக் கல்லூரியின் அதிபராக அவர் பொறுப்பேற்ற காலம், அந்த நிறுவனத்தின் வளர்ச் சியில் ஒரு மிக முக்கியமான கட்டமாகக் கருதப்படுகிறது. இக்காலப்பகுதியில் நிர்வாகப் பணிகளுக்கு மத்தியில், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக 'பொது நிதியியல்' (Public Finance) எனும் ஆங்கில நூலையும், பால் சாமுவேல்சனின் புகழ்பெற்ற 'பொருளியல்' (Economics - Samuelson) நூலின் ஒரு பகுதியையும் தமிழில் மொழிபெயர்த்தார். இதன்மூலம் ஆங்கிலப் புலமைமிக்க ஒரு கல்வியாளராக, உயர்கல்வித் துறைக்குத் தேவையான பாடநூல்களைத் தமிழாக்கஞ் செய்ததில் இவரது பங்க ளிப்பு குறிப்பிடத்தக்கது.

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் நிர்வாகப் பணிகள், கல் வித்துறையின் பல்வேறு மட்டங்களில் காத்திரமான மாற் றங்களை ஏற்படுத்தின. 1971-இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் (SLAS) தரம் 5-க்கு நியமனம் பெற்ற இவர், நிந் தவூரில் வட்டாரக் கல்வி அதிகாரியாகவும், பின்னர் கல்முனை கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றினார். 1972-இல் உதவிப் பரீட்சை ஆணையா ளராகப் பணியாற்றியதன் மூலம் தேசிய மட்டத்திலான கல்வி நிர்வாக அனுபவத்தைப் பெற்றார்.

அவரது நிர்வாகத் திறமைக்குச் சான்றாக, 1982-இல் அட் டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையின் அதிபராக அவர் ஆற்றிய பணிகள் அமைந்தன. இக்காலப்பகுதியில் அந்த நிறுவனத்தில் குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு மற்றும் கல்விசார் முன்னேற்றங்களை அவர் முன்னெ டுத்தார். 1986-இல் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாவது முஸ்லிம் பதிவாளராக (Registrar) நியமனம் பெற்றமை, அவரது உயர்கல்வி நிர்வாகப் புலமைக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

இதனைத் தொடர்ந்து, 1990-களில் முஸ்லிம் சமயப் பண் பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரா கவும், கல்வி மற்றும் கலாசார அமைச்சின் மேலதிகச் செய லாளராகவும், ஆலோசகராகவும் உயரிய பொறுப்புகளை வகித்தார். 2000-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் திகதி ஓய் வுபெறும் வரை, அரச நிர்வாகத் துறையிலும் கல்விப்புலத் திலும் ஒரு கொள்கை வகுப்பாளராகவும் (Policy Maker) வழிகாட்டியாகவும் அவர் ஆற்றிய பணிகள், ஈழத்து முஸ்லிம் சமூகத்தின் கல்வி வரலாற்றில் முக்கியப் பதிவுக ளாகும்.

இலக்கியச் செயற்பாட்டாளர்:

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் வகித்த உயர் பதவிகள் காலவோட்டத்தில் ஒரு நிர்வாகப் பதிவாக அமையலாம்; ஆனால், அவரது இலக்கியச் செயற்பாடுகளே அவரை ஒரு 'மறக்க முடியாத ஆளுமையாக' வரலாற்றில் நிலைநிறுத்தி யுள்ளன. ஈழத்து இஸ்லாமிய இலக்கியப் பரப்பில் அவர் மேற்கொண்ட தேடல்கள், நாட்டார் பாடல் சேகரிப்புகள் மற்றும் 'சுவடிகள் ஆற்றுப்படை' போன்ற ஆவணமாக்கல்

முயற்சிகள், ஒரு தனிமனிதப் பணியாக அன்றி ஒரு நிறுவனத்தின் பாரிய செயற்திட்டத்திற்கு நிகரானவை. வாய்மொழி மரபுகளை எழுத்துரு வாக்கியமை மற்றும் விளிம்புநிலை வரலாற்றை மையநீரோட்ட ஆய்வுகளுக்குக் கொண்டு வந்தமை என்பன அவரது புலமைத்துவ நேர்மையைக் காட்டுகின்றன. அதேசமயம் கிழக்கிலங்கை இளம் எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்புச் செய்தவர். 1965-இல் கல்முனை சாஹிறாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற் றியபோது மாணவர்களின் இலக்கிய ஆர் வத்தைத் தூண்டும் வகையில் முதலாவது அச்சு சஞ்சிகையான 'மாணவர் மஞ்சரி' என்பதனை பதிப்பித்தவர். எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் கல்முனை சாஹிறாக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய காலத்தில், மாணவர்களின் எழுத் தாற்றலை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்டினார். இதன் ஒரு பகுதியாக, 1976-இல் 'சாஹிறா' எனும் மாதாந்தப் பத்திரிகையைத் தோற்றுவித்தார். இப்பத்திரிகை மாதாந்தம் கிரம மாகவும் வெளிவந்தது, ஒரு பாடசாலை மட்டத் திலான இப்பத்திரிகை, மாணவர்களிடையே இலக்கிய ஆர்வத்தை விதைப்பதற்கும் அவர் களின் ஆளுமை வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் ஒரு களமாக அமைந்தது. இவரது இத்தகைய தொலைநோக்குடைய நிருவாகப் பணிகள் குறித்து, அக்கல்லூரியின் முன்னாள் அதிபரும் எழுத்தாளருமான ஏ. பீர்முஹம்மது தனது கட்டு ரையில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார். 'கல்முனை ஸாஹிறாக் கல்லூரியின் இன்றைய கீர்த்தியும் புகழும் உயர்நிலையில் காணப்படுவ தற்கு, எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் அர்ப்ப ணிப்புமிக்க பங்களிப்பும், அவரது காத்திரமான நிருவாகத் திறனுமே அடிப்படைச் சக்திகளாகத் திகழ்கின்றன.' இது, ஒரு கல்வி நிறுவனத்தின் கல்விசார் அடைவுகளுக்கு அப்பால், அதன் கலாசார மற்றும் இலக்கிய விழுமியங்களைக் கட்டியெழுப்புவதில் ஒரு தலைமைத்துவ ஆளு மையின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்து கின்றது.

அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் துணையுடன் ஆண்டுக்கொரு நூல் வெளியி டுதல் எனும் திட்டத்தினை உருவாக்கி அதே ஆண்டில் தொடங்கி நான்கு வருடங்களில் ஐந்து நூல்களை வெளியிட்டார். கவிஞர் அன்பு முகைதீன், எம்.ஐ.எம். முஸம்மில், மருதூர் ஏ. மஜீத், புலவர் மீ. அஹ்மத், எஸ்.எச்.எம். ஜெமீல், யூ.எல். ஆதம்பாவா முதலான எழுத்தாளர்களின் முதலாவது நூல்களை இச்சங்கம் வெளியிட்டது. இப்பாடசாலையின் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் இருந்து எழுத்தாளர்களின் முயற்சிகளுக்கு உந்து சக்தியாகவும் இருந்து ள்ளார். இத்தகைய அறிவுசார் பங்களிப்புகள் காரணமாகவே, அவர் மறைந்த பின்னரும் ஈழத்து ஆய்வொழுங்கில் ஒரு தவிர்க்க முடியாத வழிகாட்டியாக இன்றும் என்றும் நினைவு கூரப்ப டுகிறார்.

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் இத்தகைய அரிய முயற்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று 1983-இல் அட்டாளைச்சேனை அதிபராக இருந்த போது இவரது ஆலோசனையிலும் தலைமையிலும் இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம் ஆரம்பிக்கப்பட்டது. இது நூல் வெளியீட்டு விழாக்கள், கருத்தரங்குகள், பாராட்டு விழாக்கள் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. எஸ்.எச்.எம். ஜெமீல், அ.ஸ. அப்துல் ஸமத், மருதூர் ஏ. மஜீத், மருதூர்க் கொத்தன் வி.எம். இஸ்மாயில், அன்பு முகைதீன், பாலமுனை பாரூக், எம்.ஏ. உதுமாலெப்பை, பாவலர் பஸீல் காரியப்பர், மாறன் யூ. ஸெயின், எஸ்.ஏ.ஆர்.எம். செய்யது ஹஸன் மௌலானா, ஏ.யூ.எம்.ஏ. கரீம், ஏ.கே.எம். நியாஸ், ஆகியோர் இப்பணியகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் இருந்த வர்கள். தன் பிரதேசத்தில் இலக்கிய வளர்ச் சியை மேம்படுத்துவதற்காக இந்த நூல் வெளியீ ட்டுப் பணிகத்தை அவர் ஸ்தாபித்தார் என்பதும் இங்கு மனதில் கொள்ளத்தக்கது.

1986-இல் இந்நூல் வெளியீட்டுப் பணியக த்தினால் 'எழுவான் கதிர்கள்' என்ற கவிதைத் தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டது. 1970-இன் பின் கவிதைகளை எழுதத் தொடங்கிய தென் கிழக்குப் பிரதேசத்திலுள்ள 24 கவிஞர் களின் படைப்பைத் தாங்கி இந்த நூல் வெளிவந்தது. இதில் எழுதிய பல கவிஞர்கள் பலர் இன்று உயிரோடு இல்லை. ஒரு சிலர் இன்றும் தொடர் ந்து எழுதி பிரபலமான கவிஞர்களாய் பிரகாசிக் கின்றார்கள். இது ஒரு சிறந்த முயற்சியாக விளங்குகிறது. இந்த நூல் வெளியீட்டுப் பணி யகம் 2000-ஆம் ஆண்டு வரையும் செயற்பட்டு 21 நூல்களை வெளியிட்டு சாதனை படைத்தது. தென்கிழக்குப் பிரதேசத்திலுள்ள இளம் எழுத்தாளர்களுக்கு உந்து சக்தியாக அவ்வமைப்பு செயற்பட்டது. ஆக்கங்களை அச்சில் வெளிக்கொணர முடியாமல் வசதியற்ற நிலையில் ஏக்கத்துடன் முடங்கிக் கிடந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களை இவர் நூலுருவில் வெளிக் கொணர்ந்தார்.

ஜெமீல், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர், மற்றும் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் பின்னர் அவ்வமைச்சின் ஆலோசகர் ஆகிய பதவிகள் வகித்த போது தமிழ் இஸ்லாமிய இலக்கிய பண்பாட்டுப் பாரம்பரியங்களைத் தூக்கித் துலாம்பரம் படுத்தும் வகையில் பல வலிய முயற்சிகளை மேற்கொண்டு அவர் ஆற்றிய தொண்டு என்றும் போற்றப்படுவனவாக விளங்குகின்றன. ஜாபீர் ஏ. காதர், எ.எச்.எம். அஸ்வர், லக்ஷ்மன்





























ஜெயக்கொடி ஆகியோர் அமைச்சராக இருந்த காலங்களில் அமைச்சின் செயலாளராகவும், பின்னர் ஆலோசராகவும் 11 வருடங்கள் சேவை யாற்றினார். அக்காலத்தில் இவ்வமைச்சு மிகப்பெருந்தொகையிலான நூல்களையும் மலர் களையும் வெளியிட்டன. 'இவற்றுள் மிக முக்கியமானது இலங்கை முஸ்லிம்களினது வரலாற்றினையும் பண்பாட்டினையும் ஆய்வு செய்து ஆவணப்படுத்தி மாவட்ட ரீதியிலான நூல்களை வெளியிட்டமையாகும். இவ்விடய த்தில் அப்போது அமைச்சராகயிருந்த எ.எச்.எம். அஸ்வரது வழிகாட்டலிலும் இவரது முயற்சியிலும் இப்பணி மிகத் துரிதமாக நடை பெற்றது. களுத்துறை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை, மாத்தறை, அம்பாறை, கம்பஹா, புத்தளம், ஆகிய மாட்டவங்களின் வரலாற்று நூல்கள் 1992 - 2000 ஆண்டு காலப் பகுதியில் வெளிவந்தன. இவர் 1973-ஆம் ஆண்டு, மேல் நாட்டு சங்கீதப் பரீட்சைகளுக்குப் பதிலாக உள் நாட்டுப் பரீட்சைகளை நடத்துவதற்காக அமைக் கப்பட்ட ஆலோசனைக் குழுவின் செயலாள ராகப் பணியாற்றினார். அதேவேளை யாழ்ப் பாணம், மட்டக்களப்பு மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களின் கல்வி டிப்ளோமா வெளிவாரி மாணவர்களுக்கான மேற்பார்வையாளராகவும் கடமையாற்றினார். தொடர்ந்து கல்வித்துறையில் ஆற்றிய பணிகளின் நிமித்தம், 1980-இல் கல்முனை மாவட்ட அதிபர் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவராகவும், 1982-இல் இலங்கை முஸ்லிம்களின் விஞ்ஞானக் கல்வி தொடர்பான யுனெஸ்கோ (UNESCO) ஆய்வுக் குழுவின் அங் கத்தவராகவும் நியமிக்கப்பட்டார். மேலும், 1983-ஆம் ஆண்டு அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்துச் சிறந்த சேவையாற்றினார்.

ஜெமீல் அவர்கள் அரசியல், சமூகவியல், கல்வி, இலக்கியம் துறைசார்ந்த விடயங்களில் அதிகளவு ஈடுபாடுகள் கொண்ட முஸ்லிம் பெரியார்கள் பற்றியும் அதேபோல் இலைமறை காயாக பங்காற்றிய முஸ்லிம் பெரியார்கள் பற்றியும் ஆய்வுகளைச் செய்தார். மிகுந்த கவனத்தோடு அவர்களைத் தேடியும் பரிசீ லித்தும் பெற்றுக் கொண்ட தகவல்களை யெல்லாம் மெய்ப்பொருள் காணும் வகையில் ஆய்வுக்கட்டுரைகளாகவும் நூலாகவும் வெளிக் கொணர்ந்து ஆவணப்படுத்தினார்.

கிழக்குப் பல்கலைக்கழக உருவாக் கத்தில் எஸ்.எச்.எம். ஜெமீலின் பங்க ளிப்பு:

1977-இல் கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்க ழகம் ஒன்றினை நிறுவுவதற்கான சாத்தியக்கூ றுகளை ஆராய நியமிக்கப்பட்ட பேராசிரியர் வி. அப்பாப்பிள்ளை தலைமையிலான குழுவில் எஸ்.எச்.எம். ஜெமீல் ஒரு அங்கத்தவராகப் பணி யாற்றினார். 1981-இல் ஆரம்பிக்கப்பட்ட பல்க லைக்கழகக் கல்லூரியின் முகாமைத்துவச் சபை உறுப்பினராகப் பணியாற்றிய அவர், 1986-இல் அது பூரண பல்கலைக்கழகமாகப் பிரகடனப்ப டுத்தப்பட்டபோது அதன் முதலாவது கவுன்சில் உறுப்பினர்களில் ஒருவராகவும் நியமிக்கப் பட்டார். தொடர்ந்து, 1986-ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பதிவாளராகப் பொறுப்பேற்று, அதன் ஆரம்பகால நிர்வாகக் கட் டமைப்பை உருவாக்குவதில் மிகக் கடினமாக உழைத்தார். ஒரு புதிய பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய அர்ப்பணிப்புடன் கூடிய நற்பணிகளை கிழக்குப் பல்கலைக்கழகக் கல்விச் சமூகம் இன்றும் நன்றியுடன் நினைவு கூர்கிறது.

தேசிய மற்றும் சர்வதேச கல்விப்ப ணிகள்:

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள், நளீம் ஹாஜியார் அவர்களால் உருவாக்கப்பட்ட இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராவார். கல்வி அமைச்சின் இஸ்லாமியக் கல்வி ஆலோசகர் சபை உறுப்பினர், அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் மற்றும் இலங்கை அரச கலைக்கழகத்தின் நுண்கலைக் குழுத் தலைவர் எனப் பல உயர்மட்டப் பதவிகளை வகித்துள்ளார்.

மேலும், 2004-இல் சவூதி அரேபியாவிலுள்ள இலங்கை சர்வதேசப் பாடசாலையின் அதிபரா கவும், கொழும்பு சாஹிறா மற்றும் கிறஸென்ட் சர் வதேசப் பாடசாலைகளின் ஆலோசகராகவும் பணியாற்றித் தனது கல்விப் புலமையை சர்வதேச அளவில் விரிவுபடுத்தினார். 2008-ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனா திபதியினால் நியமிக்கப்பட்ட நால்வர் குழுவில் ஒருவராக இடம்பெற்றது அவரது ஆளுமைக்குச் சான்றாகும். ஏ.எம்.ஏ. அஸீஸ் பவுண்டேஷன் தலைவர் உள்ளிட்ட பல சமூக அமைப்புகளில் அவர் ஆற்றிய வழிகாட்டல்களும், அவரது நூல்களும் எதிர்காலச் சந்ததியினருக்குக் கிடைத்த பெரும் சொத்துக்களாகும்.

எழுத்துப் பணிகள்:

முஸ்லிம்களுடைய நாட்டார் பாடல்கள் எதிர்காலத்தில் அருகிப் போய்விடும் என்பதை அவர் தீர்க்கதரிசனத்துடன் உணர்ந்திருந்தார். ஆதலால் அவர் அதன் ஆழ அகலத்தை அளந்து நாட்டார் பாடல்களைப் பாடக்கூடிய கலைஞர்கள் எங்கே எல்லாம் இருக்கின் றார்களோ அங்கெல்லாம் அவர்களைத் தேடிச்

சென்று அவர்களுடைய குரல் பதிவுகளை ஒலி நாடாவில் பதிவு செய்து வானொலியிலும், இரு வெட்டுக்களிலும் ஒலிக்கச் செய்த பெருமை அவருக்கே உண்டு எனலாம். இது அவர் இஸ்லாமிய நுண்கலைப் பிரிவுக்கு அவர் செய்த குறிப்பிடத்தக்க பெரும் பங்களிப்பாகும்.

கிழக்கு இலங்கை முஸ்லிம் மக்களிடமிருந்து பிரிக்க முடியாத கலை அம்சங்களையும் மறைக்க முடியாத வரலாற்று நாயகர்களையும் ஜெமீலின் எழுத்துக்களில் காணலாம். இவரது முதல் ஆக்கம் 'எனது ஊர்' எனும் தலைப்பில் 'தினகரன் ஞாயிறு பாலர் கழகப் பகுதியில்' 1949-இல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து 1960-இல் பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் சஞ்சிகையில் 'அறிஞர் கண்ட அண்ணல் நபிபெருமான் (ஸல்) அவர்கள்' என்ற தலைப்பிலும் அவர் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். 1962-இல் அவரது முதலாவது கவிதை பல்கலைக்கழக வருடாந்த சஞ்சிகையில் 'என்னாளோ' என்ற தலைப்பிலும் 1964-இல் அவரது முதலாது சிறுகதை பண்டாரவளையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த மணிக்குரல் சஞ்சிகையில் 'கடன் தீர்ந்தது' என்ற தலைப்பிலும் வெளிந்தது. இவற்றைத் தொடர்ந்து சில சிறுகதைகளும், கவிதைகளும் எழுதியுள்ளார்.

இலக்கியம், வரலாறு, கல்வி, அரசியல் மற்றும் நாட்டுப்புறப் பண்பாட்டியல் ஆகிய பன்முகத் துறைகளில் தடம் பதித்துள்ள ஆய்வாளர் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள், இதுவரை மொத்தம் 37 நூல்களை வெளியீடு செய்துள்ளார். இதில் 20 நூல்களின் ஆசிரியராகவும், இரண்டு நூல்களின் மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கும் இவர், 15 நூல்களுக்குப் பதிப்பாசிரியராகவும் தொகுப்பாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றைத் தந்துள்ளதோடு, 50-க்கும் மேற்பட்ட நூல்களுக்குப் பதிப்புரை, மதிப்புரை மற்றும் சிறப்புரைகளையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார். ஊடகத்துறையிலும் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ள இவர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வானொலிகளில் 130 உரைகளிலும், 12 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுப் பல சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை முன்வைத்துள்ளார். மேலும், இலங்கை முஸ்லிம்களின் கலைப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் நோக்கில் அவர்களின் நாட்டுப்புறப் பாடல்கள் அடங்கிய சிறப்பு இறுவட்டு ஒன்றினையும் வெளியிட்டுள்ளார். தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, நவமணி, தினக்குரல், டெயிலி நியூஸ், ஒப்ஸேவர், டெயிலி மிரர், ஐலண்ட், எக்னோமிக்ஸ் டைம்ஸ், அல் இஸ்லாம், மித்திரன், அல் அரப் முதலான பத்திரிகைகளிலும் வளர்மதி, ஸாஹிறா, செங்கதிர், மணிக்குரல், ஞானம், மல்லிகை, ஆகிய சஞ்சிகைகளில் அவ்வப்போது இவரது கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டையும் நாட்டார் பாடல்களையும் ஆவணப்படுத்தும் நோக்கில் 'கிராமத்து இதயம்' எனும் நூலைத் தொகுத்த எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் 2008-ஆம் ஆண்டு அந்நூலுக்கான அரச சாஹித்திய விருதினையும் பெற்றவர். பன்முக ஆளுமை கொண்ட இவர், அரபுத் தமிழ், தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் 1850 முதல் 2015 வரை வெளிவந்த இலங்கை முஸ்லிம்களின் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிவு செய்துள்ளார். இப்பதிவுகள் இவரால் எழுதப்பட்ட 'சுவடி ஆற்றுப்படை' எனும் ஐந்து தொகுதிகளில் இடம்பெற்றுள்ளன. ஆய்வாளர்களுக்கும் வாசகர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்த இப்படைப்புகள் மிகச் சிறந்த ஆவணமாகவும் திகழ்கின்றன. அவரது எழுத்துப்பணிகளில் சுமார் 300 கட்டுரைகள் மற்றும் உரைகள் தொகுக்கப்பட்டு 1500 பக்கங்களைக் கொண்ட தொகுதியாகவும் உருப்பெற்றுள்ளன. அத்துடன், அவரைப் பற்றிய 1900-க்கும் மேற்பட்ட பத்திரிகைச் செய்திகள் ஐந்து தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

நூல் சேகரிப்பிலும் ஆவணப்படுத்தலிலும் மிகுந்த ஆர்வம் கொண்ட ஜெமீல் அவர்கள், 2001- ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது சேகரிப்பிலிருந்த சுமார் 2000 நூல்களையும் ஆவணங்களையும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்தார். அவை தற்போது அப்பல்கலைக்கழகத்தில் 'எஸ்.எச்.எம். ஜெமீல் பிரத்தியேக நூலகம்' எனும் தனிப்பிரிவாக மாணவர்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னதாக, 1993-இல் சுமார் 1000 நூல்களைச் சாய்ந்தமருது பொது நூலகத்திற்கும், 1995-இல் எழுத்தாளர் இக்பால் அலிக்கு இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களையும் அவர் வழங்கியுள்ளார். கலை, இலக்கிய உலகிற்கு அவர் ஆற்றியுள்ள இந்த அளப்பரிய சேவை என்றும் நினைவு கூரத்தக்கது.

குடும்பமும் கல்விப் பின்புலமும்:

ஜெமீல் அவர்கள் அம்பாறை மாவட்டத்தில் சாந்தமருதூரில் மிகப் பிரபல்யமான புகழ்மிக்க குடும்பத்தில் 1940, ஒக்ரோபர் 18-ஆம் திகதி மீரா லெப்பை சாகுல் ஹமீத் முக்குலத்தும்மா தம்பதியினரின் மூத்த புதல்வராகப் பிறந்தார். இவர் காரைதீவு, இராமகிருஷ்ண வித்தியாலயம், கல்முனை பற்றிமாக் கல்லூரி, கொழும்பு சாஹிறாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். 1950-களில் கொழும்பு சாஹிறாவில் எச்.எஸ்.சி. கற்கின்ற பொழுது எம்.எல்.ஏ. காதர் (தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர்), ஏ.சி.எல். அமீர் அலி (பேராசிரியர் ஏ.சி.எல். அமீர் அலி), எம்.ஏ.எம். சுக்ரி (பேருவளை ஜாமியா நளிமியா கலாபீடப் பணிப்பாளர்) முதலான புகழ்பெற்ற அறிஞர் குழுமத்தினர்கள் அவர் வகுப்புத் தோழர்களாக

நூல் சேகரிப்பிலும் ஆவணப்படுத்தலிலும் மிகுந்த ஆர்வம் கொண்ட ஜெமீல் அவர்கள், தனது சேகரிப்பிலிருந்த சுமார் 2000 நூல்களையும் ஆவணங்களையும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு அன்பளிப்புச் செய்தார். இதற்கு முன்னதாக, 1993-இல் சுமார் 1000 நூல்களைச் சாய்ந்தமருது பொது நூலகத்திற்கும், 1995-இல் எழுத்தாளர் இக்பால் அலிக்கு இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களையும் அவர் வழங்கியுள்ளார்.

இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டு மற்றும் சமயக் கலாசார விழுமியங்களை ஆவணப்படுத்தி வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர். சமூக மேம்பாட்டிற்காக உழைத்த அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் சிந்தனை யாளர்களின் வாழ்வையும் பணியையும் எவ்விதக் குறை பாடுகளுமின்றி வரலாற்று நூல்களாகப் பதிவு செய்த பெருமை இவருக்குண்டு.

இருந்துள்ளார்கள். இவர்கள்தான் இன்றைய சமூக த்தை நவீன சிந்தனையின்பால் சிந்திக்கத் தூண்டி யவர்கள் புத்துணர்ச்சியுடன் புதுயுகம் படைக்கத் தோற்றுவாயாக இருந்தவர்கள்.

அவர் கல்வி பயிலும் போது சாஹிறாவின் தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாளராக பேராசிரியர் கார்த்திக்கேசு சிவத்தம்பி இருந்தார். கவியரங் குகள், விவாதங்கள், கதம்ப நிகழ்ச்சிகள் என்பன அங்கு நடைபெறும். பாரதி விழா என்பது வருடத்தின் முக்கிய நிகழ்ச்சி ஆகும். இத்தகைய நிகழ்வுகளில் ஆர். சிவகுருநாதன், க. கைலாசபதி, முருகையன், காவலூர் இராசதுரை, சில்லையூர் செல்வராஜன், செ. கணேசலிங்கன், எச்.எம்.பி. முகைதீன், சுபைர் இளங்கீரன், இலட்சுமண ஐயர் ஆகியோர் பங்கேற்பார்கள். இவர்களுடன் ஜெமீலுக்கு மிக நெருக்கமான தொடர்புகள் இருந்தன. தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அவுஸ்திரேலியாவில் உள்ள மேர்டோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஏ.சி.எல். அமீர் அலியும் விளங்கிய காலத்தில் செயலாளராக ஜெமீல் கடமையாற்றினார். கல்லூ ரியின் விவாதக் குழுவிலும் அவர் முக்கிய பாத்திரம் வகித்தார். சாஹிறாக் கல்வி கற்கும் போதுதான் கா. சிவத்தம்பி அவர்கள் வானொ லியில் பிரதி செவ்வாய்க் கிழமைதோறும் 'இளைஞர் மன்றம்' நடத்திக் கொண்டிருந்தார். அவர் அதில் சில நிகழ்ச்சிகளைச் செய்வதற்கு ஜெமீலுக்கு களம் அமைத்துக் கொடுத்தார்.

1959-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற உயர்தரப் பாடசாலைப் பரீட்சையிலும் (HSC), பல் கலைக்கழகப் புகுமுகத் தேர்விலும் எஸ்.ஏச்.எம். ஜெமீலும் அமீரலியும் அகில இலங்கை ரீதியில் தமிழ்ப் பாடத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்தனர். அதனைத் தொடர் ந்து, 1961 ஏப்பிரலில் பேராதனைப் பல்கலைக் கழக முதலாம் ஆண்டு (G.A.Q.) பரீட்சையில் தமிழ்ப் பாடத்திற்குத் தோற்றிய சுமார் 75 மாணவர் களுள் 'ஏ' (A) தரம் பெற்ற மூவரில் ஒருவராக ஜெமீல் திகழ்ந்தார். இச்சிறப்பான பெறுபேற் றுக்காக அவருக்குப் புகழ்பெற்ற 'பிரான்ஸிஸ் கிங்ஸ்பெரி' (Francis Kingsbury) பரிசு வழங்கப் பட்டது. கொழும்பு சாஹிறாக் கல்லூரியிலிருந்து சென்ற மாணவர்கள் இத்தகைய உயர் சாதனை களை நிலைநாட்டியது, அப்போதைய அதிபர் ஏ.எம்.எம். அஸீஸிற்குப் மட்டற்ற மகிழ்ச்சியையும் மனத்திருப்தியையும் அளித்ததாகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார். தனது பல்க லைக்கழகக் காலத்தில் எச்.டி.எஸ். குணசேகர, ஏ.ஜே. வில்சன், ரோனி ராஜரட்னம், கலாநிதி பண்டி தரட்ன போன்ற பல்துறைசார்ந்த மேதைகளிடம் கற்கும் வாய்ப்பைப் பெற்ற ஜெமீல், தமிழ்ப் பாடத்தைப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, எஸ். செல்வநாயகம், கலாநிதி சு. வித்தியானந்தன், கலாநிதி சதாசிவம், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை மற்றும் கலாநிதி க. கைலாசபதி ஆகிய புகழ் பெற்ற அறிஞர்களிடம் பயின்றார். இவர்களில் கலாநிதி சு. வித்தியானந்தன் மற்றும் ரோனி இராஜ ரத்தினம் ஆகியோருடன் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட நட்பு, அவர்கள் வாழ்வின் இறுதி வரை மிக நெருக்கமானதொரு பிணைப்பாகத் தொடர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளில் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் மாணவர் பருவத்திலேயே மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கேற்றார். சங்கத்தின் பொருளாளராக ஏகமன தாகத் தெரிவு செய்யப்பட்ட இவர், கலை விழாக்கள் மற்றும் 'இளங்கதிர்' சஞ்சிகை வெளியீ டுகளில் முக்கிய பங்காற்றினார். 1961 - 1962 இளங்கதிர் சஞ்சிகையில் சிறுகதை வரலாற்றினை நான்கு காலப் பகுதிகளாகப் பிரித்து விரிவுரை யாளர்களான ஆ. வேலுப்பிள்ளை, க. கைலாசபதி, ஆகியோரும் மாணவர்களான எஸ். ஜெபநேசனும் ஜெமீலும் எழுதினார்கள். 1962 - 1963 சஞ்சிகையின் தமிழ்ப்பகுதியின் பதிப்பாசிரி யராகவும் கடமையாற்றினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இன்றும் இயங்கி வரும் முஸ்லிம் மஜ்லிஸ் அமைப்பின் செயலாளராக 1962 - 63 கல்வியாண்டில் எஸ்.எச். எம். ஜெமீல் பணியாற்றினார். மாணவர் பருவத்தில் அரசியல் விழிப்புணர்வுடன் விளங்கிய இவர், மாணவர் பேரவை மற்றும் அரசியல் ஆர்ப்பாட்டங் களிலும் தீவிரமாகப் பங்கேற்றார். அக்காலத்தில் லங்கா சமசமாஜக் கட்சி ஆதரவாளர்களே மாணவர் பேரவைகளில் செல்வாக்கு செலுத்தி வந்தனர். 1962-ஆம் ஆண்டு, பேராதனைப் பல்க லைக்கழகத்தின் அருணாசலம் மண்டப மாணவர் சங்கத் தலைவராக அனுர குணசேகரவும், உப தலைவராக எஸ்.எச்.எம். ஜெமீலும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். பல்கலைக்கழகக் கலை மண்டபத்தில் வாரந்தோறும் நடைபெற்ற அரசியல் தலைவர்களின் சொற்பொழிவுகள் இவரது அரசியல் அறிவை மெருகேற்றின. குறிப்பாக, என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, லெஸ்லி குணவர்தன, விவியன் குணவர்தன, பிலிப் குணவர்தன, பீட்டர் கெனமன், எஸ்.ஏ. விக்கிரம சிங்க, டட்லி சேனநாயக்கா மற்றும் அமிர்தலிங்கம் போன்ற மூத்த அரசியல் தலைவர்களின் உரைகளைக் கேட்டறிந்தமை இவரது ஆளுமை வளர்ச்சிக்கு முக்கிய அடித்தளமாக அமைந்தது.

1966-ஆம் ஆண்டு சாய்ந்தமருதூரில் புகழ்பெற்ற மருத்துவர் ஏ.பி.எம். இப்றாஹீம் அவர்களின் புதல்வி சித்தி ஆரிபா அவர்களை ஜெமீல் மணம் புரிந்தார். இத்தம்பதியினருக்கு முஹம்மது நஸீல் என்ற மகன் உள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் (M.A.) பட்டத்தைப் பெற்ற ஜெமீல் அவர்கள், 1990-ஆம் ஆண்டு முஸ்லிம் சமயப் பண்பாட்டலு

அவர் மறைந்த பின்னரும் அந்த ஆவணப்பணிப் பாரிய இடைவெளி இன்னும் நிரப்பப்படாமல் இருப்பது, ஈழத்து இலக்கிய உலகிற்கு ஒரு கசப்பான உண்மையாகும்.

வல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து, இவரது வழிகாட்டலில் அமைச்சின் செயற்பாடுகள் புதிய உத்வேகம் பெற்றன. வட மாகாண அகதிகளுக்கான நிவாரணப் பணிகள், தேசிய மீலாத் விழாக்கள், மாவட்ட வரலாற்று நூல்கள் வெளியீடு மற்றும் 'வாழ்வோரை வாழ்த்துவோம்' போன்ற கலை, இலக்கியத் திட்டங்களை முன்னெடுத்ததுடன், பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரிகள் மற்றும் அஹதியாப் பாடசாலைகளின் மேம்பாட்டிற்காகவும் பாரிய பங்களிப்புகளைச் செய்தார். இத்தகைய ஆக்கபூர்வமான பணிகளில் பேராசிரியர் எம்.எம். உவைஸ், எஸ்.ஏம். கமால்தீன் உள்ளிட்ட பல அறிஞர்கள் இவருக்குப் பெருந்துணையாக விளங்கினர்.

சர்வதேசப் பங்களிப்புகளும் உத்தியோகபூர்வ விஜயங்களும்:

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வித்துறை சார்ந்த உயர் பொறுப்புகளில் இருந்தபோது, பல நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டு இலங்கைக்குப் பெருமை சேர்த்தார். 1991 முதல் 2002 வரையிலான காலப்பகுதிகளில் பலமுறை சவூதி அரேபியாவிற்கு விஜயம் செய்த இவர், 2001-ஆம் ஆண்டு ரியாதில் உள்ள இலங்கை சர்வதேசப் பாடசாலையின் அதிபராகப் பணியாற்றித் தனது கல்விப்புலமையை வெளிப்படுத்தினார். 1995-இல் துபாயில் நடைபெற்ற 'அரபு மொழி அச்சுக்கலை மற்றும் நூல் விபரப்பட்டியல்' தொடர்பான சர்வதேச மாநாட்டில் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தமை இவரது ஆவணத்துறை சார்ந்த ஆளுமைக்குச் சான்றாகும்.மேலும், இந்தியா (திருச்சி, புதுடில்லி, தமிழ்நாடு, கர்நாடகம்), பஹ்ரைன், லிபியா, மாலைதீவு, பங்களாதேஷ், மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரச தூதுக்குழுக்களின் பிரதிநிதியாகவும், சர்வதேச மாநாடுகளின் சிறப்பதிதியாகவும் சென்று வந்துள்ளார். குறிப்பாக, 2000-ஆம் ஆண்டு அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான சர்வதேசச் செயலமர்விலும், 2010-இல் புதுடில்லியில் நடைபெற்ற 'இலங்கை சமாதான முயற்சிகள்' குறித்த மாநாட்டிலும் பங்கேற்றுத் தனது அரசியல் மற்றும் சமூக முதிர்ச்சியைப் பதிவு செய்தார். இத்தகைய சர்வதேசத் தொடர்புகள், அவர் வெறும் உள்நாட்டு அறிஞராக மாத்திரமன்றி, உலகளாவிய ரீதியில் மதிக்கப்படும் ஒரு ஆளுமையாகத் திகழ்ந்ததைக் காட்டுகின்றன.

அரச உயர் பதவிகளும் தேசியப் பங்களிப்பும்:

தனது இலக்கியப் பணிகளுக்காக அரச சாஹித்திய விருது உள்ளிட்ட நூற்றுக்கணக்கான விருதுகளைப் பெற்ற ஜெமீல் அவர்கள், இலங்கையின் பல அரச உயர் நிறுவனங்களில் கொள்கை வகுப்பு மற்றும் ஆலோசனைச் சபைகளில் முக்கிய பங்காற்றியுள்ளார். 1965-இல் 'கைத்தொழில் வளர்ச்சி ஆய்வுக்குழு' உறுப்பினராகத் தனது பங்களிப்பைத் தொடங்கிய அவர், பின்னாளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (1981) மற்றும் இலங்கை ரூபவாஹினி (1992) ஆகியவற்றின் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கான ஆலோசனைச் சபை உறுப்பினராகச் சிறப்பாகச் செயல்பட்டார். மேலும், கல்வி அமைச்சின் இஸ்லாமிய சமயக் கல்வி ஆலோசனைச் சபை, தேசிய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் அதிகாரப் பரவலாக்கல் சபை ஆகியவற்றில் இடம்பெற்றதோடு, 1999-இல் அரச ஆசியக் கழகத்தின் (Royal Asiatic Society) இலங்கைக் கிளையின் ஆயுட்கால உறுப்பினராகவும் இணைக்கப்பட்டார். இத்தகைய பொறுப்புகள், கலை மற்றும் ஊடகத்துறையில் அவரது ஆளுமைக்குக் கிடைத்த தேசிய அங்கீகாரங்களாகக் கருதப்படுகின்றன.

முடிவுரை:

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் கல்வி, இலக்கியம் மற்றும் நிர்வாகச் சேவை ஆகிய துறைகளின் ஊடாகத் தனது முத்திரையைப் பதித்ததோடு, இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டு மற்றும் சமயக் கலாசார விழுமியங்களை ஆவணப்படுத்தி வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர். சமூக மேம்பாட்டிற்காக உழைத்த அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் வாழ்வையும் பணியையும் எவ்விதக் குறைபாடுகளுமின்றி வரலாற்று நூல்களாகப் பதிவு செய்த பெருமை இவருக்குண்டு. சமூக நல்லிணக்கத்திற்காக அவர்கள் ஆற்றிய தொண்டுகளைத் துல்லியமாக ஆவணப்படுத்தியதன் மூலம், ஒரு தலைசிறந்த கல்விமானாக அவர் மிளிர்கிறார். இஸ்லாமியப் பண்பாட்டிற்கும் சமூக எழுச்சிக்கும் பங்காற்றிய வரலாற்று நாயகர்களை இன்றைய இளைய தலைமுறையினர் மீளாய்வு செய்வதற்கு ஒரு பெரும் உந்துசக்தியாக ஜெமீல் அவர்களின் படைப்புகள் திகழ்கின்றன. இவரது பங்களிப்பு அளப்பரியது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மூத்த கவிஞர் வைத்திய கலாநிதி தாஸிம் அகமது அவர்கள், 'சுவடி ஆற்றுப்படை' ஐந்தாம் பாகத்தின் பின்னட்டையில் குறிப்பிடுவது போல, 'அவர் விட்டுச் சென்ற இடைவெளி ஏக்கத்துடன் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறது. நாளை வருவார் ஒருவர் எனும் அவர் கொண்டிருந்த நம்பிக்கை நிறைவேறுமா?' என்ற வினா இன்றும் அர்த்தமுள்ளதாகவே இருக்கின்றது. அவர் மறைந்த பின்னரும் அந்த ஆவணப்பணிப் பாரிய இடைவெளி இன்னும் நிரப்பப்படாமல் இருப்பது, ஈழத்து இலக்கிய உலகிற்கு ஒரு கசப்பான உண்மையாகும்.



Iqbal.ali@thaiveedu.com



இலங்கையின் முதலாவது இராணுவத் தளபதி அன்ரன் முத்துக்குமாரு

- வே. விவேகானந்தன்

இலங்கையில் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட, டாக்டர் பிலிப் மரியன் முத்துக்குமாரு, கொழும்பு நகரைப் பூர்வீகமாகக் கொண்ட மேரி மவுன்ட் கார்மெல் அலிஸ் இணையருக்கு மகனாக, அன்ரன் முத்துக்குமாரு 1908-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் திகதி பிறந்தார். அன்ரன் முத்துக்குமாரு பத்து வயதுச் சிறுவனாக இருந்த பொழுதே, 1918-ஆம் ஆண்டு தந்தையார் காலமானார். தாயார், முத்துக்குமாரு உட்பட தனது பிள்ளைகளுடன் கொழும்பில் குடியேறினார். தந்தையை இழந்த பிள்ளைகளைத் தயார். அன்புடன் அரவணைத்து, கல்வியறிவு மிக்கவர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும், ரோமன் கத்தோலிக்க மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களாகவும் வளர்த்தார்.

ஆரம்பத்தில் வீட்டிலேயே கல்வியைக் கற்கத் தொடங்கிய அன்ரன் முத்துக்குமாரு, கொழும்பு சென். ஜோசெப் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்து, உயர் கல்வியை நிறைவு செய்து, இலங்கைப் பல்கலைக்கழகத்துக்குப் பிரவேசித்தார். அங்கு டப்படிப்பை நிறைவு செய்த அவர், மேற்படிப்பைத் தொடர்வதற்காக, 1928-ஆம் ஆண்டு, ஒக்ஸ்வேட் ஜீசஸ் கல்லூரியில் (Oxford Jesus College) இணைந்து கொண்டார். அங்கு, தத்துவம், அரசியல், பொருளாதாரம் ஆகிய பாடங்களைக் கற்றுப் பட்டதாரியானார். அதன் பின்னர் சட்டக் கல்வியில் ஆர்வம் கொண்ட அவர், இலண்டன் வேல்ஸ் பகுதிகளில், சட்டத்தரணியாகப் பணியாற்றப் பயிற்சி அளிக்கும், கரீஸ் இன் (Gray's Inn) என்னும் சட்டக் கல்லூரியில் சேர்ந்து, சட்டத் துறையிலும் தேர்ச்சி பெற்றார். 1934 -ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய அவர், இலங்கை உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து, சட்டத்தரணியாகப் பணியாற்றத் தொடங்கினார். அதேவேளை இலங்கை பாதுகாப்புப் படையில் பணியாற்ற விரும்பி, பகுதிநேர ஒதுக்கப்பட்ட படைப்பிரிவில் (Part-time reserve force) தன்னை இணைத்துக் கொண்டார்.

இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்படவே, பிரித்தானிய அரசு இலங்கையைப் பாதுகாக்க, ஒதுக்கப்பட்ட படைப்பிரிவில் பதிந்தவர்களைப் பாதுகாப்புப் படைப்பிரிவில் சேர்த்துக் கொண்டது. அன்ரன் முத்துக்குமாரு, 1937-ஆம் ஆண்டு 11-ஆம் திகதி இலங்கைப் பாதுகாப்புப் படையில் தொண்டராகப் பணியாற்றத் தொடங்கினார். 1939-ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்ததும் Ceylon light infantry பிரிவில் இரண்டாம் நிலை அதிகாரியாக (Second Lieutenant) பதவி வழங்கப்பட்டு, கண்டியில் செயற்பட்டு வந்த, தென்கிழக்காசிய பிராந்தியத்தின் தலைமைக் காரியாலயத்தில்

நியமனம் பெற்றார். இக்காரியாலயம் அட்மிரல் லூயிஸ் மவுண்ட்பேட்டன் பிரபுவின் தலைமையில் செயற்பட்டது. (Admiral Lord Louis Mountbatten) போர் உக்கிரமடையவே இலங்கையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அன்ரன் முத்துக்குமாரு தீவிரப்படுத்தினார். அவரது நிர்வாகத் திறமையினால் 1940-ஆம் ஆண்டு கப்டன் (Captain) ஆகவும், 1942-ஆம் ஆண்டு மேஜராகவும் (Major) பதவி உயர்வு பெற்றார்.

1942-ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம், சிங்கப்பூர் யப்பானியப் படைகளிடம் வீழ்ச்சியடைந்த பின்னர், அதே ஆண்டு ஏப்பிரல் மாதம் 5-ஆம், 9-ஆம் திகதிகளில் ஜப்பானியப் படைகள், கொழும்பு, திருகோணமலைத் துறைமுகங்கள் மீது, வான் வெளித் தாக்குதல்களை மூர்க்கத்தனமாக மேற்கொண்டன. அன்ரன் முத்துக்குமாருவின் பாதுகாப்பு நடவடிக்கைகளினால், பாரிய சேதம் தவிர்க்கப்பட்டது. அதேவேளை, இலங்கை உள்நாட்டினதும், கரையோரப் பகுதிகளினதும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, 5000 தொண்டர்களை இணைத்து, பயிற்சியளித்து, பாதுகாப்புப் படையை விரிவுபடுத்தினார். இவரது மேற்பார்வையில் செயற்பட்ட பாதுகாப்பு படைப் பிரிவு நேரடியாகப் போரில் ஈடுபடாமல், தரை, வான்வெளிப் பாதுகாப்புப் பணிகளிலேயே கவனம் செலுத்தியது. 1943-ஆம் ஆண்டு கட்டளையிடும் அதிகாரியாகப், (Lieutenant Colonel) பதவி உயர்வு பெற்றார். 1945-ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்ததும், பிரித்தானிய அரசு படைக்குறைப்பை மேற்கொண்டது. அன்ரன் முத்துக்குமாரு அவர்கள் சிலகாலம், சட்டமா அதிபரைப் (Attorney General) பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணியாகப் பணியாற்றிய பின்னர், மீண்டும் இலங்கைப் பாதுகாப்புப் படையின் தலைமைக் காரியாலயத்தில், நிர்வாகத்துக்குப் பொறுப்பான அதிகாரியாக நியமனம் பெற்றார். அங்கு இலங்கை இராணுவப் படைக் கட்டமைப்புக்கான ஆரம்ப முயற்சிகளில், பிரித்தானிய படைத் தளபதிக்குப் பக்கபலமாக இருந்தார். 1946-ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வெற்றிப் பேரணியில், (Victory Parade) இலங்கைப் படை வீரர்களுடன் கலந்து கொண்ட இவர், 1952-ஆம் ஆண்டு ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மரணச் சடங்கிலும், மகாராணியின் முடிசூட்டு விழாவிலும் கலந்து கொண்டார். பின்னர், இலண்டன் Imperial Defence College-இல் மேலதிக இராணுவப் பயிற்சியை மேற்கொண்டு இலங்கை திரும்பினார்.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில், 1861-ஆம் ஆண்டு தொண்டர் அமைப்பாக இராணுவப் படை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், 1949-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 11-ஆம் திகதி கூட்டப்பட்ட பாராளுமன்றத்தில், நிறைவேற்றப்பட்ட 17-ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், சுதந்திர இலங்கைக்கான தனியான இராணுவப்படை உருவாக்கப்பட்டது. 10028 இலக்க விசேட வர்த்தமானி மூலம் இச்செய்தி வெளியிடப்பட்டது. அப்போது ஆரம்பிக்கப்பட்ட, இலங்கை பாதுகாப்பு மற்றும், வெளிவிவகார அமைச்சின், முதலாவது நிரந்தர செயலாளராக சேர் கந்தையா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார்.

அப்போதைய இராணுவத் தளபதி பிரித்தானியாவைச் சேர்ந்த பிரிகேடியர் ரொட்றிக் சிங்கிளையர் (Roderick Sinclair) தலைமையின் கீழ் 1st Battalion Ceylon Light Infantry, Ceylon Artillery Regiment, Ceylon Engineers, Ceylon Signals, Ceylon Service Corps, Ceylon Ordnance Corps, Ceylon Electrical and Mechanical Engineers, Ceylon Corps of Military Police, and Ceylon Army Medical Corps, ஆகிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இவர் காலனித்துவ இலங்கையில் இருந்து, சுதந்திர இலங்கைக்கான இராணுவக் கட்டமைப்பினை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றினார். இவருடன் இணைந்து அன்ரன் முத்துக்குமாரு அவர்களும் பணியாற்றினார். இவர் ஓய்வு பெற்றதும் பிரித்தானியாவைச் சேர்ந்த பிரிகேடியர் எப்.ஜே. ரெய்ட் (F.J. Reid) பதவியேற்றார். இலங்கை இராணுவப் படையை மேலும் சிறந்த முறையில் ஒழுங்கமைத்த இவர் 1955-ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் ஓய்வு பெற்றதும், சிரேஸ்ட நிலையில் இருந்த அன்ரன் முத்துக்குமாரு அவர்கள், மேஜர் ஜெனரல் தரத்துக்கு உயர்த்தப்பட்டு இராணுவத் தளபதியாக நியமனம் பெற்றார். இலங்கை இராணுவத்தின் முதலாவது உள்நாட்டுத் தளபதியாக (1955 - 1959) நியமிக்கப்பட்டவர் என்ற வரலாற்றுப் பெருமை, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழரான மேஜர் ஜெனரல் அன்டன் முத்துக்குமாரு அவர்களையே சாரும்.

மேஜர் ஜெனரல் அன்டன் முத்துக்குமாரு, தனது பதவிக்காலத்தில் இலங்கை இராணுவப் பிரிவுகளைக் கட்டமைப்பதிலும், அவற்றை ஒருங்கிணைப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டினார். குறிப்பாக, நாட்டின் தொண்டர் படையினை மேலும் வலுப்படுத்திய அவர், முறையான களப் பயிற்சிகள் மற்றும் போதனைகள் மூலம் நிரந்தரப் படைக்கும் தொண்டர் படைக்கும் இடையே சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்தி, இராணுவத்தைப் பலமிக்க அமைப்பாக மாற்றினார். அத்துடன், இராணுவமானது உயர்தொழில் தன்மையும், மக்கள் மத்தியில் நன்மதிப்பும் கொண்ட ஒரு நிறுவனமாக விளங்கும் வகையில், காத்திரமான நிர்வாகச் சீர்திருத்தங்களையும் அவர் மேற்கொண்டார். இராணுவக் கட்டமைப்பினை மேலும் சிறந்த முறையில் மேம்படுத்த 1955-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இலண்டன் Imperial Defence College-இல் பயிற்சியை மேற்கொண்டார். இவர் வெளிநாடுகளுக்குச் செல்லும் போதும், விடுமுறையில் செல்லும் போதும், பதில் தளபதியாக எச்.டபிள்யு.ஜி. விஜயக்கோன் பணியாற்றினார். இவரது பதவிக் காலத்தில் உள்நாட்டிலோ, அல்லது வெளிநாட்டில் இருந்தோ பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இலங்கைக்கு ஏற்படவில்லை. இராணுவத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வரும் இளையோருக்கு வாய்ப்பளிக்கும் முகமாக, தானாகவே விரும்பி, 1959-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் திகதி தனது 51-ஆவது வயதில், இராணுவ சேவையில் இருந்தும் ஓய்வு பெற்றார். இவர் இராணுவத் தளபதியாக, இறுதியாக ஆற்றிய கடமை, 1959-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25-ஆம் திகதி பௌத்த பிக்கு ஒருவரால் சுடப்பட்டு மறுநாள் மரணமடைந்த பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயகாவின் மரணச் சடங்காகும்.

ஓய்வு பெற்ற பின்பும் அவரை அரச சேவையில் ஈடுபடுத்த விரும்பிய அப்போதைய அரசு, பாகிஸ்தான், நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இலங்கையின் உயர் ஸ்தானிகராக நியமித்தது. 1963-ஆம் ஆண்டு முதல் 1966-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை அவுஸ்திரேலியாவில், உயர் ஸ்தானிகராகப் பதவி வகித்தார். 1966-ஆம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டு வரை எகிப்தில் இலங்கையின் தூதுவராகப் பணியாற்றி, அரச சேவையில் இருந்தும் நிரந்தரமாக ஓய்வு பெற்றார். பின்னர் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து தனது ஓய்வுகால வாழ்க்கையை வாழ்ந்தார். இராணுவப் பின்ன

ணியும், சட்டத்துறை அனுபவமும் கொண்ட அன்ரன் முத்துக் குமாரு, இலங்கைக்கான சர்வதேச விவகாரங்களையும் இராஜ தந்திரத்துடன் கையாண்டார்.

போர்க்காலத்தில் இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி, பிரித் தானிய அரசு Order of the British Empire என கௌரவம் அளித்தது. இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாப் பதக்கமும் வழங்கப்பட்டது. 1939 - 1945 போர்க்காலப் பணிக்காக, இலங்கை இராணுவ சேவை, இவருக்குப் பதக்கம் வழங்கிப் பெருமை கொண்டது. நீண்டகால இராணுவ சேவைக்கான பதக்கத்தினையும், இலங்கை இராணுவ சேவை யின் ஆரம்பத்திற்கான பதக்கத்தினையும் இவர் பெற்றி ருந்தார். இலங்கை இராணுவப் படையின் ஆரம்பகால கட்ட மைப்புக்கான பணிக்காகவும், இலங்கை இராணுவத்தின் ஆரம்பகால வரலாற்றை முதல் தடவையாக எழுதி வெளியிட் டமைக்காகவும், ஜெனரல், சேர் ஜோன் கொத்தலாவல டிபென்ஸ் அக்கடமி 1996-ஆம் ஆண்டு 'Honourable Doctor of Letters' என்னும் பட்டமளித்து சிறப்பித்தது.

அன்ரன் முத்துக்குமாரு தோட்டக்கலையில் ஈடுபாடும் (Horti-culture) இசையில் மிக்க ஆர்வமும் கொண்டவராக விளங் கினார். இவர் 'Ava Maria', 'Cor Jesu' ஆகிய பாடல்களை இசையமைத்து, ஒலிநாடாவில் பதிவு செய்து போப்பாண்டவ ருக்குக் கொடுத்ததாக இவரது வரலாற்றில் குறிப்பிடப்பட் டுள்ளது. கைத் தடிகளை (Walking sticks) சேகரிப்பதிலும் ஆர்வம் கொண்ட இவர், தனது வாழ்நாளில் ஏறக்குறைய 300 கைத்தடிகளைச் சேகரித்ததாகக் கூறப்படுகிறது.

இலங்கை இராணுவ சேவையை உருவாக்கிய பிதா மகன் களில், முன்னோடியான ஈழத்தமிழராகவும், திறமை மிக்க சட் டத்தரணியாகவும், மதிநுட்பம் நிறைந்த இராஜதந்திரியாகவும் விளங்கிய அன்ரன் முத்துக்குமாரு 2001-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ஆறாம் திகதி, அவுஸ்திரேலியாவில் அமரத் துவம் அடைந்தார். இலங்கை இராணுவ வரலாற்றில் அவரது நாமம் என்றும் நிலைபெற்றிருக்கும் என்பது நம் அனைவ ருக்கும் பெருமையே. திறமைக்கு முக்கியத்துவம் அளித்த பிரித்தானிய நிர்வாகத்தின் கீழ் ஈழத்தமிழர்கள் உயர் பதவி களை வகித்து தமிழ் இனத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்த்தனர். இனவாதமும் மதவாதமும் குடிகொண்ட பின்னர் சர்வதேச ரீதியில், இலங்கை தனது தனித்துவத்தை இழந்து போனமை துரதிஸ்டமே.



vivekananthan.v@thaiveedu.com

ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

இணையவழிக் கலந்துரையாடல்



நாள் : 17 ஏப்ரல் வெள்ளிக்கிழமை 2026

நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)

நாள் : 18 ஏப்ரல் சனிக்கிழமை 2026

நேரம் : காலை 12:00 - 2:00 மணி (இலண்டன்)
காலை 5:30 - 7:30 மணி (இலங்கை, இந்திய)
காலை 11:00 - 1:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)

"முன்வரலாற்றுக் கால தமிழகம் ; இடம் - மனிதர்கள் - மொழி.
அண்மைக் கால உரையாடல்கள்."

உரை நிகழ்த்துபவர்: பேராசிரியர் வீ. அரசு

Zoom ID: 84777257162 Passcode: 554268

பழனிநாதன் நிவேதனன்

பிடல் காஸ்ரோ-சேகுவேரா: புரட்சியின் இரு முகங்கள்

இருபதாம் நூற்றாண்டு உலக வரலாற்றின் திசைவழியையே மாற்றியமைத்த உன்னதமான மக்கள் எழுச்சி - கியூபா புரட்சி. 1953 முதல் 1959 வரை நீடித்த இந்தப் புரட்சி கரப் போராட்டம், அமெரிக்காவின் கைப்பொம்மையாகச் செயற் பட்ட சர்வாதிகாரி புல்ஜென்சியோ பாடிஸ்டாவின் அடக்குமுறை ஆட்சியை வேரறுத்தது. கியூபாவின் எளிய மக்கள் தங்களின் இறையாண்மை, சமத்துவம் மற்றும் சமூக நீதியை மீட்டெடுப் பதற்காக முன்னெடுத்த இந்தப் போர், புதிய சோசலிச அரசாங் கத்தை நிறுவியதுடன், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலக ளாவிய குறியீடாகவும் மாறியது.

பிடல் காஸ்ட்ரோ: புரட்சியின் முகமும் நவீன கியூபாவின் உருவாக்கமும்:

பிடல் காஸ்ட்ரோ 1926-ஆம் ஆண்டு ஓகஸ்ட் 13-இல் கியூபா வின் பிரான் (Birán) நகரில் பிறந்தார். வசதியான விவசாயப் பின்னணியைக் கொண்ட ஏஞ்சல் காஸ்ட்ரோ மற்றும் லினா ருஸ் இணையரின் மகனான இவர், ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். பல்கலைக்கழகக் காலத்திலேயே தீவிர அரசி யலில் ஈர்க்கப்பட்ட காஸ்ட்ரோ, சமூக நீதிக்கான மாணவர் இயக்கங்களில் முன்னின்று செயற்பட்டார்.

1959-ஆம் ஆண்டு கியூபப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து, பிடல் காஸ்ட்ரோ அந்நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்ற அவர் 1976-இல் ஜனாதிபதி (President of the Council of State) ஆனார். 2008 வரை ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் (1959 - 2008) கியூபாவை வழிநடத்திய அவர், இலத்தீன் அமெரிக்க அரசியலில் ஒரு தவிர்க்க முடியாத ஆளுமையாகப் பரிணமித் தார். தீவிரமான சோசலிசக் கொள்கைகளைத் தனது ஆட்சி யின் அடிப்படையாகக் கொண்ட காஸ்ட்ரோ, அமெரிக் காவின் அரசியல் மற்றும் பொருளாதார மேலாதிக் கத்தை முற்றிலுமாக நிராகரித்து, கியூபாவிற் கெனத் தனித்துவமான பாதையை வகுத்தார். அவரது நீண்டகால ஆட்சி, நவீன உலக வர லாற்றில் எண்ணற்ற சாதனைகள் மற்றும் கடுமையான விமர்சனங்கள் நிறைந்த விவா தப் பொருளாகவே இன்றும் நீடிக்கிறது.

“தீவிரமான சோசலிசக் கொள்கைகளைத் தனது ஆட்சியின் அடிப்படையாகக் கொண்ட காஸ்ட்ரோ, அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார மேலாதிக்கத்தை முற்றிலுமாக நிராகரித்து, கியூபாவிற்கெனத் தனித்துவமான பாதையை வகுத்தார்.”

சமூக நீதி மற்றும் சோசலிசக் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் காஸ்ட்ரோவின் பங்க ளிப்பு குறிப்பிடத்தக்கது. கியூபாவில் ஒரு வலிமையான சோசலிசக் குடியரசை நிறுவி, அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மையப்படுத்திய திட்டங்களை அவர் முன்னெ டுத்தார். குறிப்பாக, கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் அவர் நிகழ்த்திய புரட்சி உலகத் தரம் வாய்ந்தது. இலவசக் கல்வி மற்றும் மேம் பட்ட மருத்துவக் கட்டமைப்பின் விளைவாக, கியூபாவின் எழுத்தறிவு விகிதமும் சராசரி ஆயுட்காலமும் வளர்ந்த நாடுகளுக்கு இணை யான நிலையை எட்டின. மேலும், அமெரிக்கா வின் கடும் பொருளாதாரத் தடைகளையும் அரசியல் அழுத்தங்களையும் துணிச்சலு டன் எதிர்கொண்டு, கியூபாவின் இறையாண் மையைப் பாதுகாத்ததோடு, லத்தீன்



tg.theeban@gmail.com



அமெரிக்கா மற்றும் ஆபிரிக்காவின் விடுதலைப் போராட்டங் களுக்குத் தார்மீக மற்றும் ராணுவ ரீதியான ஆதரவை வழங் கினார்.

அதேவேளையில், காஸ்ட்ரோவின் ஆட்சிமுறை கடுமையான விமர்சனங்களுக்கும் உள்ளானது. பல தசாப்தங்களாகத் தொடர்ந்த அவரது ஒரு கட்சி ஆட்சி (Single-party rule), ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரானது என்றும், மிதமிஞ்சிய தனிநபர் அதிகாரக் குவிப்பிற்கு வழிவகுத்தது என்றும் அரசி யல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. அரசியல் எதிர்ப்பாளர்களை ஒடுக்கியமை மற்றும் பேச்சுரிமை மீதான கடும் கட்டுப்பாடுகள் காரணமாக சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கண்டனங்களுக்கு அவர் ஆளானார்.

பொருளாதார ரீதியாக, அமெரிக்காவின் நீண்டகாலப் பொரு ளாதாரத் தடை ஒருபுறமிருக்க, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச் சிக்குப் பிந்தைய மேலாண்மைத் தவறுகளால் கியூபா கடுமை யான சீர்குலைவைச் சந்தித்தது. அமெரிக்காவுடனான உறவு களைத் துண்டித்தமை கியூபாவை சர்வதேச அளவில் தனி மைப்படுத்தியதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதித்த ஒரு எதிர்மறையான காரணியாகவும் பார்க்கப்படு கிறது. இவ்வாறு, ஒரு புரட்சியாளராகவும், ஆட்சியாளராகவும் பிடல் காஸ்ட்ரோவின் வாழ்வு பெரும் சாதனைகளுக்கும் சவால்களுக்கும் இடையிலான ஒரு வரலாற்றுச் சமநிலை யாகவே அமைகிறது - இலத்தீன் அமெரிக்காவில் சோசலிச இயக்கங்களுக்கு ஆதரவளித்தார்.

கியூபப் புரட்சியின் வரலாற்றில் பிடல் காஸ்ட்ரோ மற்றும் சே குவேரா ஆகியோருக்கிடையிலான உறவு மிக முக்கியமா னது. 1955-ஆம் ஆண்டு மெக்சிகோ நகரில் நிகழ்ந்த இவர் களின் சந்திப்பு, இலத்தீன் அமெரிக்காவின் அரசியல் போக் கையே மாற்றியமைத்தது. காஸ்ட்ரோவின் அரசியல் தீர்க்கத ரிசனமும், சே குவேராவின் சமரசமற்ற மார்க்சியக் கோட்பாடு களும் இணைந்து கியூபாவின் ஆயுதப் போராட்டத்தை வழி நடத்தின.

புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, காஸ்ட்ரோவின் அமைச்சரவை யில் சே குவேரா முக்கிய பொறுப்புகளை வகித்தபோதிலும், அதிகாரத்தை விடவும் உலகளாவிய புரட்சியே அவரது இலக் காக இருந்தது. 1965-இல் கியூபாவை விட்டு வெளியேறி மற்ற நாடுகளில் புரட்சியை முன்னெடுக்க சே குவேரா முடி வெடுத்தபோது, காஸ்ட்ரோ அவருக்கு முழு ஆதரவை வழங் கினார். சே குவேராவின் மறைவிற்குப் பிறகு, அவரை ஒரு 'நித்திய தியாகியாக' (Eternal Martyr) கியூப மக்களிடையே நிலைநிறுத்தியதில் காஸ்ட்ரோவின் பங்களிப்பு அளப்பரியது. இவர்களின் நட்பு, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட் டத்தின் உலகளாவிய அடையாளமாக இன்றும் போற்றப்படு கிறது.

சே குவேரா: இலத்தீன் அமெரிக்காவின் புரட்சிகர அடையாளம்:

கியூபப் புரட்சியின் வழியாக உலகப்புகழ் பெற்ற எர்னஸ்டோ 'சே' குவேரா, ஒரு மருத்துவர், மார்க்சியச் சிந்தனையாளர், ராஜதந்திரி மற்றும் கொரில்லாப் போர்முறை விற்பன்னர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்த அவர், இருப தாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த புரட்சிகர அடையாளமாக இன்றும் போற்றப்படுகிறார்.

எர்னஸ்டோ குவேரா டி லா செர்னா, 1928-ஆம் ஆண்டு ஜூன் 14 அன்று அர்ஜென்டினாவின் ரொசாரியோவில் பிறந்தார். வழக்கறிஞரான எர்னஸ்டோ குவேரா லின்க்ஸ் மற்றும் சிலியா டி லா செர்னா இணையரின் ஐந்து குழந்தைகளில் மூத்தவ ரான இவர், தொடக்கத்திலிருந்தே மனிதாபிமானச் சிந்தனை கொண்டவராக வளர்ந்தார். 1946-இல் பியூனஸ் அயர்ஸ் பல் கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்பைத் தொடங்கிய குவேரா, 1953-இல் தனது மருத்துவப் பட்டத்தைப் பெற்றார். இக்கால

> ***"1955-ஆம் ஆண்டு மெக்சிகோ நகரில் பிடல் காஸ்ட்ரோ மற்றும் சே குவேரா ஆகியோருக்கிடையிலான சந்திப்பு, இலத்தீன் அமெரிக்காவின் அரசியல் போக்கையே மாற்றியமைத்தது. காஸ்ட்ரோவின் அரசியல் தீர்க்கதரிசனமும், சே குவேராவின் சமரசமற்ற மார்க்சியக் கோட்பாடுகளும் இணைந்து கியூபாவின் ஆயுதப் போராட்டத்தை வழிநடத்தின."***

கட்டத்தில் அவர் மேற்கொண்ட மோட்டார் சைக்கிள் பயணங்களே, இலத்தீன் அமெரிக்காவின் வறுமையையும் சுரண்டலையும் அவர் நேரில் காணவும், ஒரு புரட்சியாளராக உருவெடுக்கவும் காரணமாக அமைந்தன.

1953-இல் மெக்சிகோவில் தங்கியிருந்தபோது பிடல் காஸ்ட்ரோவைச் சந்தித்தது குவேராவின் வாழ்வில் பெரும் திருப்பு முனையாக அமைந்தது. பாடிஸ்டாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகக் காஸ்ட்ரோ முன்னெடுத்த கியூபப் புரட்சியில் (1953 - 1959) தன்னை இணைத்துக்கொண்டார். 1956-இல் 'கிரான்மா' (Granma) படகு மூலம் கியூபாவின் 'சியெரா மேஸ்ட்ரா' (Sierra Maestra) மலைப்பகுதியை அடைந்த அவர், ஒரு மருத்துவராகவும் அதே சமயம் ஒரு வீரம்மிக்க தளபதியாகவும் போர்க்களத்தில் செயற்பட்டார். 'சாண்டா கிளாரா' (Santa Clara) போரின் வெற்றியில் இவரது வியூகங்கள் மிக முக்கியமானவை; இதுவே புரட்சியின் வெற்றிக்கும் பாடிஸ்டாவின் வீழ்ச்சிக்கும் வழிவகுத்தது.

புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, 1959-இல் கியூபாவின் புதிய அரசாங்கத்தில் தொழில்துறை அமைச்சராகவும், தேசிய வங்கியின் தலைவராகவும் காஸ்ட்ரோவினால் நியமிக்கப்பட்டார். கியூபாவின் பொருளாதாரத்தைச் சீரமைக்கவும், சோசலிசக் கட்டமைப்பை வலுப்படுத்தவும் பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு ராஜதந்திர உறவுகளை மேம்படுத்தினார். இருப்பினும், ஒரு குறிப்பிட்ட தேசத்தின் அதிகாரத்திற்குள் முடங்கிவிட விரும்பாத அவர், உலகளாவிய புரட்சியை முன்னெடுக்கும் நோக்கில் கொங்கோ மற்றும் போலிவியா போன்ற நாடுகளுக்குச் சென்றார். 1966-இல் போலிவியாவில் புரட்சிகரப் போராட்டத்தைத் தொடங்கிய அவர், 1967-இல் போலிவிய ராணுவத்தால் பிடிபடும் வரை சமரசமற்ற போராட்டத்தைத் தொடர்ந்தார். குவேராவின் புகைப்படம் ஒரு புரட்சியாளரின் அடையாளமாக கருதப்படுகிறது. அவரது புகைப்படம் உலகம் முழுவதும் பிரபலமானது. தற்காலத்தில் இளைஞர்களின் ரீ சேட்டுகளிலும் வாகனங்களிலும் இவரை அதிகம் காணலாம். குவேரா கியூபாவின் தேசிய வீரராகக் கருதப்படுகிறார். அவரது பிறந்த நாள் கியூபாவில் தேசிய விடுமுறை நாளாகக் கொண்டாடப்படுகிறது.

ஒரு தேர்ந்த மருத்துவராகவும், சமரசமற்ற கொரில்லாப் போர் வீரராகவும் உலகத்தினால் அறியப்பட்ட சே குவேரா, அடிப்படையில் ஒரு மிகச்சிறந்த எழுத்தாளராகவும் (Prolific Writer) திகழ்ந்தார். அவர் தனது போர்க்கள அனுபவங்களையும், சமூக மாற்றத்திற்கான தத்துவார்த்தச் சிந்தனைகளையும் காலத்தால் அழியாத பல நூல்களாகப் பதிவு செய்துள்ளார். அவரது இளமைக்கால இலத்தீன் அமெரிக்கப் பயணங்களையும், அங்கு அவர் கண்ட வறுமையால் ஏற்பட்ட மனமாற்றத்தையும் 'மோட்டார் சைக்கிள் டைரிஸ்' (The Motorcycle Diaries) எனும் காவிய நூல் உயிர்ப்புடன் விவரிக்கிறது. கியூப விடுதலைப் போரின் நேரடிச் சாட்சியமாக 'கியூபா புரட்சிகரப் போரின் நினைவுகள்' (Reminiscences of the Cuban Revolutionary War) அமையும் அதேவேளையில், அவர் எழுதிய 'கொரில்லாப் போர்' (Guerrilla Warfare) எனும் நூல், உலகெங்கிலும் உள்ள விடுதலைப் போராட்டங்களுக்கு இன்றும் வழிகாட்டும் ஒரு முக்கிய இராணுவக் கையேடாகக் கருதப்படுகிறது. இறுதியாக, மரணத்தின் விளிம்பில் நின்றுகொண்டு போலிவியக் காடுகளில் அவர் எழுதிய 'போலிவியா நாட்குறிப்பு' (The Bolivian Diary), ஒரு புரட்சியாளனின் இறுதிப் போராட்டத்தையும் அவர்தம் மனவுறுதியையும் பறைசாற்றும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

> ***"பிடல் காஸ்ட்ரோ மற்றும் சே குவேரா ஆகிய இருபெரும் ஆளுமைகளும் வெவ்வேறு சமூகப் பின்னணியில் இருந்து வந்தவர்கள் என்றாலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் மார்க்சிய சித்தாந்தம் எனும் புள்ளியில் கரம் கோர்த்தனர்."***

1967-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், போலிவியாவின் அடர்ந்த காடுகளில் போராடிக்கொண்டிருந்தபோது, சி.ஐ.ஏ (CIA) ஆதரவுடன் போலிவிய இராணுவத்தால் குவேரா கைது செய்யப்பட்டார். ஒக்ரோபர் 9 அன்று அவர் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மறைவு உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதுடன், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கடும் கண்டனங்களைத் தூண்டியது. ஒரு மனிதராகச் சே குவேரா கொல்லப்பட்டிருக்கலாம், ஆனால் ஒரு புரட்சியாளராக அவர் விதைத்த சிந்தனைகள் பல நாடுகளில் விடுதலைக் கனவுகளைத் தூண்டின. இன்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்கும், சமூக அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கும் இளைஞர்களுக்கும் சே குவேரா ஒரு காலமற்ற ஊக்கசக்தியாகத் திகழ்கிறார்.

பிடல் காஸ்ட்ரோ மற்றும் சே குவேரா ஆகிய இருபெரும் ஆளுமைகளும் வெவ்வேறு சமூகப் பின்னணியில் இருந்து வந்தவர்கள் என்றாலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் மார்க்சிய சித்தாந்தம் எனும் புள்ளியில் கரம் கோர்த்தனர். அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார மேலாதிக்கத்தை வேரறுத்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமத்துவச் சமூகத்தைப் படைப்பதே இருவரின் பொதுவான இலக்காக இருந்தது. பேச்சுவார்த்தைகளை விட ஆயுதமேந்திய கொரில்லாப் போர்முறையே சர்வாதிகாரத்தை வீழ்த்தும் என்று நம்பிய இவர்கள், தங்களின் உயர்குடி வாழ்வைத் துறந்து 'சியேரா மேஸ்த்ரா' மலைப்பகுதிகளில் தியாக உணர்வுடன் களமாடினர். இவர்களின் ஆழ்ந்த சித்தாந்தப் பிணைப்பும், பரஸ்பர மரியாதையுமே கியூபப் புரட்சியின் வெற்றிக்கான அஸ்திவாரமாக அமைந்தது.

புரட்சிக்குப் பிந்தைய காலகட்டத்தில், இவர்களுக்கிடையிலான அணுகுமுறைகளில் சுவாரஸ்யமான முரண்பாடுகள் தென்பட்டன. பிடல் காஸ்ட்ரோ ஒரு சிறந்த ராஜதந்திரி மற்றும் யதார்த்தவாதியாகத் திகழ்ந்தார்; ஒரு தேசத்தைக் கட்டமைப்பதிலும், சர்வதேச நெருக்கடிகளுக்கு மத்தியில் கியூபாவின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் அவர் கவனம் செலுத்தினார். மாறாக, சே குவேரா ஒரு சமரசமற்ற இலட்சிய

வாதியாகத் திகழ்ந்தார். அதிகாரப் பதவிகளைத் துறந்து, 'உலகப் புரட்சி' (World Revolution) எனும் கனவோடு எல் லைகளைக் கடந்து போராடுவதையே தனது இயல்பாகக் கொண்டிருந்தார். சோவியத் யூனியனுடனான உறவில் காஸ்ட்ரோ காட்டிய நிதானத்தை சே குவேரா ஏற்கவில்லை; வல்லரசுகளின் சுரண்டல் முறைகளை அவர் கடுமையாக விமர்சித்தார்.

பொருளாதாரக் கொள்கையில் காஸ்ட்ரோ 'பொருள்சார் நலன் களையும், சே குவேரா மக்களின் 'இலட்சியத்தையும்' முதன் மைப்படுத்தினார். இந்தத் தத்துவார்த்தத் தேடலே சே குவேராவைப் போலிவியக் காடுகளுக்கு இட்டுச் சென்றது. இறுதியில், பிடல் காஸ்ட்ரோ நவீன கியூபாவின் ஒப்பற்ற தலைவராகத் திகழ்ந்து முதுமையில் இயற்கை எய்தினார்; சே குவேரா தனது இலட்சியத்திற்காகப் போர்க்களத்தில் வீர மரணமடைந்து ஒரு சர்வதேசப் புரட்சிக் குறியீடாக மாறினார். இவர்களுக்குள் வழிமுறைகளில் வேறுபாடுகள் இருந்த போதும், சே குவேரா தனது இறுதிக் கடிதத்தில் 'உங்களை ஒரு தலைவராகப் பின்பற்றியதில் நான் பெருமைப்படு கிறேன்' என்று குறிப்பிட்டது போல, காஸ்ட்ரோவின் தலை மைத்துவத்தின் மீதான அவரது மதிப்பும் அவர்களின் சித் தாந்த நட்பும் ஒருபோதும் குன்றியதில்லை.

சே குவேரா தனது அதிகாரமிக்க பதவிகளைத் துறந்து கியூ பாவை விட்டு வெளியேறியது வரலாற்றின் ஒரு முக்கியத் திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. இதற்குப் பின்னால் இருந்த முதன்மையான காரணங்களை இரு பெரும் பிரிவுக ளாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

- சோவியத் உறவும் ஏவுகணை நெருக்கடியும்: 1962-இல் நிகழ்ந்த கியூப ஏவுகணை நெருக்கடி (Cuban Missile Crisis), பிடல் மற்றும் சே ஆகிய இருவருக்கும் சோவியத் ஒன்றியம் மீதான பார்வையில் ஒரு மெல்லிய விரிசலை ஏற் படுத்தியது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பைத் தடுக்க சோவியத் ஒன்றியம் கியூபாவில் அணு ஆயுத ஏவுகணை களை நிறுவியது, உலகையே மூன்றாம் உலகப் போரின் விளிம்பிற்கு இட்டுச் சென்றது. ஆனால், இறுதியாக அமெ ரிக்க அதிபர் கென்னடியும் சோவியத் தலைவர் குருசேவ் வும் கியூபாவின் ஆலோசனையைப் பெறாமலேயே, ஏவு கணைகளைத் திரும்பப் பெற ஒப்பந்தம் செய்துகொண் டனர்.

  இது கியூபாவின் இறையாண்மையை அவமதிக்கும் செய லாகப் பிடல் கருதினாலும், நாட்டின் பாதுகாப்பிற்காகச் சோவியத் உதவியைச் சார்ந்திருக்க வேண்டிய யதார்த்த நிலையை அவர் உணர்ந்திருந்தார். ஆனால், சமரசமற்ற இலட்சியவாதியான சே குவேரா, சோவியத் ஒன்றியம் ஏகா திபத்தியத்திற்குப் பயந்து பின்வாங்கிவிட்டதாகக் கருதி னார். சோவியத் கியூபாவை ஒரு 'அரசியல் சதுரங்கக் காயாக' மட்டுமே பயன்படுத்துகிறது என்று குற்றம் சாட் டிய அவர், சோவியத் யூனியனை 'ஏகாதிபத்தியத்தின் இன் னொரு முகம்' என்று பகிரங்கமாக விமர்சிக்கத் தொடங் கினார். இந்தத் தத்துவார்த்த மோதல் இரு தலைவர்களுக் கும் இடையே ஒரு தார்மீக அழுத்தத்தை உருவாக்கியது.

- உலகப் புரட்சி: கியூபாவின் உள்நாட்டு நிர்மாணப் பணி களோடு தனது கடமை முடிந்துவிட்டதாகச் சே குவேரா கருதினார். 'எங்கெல்லாம் ஒடுக்கப்பட்டவர்களின் இதயத் துடிப்புக் கேட்கிறதோ, அங்கெல்லாம் எனது கால்கள் பய ணிக்கும்' என்ற அவரது புகழ்பெற்ற பிரகடனத்திற்கேற்ப, அவர் உலகளாவிய புரட்சியை முன்னெடுக்க விரும்பி னார். 'புரட்சி தானாக உண்டாவதில்லை, நாம்தான் அதை உருவாக்க வேண்டும்' என்ற தனது கொள்கைக்காக, கியூபாவின் அதிகாரப் பதவிகளைத் துறந்துவிட்டு காங்கோ மற்றும் போலிவியா போன்ற நாடுகளுக்குச் சென்றார்.

  பிடல் காஸ்ட்ரோ அவருக்குத் தேவையான ஆதரவை வழங்க முன்வந்தாலும், சர்வதேச அரசியல் நெருக்கடிகள் மற்றும் கியூபாவின் பாதுகாப்பு நலன்கள் காரணமாகப் பிடலால் சில இடங்களில் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முடியாமல் போனது. இவ்வாறாக, ஒரு தேசத்தைக் கட்டமைக்கும் 'யதார்த்தவாதியாக' பிடலும், உலகப் புரட் சியைத் தூண்டும் 'இலட்சியவாதியாக' சே குவேராவும் வெவ்வேறு பாதைகளில் பயணிக்கத் தொடங்கினர்.

முடிவுரை:

பிடல் காஸ்ட்ரோ கியூபப் புரட்சியின் 'மூளை' என்றால், சே குவேரா அதன் 'இதயம்'. பிடலின் அரசியல் ராஜதந்திரமும், சே குவேராவின் அஞ்சாத வீரமும் ஒரு புள்ளியில் இணை யாமல் போயிருந்தால், கியூபப் புரட்சியின் வெற்றி என்பது வெறும் கனவாகவே எஞ்சியிருக்கும். இன்றுவரை இவர்கள் இருவரும் உலகெங்கிலும் உள்ள புரட்சியாளர்களுக்கு உத் வேகம் அளிக்கும் இரட்டை நட்சத்திரங்களாகத் திகழ்கின் றனர். பிடல் அதிகாரத்தின் மூலம் புரட்சியைக் காத்து ஒரு தேசத்தை உருவாக்கினார் (The Statesman); சே குவேரா தனது தியாகத்தின் மூலம் புரட்சியை உலகளாவிய தத்துவ மாக்கி ஒரு வரலாற்றைப் படைத்தார் (The Guerrilla). இவர் களுக்கிடையிலான அணுகுமுறை வேற்றுமைகளே கியூபப் புரட்சியை ஒரு முழுமையான வரலாற்றுச் சக்தியாக மாற் றியது. அதிகார பீடத்தில் அமர்ந்த பிடல் ஒரு சமூகம் எவ் வாறு நிலைபெற வேண்டும் என்பதைக் காட்டினார்; களத் தில் மடிந்த சே குவேரா ஓர் இலட்சியத்திற்காக எவ்வாறு வீழ வேண்டும் என்ற ஒரு வரலாற்றை உருவாக்கினார். 1960-ஆம் ஆண்டு ஜூலை 28 அன்று ஹவானாவில் நடைபெற்ற முதல் இலத்தீன் அமெரிக்க இளைஞர் காங்கிரஸில் (First Latin American Youth Congress) அவர் ஆற்றிய உரையில் தங் களின் அரசியல் நிலைப்பாட்டை உலகிற்கு உரக்கச் சொன்ன சே குவேராவின் அந்தப் புகழ்பெற்ற பிரகடனம் இன்றும் வர லாற்றில் அதிர்கிறது:

'நாங்கள் முன்னெடுக்கும் இந்தச் சமூக மாற்றங்கள் கம்யூ னிஸ்ட்கள் செய்வதைப் போலவே உங்களுக்குத் தோன்றி னால்... தாராளமாகச் சொல்லுங்கள், ஆம் நாங்களும் கம்யூ னிஸ்ட்களே!'



nivethanan.p@thaiveedu.com



ஃபிடல் காஸ்ட்ரோ நூற்றாண்டு
கியூபாவின் மருத்துவச் சர்வதேசியம்

தெ. கோலசீர்த்தி மீதிலங்கோ

தொடக்கக் குறிப்புகள்:

ஃபிடல் காஸ்ட்ரோவுடன் தொடர்புடைய பல மரபுகளில், கியூபாவின் சுகாதார அமைப்பும் அதன் அசாதாரண சர்வதேச மருத்துவ உதவிகளும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றவை. 1959-ஆம் ஆண்டு கியூபப் புரட்சியைத் தொடர்ந்து வந்த பத்தாண்டுகளில், குறைந்த பொருளாதார வளங்கள், தொடர்ச்சியான பொருளாதாரத் தடை, 1990-களின் முற்பகுதியில் அதன் முக்கிய வர்த்தகக் கூட்டாளிகளின் சரிவு போன்றன இருந்தபோதிலும், கியூபா உலகின் மிக விரிவான பொது சுகாதார அமைப்புகளில் ஒன்றை உருவாக்கியது. இன்னும் குறிப்பிடத்தக்க வகையில், கியூபா இந்த மாதிரியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. பல்லாயிரக்கணக்கான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவத் தொழினுட்ப வல்லுநர்களை இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு நாடுகள் போன்ற நாடுகளுக்கு அனுப்பியுள்ளது. இன்று மிகுந்த நெருக்கடியில் இருக்கின்ற போதும் இப்பணியைக் கியூபா தொடர்ந்து முன்னெடுக்கிறது. இதைத் திட்டமிட்டு வடிவமைத்து முன்னகர்த்தியவர் ஃபிடல் காஸ்ட்ரோ.

காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, சுகாதாரம் ஒருபோதும் பொதுக் கொள்கையின் ஒரு துறையாக மட்டும் இருக்கவில்லை. இது ஓர் அரசியல், தார்மீகக் கருத்தியல் திட்டமாகும், இது கியூப சமூகத்தின் புரட்சிகர மாற்றத்திற்குள் ஆழமாகப் பதிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்புக்கான புரட்சியின் அர்ப்பணிப்பு, சமூக உரிமைகள் - கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் கண்ணியம் - உண்மையான இறையாண்மை என்ற பரந்த நம்பிக்கையிலிருந்து இது வெளிப்பட்டது. அவை இல்லாமல், அரசியல் சுதந்திரம் வெற்றுத்தனமாகவே இருக்கும் என்பதை காஸ்ட்ரோ புரிந்து கொண்டார். தனது அரசியல் வாழ்க்கை முழுவதும் இந்தக் கொள்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். புரட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் பேசிய அவர், 'ஒரு புரட்சி அது செய்யும் உரைகளால் அளவிடப்படுவதில்லை, மாறாக அது மேம்படுத்தும் வாழ்க்கையால் அளவிடப்படுகிறது' என்று அறிவித்தார்.

இந்த அர்த்தத்தில், சுகாதாரப் பராமரிப்பு என்பது உள்நாட்டு முன்னுரிமையாகவும், சர்வதேச ஒற்றுமைக்கான கருவியாகவும் இருந்தது. கியூப அரசு வெறுமனே மருத்துவமனைகளை உருவாக்கி அதன் சொந்த மக்களுக்காக மருத்துவர்களைப் பயிற்றுவிப்பதில்லை.

வறுமை, பேரழிவு அல்லது கட்டமைப்பு சமத்துவ மின்மையை எதிர்கொள்ளும் பிற சமூகங்களுக்கு உதவ அதன் மருத்துவ நிபுணத்துவத்தையும் பயன்படுத்துகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், கியூபா உலகளாவிய தெற்கில் சர்வதேசியத்தின் அர்த்தத்தை மறுவரையறை செய்ய முயன்றது.

புரட்சிக்கு முந்தைய நிலைமைகளை ஆராயாமல் இந்த மாதிரியின் தோற்றத்தைப் புரிந்து கொள்ள முடியாது. 1959-க்கு முன்பு, கியூபாவில், குறிப்பாக ஹவானாவில், மேம்பட்ட மருத்துவ நடைமுறைகள் இருந்தன. ஆனால் சுகாதாரப் பராமரிப்புக்கான அணுகல் மிகவும் சமமற்றதாக இருந்தது. கிராமப்புற சமூகங்கள் பெரும்பாலும் மருத்துவமனைகள் முழுவதுமாக இல்லாதிருந்தன. மேலும் பல மருத்துவர்கள் நகர்ப்புற தனியார் மருத்துவத்தில் குவிந்திருந்தனர். ஏழை விவசாயிகளுக்கும் நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கும் மருத்துவ சேவைகள் பெரும்பாலும் அணுக முடியாதவையாக இருந்தன. இந்த சீரற்ற நிலைமைகள் கியூப சமூகத்தில் சமூக சமத்துவமின்மையின் பரந்த வடிவங்களைப் பிரதிபலித்தது, அங்கு செல்வமும் வாய்ப்பும் வர்க்கம், இனம் மற்றும் புவியியல் அடிப்படையில் சமமற்ற முறையில் விநியோகிக்கப்பட்டன.

காஸ்ட்ரோ இந்த ஏற்றத்தாழ்வுகளை வெறுமனே கொள்கைத் தோல்விகளாகக் கருதாமல், சந்தை சார்ந்த அமைப்பிற்குள் சுகாதாரத்தைப் பண்டமாக்குவது என்ற ஆழமான கட்டமைப்புப் பிரச்சினையின் சான்றாகக் கருதினார். முதலாளித்துவ சமூகங்களில், சுகாதாரப் பராமரிப்புப் பெரும்பாலும் உலகளாவிய உரிமையாக இல்லாமல் பணம் செலுத்தக்கூடியவர்களால் வாங்கப்பட்ட சேவையாகச் செயற்பட்டது. சமூக நீதியில் வேரூன்றிய பொது நன்மையாக சுகாதாரப் பராமரிப்பை மாற்றுவதன் மூலம் புரட்சி இந்த தர்க்கத்தை முறியடிக்க முயன்றது.

இந்தப் பார்வை, இத்தொடரின் கடந்த கட்டுரையில் விவாதிக்கப்பட்ட முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியம் குறித்த காஸ்ட்ரோவின் பரந்த விமர்சனத்துடன் ஒத்துப் போனது. முதலாளித்துவம் மனிதநலனை, சந்தைப் பரிவர்த்தனைகளாகக் குறைத்தால், சோசலிசம் மனித வாழ்க்கையை இலாபத்திற்கு மேல் உயர்த்த வேண்டும். இதனால் சுகாதாரக் கொள்கை புரட்சிகர இலட்சியங்களை நிறுவன நடைமுறையாக மொழிபெயர்க்கக் கூடிய ஓர் உறுதியான அரங்கமாக மாறியது. ஆனால் கியூபாவின் சுகாதார அமைப்பின் முக்கியத்துவம் உள்நாட்டுச் சீர்திருத்தத்திற்கு அப்பால் நீடிக்கப்பட்டது. புரட்சிகர அரசுகள் தங்கள் எல்லைகளுக்கு அப்பால் பொறுப்புகளைச் சுமக்கின்றன என்று காஸ்ட்ரோ நம்பினார். 1960-இல் ஒரு உரையில், அவர் குறிப்பிட்டார்: 'நமது மருத்துவர்கள் வேறு இடங்களில் உயிர்களைக் காப்பாற்ற முடிந்தால், நமது ஆசிரியர்கள் வேறு இடங்களில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க முடிந்தால், நமது புரட்சி நமது தீவுக்கு அப்பால் அர்த்தமுள்ளதாக இருக்கும்.'

இந்தக் கருத்து - பின்னர் மருத்துவ சர்வதேசியம் என்று அழைக்கப்பட்டது - கியூப வெளியுறவுக் கொள்கையின் மிகவும் தனித்துவமான அம்சங்களில் ஒன்றாக இது மாறியது. பல தசாப்தங்களாக, கியூப மருத்துவக் குழுவினர் 165 நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அங்கு பூகம்பங்கள், தொற்றுநோய்கள், சுகாதார நிபுணர்களின் நீண்டகாலப் பற்றாக்குறை ஆகியவற்றை எதிர்கொண்டனர். அவர்கள் மில்லியன் கணக்கான நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தனர், ஆயிரக்கணக்கான மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்தனர், மேலும் ஒரு சிறிய வளரும் நாடு உலகளாவிய சுகாதாரத்திற்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது பற்றிய கருத்துகளை மறுவடிவமைத்தனர். தனது மருத்துவ சர்வதேசியத்தின் 60-வது ஆண்டை 2023-ஆம் ஆண்டு கொண்டாடியபோது 57 நாடுகளில் மருத்துவ அணிகள் கடமையாற்றிக்கொண்டிருந்தன. இந்த நிகழ்வைப் புரிந்துகொள்வதற்கு எளிமையான விளக்கங்களுக்கு அப்பால் செல்ல வேண்டும். சிலர், கியூப மருத்துவ இராஜதந்திரத்தை மனிதாபிமான பரோபகாரமாக வடிவமைத்துள்ளனர். வேறு சிலர், இதை புவிசார் அரசியல் உத்தி அல்லது மென்மையான சக்தியாகக் கண்டுள்ளனர். உண்மையில், இது இரண்டின் கூறுகளையும் கொண்டுள்ளது. காஸ்ட்ரோவின் அணுகுமுறை சித்தாந்த உறுதிப்பாட்டை நடைமுறை அரசமைப்புடன் இணைத்தது. நெறிமுறை ஒற்றுமையை இராஜதந்திர ஈடுபாட்டுடன் கலந்தது.

இந்தக் கட்டுரை கியூபாவின் சுகாதாரத்தை மையமாகக் கொண்ட சர்வதேசியத்தின் தோற்றம், பரிணாமம் ஆகியவற்றையும் அதன் முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது. புரட்சியைத் தொடர்ந்து கியூப சுகாதார அமைப்பின் உள்நாட்டு மாற்றத்துடன் இது தொடங்குகிறது. நிறுவன சீர்திருத்தங்கள், அரசியல் முன்னுரிமைகள் மற்றும் சமூக அணிதிரட்டல் ஆகியவை உலகளாவிய பராமரிப்புக்கான அடித்தளத்தை எவ்வாறு உருவாக்கியது என்பதை ஆராய்கிறது. பின்னர் அது கியூப மருத்துவ சர்வதேசியத்தின் வளர்ச்சியை நோக்கித் திரும்புகிறது, வெளிநாட்டு மருத்துவப் பணிகளின் தோற்றம் மற்றும் காலனித்துவ எதிர்ப்பு மற்றும் மனிதாபிமான சூழல்களில் அவற்றின் பங்கைக் கண்டறிந்துள்ளது. இறுதியாக, உலகளாவிய தெற்கு ஒற்றுமையினதும் அரசியல் செல்வாக்கினதும் கருவியாக மருத்துவ இராஜதந்திரம் எவ்வாறு செயற்பட்டது என்பதை இந்த அத்தியாயம் பகுப்பாய்வு செய்கிறது. இந்த இயக்கவியலை ஆராய்வதன் மூலம், இந்த அத்தியாயம் காஸ்ட்ரோவின் மரபின் ஒரு மைய அம்சமான, மனித வாழ்க்கையை அரசியல் பொருளாதாரத்தின் மையத்தில் வைக்கும் முயற்சியை வெளிச்சம் போட்டுக் காட்ட முயல்கிறது.

புரட்சிகர சுகாதார அமைப்பை உருவாக்குதல்:

1959-க்குப் பிந்தைய கியூபாவின் மாற்றத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள, புரட்சிக்கு முன்னர் இருந்தச் சுகாதார அமைப்பிலிருந்து தொடங்குவது அவசியம். காஸ்ட்ரோ ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, கியூபா கரீபியனில் மிகவும் மேம்பட்ட மருத்துவ வசதி

களைக் கொண்டிருந்தது. ஆனால் இவை தலைநகர் ஹவானாவில் பெருமளவில் குவிந்திருந்தன. இவை முதன்மையாக நடுத்தர மற்றும் உயர் வகுப்பினருக்கு மட்டுமே அணுகக்கூடியவை. மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் வாழ்ந்த கிராமப்புற சமூகங்கள், மருத்துவர்கள், மருத்துவமனைகள் மற்றும் அடிப்படை சுகாதாரப் பற்றாக்குறையை எதிர் கொண்டன. 1950-களின் புள்ளிவிவரங்கள் இந்த வேறுபாட்டை விளக்குகின்றன. ஹவானா ஒப்பீட்டளவில் அதிக மருத்துவர்-மக்கள்தொகை விகிதத்தை அனுபவித்தாலும், பல கிராமப்புற மாகாணங்கள் ஒவ்வொரு பல ஆயிரம் மக்களுக்கும் ஒரு மருத்துவரை விடக் குறைவாகவே இருந்தன. வறுமையுடன் தொடர்புடைய ஊட்டச்சத்து குறைபாடு, காசநோய் போன்றன பரவலாக இருந்தன. நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் குழந்தை இறப்பு விகிதம் அதிகமாக இருந்தது.

இந்தச் சீரற்ற விநியோகம் பாடிஸ்டா ஆட்சியின் கீழ் கியூப சமூகத்தின் பரந்த கட்டமைப்பைப் பிரதிபலித்தது. சுகாதாரப் பராமரிப்புப் பெரும்பாலும் தனியார்மயமாக்கப்பட்டது. பல மருத்துவர்கள் கட்டண அடிப்படையிலான நடைமுறைகளை இயக்கினர். பணம் செலுத்த முடியாதவர்கள் பெரும்பாலும் தொண்டு மருத்துவமனைகளை நம்பியிருந்தனர் அல்லது முழுமையாக சிகிச்சை பெறவில்லை. இதன் விளைவாக மருத்துவப் பராமரிப்பு ஓர் உலகளாவிய சேவையாக இல்லாமல் ஒரு பண்டமாகச் செயற்படும் அமைப்பாக உருவாகியது.

புரட்சிகர மாற்றத்தின் அவசியத்தை விளக்கும் போது காஸ்ட்ரோ இந்த ஏற்றத்தாழ்வுகளை அடிக்கடி மேற்கோள் காட்டினார். 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' என்ற புத்தகத்தில், தீவிர வறுமை நிலையில் வாழும் கிராமப்புற தொழிலாளர்களின் அவல நிலையை அவர் 'கிராமப்புறங்களில் விவசாயிகள் மருத்துவர்கள் இல்லாமல், மருந்துகள் இல்லாமல், நம்பிக்கை இல்லாமல் குடிசைகளில் வாழ்கின்றனர்' என்று விவரித்தார். காஸ்ட்ரோவுக்கும் அவரது சக புரட்சியாளர்களுக்கும், சுகாதாரப் பராமரிப்பில் சமத்துவமின்மை என்பது கியூப சமூகத்தின் பரந்த அநீதியைக் குறிப்பதாக அமைந்தது. அதை நிவர்த்தி செய்வது புரட்சியின் ஆரம்பகால முன்னுரிமைகளில் ஒன்றாக மாறியது.

புரட்சிக்குப் பிந்தைய காலப்பகுதியில், மருத்துவத் துறையில் புரட்சியின் ஆரம்பத் தாக்கம்

“

கிராமப்புறங்களில் விவசாயிகள் மருத்துவர்கள் இல்லாமல், மருந்துகள் இல்லாமல், நம்பிக்கை இல்லாமல் குடிசைகளில் வாழ்கின்றனர்' என்று விவரித்தார். காஸ்ட்ரோவுக்கும் அவரது சக புரட்சியாளர்களுக்கும், சுகாதாரப் பராமரிப்பில் சமத்துவமின்மை என்பது கியூப சமூகத்தின் பரந்த அநீதியைக் குறிப்பதாக அமைந்தது. அதை நிவர்த்தி செய்வது புரட்சியின் ஆரம்பகால முன்னுரிமைகளில் ஒன்றாக மாறியது.

”



ஸ்திரமின்மையை ஏற்படுத்தியது. 1959-க்குப் பிறகு ஆரம்ப ஆண்டுகளில், கியூபாவின் மருத்துவர்களில் பெரும் பகுதியினர் குடிபெயர்ந்தனர். பலர் அமெரிக்காவிற்கு இடம்பெயர்ந்தனர். புதிய அரசாங்கத்தின் சித்தாந்தத்தின் மீது கொண்ட எதிர்ப்புக் காரணமாக சிலர் வெளியேறினர்; மற்றவர்கள் தனியார் நடைமுறைகளை தேசியமயமாக்குவதாக அஞ்சினர் அல்லது புரட்சிகர அரசைப் பலவீனப்படுத்த வடிவமைக்கப்பட்ட அமெரிக்கக் கொள்கைகளால் ஊக்குவிக்கப்பட்டனர். 1963-ஆம் ஆண்டளவில், கியூபாவின் மருத்துவர்களில் பாதிப் பேர் நாட்டை விட்டு வெளியேறினர். இந்தத் திடீர் பணியாளர் இழப்பு சுகாதார அமைப்புக்குக் கடுமையான நெருக்கடியை உருவாக்கியது. ஏற்கனவே போதுமான சேவை இல்லாத கிராமப்புறங்கள் குறிப்பாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

உலகளாவிய சுகாதாரப் பராமரிப்புக்கான அதன் உறுதிப்பாட்டிலிருந்து பின்வாங்குவதற்குப் பதிலாக, புரட்சிகர அரசாங்கம் நிறுவனக் கண்டுபிடிப்பு மற்றும் வெகுஜன அணிதிரட்டலுடன் பதிலளித்தது. மருத்துவக் கல்வி வியத்தகு முறையில் விரிவுபடுத்தப்பட்டது, கல்விக் கட்டணம் நீக்கப்பட்டது, மேலும் குறைந்த சேவை பெறும் சமூகங்களில் சேவை செய்ய விரும்பும் மருத்துவர்களை உருவாக்கப் புதிய பயிற்சித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. இந்த மாற்றத்தை ஒரு பின்னடைவாக அல்ல, ஒரு வாய்ப்பாகக் காஸ்ட்ரோ வடிவமைத்தார். 1960-களின் முற்பகுதியில் மருத்துவ மாணவர்களிடம் பேசியபோது அவர்: 'நாங்கள் ஆடம்பர மருத்துவமனைகளுக்குரிய மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்க மாட்டோம். மக்களுக்கான மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிப்போம்' என்று குறிப்பிட்டார்.

இந்த மாற்றம் கியூப மருத்துவக் கலாசாரத்தில் ஓர் ஆழமான மறுசீரமைப்பின் தொடக்கத்தைக் குறித்தது. மருத்துவம் இனி தனியார் செல்வம் அல்லது நகர்ப்புற கௌரவத்துடன் முதன்மையாகத் தொடர்புடைய ஒரு தொழிலாக இருக்காது. மாறாக, அது புரட்சிகர மதிப்புகளுடன் இணைந்த சமூக ரீதியாக உட்பொதிக்கப்பட்ட தொழிலாக மாறும்.

1960 - 1970 வரையான காலம் முழுவதும், கியூபா உலகளாவிய சுகாதாரப் பராமரிப்பு

அமைப்பு ஒன்றை உருவாக்க முறையான முயற்சியை மேற்கொண்டது. மருத்துவ மனைகள் தேசியமயமாக்கப்பட்டன. கிராமப்புற மருத்துவமனைகள் கட்டப்பட்டன. தடுப்பூசிப் பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டன. மேலும் தடுப்பு மருத்துவம் ஒரு மைய முன்னுரிமையாக மாறியது. நாடு முழுவதும் பொது சுகாதார உள்கட்டமைப்பு விரிவடைந்து, முன்னர் அடிப்படைச் சேவைகள் இல்லாத சமூகங்களைச் சென்றடைந்தது. இந்தச் செயன்முறையின் மிக முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்று நோய்த்தடுப்பும் சமூக அடிப்படையிலான பராமரிப்பின் ஒருங்கிணைப்பும் ஆகும். மருத்துவமனை சிகிச்சையில் மட்டும் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, கியூப சுகாதாரக் கொள்கை நோய்த் தடுப்பு, தடுப்பூசி, தாய்வழிப் பராமரிப்பு, ஆரம்பகாலத் தலையீடு ஆகியவற்றை வலியுறுத்தியது. இதன் முடிவுகளால் அடுத்த தசாப்தங்களில், கியூபா சுகாதாரக் குறிகாட்டிகளில் வியத்தகு முன்னேற்றங்களை அடைந்தது:

- குழந்தை இறப்பு விகிதங்கள் கூர்மையாகக் குறைந்தன.
- ஆயுட்காலம் கணிசமாக அதிகரித்தது.
- தடுப்பூசிப் பிரச்சாரங்கள் மூலம் தொற்று நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.



கியூபாவின் வரையறுக்கப்பட்ட பொருளாதார வளங்களுடனும் அமெரிக்கத் தடையால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடனுமே இந்தச் சாதனைகள் என்பதை நாம் கொள்ள முடிவுகள் இலாபத்தை முன்னுரிமை கின்றன மீண்டும் அடையப்பட்டன நினைவில் வேண்டும். இந்த பொருளாதார விட அரசியல் களைப் பிரதிபலிக் என்பதைக் காஸ்ட்ரோ மீண்டும் வலியுறுத்தினார். 1979-ஆம் ஆண்டு ஓர் உரையில் அவர் அறிவித்தார்: 'ஒரு நாட்டின் செல்வம் அது உற்பத்தி செய்வதை மட்டும் கொண்டு அளவிடப்படுவதில்லை, மாறாக அது தனது மக்களை எவ்வாறு பராமரிக்கிறது என்பதன் மூலம் அளவிடப்படுகிறது.'

1980-களில் குடும்ப மருத்துவர், செவிலியர் திட்டத்தின் உருவாக்கத்துடன் கியூபாவின்



> **காஸ்ட்ரோவே பெரும்பாலும் சுகாதாரப் பராமரிப்பை புரட்சியின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாக விவரித்தார்: 'நமது மருத்துவர்கள் நமது புரட்சியின் பெருமை' என்று அறிவித்தார். இந்தப் பெருமை உள்நாட்டு வெற்றியுடன் மட்டும் நின்றுவிட வில்லை. விரைவில் அதைத் தொடர்ந்து வரவிருக்கும் சர்வதேசப் பணிகளுக்கும் இது அடித்தளமிட்டது.**

சுகாதாரப் பராமரிப்பு மாதிரியின் மிகவும் புதுமையான கூறு தோன்றியது. இந்த அமைப்பின் கீழ், மருத்துவ வல்லுநர்கள் குறிப்பிட்ட சுற்றுப்புறங்களுக்கு நியமிக்கப்பட்டனர், அவர்கள் சேவை செய்த சமூகங்களுக்குள் வாழ்ந்து, நோயாளிகளுடன் நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொண்டனர். இந்த அணுகுமுறை, மருத்துவர்கள் நோய் தோன்றிய பிறகு மட்டுமே சிகிச்சையளிப்பதை விட, தொடர்ந்து சுகாதார நிலைமைகளைக் கண்காணிக்க அனுமதித்தது. தடுப்புப் பராமரிப்பு, வீட்டிற்குச் சென்று பார்ப்பது மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவை மருத்துவ நடைமுறையின் மையக் கூறுகளாக மாறியது. குடும்ப மருத்துவர் மாதிரி, சுகாதாரப் பராமரிப்பு அன்றாட சமூக வாழ்வில் உட்பொதிக்கப்பட வேண்டும் என்ற காஸ்ட்ரோவின் நம்பிக்கையை பிரதிபலித்தது. மருத்துவம் என்பது வெறும் தொழினுட்ப நிபுணத்துவம் மட்டுமல்ல. அது சமூக அர்ப்பணிப்பின் வடிவமாகும் என்பதை கியூபா நிரூபித்தது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கியூபாவின் சுகாதாரப் பராமரிப்பு முறை புரட்சியின் அடையாளத்தை வரையறுக்கும் அம்சமாக மாறியது. அரசியல் அர்ப்பணிப்பினாலும் நிறுவன அமைப்புமுறையாலும் வளரும் நாட்டில் மேம்பட்ட சமூக விளைவுகளை அடைவதற்கான சாத்தியத்தை இது நிரூபித்தது. காஸ்ட்ரோவே பெரும்பாலும் சுகாதாரப் பராமரிப்பை புரட்சியின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாக விவரித்தார்: 'நமது மருத்துவர்கள் நமது புரட்சியின் பெருமை' என்று அறிவித்தார். இந்தப் பெருமை உள்நாட்டு வெற்றியுடன் மட்டும் நின்றுவிடவில்லை. விரைவில் அதைத் தொடர்ந்து வரவிருக்கும் சர்வதேசப் பணிகளுக்கும் இது அடித்தளமிட்டது.

மருத்துவ சர்வதேசியமும் தோள் கொடுக்கும் அறமும்:

கியூபாவின் உள்நாட்டு சுகாதார அமைப்பின் மாற்றம் புரட்சியின் மிகவும் புலப்படும் சமூக சாதனைகளில் ஒன்றை பிரதிநிதித்துவப்படுத்தியது என்றால், தேசிய எல்லைகளுக்கு அப்பால் அதன் விரிவாக்கம் உலக அரசியலுக்கு அதன் மிகவும் தனித்துவமான பங்களிப்புகளில் ஒன்றாக மாறியது. ஃபிடல் காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, கியூபாவின் பொது சுகாதார மாதிரியின் வெற்றி, பிராந்தியத்தைத் தாண்டிய கடமை



களைக் கொண்டிருந்தது. புரட்சிகர நெறிமுறைகள், வறுமை, காலனித்துவ மரபுகள், பல வீனமான சுகாதார அமைப்புகளை எதிர் கொள்ளும் சமூகங்களுடன் கியூபா தனது மனித வளங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் நம்பினார்.

இந்தத் தத்துவத்தின் முதல் உறுதியான வெளிப்பாடு 1963, மே மாதத்தில், அல்ஜீரியா பிரான்சிலிருந்து சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து கியூபா அல்ஜீரியாவிற்கு ஒரு மருத்துவப் படையை அனுப்பியபோது தொடங்கியது. காலனித்துவ நீக்க செயற் பாட்டின் போது பல ஐரோப்பிய மருத்து வர்கள் அல்ஜீரியாவை விட்டு வெளியேறிய பிறகு, நாடு மருத்துவர்களின் பற்றாக் குறையை எதிர்கொண்டது. புதிதாக சுதந் திரம் பெற்ற அரசாங்கத்திற்கு உதவ மருத்து வர்கள், செவிலியர்கள், தொழினுட்ப வல்லு நர்கள் ஆகியோரைக் கொண்ட குழுவை அனுப்புவதன் மூலம் கியூபா பதிலளித்தது. இந்தப் பணி அளவில் மிதமானது ஆனால் குறியீட்டில் ஆழமானது. கியூபாவே இன்னும் தனது புரட்சியை ஒருங்கிணைக்கப் போராடும் ஓர் ஏழை நாடாக இருந்தது. ஆனால் அது மற்றொரு நாட்டிற்கு உதவ அதன் மிகவும் மதிப்புமிக்க, வளமான பயிற்சி பெற்ற நிபுணர்களை ஏற்றுமதி செய்யத் தேர்ந்தெடுத்தது. காஸ்ட்ரோ இந்த முடிவை வெளிப்படையான தார்மீக சொற்களில் வடிவ மைத்தார்: 'நாங்கள் எஞ்சியிருப்பதைக் கொடுக்கவில்லை. நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொள்கிறோம்.'

இந்தக் கொள்கை கியூப மருத்துவ சர்வதேசி யத்தின் அடித்தளமாக மாறியது. இது கியூபாவின் அணுகுமுறையைப் பாரம்பரிய வெளிநாட்டு உதவி வடிவங்களிலிருந்து வேறுபடுத்தியது, அவை பெரும்பாலும் பொருளாதாரம் அல்லது மூலோபாய நலன்க ளுடன் பிணைக்கப்பட்டுள்ளன. காலனித்துவ ஆதிக்கத்தையும் வளர்ச்சியின்மையின் பொதுவான வரலாறுகளையும் எதிர் கொள்ளும் மக்களிடையே ஒற்றுமையின் செயல்களாகக் கியூப பணிகள் வடிவமைக் கப்பட்டன.

1960-1970-வரையான காலம் முழுவதும், காலனித்துவ எதிர்ப்பு இயக்கங்களுடனான அதன் பரந்த ஈடுபாட்டுடன், கியூபா அதன் சர்வதேச மருத்துவ இருப்பை விரிவுபடுத் தியது. மருத்துவப் படையணிகள் ஆபிரிக் காவில் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் மற்றும் விடுதலைப் போராட்டங்களுக்கு இரா ஜதந்திர உதவிகளையும் சில சந்தர்ப்பங் களில் இராணுவ ஆதரவையும் வழங்கின.

அங்கோலாவில் கியூபாவின் ஈடுபாடு மிகவும் குறிப்பிடத்தக்க உதாரணங்களில் ஒன்றாகும். 1975-ஆம் ஆண்டு போர்ச்சுகலிடமிருந்து அங்கோலா சுதந்திரம் பெற்றபோது, அது உடனடியாக கெடுபிடிப்போருக்கும் நிறவெ றிக்கும் எதிரான பிராந்திய போராட்டங்களின் போர்க்களமாக மாறியது. கியூபாவின் தலையீடு - ஒப்ரேஷன் கார்லோட்டா என்று அழைக்கப்படுகிறது - தென்னாபிரிக்க மற்றும் மேற்கத்திய ஆதரவுப் படைகளுக்கு எதிராக அங்கோலா அரசாங்கத்தை ஆதரிக்க ஆயிரக்கணக்கான வீரர்களை அனுப்பியது.

இந்தக் கியூப உதவியின் பரவலாகப் பேசப் படாத மருத்துவப் பிரசன்னம், மிகவும் முக்கி யமானது. கியூப மருத்துவர்கள் மருத்துவ மனைகளை நிறுவினர், பொதுமக்களுக்கும் வீரர்களுக்கும் சிகிச்சை அளித்தனர். அங்கோலா சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தனர். இராணுவ, மருத்துவ உதவிகளின் இந்த கலவையானது, சர்வதே சியம் என்பது, அரசியல் இறையாண்மை, மனிதநலன் இரண்டையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற காஸ்ட்ரோவின் நம் பிக்கையை பிரதிபலித்தது. பல ஆண்டுக ளுக்குப் பிறகு ஆபிரிக்காவில் கியூபாவின் பங்கைப் பற்றிச் சிந்தித்து, காஸ்ட்ரோ குறிப் பிட்டார்: 'நாங்கள் ஆபிரிக்காவிற்குச் சென்றதன் பொருள் ஆதாயத்திற்காக அல்ல, மாறாக மக்களின் கண்ணியம் மற்றும் சுதந்திரத்திற்கான உரிமையைப் பாது காக்கவே.' மருத்துவ சர்வதேசியம் இவ்வாறு காலனித்துவ எதிர்ப்பு நீதிக்கான பரந்த சித்தாந்த உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக மாறியது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கியூபா தற்காலிக மருத்துவப் பணிகளைச் சர்வதேச ஒத்துழைப்பின் கட்டமைக்கப்பட்ட அமைப்பாக மாற்றியது. அரசு நிறுவனங்கள் மருத்துவப் பணியாளர்களைப் பயன்படுத் துதல், கியூப பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல், வளரும் நாடுகளுடன் நீண்ட காலக் கூட்டாண்மைகளை நிறுவுதல் ஆகிய வற்றை ஒருங்கிணைத்தன. இதன் மிக முக்கி யமான சாதனைகளில் ஒன்று, ஹவானாவில் இலத்தீன் அமெரிக்க மருத்துவக் கல்லூரியை உருவாக்கியமையாகும். இது உலகளாவிய தெற்கில் உள்ள குறைந்த வருமான சமூகங்களைச் சேர்ந்த மாணவர்க ளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அர்ப்பணிக்

கப்பட்ட உலகின் மிகப்பெரிய மருத்துவப் பள்ளிகளில் ஒன்றாகும். இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவைச் சேர்ந்த மாணவர்களுக்கு, அவர்கள் தங்கள் சொந்த நாடுகளில் உள்ள வசதி குறைந்த மக்களுக்குச் சேவை செய்யத் திரும்ப வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இலவசக் கல்வி வழங்கப்பட்டது.

பள்ளியின் திறப்பு விழாவின் போது இந்த முயற்சியின் பின்னணியில் உள்ள தத்துவத்தை காஸ்ட்ரோ விளக்கினார்: 'மக்கள் மீது குண்டுவீச்சு நடத்துவதற்குப் பதிலாக, நாங்கள் மருத்துவர்களை அனுப்புவோம்.' கியூபா சர்வதேசியத்திற்கும் சக்திவாய்ந்த நாடுகளின் இராணுவத் தலையீடுகளுக்கும் இடையில் காஸ்ட்ரோ வரைய முயன்ற குறியீட்டு வேறுபாட்டை இந்தக் கூற்று படம்பிடித்தது. மேற்குலக சக்திகள் படைகளினாலும் பொருளாதார பலத்தினாலும் செல்வாக்கைக் காட்டினாலும் கியூபா சுகாதாரத்தினாலும் கல்வி மூலமும் செல்வாக்கை வெளிக்காட்டியது.

சர்வதேச அவசரநிலைகளின் போது கியூபா மருத்துவப் படைகள் குறிப்பாகத் தெரிந்தன. பூகம்பங்கள், சூறாவளிகள் அல்லது தொற்று நோய்கள் பலவீனமான சுகாதார அமைப்புகளைக் கொண்ட நாடுகளைத் தாக்கியபோது, கியூபா மருத்துவர்கள் பெரும்பாலும் முதலில் பதிலளித்தவர்களாக, முதலில் ஓடிவந்து உதவியோராக இருந்தனர். 2005-இல் பாகிஸ்தானில் ஏற்பட்ட பேரழிவு தரும் பூகம்பத்திற்குப் பிறகு ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம் நிகழ்ந்தது. பராமரிப்புக்கான அணுகல் குறைவாக இருந்த தொலைதூர மலைப்பகுதிகளுக்குக் கியூபா நூற்றுக்கணக்கான மருத்துவ நிபுணர்களை அனுப்பியது. கள மருத்துவமனைகள் நிறுவப்பட்டன. ஆயிரக்கணக்கான அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. மேலும் நீண்டகால மறுவாழ்வுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இதேபோல், 2010-ஆம் ஆண்டு ஹெயிட்டியில் ஏற்பட்ட பூகம்பத்திற்கு பதிலளிப்பதில் கியூப மருத்துவர்கள் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தனர். அங்கு அவர்கள் அதிக எண்ணிக்கையிலான காயமடைந்த நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தனர், அடுத்தடுத்த நோய்ப் பரவல்களைக் கட்டுப்படுத்த உதவினார்கள்.

கியூபா மருத்துவ ஒற்றுமையின் மிகவும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வு மேற்கு ஆபிரிக்காவில் 2014-ஆம் ஆண்டு எபோலா வெடித்தபோது நிகழ்ந்தது. கியூபா நூற்றுக்கணக்கான மருத்துவர்களையும் செவிலியர்களையும் சியரா லியோன், லைபீரியா, கினியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பியது. பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பல நாடுகள் பணியாளர்களை அனுப்பத் தயங்கிய நேரத்தில், கியூப மருத்துவ ஊழியர்கள் தொற்றுநோயை நேரடியாக எதிர்கொள்ள முன்வந்தனர். உலக சுகாதார அமைப்பு உட்பட சர்வதேச அமைப்புகள் கியூபாவின் இச்செயலைப் பகிரங்கமாகப் பாராட்டின. உலக சுகாதார அமைப்பின் தலைவர் கியூபாவின் பங்களிப்பை 'உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டு' என்று விவரித்தார். இந்தப் பணிகள், வரையறுக்கப்பட்ட பொருளாதார வளங்களையே கொண்டிருந்த போதிலும், ஒரு மனிதாபிமான அரங்காடியாக கியூபாவின் நற்பெயரை வலுப்படுத்தின.

இந்த முயற்சிகளின் பின்னணியில் ஒரு தனித்துவமான நெறிமுறைக் கட்டமைப்பு இருந்தது. காஸ்ட்ரோ சுகாதாரப் பராமரிப்பை வெறுமனே ஒரு தேசியப் பொறுப்பாகக் கருதாமல், எல்லைகளைக் கடந்ததோர் உலகளாவிய மனித உரிமையாகக் கருதினார். நோயும் துன்பமும் உலகளாவிய யதார்த்தங்கள் என்றால், ஒற்றுமையும் உலகளாவியதாக இருக்க வேண்டும் என்று அவர் நம்பினார். அதையே அவர் அறிவித்தார். 2000-ஆம் ஆண்டு ஓர் உரையில், அவர் இந்தக் கொள்கையைச் சுருக்கமாகக் கூறினார்: 'மனிதகுலம் அறிவைப் பகிர்ந்து கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும், அதை ஏகபோகமாக்கக் கூடாது.'

உலகளாவிய தெற்கும் மருத்துவ இராஜதந்திரமும்:

கியூப மருத்துவப் பணிகள் நெறிமுறை உறுதிப்பாடுகளின் அடித்தளமாக இருந்தபோதிலும், அவை வெளியுறவுக் கொள்கையின் கருவிகளாகவும் செயற்பட்டன. சர்வதேச ஒற்றுமை இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தவும், பலதரப்பு மன்றங்களில் கியூபாவின் செல்வாக்கை விரிவுபடுத்தவும், உலகளாவிய தெற்கில் பெரிய சக்திகளின் ஆதிக்கத்தை சவாலுக்குட்படுத்தவும் முடியும் என்பதை காஸ்ட்ரோ உணர்ந்தார். மருத்துவ ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் மூலம், கியூபா இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா போன்ற பல நாடுகளுடன் கூட்டாளுகைகளை நிறுவியது. இந்தக் கூட்டாளுகைகளில் பெரும்பாலும் பயிற்சித் திட்டங்கள், கூட்டு ஆராய்ச்சி முயற்சிகள், நீண்டகால சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை அடங்கும். பல சந்தர்ப்பங்களில், மருத்துவ இராஜதந்திரம் கியூபாத் தீவுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஈடுபாட்டைக்



கொண்டிருந்த அரசாங்கங்களுடன் கூட்டணிகளை உருவாக்க அனுமதித்தது.

சர்வதேச உறவுகள் கோட்பாட்டில், மென்மையான சக்தி (soft power) என்ற கருத்து, வற்புறுத்தலை விட ஈர்ப்பு மூலம் மற்றவர்களைப் பாதிக்கும் ஓர் அரசின் திறனைக் குறிக்கிறது. கியூபாவின் மருத்துவ இராஜதந்திரம் வளரும் நாடுகளில் இந்த வகையான செல்வாக்கின் மிகவும் பயனுள்ள எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக மாறியது. பொருளாதார வளர்ச்சி கண்ட முதலாமுலக நாடுகள் போல பொருளாதார வளங்கள் இல்லாத போதிலும், கியூபா மிகவும் பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்களையும் ஒற்றுமையின் வலுவான சித்தாந்த விவரிப்பையும் கொண்டிருந்தது. இந்த வளங்களைச் சர்வதேச அளவில் பயன்படுத்துவதன் மூலம், கியூபா குறியீட்டு மூலதனம் (symbolic capital) என்று விவரிக்கக்கூடியதைக் குவித்தது. அதன் மூலம் உலகளாவிய நிலையை மேம்படுத்திய மனிதாபிமான அர்ப்பணிப்புக்கான நற்பெயரைப் பெற்றது. இந்த இயக்கவியலை காஸ்ட்ரோ நன்கு அறிந்திருந்தார். கியூப மருத்துவப் பணிகளைப் பிரதிபலிக்கும் ஓர் உரையில், அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: 'எங்கள் மருத்துவர்கள் அறிவியலை மட்டுமல்ல, எங்கள் புரட்சியின் மதிப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.' தொலைதூரக் கிராமங்கள், பேரிடர் மண்டலங்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களில் கியூப மருத்துவர்களின் இருப்பு, பணக்கார நாடுகளின் புவிசார் அரசியல் நடத்தைக்கு மாறாக ஒற்றுமையின் சக்திவாய்ந்த படங்களை உருவாக்கியது.

இலத்தீன் அமெரிக்காவில் கியூபாவின் மருத்துவ இராஜதந்திரம் குறிப்பாக செல்வாக்குச் செலுத்தியது. வெனிசுவேலா, பொலிவியா, நிகரகுவா போன்ற நாடுகளில் உள்ள அரசாங்கங்களுடனான கூட்டாளுகைகள் ஓரங்கட்டப்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பராமரிப்புக்கான அணுகலை விரிவுபடுத்தின. எடுத்துக்காட்டாக, வெனிசுவேலாவில், குறைந்த வருமானம் கொண்ட நகர்ப்புறச் சமூகங்களுக்கு ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட பாரியோ அடென்ட்ரோ திட்டத்தில் கியூப மருத்துவர்கள் பங்கேற்றனர். ஆயிரக்கணக்கான கியூப மருத்துவர்கள் முன்பு மருத்துவ சேவைகள் பற்றாக்குறையாக இருந்த சுற்றுப்புறங்களில் வசித்து வந்தனர். இந்த முயற்சிகள் அரசியல் கூட்டணிகளை வலுப்படுத்தின, அதே நேரத்தில் உள்ளூர் மக்களுக்கு உறுதியான நன்மைகளையும் வழங்கின.

கியூப மருத்துவ ராஜதந்திரத்தின் அளவும் நிலைத்தன்மையும் குறிப்பிடத்தக்கதாகவே இன்றும் உள்ளன. பல தசாப்தங்களாக, இலட்சக்கணக்கான கியூப மருத்துவ வல்லுநர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றியுள்ளனர். மில்லியன் கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர், மேலும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மாணவர்கள் கியூப நிறுவனங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, இந்த சாதனைகள் சர்வதேச ஈடுபாட்டின் ஒரு புதிய மாதிரியைக் குறிக்கின்றன.

நிறைவுக் குறிப்புகள்:

கியூபாவின் மருத்துவ இராஜதந்திரத்தின் கதை, பிடல் காஸ்ட்ரோவின் அரசியல் மரபின் மிகவும் தனித்துவமான பரிமாணங்களில் ஒன்றை விளக்குகிறது. கெடுபிடிப் போரின் புவிசார் அரசியல் மோதல்கள் அல்லது சோசலிசத்தைச் சுற்றியுள்ள கருத்தியல் விவாதங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டாலும், புரட்சியின் சுகாதாரப் பாதுகாப்புக்கான அர்ப்பணிப்பு அதன் இலட்சியங்களைப் புரிந்துகொள்ள வேறுபட்ட பார்வையை வழங்குகிறது. சுகாதாரப் பராமரிப்பை ஓர் உலகளாவிய உரிமையாக மாற்றுவதன் மூலமும், அந்தக் கொள்கையை சர்வதேச அளவில் விரிவுபடுத்துவதன் மூலமும், கியூபா உலகளாவிய அரசியலில் ஒற்றுமையின் அர்த்தத்தை மறுவரையறை செய்தது. காஸ்ட்ரோவின் தொலைநோக்குப் பார்வை உள்நாட்டு சமூக நீதியை சர்வதேச ஒத்துழைப்புடன் இணைத்தது, புரட்சிகள் சொல்லாட்சிக் கலை மூலம் மட்டுமல்ல, மனித நல்வாழ்வில் உறுதியான முன்னேற்றங்கள் மூலமாகவும் அவற்றின் மதிப்புகளை நிரூபிக்க முடியும் என்று வாதிட்டது.

இந்த அணுகுமுறை, அரசியல் இறுதியில் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சேவை செய்ய வேண்டும் என்ற பரந்த தத்துவ நம்பிக்கையை பிரதிபலித்தது. பல தசாப்த கால மருத்துவப் பணிகளைப் பிரதிபலிக்கும் ஓர் உரையில், காஸ்ட்ரோ இவ்வாறு குறிப்பிட்டார்: 'உலகில் எங்கும் நாம் உயிர்களைக் காப்பாற்றினால், நாம் மனிதகுலத்தின் மதிப்புகளைப் பாதுகாக்கிறோம்.' இந்த வார்த்தைகள் காஸ்ட்ரோவின் சர்வதேசியத்தின் நெறிமுறை சாரத்தைப் பிடிக்கின்றன. உலக அரங்கில் மருத்துவத் துறையில் கியூபாவின் பங்களிப்புகள் அதன் அளவையும் பொருளாதாரத் திறனையும் கொண்டதோர் நாட்டிற்கு அசாதாரணமானவை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். சுகாதார அணுகல், தொற்றுநோய்கள், மனிதாபிமான நெருக்கடிகளில் உலகம் தொடர்ச்சியான ஏற்றத்தாழ்வுகளை எதிர்கொள்ளும் வேளையில், கியூப மாதிரி (Cuban Model) தொடர்ந்து விவாதத்தைத் தூண்டி வருகிறது. சிறிய நாடுகள் என்ன சாதிக்க முடியும், சர்வதேச உறவுகளில் ஒற்றுமை வகிக்கக்கூடிய பங்கு பற்றிய அனுமானங்களை இது சவாலுக்குள்ளாக்கியுள்ளது.

கியூப மருத்துவ சர்வதேசியத்தின் மரபு, பணியமர்த்தப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கையிலோ அல்லது சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளிகளிலோ மட்டுமல்ல, அது உருவாக்கிய எடுத்துக்காட்டிலும் உள்ளது. அதிகாரம் மற்றும் சமத்துவமின்மையால் கட்டமைக்கப்பட்ட ஓர் உலகில்கூட, ஒத்துழைப்பு, கண்ணியம், பரஸ்பர பகிரப்பட்ட மனிதநேயத்தில் வேரூன்றிய ஒரு வேறுபட்ட சர்வதேச ஈடுபாடு சாத்தியமாகும் என்பதே கியூபாவும் காஸ்ட்ரோவும் முன்மொழிந்து சாதித்துக்காட்டிய மரபாகும்.



meenilankco@thaiveedu.com

சு. வேணுகோபால்

உன்னைப்போல் ஒருவன்
ஜெயகாந்தன்



அறியாத உலகத்தை படைப்பு எந்த அளவு எனக்கு அறியும் உலகமாக மாற்றுகிறது என்பதின் அடிப்படையிலேயே அதன் மீதான மரியாதை அமைகிறது. அதாவது அதனுள்ளிலிருந்து எனக்கொரு வாழ்வனுபவத்தை தரும் பலத்திலிருந்து அதற்கு ஒரு மதிப்பைத் தர நினைக்கிறேன். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் இந்நாவலை வாசிக்கிற போது தலைப்பை ஏன் இப்படி வைத்தார் என்று நினைக்கத் தோன்றவே இல்லை. இன்று நாவலை வாசித்து முடிகிற தருவாயில் தலைப்பு அதிகமும் ஊடாடுகிறது. 'உன்னைப்போல் ஒருவன்' என்ற வாசகம் 'என்னைப் போல ஒருவனைப்பற்றி வாசித்துக் கொண்டிருப்பதாக மாறுகிறது. அதாவது வாசகரை உளப்படுத்துகிற தலைப்பு. 'உன் வாழ்க்கை மாதிரியான ஒருவரின் வாழ்க்கை இது. படிக்கிறாயா ?' என்று பந்தப்படுத்துகிற தலைப்பு. வாழ்விலே அவமானங்கள் என்று கருதத்தக்க நிகழ்வுகளில் சிக்கி அல்லல்படுகிற - மனச் சிதைவுகளுக்கு ஆளாகிற மக்களைத் தேற்றுவதற்கும் ஆற்றுவதற்கும் வாழ்க்கை மீது நம்பிக்கை கொள்ள வைப்பதற்கும் சொல்கிற கதையாக ஜெயகாந்தன் உருவகப்படுத்தியிருக்கிறார் எனலாம். வாழ்க்கை என்பது இப்படித்தான் என்று உணர்த்த 'உன்னைப்போல் ஒருவன்' என்ற தலைப்பு. இக்கதையை ஒத்த வாழ்க்கையைக் கொண்ட வாசகருக்கு எதிர்வரும் வாழ்க்கையையும் நம்பிக்கையோடு எதிர்கொள்ள ஊக்கமளிக்கிற நோக்கம் இதற்கு உண்டு. ஒருவகையில் பார்த்தால் ஜெயகாந்தனின் ஏறக்குறைய எல்லா படைப்புகளுக்கும் இவ்விதமான நோக்கம் உண்டு என வரையறுக்கலாம். இந்த மேன்மையான நோக்கம் படைப்பில் இருப்பதினாலே ஒரு படைப்பை உயர்ந்த படைப்பு என வரையறை செய்யமுடியாது. படைப்புத் தொழிலில் படைப்பாளி செயல்பட்டிருக்கும் அசாத்தியமான நுணுக்கங்களால் தீர்மானிக்க வேண்டிய ஒன்று. அக உலகும் புற உலகும் படைப்பில் மூச்சுமுட்டச் செய்ய வேண்டும்.

'உன்னைப்போல் ஒருவன்' நாவலில் சேரி மக்களின் அகம் இருக்கிற அளவு அதன் இடம் உருவாகவில்லை. சேரித் தெருவின் சித்திரம் நாவலில் உருவாகவில்லை. தங்கம் - மாணிக்கம் - சிட்டிபாபு ஒரு வீடு. அன்னமா கிழவி வருகிறாள் வீடு தெருவில் தெரிவதில்லை. மன்னாரு - அலமேலு எதிர்த்த வீடு. இதுதான் நாவலின் இடப்பின்னணி. இத்தெருவில் சாக்கடை ஓடுவதில்லை. கருத்த நிர்வாணச் சிறுவர்களின் கோலாகலம் இல்லை. தெருவில் விழா இல்லை. சாராய நெடி இல்லை. வெட்டுக்குத்து இல்லை. சமரசம் இல்லை. ஒரு மரத்தைக்கூட காணவில்லை. ஆனால் அசோகமித்திரனின் 'விடுதலை'

tg.theeban@gmail.com

என்ற குறுநாவலில் சேரியின் சித்திரம் அழகாக உருவாகி வந்திருப்பதை வாசகர் உய்த்துணரமுடியும். அதற்கும் முன் இரண்டரை பக்கத்தில் 'பொன்னகரம்' எழுதிய கதையில் ஒன்னேகால் பக்கம் சேரித்தெருவின் கஜகஜப்பை அப்படியே கண்முன் கொண்டு வந்திருப்பார் புதுமைப்பித்தன், மீதி ஒன்னேகால் பக்கத்தில் கதை. புறஉலகம் உயிர்த்துடிப்போடு இந்நாவலில் இயங்கவில்லை. முழுக்க முழுக்க பாத்திரங்களின் மீது மட்டுமே கவனம் குவிந்திருக்கிறது. மாந்தர்களின் செயல்பாடுகள், ஒப்பனைகள், உடலசைவுகள் உயிரோட்டமாக இருக்கின்றன. தங்கத்தின் தலைமுடி (பரட்டை) பற்றிய விவரணை சேரியின் வாழ்க்கை தரிசனமாக உருமாற்றுகிறது. அதற்காக சீப்பு ஒடிந்ததை நாவலில் ஆங்காங்கே சிம்பாலிக்காக காட்டுவது வறட்டுத்தனமாக இருக்கிறது. தாய் - மகன் உறவு முறிந்ததை குறிப்பாக காட்டுகிறார். அதைத் திரும்பத் திரும்ப சொல்வதற்குப் பொருளில்லை. திரைப்படத்திற்குத் தோதான ஒரு உத்தி. அவ்வளவே. நாவல் நெடுக அதை சொல்வது அதனின் ஆழத்தை நீர்த்துப்போகச் செய்கிறது. மூன்றாம் முறை சொல்லும்போது அது சிறுபிள்ளைத்தனமான குறியீடாக ஆகிப்போய்விடுகிறது.



இதை நாவலாகக் கொண்டால் பல பலகீனங்களைப் பற்றிப் பேசவரும். குறுநாவல் என்றால் இதற்கொரு மேலான மதிப்பு உண்டு. குறுநாவலுக்கான ஒருமை இருக்கிறது. தங்கம் - சிட்டி என்ற இரு இணைகோடுகளின் சந்திப்புத்தான் கதை. தாய் - மகனின் பாசப்பிரச்சினைதான் நாவல். இந்த பிரச்சினைக்கு அனுசரணையாகவோ எதிராகவோ (எதிர்நிலை இல்லை) துணை மாந்தர்கள் வருகிறார்கள் எனலாம். இந்த துணைமாந்தர்கள் ஒரு குறுநாவலின் பலத்தை மீறி நிற்கிறார்கள். அதாவது மாணிக்கம், அலமேலு, கன்னியப்பன் மூவரும் அவர்களுக்குரிய சுயத்தோடும் சிட்டிக்குப் பக்க பலமாகவும் தோன்றியிருக்கிறார்கள். அப்படியானால் இதனை நாவலாகக் கொள்ளலாமே என்றால்... கொள்ள முடியாது என்பதுதான் இதில் உள்ள பலகீனம். தொண்டர் துரைக்கண்ணு நிகழ்காலத்திற்கு வரவே வராத மனுசர். இறுதியில் சிட்டிபாபு போய் சந்திப்பது என்பது கூட தாயிடம் இணையவைக்க வேண்டும் என்ற கதைத்திட்டத்திற்காகவே வருகிறார். கன்னியப்பன் ஒரு முழுமையான பாத்திரம்தான் என்றாலும் அவனுடைய மாற்றுத்தந்தையும் அம்மாவும் குழந்தைகளும் வாழ்வின் பொதுதளத்தில் வந்து கலப்பதில்லை. கன்னியப்பனின் நினைவு கூரலாக வருகின்றனர். அதேபோல அன்னம்மா கிழவியின் முன்னும் பின்னுமான வாழ்வு எழுதப்படாமலே தங்கத்திற்கு ஒரு உதவியாளாக மட்டுமே வருகிறாள். ஒருவகையில் சொல்லப்போனால் எடுபுடி. ஆனால் அன்னம்மா எடுபுடியல்ல. அவளின் வாழ்க்கை எழுதப்படவே இல்லை. அவள் ஆப்பம் சுடவே இல்லை. ஆனால் அவளின் முழுமையான பெயர் ஆப்பக்கார ஆயா அன்னம்மா. சிட்டிபாவுவைத் தேடி பார்க்கிற்கு வருகிற இடம் மிக சிறப்பாக இருக்கிறது. அவள் வெற்றிலை போட்டுக் கொள்ள ஆரம்பிப்பதும், சொல்லவந்த விசயத்தை விட்டு விட்டு வெற்றிலை போட அமர்வதும், கன்னியப்பனை விசாரிப்பதும் தங்கத்தை எடுத்து வளர்த்ததும், அவள் பெரியவளாகி வயிற்றில் ஒன்றை உண்டாக்கிக் கொண்டபோது மருந்து வைத்து தான் கலைக்க (சிட்டிபாபுவை) முயன்றதையும் சொல்லும் இடம் ரொம்ப யதார்த்தமாக உருவாகியிருக்கிறது என்பதை இவ்விடத்தில் குறிப்பிட்டும் சொல்கிறேன். இது அன்னம்மா பற்றிய விசயம் அல்ல. தங்கம், பாபு பற்றிய விசயம். அன்னம்மா இவர்களுக்காக வந்துபோகிறாள். நாவல் என்பது ஒரு முழுமையான வாழ்க்கை. அந்த முழுமைக்குள் மாந்தர்களுள் முழுமை கொண்டிருக்க வேண்டும். அவரவர் உலகம் படைப்பில் எழுந்து வர வேண்டும். அப்படிவராது - குறிப்பிட்ட பாத்திரங்களைச் சுற்றி உலா வருவார்களேயானால் ஒருமை தன்னாலே கூடிவிடும். அது எவ்வளவு பக்கமாக இருந்தாலும் குறுநாவலின் தன்மையைப் பெறும். மிகக்குறைந்த பக்கங்களில் (உன்னைப்போல் ஒருவன் நாவல் பக்கங்களை விட) எழுதப்பட்டிருக்கும் அசோகமித்திரனின் 'கரைந்த நிழல்கள்' ஒரு நாவலின் தன்மையைப் பெற்றிருக்கிறது. அதில் பன்மைத்தன்மை முழுமையை நோக்கி நகர்ந்தபடியே இருக்கிறது. 'உன்னைப்போல் ஒருவன்' எழுதப்பட்ட காலத்தில் ஒரு நாவலாகவே கொண்டிருக்கலாம். இன்றைய படைப்பு வெளிப்பாட்டில் அதை குறுநாவலாகவே கொள்ள முடியும். நாவலுக்குரிய பரந்துபட்ட அனுபவங்கள் அதற்கு இல்லை.

13, 14 வயது சிறுவனின் உள்ளம் இந்நாவலில் மிகச் சிறப்பாக உருவாகி இருக்கிறது. சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்க பிராயாசைப்பட்டவனின் கனவுகள் சின்னா பின்னமாகிறது. அவன் உளச்சிதைவுக்கு உள்ளாகிறான். சமூகம் தரும் அங்கீகாரத்திற்கு உரியவனில்லாமல் போகிறான். இந்தச் சமூகம் மறுமணத்தை கேவலமாக கற்பித்து வந்திருக்கிறது. கற்பென்ற சமூக கற்பிதத்தோடு வாழும் துணையை இழந்த பெண்ணை, திருமணமாகாத சுயசார்புள்ள பெண்ணை போஷிக்கிறது. இந்த மனோபாவத்திற்கு எதிரான விடுதலை உணர்வு கொண்ட பெண்களைத் தேவிடியாள் என்று தூஷிக்கிறது. காலங்காலமாகத் தொடரும் ஒரு கற்பித சமுதாயத்தில் பிறந்தவன் எதை விரும்புவான்? இயல்பிலேயே மதிப்பிற்குரியதாக போற்றப்படும் அந்த வாழ்க்கையை விரும்புவான். ஆனால் வாழ்க்கை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட

தல்ல. சூழலால் உருவாகி வருவது. எந்தச் சூழலில் வாழ நேர்கிறோமோ அதற்குரிய பயணம் தொடரவே செய்யும். சூழலுக்குரிய நீதி / மரியாதை என்று ஒன்று இல்லை. பொது நிலையில் வைத்தே மரியாதை கணிக்கப்படுகிறது. சிட்டி சேரியில் பிறந்தவன். சேரியின் வாழ்க்கையில் கற்பு என்பது ஒரு பொருட்டில்லைதான். ஆனால் பொது உலகம் அதையே அழுத்தமாக உயர்த்திபிடித்து வருகிறது. தனித்தனித் தீவுகளானாலும் எல்லோரும் ஏதோ ஒரு மையத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். அந்தந்த தீவுகளுக்குரிய பண்புகள் இருந்தாலும் அதனையும் மீறி இயக்கும் ஒரு கற்பிதத்திற்கு பலியாகிக் கொண்டிருக்கிறோம். பாபு அதற்கு பலியானவன், சமூகத்தில் மதிப்பிற்காக ஏங்குபவன். தாய் தங்கம் தனக்கான புதுவாழ்க்கையை (மாணிக்கம் - குருவி ஜோசியக்காரன்) துணிவோடு ஏற்கிறாள். இந்த உலகத்தைப் புரிந்தவள். அதை அவளுடைய மகனால் புரிந்துகொள்ள முடியாத வயது. புரிந்து கொள்ள முடியாத சமூகத்தால் உருவாக்கப்பட்டவன். இந்த பிரச்சினையின் ஊடாட்டத்தில் நாவல் இயங்குகிறது. வாழ்க்கையை எல்லோரும் போல வாழ்ந்து பார்க்க வேண்டும் என்று விரும்புகிற பெண்ணின் உலகமும், உயர்ந்த நிலையிலிருக்க வேண்டும் என்று விரும்புகிற சிறுவனின் தாய் மாறுபட்டு இருப்பதனால் உடைபடும் அவனின் உலகமும் மிக சிறப்பாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. உளச் சிதைவுக்கு ஆளான சிறுவன் காலப்போக்கில் எல்லாவற்றையும் கடந்து வாழ்க்கையைப் புரியத் தலைப்படுகிறான். இதுதான் சேரியின் இயக்கம். சேரி அவனுக்கு இந்த மேன்மையையும் சேர்த்தே கற்றுக்கொடுக்கிறது. தனது முந்தைய திருமண உறவிலிருந்து விலகி, மன்னாருடன் இணைந்து வாழும் அலமேலு, நீலாக்குட்டி போன்ற பாலியல் தொழிலாளர்களோடு உறவுவைத்து பால்வினை நோய் வாங்குகிற கன்னியப்பன், கன்னியப்பனின் தாயோடு வாழும் மாற்று தகப்பன், எல்லோரும் அடிப்படையில் அன்பு செலுத்துகிற மனிதர்களாகவே இருக்கிறார்கள். இந்த அன்புள்ளம் சேரியின் அலங்கோல வாழ்க்கைக்கிடையில் தவழ்ந்தபடியே இருக்கிறது. கன்னியப்பனுக்கு வந்த வி.டி.-யைப் போக்க பாபு உதவுகிறான். தங்கம் இறந்தபின் அவளால் வந்த பெண் சிசுவை அலமேலு வாஞ்சையோடு அணைக்கிறாள். (தங்கம் இருந்தபோது எலியும் பூனையாக சண்டை இட்டவர்கள்) தாயைத் தாறுமாறாக சிட்டி திட்டுவதும், வீட்டை விட்டு ஓடுவதும் அவளின் மீதான வெறுப்பினால் அல்ல. ஆழமான அன்பினால் வந்தவையே. தாயை வெறுப்பதுபோல நடிக்க வேண்டிய சூழல். மனம் அப்படி முரண்டுபிடிக்க வழிகாட்டுகிறது. யாரோ கிளி ஜோசியக்காரனுடனான உறவின் மூலம் பெற்றுக்கொண்ட குழந்தையை பாபு தன் தங்கையாக பாவிக்கிறான். அதை அந்த சேரி வாழ்க்கை கற்றுக்கொடுக்கிறது. தாய் - மகனின் உணர்ச்சிப்பூர்வமான கொந்தளிப்பை சித்திரிக்கும் குறுநாவல் இது.

எந்தவிதமான ஆர்ப்பாட்டமில்லாத மிகச்சாதாரண நடையில் நகரும் இந்நாவலில் கவித்துவமான இடம் ஒன்று வருகிறது. அது சேரியை உன்னதமாக மாற்றுகிறது. 'அந்த மிருதுவான மலர்ச்சியை, அப்பொழுதுதான் முகையவிழ்ந்த மலரை, தன்னில் மறைந்திருந்து இன்று தானும் ஒரு தனியான தளிரை, முன்னாகி இருக்கின்ற தனக்குப் பின்னாலும் தொடரவிருக்கும் முடிவற்ற சங்கிலியின் ஒரு முனையை அவனில் சுரந்து எதுவோ ஒரு நாள் அவளில் கலந்து 'அது'வாகி இன்று வெளியிலிருந்து அகன்று வந்து அதுவும் ஒரு அவளான அதிசயம்' மாணிக்கம் கைவிட்டுப் போனபின்தானே குழந்தை பிறக்கிறது! எத்தனையே மாணிக்கங்கள் அபலையாக கைகழுவி விட்டுச் சென்றபடியே இருக்கின்றனர். குழந்தைகள் சேரியை முத்தமிட பிறந்து கொண்டே இருக்கிறார்கள்.

நாவல் தன்னியல்போடு இயங்கவில்லை. கதையை ஜெயகாந்தன் விளக்கிக்கொண்டே நகர்த்துவது பெரும் குறை. எதிர் பாத்திரத்தின் மௌனத்தை 'இதுதானே ஜீ நினைத்தது' என உறுதியான தொனியில் விளக்குவது செயற்கையாக இருக்கிறது. அதற்கு விவாதத்தில் ஒருவர் பேசாதிருக்கும் பாணியை எடுத்துவிட்டு பொதுவாக சொல்லிக்கொண்டு போயிருந்தால் இயல்பாக இருக்கும். தி. ஜானகிராமன் வைக்கும் மௌனம் என்பது பதில் தெரியாததனால் அல்ல. பதில் தெரிந்தால். அது வேறு. இது வேறு.

வறண்ட மைதானத்தில் ஐந்தாறு தொட்டிச் செடிகளை வைத்துவிட்டுச் சென்றதுபோல் இருக்கிறது. அவைகள் பௌதீக உலகத்தோடு வேர்கொள்ளவில்லை. கதையற்ற கதையுலகம் இங்கு வெறுமையாக இருக்கிறது. மாந்தர்களின் கதைகள் சதா இயங்கிக்கொண்டிருக்கும் காலத்திலிருந்து உருவாகி வரவில்லை. வரலாற்றின் இயக்கத்தோடு பிணைப்பு கொள்ளவில்லை. ஜெயகாந்தனின் கற்பனையிலிருந்து உருவான மாந்தர்கள் பிரதியில் இருக்கிறார்கள். பிரதியை உதறிவிட்டு ஜனத்திரளில் இறங்கி நடந்து போகவில்லை. பிரதி மறைந்து மண்ணில் நடமாடும் உலகாக உருமாறுவதே படைப்பு கலை. கன்னியப்பன், பாபு, தங்கம், மாணிக்கம், அன்னம்மா கிழவி என ஐந்து மாந்தர்களை நாவலிலிருந்து தூக்கி ஒதுக்கி வைத்தாலும் படைப்பு இயங்கி கொண்டிருக்கும் சக்தி பெற்றிருக்க வேண்டும். இங்கு அப்படி நீங்கி பார்த்தால் என்னாகும்? காலம் இயங்காது உதிர்ந்துவிடும். மாந்தர்களை ஒதுக்கிவைக்க முடியாதளவு பௌதீக உலகத்தோடு பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். அரசியல், மதம், அலுவலகங்கள், பள்ளிகள், போக்கிரித்தனங்கள், வாணிப பரிவர்த்தனைகள், உலாத்தல்கள் இயங்கியபடிதானே இருக்கும்? அந்த பௌதீக உலகம் இந்நாவலில் எல்லோரும் போல இல்லை. படைப்பு என்பது கதை அல்ல.



venugopal@thaiveedu.com

மு. நித்தியானந்தன்



இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்:

நடேசய்யரின்

நூல் மீதான ஆய்வுக்குறிப்புகள்

'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' என்ற தலைப்பில் 1928-ஆம் ஆண்டில் கோ. நடேசய்யர், ஐந்து தலைப்புகளில், 30 பக்கங்களில் சிறுபிரசுரம் ஒன்றினை வெளியிட்டார்.

இந்த நூலின் முதல் பதிப்பிலேயே 50000 பிரதிகள் அச்சிடப் பட்டன என்று இந்நூலின் வெளியீட்டாளர் ஆரு. முத்தையா அம்பலம் குறித்திருப்பது, அந்நாளில் மட்டுமல்ல, தமிழ் நூலின் பதிப்பு வரலாற்றில் என்றுமே தொட்டுப் பார்க்க முடியாத சாதனை முயற்சியாகும்.

இந்த நூலின் அச்சாக்கம் பற்றி நான் வீரகேசரியில் (24.01.2022) எழுதிய கட்டுரை, 'ஐம்பதாயிரம் பிரதிகளில் வெளியான நடேசய்யரின் நூல்' என்ற தலைப்பில் வெளி யானது. அக்கட்டுரை எனது 'மலையகச் சுடர்மணிகள்' (2023) என்ற நூலிலும் இடம்பெற்றுள்ளது.

இந்தக்கட்டுரை, நடேசய்யரின் இந்தப் பிரசுரம் எழுந்த பின் னணியையும், இலங்கையில் அது எதிர்கொள்ள நேர்ந்த பிரச்சினைகளைப் பற்றியும் பேசுகிறது.

இந்தியச் சட்டம்:

இந்தப் பிரசுரத்தின் முன்னுரையின் ஆரம்பத்தில், நடேசய்யர் பின்வருமாறு எழுதுகிறார்:

'இலங்கை இந்தியத் தொழிலாளர்களைப் பற்றி இந்தியா விலும் இலங்கையிலும் பல சட்டங்கள் செய்திருக்கிறார்கள். இந்தியாவில் தொழிலாளர்களைச் சேர்க்கும் முறை, அந்நிய நாடுகளுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட பிறகு அவர்களது உரிமைகளைக் காப்பதற்கான காரியங்கள் முத லியவற்றைப் பற்றியது இந்தியச் சட்டம்.'

'தொழிலாளர்கள் இலங்கை வந்து சேர்ந்தது முதல் இந்தியா விற்குத் திரும்பிப் போகும்வரையில் அவர்களைப் பற்றிய சட்டம் இலங்கையில் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவை விட்டு வெளியேறும் எல்லாத் தொழிலாளர்க ளுக்குமே பொருத்தமுடையது இந்தச் சட்டம். இலங்கையில் செய்யப்பட்ட சட்டம் தோட்டம், ரோட்டு முதலிய வேலை களில் அவர்கள் இலங்கையில் அமர்ந்திருக்கும் வரை யிலுமே பொருத்தமுடையதாகும்.'

'இந்திய கவர்ன்மெண்டாரால் ஸ்தூலமாகக் குறிக்கப்பட்ட கொள்கைகளைத் தழுவியே, தங்கள் நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வரப்படும் தொழிலாளர்களைப் பற்றிச் சட்டங்கள் பிறநாட்டார் செய்யலாம். அக்கொள்கைகளுக்கு மாறாக எந்த நாடாவது சட்டங்கள் செய்யுமாகில் அந்த நாட்டிற்குத் தொழிலாளர்கள் அழைத்துப் போகாதபடித் தடுக்க இந்தியா கவர்ன்மெண்டிற்கு உரிமையுண்டு. இச்சட்டங்கள் பெரும்பான்மையும் தமிழில் பிரசுரிக்கப்படாதவை.'

இந்தச் சட்டங்களில் மலையகத் தொழிலாளர்களுக்குரிய உரிமைகள் எவை, ஆற்றவேண்டிய கடமைகள் எவை என்பதைச் சாதாரண தொழிலாளர்களுக்கு விளங்கக்கூடிய முறையிலே இந்தப் பிரசுரத்தை நடேசய்யர் எழுதியிருக் கிறார்.

நடேசய்யர் இந்தப் பிரசுரத்தில் குறிப்பிடும் இந்திய அர சாங்கம் இயற்றிய சட்டம் பற்றியும், அதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இயற்றிய சட்டம் குறித்த தெளிவுடன் இப்பிரசுரத்தை அணுகுவதே அறிவுடைமையாகும்.

1922-ஆம் ஆண்டின் இந்தியக் குடியகல்வுச் சட்டம் (Indian Emigration Act 1922) இந்தியத் தொழிலாளர்கள் பிரிட்டிஷ் காலனிய நாடுகளுக்குச் செல்வது பற்றி இயற்றப்பட்ட வரலாற்று முக்கியம் வாய்ந்த சட்டமாகும். இச்சட்டத்தின் அடிப்படையிலேயே நடேசய்யரின் இச்சிறுபிரசுரம் எழுதப்பட் டுள்ளது.

இந்திய அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர நிர்ப் பந்தித்த காரணிகள் எவை என்பன நுணுகிய ஆய்வுக்கு ரியது.

ஒப்பந்தக் கூலிகள்:

'இருபது லட்சம் வறுமைப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் வெளிநாடுகளை நோக்கிப் புலம்பெயர்ந்துள்ளனர். இவர் களில் பெரும்பாலானோர் இலங்கை, மலேயாவில் உள்ள பெருந்தோட்டங்களை நோக்கிக் குடிபெயர்ந்தனர். பலர் மொரிஷியஸ், ட்ரினிடேட், பிஜித்தீவு, தென் ஆபிரிக்கா, கிழக் காபிரிக்கா, பிரிட்டிஷ் கயானா ஆகிய நாடுகளை நோக்கியும் சென்றனர். இந்த நாடுகளிற் பலவற்றில் 'ஒப்பந் தக்கூலிகளாக'ச் (indentured workers) சென்றவர்கள் அடிமைகள் போலவே நடத்தப்பட்டனர். இந்தத் தொழிலா ளர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், இவர்கள் தோட்ட முதலாளிகளின் அடிமைகள் ஆனார்கள். இந்த ஒப்பந்தக்கூலி முறையில் நடைபெற்ற கொடூரங்கள், குறிப்பாக பிஜித் தீவில் இழைக்கப்பட்ட அநியாயங்கள் இந் தியாவிற்குத் தெரியவந்தன. இதற்கெதிரான கிளர்ச்சிகள் இந்தியாவில் எழுந்ததையடுத்து, கூலி ஒப்பந்தமுறை ஒழிக் கப்பட்டது' என்று ஜவஹர்லால் நேரு குறிப்பிடுகிறார். (Jawa-harlal Nehru, Glimpses of World History -1934, page 644)

'பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்' என்ற தலைப்பில் பாரதியார் பாடிய 'கரும்புத் தோட்டப் பாடல்' நெஞ்சை உருக்கும் பாடலாகும்.

'கரும்புத் தோட்டத்திலே - ஆ!
கரும்புத் தோட்டத்திலே.
கரும்புத் தோட்டத்திலே - அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்துகின்றனரே! - வறிந்து
மாதர்தன் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்குகின்றனரே! - அவர்
துன்பத்தை நீக்க வழிஇல்லையோ? ஒரு
மருந்து இதற்கு இலையோ? - செக்கு
மாடுகள் போல் உழைத்து ஏங்குகின்றார்,
அந்தக் (கரும்புத் தோட்டத்திலே)

பெண் என்று சொல்லிடிலோ - ஒரு
பேயும்இரங்கும் என்பார் தெய்வமே! - நினது
எண்ணம் இரங்காதோ? - அந்த
ஏழைகள் அங்கு சொரியும் கண்ணீர்வெறும்
மண்ணில் கலந்திடுமோ? - தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே, அங்கோர்
கண்ணற்ற தீவினிலே - தனிக்
காட்டினில் பெண்கள் புழுங்குகின்றார்,
அந்தக் (கரும்புத் தோட்டத்திலே)

'அந்நாளிலே ஒப்பந்தக்கூலிமுறையைக் கண்டிக்கும் பொதுக் கூட்டங்களிலே பாரதியின் அப்பாடல்கள் தஞ்சை நடராஜன் என்பவரால் பாடப்பெறும். ஹரிச்சந்திரா மயான காண்டத்தைக் காணும் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறு வதைப் பார்த்துள்ளோம். 'கரும்புத் தோட்டத்திலே' என்னும் பாடல் பாடப்படுகையில் பொதுக்கூட்டத்திலுள்ள மக்கள் கண்ணீர் வடித்துத் தேம்பித்தேம்பி அழுவதை, அன்னி பெசன்ட் அம்மையாரும், ஆன்ட்ரூஸ் பெருமகனாரும் பார்த்துப் பரவசமடைந்தனர்' என்று எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் குறிப்பதை, சிதம்பர ரகுநாதன் எடுத்துக்காட்டுகிறார். (ரகுநாதன், பாரதி: சில பார்வைகள்)

'1874 ஒக்ரோபர் 10-ஆம் திகதி பிஜித் தீவு விக்டோரியா மகாராணி வசமானது. ஐந்து ஆண்டுகளின் பின்னர், பிஜி அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில், கூலி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் பிஜித் தீவிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். 1879 - 1916 காலப்பகுதியில் 60,000 இந்தியர்கள் பிஜித் தீவிற்குச் சென் றிருந்தனர். 1970-இல் பிஜித்தீவு சுதந்திரம் அடைந்தபோது, உள்ளூர் பிஜி வாசிகளைவிட இந்தியர்களின் குடித்தொகை அதிகமாகவிருந்தது. (K.L. Gillion, (1977) The Fiji Indians-Challenge to European Dominance 1920 - 1946)

மொரிஷியசில் இந்தியர்கள்:

ஒப்பந்தக்கூலி முறையின்கீழ், 1839-ஆம் ஆண்டில்தான் இந்தியத் தொழிலாளர்கள் முதன்முதலாக மொரிஷிய சிற்குப் புலம்பெயர்ந்து சென்றனர். அங்கே இந்தியத் தொழி லாளர்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்று மறு

ஆண்டிலேயே, 1840-ஆம் ஆண்டிலேயே இந்திய அரசு மொரிஷியசிற்கு இந்தியர்கள் புலம்பெயர்வதைத் தடை செய்தது. ஆனால் தடை செய்வதும், பின் தடையை நீக்குவ துமாக, கூலி ஒப்பந்தமுறை 1915-இல் நீக்கப்பட்டபோது, அந்த முறை நடைமுறையிலிருந்த 78 ஆண்டுக் காலப்பகு தியில், அங்கு இந்தியத் தொழிலாளர்கள் மிக மோசமாகவே நடத்தப்பட்டிருந்தனர்.

சி.எப். அன்றூஸ் அவர்களும் டபிள்யு.டபிள்யு. பியர்சன் அவர்களும் பிஜித் தீவின் ஒப்பந்தக் கூலிமுறை பற்றிச் சுயா தீனமான விசாரணையை நடத்தி, 1916-ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை இந்தியாவில் அதிர்வலைகளை ஏற்ப டுத்தியது. இந்தக் கூலி ஒப்பந்தம் தொழிலாளர்களின் சுய விருப்புடன் செய்யப்பட்ட ஒப்பந்தமோ, விளங்கிச் செய் யப்பட புத்திபூர்வமான ஒப்பந்தமோ அல்ல என்று இந்த விசாரணைக் குழுவினர் அறிக்கையிட்டனர்.

இந்த ஒப்பந்தம், அபாயகரமாக ஐந்து ஆண்டுகள் என்று நீண்டகாலத்திற்குச் செய்யப்பட்ட ஒப்பந்தமாகையால் தனிநபர் சுதந்திரத்தினை துஷ்பிரயோகம் செய்வதற்கு இலகுவாக வழி வகுத்தது. கரும்புத் தோட்டச் சொந்தக்கா ரர்கள் நீண்டகாலத்திற்கான ஒப்பந்தத்தையே நாடி நின்றனர். அதற்கு அவர்கள் இரண்டு காரணங்களை முன்வைத்தனர்.

- இந்தியாவிலிருந்து பிஜிக்குத் தொழிலாளர்களைக் கொண்டுவருவதற்கான செலவு மிக அதிகமாகும்.
- கரும்புத் தோட்டத் தொழில், பயிற்சியை வேண்டி நிற்கிற தென்றும், கூலிகள் தொழில் பழகக் காலம் பிடிக்கும் என்றும் ஒப்பந்தக் காலம் என்பது தொழிற் பயிற்சிக் காலமே என்றும் கூறினர்.

சுதந்திரத்தோடும் சமத்துவத்தோடும் தொழிலாளர்களுக்குக் குறைந்த காலத்திலேயே பயிற்சியை வழங்க முடியும் என்றும், சுதந்திரத்தின் தார்மிக, சமூக விழுமியங்கள் என்பன மிக மேலானவை என்றும் விசாரணை அறிக்கை கூறியது.

இந்தியாவில் கூலிகளைத் திரட்டும்போது, மோசடி, தந்திரம், ஏமாற்று என்பனவே செயற்படுகின்றன என்பதும், கல்வியறி வற்ற கூலிகள் முதலிலிருந்து முடிவு வரை ஈவிரக்கமற்ற சுரண்டலுக்கு உள்ளாகுகிறார்கள் என்பதும் தெளிவாகியது. கூலிகளைத் திரட்டும் ஆட்கட்டிகள், பொலிஸின் துணை யோடு கூலிகளை ஏமாற்றி, ஒப்பந்தத்தில் சம்மதம் தெரிவிக்க வைப்பதால், இந்தக் கூலி ஒப்பந்த முறை கேடு விளைவிப்பது என்பது உலகிற்குத் தெரியவந்தது.

'பிரித்தானியாவும் பிரித்தானிய சாம்ராஜ்யமும், ஒருவேளை இந்தியாவை இழந்துபோகுமானால், அதற்கான காரணம் அவர்களின் உள்ளூர் நிர்வாகம் பற்றிய பிரச்சினையாக இருக்கமாட்டாது; மாறாக, பிரித்தானிய காலனிகளில் இந்தி யர்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பதுவே அதற்கான காரணமாகவிருக்கும்' என்று இந்தியத் தாராளவாதத் தலை வர்களில் ஒருவரான கோவிந்தராகவ ஐயர் 1920-இல் குறிப் பிட்டார்.

இந்தியர்களின் குடியகல்வுச் சட்டம்:

கடல்கடந்து போன இந்தியர்களின் வாழ்நிலைமைகளில் முன்னேற்றம் வேண்டும் என்று, கால்நூற்றாண்டுக்கு மேலாக இந்தியத் தேசியவாதிகள் நடத்திய பெரும் போராட்டத்தின் பின்னரே 1923-ஆம் ஆண்டு இந்தியர்களின் குடியகல்வுச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இச்சட்டத்தின்படி, குடிபெயரப்போகின்ற நாட்டில், ஏற்கனவே ஐந்தாண்டுகளுக்குக் குறையாத காலம் ஒருவர் வாழ்ந்திருப் பாரேயானால், அவரைக் 'குடிபெயர்ந்து' (emigrant) செல்பவ ராகக் கருதமுடியாது என்று இந்திய அரசு குறிப்பிட்டது. ஐந் தாண்டுகளுக்கு மேலாக ஒருவர் வெளிநாட்டில் வாழ்ந்தி ருந்தால், அவர் அந்த நாட்டின் பிரஜையாக இருக்கிறார் என்று கருதப்பட்டது.

இந்தியா இயற்றிய குடியகல்வுச் சட்டத்திற்கு அனுசர ணையாக, இலங்கை அரசாங்கம் ஆக்கிய இந்தியக் குடிவரத்துத்



> 1837-ஆம் ஆண்டு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 5-ஆம் இலக்கச் சட்டம், 'கூலி'களை ஏற்றிச் செல்லும் நடைமுறைக்கு சட்ட அங்கீகாரம் வழங்கியது. ஒப்பந்தக் கூலிகளை ஒழுங்குபடுத்தும் பொறிமுறையினை அரசு சட்டபூர்வமாக அமுல்படுத்தியது.

தொழிலாளர் கட்டளைச் சட்டமானது (Indian Immigrant Labour Ordinance No 1 of 1923), ஏற்கனவே இலங்கையில் வாழும் இந்தியர்களையும், புதிதாக வருகின்ற இந்தியத் தொழிலாளர்களையும், ஒன்றாக 'குடிவரத்தாளர்கள்' என்றே அட்டவணைப்படுத்தியது.

இந்தியச் சட்டத்தின்படி, சென்னை அரசாங்கம் குடிபெயர்ந்து செல்பவர்களின் நலன்களுக்காக Protector of Emigrants என்ற உயர் பதவியில் ஒருவரை நியமனம் செய்து, அவரது தலைமையகம் மண்டபம் கேம்ப்பில் செயற்பட்டது. அவருக்கு உதவியாக ஒரு மருத்துவ அதிகாரியும் அங்கேயே செயற்பட்டார். இந்திய அரசாங்கத்தின் சார்பில், இலங்கைக்குக் குடிபெயர்ந்து செல்லும் தொழிலாளர்களை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு இவர்களுடையதாக இருந்தது.

இலங்கைக்கு ஆட்களைத் திரட்டும் பொறுப்பினை மேற்கொள்வதற்கு, இலங்கை அரசாங்கம் குடியகல்வு ஆணையாளர் (Emigration Commissioner) ஒருவரை நியமித்து, அவர் திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டார். மதுரை, சேலம், திருச்சி, வேலூர், மண்டபம் ஆகிய ஐந்து இடங்களில் ஆட்களைத் திரட்டும் பணிமனைகளை ஏற்படுத்தினர்.

இலங்கை அரசாங்கம் தமிழ்நாட்டில் தொற்றுநோய்த் தடுப்பு முகாம்கள் இரண்டினை அமைத்தன. இலங்கையில் தலைமன்னாரில் இறங்கும் தொழிலாளர்களுக்காக, தனுஷ்கோடியில் மண்டபம் கேம்ப் தடுப்புமுகாமை ஏற்படுத்தினர். கொழும்புத் துறைமுகத்திற்குச் செல்பவர்களுக்காக, தூத்துக்குடியில் தட்டப்பாறைத் தடுப்புமுகாமை அமைத்தனர். ஒவ்வொரு நோய்த் தடுப்புமுகாமிலும் இரண்டு இலங்கை மருத்துவ அதிகாரிகள் செயற்பட்டனர். இவை இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கின.

இலங்கையில், இந்திய அரசாங்கத்தின் சார்பில், இந்தியர்களின் நலன்களைப் பேணுவதற்காக, இந்திய கவர்ன்மென்ட் ஏஜென்ட் (Indian Government Agent) ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் கண்டியைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டார்.

இலங்கை நடைமுறை:

இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இலங்கை சென்றடைந்ததும், அவர்களின் நலன்களைப் பார்ப்பதற்காக, இலங்கை அரசால் கண்ட்ரோலர் ஒருவரும், (Controller of Indian Immigrant Labour), அவருக்கு உதவியாக மருத்துவ அதிகாரிகளும் நியமனம் பெற்றனர்.

இவர்களுடன், இலங்கை அரசாங்கம் இந்தியக் குடிவரத்துத் தொழிலாளர்களுக்கான சபை (Board of Indian Immigrant Labour) ஒன்றினையும் அமைத்தது. பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையின் தலைவர் இந்தியத் தொழிலாளர்களின் நலன்களை நிர்வகிப்பவராக இருந்தார். இந்தச் சபையில் தோட்ட முதலாளிகளின் சார்பில் ஐந்து பிரதிநிதிகளும் இந்தியத் தொழிலாளர்களின் சார்பில் சட்டசபையின் மூத்த இந்தியப் பிரதிநிதி ஒருவரும் இடம்பெற்றனர்.

இதனைவிட, இந்தியத் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயம் செய்வதற்கான 'குறைந்தபட்சச் சம்பளக் கட்டளைச் சட்டம்' (Mlnimum Wage Ordinance) உருவாக்கப்பட்டு, பல உள்ளூர்ச் சம்பளச் சபைகள் அமைக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைத் திரட்டுவதற்கான செலவினங்களுக்கான பொது நிதியம் ஏற்படுத்தப்பட்டு, அந்நிதியத்திற்குத் தோட்ட முதலாளிகளும் இலங்கை அரசாங்கமும் நிதி நல்கின. ஒரு தொழிலாளியை இந்தியாவிலிருந்து திரட்டி, இங்கு கொண்டுவந்து சேர்ப்பதற்கு ரூபா 21.37 சதம் பிடித்தது.

கங்காணி மூலம் ஆள்திரட்டும் பழைய முறை ஒழிக்கப்பட்டது என்று கூறப்பட்டாலும், ஆள் திரட்டும் வேலையில் கங்காணிகளே ஈடுபட்டிருந்தனர். பதினெட்டு வயதிற்குக் குறைந்த சிறுவர்களும், பெண்கள் கடத்தப்பட்டும் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது பற்றி முறைப்பாடுகள் எழுந்தன.



> இலங்கையில் 1847 - 1867 காலப்பகுதியில் 350,000 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும், அவர்கள் அனேகமாக மரணமுற்றிருக்கவேண்டும் என்றும் இலங்கை மருத்துவ அதிகாரி டாக்டர் டபிள்யு.ஜி. பன் டோர்ட் கூறுகிறார்.

பாதுகாப்பு அதிகாரிகள்:

இந்தியத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதற் கென்று பாதுகாப்பு அதிகாரிகள் (Protector of Immigrants) நியமிப்பது ஒன்றும் இந்திய அரசு 1922-இல் இயற்றிய சட் டத்தில் காணப்படும் புதுமை அல்ல. எண்பது ஆண்டுக ளுக்கு முன்பே, 1842-ஆம் ஆண்டில் மொரிஷியஸ் நாட்டிற்கு இந்தியத் தொழிலாளர்கள் கொண்டு செல்லப்பட்டபோதே, குடிவரத்து அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு, புரொட்டக்டர் களும் ஏற்படுத்தப்பட்டிருந்தனர். ஆனாலும், இந்தியர்க ளுக்குச் சொல்லிமாளாத கொடுமைகள் அங்கு நிகழ்த்தப் பட்டன.

இந்தச் சட்டங்களின் பின்னால், எவ்வாறு ஆட்களைத் திரட் டுவது என்பதுதான் ஏகாதிபத்திய அரசினதும், பெருந் தோட்ட முதலாளிகளதும் பெரும் அக்கறையாய் இருந்தன. திடகாத்திரமான ஆட்களைத் (able bodied) திரட்டுவதுதான் நோக்கமாயிருந்தது. இந்த ஆள்திரட்டலில் விளைந்த அனர்த்தங்கள் எண்ணிறந்தன.

இந்தியாவிருந்து இலங்கைக்குத் தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டபோது, வந்து சேரும் வழியில் ஏற்பட்ட மரணங்கள் திகிலூட்டுவன. 1891-1901 காலப்பகுதியில் 146,374 பேரும், 1901 - 1911 காலப்பகுதியில் 286,220 பேரும் காணாமல் போயிருப்பதாக ஒரு மதிப்பீடு கூறுகிறது.

'இந்தியாவிலிருந்து ஒரு கூலியை இறக்குமதி செய்வதற்கு ஆகும் செலவு, ஓர் அடிமையை இறக்குமதி செய்வதற்கு ஆகும் செலவைக் காட்டிலும் அரைவாசிதான்' என்று மேற் கிந்தியத் தீவுகளில் கணக்குப் போட்டுப் பார்த்திருக்கி றார்கள்.

இலங்கையில் 1847 - 1867 காலப்பகுதியில் 350,000 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும், அவர்கள் அனேகமாக மர ணமுற்றிருக்கவேண்டும் என்றும் இலங்கை மருத்துவ அதிகாரி டாக்டர் டபிள்யு.ஜி. பன் டோர்ட் (Dr W.G.Van Dort) கூறுகிறார்.

குறிப்பிட்ட எந்த ஒப்பந்தமும் இல்லாமல், யாரின் கீழ் வேலைக்கு அமர்த்தப்படப்போகிறோம் என்றும் தெரியாமல், இந்தியத் தொழிலாளர்கள் ஊகப்பொருளாக (as an object of speculation) இங்கு கொண்டுவந்து இறக்கப்படுவதாக, மொரிஸியசின் காலனியச் செயலாளரின் அலுவலக அறிக்கை ஒன்று கூறுகிறது. ஊகப்பொருள் என்பது, மொரிஷியசுக்குக் கூலிகள் கொண்டுவரப்பட்ட பின், எந்த முதலாளி அதிக விலை கொடுக்கிறாரோ, அவருக்கு அந்தத் தொழிலா ளியைக் கொடுத்துவிடும் ஊகநோக்கில் இந்தத் தொழிலா ளர்கள் கொண்டுவரப்பட்டிருப்பதைக் குறிக்கிறது.

'இவ்வாறு அடிமை வியாபாரம் மெதுவாக உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறது. நாடாளுமன்ற விதிமுறைகள் என்ற நிழ லின்கீழ், மோசடிகளுக்கும் சட்டவாக்கத்திற்கும் இடையில் ஒரு பந்தயம் நடக்கிறது. இதில் சட்டவாக்கம் என்பது எப்போதுமே பின்னால்தான் இயங்குகிறது. கூலி வியாபாரத் திலும் இதுவே நடக்கிறது... முற்றாக இதனைத் தடை செய்வது மட்டுமே பாதுகாப்பான ஒரே வழி' என்று 1839-ஆம் ஆண்டிலேயே இதற்கு எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'கூலி', ஆவணமாதல்:

ஒரு விவசாயியை 'ஒப்பந்தக்கூலி'யாக உருமாற்றம் செய்யும், அட்டவணைப்படுத்தும், ஆவணப்படுத்தும் மோச டியை ஏகாதிபத்தியம் செய்தது. இந்தியாவிலிருந்து ஆள் திரட்டலில் 'ஒப்பந்தமுறை' என்பது முக்கியமான இடத்தை வகிக்கிறது. ஒரு விவசாயி நாட்டைவிட்டு வெளியேறி, கண்காணாச் சீமைகளில் வேலை பார்க்கச் சம்மதிக்கிறேன் என்று உறுதிப்படுத்தும் சட்டப் பொறிமுறைக்குள் விழுத்தும் வலைப்பின்னல் இதுவாகும். ஒப்பந்தம் ஓர் ஆவணமாகிறது. கல்வியறிவற்ற, எழுதப்படிக்கத் தெரியாத, கைநாட்டுப் போட மட்டுமே பழக்கப்பட்ட ஒரு விவசாயிக்கும், பிரித் தானிய நாடாளுமன்றத்தில் சட்டங்களை ஆக்குவதிலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய பெருந்தோட்ட முதலாளிக ளுக்கும் இடையில், இருசாராரும் சமமான தளத்தில் நின்று செய்யப்பட்டதான ஒரு மோசடி ஒப்பந்தம் இது. தனது



ஊழியத்தை விற்க விவசாயி தானே விரும்பி, இசைந்து சம் மதித்துச் செய்யப்பட்ட ஒப்பந்தம் இது என்று நீதிதேவ தையின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பூஜை மலர் இது. கடல் கடந்த நாட்டில் என்ன நடக்கவிருக்கிறது என்பது பற்றி எந்த விளக்கமும் இல்லாத மனிதர்முன்னே போடப் பட்ட ஏமாற்றுக் கடதாசி இது. இந்த மோசடிக் கடதாசி, ஒப்பந்த விவசாயியின் அவல நிலையை மூடிமறைத்தது. பஞ்சப்பட்ட அவனின் பரிதாப நிலையை வஞ்சகமாகத் தங் களுக்கு வசதியாகப் பாவித்த ஆள் வோரின் கொடு மைக்கான சாட்சியம் இது.

1837-ஆம் ஆண்டு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட 5-ஆம் இலக்கச் சட்டம், 'கூலி'களை ஏற்றிச் செல்லும் நடைமுறைக்கு சட்ட அங்கீகாரம் வழங்கியது. ஒப் பந்தக் கூலிகளை ஒழுங்குபடுத்தும் பொறிமுறையினை அரசு சட்டபூர்வமாக அமுல்படுத்தியது.

இந்தக் கொடூர நடைமுறையின் தொடர்ச்சிதான், 85 ஆண்டு களுக்குப் பின்னர் 1922-ஆம் ஆண்டு மீண்டும் புதிய வடி வத்தில் இந்தியாவில் அரங்கேறியது. தனிப்பட்ட தோட்ட முதலாளிகளுக்குப் பதிலாக, அரசாங்கமே முதலாளிக ளுக்குத் துணையாக நின்று, ஆட்களைத் திரட்டுவதற்கான பொறிமுறையை இந்தப் புதிய சட்டம் ஆக்கிக்கொடுத்தது.

லைசென்ஸ்:

இந்தியாவிலிருந்து ஆட்களைத் திரட்டுவதற்கான தரகர்க ளுக்கு லைசென்ஸ் வழங்குவதற்கான புதிய நடைமு றைகளை 1922-ஆம் ஆண்டுச் சட்டம் ஏற்படுத்தியது.

இந்தச் சட்ட நடைமுறையை நடேசய்யர் தனது 'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' என்ற பிரசுரத்தில் விரிவாக விளக்குகிறார்.

'அந்நிய நாடுகளுக்கு ஆள் சேர்ப்பதானால் லைசென்ஸ் பெற்றே ஒருவன் செய்யவேண்டும். ஆள் சேர்க்கும் தொழிலா ளிக்குக் கங்காணியென்று பெயர். அவன் இந்தியனாயிருக்க வேண்டும். எந்த முதலாளிக்காக ஆள் சேர்க்கிறானோ அவனிடம் 6 மாத காலமாவது வேலை செய்தவனாகயிருக்க வேண்டும்.'

என்று ஆள்திரட்டும் நபர்களுக்கான தகுதிகளைக் கூறுகிறார்.

பின்னர் லைசென்ஸ் பெறுவதற்கான காகித வேலைகளை, அத்தாட்சிப் பதிவுகளை அடுக்கிச் செல்கிறார்.

- லைசென்ஸ் வேண்டும்போது, முதலாளி அதற்காக உள்ள பாரத்தில், தோட்டப்பெயர், இடம்-பகுதி, கொடுக் கப்படும் வேலைகள் விவரம், கொடுக்கப்படும் சம்பள ரேட், கங்காணி பெயர், இவனது இந்தியா விலாசம், இந்தி யாவில் எந்தப் பகுதிக்கு ஆள் சேர்க்கப்போகிறான் என்ற விவரம், கங்காணி கையொப்பம் அல்லது ரேகை முதலிய வற்றை எழுதிக் கொழும்பிலிருக்கும் கண்ட்ரோலருக்கு அனுப்பவேண்டும்.
- கண்டிரோலரும் கையொப்பம் போட்டு, இந்தியா கவர் மெண்ட் ஏஜண்டுக்கு அனுப்புவார்.
- அவரிடம் ஒப்பம் வாங்கி, முதலாளிக்கு அனுப்புவார்.
- கங்காணி இலங்கையில் இருந்தால், முதலாளியிடமி ருந்து, அந்த லைசென்சை எடுத்துக்கொண்டு இந்தியா விற்குப் புறப்படுவான்.
- கங்காணி இந்தியாவில் இருந்தால், அந்த லைசென்சை அவனுக்கு அனுப்புவார்கள்.
- லைசென்ஸ் கிடைத்ததும், அதனை எமிகிரேசன் கமிசனர் என்ற உத்தியோகஸ்தரிடம் (திருச்சியிலிருப்பவர்) கையொப்பம் வாங்க வேண்டும்.
- இலங்கையிலிருந்து இந்தியா போகும் கங்காணியாயி ருந்தால், மண்டபத்திலுள்ள உதவி உத்தியோகஸ்த ரிடமே கையொப்பம் வாங்கிக் கொள்ளலாம்.
- கங்காணி ஆள் திரட்டும்போது, சேர்க்கப்படும் தொழிலா ளர்களின் பெயர், விலாசம், தகப்பன் பெயர், முதலிய விவ ரங்களை லைசென்ஸின் பின்பக்கத்தில் காட்டப்பட்டி ருக்கும் இடத்தில் பதிவு செய்ய வேண்டும்.



> தோட்டக்காரர் உங்களைத் தோட்டம் விட்டுப் போகச் சொன்னாலும், ஒரு மாதம் நோட்டீஸ் அல்லது ஒரு மாதச் சம்பளம் முன்பணமாகக் கொடுத்து அனுப்ப வேண்டும்.

- பிறகு, அத்தொழிலாளர்களது ஊர் கிராம் முன்சீபிடம் கொண்டுபோய், அவருடைய கையொப்பமும் வாங்க வேண்டும்.
- லைசன்ஸில் குறிப்பிடப்பெற்ற ஆசாமிகள் அந்நிய நாடுகளுக்குப் போவதைப் பற்றி ஏதாவது விவகாரம் ஏற்பட்டு, அந்தத் தொழிலாளி அந்நிய நாடு போக வேண்டும் என்று எண்ணினால், ஓர் மாஜிஸ்ட்ரேட்டிடம் போய் உத்திரவு பெறவேண்டும்.
- இதன் பிறகு தொழிலாளர்களை டெப்போக்களுக்குக் கொண்டுபோய், அங்கே பதிவு செய்யவேண்டும்.

தொழிலாளர்கள் எவ்வாறு ஆவணப்படுத்தப்படுகிறார்கள் (documented) என்பது நம் அவதானத்திற்குரியது.

இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனியின், லெடன்ஹோல் அலுவலகத்தில் பணியாற்றும் கிளார்க்கர்மார், இந்திய அரசாங்கத்தை 'எழுதித் தள்ளும் மாபெரும் இயந்திரமாக' மாற்றியமைத்துள்ளனர் என்று கார்ல் மார்க்ஸ் மிகச் சரியாக மதிப்பிட்டுள்ளார்.

ஆள் திரட்டுவதற்காக வழங்கப்படும் இந்த லைசென்ஸ் முறை மூலம், பெருந்தோட்ட முதலாளிகள் இந்தியாவிலிருந்து தொழிலாளர் வருகையின்மீது, தமது பூரண கட்டுப்பாட்டைச் செலுத்தக்கூடியதாக இருந்தது. இந்தச் சட்டத்தின் கீழ், 1926 - 1939 காலப்பகுதியில் 92,814 லைசென்சுகளும் 14,520 புதுப்பிக்கப்பட்ட லைசென்சுகளும் வழங்கப்பட்டிருந்தன. ஒரு லட்சத்திற்கும் அதிகமான லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆட்டு மந்தைகளைப்போல அவர்கள் திரட்டப்படுகிறார்கள். நடேசய்யர் எழுதியிருப்பதைப்போல, 'தொழிலாளர்களை டெப்போக்களுக்குக் கொண்டுபோய்' விடுகிறார்கள். தொழிலாளர்கள் செல்வதில்லை. 'கொண்டுபோகப்'படுகிறார்கள். அவர்கள் தங்கவைக்கப்பட்டு, இலங்கைக்கு அனுப்புங் காலத்தில், இரவு ஆகாரத்திற்காக ரொட்டியும், கொஞ்சம் சீனியும், வாழைப் பழமும் கொடுத்தனுப்புவார்கள்.

மண்டபம் கேம்பில் 6 நாட்கள் தங்கவைக்கப்பட்டு, யாதொரு விதமான வியாதியும் இல்லாதிருந்தால் அவர்களை மண்டபம் விட்டு 7-ஆவது நாள் அனுப்பிவிடுவார்கள். இங்கு தொழிலாளர்கள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள்.

நாட்டுக்கோட்டைச் செட்டிமார் போன்ற வசதிகொண்ட பயணிகளே, மண்டபம் கேம்பிற்கூடாகப் பயணிக்கும்போது மரியாதை இல்லாமல் நடத்தப்பட்டிருப்பது பற்றி நடேசய்யர் சட்டசபையில் கேள்வி எழுப்பியுள்ளார். இந்நிலையில் தோட்டங்களில் வேலை செய்யச் செல்லும் வறிய தொழிலாளர்கள் எவ்வாறு நடத்தப்பட்டிருப்பார்கள் என்று கூறத்தேவையில்லை.

'மண்டபம் கேம்பில் குறைகள் இருந்தால், அங்குள்ள உத்தியோகஸ்தர்களிடம் தெரிவியுங்கள். நீங்கள் சொல்லியும் கவனிக்காவிட்டால், கீழ்க் கண்டவர்களுக்குக் கடிதம் எழுதுங்கள்' என்று கூறி, சேர்மன் - போர்ட் ஆப் எமிக்கிரேஷன் அன் குவாரண்டைன், கொழும்பு, கண்டிரோலர் அப் இண்டியன் எமிக்கிரண்ட் லேபர், கொழும்பு, இந்தியா கவர்ன்மெண்ட் ஏஜண்டு, கண்டி, கோ. நடேசய்யர், இலங்கை சட்டசபை மெம்பர், கொழும்பு என்று நான்கு பேர்களின் விபரங்களைத் தருகிறார். மண்டபம் கேம்பிலிருந்து இலங்கை புறப்படும் தொழிலாளர்களுக்கு இது எவ்வளவு தூரம் காரியசாத்தியமாய் இருந்திருக்கும் என்று தெரியவில்லை.

அதிலும் இலங்கை அரசாங்கம் கண்டிரோலர் ஆப் இண்டியன் எமிக்கிரண்ட் ஆக முதன் முதலாக நியமிக்கப்பட்டவர்



> தோட்டக்காரர் உங்களைத் தோட்டம் விட்டுப் போகச் சொன்னாலும், ஒரு மாதம் நோட்டீஸ் அல்லது ஒரு மாதச் சம்பளம் முன்பணமாகக் கொடுத்து அனுப்ப வேண்டும்.

ஏ.ஈ. குணசிங்க என்றால், நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று ஊகிக்கலாம். இந்தியருக்கு எதிரான வெறுப்புணர்வை ஓர் இயக்கம் போல சிங்கள மக்கள் மத்தியில் விதைப்பதில் முன்னணியில் நின்றவர் இவர். ஒரு தொழிலாளியை 24 மணி நேரத்தில் தோட்டத்தை விட்டு வெளியேற்றலாம் என்பதை நடைமுறைப்படுத்திய இவரே, இலங்கைத் தொழிற்சங்கத்தின் பிதாவாக இருந்தார் என்பது எத்தகைய நகைமுரண் என்பதை நம்மால் எளிதில் புரிந்து கொள்ளமுடிகிறது.

இந்த உயர் அதிகாரிகள் தோட்டத் தொழிலாளர்கள் விடயத்தில், எப்படியெல்லாம் அநீதியாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நடேசய்யரே சட்டசபையில் எடுத்துக்கூறி இருக்கிறார்.

நோட்டீஸ் கொடுத்தல்:

'நீங்கள் தோட்டம் விட்டுப் போவதானாலும் ஒரு மாதம் நோட்டீஸ் கொடுத்துச் செல்லவேண்டும். தோட்டக்காரர் உங்களைத் தோட்டம் விட்டுப் போகச் சொன்னாலும், ஒரு மாதம் நோட்டீஸ் அல்லது ஒரு மாதச் சம்பளம் முன்பணமாகக் கொடுத்து அனுப்ப வேண்டும்.' என்று புதிய சட்டத்தின் பிரகாரம், தொழில் ஒப்பந்தம் பற்றி விளக்குகிறார் நடேசய்யர்.

ஒரு தொழிலாளியை ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து, தோட்டத்தை விட்டு வெளியேற்றுவதால் தோட்டத்துரையோ, தோட்டமோ குடிமுழுகப் போவதில்லை. ஆனால், அறிமுகமில்லாத ஊரில், ஒரு தோட்டத்திலிருந்து தொழிலாளி வெளியேற்றப்பட்டால், அவன் தன் குடும்பத்துடன் எங்கு போவது? அவனை ஆதரிப்பார் யார்? ஒரு தொழிலாளிக்கு ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து வெளியேறச் சொன்னதும், அந்த ஒருமாத காலம் முடிந்ததும், அவன் அந்தத் தோட்டத்தில் ஒரு நிமிஷம்கூடத் தங்க முடியாது. அவனைத் தோட்டத்தில் அத்துமீறி நுழைந்திருப்பதாகக் கூறி, பொலிஸின் துணையுடன் அவனை வெளியேற்ற முடியும். மேலோட்டமான பார்வையில் இரு சாராருக்கும் பாதகமற்ற ஒப்பந்தம் போலத் தோன்றினாலும், சம வலுவுடைய இரண்டுபேர் செய்துகொண்ட ஒப்பந்தம் இதுவல்ல.

தொழிலாளி முறைப்பாடு செய்யவேண்டுமென்றால், கண்ட்ரோலருக்கு நேரடியாக பெட்டிசன் அனுப்பலாம் என்று சட்டம் கூறுகிறது.

'கண்ட்ரோலருக்கு ஒரு தொழிலாளி முறைப்பாடு செய்தால், தோட்டமுதலாளியிடமிருந்து விளக்கம் பெற பதினைந்து நாட்கள் காத்திருக்கவேண்டும். தோட்ட முதலாளியிடமிருந்து கண்ட்ரோலருக்கு விளக்கம் போகும். பின் அங்கிருந்து, கடிதம் தொழிலாளிக்கு அனுப்பப்படும். தொழிலாளிக்கு கடிதம் அனுப்பப்படும்போது, O.H.M.S. என்வலப்பில் அனுப்பப்படும். தோட்ட அலுவலகத்திற்குக் கடிதம் சென்றதும், அங்கிருக்கும் டீமேக்கர் அல்லது இதில் அக்கறைப்படும் ஒருவர் கடிதத்தை உடைத்து வாசித்து, அவரைத் தண்டிக்கும் வேலையில் இறங்கிவிடுவார். இம்மாதிரி முறைப்பாடுகளில் சுருக்க விசாரணை (summary action) உடனடியாக நடைபெறும். கண்ட்ரோலர் வந்து விசாரிக்கும் முன்னரே, தொழிலாளி உடனடியாகவே தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டுவிடுவார். யாரும் விசாரிக்க வரும்போது, குறித்த தொழிலாளி, தோட்டத்தைவிட்டு ஓடிவிட்டார் (bolted) என்று கூறப்படும்...

கண்ட்ரோலருக்கூடாக ஒரு தொழிலாளி, தோட்டத்துரைக்கு நோட்டீஸ் அனுப்பினால், கண்ட்ரோலர் அதனைத் தோட்டத்துரைக்குத் தெரிவிப்பார். நோட்டீஸ் கிடைத்ததுமே அந்தத் தொழிலாளி தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டுவிடுவார்.



> பெருந்தோட்ட நிர்வாகத்தினரின் தேவைகளுக்கு இந்த மசோதாவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர, தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி எதுவுமே பேசப்படவில்லை.

நோட்டீஸ் கிடைப்பதற்கு முன்னரே அந்தத் தொழிலாளி தோட்டத்தை விட்டு ஓடிவிட்டார் என்று கூறப்பட்டுவிடும்.' என்று நடேசய்யர் சட்டசபையில் பதிவு செய்கிறார். (Hansard, Sept. 1, 1936)

ஒரு தோட்டத்தில் இருபது ஆண்டுகள் தொடர்ச்சியாக வேலை பார்த்துவரும் ஒரு தொழிலாளியை ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுத்து, 24 மணி நேரத்தில் தோட்டத்தை விட்டு, வெளியேற்ற முடிகிறது என்றும் நடேசய்யர் வாதாடுகிறார்.

'தற்போதைய நிலையில் மாற்றம் ஏற்படவேண்டும். அல்லாதுபோனால், என்னதான் பரந்த அதிகாரங்களோடு சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தாலும் அதனால் ஒரு பயனும் விளையப்போவதில்லை. தராதரச் சம்பளக் கட்டளைச் சட்டம், மருத்துவத் தேவைகள் கட்டளைச் சட்டம் போன்ற பல சட்டங்கள் இருந்தும் அதனால் என்ன பயன்?' என்று சட்டசபையில் கேள்வி எழுப்புகிறார் நடேசய்யர்.

சட்ட நிர்வாகம்?

இலங்கையில் நேர்மையான சட்ட நிர்வாகம் நடைபெறுகிறதா என்றும் நடேசய்யர் சட்ட சபையில் கேள்வி எழுப்புகிறார். இதற்கு ஒரு நிகழ்வினை உதாரணமாகக் காட்டுகிறார்.

கொத்மலை மாவட்டத்தில் உள்ள தோட்டம் ஒன்றில் வேலை பார்த்துவந்த ஒரு தொழிலாளிக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஏப்பிரல் 25-ஆம் திகதியன்று அந்தத் தொழிலாளி வெளியேறவேண்டும் என்று மார்ச் 25 அன்று நோட்டீஸ் கொடுபட்டது.



தொழிலாளி வெளியேற மறுத்தார். ஒரு இன்ஸ்பெக்டரை அனுப்புமாறு, தோட்டத்துரை கண்ட்ரோலருக்கு எழுதினார். தோட்டத்திற்கு விஜயம் செய்த இன்ஸ்பெக்டர், 'ஏன் தோட்டத்தை விட்டு வெளியேற மறுக்கிறீர்கள்?' என்று சம்பந்தப்பட்ட தொழிலாளியிடம் வினவினார். 'தோட்டத்துரையோடு எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. கணக்கப்பிள்ளையினால்தான் இவ்வளவு பிரச்சினைகளும் வந்துள்ளன. என்னை வைத்துக்கொண்டு, என் முன்னிலையில் அவரை நீங்கள் விசாரிக்கவேண்டும். இல்லாவிடில், அவர் உங்களிடம் பொய்களைச் சொல்லுவார்' என்று அந்தத் தொழிலாளி வேண்டிக்கொண்டார். இன்ஸ்பெக்டர் அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அப்படியானால், தன்னால் தோட்டத்தை விட்டு வெளியேற முடியாது என்று தொழிலாளி குறிப்பிட்டார். இதனையடுத்து, இன்ஸ்பெக்டர் தபால் நிலையத்திற்குச் சென்று, கண்ட்ரோலருடன் தொலைபேசியில் கதைத்தார். தோட்டத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் கூறி, அவரைத் தோட்டத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு, தோட்டத்துரையிடம் வேண்டுமாறு கண்ட்ரோலர் கூறியிருக்கிறார். உடனடியாக, 25-ஆம் திகதி பத்து மணிக்கு, பொலிஸ் நீதிமன்றத்திற்குச் சமுகமளித்த தோட்டத்துரை, வழக்கு மனுவைத் தாக்கல் செய்து, தொழிலாளி நீதிமன்றத்தில் ஆஜராகக் கோரும் சமன்ஸ் உத்தரவினையும் பெற்றுக்கொண்டார். 25-ஆம் திகதி மாலையிலேயே அந்தத் தொழிலாளிக்கு சமன்ஸ் கையளிக்கப்பட்டது. 26-ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அவர் சமுகமளிக்கவேண்டும் என்பது நீதிமன்ற உத்தரவு. வழக்கு 26-ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படுகிறது. நீதிமன்றத்திற்கும் குறித்த அந்தத் தோட்டத்திற்கும் 19 மைல் தூரம்.

தோட்டத்துரை 26-ஆம் திகதி காலை 9.00 மணிக்குத் தன் காரில் புறப்பட்டுச் சென்று, நீதிமன்றத்தில் ஆஜரானார். தொழிலாளி அந்தத் தூரத்தை நடந்தே சென்று, நீதிமன்றத்தை பகல் 12 மணிக்கே சென்றடைந்தார். ஆனால், நீதிமன்றம் காலை 10 மணிக்கே விசாரணையை ஆரம்பித்திருந்தது. தொழிலாளி ஆஜராகவில்லை என்று கூறப்பட்டு, அவர்மீது நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. பன்னிரண்டு மணிக்கு நீதிமன்றத்திற்குப் போய்ச் சேர்ந்த தொழிலாளி, தன்மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றறிந்ததும், பயந்து தலைமறைவாகிவிட்டார். தனது மனைவியையும் பிள்ளைகளையும் ஒருவரின் சாப்பாட்டுக் கடையில் விட்டுவிட்டு, கண்டியில் இந்திய ஏஜண்டைச் சந்திக்கச் சென்றுவிட்டார். பின்னர் இந்திய ஏஜண்ட் அந்த விவகாரத்தில் தலையிட்டு, அந்த வழக்கு தீர்த்து வைக்கப்பட்டது.

'மறுநாளே அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டிய அவசியம் என்ன? இரண்டு மணி நேரத்திற்குள்ளேயே பிடியாணை பிறப்பிக்கவேண்டிய அவசரம் என்ன?அந்தத் தொழிலாளி நீதிமன்றத்திற்கு வந்து தலைகாட்டுவதற்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் காத்திருந்தால் என்ன? யாராவது வேறு ஒரு நபர் மீது இம்மாதிரி அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இம்மாதிரி விடயங்கள் நிகழும்போது, இந்த நாட்டில் நேர்மையான சட்ட நிர்வாகம் நடக்கிறதா என்று ஐயம் எழுகிறது' என்று நடேசய்யர் சட்டசபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டமும் நீதிமன்றமும் பொலிஸும் அதிகாரிகளும் தோட்டமுதலாளிகளும் அரசாங்கமும் சேர்ந்து அநியாயம் இழைக்கின்றபோது, எந்த வசதியுமற்ற ஓர் அப்பாவித் தொழிலாளி என்ன செய்துவிட முடிகிறது? இதில் தொழிலாளரின் உரிமைகளையும் கடமைகளையும் பேசி என்ன பயன்? சுரண்டப்பட்டு, உதிரம் சிந்தி உழைத்து மாய்வதைத்

தவிர, அவர்களுக்கு விடிவேது? 'துரைமார்களின் பிரதிநிதி ஒருவரே தொழில் ஆணையாளர் என்றும், குடியகல்வு ஆணையாளர் என்றும் வெவ்வேறு பெயர்களில் இயங்கிக் கொண்டிருக்கும் இரகசியத்தைச் சபையிலே பகிரங்கமாக்கியபோதும், தோட்டச் சொந்தக்காரர்கள் சட்டத்தைப் படிப்பதில்லை - நியதிகள் அவர்களுக்குப் புரிவதில்லை - அவர்களின் பெரிய குறைபாடு அதுதான் என்று பகிரங்கக் குற்றச்சாட்டுக்களை அள்ளிவீசுவதை... சபை நிகழ்ச்சிகளில் காண்கிறோம்' என்று நடேசய்யர் நடைமுறையில் காணப்படும் அவலங்களைச் சட்டசபையில் எடுத்துப் பேசுவதை, சாரல்நாடன் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்.



முத்து அவர்கள் சட்டசபையில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட நிர்வாகத்தினரின் தேவைகளுக்கு இந்த மசோதாவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர, தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி எதுவுமே பேசப்படவில்லை.

விவசாயத் தொழில் உட்பட, வினைத் திறனற்ற தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து குடியகன்று இலங்கைக்கு வரும்போது, அவர்கள் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் - கண்காணிப்பிற்குள் இருப்பார்கள் என்று நச்சுத்தனமான அர்த்தத்தை டி.எஸ். சேனநாயக்க, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க போன்ற சிங்கள அரசியல்வாதிகள் கற்பித்தனர்.

இலங்கை அரசின் சட்டம்:

1923-ஆம் ஆண்டு இந்தியாவின் குடியகல்வுச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அதற்கியைபான சட்டத்தினை இலங்கை அரசும் மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தியத் தொழிலாளர்களின் வருகையைப் பெரிதும் எதிர்பார்த்திருந்த தோட்ட முதலாளிகளும் அரசாங்கமும் அதற்கு அனுசரணையான சட்டத்தை உருவாக்க வேண்டியிருந்தது. ஓராண்டு காலம் கடந்த நிலையில் அவசர கதியில், 1923 மார்ச் 27 அன்று இந்தியத் தொழிலாளர் திருத்த மசோதா (The Indian Labour Amendment Bill) சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த மசோதாவிற்கு எதிராக, திருகோணமலை - மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இம்மானுவல் தம்பிமுத்து சட்டசபையில் கருத்துத் தெரிவித்தபோது, 'இந்த மசோதா தொழிலாளர் கட்டுப்பாட்டுத் திணைக்களம், நிதித் தேட்டம், ஆள்திரட்டல், இலங்கைக்குள் தொழிலாளரை அறிமுகம் செய்தல், இறுதியாக, தொழிலாளரை இந்தியாவிற்குத் திரும்பிச் செல்ல வசதிகள் என்பன பற்றியே கருத்தில் கொண்டுள்ளது. அத்தொழிலாளரின் வாழ்க்கை நிலைமைகள் பற்றி அல்லது அவர்கள் வாழ்வதற்கு வசதியான வீடுகளை அமைத்தல், அந்தக் குழந்தைகளின் கல்வி வசதி போன்ற அம்சங்களில் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுக்கவிருக்கின்றது என்பது பற்றி எதுவுமே இந்த மசோதாவில் கூறப்படவில்லை' என்று தெரிவித்தார்.

'முதலாளித்துவவாதிகளையும் தொழில் வழங்குவோரையும் பாதிக்கக்கூடிய விஷயங்களை மட்டுமே கவனப்படுத்துமாறு நாங்கள் கேட்கப்பட்டிருக்கிறோம். கூலித் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, அவர்களைக் கையாளத் தெரிந்தால் போதும் என்ற கருத்தே நிலவுகிறது' என்று தம்பிமுத்து அவர்கள் சட்டசபையில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

'இந்தியாவிலிருந்து பெருந்தொகையில் தொழிலாளர்கள் இங்கு வந்து குவிகின்றனர். அவர்கள் இந்நாட்டு மக்களைத் துரத்திவிடப் பார்க்கின்றனர். இந்த நாட்டில் யாராவது சொகுசாக இருக்கின்றார்கள் என்றால், அவர்கள் தோட்டத்தில் வாழும் கூலிகளே' என்று டி.எஸ். சேனநாயக்க சட்டசபையில் தெரிவித்தார்.

இந்தியத் தொழிலாளர்களுக்காகத் தொடர்ந்து வாதாடிய நடேசய்யர் சட்டசபையில் சிங்களத் தேசியவாதிகளதும் பிரித்தானிய அதிகாரக் கும்பலினதும் கேலிக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்.

1922-ஆம் ஆண்டின் இந்தியக் குடியகல்வுச் சட்டத்தின் அடிப்படையில், 'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' என்ற பிரசுரத்தை நடேசய்யர் எழுதி வெளியிட்டிருந்தாலும், இலங்கைச் சட்டசபையில் இந்தியத் தமிழர்கள் எந்த அடிப்படை உரிமைகளுமற்று, சிங்களக்கடுந் தேசிய வாதிகளால் வஞ்சிக்கப்படமைக்கு எதிராகவே குரல் எழுப்ப வேண்டியிருந்தது. இந்தியத் தமிழர்களின் வாழ்வாதார உரிமைகள் மறுக்கப்பட்டு, தோட்டங்களில் கசக்கிப் பிழியப்பட்ட நிலைக்கு எதிராகவே அவர் தொடர்ந்து போராட வேண்டியிருந்தது.

nithiyananthan.m@thaiveedu.com



பேரினவாதத் திட்டமிடலும்
இனக்கலவரம் எனும் சொல்லாடல் அரசியலும்

- சி. கிருஸ்ணபிரியன்



வரலாறு தன் வழியில் நமக்கு ஏராளமான அனுபவங்களையும் படிப்பினைகளையும் விட்டுச் செல்கிறது. எதிர்காலத்திற்கான சிறந்த பாதையை தெளிவான திசையைப் பற்றிச் சிந்திக்கின்ற எவரும் வரலாறு தந்த பாடங்களையும் அதன் அனுபவங்களையும் கடந்து போகமுடி யாது. வரலாறு நமக்குத் தருகிற ஆதாரங்களை அறிவியல் கண் கொண்டு ஆராய்கிற விடத்து அது நமக்குப் புதிய எல்லைகளையும் வெளிச்சங்களையும் வெளிப்படுத்துகிறது.

வரலாற்றை அவரவர் தமது தேவைக்காகவும் நோக்கங்களுக்காகவும் புனைகிறார்கள். போலிப் பெருமிதங்களையும் கற்பிதங்களையும் நிறைத்து வரலாற்றைக் காயப்படுத்துகிறார்கள். மேலாதிக்க நோக்கம் கொண்டோர் நமது மேலாதிக்கத்தை நிறுவுவதற்கு இன மேன்மை, வர்க்க மேன்மை பற்றிய கட்டுக் கதைகளை நிரப்பி ஒடுக்குமுறைக்கான கருவியாக வரலாற்றைப் பயன்படுத்துகிறார்கள். ஒடுக்கப்பட்டவர்கள் பற்றிய வெறுப்பை விதைக்கும் கருவியாக வரலாற்றை மாற்றுகிறார்கள்.

விடுதலையை விரும்புவோர், மக்களின் விடுதலையை வலியுறுத்துவோர், எல்லோருக்குமான உலகத்தைப் பற்றிக் கனவு காண்போர் வரலாற்றின் மீது சுமத்தப்பட்டுள்ள போலிச் சுமைகளையும் புனைவுகளையும் களைவதற்குக் கடுமையாகப் போராடுகிறார்கள். வரலாற்றை ஆதாரபூர்வமாக ஆராய்ந்து அறிவியலின் துணைகொண்டு வரலாற்றில் உண்மையான சாரத்தை அடிநாதமான இயங்குவிசையைத் தெளிவுற வெளிப்படுத்துகிறார்கள். வரலாற்று அசைவியக்கத்தின் அடிப்படைகளையும் அகப் புற முரண்கள், ஒத்திசைவுகள், மாற்றங்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றின் மீது கூடிய கவனம் குவித்து வரலாற்றில் களைகளை நீக்கி புதிய தரிசனங்களைச் சாத்தியப்படுத்துகிறார்கள்.

அந்த வகையில் 1983-ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகப் பேரினவாத அரசால் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்ட பேரழிவுத் தாக்குதலைப் பற்றிய முழுமையான ஆய்வாக வெளிவந்திருக்கிறது 'கறுப்பு ஜூலை: கற்காத பாடங்கள்' என்கிற நூல். இந்நூலை ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தெ. ஞாலசீர்த்தி. மீநிலங்கோ எழுதியுள்ளார். இது தன்னுள் 52 கட்டுரைகளைக் கொண்டது. இந்தக் கட்டுரைகள் 1983 கறுப்பு யூலை கொடூரத்தின் 40 ஆண்டுகள் நிறைவையொட்டி தமிழ் மிரர் பத்திரிகையில் 52 வாரங்களாகத் தொடராக வெளிவந்தவை.

இன வன்முறைகளின் வரலாறு:

1983-ஆம் ஆண்டு தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட திட்டமிடப்பட்ட பேரினவாதத் தாக்குதலைப் பற்றிய பத்திரிகைச் செய்திகள், நூல்கள், ஊடக விவரணங்கள் யாவும் சாதாரணமாக இந்நிகழ்வை விழிக்கும்போது இனக் கலவரம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன. இந்தக் கொடூரத்தின் உண்மையான பயங்கரத்தை அநீதியை எளிமைப்படுத்துவதற்காகவும் அதன் அரசியல் சாரத்தை நீர்த்துப்போகச் செய்வதற்காகவுமே திட்டமிட்டு அரசு முன்னெடுத்த கொடூரத்தைக் கலவரமாகச் சுருக்குகிறார்கள் என்பதை இந்நூலாசிரியர் விளங்கப்படுத்துவதோடு வரலாற்றை எழுதும்போது சொல்லுக்குச் சொல் கவனமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

1983-ஆம் ஆண்டு கொடூரத்தை ஆராய விளைந்த ஆசிரியர் அதன் வேர்களை 1883 கொச்சிக்கடை கலவரத்தில் கண்டடை

கிறார். இந்நூலை வாசிக்கிறவர்கள் இலங்கையின் வர லாற்றில் கவனம் செலுத்தப்படாத பல்வேறு அம்சங்களையும் அதன் அரசியல் முக்கியத்துவத்தையும் வாசித்து அறியலாம்.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து இலங்கையின் வரலாற்றை இன்று வரை கற்கிற எவரும் இலங்கை வரலாறு, இன வன்முறைகளின் வரலாறு என்பதை எளிதாகக் கண்ட றிவர். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த அதிகம் கவனம் பெறாத சிறுபான்மைத் தேசிய இனத்தவர் மீதான வன் முறைகளைப் பற்றிய குறிப்புகளையும் இருபதாம் நூற் றாண்டின் ஆரம்பம் முதலே பேரினவாத மேலாதிக்கம் நிறுவன மயமாகியதையும் அதன் விளைவாக வெறுப்புணர்வு சமூகமய மாகியதற்குமிடையிலான தொடர்புகளையும் காணலாம். இந்த வெறுப்புணர்வை சமூகமயமாக்கியதன் விளைவு பெரும் பான்மை சமூகத்தில் பெரும்பாலான மக்கள் பேரினவாத நிலைப்பாடுகளை நோக்கி நகர்வதற்கும் கண்முன்னே நடக்கும் அநீதிகளைக் கண்டு மௌனமாகக் கடந்து போவ தற்கும் ஒரு மக்கட் கூட்டத்தையே தயார் செய்தது. இலங் கையில் நடந்த இனவன்முறைகளை ஆராய்கிற பொழுது அதனுடன் தொடர்புபட்ட அம்சங்களாக அரசியல் அதிகாரப் போட்டி, வர்க்க நலன், வணிக முன்னெடுப்புகள், தீர்க்க முடியாத பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றைக் கண்டறி யலாம்.

நாடு பொருளாதார நெருக்கடியால் தத்தளித்துக் கொண்டி ருக்கும் போதும் மக்களுக்கு அரசு மீது ஏற்படும் இயல்பான கோபத்தை சிறுபான்மையினர் மீதான வெறுப்பாக மடைமாற்றி அவர்கள் மீதான தாக்குதலாக வடிவமைத்த வரலாறாகவே நமது வரலாறு உள்ளது. இந்த நூல் இலங்கையின் இனப்பிரச் சினைக்குப் பங்கு வகித்த அரசியல், பொருளாதார, சமூக சூழ மைவுகளையும் பற்றிய தீவிர விசாரணையைப் பதிவு செய் துள்ளது. அதே நேரம் தேசிய இனப்பிரச்சினையைப் பயன்ப டுத்தி ஆதாயம் தேடிய ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள், இதனால் பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தேசிய இனங்கள் ஆகியவை பற்றிய முக்கியமான தகவல்களைக் கொண் டுள்ளது. இலங்கையின் வரலாற்றின் பல்வேறு சுவாரசியமான வரலாற்றுத் தகவல்களையும் கொண்ட பயனுள்ள ஆவணம் இதுவாகும். இந்நூல் கவனம் செலுத்தியுள்ள விடயங்களைச் சுருக்கமாகக் கவனிக்கலாம்.

சிங்கள ஆளுந்தரப்பும் பேரினவாதமும்:

சிங்கள ஆளும் தரப்புகள், காலனிய வருகைக்குப் பின் இலங் கையின் விவசாய பொருளாதாரத்திலும் அதன் பொருளாதார கட்டமைப்புகளிலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியது. புதிய தொழிற்றுறைகள் புதிய ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகங்கள் போன்றவற்றை மேற்கொண்ட வர்க்கங்களைத் தோற்று வித்தன.

பெரும் நில உடமையாளர்களாக இருந்து விவசாயத்தில் ஏகபோகம் செலுத்திய வர்க்கங்களிலிருந்து புதிய முதலாளி வர்க்கம் தோற்றம் பெற்றது. அதேபோல ஆங்கிலம் கற்ற அதிகார வர்க்கம் ஒன்றும் தோற்றம் பெற்றது. இவர்கள் தமது மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக, பெருக்குவதற்காக காலனிய எசமானர்களுடன் ஒத்திசைவாக இருந்ததோடு தங்கள் அதிகாரத்தை நிறுவத் தலைப்பட்டனர்.

அவர்களின் அதிகாரப் போட்டியில் ரதல, கொவிகம, கராவ, சலாகம ஆகிய சாதிகளுக்கிடையிலான போட்டி முக்கிய இடத்தைப் பிடித்தது. சிங்கள ஆளுந்தரப்புகளுக்குள் தொடர்ந்து நீடித்த சாதிய முரண் பௌத்தத்தை இலங்கை அரசியலின் மையசக்தியாக மாற்றி அமைத்ததில் முக்கிய இடம் வகிக்கிறது.

இலங்கையின் அதிகார அரசியலில் மேலாதிக்கம் செலுத்திய ஆட்சியாளர்கள், தங்களை 'உயரிய பௌத்த பாதுகாவலர் களாக' அடையாளப்படுத்திக்கொள்வதற்காகச் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான வெறுப்பரசியலை ஒரு முதன்மை உத்தியாகக் கையாண்டனர். தமது அரசியல் இருப்பைத் தக் கவைத்துக்கொள்ளும் நோக்கில், பௌத்த கடும்போக்காளர் களைத் திட்டமிட்டு ஊக்குவித்ததோடு, அவர்களுக்குத் தேவையான சமூக அங்கீகாரத்தையும் வழங்கினர். ஆங்கி லத்தைத் தமது அன்றாட மொழியாகக் கொண்ட எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன போன்ற தலைவர்கள், வெகுஜன வாக்குகளைக் கவர்வதற்கா கவும் குறுகியகால அரசியல் லாபத்திற்காகவும் 'சிங்கள மொழி' அடையாளத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத் தினர். இத்தகைய அரசியல் நகர்வுகளே 'தனிச் சிங்களச் சட்டம்' எனும் பாரபட்சமான சட்டமியற்றலுக்கு வழிவகுத்தன. அதுமட்டுமன்றி, பௌத்த விழுமியங்களையும் மகா சங்கத்தி னரையும் (பிக்குகள்) தமது அதிகாரத்தைப் பாதுகாப்ப தற்கான கருத்தியல் கேடயங்களாக இவர்கள் மாற்றிக்கொண் டனர்.

எழுபதுகளின் பிற்பகுதி வரை தேசிய முதலாளிகளுக்கும் தரகு முதலாளிகளுக்கும் இடையே இருந்து வந்த ஆழமான வேறுபாடுகள் மறையத்தொடங்கின. திறந்த பொருளாதா ரத்தின் வருகையோடு நவதாராளவாத பொருளாதார முறைமை, தரகு முதலாளித்துவப் பண்புகளை மேம்படுத்தித் தரகு முதலாளித்துவ நலன்களை முன்னிறுத்தியது. நவதாரா ளவாத கொள்கையை பிரதிநிதித்துவம் செய்த அரசியல் கட்சித் தலைவர்களின் பௌத்த கடும் போக்கு நிலைப்பாடு களில் எந்த மாற்றத்தையும் நிகழ்த்தவில்லை. மாறாக கடும் வலதுசாரிகளை வலுவூட்டி ஆட்சியாளர்களின் பாசிசத் தன்மைக்கு உரமூட்டியது. இந்தத் தன்மையே தேசிய இன முரண்பாடு யுத்தமாகி 30 ஆண்டுகள் தொடர்ந்து முடிந்த நாசத்துக்குக் காரணமானது. மாறி மாறி ஆட்சி செய்த எல்லா அரசுகளிலும் இத்தன்மை நீங்காமல் காணப்பட்டது. இவை ஆளும் தரப்புகளின் அதிகாரப் போட்டிக்கும் தேசிய இனப்பி ரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்வதன் பின் உள்ள பொருளா தாரக் காரணிகள் வலுவானவை என்பதையே இனம் காட்டு கின்றன. குறிப்பாக இலங்கையின் வர்க்க முரண் கூர்மை அடையாமல் இருக்க இன முரண் ஒரு சாதனமாய் காலத் துக்குக் காலம் பயன்படுத்தப்பட்டு வந்தமையே இதற்குச் சான்றாகக் காணலாம்.

தமிழ் தேசியமும் குறுந்தேசியமும்:

சிங்கள மேட்டுக்குடிகளைப் போலவே தமிழர் தரப்பிலும் ஆங்கில வழிக் கல்வி பெற்ற, நில உடமை வழிவந்த தமிழ் மேட்டுக்குடிகளும் புத்திஜீவி மேட்டுக்குடிகளும் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசியல் இயக்கங்களைத் தோற்று வித்து ஆரம்ப காலக் காலனிய ஆட்சியின் ஆரம்பகட்ட பாரா



ளுமன்றங்களில் தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டனர். இவர்கள் உயர்குல, சைவ வேளாளர் மரபையும் அதே நேரம் உயர் சாதிக் கத்தோலிக்க கிறிஸ்தவ பின்புலங்களையும் கொண்ட இரு பகுதிகளாக இருந்தார்கள். ஆரம்பத்தில் சிங்கள தமிழ் ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான வலுவான வர்க்க ஒற்றுமை நிலவியதற்கு இலங்கை வரலாற்றில் வலுவான காரணங்கள் உண்டு.

கற்றறிந்த மேட்டுக்குடிகளாக இருந்தாலும் சிந்தனை ரீதியாகப் பழைமைவாதத்தில் மூழ்கியிருந்தவர்களாக இருந்தனர். தமிழ் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மனிதர்களின் விடுதலை பற்றிய சிந்தனையற்றவர்களாகவும் இவர்களை இரண்டாம் தரமாகவும் நடத்துபவராகவும் இவர்களது நடவடிக்கைகள் இருந்தன. தமது இருப்புக்காகவன்றி மக்களின் நிரந்தர மீட்சிக்காக ஒருபோதும் இவர்களின் அரசியல் இருக்கவில்லை.

சேர்.பொன். அருணாச்சலம் போன்ற முற்போக்காளர்கள் மலையகத்தமிழர், முஸ்லிம்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் என அனைத்து ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் குரல் கொடுத்து தமிழ் அரசியலின் மைய நீரோட்டத்தில் ஆரம்பகட்ட மக்கள் குரலாக ஒலித்தாலும் அவர் மெது மெதுவாக இந்தப் பழைமைவாதிகளால் ஓரங்கட்டப்பட்டார். பௌத்த சிங்களப் பேரினவாதம் நிறுவனமயமாகிக் கடுமையானபோது அதற்குச் சம்மாந்தரமாக அதன் துணை விளைவாக தமிழ்த் தேசிய அரசியலும் 'குறுந்தேசியவாதத்தை நோக்கி நகர்ந்தது.

இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள தமிழ் தேசிய அரசியல்வாதிகள் பற்றிய குறிப்புகளின் முக்கியத்துவம் ஏதென்றால் பொதுவாகத் தமிழர் தரப்பில் இருந்து இனப்பிரச்சினை தொடர்பாக எழுதப்பட்டுள்ள வரலாற்றுச் செய்திகளில் தம் பக்கத் தவறுகள் விமர்சனங்கள் வசதியாக தவிர்க்கப்பட்டிருக்கும். மாறாக, இந்நூலாசிரியர் தமிழர் தரப்பு இழைத்த தவறுகளையும், இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வை எட்ட முடியாமல் போனதற்குக் காரணமான தமிழ் அரசியல் தலைமையின் தூரநோக்கற்ற செயல்பாடுகளையும் சுட்டிக் காட்டுகிறார். அவர்களது அரசியல் சிந்தனைமுறை மற்றும் குறுகிய நிலைப்பாடுகள் குறித்தக் கறாரான விமர்சனங்களை அவர் முன்வைக்கின்றார். தமிழ்த் தேசிய அரசியலைப் பற்றிய செய்தியைத் தொடர்ந்து வாசிக்கும்போது நமக்குப் புரியும் வலுவான செய்தி எதுவெனில் விடுதலைக்காகப் போராடுகின்ற இனம் தமக்குள் ஒடுக்கப்பட்டுள்ள தரப்பினரின் விடுதலையை ஏற்றுக் கொள்ளாமல் அவர்கள் பேசுகிற விடுதலை சாத்தியமில்லை என்பதாகும். ஒரு பக்கம் ஒடுக்கப்படுகிறவராகவும் அதேநேரம் உள் அரங்கில் ஒடுக்குபவராகவும் இருக்கும்போது விடுதலை அரசியல் எவ்வளவு பலவீனமாக இருக்கும் என்பது பற்றியும் விரிவான குறிப்புகள் இந்நூலில் உண்டு.

இலங்கை அரசியலின் மைய அம்சமாக பௌத்தம்:

இலங்கையின் அரசியல் தளத்தில் பௌத்த நிறுவனங்களுக்கும், பிக்குகளுக்கும், அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட சமூகக் கருத்தியலுக்கும் மிகமுக்கியமான இடமுண்டு. இந்நூலில் மீநிலங்கோ பௌத்த மத நிறுவனமயமாதலின் வரலாற்று வளர்ச்சி பற்றிய முக்கிய குறிப்புகளைப் பதிவு செய்துள்ளார்.

இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களில் ஹென்றி ஸ்டீல் ஓல்கொட் , மேடம் பிளவாட்ஸ்கி அநகாரிக தர்மபால ஆகியோருக்கு முதன்மையான இடமுண்டு. அதேபோன்று, இலங்கையின் மேலாதிக்கத் தன்மை கொண்ட நவீன பௌத்தத்தைக் கட்டமைத்ததில் வித்தியாலங்கார, வித்தியோதய ஆகிய பிரிவெனாக்களின் பங்கு மிகப்பரிது. அநகாரிக தர்மபால முன்னெடுத்த பௌத்த மறுமலர்ச்சியானது, பௌத்தத்தையும் சிங்கள மொழியையும் ஒன்றிணைத்து, அதன் மேலாதிக்க நலன்களை முதன்மைப்படுத்திய 'சிங்கள-பௌத்தத் தேசியவாத' மயமாக்கலுக்கே வழிவகுத்தது.

பௌத்த நிறுவனங்களும் பிக்குகளும் துறவறத்தை முன்னிறுத்திய ஆன்மீக வாழ்வை விடவும் வணிகம், உத்தியோகங்கள் மற்றும் அரசியல் அதிகாரங்களிலேயே அதிகக் கவனம் செலுத்தியதைப் பல வரலாற்று நிகழ்வுகளின் ஊடாக



இந்நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். குறிப்பாக, பண்டாரநாயக்க ஆட்சியமைப்பதற்கு 'ஐக்கிய பிக்கு முன்னணி' (Eksath Bhikkhu Peramuna) வழங்கிய ஆதரவும், அது இலங்கை அரசியலில் ஏற்படுத்திய தாக்கமும் அளப்பரியவை. பண்டாரநாயக்கவின் படுகொலை, எதிர்கால இலங்கை அரசியலில் பிக்குகளின் வகிபாகம் எத்தகையதாக அமையப்போகிறது என்பதைக் கட்டியம் கூறியது என்பதையும் நூலாசிரியர் தகுந்த சான்றுகளுடன் எடுத்துக்காட்டுகிறார்.

அதிகார மையங்களில் ஒன்றாகப் பாதுகாப்புத்துறை:

சட்டம் ஒழுங்கைப் பேணவேண்டிய சிவில் சேவைத்துறையைச் சேர்ந்த காவல்துறை (Police Service), அதன் வரலாற்று வளர்ச்சியில் ஒரு துணை இராணுவப்படை போலப் பாதுகாப்புத்துறைக்குள் உள்வாங்கப்பட்டது தற்செயலான நிகழ்வு அல்ல. அதேபோன்று, இந்நாடு இராணுவமயப்பட்டதும், இராணுவ வீரர்கள் வரலாற்று நாயகர்களாகப் போற்றப்படுவதற்கும் பின்னால், வர்க்க நலன்களைப் பேணும் தரப்பினரின் திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல் பெரும் செல்வாக்கு செலுத்தியுள்ளது..

இலங்கையில் முதன்முதலில் இராணுவச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது, சுதந்திரத்திற்கு முந்தைய காலப்பகுதியில் 1915ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட 'கண்டிக் கலவரம்' என அறியப்படும் திட்டமிட்ட வன்முறையின் போதாகும். அதேபோல, இலங்கையில் முதன்முதலில் குற்றத் தடுப்புப் பிரிவு (CID) ஆரம்பிக்கப்பட்டது மருதானைப் பகுதியில் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் இன முறுகலின் போதாகும் என்பதையும் இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

சுதந்திரத்துக்கு பிந்தைய இலங்கை இராணுவத்தின் முதல் தளபதியாக விளங்கியவர் தமிழரான அண்டன் முத்துக்குமாரு ஆவார். அவர் ஆணையின் கீழேயே முதன்முதலில் யாழ்ப் பாணம் நோக்கி இராணுவம் சென்று நிலைகொண்டது. இது 1958 தனிச் சிங்களச் சட்டத்துக்குப் பின்பான கல்லோயாக் கலவரம் என அறியப்பட்ட வடகிழக்குப் பகுதியில் இடம் பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறை நிகழ்வின் போதாகும். அப்போது யாழில் நிலைகொண்ட இராணுவம் முழுமையாக அங்கிருந்து வெளியேறவில்லை என்பதையும் இந்நூல் சொல்லிச் செல்கிறது.

இப்படி முப்படைகளும் பொலிசும் இணைந்த இலங்கையின் பாதுகாப்புத்துறை அதிகார மையமாக நிறுவனமயமாகி உயர் வர்க்க நலன் பேணும் அதிகார மையமாக இருக்கிற அதே நேரம் பாதுகாப்புதுறை சார்ந்த புதிய உயர் அதிகார வர்க்கத்தையும் தோற்றுவித்தது. அவர்கள் இலங்கையின் அரசு அதிகாரத்தைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் தொட்டே இலங்கையின் பாதுகாப்புத்துறை, அடக்கப்படுகின்ற சிறுபான்மைத் தேசிய இனங்களதும் சாதாரண உழைக்கும் மக்களின் போராட்டங்களை ஒடுக்கும் அரச இயந்திரமாகச் செயற்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகளை இந்த நூல் எடுத்தியம்புகிறது. தென்னிலங்கையில் சாதாரண மக்களின் போராட்டங்கள், தொழிலாளர் போராட்டங்கள் ஜே.வி.பி முன்னெடுத்த இரண்டு கிளர்ச்சிகள் ஆகியவற்றை ஒடுக்குகிற போர்வையில் அதன் வெறியாட்டங்களையும் இந்த நூல் பதிவு செய்கிறது. குறிப்பாக வர்க்க நலன் பேணும் அதன் தன்மையைப் பதிவு செய்கிறது.

சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு எதிராக அரச அனுசரணையுடன் நடந்தேறிய திட்டமிட்ட வன்முறைகளின் போது வன்முறையாளர்களுக்கு உதவுகிற அதிகாரபூர்வ அமைப்பாக அது செயற்பட்டிருக்கிறது. 30 ஆண்டுகாலச் சிவில் யுத்தத்தில் இலங்கையின் அரச படைகள் நிகழ்த்திய படுகொலைகளையும் பாதகங்களையும் பற்றி வாசிக்கிற எவரும் இலங்கை அரசியலில் பாதுகாப்புத்துறை ஆளும் வர்க்கம் நலன் பேணுகிற பெருந்தேசிய அகங்காரத்தின்

பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வர்.

போர் முடிந்து 16 ஆண்டுகளுக்கு அதிகமாகியும் இப்போது வரை இலங்கையின் பாதீட்டின் பெரும் பகுதி பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கப்படுகிறது. இப்போது வரை பெரும் எண்ணிக்கையான முப்படையை இன்றும் பராமரிப்பது இலங்கையின் அரசியலில் பாதுகாப்புத்துறையின் பங்கை பறைசாற்ற போதுமானதாக இருக்கும்.

ஜனநாயகப் படுகொலைகள்:

இலங்கையின் தேசிய இன முரண் போராக வடிவெடுத்ததில் சிங்களப் பௌத்த பேரினவாதத்தின் பங்கு பிரதானமானது. அடக்கப்பட்ட சிறுபான்மைத் தேசிய இனங்களின் மீது அது பல்பரிமாண மேலாதிக்கத் தாக்குதல்களை நடத்தியது. பொலிஸ் இராணுவ அத்துமீறல்கள், திட்டமிடப்பட்டுக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவெறித் தாக்குதல்கள். அபிவிருத்தி என்ற பெயரிலான ஆக்கிரமிப்புக் குடியேற்றங்கள் என இத் தாக்குதல்கள் சாதாரண தமிழ் பேசும் மக்களையும் சிங்களவர்களையும் பலிக்கடாக்களாக்கியுள்ளன. இவை பற்றிய ஏராளமான குறிப்புகளை இந்நூல் முழுக்க அந்தந்த அத்தியாயங்களில் பொருத்தப்பாட்டுக்கமைய ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். குறிப்பாக, சட்டத்தின் வழியாகவும் அரசியல மைப்பின் ஊடாகவும் நிகழ்த்தப்பட்ட ஜனநாயகப் படுகொலைகள் பற்றிய விரிவான தகவல்கள் இதில் உள்ளன. 1983-ஆம் ஆண்டு நிகழ்ந்த கொடூரத்தின் அரசியல் பின்னணியை பற்றி அறிந்து கொள்ள விரும்பும் ஒருவருக்குத் தேவையான வரலாற்றியல் ஆவணமாக இந்நூல் நிச்சயம் இருக்கும்.

தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக வாழ்வின் மீது தாக்கம் செலுத்திய ஜனநாயகப் படுகொலைகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுதல் தகும்.

1948-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் மலையகத் தமிழர் வாழ்வில் நிகழ்த்திய கொடுமைகளைச் சொல்லி மாளாது. நாடற்றவராக உள்ளக இடப்பெயர்வுகளுக்கும், இந்தியாவுக்குப் பலவந்தமாக வெளியேற்றி அகதிகளாக்கி நிர்மூலம் ஆக்கியது. இது, அம்மக்களின் இனத்துவ வளர்ச்சியிலும் அவர்களின் சமூக பொருளாதாரப் பண்பாட்டு வாழ்வில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. அவர்களின் அசைவியக்கத்தைத் தீர்மானிக்கிற முக்கிய விடயமாக இப்போது வரை இது உள்ளது. சிங்கள தமிழ் வேறுபாடுகளை புறந்தள்ளி இலங்கையின் ஆளும் வர்க்கங்கள் ஒன்று சேர்ந்து நிகழ்த்திய இந்தக் கசப்பான சம்பவத்தின் கொடூரத்தை இந்நூல் சரியாகப் பதிவு செய்திருக்கிறது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1956-ஆம் ஆண்டு கொண்டுவந்த 'தனிச் சிங்களச் சட்டம்', தமிழ் மக்களுக்குப் பாரியதொரு பின்னடைவை ஏற்படுத்தியது. இச்சட்டம், தமிழர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய கல்வி, உயர்கல்வி மற்றும் அரசுப் பணி வாய்ப்புகள் அனைத்தையும் தட்டிப்பறித்ததோடு, இலங்கையின் மையநீரோட்டத்திலிருந்து தமிழ் பேசும் மக்களை அந்நியப்படுத்தியது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட முதல் பத்து ஆண்டுகளில் தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய நேரடித் தாக்கங்கள் குறித்து இந்நூலில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக தரப்படுத்தல் தமிழ் இளைஞர்கள் மத்தியில் கோபத்தையும் விரக்தியையும் தூண்டித் தமிழ்த் தேசிய அரசியலின் உணர்ச்சிமய அரசியலின்பால் அணிதிரள வைத்து ஆயுத வழிமுறையைத் தேர்ந்தெடுக்க மேற்சொன்ன ஜனநாயக அத்துமீறல்கள் பெரிதும் பங்கு வகித்தன. அடுத்தடுத்து அமுலுக்கு வந்த முதலாம் இரண்டாம் குடியரசு யாப்புகள் பௌத்தத்திற்கு முன்னிலை கொடுத்து அதை இலங்கையின் மேலான மதமாக ஆக்கியது. சிங்கள மொழிக்கு முக்கியத்துவம் வழங்கியது. இப்போது வரை இலங்கையில் அரசியல், நீதி, நிர்வாக, வங்கி துறைகளில் இரு மொழி அமுலாக்கம் நியாயமாக நடைபெறவில்லை. நடைமுறையில் வெளிவரும் அரச அறிவித்தல், அத்தியாவசிய அனர்த்த அறிவித்தல் ஆகியன சிங்கள மொழியிலேயே வெளிவருகின்றன. இதன் வேர்கள் தனிச் சிங்களச் சட்டத்தில் உள்ளன. அந்த மனநிலையின் நீட்சி இப்போது வரை மாறாது தொடர்வது இலங்கை அரசியலின் அவலமாகும்.

தேசிய இன முரண்பாட்டில் மலையகத் தமிழரும் முஸ்லிம்களும்:

இலங்கையின் தேசிய இன முரண்பாட்டைப்பற்றி எழுதுகிற எவரும் தேசிய இனப் பிரச்சினையில் மலையகத் தமிழரும் முஸ்லிம்களும் எதிர்கொண்ட சவால்கள், இழப்புகள், உள்ளக இடப்பெயர்வுகள் என்பதைப் பற்றிக் கவனம் எடுப்பதில்லை. தேசிய இன முரண்பாடு மலையகத் தமிழரினதும் முஸ்லிம்களதும் தேசிய இனத்துவ வளர்ச்சியை தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றி இருக்கிறது. அவர்கள் தேசிய இனமாக தம்மை அடையாளப்படுத்தி அரசியல் செய்வதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவது இந்தச் சிக்கலான சூழல்தான்.

இலங்கைத் தமிழ் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படி ஒடுக்கப்பட்டவர்களாக இருந்தார்களோ அதே போலத்தான் மலையகத் தமிழரும் முஸ்லிம்களும் நடத்தப்பட்டனர். ஓரங்கட்டப்பட்டனர். பேரினவாத ஒடுக்கு முறைக்கு முகம் கொடுத்தும் தமிழ் பேசும் சமூகத்துக்குள்ளேயும் எப்படி இந்த இரு சாராரும் ஒடுக்கப்பட்டார்கள் என்பதை ஆசிரியர் கடுமையான விமர்சனத் தொனியில் எழுதுகிறார்.

தமிழர்களுக்கு எதிராக நடந்த இன வன்முறைகளில் மலையகத் தமிழரும் கடுமையான இழப்புகளையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்தனர். சுதந்திர இலங்கையின் ஜனநாயகப் படுகொலையான பிரஜா உரிமை பறிப்புச் சட்டத்தின் மூலம் இம்மக்கள் எப்படி நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள் என்பதைப் பற்றிய முக்கியமான குறிப்புகளை இந்நூல் கொண்டிருக்கிறது. அதேபோல தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டபோது மக்கள் அகதிகள் போல உள்நாட்டுக் குள்ளேயே இடப்பெயர்வுகளையும் சந்தித்த துயரத்தையும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளது. உள்நாட்டு இடப்பெயர்வின் மூலம் அகதிகளாக்கப்பட்ட மலையகத்தமிழர் வடக்குக் கிழக்கிலும் ஒடுக்குமுறைக்கும் பாரபட்சங்களுக்கும் உள்ளான கசப்பான அனுபவங்களை எழுதுகிற ஆசிரியர் சிறுபான்மை மக்களின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவித்த குறுந்தேசியவாதத் தமிழ் ஆளும் வர்க்க அரசியலை விமர்சிப்பதோடு அவர்

களின் உண்மை முகத்தை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறார்.

தேசிய இனப் பிரச்சினையில் பெருந்தேசியவாதத் தாக்குதல் களால் முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் எதிர்கொண்ட சவால்கள்: இழப்புகள் பற்றிய ஆழமான முழுமையான பதிவுகள் இந்த நூலில் இல்லை. ஆனால் ஒரு ஆழமான தேடலுக்கு ஆய்வுக்குத் தேவையான முக்கியமான குறிப்புக ளையும் அரசியல் சிந்தனை வழிகாட்டல்களையும் இந்நூல் கொண்டுள்ளது. அதேபோல சிங்கள தமிழ் ஆளும் வர்க்கங் களின் தோற்றம், வளர்ச்சி, வர்க்கப் பண்புகள், உள்முரண்கள் பற்றி விரிவான குறிப்புகள் உள்ளன. அது போலவே மலையகத் தமிழர்கள் முஸ்லிம்களின் ஆளும் வர்க்கங் களைப் பற்றிய விரிவான குறிப்புகளையும் உள்ளடக்கி இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். மலையகத் தொழிற்சங்க அரசியல் பாராளுமன்ற ஆசனத்திற்கான வாக்கு அரசிய லாகச் சீரழிந்த வரலாற்றையும் விரிவாக எழுத வேண்டிய தேவையையும் இந்நூல் உணர்த்துகிறது.

நிறைவாக

நூலாசிரியர் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தி இருக்க வேண்டிய வேறு சில விடயங்களை இப்போது நோக்கலாம். பூகோள அரசியலில் வல்லாதிக்க சக் திகளாக விளங்கும் அமெரிக்க மேற்குலக நாடுகளும் பிராந்திய வல்லாதிக்க நாடுகளான இந்தியா, சீனா போன்ற வையும் தேசிய இனப் பிரச்சினையை எப்படி தனது நலனுக்குத் தக்க வகையில் கையாண்டன அது எப்படி எமது தேசிய இனப்பிரச்சினையை கூர்மையாக்கி இவ்வளவு இழப்பு களுக்கு வித்திட்டது என்பதை ஆராய வேண்டிய தேவை உள்ளது. ஆய்வாளர் மீநிலங்கோ அவர்கள் சர்வதேச அரசியல் விவகாரங்களில் கூர்மையான அவதானிப்புகளையும் ஆழமான ஆய்வுகளையும் செய்து வருபவர். அந்த அடிப்ப டையில் நாம் மேற்குறிப்பிட்ட விடயத்தையும் தேசிய இனப்பி ரச்சினை பற்றிய ஆய்வின் தொடர்ச்சியாக மேற்கொள்வார் என நம்பலாம்.

அதேபோல தேசிய இனப் பிரச்சினையைச் சரியான வழியில் தீர்க்க முடியாமைக்கும் இலங்கையின் தொழிலாளர் வர்க்க அரசியலைச் சரியான திசையில் வழிநடத்த முடியாமைக்கான முக்கிய காரண கர்த்தாக்களாக அமைந்த இடதுசாரிகளின் வகிபாத்திரத்தைத் தனியாக ஆய்வு செய்ய வேண்டிய ஒன்று என்று இந்நூலின் வெளியீட்டு விழாவில் ஆசிரியரே குறிப் பிட்டார். அந்த முயற்சியில் தான் ஈடுபட்டுக் கொண்டிருப்பதா கவும் தெரிவித்தார். தேசிய இனப்பிரச்சினைகளுக்கும் இலங் கையின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் முக்கியமான காரணிகளாக அமைந்த இடதுசாரிகளின் சந்தர்ப்பவாத அரசி யலையும் அவர்கள் விட்ட வரலாற்றுத் தவறுகளையும் தீர விசாரிப்பது அவசியமானதாகும். அதேநேரம் புரட்சிகரப் பாதையை தேர்ந்தெடுத்த இடதுசாரிகள் பரந்த மக்கள் திரள் போராட்ட அரசியலை முன்னெடுக்க முடியாமல் போன தற்கான அகப் புறக் காரணிகளையும் ஆராய வேண்டிய தேவை உள்ளது.

இலங்கையின் அதிகாரத்தைத் தீர்மானிக்கிற முக்கிய சக்தியாக ஊடகத்துறை விளங்குகிறது. அத்துறையின் வர்க்க சார்பு தேசிய இனப் பிரச்சினையை சிக்கலாக்கியதில் அவர் களின் பங்கு பற்றியும் ஆராய வேண்டும். ஏனெனில் இலங் கையில் பெரும்பான்மை வாதத்தையும் பெருந்தேசிய மேலா திக்கத்தையும் சமூகமயமாக்கியதில் இவர்களின் பங்கு பெரியது. இனங்களுக்கிடையில் வெறுப்பையும் சந்தேகத் தையும் விதைத்து பாசிசக்கூறுகளை சமூகமயமாக்கியதைப் பற்றி விரிவாக பதிவு செய்ய வேண்டும். மேல் நாம் சொன்ன குறைகள் எதுவும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள 52 கட்டுரைகளும் 52 வாரங்களாகத் தொடர்ந்து வெளிவந்த பத்திரிகைப் பத்திகள் ஆகும். எனவே பத்திரிகைப் பத்திகள் சாதாரண மக்களின் எளிமையான வாசிப்புக்காக இலகுவாக எழுதப்படுபவை. அவற்றில் ஆய்வுக்கட்டுரைக்குரிய பண்புகளைத் தேடுவது பொருத்தமானதாக இருக்காது. ஆயினும் இந்நூல் கொண்டி ருக்கிற பொருட்செறிவு, இந்நூல் இன்னும் விரிவாக எழுத வேண்டியது காலத்தின் அவசியம் என்பதையும் உணர்த்து கிறது. அந்த அவாவையே நான் மேலே குறிப்பிட்டிருந்தேன்.

இலங்கையின் சமூக பொருளாதார அரசியல் தளங்களின் அசைவியக்கத்தில் தேசிய இனப் பிரச்சினையின் பங்கு முக் கியமானது. தேசிய இனப்பிரச்சினையின் வளர்ச்சிக்குப் பொருளாதார சூழமைவுகளுக்கும் பொருளாதார நெருக்கடி களுக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு என்பதை இந்நூலை வாசிக்கிற எவரும் எளிதில் புரிந்து கொள்வர். இனங்களைப் பிரித்தாளுவதில் ஆளும் வர்க்க நலன்கள் ஆற்றுகிற பங்கு இனங்களுக்கிடையில் பிளவுகளை உண்டாக்கி ஆளும் அரசியல் சக்திகள் ஆதாயமடைந்த விதங்களைப் புதிய தலைமுறையினருக்கு மிக இலகுவாக விளங்கக்கூடிய வகையில் சான்றுகளுடன் எழுதப்பட்டி ருப்பது இந்நூலின் கூடுதல் சிறப்பு.

'கறுப்பு யூலை: கற்காத பாடங்கள்' என்கிற இந்த நூல் கற்றுத் தருகிற பிரதான படிப்பினை ஏதென்றால் வரலாற்றை அறிவின் கண்கொண்டு ஆராய்ந்து அதன் சிக்கலான முடிச் சுகளை அவிழ்த்து வரலாற்றின் மீது சுமத்தப்பட்டிருக்கும் புனைவின் தலைகளை அகற்றி வரலாற்றை விடுவிப்பதே விடுதலைக்கு இன்றியமையாதது. வரலாற்றை பதியும்போது மக்கள் பக்கம் நின்று பதிய வேண்டும் என்பதையும் மக்கள் நலன் சார்ந்து பதிய வேண்டும் என்பதும் நூலாசிரியர் எமக்குச் சொல்லும் மிகப் பெறுமதியான செய்தியாக இருக் கிறது. வரலாற்றைச் சரிவரப் படிப்பதும் சரிவர பதிவதும் இன் றியமையாததாகும். அவ்வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வது அதைவிடவும் முக்கியமானது என்ப தையும் இந்நூல் சுட்டுகிறது.

சரியான வரலாற்றுப் புரிதல் இல்லாத தலைமுறை போராடுவ தற்குரிய அடிப்படையான கருவியை இழந்து தடுமாறும் தலைமுறையாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். வரலாறு கற்றுத் தந்த பாடங்களைக் கற்போம். அக்கற்றல் புது வரலாற்றை நோக்கி நம்மை வழிநடத்தும்.

krishnapriyan@thaiveedu.com



ஜெ. கார்த்திக்

கனடியச் சிறார் இலக்கியவெளியில் பொன்னையா விவேகானந்தன்

tg.theeban@gmail.com

தமிழர்களின் மரபார்ந்த அடையாளமாகக் 'கதை' இருந்துவருவதால் குடும்பம், கல்வி, வழிபாடு என அனைத்து நிலைகளிலும் இக்கலை வடிவம் முதன்மை பெறுகிறது. கதையை விளக்குபவரின் வெளிப்பாட்டுத் திறத்தில்தான் அது சிறப்படைகிறது. எனவே அதில் வெற்றிகாண்பவரே, 'கதைசொல்லி' என்று அழைக்கப் படுகிறார்.

கனடாவின் ரொறன்ரோ பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் பொன்னையா விவேகானந்தன், அவ்வகையில் கவனம் பெற்றவர் ஆகிறார். தமிழ் ஆய்வாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர், தமிழினச் செயற்பாட்டாளர், இலக்கியப் படைப்பாளர், நாடக இயக்குநர் ஆகிய பன்முகங்களோடு, 'கதைசொல்லி' என்னும் சிறப்பையும் பெற்றுள்ளார். குறிப்பாக, சிறார்களுக்கான கதைசொல்லியாகத் திகழ்கிறார்.

சிறார் கதைகளுக்காக, சிறார் இலக்கியப் படைப்புலகம் என்ற ஒன்று, தனித்துறையாகத் தமிழில் நிலைபெற்று வருகிறது. தாயகத்தை விட புலம்பெயர் தேசங்களில் தான் இது அதிகரித்துவருகிறது. சிறார் படைப்பாளர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிற இச் சூழலில் சிறார் படைப்புகள், நேரடியாகச் சிறார்களைச் சென்றடைவதில் சிக்கல்கள் இருப்பதைக் காண முடிகிறது. இன்றைய நவீனத் தொழினுட்பங்களால் இவ்விடைவெளி அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், புலம்பெயர் தமிழர்களின் குழந்தைகளுக்கு, இவ்விலக்கியங்கள் சென்றடைதல் என்பது சவால் மிக்கதாக மாறியுள்ளது. படைப்பாளனுக்கும் சிறார்களுக்கும் உள்ள இவ்இடைவெளியைக் கல்வியியலின் மூலமாக, பொன்னையா விவேகானந்தன் நிரப்புகிறார்.



கனடாவில், அ. முத்துலிங்கம் முதலான கதைசொல்லிகளுக்கு மத்தியில், சிறார் கதைசொல்லியாகப் பொன்னையா விவேகானந்தன் திகழ்வதற்கு, அவர் படைத்த சிறார் கதைகளைச் சான்றாக்கமுடியும். 'தமிழ்மொழிக் கல்வி வழிகாட்டல்களும் எடுத்துக்காட்டுகளும்' என்னும் நூலில், ஆறு சிறார் கதைகளை அமைத்துள்ளார். அவை, புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியலைச், சிறார் நிலையில் இருந்து பிரதிபலிப்பனவாகும். எடுத்துக்காட்டுகளாக, இரண்டு கதைகள் மட்டும் இங்கு எடுத்தாளப் படுகின்றன.

அந்நூலில் 'கறுப்புநாயும் திருடர்களும்' என்பது முதலாவது கதை. ஒரு வீட்டைப் பல வண்ண நாய்கள் காவல் காத்தன. அதில் ஒரு கறுப்புநாயை, ஏனைய வண்ண நாய்கள் ஒதுக்கி வந்தன. ஒருநாள் இரவு, அங்கு ஒரு திருடன் வந்தான். அவனது கண்களுக்கு வண்ண நாய்கள் புலப்படவே, அவற்றைக் கற்களால் அடித்தான். நாய்கள் அலறி ஒதுங்கின. எதிர்பாரா நேரத்தில், திருடனின் காலைக் கறுப்புநாய் கடித்தது. பின்பு அவனைத் துரத்தியது. அந்நாய், கறுப்பாக இருந்ததனால், இருட்டில் புலப்படவில்லை. அடுத்தநாள் ஏனைய நாய்கள், இதன் வலிமையை உணர்ந்து நண்பனாக்கிக் கொண்டன எனக் கதையை நிறைவு செய்கிறார். கறுப்புநாய் போன்று, அடையாளத்தை ஆயுதமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை இக்கதையின் வாயிலாகப் புலப்படுத்துகிறார். நாய்கள் அனைத்தும் இனத்தால் ஒன்று; பண்பாலும் ஒன்றுதான். நிறத்தால் மட்டுமே வேறுபட்டு நிற்கின்றன. இக்கதையின் உள்ளார்ந்த பொருளைப் புலம்பெயர் சூழலில் இருந்து பார்க்க வேண்டும். கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இன்றளவும் நிறவேற்றுமைச் சிக்கல் உள்ளது. அங்கே, தமிழ்ப் பிள்ளைகள் தாழ்வு மனப்பான்மை கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்துவதாக இக்கதை அமைந்துள்ளது.

'நண்பரைத் தேடிய யானை' என்ற கதையும், புலம் பெயர் சூழலை மையமிட்ட படைப்பாகும். ஒரு யானை தமக்கான நண்பனைத் தேடிக் காட்டில் அலைந்தது. முதலாவதாக ஒரு குரங்கைக் கண்டு, அதனிடம் நட்பு நாடியது. குரங்கு, தம்மைப் போல யானையால் மரம் தாவ இயலாது எனக்கூறி

நிராகரித்தது. பின்னர், யானை தாம் செல்லும் வழியில் முயல் ஒன்றைக் கண்டது. அதனிடம் நட்பழைப்பு விடுக்கவே, முயலானது, தம்மைப்போல யானையால் மரப்பொந்தில் செல்லமுடியாது எனக்கூறி மறுத்தது. பிறகு, வழியிடையே இருந்த தவளையிடம் நட்புக் கோரியது. தவளையோ, தம்மைப்போல யானை யால் குதித்துச் செல்லமுடியாது எனக்கூறி ஒதுங்கிச் சென்றது. யானை சோகமான முகத்துடன் நடந்து சென் றது. அம்மூன்று விலங்குகளையும், சிங்கம் பயமுறுத்தி யமையைக் கண்டது. மூன்று விலங்குகளையும் யானை விடுவிக்கச் சொன்னது. ஆனால் சிங்கம் கேட்கவில்லை. ஆதலால், சிங்கதைத் தம் துதிக்கையால் அடித்துக் கீழே விழச்செய்தது. பின்னர், மூன்று விலங்குகளும் யானை யுடன் நட்புப் பாராட்டின. இக்கதையில், பல விலங்கினங் கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் தனித்த பண்புகளைக் கொண்டுள்ளன. இருப்பினும், இக்கதை யானது அனைவரும் ஒன்றாக இருந்து, பல்லினச்சூழ லைப் பேணவேண்டியதன் இன்றியமையாமையை வலியு றுத்துகிறது.



இதுபோன்று, கனடாவின் வாழிடச் சூழலை மையமிட்ட கதைக்களங்களை, இவரின் பிற படைப்புகளிலும் காண இயலும். கனடாவாழ் புலம்பெயர் தமிழர்களின் வாழ்விய லில் உருவாகும் சமூகச் சிக்கல்கள் குறித்தும் ஆய்வு செய்துள்ளார். 'பெயர்வுத் தமிழ்ச்சமூகம் - இருப்பும் இடர்களும்' என்ற நூலை, இதற்கென வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவரின் படைப்புகள் அனைத் தும், புலம்பெயர் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் அறை கூவல்களைப் பிரதிபலிக்கின்றன என்பதை, வீரகேசரி இதழுக்கு (01.10.2023), கந்தசாமி கங்காதரன் எழுதிய 'பெயர்வுத்தமிழர் வாழ்வைப் பேசும் நான்கு நூல்கள்' என்னும் கட்டுரையின் வழி அறியலாம்.

சிறார்களுக்கு, நேரடியாகக் கதை கூறுவதில் சிக்கல் இருப்பதில்லை. எளிமையான சொற்கள் மூலம் அவர் களுக்குப் புரியும் வடிவில் எடுத்துரைத்தல் போதுமானது. ஆனால், அவற்றை அவர்களின் மனதில் நிறுத்துவதில் தான், கதைசொல்லியின் வெற்றி அமைகிறது. அதற்காக, கதையினைப் பாடலாகவும் தந்துள்ளார். மேலும், அதற்கு அடுத்த பக்கத்தில், கதையை நடிப்பதற்கும் ஏற்பச் சிறு சிறு தொடர்கள் மூலம் சிறு நாடகத்தை அமைத்துத் தந்துள்ளார். கல்வியியலின் துணைக்கோடலை, கதை சொல்லி என்னும் நிலையில் இருந்து நேர்த்தியாகப் பயன்படுத்தியுள்ளமை புலப்படுகிறது.

மேலும், இவர் நாடக ஆசிரியராகவும் விளங்குகின்றார். ஏறத்தாழ இருபதிற்கும் மேற்பட்ட நாடகங்களை இயக் கியுள்ளார். தாய்வீடு இதழ் ஒருங்கிணைத்த அரங்கியல் நிகழ்வுகளில், தம்முடைய ஐந்து நாடகங்களை அரங் கேற்றியுள்ளார். அவை, 'பொன்னையா விவேகானந்தனின் நாடகங்கள்' என்னும் நூலாக வெளிவந்துள்ளமை குறிப் பிடத்தக்கதாகும். கதைகளை உருவாக்குவதில், அவரின் நாடக அனுபவம் கைகொடுத்துள்ளது. கதைகளின் முறைவைப்பில் தரவரிசையைப் பயன்படுத்தாமல், அனைத் துக் கதைகளையும் வாசிப்பதற்கு ஏற்பச் சீராக வைத் துள்ளமை பாராட்டிற்குரியதாகும். இவ்வாறு, புலம்பெயர் தமிழ்ச் சமூகம் - தமிழ்க் கல்வி - இலக்கியம் ஆகிய பின்னணியில், தேர்ந்த கதைசொல்லியாக நம் கண் முன் பொன்னையா விவேகானந்தன் திகழ்கின்றார். அவர் எழுதிக்கொண்டே இருக்கட்டும், நாம் வாசிக்கக் காத்துக் கொண்டே இருப்போம்.



Karthik.J@thaiveedu.com



ஒடுக்குமுறைகளுக்கு எதிரான நூறுகோடி மக்களின் எழுச்சி

அன்பினாலான வாழ்தல் செய்வோம்

tg.theeban@gmail.com

‘இந்த உலகில் மூன்றில் ஒரு பெண் அவளது வாழ்க்கைக் காலத்தில் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றாள்’ என்ற 2012-ஆம் ஆண்டின் ஐ.நா. சபை அறிக்கையின் அடிப்படையில் பார்த்தால், கிட்டத்தட்ட நூறுகோடிப் பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றார்கள். மிகவும் மோசமான இந்த நிலைமைக்கு எதிராக நூறுகோடிப் பெண்கள் எழுச்சி கொள்வோம், என்ற கோசத்துடனே ‘ஈவ் என்ஸ்லர்’ என்ற அரங்காற்றுகையாளரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையானது உலகம் முழுவதுமுள்ள பெண்நிலைவாத செயற்பாட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 13-வது வருடமாக, இந்த வருடமும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கிட்டத்தட்ட 160 நாடுகளில் நிகழ்த்தப்படும் எழுச்சிகளானது வழக்கமான எழுச்சிகளின் வடிவங்களாக இல்லாது ஆக்க பூர்வமான வடிவங்களின் ஊடான - கலைகளின் ஊடான எழுச்சிகளாக அந்தந்த நாடுகளிலுள்ள செயற்பாட்டாளர்களால் வடிவமைக்கப்படுகின்றன.

‘இலங்கையிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற வாழ்தலை ஆடுவோம் பாடுவோம், கொண்டாடுவோம்’ என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பை மையமாகக் கொண்ட பெண்நிலைவாத செயற்பாட்டாளர்களால் 2013-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக சமதை பெண்நிலைவாத நண்பிகளும் மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக்குழுவினரும் இந்த எழுச்சிகளில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலுமுள்ள பல்லினப் பெண்களும் கலைஞர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுமாக நூற்றுக்கணக்கானவர்கள் இணைந்துள்ளனர். இந்த எழுச்சிகளின் விளைவாக வன்முறையற்ற வாழ்வுக்கான காண்பியக் கலைஞர்கள், நீதிக்கான பெண்கள் பறை, விறலி பெண்கள் ஆற்றுகைக் குழு போன்ற குழுக்கள் உருவாகித் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

ஒருங்கிணைந்த நூறுகோடி மக்களின் எழுச்சி – 2026:

கடந்த இரண்டு வருடங்களாக புத்தளம் மற்றும் அநுராத புரத்தில் நிகழ்த்தப்பட்ட இணைந்த எழுச்சிகள் போன்று, 2026-ஆம் ஆண்டிற்கான நூறுகோடி மக்களின் இணைந்த எழுச்சியானது மட்டக்களப்பு பாலமீன்மடு லைற்ஹவுஸ் வாவிக்கரையில் 14.02.2026 மாலை 4 மணியிலிருந்து நடத்தப்பட்டது.

சமதை பெண்நிலைவாத நண்பிகள், மூன்றாவது கண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள், மற்றும் வன்முறையற்ற வாழ்வுக்கான காண்பியக் கலைஞர்கள் ஆகியோரின் இணைந்த ஒருங்கிணைப்பில் இலங்கையின் 10 மாவட்டங்களிலிருந்து வருகை தந்த 20 பெண்கள் அமைப்புகள், சமூக மாற்றச் செயற்பாட்டாளர்கள், பிரதேச மக்கள், இளைஞர்கள் சிறுவர்களுடன் இந்த எழுச்சி நிகழ்ந்தது. இவ்வெழுச்சியில் அம்பாறை, மட்டக்களப்பு, நுவரெலியா, திருகோணமலை, அநுராதபுரம், புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இருந்தும், மற்றும் வாவிக்கரைக்கு வந்த பொதுமக்களுமாக 700-இற்கும் மேற்பட்ட மக்கள் பங்குபற்றியிருந்தனர்.

இவ்வெழுச்சியானது ‘மலையகச் சகோதரிகளுடன் உறுதுணையாய்’, ‘சிந்தனைக்கும் பகுத்தறிவுக்குமான கல்வி’, ‘அன்பினாலான வாழ்தல் செய்வோம்’, ‘வன்முறைகளிலிருந்தும் ஏகாதிபத்தியத்திலிருந்தும் விடுதலை பெறுவோம்’, ‘பால் நிலை சமத்துவத்துக்கான ஆண்கள்’, ‘உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்போம்’ எனும் தொனிப்பொருள்களில், மக்களை ஈடுபடுத்தும் செயற்பாடுகள் மற்றும் செயல்வாதங்களுடன் அமைந்திருந்ததுடன் விடுதலைக்கான பாடல்கள், கவிதைகள், நாடகங்கள், கூத்து, பறையிசை ஆகிய கலைச் செயல்வாதங்களும் இடம்பெற்றிருந்தன.

வன்முறையற்ற வாழ்வுக்கான காண்பியக் கலைஞர்களின் கண்காட்சி:

நூறுகோடி மக்களின் எழுச்சிக்காக உருவாக்கப்பட்ட இந்தக் குழுவினரது 14-வது கண்காட்சி இம்முறை மட்டக்களப்பிலுள்ள கூடம் மண்டபத்தில் 14-ஆம் திகதியிலிருந்து 16-ஆம் திகதி வரை புதிதாக இணைந்த இளம் ஓவியர்களையும் இணைத்த 11 கலைஞர்களது காட்சியாக நிகழ்த்தப்பட்டது.





மலையக சகோதரிகளுக்காய் - நுவரெலியா அவ்வை சிறுவர் அரங்கினரின் காட்சிப்படுத்தல்



அன்பினாலான வாழ்தல் செய்வோம் - புதுவருட வாழ்த்து தெரிவித்தல்

இதில், உள்ளூர் வளங்களின் சிறப்புகள், உள்ளூர் தெய்வங்களுக்கான சடங்குகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள், பலதேசியக் கம்பனிகளால் சுரண்டப்படும் இயற்கை வளம், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், வன்முறை மனப்பாங்குகளை உருவாக்கும் சினிமா, மரபுசார் உணவுகள், தொழில்கள் மற்றும் பழங்குடி மக்களின் இயற்கையோடிணைந்த வாழ்வு மீதான சவால்கள், ஒடுக்குமுறைகளுக்கெதிரான குரலாக நீதிக்கான பறை போன்ற தலைப்புகளில் காட்சிப்படுத்தல்கள் இருந்தன.

நூறுகோடி மக்களின் எழுச்சி – 2026 முன்னோடி நிகழ்வுகள்:

இந்தவருட எழுச்சிக்கான தயார்ப்படுத்தலாகவும் முன்னோடி நிகழ்வுகளாகவும் பல நிகழ்வுகள் கடந்த வருட இறுதிப்பகுதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டன. புத்தளத்தையும் மட்டக்களப்பையும் மையமாகக் கொண்டு; புதிதாக இணைந்த இளம் கலைஞர்களுக்கான கருத்தியல் பயிற்சிப்பட்டறைகள், இளம் ஆண்களுடனான பயிலமர்வுகள், நுவரெலியா



ஹற்றனில் நடந்த அவள்நிலம் அவள் உரிமை எழுச்சி

மாவட்டத்தின் அவ்வை சிறுவர், இளையோர் குழுவுடனான பயிலமர்வுகள் ஆகியவற்றுடன் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் முன்னெடுக்கப்படும் 'அன்பினாலான வாழ்தல் செய்வோம்', 'வன்முறைகளற்ற ஆண்டாக இவ்வருடம் அமையட்டும்' என்ற பாடல்கள் பறையிசையுடனான புத்தாண்டு வாழ்த்துத் தெரிவிக்கும் சிற்றூர்வலமும் தை முதலாம் திகதி மட்டக்களப்பு நகரில் நிகழ்த்தப்பட்டது. மேலும் திருகோணமலை கடற்கரையில் 31.12.2025 அன்று, ஈ விங்ஸ் - பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சுயாதீன மையத்தின் ஏற்பாட்டில் 'சமத்துவமான நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் மகளிர் சங்கங்கள் இணைந்து பட்டத்திருவிழா ஒன்று ஏற்பாடு செய்திருந்தன.

மன்னாரில் 30.01.2026 அன்று மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தினால் சமூக மாற்றச் செயற்பாட்டிலும் அரசியலிலும் ஈடுபடும் பெண்களுடன் 'ஒரு குரல் அல்ல, ஒரு இயக்கம், ஒரு பெண் அல்ல, ஒரு பில்லியன் பெண்களின் குரல்' எனும் கலந்துரையாடலும், அடம்பன் ஆற்றல் நுண்கலைக்கல்லூரியினரால் 04.02.2026 அன்று 'கலைச் சிந்தனை, அம்மாவிற்கு உதவுதல் தனக்கு உதவுதல், பிளாஸ்டிக் பாவனையைத் தவிர்த்தல், அன்பையும் இரக்கத்தையும் மற்றவர்களிடத்தில் பகிர்தல்' எனும் தலைப்பில் சிறுவர்களுடனான ஓவியச் செயற்பாடும் நிகழ்த்தப்பட்டது.

அக்கரைப்பற்று தேன் அருவி மகளிர் நிலையத்தினால் 06.02.2026 அன்று 'பெண்களைக் கொண்டாடுவோம்' எனும் தொனிப்பொருளில், கலந்துரையாடலும், அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தினரால் 10.02.2026 அன்று 'வன்முறை பெண்களின் உடலை முடக்க நினைக்கிறது, ஆனால் நடனம் அந்த உடலுக்கு சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது' 'வன்முறைக்கு எதிரான போராட்டத்தை ஒரு கொண்டாட்டமாக, குறிப்பாக நடனம் மற்றும் கலை வழியாக வெளிப்படுத்துதல்' நிகழ்வும், முல்லைத்தீவு முள்ளியவளை ஆளுமைப் பெண்கள் குழு, நிஷா அபிவிருத்தி நிலையம், யுகசக்தி பெண்கள் அமைப்பு, சூழல் மற்றும் சமூகத்தின் அபிவிருத்தியை வலுவூட்டும் நிறுவனம் இணைந்து 09.02.2026 அன்று கலந்துரையாடலும் பதாகை தயாரித்தலும் நடத்தப்பட்டன.

நூறுகோடி மக்களின் எழுச்சி 14.02.2026:

அவள் நிலம் அவள் உரிமை - மண்ணைப் பாதுகாப்போம், பெண்ணைக் கௌரவிப்போம், என்ற தலைப்பில் 14.02.2026 அன்று ஹற்றன் கொட்டகலை சமூக நலன்புரி மன்றத்தினரால் ஓர் எழுச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் தோட்டக் கிராம மட்டத்திலுள்ள 15 பெண்கள் அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகளின் உத்தியோகத்தர்கள், அரசாங்க WDO உத்தியோகத்தர்கள், முதியோர் அமைப்புகளின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். மரபுணவுகள், மரபு விளையாட்டுக்களுடன் மலையகப் பெண்களின் நிலவுரிமையைக் கோரும் எழுச்சியாக இது அமைந்தது.

'எமக்காக, எமது சூழலுக்காக, எமது உறவுகளுக்காக எழுச்சி கொள்வோம்' எனும் தலைப்பில் பண்டாரவளையிலுள்ள சிறுவர் இல்லச் சிறுவர்களுடன் சித்திரம் வரைதல் ஊடான கலந்துரையாடல் ஒன்று மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத் திறன் செயற்பாட்டு நண்பர்கள் குழுவின் அங்கத்தவர்களால் நடத்தப்பட்டது.

கட்டுநாயக்காவிலுள்ள சுதந்திர வர்த்தக வலயப் பெண்களுடன் வேலை செய்யும் 'ஸ்டான்ட் அப்' இயக்கம் 15.02.2026 அன்று 'எங்கள் உடல் எங்கள் உரிமை' என்ற தொனிப் பொருளில் ஓர் எழுச்சியை நிகழ்த்தினர்.

சமதை பெண் நண்பிகள் சார்பில்
- கமலா வாசுகி

kamala.vasuki@thaiveedu.com





19

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

tg.theeban@gmail.com

இதுவரை...

- மகாவம்சம் பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டளவில், பாளி மொழியில், மகாநாம தேரர் என்னும் பௌத்த பிக்குவால் தொகுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.
- பௌத்த மதத்தின் பெருமையைக் காட்டும் வகையிலான, (நம்பகத்தன்மை அற்ற) செவிவழிக் கதைகள் முதலியவற்றைத் திரட்டி 'அட்டகதா' என்னும் பெயரில் 'பாளி' மொழியில் தொகுத்தார்கள்.
- இது, பின் ஒரு காலத்தில், கால வரிசைப்படி ஒழுங்கு செய்யப்பட்டு 'அட்டகதா-மகாவம்சம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது.
- சுமணன் என்னும் பௌத்த தேரர் (அசோகச் சக்கரவர்த்தி சுமணனின் பாட்டன்), அசோகச் சக்கரவர்த்தியிடமிருந்து புத்தரின் அஸ்தியையும் அவர் பயன்படுத்திய பிட்சாபாத்திரத்தையும், இந்திரனிடமிருந்து புத்தரின் வலது காரை எலும்பின் அஸ்தியையும் வாங்கி வந்தான்.
- அரசன் தேவநம்பியதீசன் அரச குடும்பத்தின் ஆதரவில் விகாரம் கட்டினான். விகாரம் முழங்கால் உயரம் கட்டியதும் அதில் அஸ்தி வைப்பதற்கான விழாக் கொண்டாட்டம் பற்றி நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. மக்கள் திரள் திரளாகக் கூடினர். சுற்றிலும் மக்கள் சூழ்ந்திருக்க அஸ்தி யானையின் முதுகிலிருந்து ஆகாயத்தில் மேலெழுந்து எல்லோரும் காணும்படி காற்றில் மிதந்தது. பல விதமான அற்புதங்களும் நிகழ்ந்தன. ஏற்கனவே நிர்வாணம் அடைந்த புத்தர், தமது உடலின் அஸ்தி மூலம் இவ்வாறு மனித குலத்திற்கு எல்லையற்ற அருள் பொழிந்து கொண்டிருந்தார்.
- சங்கமித்தை வெள்ளரசுக் கிளையை இலங்கைக்குக் கொண்டுவந்தாள். இவ்வாறாக, இலங்கையில் பௌத்த மதம் புத்தரின் முக்கிய பாகங்களின் இருப்பிடமாகி உலகில் மிக உயரிய இடத்தைப் பெற்றது.
- தென் இந்தியாவில் பௌத்தம்: பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டளவில் சைவ, வைணவ மதப் புரட்சியால் பௌத்தமதம் அரச ஆதரவை இழந்தது. பௌத்தமத வளர்ச்சி குன்றியது. பௌத்த கோயில்கள் ஜைனக் கோயில்களாக மாறின. அகளங்கர் என்னும் ஜைனர், காஞ்சிபுரத்தில் உள்ள காமக் கோட்டத்தில், பௌத்தருடன் சமயவாதம் செய்து அவரைத் தோற்கடித்துச் சிங்கள நாட்டிற்குத் துரத்திவிட்டார் என்று அறியப்படுகிறது.

தொடர்கிறது...

அத்தியாயம் 19:

மகாபோதி விருட்சம் கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. மகாபோதி மரத்திற்குக் காவலாக ராஜ குடும்பத்தவர் 15 பேர்களையும் மந்திரிகள் குடும்பத்திலிருந்து 8 பேர்களையும் பிராமண குடும்பத்திலிருந்து 8 பேரையும் வைசிய குடும்பத்திலிருந்து 8 பேரையும் இடையர் குலத்திலிருந்து 8 பேரையும் தரக்ஷ, குலிங்க குலங்களிலிருந்து ஒவ்வொருவரையும் துணி நெசவு செய்வோர், மட்பாண்டம் வனைவோர் முதலியவர்களுடன் இதர கைத்தொழிலாளர்களிலிருந்து சிலரையும் நாகர்கள், யக்ஷர்களிலிருந்தும் சிலரையும் அரசன் நியமித்தான்.

மேலே கொடுக்கப்பட்ட பல்வேறு சமூகப் பிரிவுகளிலிருந்தும் ஒரு கூட்டம் திரட்டப்பட்டு போதி மரத்திற்குக் காவலாக அனுப்பிவைக்கப்பட்டது என்பதைப் பார்க்கும் பொழுது போதி மரத்தின் அனைத்துத் தேவைகளையும் பார்த்துக்கொண்டு பாதுகாப்பிற்கென ஒரு சிறு சமூகமே திரட்டி அனுப்பப்பட்டது தெரிகிறது. இவ்வாறு ஒரு சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் இந்தியாவிலிருந்து அனுப்பிவைக்கப்படுவது ஒரு தடவை அல்ல. இவ்வாறு இந்தியாவிலிருந்து பல்வேறு தருணங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்திருக்கிறார்கள் என்பது வரலாறு.

அரசன், போதிமரத்தைச் சகல மரியாதைகளுடனும் வணங்கி, தனது இராச பதவியை மூன்று முறை வழங்கி, போதிமரத்தை இராஜாதிராஜனாகப் பட்டாபிசேகம் செய்து வைத்தான். பின்,

'நான் மூன்று முறை எனது அரச பதவியைப் போதி மரத்திற்கு அளித்துப் பூசித்தேன். அதே போல் என் நண்பனான அரசனும் அரச பதவியை அளித்து பூசை செய்வானாக' என்றான்.

புத்தர் ஞானம் பெற்ற போதிமரம் அத்துணை பெருமையுடன் இலங்கை வந்து சேர்ந்தது. தேரி சங்கமித்திரை 11 பிக்குணிகளுடனும் அரிதனுடனும் கங்கையில் நின்றிருந்த கப்பலில் பயணத்தைத் தொடங்கினாள். விந்தியமலையைக் கடந்து ஒரு வார காலத்தில் தாம்ரலிப்தியை (தாமரபரணி) அடைந்தார்கள்.



போதிமரம் பயணித்த கப்பல் கண்ணைவிட்டு மறையும் வரை மன்னன் காத்திருந்தான்.

‘பத்து வித அதிசய சக்தி படைத்த புத்தரின் மகாபோதி மரம் ஒளிபரப்பியபடி என்னை விட்டுப் போகிறதே’ என்று ஏங்கினான், அசோகச் சக்கரவர்த்தி. மகாபோதி மரம் கப்பலில் வரும் பொழுது அதனைச் சுற்றி ஒரு யோசனை தூரம் அலைகள் ஓய்ந்துவிட்டன. பஞ்ச வர்ணங்களிலும் தாமரை மலர்கள் சுற்றிலும் மலர்ந்தன. வாத்தியங்களின் இன்னிசை காற்றில் தவழ்ந்தது. தேவதைகள் பலவித காணிக்கைகளை வழங்கினார்கள்.

நாகர்கள், போதி மரத்தை அடைய மாயவேலைகள் செய்து பார்த்தார்கள். அசாதாரணமான சக்தி கொண்ட தேரி சங்கமித்திரை, கருடன் உரு எடுத்து நாகர்களைப் பயமுறுத்தினாள். பயந்த நாகர்கள் அவளைக் கெஞ்சி சமாதானம் செய்து கொள்ளவேண்டியதாயிற்று. அவர்கள், அங்கிருந்து போதி விருட்சத்துடன் வந்தார்கள். நாகர்களது அரச பதவியை அதற்கு அளித்து ஒரு வாரகாலம் வழிபாடு செய்து பலவித காணிக்கைகளும் அளித்தார்கள்.

அதே தினம், மகாபோதி விருட்சம், இலங்கையில், ஜம்புக் கோளத்தை வந்தடைந்தது. தேவநம்பியதீசன், அரண்மனை வாசல் முதல் ஜம்புக்கோளம் வரை அலங்காரம் செய்து மகாபோதி மரத்தின் வருகையை எதிர்பார்த்துக் கடற்கரையிலேயே காத்திருந்தான். இந்த இடத்தில் தான் பிற்காலத்தில் பர்ண சாலை (ஓலையால் கட்டப்பட்ட குடிசை - முனிவர்களும் யோகிகளும் தங்கும் இடம்) ஏற்பட்டது. தேரியின் அதிசய சக்தியால் அரசனால் போதி விருட்சம் வருவதைக் காணமுடிந்தது.

போதி மரம் வந்த மகிழ்ச்சியில் அரசன் உற்சாகத்துடன் கழுத்தளவு நீரில் இறங்கிச் சென்றான். போதி மரத்தைத் தலையில் தாங்கிய அரசன், கரையில் அமைக்கப்பட்ட அழகான கூடாரத்தில் அதனை வைத்தான். தேவநம்பியதீசன், அசோகச் சக்கரவர்த்தி போல இலங்கையின் அரசுரிமையைப் போதி மரத்திற்கு அளித்து அதனை வழிபட்டான். போதி மரத்தின் நிருவாகப் பொறுப்பு அதனுடன் வந்திருந்த 16 பேரிடம் விடப்பட்டது. அதனைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தானே மேற்கொண்டான். மூன்று தினங்கள் பலவிதமான புனித காரியங்கள் நாடு முழுமையும் நடைபெற்றது.

திடீரென பெரு மேகம் தோன்றி மழை பொழிந்தது. பனிப்படலம் போதிமரத்தைச் சூழ்ந்துகொண்டது. போதி மரம், பனியில் மறைந்து யார் கண்ணிலும் படாமல் ஏழு தினங்கள் இருந்தது. வார முடிவில் மேக மூட்டம் மறைந்து போதி மரம் ஆறு நிற ஒளிக் கதிர்களுடன் காட்சியளித்தது.

மகிந்த தேரர், சங்கமித்திரை, அவர்களைச் சேர்ந்தவர்கள், அரசனும் அவனைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அங்கே வந்து சேர்ந்தனர். விழா கொண்டாடுவதற்காகப் பலவிதமான வர்களும் பெரும் திரளாகக் கூடினர். அப்போது அதிசயம் ஒன்று நடந்தது. அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே போதி மரத்தின் கிழக்குப்புறக் கிளையில் ஒரு கனி தோன்றிக் கீழே விழுந்தது. தேரர் அதனை எடுத்து அரசனிடம் கொடுத்தார். அரசன் அதனை ஒரு தங்கத் தொட்டியில் நட்டான்.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அதிலிருந்து எட்டு வேர்கள் கிளம்பின. பின் நான்கு முழ உயரத்திற்கு வளர்ந்த இளம் போதி மரங்கள் அங்கு நின்றன. அரசன் அவைகளுக்கு அபிசேகம் செய்தான்.

இந்த எட்டுப் போதிக் கன்றுகளில் ஒன்று ஜம்புகோளத்தில் இறங்கியதும் அந்த இடத்திலேயே நடப்பட்டது. மிகுதியாக இருந்த இளம் கன்றுகளில் ஒன்று பிராமணர் திவாகரது கிராமத்தில் நடப்பட்டது. இன்னுமொன்று தூபாராமாவிலும் வேறொன்று பிரதம ஸ்தூபியின் முன்பும் ஒன்று சேதிய பர்வத ஆராமையிலும் மற்றொன்று கஜரகாமாவிலும் வேறோன்று சந்தனகாமாவிலும் நடப்பட்டன. அதன் பின் நான்கு கிளைகளில் தோன்றிய பழங்களிலிருந்து 32 கன்றுகள் தோன்றின. அவை அனைத்தும் அங்கொன்றும் இங்கொன்றுமாக விகாரைகளில் வட்டமாக ஒரு யோஜனை தூரத்துக்கு நடப்பட்டன.

போதிமரம் நடப்பட்டதும், அரசி அனுலாவும் அவளைச் சேர்ந்தவர்களும் சங்கமித்திரையிடம் தீட்சை பெற்று அரஹந்தர்களாயினர். போதி மரத்தின் காவலுக்காக வந்த எட்டுப் பேரும் 'போதி விருட்சக் குழு' என்று அழைக்கப்பட்டனர். சங்கமித்திரையும் அவளுடன் வந்தவர்களும் உபாசிகா விஹாரம் எனப் பெயர் பெற்ற மடத்தில் தங்கினார்கள். அங்கு, அவள் பன்னிரண்டு கட்டடங்கள் கட்ட ஏற்பாடு செய்தாள். அவற்றில் மூன்று கட்டடங்கள் முக்கியமானவை. அவற்றுள் ஒன்றில் போதிமரம் வந்த கப்பலின் பாய்மரம் வைக்கப்பட்டது. வேறொன்றில் துடுப்புகள் வைக்கப்பட்டன.

தேவநம்பியதீசன் பிக்குணிகளுக்கான மடம் ஒன்று கட்டி அதற்கு 'ஹதால் ஹக் விஹாரம்' எனப் பெயரிட்டான். சங்கமித்திரை பிக்குணிகளுக்கான இம்மடத்தில் தன் வாசத்தை அமைத்துக் கொண்டாள். இவ்வாறாக இலங்கை மக்களுக்கு நன்மை செய்து கொண்டும் தர்மத்தைப் பரப்பிக்கொண்டும் விருட்சங்களின் ராஜாவாக - மகா போதி மரம் இலங்கைத் தீவில் மகாமேக வனத்தில் அதிசய சக்திகளுடன் வெகு காலம் வரை நிலைத்திருந்தது, இன்றும் இருக்கின்றது.

அத்தியாயம் 20:
தேரருடைய நிர்வாணம்:

அசோகன் ஆட்சியின் 18-ஆவது ஆண்டு மகாபோதி மரம் மகா மேக வனராமாவில் நடப்பட்டது. அதற்குப் 12 ஆண்டுகளின் பின் அசோகன் மனைவி அசந்தி மித்தை காலமானாள். நான்கு ஆண்டுகளின் பின் அசோகன், தசரட்சையை (துரோகி) ராணி நிலைக்கு உயர்த்தினான். தன் அழகில் கர்வம் கொண்ட அவள், அசோகன் போதி மரத்தை வணங்கிக் கொண்டிருக்கிறானே என்று பொறாமைப்பட்டு மந்து முள்ளைக் குத்தி மகா போதி மரத்தைப் பட்டுப்போகும்படி செய்தாள். அதன் பின் நான்காம் ஆண்டு அசோகச் சக்கரவர்த்தி இறந்தான்.

தேவநம்பியதீசன் மகாவிகாரையைக் கட்டி முடித்தான். அவ்வாறே சேதிய பர்வதத்திலும் தூபாராமாவிலும் விகாரைகளைக் கட்டினான். அதன் பின் அவன், தேரரிடம், 'நான் இன்னும் பல விகாரைகள் கட்ட விரும்புகிறேன். தூபங்களில் வைப்பதற்கு அஸ்தி எங்கிருந்து கிடைக்கும்' என்று கேட்டான். அதற்குத் தேரர், 'புத்தரின் பிட்சாபாத்திரம் நிறைய சுமணன் கொண்டு வந்த அஸ்தி, சேதிய பர்வதத்தில் இருக்கிறது. அதனை யானை முதுகில் ஏற்றி இங்கே கொண்டு வர ஏற்பாடு செய்' என்றார்.

அஸ்தி எடுத்துவரப்பட்டு ஒரு யோஜனை துரத்துக்கு ஒரு விகாரை வீதம் விகாரைகள் அமைக்கப்பட்டன. அவற்றின் ஸ்தூபங்களில் முறைப்படி அஸ்தி வைக்கப்பட்டது. புத்தர் பயன்படுத்திய பிட்சா பாத்திரத்தை அரசன் தன் அரண்மனையில் வைத்துப் பூசை செய்தான்.

மகாதேரரிடம் தீட்சை பெற்ற 500 வைசியர்கள் வசித்த இடத்தில் கட்டப்பட்ட விகாரை வைஸ்யகிரி என்று அழைக்கப்பட்டது. சேதிய பர்வத்தில் மஹிந்தர் வசித்த இடம் மகிந்தர் குகை என்று அழைக்கப்பட்டது.

நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே அனுராதபுரத்தில்தான். அனுராதபுரத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் நான் நன்கு அறிவேன். 'எல்லாளசேனை' என்று அழைக்கப்பட்ட, புதைபொருள் ஆய்வு நடந்து கொண்டிருந்த இடத்திலிருந்து 2 நிமிட நடை தூரத்தில்தான் எங்கள் வீடு. பாடசாலை அரை மைல் தொலைவில், மாட்டு வண்டிலில், அந்தப் பழைமையான நகரத்தைத் தினம் காலையும் மாலையும் இரசித்தபடி தான் பள்ளிக்கூடம் செல்வேன்.

'அனுராதபுரம்' (இன்றைய பழைய நகரம்) பௌத்த புண்ணிய தலங்களின் இடிபாடுகள் நிறைந்த அழகிய நகராகக் காட்சியளித்தது. 1958-ஆம் ஆண்டின் முன், அனுராதபுரத்தில் ஏறக் குறைய மூன்றில் ஒரு மடங்கு தமிழர் வாழ்ந்திருந்தார்கள். மாவடி, யாழ்ப்பாணச் சந்தி முதலியவை தமிழர் பிரத்தியேகமாக வாழ்ந்த வாழிடப்பகுதிகள். தமிழ் கலை, பண்பாட்டைப் பாதுகாக்கும் முகமாகத் தமிழ் பிள்ளைகள் படிப்பதற்காக விவேகானந்த கல்லூரியும், அதன் அண்மையில் கதிரேசன் கோவிலும் நகரின் நடு நாயகமாகத் தாபிக்கப்பட்டிருந்தன.

பௌத்த விகாரைகள் (கட்டடங்கள் - புராணக் கதைகள் அல்ல) பற்றிக் கூறப்பட்ட செய்திகள் நம்பகமானவை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், உலக மகா யுத்தத்திற்கான பயிற்சி அனுராதபுரக் காடுகளில் நடைபெற்றதாக எனது தாயார் கூறக் கேட்டிருக்கிறேன். எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துத் தப்பி இருக்கின்றன, இந்த விகாரைகள்.

தேவநம்பியதீசனால் மக்கள் தேவைக்காகக் கட்டப்பட்ட விகாரைகள், மடங்கள் முதலியவை:

- மகா விகாரம்
- சேதிய விகாரம்
- தூபாராமா
- மகா போதி மரம் நட்டது, ஸ்தூபத்தின் இடத்தைக் குறிக்க அழகிய கல் தூண் நட்டது
- சம்புத்தருடைய காரை எலும்பு அஸ்தியை வைத்துக் கோயில் கட்டியது.
- இஸ்ஸர சமணக விகாரம்
- தீசவாவி
- பத்மதூபா
- வேசகிரி விகாரம்
- உபாசிகா விகாரம் (மடம்)
- பிக்குணிகள் உணவு கொள்வதற்காக அமைக்கப்பட்ட மகா பாலி என்னும் உணவு உண்ணும் இடம். இவ்விடம் 1000 பிக்குகளுக்கு வேண்டிய பாத்திரங்களுடன் காணப்பட்டது.
- நாகத்வீபத்தில் ஐம்புகோள விகாரம், திசமகா விகாரம், பாசின ராமா.

பௌத்த தர்மத்தை மேற்கொண்ட முதலாம் ஆண்டிலேயே தேவநம்பியதீசன் இவை அனைத்தையும் செய்தான். தேவநம்பியதீசன் 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான். தேவநம்பியதீசன் வாரிசு இன்றி இறந்ததால் அவன் தம்பி உதியன் என்பவன் அரசனாகி, பக்தியுடன் ஆண்டான். இலங்கைத் தீவில் பௌத்த தர்மத்தையும் புத்தரது போதனைகளையும் தர்மக் கோட்பாடுகளையும் அற்புதமாகப் பிரசாரம் செய்த மகிந்த தேரர், உதயன் ஆட்சியின் எட்டாவது ஆண்டில் தனது 60-ஆவது வயதில், ஐப்பசி மாதம் சுக்கிலபட்சம் எட்டாவது நாள் புலன்களை அடக்கி நிர்வாணம் அடைந்தார்.



அவரது மரணத் துயரத்தை இலங்கைத் தீவு முழுமையும் அனுபவித் தது. அனைத்து மரியாதைகளுடனும் அவரது உடல் தகனம் செய்யப்பட் டது. அவரது அஸ்தியில் பாதி சேதிய பர்வதத்திலும் மறுபாதி ஏனைய விகாரங்களினிலும் ஸ்தூபம் எழுப்பி வைக்கப்பட்டது. அவரது சடலம் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு இசிபூ மங்கள (முனிவரின் முற்றம்) எனப் பெயரிட்டு அவருக்குக் கௌரவம் அளித்தான் உதிய மன்னன்.

அவ்விடத்தின் சுற்றாடலில் 3 யோசனை தூரத்திலிருந்து புனித துறவி கள் இறந்தபோது அவர்கள் உடல் இங்கு கொண்டுவரப்பட்டு எரிப்பது வழக்கமாயிற்று. சங்கமித்தை தான் செய்யவேண்டிய கடமைகள் அனைத் தும் முடிந்ததும் உதயனின் ஒன்பதாவது ஆட்சி ஆண்டில், அவரது 59-ஆவது வயதில் அவர் வசித்த ஹதால்ஹக் என்னும் மடத்தில் நிர் வாணம் அடைந்தார். மகிந்த தேரருக்குச் செய்தது போலவே சங்கமித் தைக்கும் அனைத்து மரியாதைகளும் செய்யப்பட்டன.

இவர்களுடன் வந்த பிக்குனிகளும் மற்றும் பலரும் பலகாலம் அவ்விடத் திலேயே வாழ்ந்து உரிய காலத்தில் மரணத்தைத் தழுவிக்கொண்டனர். அரசன் உதியன் பத்து ஆண்டு காலம் அரசாட்சி செய்து மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

- தேவநம்பியதீசன் காலத்தில் பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவ ரப்பட்டது.
- தேவநம்பியதீசனுக்கும் அசோகச் சக்கரவர்த்திக்கும் சிறந்த நட்பு நிலவியது.
- சுமணன் என்னும் பௌத்த தேரர் (அசோகச் சக்கரவர்த்தி சுமணனின் பாட்டன்), அசோகச் சக்கரவர்த்தியிடமிருந்து புத்தரின் அஸ்தியையும் அவர் பயன்படுத்திய பிட்சாபாத்திரத்தையும் இந்திரனிடமிருந்து புத்தரின் வலது காரை எலும்பின் அஸ்தியையும் வாங்கி வந்தான்.
- அசோகச் சக்கரவர்த்தி, போதிமரத்தை சகல மரியாதைகளுடனும் வணங்கி, தனது இராச பதவியை மூன்று முறை வழங்கி, போதிமரத்தை இராஜாதிராஜனாகப் பட்டாபிசேகம் செய்து வைத்தான். பின்,
- 'நான் மூன்று முறை எனது அரசபதவியைப் போதி மரத்திற்கு அளித் துப் பூசித்தேன். அதே போல் என் நண்பனான அரசனும் (தேவநம்பி யதீசனும்) அரச பதவியை அளித்து பூசை செய்வானாக' என்று கூறி, போதி மரக் கிளையை
- சங்கமித்திரை என்னும் தேரி மூலமாக அனுப்பிவைத்தார்.

இதனால் அறியவருவது,

- இலங்கையில் பௌத்தம் கொண்டுவரப்பட்டதில் அசோகச் சக்கர வர்த்தியின் நேரடித் தொடர்பு இருந்ததாக நம்பப்பட்டிருக்கிறது. அது நாட்டார் பாடல்கள் (கதைகள்) வாயிலாக எடுத்து வரப்பட்டிருக்கிறது.
- அசோகன் காலம் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டு. எனவே, இலங் கையில் பௌத்தம் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டளவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.
- அப்படியாயின் பௌத்தம் வருவதற்கு முன் இலங்கையில் இருந்த வழிபாட்டு முறை யாது?

அடுத்த இதழில் 'இலங்கையில் பௌத்தம் வருவதற்கு முன்னர் வாழ்ந்த மக்கள், அவர்கள் மொழி, மதம் அல்லது வழிபாட்டு முறை யாது?' என்னும் விடயங்கள் ஆயப்படும்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

10

மொழியியலில் கிரேக்க அறிஞர்கள் பங்களிப்பு – 2

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

அரிஸ்டாட்டில் (Aristotle) (பொ.ஆ.மு. 384 – 322):

கிரேக்க மொழியியல் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய மொழி யியலாளர் வரிசையில் மொழி வளர்ச்சிக்குப் பெரும்பங்கு ஆற்றியவர் பண்டைய உலகின் மிகப்பெரும் தத்துவஞானி, விஞ்ஞானி அத்துடன் பல்துறை வல்லுநர் அரிஸ்டாட்டில். இவரது மொழியியல் ஆய்வுகள் தனிச்சிறப்புக் கொண்ட வையாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக சொற்களைப் பற்றி இவர் கொண்டிருந்த கருத்துகள் இன்றளவும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதோடு பொருண்மையியல் தொடர்பான இவரது சிந்தனை தனிச் சிறப்பு கொண்டதாகப் பார்க்கப்படுகிறது. இவர் 170-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவருடைய காலத்தில் இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் கலைக்களஞ்சியமாகத் திகழ்ந்தன. வானவில், அறிவியல், விலங்கியல், இயற்பியல், புவியியல், உடலியல் ஆகியவற்றையும் பண்டைய கிரேக்கர் கள் அறிந்து வைத்திருந்த அறிவுத்துறைகள் அனைத்தும் பற்றி தனது நூல்களில் குறிப்பிட்டிருந்தார்.

அரிஸ்டாட்டில் தனது 17-வது வயதில் பிளேட்டோவின் அகடா மியில் கல்வி கற்கச் சென்றார். அரிஸ்டாட்டில் கிட்டத்தட்ட 20 வருடங்கள் பிளேட்டோவை மிஞ்சும் அளவிற்கு அனைத்துத் துறைகளிலும் கைதேர்ந்தார். அப்பள்ளியில் அரிஸ்டாட் டிலை அறிவுக் களஞ்சியம் என்று அழைப்பார்கள். இதனை அறிந்த அந்நாட்டு மன்னன் பிலிப்ஸ் அரிஸ்டாட்டிலை தன் மகனுக்கு பாடம் கற்பிக்க அழைப்பு விடுவித்தார். அந்த மகன் வேறு யாருமில்லை 'கைப்பற்றுவதற்கு இனி தேசமே இல்லை' என்று கலங்கிய அலெக்சாண்டர் அவர்கள். அலெக் சாண்டர் பல நாடுகளை கைப்பற்றுவதற்கு முக்கிய காரண மாக இருந்தவை என்றால் அது அரிஸ்டாட்டிலின் போதனை கள் என்பது குறிப்பிடத்தக்கது.



tg.theeban@gmail.com

> ***"சொற்களைப் பற்றி இவர் கொண்டிருந்த கருத்துகள் இன்றளவும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதோடு பொருண்மையியல் தொடர்பான இவரது சிந்தனை தனிச் சிறப்பு கொண்டதாகப் பார்க்கப்படுகிறது."***

பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் மேற்கத் தேய சிந்தனையில் மிகப் பெரும் செல்வாக் குச் செலுத்தும் இரு பெரும் அறிஞர்களா கப் பார்க்கப்படுகிறார்கள். மேற்குலகின் மெய்யியலின் முதன்மையானவராக இவர் பார்க்கப்படுகிறார். நீயூட்டனின் இயற்பியல் கோட்பாடுகள் அரிஸ்டாட்டில் கோட்பாட் டின் ஒரு நீட்சியாகப் பார்க்கப்படுகிறது.

அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள் இடைக் காலத்திய இஸ்லாமிய, யூத மரபுகளில் தத்துவ, இறையியல் சிந்தனையில் ஓர் ஆழ மான தாக்கத்தை ஏற்படுத்தின. அதுவும் குறிப்பாகக் கிறித்தவர்களின் இறையியலில் அவரின் தாக்கம் அதிகமாக இருந்தது. அரிஸ்டாட்டிலை இடைக்கால முஸ்லிம் அறிவாளிகள் 'முதல் அறிஞர்' எனப் போற் றினர். அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள் தமிழ், ஆங்கிலம், இலத்தீன், சிரியாக், அரபு, இத் தாலியம், பிரான்சியம், ஹீப்ரு, செருமானி யம் போன்ற பல உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இவர் உள்ளதை உள்ளவாறு நோக்கும் இயல்புடையவர். 'பொருட்களைக் குறிக்கும் சொற்கள் இயற்கையாக அமைய வில்லை, மனிதரது பரஸ்பர உடன்பாட்டினாலும் பழக்கத்தி னாலும் (Convention) அமைந்தன' என்பதே இவரது மொழிக் கோட்பாட்டின் சாரமாகும். அரிஸ்டாட்டில் சொற்களை வகைப் படுத்தும் போது ஒரு தொடரில் இருவகைச் சொற்கள் சிறப்பிடம் பெறுவதாகவும் அவற்றுள் முதல்வகைச் சொல் பொருளின் தன்மையைக் குறிப்பதாகவும் அதுதான் பெயர்ச் சொல் எனவும் மற்றையது முடிக்கும் சொல்லாகிய வினைச் சொல் எனவும் இவற்றை இணைப்பது இணைப்புச்சொல் எனவும் வகைப்படுத்தினார். இணைப்புச் சொற்களையும் இலக்கணக் கூறாகக் கொள்ள வேண்டும் என்பது இவரு டைய கோட்பாடு. பெயர்ச் சொற்கள் காலம் காட்டாது, வினைச் சொற்கள் காலம் காட்டும் எனவும் மிகத்தெளிவாக விளக்கியதன் காரணத்தால் இன்றளவும் சிறப்பாக காணப் படுவதோடு ஒரு தொடர் எழுவாய், பயனிலை கொண்டி ருக்கும் எனக் கூறியவரும் இவராவார். இவரின் மொழி ஆராய்ச்சியும் தத்துவமும் மேனாட்டு மொழி ஆராய்ச்சிக்கு பெரிதும் வித்திட்ட காரணத்தினால் இவரை 'மேனாட்டு இலக் கணப் படிப்பின் தந்தை' என்றனர்.

அரிஸ்டாட்டில் தான் எழுதிய De Interpretatione எனும் கட்டுரையில் ஹெர்மோஜிஸின் மொழி பற்றிய கோட்பாட் டினை ஆதரித்தார். மொழிக்கலையில் பிளேட்டோவை விட அரிஸ்டாட்டிலுக்கு மிகச்சிறந்த இடம் உண்டு. பிளேட்டோ போன்ற சில கிரேக்க அறிஞர்களது கருத்துகள் பிழையா னவை என்பதே இவரது கருத்தாகப் பார்க்கப்பட்டது. பொருட்களுக்கான பெயர் இயற்கையாக அமையவில்லை, என்பதுடன் மனிதரின் பரஸ்பர உடன்பாட்டினாலும் பழக்க வழக்கத்தினாலும் அமைந்து காணப்படுகின்றன என்பதே அரிஸ்டாட்டிலின் கருத்தாக காணப்பட்டது.

இவர் மொழியை தர்க்கவியல் சிந்தனைகளுக்கான ஒரு கருவி யாகக் கருதினார். சொல் வகைகள்: பிளேட்டோவின் பிரிவை மேலும் விரிவாக்கி, வாக்கிய அமைப்பில் உள்ள மற்ற முக்கிய கூறுகளை (உ.ம்: இணைப்புச் சொற்கள்) சேர்த்து, இலக்கணக் கூற்றை உருவாக்க உதவினார். வாக்கிய அமைப்பு, தொடரியல் (Syntax) பற்றிய ஆரம்பகால ஆய்வு களை, அதாவது சொற்கள் எவ்வாறு இணைந்து அர்த்த முள்ள வாக்கியங்களை உருவாக்குகின்றன என்ற கருத்தை இவர் ஆய்வு செய்தார்.

இந்த அறிஞர்களது கருத்தினை பொ.ஆ.மு. 8-ஆம் நூற் றாண்டு அளவிலேயே எழுதப்பட்டதாகக் கருதப்படும் தொல் காப்பியத்தில் இவ்இலக்கண விதிகள் அனைத்தும் மிக விளக்கமாகக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

டயோனிசியஸ் த்ராக்ஸ் (Dionysius Thrax):

டயோனிசியஸ் த்ராக்ஸ் (Dionysius Thrax) என்பவர் பண் டைய கிரேக்க மொழியியலில் ஒரு முக்கியமான அறிஞர் ஆவார். இவர் பொ.ஆ.மு. 2-ஆம் நூற்றாண்டில் அலெக் ஸாண்ட்ரியாவில் பிறந்தார், ஆனால் இவரது பூர்வீகம் த்ரேஸ் (Thrace) என்பதால் 'த்ராக்ஸ்' (Thrax) என்ற அடைமொழி யைக் கொண்டிருந்தார்.

டயோனிசியஸின் பங்களிப்பு மொழியியலுக்கு மிக முக்கிய பங்காகக் காணப்பட்டது. இவரது மொழியியலுக்கான பணி இலக்கண வகைகளுக்கான அடிப்படை வரையறைகளை வழங்கியது. சொற்களைப் பேச்சின் அடிப்படையில் எட்டுப் பகுதிகளாக வகைப்படுத்தினார். இவரது இந்த வகைப் படுத்திய அணுகுமுறையானது மொழியை இலகுவாகப் பகுப்பாய்வு செய்யக் கூடியதாக மாற்றியதுடன், கிரேக்க, லத்தீன் இலக்கண மரபுகளுக்கு ஒரு அடிப்படையை வழங் கியது.

▸ முதல் முறையான கிரேக்க இலக்கணம்:

ஒரு மொழியின் வளர்ச்சிக்கு இலக்கணம் என்பது மிக முக்கிய பங்கை வகிக்கிறது. தொடந்து மொழி வளர்ச்சியில் இயல்பான கிரேக்க மொழியின் முதல் முறையான இலக்கண மாக கருதப்படும் ஒன்றை முதன் முதலில் எழுதியவராக டயோனிசியஸ் எனும் அறிஞர் காணப்படுகிறார். எனவே மேற் கத்திய உலகில் இதுவே முதல் இலக்கண நூலாகப் பார்க் கப்படுகிறது.

▸ பேச்சின் எட்டுப் பகுதிகள்:

இவரது படைப்பில் சொற்களை பேச்சின் எட்டுப் பகுதி களாக வகைப்படுத்தினார். பெயர்ச்சொல், வினைச்சொல், பங்கேற்பு, கட்டுரை, பிரதிப்பெயர், முன்மொழிவு, வினையுரிச் சொல், இணைப்பு என்பன எட்டு வகைகளுமாகும். இவரது இந்தப் பாகுபாட்டு முறை உலகளாவிய இலக்கண மரபு களில், குறிப்பாக ரோமானிய இலக்கண அறிஞர்கள் மூலம், நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

▸ மேற்கத்தேய மொழிகளுக்கு அடித்தளம்:

இவரது இலக்கணத்திலுள்ள முறையான அணுகுமுறைகள் மற்றும் வரையறைகள் பிரிசியன் (Priscian) டொனாடஸ் (Donatus) போன்ற பிற்காலத்தில் வந்த ரோமானிய இலக் கண வல்லுநர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செம்மைப்படுத் தப்பட்டன. பின் ரோமானிய அறிஞர்களால் பல நூற்றாண்டு களாக ஐரோப்பிய இலக்கண கல்வியின் அடித்தளமாக இருப்பதற்கு இவரது இலக்கண நூல் வழி வகுத்தது.

▸ டயோனிசியஸ் இலக்கணத்தின் கூறுகள்:

- சீர் (Prosody) பற்றிய சரியான அக்கறையுடன் பயிற்சி பெற்ற வாசிப்பு.
- கவிதை உருவங்களுக்கு ஏற்ப விளக்கம்.
- வட்டார தனித்தன்மைகள் மற்றும் குறிப்புகள் பற்றிய உட னடி அறிக்கை.
- சொற்பிறப்பியல் (Etymology) கண்டுபிடிப்பு.
- ஒப்புமைகள் பற்றிய துல்லியமான கணக்கு.
- கவிதைப் படைப்புகளின் விமர்சனம் (இதுவே இலக்கணக் கலையின் மிக உன்னதமான பகுதி).

என இலக்கணக் கலையை ஆறு பகுதிகளாகப் பிரித்தார்

இவர் பெயர்ச்சொல் என்றால் என்ன? வினைச்சொல் என் றால் என்ன? என்பதோடு பெயர்ச் சொல் என்பது ஒரு பொரு ளின் பெயரைக் குறிப்பதாகவும், வினைச் சொல் என்பது ஒரு செய்கையின் பெயரைக் குறிப்பது என்றும் இருவகைப்



டயோனிசியஸ் த்ராக்ஸ்



அப்போலோனியஸ் டிஸ்கோலஸ்

படுத்தியதோடு பெயர்ச் சொல்லில் பால் பகுப்பும், எண் பகுப்பும் உள்ளன என்றும் வேற்றுமை ஏற்கும் பண்பு கொண்டது பெயர்ச் சொல் என்றும் தெளிவுபடுத்தினார்.

வினைச்சொல் காலம், இடம், எண் என்பவற்றை ஏற்கும் என்பதோடு வேற்றுமை ஏற்காது என்பதனை தனது நூலில் குறிப்பிட்டார். 'கடுகு சிறிதானாலும் காரம் பெரிது' என்பது போல இவரது நூலானது நானூறு வரிகள் கொண்ட மிகச் சிறிய நூலாகக் காணப்பட்டாலும் மிக முக்கிய இலக்கணக் கூறுகளைத் தெளிவுபடுத்தும் நூலாகவும் கருதப்பட்டது. மொழி இலக்கணங்களிலும் இவர் ஆக்கிய கலைச்சொற்கள் நின்று நிலைத்துள்ளது என்பது சிறப்பாக பார்க்கப்படுகிறது. இவருடைய இலக்கண நூல் கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளாக பின்பற்றப்பட்ட ஒரு சிறந்த நூலாகக் கருதப்பட்டமை குறிப் பிடத்தக்கது. இவரது நூலின் சிறப்புத் தன்மையை கிரேக்க மொழியில் இன்றளவும் காண்பதோடு இவர் பயன்படுத்திய கலைச்சொற்கள் உலக மொழிகள் அனைத்திலும் பயன் படுத்தப்படுகின்றன.

'இலக்கணத்தின் கலை' என்ற இவரது இந்தக் கையேடு, பொ.ஆ.மு. 100-ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டதாகக் கரு தப்படுகிறது. இது சுமார் 1,500 ஆண்டுகள் ஐரோப்பாவிலும் கிழக்கு ரோமானியப் பேரரசிலும் (Byzantium) கிரேக்க மொழிக்கான ஒரு தரப்படுத்தப்பட்ட பாடநூலாகப் பயன் படுத்தப்பட்டது. இந்த நூல் பண்டைய கிரேக்க இலக்கியங் களை, குறிப்பாக ஹோமரின் காவியங்களைப் பிழையின்றிப் படிப்பதற்கும் விளக்குவதற்கும் (Philology) உதவியாக ஒரு அடிப்படை இலக்கணக் கட்டமைப்பை வழங்கியது.

அக்காலகட்டத்தில் இந்நூலின் சிறப்புக்கருதி ஆர்மேனியர் கள், சிரியர்கள் தங்கள் மொழிகளில் மொழி பெயர்த்தனர். அத்துடன் பிரெஞ் ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு இதன் கொள்கைகளும் கலைச் சொற் களும் அனைத்து மொழிகளாலும் பின்பற்றப்பட்டன. பல மொழி இலக்கண ஆய்வுகளுக்கும் பகுப்பாய்விற்கும் இவ் இலக்கண நூலே மூலநூலாகக் காணப்படுகிறது. இவர் எழுதிய தி டெக்னே கிரம்மட்டிகே (The Techne Grammatike - The Art of Grammar) என்ற நூல், முதல் விரிவான இலக்கண நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது எட்டு சொல் வகைகளை (பெயர், வினை, பயனிலை, இணைப்புச் சொல், உரிச்சொல் போன்றவை) வரையறுத்தது. இதுவே பின்னாளில் லத்தீன் உட்பட பல ஐரோப்பிய மொழிகளின் இலக்கண ஆய்வுக்கு மாதிரியாக விளங்கியது.

அப்போலோனியஸ் டிஸ்கோலஸ் (Apollonius Dyscolus):

இவர் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க மொழியி யல் அறிஞராவார். கிரேக்க இலக்கண அறிஞர்களில் மிகச்சிறந்தவர் அப்போலோனியஸ் டிஸ்கோலஸ் ஆவார். இவரது இயற்பெயர் அப்போலோனியஸ் என்பதாகும். டிஸ் கோலஸ் என்பது சிறப்புப் பெயராகும். இவர் 30 இலக்கணத் தொகுப்புகளைப் படைத்தார். இதில் பெரும்பாலனவை தொடரியல் இலக்கணங்களாகக் காணப்பட்டன. தொடரிய லினுடைய சொல் வகைப்பாடு பற்றி நான்கு தொகுப்பிலும், மூன்று சிறு தொகுப்பில் மூவிடப் பெயரையும், இணைப்புச் சொற்கள் பற்றியும், வினையடை பற்றியும் விளக்குகின்றார்.

வாக்கிய அமைப்பைத் தர்க்க ரீதியாகவும் முறையான விதி களின் அடிப்படையிலும் ஆராய்ந்தார். வினைச்சொற்களின் வடிவங்கள், வகைகள், மற்றும் அவை வெளிப்படுத்தும் நேரங் கள், மனநிலை போன்ற இலக்கணக் கூறுகளை விவாதிக் கின்றமை, பெயர்ச்சொற்களின் மாறுபாடுகள் அத்துடன் அவற் றின் இலக்கணப் பண்புகள் குறித்து ஆராய்ந்தார். கிரேக்க மொழியின் உச்சரிப்பு விதிகள், குறிப்பாக எழுத்துகளின் மேல் வரும் குறிகள் குறித்து விளக்கினார். இவற்றின் மூலம் இவரது இலக்கணத்தை வெறும் வார்த்தை சேகரிப்பாகப் பார்க்காமல் தர்க்கரீதியான கட்டமைப்பாகப் பார்க்கும் முறை அறிஞர்கள் மத்தியில் காணப்பட்டது. அப்போலோனியஸ் அவர்கள் அறிவியல் தொடரியலின் நிறுவுநராவார். பேச்சின் பகுதிகள் குறித்து மிக விரிவாக எழுதினார்.

மொழியின் தன்மை தர்க்கரீதியானது கிரேக்க-ரோமானிய மொழியியலில் முதல் முறையாக வாக்கிய அமைப்பை (Syntax) முறையாக ஆய்வு செய்தவர் இவராவார். இவர் தர்க்கரீதியாக (logical) மற்றும் விதிகளால் ஆளப்படுவது என்று கருதினார். இவருடைய மிக முக்கியமான நூல் வாக் கிய அமைப்பு பற்றியதாக அமைகிறது. இவருக்குப் பின் வந்த இலக்கண ஆசிரியர்கள் குறிப்பாக லத்தீன் இலக்கண ஆசிரியர் பிரிஷியன் (Priscian) இவருடைய பணிகளைத் தன் ஆய்வுகளுக்கு அடிப்படையாகக் கொண்டார். இதனால் இவரை 'இலக்கண ஆசிரியரின் இளவரசர்' என்று பிரிஷியன் அழைத்தார். இவருடைய பங்களிப்பு ஐரோப்பிய மொழியி யல் சிந்தனையின் அடித்தளமாக அமைந்து காணப்பட்டன.

இவ்வாறு மொழியியல் வளர்சிக்கு பல்வேறுபட்ட காலங்களில் பல்வேறுபட்ட தனிப்பட்ட அறிஞர்கள் தமது பங்களிப்பினை வழங்கி நிற்க மறுபக்கம் எவ்வாறு அறிஞர் குழுக்களாக நின்று மொழியியல் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தனர் என்பது பற்றிய கருத்துகள் தொடரும்...

nageswary@thaiveedu.com





தமிழ் இலக்கியத்தின் திருப்புமுனை

திரிகூடராசப்பரின் திருக்குற்றாலக் குறவஞ்சி

இராஜேந்திரம்பிள்ளை சிவலிங்கம்

இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி இனிய தமிழில் இலக்கியம் ஈந்த கவிஞர் திரிகூடாரசப்பர். இவர் இயற்றிய நூல்கள் திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றாலத்தல புராணம், திருக்குற்றாலயமகவந்தாதி, திருக்குற்றாலநாதர் உலா, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திருக்குற்றாலப் பரம்பொருள்மாலை, திருக்குற்றாலக் கோமளமாலை, திருக்குற்றாலக் குழல்வாய்மொழி வெண்பாவந்தாதி, திருக்குற்றாலக் குழல் வாய்மொழிப் பிள்ளைத் தமிழ், திருக்குற்றால நன்னகர் வெண்பா எனப் பதினான்காகும்.

'குறவஞ்சி' என்பது பாட்டுடைத்தலைவன் உலாவரக் கண்ட தலைவியொருத்தி அவன் மீது காதல் கொண்டு வாடி விரக வேதனையால் தவிக்கும்போது குறமகளொருத்தி அவனுக்குக் குறி கூறி பரிசில் பெறுவதான செய்திகளைக் கூறும். சிற்றிலக்கியமாகையால் குறவஞ்சியென்ற பெயரினைப் பெற்றது. குற்றலத்துக் குறப்பெண் ஆதலின் குறவஞ்சியெனப் பெயர் பெற்றாள். இக்குறவஞ்சி இலக்கியம் பற்றி பன்னிருபாட்டியல்,

'இறப்பு நிகழ்வெதிர்
வென்னுமுக் காலமும்
திறம்பட வுரைப்பது
குறத்திப்பாட்டே'

என இலக்கணம் கூறுகின்றது.

குறவஞ்சியில் திருக்குற்றாலக் குறவஞ்சியும், பள்ளு வகையில் முக்கூடற்பள்ளும், மடல் வகையில் கருணகுலாதித்தன் மடலுமே அறிஞர் களால் ஆகச்சிறந்த படைப்புகளாக மதிக்கப்படு கின்றன. அகப்பொருள் ததும்பிய நாடகத் தமிழில் அமைந்த இக்குறவஞ்சியில் மூன்று பகுதிகள் அடங்கியுள்ளன. தலச்சிறப்பு, பாயிரம், நூல் வாழ்த்து என்பவைகளாகும். இத்தகைய அமைப்புள்ள குற்றாலக் குறவஞ்சியில் இறைவன் பவனி வருவது முதல் காதல் வசப்பட்ட வசந்தவல்லிக்கு குறத்தி குறிகூறல் வரையுள்ள பகுதி; சிங்கன் சிங்கியைத் தேடி வந்து அளவளாவுதல் வரையான பகுதியென இரு கூறாகப் பிரித்துச் சுவைக்கலாம்.

தமிழ் இலக்கியத்தில் உலாவுக்கு ஒட்டக்கூத்தன் தலை சிறந்தவன் எனப் பலரும் போற்றுவர். உலா என்பது உலகம் போற்றும் உத்தமனோ, மன்னனோ, இறைவனோ திருவீதியில் உலா வருகின்றனர் எனக் கொண்டு அரிவை, தெரிவை, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, பேரிளம், பெண் ஆகிய ஏழு பருவத்துப் பெண்களும் தத்தம் நிலையில் மயங்கி நிற்றல், எனப் பாட்டியல்

நூல்கள் பகர்கின்றன. இங்கேயும், திரிகூடராசப்பரின் குற்றாலக் குறவஞ்சியில் குற்றாலநாதர் பவனி வருகின்றார். அவர் பவனிவந்த காட்சியைக் கண்ட கன்னியரின் நிலையை மிகவும் சுவையுடனும், எளிய நடையிலும் சித்திரிக்கின்றார் ஆசிரியர்.

'ஒரு கைவளை பூண்ட
பெண்கள் ஒரு கைவளை
பூண மறந்
தோடுவார் நகைப்பவரை
நாடுவார் கவிழ்வார்
கருதுமனம் புரும்போக ஒரு
கண்ணுக்கு மையெடுத்த
கையுமா யொருகண்ணிட்ட
மையுமாய் வருவார்
நிருபனிவன் நன்னகரத்
தெருவிலே நெடுநேரம்
நில்லானோ மதனை மிவன்
வெல்லானோ வென்பார்'

ஒரு கையிலே வளையலணிந்த பெண்கள் மறுகையிலே அணிய மறந்து ஓடுவர். ஒரு கண்ணுக்கு மை தீட்டியவர் உள்ளத்தை குற்றாலநாதரிடம் பறிகொடுத்துவிட்டு மறு கண்ணை மறந்து வருவர். இன்னும் சிலர் குற்றாலநாதன் இந்தத் தெருவிலே சிறிது நேரம் நிற்கானோ என ஏங்குவர். மற்றும் சிலர் மன்மதனையும் இவன் தோற்கடித்து விட்டான் என மொழிவார். இவ்வாறு கவிஞர் காட்டும்போது எமது உள்ளம் உலாக் காட்சியில் படிந்து விடுகின்றது.

'நான் சொற்றோடர்களின் காதலன்' என்றார் ஜோன்கீட்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞர். கவிஞர் சொற்களுக்குச் சேவகம் புரியக் கூடாது. சொற்கள் கவிஞருக்கு சேவகம் புரியவேண்டும். திரிகூடராசப்பரின் கவிதையிலே சொற்பஞ்சம் காண்பதரிது. சொற்கள் அவரிடம் கைகட்டி வாய்பொத்தி நின்று சேவகம் புரிந்தன. இதனாலேயே இக்கவிஞரது வருணனைகள், சொல்லாட்சிகள் என்பன உள்ளத்தைத் தொடுவனவாக அமைந்துள்ளன. நிலப்பிரபுத்துவத்தின் பிரதிநிதியாகக் கவிஞரால் படைக்கப்பட்ட குற்றாலக் குறவஞ்சியின் தலைவி வசந்தவல்லி மிகவும் அழகு பொருந்தியவள். ஊர்வசியோ, திலோத்துமையோ, மேனகையோ என எண்ணி வியக்கும் அளவுக்கு அவளைக் காட்டும் கவிஞர் அவளது வருகையை,

'கையாரச் சூடகமிட்டு
மின்னாரை வெல்லக்
கண்ணிலொரு
நாடகமிட்டு
ஒய்யாரமாக நடந்து
வசந்தவல்லி
ஓவியம் போல
வந்தாள்'

எனப் பாடுகின்றார்.

இவ்வாறு வசந்த வல்லியின் இயல்பைப் பாடிய கவிஞர், பாதாதிகேச வருணனையில் தலைசிறந்து விளங்குகின்றார். சிறந்த அணிகளும், உவமைகளும் இவரது கவிதையில் நிறைந்து காணப்படுகின்றன. வசந்தவல்லியின் அழகைக் கூறும் இவர், இருண்ட மேகம் போன்ற கொண்டையாள் விழிக் கெண்டையாள், பூமுருக்கின் அரும்பு இதழினாள், பிறை போலிலங்கு நுதலினாள், அரம்பை தேசவில் புருவத்தினாள், அறிவை மயக்கும் மங்கைப் பருவத்தாள், கரும்பு போல் இனித்து மருந்துபோல் வடித்த சொல்லினாள், முத்து நிரை பதித்த பல்லினாள், பல்லினழகை எட்டிப் பார்க்கும் மூக்கிலொரு முத்தினாள், அழகு குடிகொள்ளும் முகத்தினாள் செல்லக்கடகமிட்ட செங்கையாள், இரு கொங்கையாள், உடையினாள், நடையினாள் என தித்திக்கும் தமிழிலே கவிச் சித்திரம் தீட்டுகின்றார்.

மேலும், சிறந்த ஒலிக் குறிப்புகளை எழுப்பி வாசகரைக் கவியுலகிலே சஞ்சரிக்கச் செய்து கனவா, நனவா என விளங்கும் வண்ணம் அமைத்துக் கவிபாடும் ஆற்றல் மிக்கவர் திரிகூடர் என்பதை வசந்தவல்லி பந்து விளையாடச் செல்வதை இவர் காட்டுவதிலிருந்து காணலாம்.

'முந்தியதோ விழி
முந்தியதோ மனம் கரம் முந்தியதோ
தோவென பந்து
கொண்டாடினளே'

என்ற அடிகளில் பந்து முந்தியதோ ? பார்வை முந்தியதோ ? கரம் முந்தியதோ ? எனக் கவிஞர் எழுப்பும் கேள்வி வாசகரிடையேயும் ஆவலைத் தூண்டுவதோடு பந்து விளையாடும் நிகழ்ச்சியையே மனம் கண்முன் தோற்றுவிக்கின்றது. மேலும் விந்தையாகப் பந்து விளையாடும் வசந்தவல்லி 'தொங்கத் தொங்கத் தொம்' எனவும் 'தகுர்தந் திகுர்தத் தகுதர்த்தொம்' எனவும் பந்தடித்தாள் எனக் காட்டுவது கவிப்புலமையின் சிறப்பாகும்.

நந்திக் கலம்பகத்தில் நந்திவர்மன் மேனிதழுவாத தலைவி விரகவேதனையால் வாடுகின்றாள். அவளது தோழியர் சந்தனத்தைத் தடவுகின்றனர். சந்தனமோ அவளுக்கு எரிக்கும் செந்தழலாக காட்சி தருகின்றது. அதனைச் 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச் சந்தனமென்றாரோ தடவினார் பைந்தமிழை ஆய்கின்ற இக்கோன் நம்பி ஆகத் தழுவாமல் வேகின்ற பாவியான்' எனப் பாடுகின்றாள். இங்கேயும் குற்றால நாதர் பவனி வருகின்றார். அவர் மீது வசந்தவல்லி காதல் கொண்டாள். தன் காதலின் வேதனையை 'என்னங் கத்தைத் தங்கமாக உருக்கிப் போட்டார்' எனவும் 'புரத்து நெருப்பை மூவர்க்கு அவித்தவர் முன்னொருத்தி காமநெருப்பை அவிக்கிலார்', 'நஞ்சுபருகி அமுதம் கொடுத்தவர் என் வாள் விழி நஞ்சு பருகி அமுதம் கொடுக்கிலார்' என அரற்றுகின்றாள். தோழியரோ அவளைப் பள்ளியறைக்கு கொண்டு செல்கின்றனர். வசந்த வல்லியும் நந்திக் கலம்பகத் தலைவியாக மாறிவிடுகின்றாள். இதனை,

‘முருகு சந்தனக் குழம்பு
பூசுவார் விரகத்தீயை
மூட்டி விசிறி வீசுவார்
கருகுதே யுடலுருகுதே
யென்பார் விரித்த பூவும்
கரியுதே முத்தம்
பொரியுதே யென்பார்’

எனக் கற்பனையும், பொருளழகும் தரக் கூறுவது திரிகூடராசப்பரின் கவியாற்றலைப் புலப்படுத்துகின்றது.

‘தேனருவித் திரையெழுப்பி
வானின் வழியொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும்,
தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறை
முடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட
மலையெங்கள் மலையே’

என வசந்த வல்லிக்குக் குறியுரைக்கும் குறத்தி, குற்றாலத்தல மகிமை கூறுவதும் குறி சொல்வதும், குற்றாலக் குறவஞ்சியில் சிறந்த பகுதியாக மட்டுமன்றி, நாட்டுவளம் கூறும் சிறந்த இலக்கியம் என்ற இடத்தினையும் பெறுகின்றது. குற்றாலமலையை நெருங்கியவர்கள் துன்பங்களெல்லாம் மறைந்துவிடும் என்பதை ‘நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்’ என்ற குறத்தி கூற்று தெளிவு படுத்தி நிற்கிறது.

திரிகூடராசப்ப கவிராயர் மரபு வழிவந்த கவிஞர். வடமொழியை, இலக்கியத்தில் கையாண்டு பாடுவதிலும், யமகம், திரிபு, சிலேடை பாடுவதிலும் ஆற்றல் மிக்கவர், பண்டிதர் பாமரர் இருவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய கடின நடையும், இலகு நடையும் இவருக்குக் கைவந்த கலை. எனினும் குற்றாலக் குறவஞ்சியில் கடின நடையையும் வடமொழியையும் அதிகம் கையாளவில்லை. மக்களுக்கு விளங்கக் கூடிய எளிய நடையிலேயே கவிதை புனைந்துள்ளார்.

ஆசானும் அகராதியும் துணை செய்தாலன்றி உட்புக முடியாத இரும்புக் கோட்டையிலான பாடல்கள் பாடிய நாயக்கர் காலப் புலவர்களில் இவர் வேறுபட்டவர். வெறுமனே தலபுராணங்களைப் பாடிக்கொண்டிருந்த புலவர் கூட்டத்திற்குப் புறம்பான வகையில் சாதாரண பொது மக்களைக் கவிப் பொருளாக்க முனைந்தவர். இவரது கவிதைப் பிரவேசத்துடன் பொது மக்கள் சார்பு இலக்கியத்திலே களைகட்டத் தொடங்குகின்றது. சாதாரண குறவன், குறத்தி என்போர் கவிப் பொருளாகின்றனர். அத்தோடு ஆசிரியர் தம்காலத்துக் குற்றாலப் பகுதியில் வாழ்ந்த மக்களை உற்று நோக்கி உணர்ந்திருந்தார். அங்குள்ள வயல்கள், குளங்கள் மக்களணியும் ஆபரணங்கள், பறவைகள், விலங்குகள் எல்லாமே இவரது பாடல்களை அலங்கரிக்கின்றன.

‘காடை வருகுது
கம்புள் வருகுது
காக்கை வருகுது
கொண்டைக் குலாத்தியும்
மாடப்புறாவும்
மயிலும் வருகுது...’

எனவே, இத்தகைய பொருட் சிறப்பும், அணிச் சிறப்பும், எளிமையும், இனிமையும், எளிதில் பொருள் விளங்கும் தன்மையும், பொது மக்கள் சார்பும் நிறைந்த திருக்குற்றாலக் குறவஞ்சி வெறும் பக்தி இலக்கியம் மட்டுமல்ல; தமிழ்ப் பாட்டியல் மரபின் செழுமையைக் காட்சிப்படுத்தும் கலைக்களஞ்சியமாகும். திரிகூடராசப்ப கவிராயர், குற்றாலநாதரின் மகிமையைப் பாடுவதோடு, எளிமையும் இசைநயமும் மிக்க தமிழை சந்த நயத்துடன் வழங்கியுள்ளார். இயற்கை அழகு, குறத்தியின் குறி சொல்லும் பாங்கு, இனிமையான சந்தங்கள் நிரம்பப் பெற்ற இந்நூல், தமிழ் இலக்கியத்தின் பொருளிலும் போக்கிலும் நோக்கிலும் ஒரு திருப்புமுனை எனலாம்.



sivalingam.r@thaiveedu.com

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
“Empowering Financial Freedom”
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com



எம்.எம். ஜெயசீலன்

சர்வதேச அரசியல் நகர்வுகளின் உள்ளும் புறமும்

தாய்வீட்டின் அரசியல் கட்டுரைகளை முன்வைத்து

அறிமுகம்:

21-ஆம் நூற்றாண்டின் கால் நூற்றாண்டு கடந்துவிட்டது. இந்தக் கால் நூற்றாண்டு இலங்கைத் தமிழியலின் முகம், பன்முகப் பரிமாணம் கொண்டது. 1980-கள் முதல் உக்கிரம் பெறத்தொடங்கிய இனமுரண்பாட்டு யுத்தம், பேரழிவுடன் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை, யுத்தத்துக்குப் பின்னரான வாழ்வு, அலைவும் உலைவும் நிறைந்த புலம்பெயர் வாழ்வு, புலம்பெயர் வாழ்வில் ஏற்பட்டுவரும் ஸ்திரத் தன்மை, நவீன தொடர்பு சாதனங்களின் விருத்தி, உலகின் அதிநவீன வாழ்வுப் போக்கோடு ஒட்டிய வாழ்வு, பெண்ணியம், பின்நவீனத்துவம், பின்காலனியம் முதலான புதிய பல இஸங்களின் பரவலாக்கம், இன மற்றும் பிராந்திய ரீதியான அரசியல் சமூக பொருளாதார விருத்தியும் மேல்நோக்கிய நகர்வும், கோவிட் பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கங்கள், நாட்டில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமற்ற நிலை, பொருளாதார நெருக்கடிகள் முதலானவை அப்பன்முகப் பரிமாணத்தின் மேற்கிளம்புகையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

நவீன தொழினுட்ப வளர்ச்சியினால் தோற்றம்பெற்ற இணைய இதழ்களும் மெய்நிகர் உரையாடல்களும் இந்த நூற்றாண்டுத் தமிழியலுக்குப் புதிய வளம் சேர்த்து வருகின்றன. புலம்பெயர் வாழ்வில் ஏற்பட்டுவரும் ஸ்திரத் தன்மையும் தொழினுட்ப வளர்ச்சியும் இலங்கையில் உள்ளவர்களும் புலம்பெயர் தேசங்களில் வாழ்பவர்களும் நெருக்கமாக இணைந்து செயற்படுவதற்கான வாயிலைத் திறந்தன. அக்கூட்டிணைவினால் இணைய இதழ்கள், அச்சு இதழ்கள், நூல் பதிப்பு, மெய்நிகர் உரையாடல்கள், எண்ணிம ஆவணமாக்கல் என ஆரோக்கியமான முயற்சிகள் பல இடம் பெற்று வருகின்றன. அவற்றின் ஒரு பிரதிபலிப்பாகத் தாய்வீட்டின் செயற்பாடுகளைக் கொள்ளலாம்.



tg.theeban@gmail.com

மாதம் தவறாமல் முதலாம் திகதி இணைய இதழாகத் தொடர்ந்தும் வெளிவரும் தாய்வீடு, ஒலி வடிவில் கேட்கக்கூடியதாகவும், அச்சு இதழாகவும் வெளிவருகிறது. இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் வெவ்வேறு நிலையிலான வாசகர்களினதும் தேவையை நிறைவுசெய்வதாக அதன் உள்ளடக்கம் அமைவுபெற்றுள்ளது. மூத்த தலைமுறையினரும் இளந்தலைமுறையினரும் இணைந்து செயற்படும் களமாக விளங்கும் தாய்வீடு, புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்குப் பரந்தளவிலான வாய்ப்பினை வழங்கி வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

அரசியல், வரலாறு, கலை - இலக்கியம், கல்வி, உடல் ஆரோக்கியம், தொழினுட்பம், சுற்றுச்சூழலியல், பொருளாதாரம் என விரிந்த பரப்பினைக் கொண்ட கட்டுரைகளும் மொழிபெயர்ப்புகளும் தாய்வீட்டின் தனித்துவச் சிறப்பை வெளிப்படுத்தி நிற்கின்றன. இலங்கை, தமிழ்நாடு, புலம்பெயர் தேசங்கள் என மூன்று தளத்திலுள்ள ஆளுமைகளும் பங்களிக்கும் - சங்கமிக்கும் பரந்த தளத்தினைக் கட்டியெழுப்பியுள்ள தாய்வீடானது

சிறப்புப் பகுதிகள், அஞ்சலிகள், நூற்றாண்டு நினைவுப் பகுதிகள், ஓவியங்கள், இலங்கையின் தமிழ்க் குழுமங்கள் யாவரையும் உள்ளடக்கிய பயணம் எனத் தன் இருப்பை வலுவாக நிலைநிறுத்தி வருகிறது.

புலம்பெயர் நாடுகளதும் இலங்கையினதும் கூட்டிணைவில் முன்னெடுக்கப்படும் ஏனைய இதழியல் முயற்சிகளிலிருந்து தாய்வீட்டைத் தனித்து அடையாளங் காட்டுவதாக அதன் அரசியல் கட்டுரைகள் விளங்குகின்றன. உள்நாட்டு அரசியல், சர்வதேச அரசியல் என்ற இரு தளங்களிலும் நடப்பு அரசியலை விபரிக்கும் விரிவான கட்டுரைகள் தாய்வீட்டில் தொடர்ந்தும் வெளிவருகின்றன. உள்நாட்டு அரசியலைவிட சர்வதேச அரசியல் பற்றிய கட்டுரைகள் அதிகமாக வெளிவருவதை அவதானிக்க முடிகிறது. தமிழில் வெளிவருகின்ற ஏனைய எந்த இதழிலும் தாய்வீட்டின் அளவுக்குச் சர்வதேச அரசியல் பற்றிய கட்டுரைகள் இடம்பெறுவதில்லை. அவ்வகையில் சர்வதேச அரசியல் நிலைமைகளைத் தமிழ் வாசகர்களிடத்து விரிந்த தளத்தில் கொண்டுசேர்க்கும் பெரும் பணியைத் தாய்வீடு மேற்கொண்டு வருகிறது எனலாம்.

தாய்வீட்டு இதழ்களின் ஆசிரியத் தலையங்கங்களையும் குறிப்பிட்ட சிலரின் கட்டுரைகளையும் அடிப்படையாகக் கொண்டு, கடந்த வருட (2025) இதழ்களின் அரசியல் கட்டுரைகள் பற்றிய மதிப்பீடு இங்கு முன்வைக்கப்படுகிறது.

ஆசிரியத் தலையங்கங்கள்:

தாய்வீட்டின் ஆசிரியத் தலையங்கள் அரசியல் விபரிப்புகளாகவே அமைந்துள்ளன. அந்நடைமுறை தாய்வீட்டின் சமகாலத் தன்மையையும் அரசியல் விடயங்களுக்கு அது கொடுக்கும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறது. அண்மைக்கால உலக நடப்புகள், அரசியல் நிகழ்வுகள், இலங்கையின் நிலைமைகள் முதலானவற்றை வரலாற்றுப் பின்புலத்தில் எடுத்துரைப்பதாக அதன் பெரும்பாலான ஆசிரியத் தலையங்கங்கள் அமைந்துள்ளன. அவை மனிதநேயத்துக்கானதும் சமூக நீதிக்கானதுமான குரலாக அமைந்துள்ளதுடன் எங்கெல்லாம் அநீதி நிகழ்கிறதோ அவற்றுக்கெல்லாம் நீதியின் பக்கம் நின்று நியாயத்தை வலியுறுத்துவனவாகவும் வலுவான சமூக விழிப்புணர்வை விதைப்பனவாகவும் அமைந்துள்ளன.

கடந்த வருட ஆசிரியத் தலையங்கங்களில் பலஸ்தீன - இஸ்ரேல் மோதல் அதிக கவனத்தைப் பெற்றுள்ளது. அதன் அழிவுகள் குறித்தும் அதற்குக் காரணமாகத் தொழிற்படும் சக்திகள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் அப்பிரச்சினையை ஒரு மனிதநேயப் பிரச்சினையாக அணுகவேண்டியதன் அவசியத்துக்கு முதன்மையளிக்கப்பட்டுள்ளது. பலஸ்தீனத்துக்கான அங்கீகாரத்தை மனித உரிமையினதும் நீதியினதும் அங்கீகாரமாகத் தாய்வீடு முன்நிறுத்தியுள்ளது. டொனால்ட் ட்ரம்பின் பொருளாதார முன்னெடுப்புகளின் அரசியலையும் அம்முன்னெடுப்புகள் மனித உரிமைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சமூக நலன்கள் முதலானவற்றுக்கு அச்சுறுத்தலாக அமைவதையும் தாய்வீட்டின் ஆசிரியத் தலையங்கம் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதுடன் இலங்கையில் போதைப்பொருள் பயன்பாடு, அதனைத் தடுக்கும் அரசின் முயற்சிகள் முதலானவற்றைச் சமூக நலன் என்ற தளத்தில் நின்று எடுத்துரைத்துள்ளது. இவை தாய்வீட்டின் அடிப்படைக் கருத்தியலைப் புரிந்துகொள்ளத் துணைசெய்கின்றன.

நிகழ்கால அரசியல் மற்றும் சமூக சூழலைக் கடந்த காலச் சம்பவங்களுடன் இணைத்து விளக்கும் உத்தி, தாய்வீட்டு ஆசிரியத் தலையங்கங்களில் மேலோங்கியுள்ளது. அது வரலாற்றுப் பின்புலத்தில் நடப்பு அரசியலைப் புரிந்து கொள்ள வழிசமைத்துள்ளதுடன் ஆதிக்க அரசியலின் நகர்வுகளையும் நீதியின் பக்கம் நிற்கவேண்டியதன் தேவையையும் மீள மீள வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

அரசியல் கட்டுரைகள்:

கடந்த வருட தாய்வீட்டு இதழ்களில் ரூபன் சிவராஜா, ஞாலசீர்த்தி மீநிலங்கோ, ரதன் முதலானோர் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் கட்டுரைகளைத் தொடர்ந்தும் எழுதியுள்ளனர். நெல்லை ஜெயசிங், சிவா முருகுப்பிள்ளை ஆகியோரும் கணிசமான அரசியல் கட்டுரைகளை எழுதியுள்ளனர். அவர்களைத் தவிர என். சரவணன், மல்லியப்பூசந்தி திலகர், எஸ்.கே. விக்னேஸ்வரன், வ. பொன்னுராஜ், சதீஸ் செல்வராஜ், மேரி றெசோதா, நிசன்குமார் கோபிநாத் முதலான பலரும் அவ்வப்போது அரசியல் கட்டுரைகளை எழுதியுள்ளனர். மணி வேலுப்பிள்ளை முக்கியமான அரசியல் கட்டுரைகளைத் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். ஞாலசீர்த்தி மீநிலங்கோவின் 'இனப்படுகொலையின் அரசியல்' என்ற அரசியல் தொடரும் கடந்த வருட இதழ்களில் வெளிவந்துள்ளது.

அண்மைக்காலத் தமிழியலை வளப்படுத்தி வரும் இளம் ஆளுமைகளுள் ரூபன் சிவராஜாவும் பரவலான கவனிப்பைப் பெற்று வருகிறார். படைப்பு, ஆய்வு எனும் இரு தளங்களிலும் இயங்கிவரும் அவர் சர்வதேச அரசியல், சினிமா - அரங்கு முதலானவை குறித்து ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். அவரின் சமகால உலக அரசியல் பற்றிய கட்டுரைகள் பல, கடந்த வருட தாய்வீட்டில் இடம் பெற்றுள்ளன. உலக அரசியல் நகர்வு, ரஷ்ய - உக்ரேன் மோதல், அமெரிக்க - சீன வணிகப் போட்டி, மத்திய கிழக்கு மோதல்கள், சர்வதேச நீதிமன்ற அரசியல், ஆயுத மற்றும் வள அரசியல் முதலான பல விடயங்கள் குறித்து அவர் விமர்சனபூர்வமாக ஆராய்ந்துள்ளார்.

சர்வதேச அரசியல் அசைவில் அதிகாரம், பொருளாதார நலன், வளங்களைக் கைப்பற்றுதற்கும் தக்கவைப்பதற்குமான அரசியல் ஆகியன பின்புலச் சக்திகளாகத் தொழிற்படுமாற்றினை அவருடைய கட்டுரைகள் துலக்கமாக வெளிப்படுத்தியுள்ளன. உலக அரசியல் அசைவு அதிகாரத்துக்கானதும் நலன்களுக்கானதுமான அரசியலாக இயக்கம் கொள்வதை வெவ்வேறு தரவுகளைக் கொண்டு நிரூபித்துள்ள ரூபன் சிவராஜா, அப்பின்னணியில் அமெரிக்கா முதலான மேலைநாடுகள் உலக ஒழுங்கை நிர்ணயிக்கின்றன என்ற குற்றச்சாட்டை வலுவாக முன்வைத்துள்ளார்.

ரஷ்யா - உக்ரேன் போர் தொடர்பான கட்டுரைகளில் எரிசக்தி வளங்கள், நேட்டோவின் விரிவாக்கம், மேற்கத்தேய பாதுகாப்பு அரசியல் முதலானவற்றை அவர் உரையாடலுக்கு உட்படுத்தியுள்ளார். மத்திய கிழக்கு பற்றிய கட்டுரைகளில் எண்ணெய் வளம், புவிசார் அரசியல் நலன், இராணுவ கூட்டணிகள் ஆகியவற்றுக்கு முதன்மை கொடுத்துள்ளார்.

சர்வதேச நீதிமன்ற அரசியல் தொடர்பான கட்டுரையில் சர்வ தேச நீதி என்பது அதிகார அரசியலின் கருவியாக இயங்கு கின்றமையை அம்பலப்படுத்தியுள்ளார்.

ரூபன் சிவராஜாவின் கட்டுரைகளில் சமகால அரசியல் யதார்த்தம் முதன்மைப்படுத்தப்பட்டாலும் அக்கட்டுரைகள் பேசும் விடயப்பொருளின் வரலாற்றுப் பின்னணி, அதற்குள் உள்ளியங்கிய அரசியற் காரணிகள், அக்காரணிகளை நிர்ண யித்த அதிகாரப் போட்டி, பொருளாதார நலன் முதலானவை தெளிவுபடுத்தப்பட்டு, அதன் பின்னணியில் சமகால நகர்வு விபரிக்கப்பட்டுள்ளது. அதனால், அக்கட்டுரைகள் முன்நிறுத் தும் விடயப்பொருள் பற்றிய விரிவான தகவல்களை, காலந் தோறும் அவற்றில் ஏற்பட்டு வந்த மாற்றங்களுடன் அறிந்து கொள்ள முடிகிறது.

கட்டுரைகளானவை ஒவ்வொரு விடயப் பொருளையும் தனித் தனி நிகழ்வுகளாக அணுகாமல், உலக அரசியலின் அதி காரப் போட்டி, ஆயுத வியாபாரம், இராணுவக் கட்டமைப்பு, தொழில்துறை, பொருளாதார நலன் முதலானவற்றின் பின் புலத்தில் அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, புவிசார் அரசியல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து விரிந்த தளத்தில் அணுகியுள்ளதுடன் அவற்றுக்குப் பின்னால் இயங்கும் ஜன நாயக விரோத நடைமுறைகளை எடுத்துக்காட்ட முனைந் துள்ளன. பாதுகாப்புக்காக, மனிதாபிமானத்துக்காக, சமா தானத்துக்காக, மனித உரிமைக்காக, ஜனநாயகத்துக்காக என நிகழ்த்தப்படும் போர்களின் பின்புலத்தில் பொருளா தார நலன், புவிசார் நலன் முதலானவை உள்ளியங்கு வதையும் அந்த நலன்களை அமெரிக்கா முதலான மேலைத் தேய சக்திகள் பெறுவதையும் அந்த இலாபத்துக்காக அவை எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருப்பதையும் ரூபன் சிவராஜா ஆதாரபூர்வமாக விபரித்துள்ளார்.

உலக ஒழுங்கில் மாற்றம் ஏற்பட்டுவருகிறது என்ற உரை யாடல் பல தளங்களில் இடம்பெற்று வருகிறது. அமெரிக்கா வின் முதன்மையில் ஒரு முனை உலக ஒழுங்காக இயங்கிய உலகு, இப்போது ரஷ்யா, சீனா, இந்தியா முதலான நாடு களின் செயற்பாடுகளுடன் பல்முனை உலக ஒழுங்காக மாறிவருகிறது. அந்த மாற்றத்தின் வெளிப்பாடுகளை ரூபன் சிவராஜாவின் கட்டுரைகளில் காணமுடிகிறது.

ரதன் அவர்களும் ஒப்பீட்டளவில் அதிகமான அரசியல் கட்டு ரைகளைக் கடந்த வருடம் எழுதியுள்ளார். அவரின் கட்டுரை கள் அமெரிக்காவின் வல்லாதிக்கச் செயற்பாடுகளை, உலக அரசியல் நகர்வுகளின் பின்புலத்தில் தெளிவுபடுத்து வதை முதன்மை நோக்காகக் கொண்டுள்ளன. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, தென்னாபிரிக்கா, சிரியா, ஈரான் போன்ற நாடுகளின் அரசியல் அசைவுகளைச் சர்வதேச அரசியல், பிராந்திய அரசியல், உள்நாட்டு அரசியல் முதலானவற்றின் பின்புலத்தில் ஆராய்வதன் மூலம், அமெரிக்க வல்லாதிக்க நடவடிக்கைகளின் சுயலாப நிலைப்பாட்டை, அவற்றின் அநீதியை விமர்சனபூர்வமாக அணுகியுள்ளார், ரதன். உலக அரசியல் நகர்வானது அமெரிக்காவினதும் ஏனைய வல்லரசு களினதும் பொருளியல் மற்றும் புவிசார் நலன்களின் ஆதிக் கப் போட்டியினால் இயக்கம் கொள்கிறது என்பது அவரின் அடிப்படை நோக்குமுறையாக அமைந்துள்ளது.

ரஷ்ய - உக்ரேன் போருக்குப் பின்புலத்தில் அமெரிக்க - ரஷ்ய போட்டி தொழிற்படுதல், சிரியாவின் அரசியலில் எரிசக்தி, வணிக லாபம் முதலானவை தாக்கம் செலுத்துதல், எண்ணெய் முதல் மருந்து வரையான அனைத்து வர்த்தகங் களும் அரசியல் மோதல்களை நிர்ணயித்தல் முதலான வற்றை ரதன் விரிவான ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ள துடன் அவற்றுக்குப் பின்னால் அமெரிக்க வல்லாதிக்கச் சக்திகள் தொழிற்படுமாற்றை மீள மீள எடுத்துக்காட்டியுள் ளார்.

வல்லரசுகளின் மோதல்கள், வளங்களுக்கான போட்டிகள், வலதுசாரி தேசியவாதம், இனத்துவ அரசியல், பொருளாதார அழுத்தங்கள், நிறுவன அரசியலின் உள்நோக்கம் முதலான சமகால விடயங்களை விரிந்த தளத்தில் விவாதித்துள்ள ரதன், மாறிவரும் உலக ஒழுங்கை வெவ்வேறு தளத்தில் வெளிப்படுத்தியுள்ளதுடன் உலக அரசியல் இயக்கத்தில் வல்லரசு மோதல்கள், வலதுசாரி எழுச்சி, பொருளாதார-நிதி நிறுவனங்கள் முதலானவை ஒன்றோடொன்று தொடர்புபட் டுள்ளன என்பதை விரிவாகவும் விமர்சன ரீதியாகவும் விளக் கிக் காட்டியுள்ளார்.

புதிய தலைமுறை ஆய்வாளர்களிடையே கருத்தியல் வலுவு டன் எழுத்துச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் ஞாலசீர்த்தி மீநிலங்கோ, இடதுசாரி சிந்தனைத் தளத்தில் நின்று உள் நாட்டு அரசியல், சர்வதேச அரசியல் நகர்வுகள், பொருளா தார நிலைமைகள், கலை - இலக்கியச் செயற்பாடுகள் முத லானவை குறித்து விரிவாக எழுதிவருவதை அவதானிக்க முடிகிறது. கடந்த வருட தாய்வீட்டில் தொடர்ந்தும் அரசியல் கட்டுரைகளை எழுதியுள்ள அவர், இனப்படுகொலையின் அரசியல் என்ற தொடரையும் எழுதியுள்ளார். 2024-ஆம் ஆண்டிலிருந்து வெளிவரும் அத்தொடர் கட்டுரையில், 'பௌத்தத்தில் போரும் வன்முறையும்' தொடங்கி 'நிகழ்ந்தும் நிகழாத இனப்படுகொலை' ஈறாகவுள்ள பகுதிகள் கடந்த ஆண்டு இதழ்களில் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் இனமுரண்பாட்டில் பௌத்தம் முதன்மையான பாத்திரத்தை வகித்துள்ளதால் பௌத்தம் உண்மையில் அகிம்சையின் அடையாளமா என்ற தத்துவார்த்த வினாவை எழுப்பி, இலங்கையில் பௌத்தம் போருக்கு, இனப்படு கொலைக்கு ஆதாரமான கருத்தியலாக எவ்வாறு தொழிற் பட்டுள்ளது என்பதை அத்தொடரின் சில பகுதிகளில் ஆராய்ந் துள்ளார். பேரழிவுடன் யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப் பட்ட பின்னர், தமிழ்த் தரப்புகள் மீண்டும் மீண்டும் எழுப்பும் குரல் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பதாக அமைந் துள்ளது. சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தரும் என்ற எதிர் பார்ப்பு தமிழர்களிடத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அத னைக் கேள்விக்குட்படுத்தும் வகையில், சர்வதேச போர்க் குற்ற விசாரணையின் அகத்தையும் புறத்தையும் விரிவாக ஆராயும் முயற்சியை மீநிலங்கோ மேற்கொண்டுள்ளார்.

மதம், நீதி என்பன தனித்து இயங்குவன அல்ல. அவை அதி கார அரசியலால் வடிவமைக்கப்படுகின்றன, அவற்றுக்குப் பின்னால் அதிகார சக்திகளின் நலன்கள் பிணைந்துள்ளன என்பதும் சர்வதேச நீதி எனக்கூறப்படுவது, நடுநிலையான தூய நடைமுறையாக அமைவதில்லை என்பதும் அக்கட்டுரை களின் மையங்களாக அமைந்துள்ளன. சர்வதேச நீதி என் பது அரசியல் கருவியாகவே தொழிற்பட்டு வந்துள்ளது என் பதை விரிவான சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ள மீநிலங்கோ, பௌத்தம் அகிம்சையின் அடையாளம்,

சர்வதேச விசாரணை - சர்வதேச சட்டம் தமிழருக்கான நீதியைப் பெற்றுத்தரும் முதலானவை போலிக் கற்பிதங்கள் என்பதைத் தர்க்கபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார்.

மதம் அரசியலுடன் இணையும்போது அது வன்முறையின் கருவியாக மாறுவதையும், சர்வதேச நீதி அதிகார அரசியலால் அதுவடிவமைக்கப்படுவதையும் எடுத்துரைத்து, போலியான கற்பிதங்களிலும் எதிர்பார்ப்புகளிலும் உழல்வதை விடுத்து, யதார்த்த அரசியலை புரிந்துகொள்வதன் அவசியத்தையும் அதனடிப்படையில் இயங்க வேண்டியதன் தேவையையும் அவரின் கட்டுரைகள் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளன. சர்வதேசம் நீதியைப் பெற்றுத் தரும் என்று ஒவ்வொரு வருடமும் கொந்தளிப்பவர்களுக்கும் அந்த எதிர்பார்ப்பை வலுப்படுத்தி வருபவர்களுக்கும் அக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம். அவை அவர்களைக் கனவு அரசியலிருந்து விடுவிக்கும்.

மீநிலங்கோ அவர்களின் ஏனைய அரசியல் கட்டுரைகளிலும் மேற்படி கட்டுரைத் தொடர்களில் வெளிப்படும் கருத்தியல் நிலைப்பாட்டின் பிரதிபலிப்புகளைக் காணமுடிகிறது. அக்கட்டுரைகளில் சமகால அரசியல் அசைவுகள், பொருளாதார நிலைமைகள், தொழினுட்ப வளர்ச்சி முதலானவற்றுடன் இலங்கையின் அரசியல் சமூக நிகழ்வுகளும் ஆராயப்பட்டுள்ளன. அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா முதலான நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றம், எழுச்சிபெற்று வரும் வலதுசாரி சக்திகள், அதன் விளைவுகள், ஆயுத வர்த்தகம், தொழினுட்ப வளர்ச்சியின் உலகளாவிய தாக்கங்கள், உலகளாவிய பொருளாதார வலைப்பின்னலுக்குள் தொழிற்படும் வன்முறை, சுரண்டல், மதம் அரசியல் கருவியாகத் தொழிற்படும் முறைமை முதலானவை அக்கட்டுரைகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் புதிய அரசாங்கம் முன்னெடுக்க விழையும் கல்வி மறுசீரமைப்பை, இலங்கை கல்வி வரலாற்றின் பின்னணியில் மதிப்பிடும் கட்டுரையும் மலையகத் தமிழர் எதிர்கொள்ளும் இன அடையாளப் பிரச்சினை முக்கியமாக, சனத்தொகை கணக்கெடுப்பில் மலையகத் தமிழரின் எண்ணிக்கை வீழ்ச்சி, அவ்வீழ்ச்சிக்கான காரணிகள், அது ஏற்படுத்தும் விளைவுகள் முதலானவற்றை விளக்கும் கட்டுரையும் இலங்கை பற்றியனவாக அமைந்துள்ளன.

மேற்படி கட்டுரைகள் சமகால யதார்த்தத்தை வரலாற்றுப் பின்புலத்தில் தெளிவுபடுத்துவனவாகவும் ஆதிக்கச் சக்திகளின் கோர முகத்தை அம்பலப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளதுடன் பாதிக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற மக்கள் தளத்தில் நின்று உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியலை அணுகுவதாக அமைந்துள்ளன.

இந்தியாவின் அரசியல் அசைவுகள், அரசியற் கொள்கைகள், தமிழ்நாட்டின் சமூக அசைவு, தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்பான பிரச்சினை, இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை முதலானவை தொடர்பிலான கட்டுரைகளை நெல்லை ஜெயசிங் எழுதியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியலில் பட்டம் பெற்று, சிறிது காலம் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றிய அவர், சிறீமா - சாஸ்திரி உடன்படிக்கையினால் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்தவராவார்.

இந்தியா ஜனநாயகத்தின் அடையாளமாகக் கருதப்பட்டாலும், அதன் விழுமியங்களிலிருந்து அது வீழ்ச்சியடைந்து வருவதை ஜெயசிங் சுட்டிக்காட்டுகிறார். தேர்தல்கள், சட்டமன்ற விவாதங்கள், மாநில சுயாட்சி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி ஆகியவற்றில் சமகாலத்தில் நிகழும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைச் சான்றுகளாகக் கொண்டு அவர் இதனை விவரித்துள்ளார். மத்திய அரசின் அரசியல் பாரபட்சம், பொருளாதார அநீதிகள், சமூக பாகுபாடுகளின் அசமத்துவப் போக்கு முதலானவை இந்திய ஜனநாயத்துக்கு அச்சுறுத்தலாக அமையுமாற்றை எடுத்துக்காட்டும் ஜெயசிங், சீர்திருத்தத்தின் தேவையையும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியத் தேர்தல் முறையின் குறைபாடுகள் குறித்தும் ஜெயசிங் தன் கட்டுரையில் தெளிவுபடுத்தியுள்ளார். அதில் இந்திய ஜனநாயகத்தின் அச்சுறுத்தல்களை விரிவாக விளக்கியதுடன் நில்லாது அதனைச் சீர்செய்வதற்கான வழிமுறைகளை முன்வைத்துள்ளார். இந்தியத் தேர்தல் முறையின் ஜனநாயகத் தன்மையில் ஊழல், மதம், சாதிய அடையாளச் சீர்கேடுகள் என்பனவும் ஊடக அரசியலும் எத்தகைய தாக்கங்களைச் செலுத்துகின்றன என்பதில் கவனம் செலுத்தியுள்ள அவர், ஜனநாயகத்தின்மீதான மக்களின் நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் வகையிலான சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ளார்.



இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையை மீனவர்களின் வாழ்வாதாரம், கடல்வள சமநிலை என்ற நோக்கில் ஆராய்ந்துள்ள அவர், பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை முன்னிறுத்தியும் இரு பிராந்தியங்களுக்கு இடையிலான வரலாற்றுத் தொடர்பைக் கருத்தில் கொண்டும் மனிதாபிமான வழியில் அப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமெனவும் முன்மொழிந்துள்ளார்.

இந்திய அரசு முன்னெடுக்க விழையும் இந்தித் திணிப்பு, மும்மொழிக் கொள்கை முதலான செயற்பாடுகளுக்குப் பின்னாலான அரசியலை நன்கு மதிப்பிட்டுள்ள ஜெயசிங், மும்மொழிக் கொள்கையை முற்றிலும் நிராகரிக்காமல் அதன் சாதகங்களை எடுத்துக்காட்டி, வெற்றிகரமாக அதனை நடைமுறைப்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய அம்சங்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார். அடையாளம், பண்பாட்டு முக்கியத்துவம், சமூக ஒற்றுமை, மொழிச் சமத்துவம், தேசிய மற்றும் உலகளாவிய திறன் வளர்ச்சி முதலானவற்றையும், நடைமுறை சவால்களையும் கருத்தில்கொண்டு மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது பயன்மிக்கதாக அமையும் என்பது அவரின் நிலைப்பாடாகும்.

இலங்கைத் தமிழ் அகதிகளை நாடுகடத்தும் திட்டங்கள் மனிதாபிமானம், சட்ட நடைமுறை ஆகிய இரு தளங்களில் அநீதியாக விளங்குமாற்றை நடுநிலைமையுடன் விபரித்துள்ள ஜெயசிங், இந்தியாவில் அகதிகளாக உள்ளவர்களின் பாதுகாப்பு, குடியுரிமை, நல்வாழ்வு முதலானவற்றை இந்திய அரசு உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

இந்தியா - இலங்கை மக்களின் நலன்களுக்கான நிகழ்காலச் சவால்களுக்கும் அவற்றுக்கான தீர்வுகளுக்கும் முதன்மை கொடுத்துள்ள ஜெயசிங், ஜனநாயகத்தின் இருப்பை மேம்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான பரிந்துரைகளைப் பெரும்பாலான கட்டுரைகளில் முன்வைத்துள்ளார். மனிதாபிமானம், சமூக சமத்துவம், சமூக நலம், சமநீதி, மக்கள் பங்குபற்றல் முதலானவற்றுக்கு அழுத்தம் கொடுத்துள்ள அவர், அந்தத் தளத்தில் நின்று சமகால இந்தியாவின் அரசியல் - சமூக அசைவுகளை மதிப்பிட முயற்சி செய்துள்ளார்.

தாய்வீட்டில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்டுரைகள் பகுதியில் மணி வேலுப்பிள்ளை அவர்களின் மொழிபெயர்ப்புகளும் மிகுந்த கவனத்துக்கு உரியனவாக விளங்குகின்றன. அவர் மொழிபெயர்ப்புக்காகத் தேர்வு செய்துள்ள விடயங்கள் அக்கவனக் குவிப்புக்கு முக்கியக் காரணமெனலாம். இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழரின் அரசியல் வகிபாகம், தமிழ்த்தேசியம், தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள், புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் முதலானவை தொடர்பில் முன்னணி சிங்கள ஆளுமைகள் எழுதிய கட்டுரைகள் பலவற்றை மணி வேலுப்பிள்ளை மொழிபெயர்த்துள்ளார். கடந்த வருட இதழ்களில் அவரினால் மொழிபெயர்க்கப்பட்ட 11 அரசியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்பது கட்டுரைகள் சிங்களப் புலமையாளர்களுடையவையாகும். அவை சமகாலச் சிங்களச் சமூகத்தின் பார்வையில் தமிழரின் அரசியல் நகர்வுகளையும் சமகால இலங்கை அரசியல் போக்குகளையும் புரிந்துகொள்ள துணைசெய்கின்றன. தமிழ் வாசகர்களின் மிகப் பெருந்தேவையை அவை நிறைவுசெய்துள்ளன எனலாம். தாய்வீட்டின் அரசியல் பகுதியின் முக்கிய பங்களிப்புகளுள் ஒன்றாக அம்மொழிபெயர்ப்புகளைக் கொள்ளலாம்.

முடிவுரை:

கடந்த வருட தாய்வீடு இதழ்களில் வெளிவந்துள்ள அரசியல் கட்டுரைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் அசைவுகளை வரலாற்றுப் பின்புலத்தில் அதிகாரம், பொருளாதார நலன், புவிசார் அரசியல் முதலானவற்றை ஒருங்கிணைத்து மதிப்பிடுவதாக அமைந்துள்ளன. உலக அரசியல் நகர்வைப் பரந்த தளத்தில் அணுகுவதாக அமைந்துள்ள அக்கட்டுரைகள், தமிழ் வாசகர்களுக்குச் சமகால அரசியல் நிலைமைகளை அறியத்தருவதாக மட்டுமன்றி அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. வெவ்வேறு பின்புலத்தில், வெவ்வேறு நிலைப்பாடுகள் கொண்ட எழுத்தாளர்களின் பங்களிப்புகள் தாய்வீட்டின் அரசியல் பகுதியைப் பன்முகமும் உயிர்ப்பும் மிக்கதாக்கியுள்ளன எனலாம்.

உலக அரசியல் நகர்வுகளில் உள்ளியங்கும் மறைகரங்களும் வல்லரசுகளுக்கு இடையிலான போட்டிகளும் ஜனநாயகத்தின் சவால்களும் மதம் - அரசியல் - அதிகாரம் ஆகியவற்றுக்கு இடையிலான உள்ளார்ந்த பிணைப்புகளும் அக்கட்டுரைகளில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளதுடன் அமெரிக்காவின் வல்லாதிக்கச் செயற்பாடுகளும் டொனால்ட் ட்ரம்ப் முன்னெடுக்கும் ஜனநாயக விரோத செயற்பாடுகளும் வலதுசாரி சக்திகளின் எழுச்சியும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. அதிகாரத்தின் நகர்வுகள் நிகழ்த்தும் அநீதிகளை அம்பலப்படுத்தியுள்ள அக்கட்டுரைகளில் மானுட நேயம், சமூக நீதி, மனித உரிமை, மக்களின் வாழ்வாதாரம், சமகால அரசியல் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியம் ஆகியவை மேலோங்கியுள்ளன. தாய்வீட்டின் ஆசிரியத் தலையங்கங்களில் உள்ளுறைந்துள்ள கருத்தியலுடன் அதன் அரசியல் கட்டுரைகள் இயைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

ஆகவே, கடந்த வருட தாய்வீட்டு அரசியல் கட்டுரைகள் வெறும் நிகழ்வுகளின் பதிவுகளாக அல்லாமல், தமிழ் வாசகர்களின் அரசியல் சிந்தனையை விரிவுபடுத்தி, விமர்சன பார்வையை வளர்த்தெடுப்பனவாகவும் சமகால உலகையும் இலங்கையையும் ஆழமாகப் புரிந்துகொள்ளவதற்கான வாயிலைத் திறப்பனவாகவும் அமைந்துள்ளன எனலாம். தாய்வீடு தொடர்ந்தும் இத்தடத்தில் தன் பணியினைத் தொடரும் என நம்பலாம்.

jeyaseelan.mm@thaiveedu.com



ஈழ இலக்கியத்தில் ‘முனைப்பு’ சிற்றிதழின் இடம்

ஜிஃப்ரி ஹாசன்



தீவிர இலக்கியமானது சிற்றிதழ்கள் வழியாகவே வளர்ந்து வந்திருக்கிறது. பெரும்பாலும் தமிழ் இலக்கியச் சூழலைப் பொறுத்தவரை, இது மறுக்க முடியாத ஒரு விதியாகவே இன்றுவரை தொடர்கிறது. ஈழ இலக்கியமும் சிற்றிதழ் வழியாகத்தான் தன்னை திடப்படுத்தி வளர்ந்து வருகிறது. தமிழ்ச் சூழலில் சீரியஸ் இலக்கியத்துக்கான வாசக எல்லை வரையறுக்கப்பட்டிருப்பதன் மிக முக்கிய குறிகாட்டி இது. தொடக்கத்தில் அச்சு இதழ்கள் மட்டுமே வெளிவந்தன. இப்போதுள்ளது போல் இணைய இலக்கியச் சிற்றிதழ்களின் பங்களிப்பு அப்போது இருக்கவில்லை. தமிழ் இலக்கியவெளியில் இணைய இலக்கியச் சிற்றிதழ்களின் வருகை என்பது பெரும்பாலும் 2000-இற்குப் பிறகு நிகழ்ந்த ஒரு மிக முக்கிய தோற்றப்பாடாகும். அச்சு இதழ்களோடு ஒப்பிடும்போது இணைய இலக்கியச் சிற்றிதழ்கள் தமிழின் விரிந்த பரப்பிலுள்ள வாசகர்களையும் இணைக்கும் சாத்தியப்பாட்டைக் கொண்டிருந்தன. அந்தவகையில் தமிழ் இலக்கிய இணையச் சிற்றிதழ்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இன்னொரு பரிமாணத்தை தோற்றுவித்தன.

பெரும் பத்திரிகைகள் தீவிர இலக்கிய வளர்ச்சியில் பெரிதளவு அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்பதை நாம் அறிவோம். தொடக்கத்தில் தமிழக சிற்றிதழ்களான மணிக்கொடி, சரஸ்வதி, கணையாழி, தாமரை போன்ற இதழ்களே ஈழப் படைப்பாளிகளுக்குமான களமாக அமைந்தது. பின்னர் ஈழத்திலிருந்தும் சிற்றிதழ்கள் வெளிவரத் தொடங்கின.

ஈழ இலக்கியத்தை பல்வேறு காலகட்டங்களிலும் தூக்கி நிறுத்தி அதனை முன்கொண்டு சென்றதில் சிற்றிதழ்களுக்குத்தான் மகத்தான பங்கிருப்பதை நாம் காண்கிறோம். ஈழத்திலிருந்து பல்வேறு காலகட்டங்களிலும் மறுமலர்ச்சி, அலை, மல்லிகை, கவிஞன், மூன்றாவது மனிதன், ஞானம், யாத்ரா, பெருவெளி போன்ற சிற்றிதழ்கள் தோன்றியும் மறைந்தும் தொடர்ந்து இயங்கியும் தத்தம் காலகட்ட ஈழ இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் போக்குக்கும் பங்களித்துள்ளன. இந்த வரிசை யில் இடம் பெறத்தக்க மிக முக்கியமான சிற்றிதழ்களுள் ஒன்று முனைப்பு.

> **இலக்கியத்தில் புதிய சிந்தனையும், தீவிர ஈடுபாடும் கொண்டவர்களுக்கு முனைப்பின் ஆசிரிய பீடம் தொடர்ந்தும் இடமளித்தது. அதுவே, அதன் உள்ளடக்கம் ஓர் ஆரோக்கியமான நிலையில் இருந்ததற்கான, தொடர்ச்சியான வளர்ச்சியை காட்டி வந்ததற்கான முக்கியமான காரணம் என நினைக்கிறேன்.**

முனைப்பு கிழக்கிலங்கையில் மருதமுனையிலிருந்து 1989-லிருந்து 2004-வரை வெளிவந்த தனி இலக்கியச் சிற்றிதழ். முனைப்பின் முதல் இதழில் ஆசிரியர் குறிப்பில், 'கார்த்திகை 88' என தேதியிடப்பட்ட முதலாம் இதழ் மாசி 89-இல் தான் வெளிக்கொணர முடிந்தது' எனச் சொல்லப்பட்டிருந்தது. அந்தவகையில் 1989-லிருந்து 2004-வரை 12 இதழ்கள் வெளிவந்திருக்கின்றன.

மருதமுனையைச் சேர்ந்த அதிபரும் எழுத்தாளருமான மருதூர் பாரி அதன் வெளியீட்டாளராகவும், பிரதம ஆசிரியராகவும் இருந்தார். முனைப்பின் இணையாசிரியர்கள் மாறி மாறி வந்திருக்கிறார்கள். இலக்கியத்தில் புதிய சிந்தனையும், தீவிர ஈடுபாடும் கொண்டவர்களுக்கு முனைப்பின் ஆசிரிய பீடம் தொடர்ந்தும் இடமளித்தது. அதுவே, அதன் உள்ளடக்கம் ஓர் ஆரோக்கியமான நிலையில் இருந்ததற்கான, தொடர்ச்சியான வளர்ச்சியை காட்டி வந்ததற்கான முக்கியமான காரணம் என நினைக்கிறேன். முனைப்பின் இணையாசிரியர்களாக எம்.ஐ.எம். ரவூஃப், எம்.ஐ.ஏ. ஜபார் போன்றோர் பங்களிப்புச் செய்தனர்.

முனைப்பு வெளிவந்த காலம் என்பது ஈழ இலக்கியத்தில் முற்போக்கு இலக்கிய விவாதங்களும் முயற்சிகளும் தணிந்து, போரையும் அதுசார்ந்த வாழ்வியலையும் பேசும் படைப்புகள் அதிகளவில் வெளிவந்த காலகட்டமாகும். பெரும்பாலும் ஈழ இலக்கியத்தின் மையக் குரல் என்பது போர், இனத்துவம், சிங்கள அரசு-புலிகள் மோதலால் உருவான மிகச் சிக்கலான, துயரார்ந்த சமூக நிலைமைகளின் மீதே கவனம் கொள்வதாக அமைந்தது.

இதனால் இக்காலப்பகுதியில் ஈழத்திலிருந்து வெளிவந்த அனைத்துச் சிற்றிதழ்களுமே இந்த நிலைமைகளைப் பேசுபவையாகவே மேலெழுந்து வந்தன. குறிப்பாக போர், இன மோதல்கள், பரஸ்பர சந்தேகங்கள், தமிழ்-முஸ்லிம் உறவில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பூசல்கள் போன்ற நிலைமமைகளை வெளிப்படையாகவும், குறியீட்டு நிலைகளிலும் பேசும் கவிதைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்பு படைப்புகள் என சிற்றிதழ்கள் வெளியிட்டன. முனைப்பும் அத்தகையதொரு போக்கிலேயே தன் பெரும்பாலான படைப்புகளைத் தேர்வு செய்து வெளியிட்டது. எனினும் படைப்பிலக்கியம் சார்ந்து முனைப்புக்கென ஒரு தனியான கொள்கை நிலைப்பாடுகளோ கோட்பாட்டுத் தளமோ இருக்கவில்லை. எல்லா வகையான நிலைப்பாடுகளுக்கும் அது இடங்கொடுத்தது. குறிப்பாக அரசுக்கும் புலிகளுக்கு மிடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியிலேயே, மொழி சார்ந்தும் சிங்களத் தரப்பால் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியில், சிங்கள-தமிழ் உறவினையும், இரு இனங்களுக்குமிடையிலான பரஸ்பரப் புரிதலையும், சகவாழ்வையும் பேசக் கூடிய சிங்களப் படைப்புகளை முனைப்பு மொழிபெயர்த்து வெளியிட்டது. முனைப்பு இந்த முக்கியமான பங்களிப்பை தொடர்ச்சியாகச் செய்து வந்தது. குறிப்பாக இந்தப் பங்களிப்பினை முனைப்பு இதழினூடாக தென்னிலங்கையைச் சேர்ந்த கவிஞரும் எழுத்தாளருமான அல் அஸுமத் செய்து வந்தார். முனைப்பின் பல இதழ்களில் அவரது சிங்கள மொழிபெயர்ப்புக் கதைகள் வெளிவந்தன.

முனைப்பின் இரண்டாவது இதழில் சிங்கள எழுத்தாளர் நிரங்க விக்கிரமசிங்கவின் 'பாம்புகள்' எனும் கதையை அவர் மொழிபெயர்த்தார். இக்கதை இலங்கைத் தமிழ்-சிங்கள மக்களுக்கிடையிலான சகவாழ்வைப் பேசும் கதையாக இருந்தது. சிங்கள-தமிழ் புதுவருடத்தை ஒரு குறியீடாக வைத்து இனநல்லிணக்கத்தை அக்கதை பேசுகிறது. போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த அக் காலப்பகுதியில் சிங்களத் தரப்பிலிருந்து எழுதப்பட்ட அக்கதையை தமிழ்ச் சூழலுக்கு அறிமுகம் செய்த முனைப்பின் பணி மகத்தானது என்றே சொல்லத் தோன்றுகிறது.

முனைப்பு வெளியிட்ட ஆக்கங்களைப் பொறுத்தவரை மிகத்தீவிர சீரியஸான இலக்கிய முயற்சிகளுக்கே அது களம் ஒதுக்கியது. முனைப்பின் 12 இதழ்களிலும் வெளிவந்த படைப்புகளைப் பார்த்தால் இன்று ஆச்சரியமாக இருக்கிறது. மிக ஆழமான படைப்புகள், நேர்த்தியான தெரிவுகள் என முனைப்பு மிக சிரத்தை எடுத்துக் கொண்டு தன் உள்ளீட்டைத் தீர்மானித்திருக்கிறது. கிழக்கிலிருந்து அப்போதே இத்தகையதொரு தீவிரமானதும், காத்திரமானதுமான இதழ் வெளிவந்திருக்கிறது எனும் போது உண்மையில் ஆச்சரியமாகவே இருக்கிறது.

கவிதை, சிறுகதை, கட்டுரை, இலக்கிய ஆய்வுகள், மொழிபெயர்ப்புகள் என முனைப்பு, இலக்கியத்தின் பல்வேறு களங்களிலும் இயங்கி வந்துள்ளது. கவிதையைப் பொறுத்

> **சிறுகதைகள் சார்ந்து சாதி, போர், வர்க்க முரண் போன்ற பொதுவான சமூகப் பிரச்சினைகள் பேசப்பட்டு வந்த ஈழ இலக்கிய சூழலில் தனிமனித உணர்ச்சிகள், தனிமனித அகம்சார்ந்த நெருக்கடிகளைப் பேசும் புதிய கதைப் போக்குகளுக்கும் முனைப்பு களம் அமைத்தது**

தவரை முனைப்பில் ஈழத்தின் மிக முக்கியமான கவிஞர்க ளாகவும், எழுத்தாளர்களாகவும் அப்போது அறியப்பட்டி ருந்த சோலைக்கிளி, சண்முகம் சிவலிங்கம், மருதூர்க் கொத்தன், அல் அஸுமத் போன்றோர் எழுதினர். அடுத்த தலைமுறையில் எம்.ஐ.எம். ரவூப், மருதூர் பாரி, கருணா கரன், வாசுதேவன், டீன் கபூர் போன்றவர்கள் பங்களித் தனர். சிலர் முனைப்பிலிருந்தே உருவான புதிய கவிஞர் களாக இருந்தனர். அதேபோல் மு.மு.மு. பாசில், எம்.எம்.எம். நகீபு, செஹபா, கஜனி போன்ற புதிய முகங் களும் எழுதினர். கவிதைகள் பெரும்பாலும் அடர்த்தியான கவித்துவச் செறி வும், அக்கால இலங்கையின் சமூக அரசியல், தனிமனித உளவியல் சார்ந்த நெருக்கடிக ளையும் பேசுபவையாக ஈழ இலக்கியத்தின் வளர்ச்சிநி லையைக் காட்டுபவையாக அமைந்தன. உதாரணமாக மருதூர்க் கொத்தனின் 'கழைக்கூத்து', டீன்கபூரின் 'சண்டைப் பொழுது' போன்ற கவிதைள் அப்போதைய சமூக அரசியலை அழகியலோடு முன்வைத்தன.

கவிதைகள் விசயத்தில் அதன் காத்திரத்தன்மையை கவனத்திற் கொண்டது போலவே சிறுகதைகள் விசயத் திலும் முனைப்பு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டி ருந்ததாகத் தெரிகிறது. சிறப்பான பல கதைகள் முனைப்பில் வெளிவந்தன. சண்முகம் சிவலிங்கத்தின் 'துரு வப்பறவைகள்', முனைப்பு 3-வது இதழில் நற்பட்டிமுனை பளீலிலின் 'மறுபடியும் மறுபடியும்' போன்ற கதைகள் மிகு நேர்த்தியும் புனைவு நுணுக்கமும் கொண்டவை. இதில் பளீலிலின் 'மறுபடியும் மறுபடியும் சிறுகதை போர்க்கால வாழ்வியலை, குறிப்பாக போரின் தொடக்ககால கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கைப்பாடுகளையும், பதற்றங்க ளையும் அழகிய புனைவாக முன்வைக்கும் கதை. பளீல் ஒரு முக்கியமான படைப்பாளியாக வருவதற்கான அனை த்து தகைமைகளையும் கொண்டிருந்தார் என்பதற்கு நிரூப ணமான கதை அது. ஒரு படைப்பாளியாக பளீலை முதன் முதலில் அடையாளம் காட்டியதும் முனைப்பு என்றுதான் நினைக்கிறேன்.

அல்-அஸுமத்தின் 'வான்கோழி' என்றொரு கதையும் முனைப்பில் வெளிவந்தது. அப்போதைய ஈழ இலக்கியச் சூழல், இலக்கிய வட்டம் குறித்த ஒரு படைப்பாளியின் அவ தானத்தை மெல்லிய அங்கதத்தோடு முன்வைத்த கதை அது. குறுநாவலுக்கும் முனைப்பு இடமளித்து வெளியிட்டது. இது சிற்றிதழ்களில் குறுநாவல்களையும் சுதந்திரமாக வெளியி டுவதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந் தது. மருதூர்பாரியின் 'மறுகரையின் நிறம் என்ற குறுநாவல் முனைப்பில் தொடராக வெளிவந்தது.

அதேநேரம் சிறுகதைகள் சார்ந்து சாதி, போர், வர்க்க முரண் போன்ற பொதுவான சமூகப் பிரச்சினைகள் பேசப் பட்டு வந்த ஈழ இலக்கிய சூழலில் தனிமனித உணர்ச்சிகள், தனிமனித அகம்சார்ந்த நெருக்கடிகளைப் பேசும் புதிய கதைப்போக்குகளுக்கும் முனைப்பு களம் அமைத்தது. எம்.ஐ.எம். ரவூஃபின் 'இடையில் வெளிகள்' என்ற கதையை இந்தவகைக் கதைகளுக்கு எடுத்துக்காட்டான கதையாகச் சொல்ல முடியும்.

மொழிபெயர்ப்புக் கவிதைகள் முனைப்பின் மற்றுமொரு பரிமாணம். எம்.கே.எம். ஷகீப் மிக முக்கியமான பிற மொழிக்கவிதைகளைத் தேர்வு செய்து மொழிபெயர்த்தார். அதனை முனைப்பு வெளியிட்ட ஈழத்தில் மொழிபெயர்ப்பு இலக்கிய வளர்ச்சிக்கும், ஈழத்துக் கவிஞர்களுக்கு பரந்து பட்ட கவிதை அனுபவத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது. ரவீந்திர பாணர்ஜியின் 'எனது கதை' எனும் கவிதையை முனைப்பில் எச்.ஏ. அஸீஸ் மொழிபெயர்த்திருந்தார்.

பரந்துபட்ட இலக்கிய ஆய்வு முயற்சிகளுக்கும் முனைப்பு உரிய இடத்தை வழங்கியது. மருதூர்க் கொத்தனின் பாரதி தாசன் கவிதைகள் குறித்த இலக்கிய ஆய்வு பாரதிதாசன் கவிதைகள் குறித்த பல்வேறு திறப்புகளை புதிய இலக்கிய வாசகர்களுக்கு ஏற்படுத்துவதாக அமைந்தது. புலவர் ஆ.மு. ஷரிபுத்தீன் படைப்புகள் பற்றிய செயித் ஹஸன் மௌலானாவின் ஆய்வு நோக்கிலான கட்டுரைகளை முனைப்பு வெளியிட்டது.

மலையக இலக்கிய முயற்சிகளுக்கும் முனைப்பு களம் ஒதுக்கி அதன் வளர்ச்சிக்கு பங்களித்தது. குறிப்பாக மலை யக படைப்புகளைப் பிரசுரித்ததோடு மலையக இலக்கியம் குறித்த ஆய்வுக் கட்டுரைகளுக்கும் இடமளித்து ஊக்கு வித்தது. முனைப்பின் ஆறாவது இதழ் மலையக இலக்கி யத்தின் மிகப்பெரும் ஆளுமையான சி.வி. வேலுப்பிள் ளையின் வாழ்வும் பணியும் பற்றிய அந்தனி ஜீவாவின் கட்டுரையை வெளியிட்டது.

பெண்களின் இலக்கிய முயற்சிகளுக்கும் முனைப்பு தனியான இடத்தை ஒதுக்கியது. சபீனா அபூபக்கரின் 'கண்ணீரைக் காணவில்லை', எஸ்.எச். வஜீனா ராணியின் 'ஊனங்கள்' செஹபாவின் மூன்று கவிதைகள் போன்ற படைப்புகளை எடுத்துக்காட்டாகச் சொல்ல முடியும். இவை மரணத்தையும் வாழ்வையும் வெளிப்படுத்தும் கவிதைகளாகவும், பெண்ணின் அடக்கப்பட்ட வாழ்வின் பல்வேறு உணர்ச்சித் தருணங்களையும் பேசும் படைப்புகளாக அமைந்தன.

முனைப்பின் மற்றொரு மிக முக்கிய இலக்கியப் பங்களிப்பாக ஈழ இலக்கியச் சூழலில் புதிதாக வெளிவரும் கவிதைத் தொகுப்புகள், சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள், விமர்சன நூல்கள் என அனைத்து வெளியீடுகளுக்குமான அறிமுகப் பகுதியையும் சில நூல்கள் குறித்த விரிவான விமர்சனங்களையும் முன்வைத்து அவற்றை வாசகர்களிடையே கொண்டு சேர்க்கும் பணியை அந்நாட்களில் முன்னெடுத்ததைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அப்போதைய ஈழ இலக்கிய சூழலைப் பொறுத்தவரை சிற்றிதழ்களே இப்படி பரந்த இலக்கிய தேடலுள்ள வாசகரை இலக்கியச் சூழலோடு இணைக்கும் பணியையும் செய்தன. இத்தகைய புத்தகங்களின் விரிவான அறிமுகத்தோடு புத்தகங்களைப் பெறுவதற்கான தகவல்களையும் முனைப்பு வெளியிட்டு வாசகத் தேவையை பூர்த்தி செய்யும் ஒரு பணியைச் செய்தது. இது அந்நாட்களில் ஒரு தீவிர இலக்கிய வாசகருக்கு மிகமுக்கியமான சேவையாக அமைந்திருக்கும் என நம்பலாம்.

முனைப்பு நாட்டில் போதிய அச்சு வசதிகளோ, தொடர்பாடல் வசதிகளோ இல்லாத காலப்பகுதியில், இத்தனைக்கும் தென்னிலங்கையுடன் ஒப்பிடும்போது அத்தகைய வசதிகள் மிக மிகக் குறைந்த மட்டத்திலிருந்த கிழக்கு மாகாணத்திலிருந்து தொடர்ச்சியாக ஒரு தீவிர இலக்கிய இதழாக 12 இதழ்கள் வரை வெளிவந்தது என்பது ஒரு சாதனையான அடைவாகும். முனைப்பு அதன் இரண்டாவது இதழிலேயே தனக்கான சவால்களை முன்வைத்தது. மின்சார வசதிகள் இன்மை, ஆக்கங்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமை, பணம், படைப்பாளிகளுடனான தொடர்பாடல் பிரச்சினை போன்றன முனைப்பு எதிர்கொண்ட சவால்களுள் சிலவாக சுட்டிக்காட்டலாம். இந்த சவால்கள் சிற்றிதழ்களை எப்போதும் பின்தொடரும் துயர நிழலாகவே தோன்றுகிறது. எனினும் முனைப்பு இந்த சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து 12 இதழ்கள் வரை வெளிவந்து ஈழ இலக்கிய வளர்ச்சியில் ஒரு காலகட்டத்துக்கான காத்திரமான பங்களிப்பினை வழங்கி இருக்கிறது என்று சொல்வதே இன்றைய நாட்களில் முனைப்பு குறித்த ஒரு நேர்மையான மதிப்பீடாக அமையும்.



jiffry.hassan@thaiveedu.com








வானத்தின் கீழே பூரணம் ஒன்றுமில்லையே
ஈழத்துப் புலவர் சரிதையும் கவிதைத் திரட்டும்
வில்லியம் நெவின்ஸ் முதல் ஆ. சதாசிவம் வரையிலான வரலாற்று வரைபு

- செல்லத்துரை சுதர்சன்

பாகம்-1


THE
TAMIL PLUTARCH.
CONTAINING
A SUMMARY ACCOUNT
OF
THE LIVES OF THE POETS AND POETESSES
Of Southern India and Ceylon
FROM THE EARLIEST TO THE PRESENT TIMES, WITH SELECT
SPECIMENS OF THEIR COMPOSITIONS.
BY
SIMON CASIE CHITTY, ESQUIRE.
MEMBER OF THE CEYLON LEGISLATURE.
Jaffna:
AMERICAN MISSION PRESS.
1859.


தமிழ்ப்புலவர் சரித்திரம்.
அ. குமாரசுவாமிப்புலவர்கன்

‘ஐயா,

நீங்கள் அன்புடன் அனுப்பிய தமிழ்ப் புலவர் சரித்திரப் புஸ்தகமும், அதனுள் வைத்திருக்கப்பெற்ற, கடிதமும், தங்கள் புத்திரன் சிரஞ்சீவி முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை தபாற்சீட்டும் வரப்பெற்றேன். புத்தகம் அனுப்பிய விஷயத்தில் மிக்க நன்றியறிவுடையேன். இடையே நேர்ந்த சில இடையூறுகளால் விரைவில் விடையனுப்பக் கூடாதபடி நேர்ந்தது. 3 மாதங்களுக்கு முன்பு கௌரவம் பொருந்திய சேதுபதி மகாராசா அவர்கள் இப்புத்தக விஷயத்தைப் பற்றி என்னிடமுஞ் சொன்னார்கள். இது தமிழ் நாட்டுக்கு மிக உபகாரமே. தங்கள் குமாரருக்கு என் ஞாபகம் சொல்லுக. அவர் இப்போது என்ன படிக்கிறார், என்ன வேலையிலிருக்கின்றார்.’

மேற்படி கடிதம், தியாகராச விலாசம், திருவெட்டீஸ்வரன் பேட்டை என்ற முகவரியில் இருந்து, வே. சாமிநாதையன் என்ற பெயரில், உ.வே. சாமிநாதை யரவர்களால், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவருக்கு 14.06.1017 அன்று எழுதப்பட்டது.

‘ஸ்ரீமான் பிள்ளையவர்கட்கு விஞ்ஞாபனம்,

உபயசேஷமோபரி...

தங்களாலியற்றப்பட்ட தமிழ்ப் புலவர் சரித முகவுரையைப் படித்து, மாட்சிமை தங்கிய சேதுபதியவர்கள், பாராட்டினார்கள், அச்சிற் பதிப்பித்ததற்காக ரூபா நூற்றைம்பது உபகரிக்கத் திருவுளமுவந்த செய்தியைத் தங்கட்கு விஞ்ஞாபிக்கின்றேன். இத்தொகையைத் தங்கள் பெயருக்குத் தபால் வாயிலாக கூடிய விரைவில் அனுப்பப்படும். நவராத்திரி காலத்தில், மகாராசா பேரிற் பாடிய பாக்கள் சில அச்சிட்ட வற்றைத் தங்கட்கு அனுப்பியுள்ளேன்.’

மேற்படி கடிதம், இராமநாதபுரம் எனும் முகவரியில் இருந்து, பாஸ்கர சேதுபதி மகாராஜா சமஸ்தான வித்துவான் ரா. இராகவ ஐயங்கார் அவர்கள் 08. 13. 1916 அன்று சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவருக்கு அனுப்பியது.

'ஸ்ரீமான் புலவரவர்கட்கு விஞ்ஞாபனம்

உபயத்ர ஷேமோபரி...

புலவர் சரித்திர முகவுரையைப் படித்தேன். செவ்வன மமைந்துள்ளது. இங்கு வந்ததனாற் கடிதமெழுதத் தாமதித் தேன். மகாராஜா அவர்கட்கு அனுப்பிய பிரதிகள் உரிய காலத்திலே கிடைத்தன. மகாராஜா அவர்கள் ஆங்காங்குப் பார்த்து என்னிடம் நன்கு பாராட்டினார்கள்'

மேற்படி கடிதம், பாஸ்கர சேதுபதி மகாராஜா சமஸ்தான வித்துவான் ரா. இராகவ ஐயங்கார் அவர்கள் சென்னை என்ற முகவரியிலிருந்து, 10.02. 1917 அன்று சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவருக்கு அனுப்பியது.

'சீரார் தமிழ்ப்புலவர் செம்மைச் சரித்திரத்தைப் பாரார் படிக்கப் பகர்ந்திட்டான் - நேராரும் இல்லக் குமார சுவாமி இருமொழியும் வல்லான்சுன் னாகத்தான் மற்று'

'தெல்லிப்பளையிலுள்ள ஸ்ரீ வேலுப்பிள்ளைப் போதகரவர்கள் தாங்கள் எனக்கு உபகரித்ததாகத் தமிழ்ப்புலவர் சரித்திரம் ஒரு பிரதியை அனுப்பினார்கள். அது இரண்டு நாட்களுக்கு முன் கிடைத்தது. அனுப்பிய பிரதியையிட்டு நன்றி பாராட்டுகி றேன்'

மேற்படி கடிதம், பெங்களூரில் அமைந்திருந்த United Theological College என்ற முகவரியிலிருந்து அழகசுந்தரன் என்ற பெயரில், வண. கிங்ஸ்பரி தேசிகர் அவர்கள் 1917-ஆம் ஆண்டு சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவருக்கு அனுப்பிய கடிதம்.

நமக்குக் கிடைக்கப்பெறும் மேற்குறித்த நான்கு கடிதங்களும் ஈழத்துப் புலவர் சரிதையாக்கம் மற்றும் கவிதைத் திரட்டு உருவாக்கம் ஆகியவை குறித்த முக்கியமான சில செய்தி களைச் சொல்லுகின்றன. 1737-இல் அச்சியந்திரம் ஈழத்திற்கு முதன்முதலாக அறிமுகமாகியது. அதற்கு எவ்வளவு காலத் தின் பின்னர், புலவர் சரிதம் எழுதும் முயற்சி நிகழத் தொடங்கியிருக்கிறது என்பது அல்ல இங்கு முக்கியம். பழந்தமிழ் நூல்களை அச்சுவாகனம் கண்ட தமிழ்ச் சூழல், புலவர் வாழ்க்கை வரலாறுகளையும் அச்சுவாகனம் காணு கிறது என்பதே இங்கு முக்கியமானது. இதற்கு, புலவர்களிடம் இருந்த ஆவணப்படுத்தும் கரிசனை அல்லது மனப்பாங்கு ஒரு காரணம் எனச் எளிமையாகச் சொல்லலாம். ஆழ்ந்து நோக்கினால், காலனியத் தமிழ்ப் புலமையாளர்கள், வம்ச வைபவம், வம்ச புராணம் எழுதும் மரபிலிருந்து மாறுபட்டு, புலமைநிலைப்பட்ட ஆளுமையாளர்களின் சரிதத்தை, அவர்க ளின் புலமை மரபினூடாகச் சேகரித்து, பதிவாக்கம் செய்யும் புலமைத் தொழிலை மேற்கொண்டிந்த தன்மையே அதற்கான காரணம் என்பது தெள்ளிதில் புலனாகிறது. இன்னொரு விதத் தில் கூறுவதானால், புலமைத் தொழிலில் ஈடுபட்ட புலவர்கள், தமது முன்னோரான புலமைத் தொழில்முறை வல்லுநர்கள தும், தம் சமகாலத்தவரான புலமைத் தொழில்முறை வல்லுநர் களதும் வரலாற்றை எழுதும் புலமைத் தொழிலை நிகழ்த்தினர் என்பது எனலாம்.

புலவர்கள் மத்தியிலும் புரவலர்கள் மத்தியிலும் புலவர் சரிதையாக்கத்திற்கான பெருவரவேற்பு இருந்ததையும் மேற் படி கடிதப் பகுதிகள் புலப்படுத்துகின்றன. காலனிய காலத் தில் எழுந்த புதிய மனோபாவமான வரலாறு தேடும் படலமே இதற்குப் பிரதான காரணம் எனல் வேண்டும். இது, 'புலமை மரபு கிளத்தல்' என்பதன்பாற்பட்டது. தமிழில், புலவர்களின், குறிப்பாக அனுபூதிமான்களின் வரலாறுகள் புனைவுத் தன்மைபெற்ற செய்யுட்களாகவே பெரும்பாலும் அமைந்திருந்தன. காலனிய காலம் வரையும் இந்த நிலையே தமிழில் இருந்தது. திருவாதவூரடிகள் புராணம், திருத் தொண்டர் புராணம் முதலாய பலவற்றை இங்கு குறிப்பிடலாம். காலனிய காலத்தில் இந்த நிலைமாறி பிரபுக்களின், முதலிமார்களின் வம்சப் பெருமை கூறும் வம்ச வைபவங்கள் எழுந்தன. மயில்வாகன வம்ச வைபவம் போன்ற வற்றை இங்கு குறிப்பிடலாம். இவற்றைவிட, நிலப்பிரபுத்துவச் சரிவை செய்யுளில் நிமிர்த்திக் காட்டும் இலக்கிய முயற்சிகளும் நிகழ்ந்தன. பிரபுக்களின் பெருமை, புகழ், நிலபுலச் செழிப்பு என்பவற்றை அவை வரைந்து காட்டுவன வாய் அமைந்தன. கரவைவேலன் கோவை, தண்டிகை கனகராயன் பள்ளு, சந்திரசேகரக் குறவஞ்சி முதலாயவற்றை இவ்வாறு நோக்குவதுதான் பொருத்தமானது.

ஆனால், நவீன உரைநடையின் கைபிடித்து, சரிதம் எழுதும் முறை காலனிய காலத்திலேதான் ஆரம்பமாகியது. அச்சுப் பழக்கமும், அது உருவாக்கிய புதிய அறிவுப் பழக்கமும் புலவர்களின் வரலாறு எழுதும் சூழலை இயல்பாக உருவாக்கியது. காலனிய கால ஈழத்துப் புலவர்கள் தமக்குள் பரிமாறிய ஏராளமான கடிதங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றுள் பெரும்பாலானவை, புலவர்களின் வரலாறு தேடும் விசாரிப்பாகவே அமைந்துள்ளன. ஒரு புலவர், இன்னொரு புவவரைத் தேடி, கடிதவழியாக, வேறொரு புலவரிடம் நடந்து சென்ற கதைகளாகவே அவை பெரும்பாலும் அமைந் திருக்கின்றன. ஈழத்தில் தோன்றிய புலவர் சரிதைகளுக்குத் தமிழ்நாட்டுப் புலமைச் சூழலில், மதிப்புமிக்க வரவேற்பும், உயர்ந்த அங்கீகாரமும் நிலவியதைப் பல கடிதங்கள் உணர்த்துகின்றன.

புலமை, புலமை மரபு, புலமைப் பள்ளி, புலவர் சரிதை ஆகியன பற்றி சிந்திப்பு முயற்சிகள் காலனிய காலத்தில் அதிகமாக நிகழ்ந்தேறியமைக்கு, புலமை இலக்கணம் என்ற ஒரு புதிய விதிவகுப்பு உருவாகியமையும் ஒரு காரணம் எனலாம். காலனியப் புலமையாளராகிய வண்ணச்சரபம் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898) இயற்றிய அறுவகை இலக்கணம் என்ற நூல் இந்த வகையில் முக்கியமானது. தமிழின் பஞ்ச இலக்கண மரபில், புலமை இலக்கணம் எனத் தனியான ஒரு மரபையும் ஆக்கி அறுவகை இலக்கணம் செய்தவர், தண்டபாணி சுவாமிகள். இந்த நூல் ஏட்டுச் சுவடியிலிருந்து, நூலாசிரியர் வாழ்ந்த காலத்திலேயே அச்சு வாகனம் கண்டது. அஷ்டாவதானம் பூவை. கல்யாண சுந்தர முதலியார் அவர்களைக்கொண்டு, தஞ்சாவூர் ஷாப்பு ப.வெ. வெங்கட்டராம ராஜா அவர்களால் 1893-இல், இது

பதிப்பிக்கப்பட்டது. தேற்றம், தவறு, மரபு, செயல்வகை ஆகிய நான்கு இயல்களையும், 144 நூற்பாக்களையும் கொண்ட தாகப் புலமை இலக்கணம் எனும் பகுதி அமைகிறது. இந்த நூலின் வருகையும், புலமை மரபை எழுதும் கரிசனையைத் தமிழ்சூழலில் அதிகப்படுத்தியது எனலாம்.



●

வரலாற்றில் தனிநபரின் வகிபாகம் (Role) தொடர்பாக அதிகம் எழுதியவர் இங்கிலாந்து வரலாற்றாசிரியர் ஈ.எச். கார் (E.H. Carr). அவர் தனது 'சோவியத் ரஷ்யாவின் வரலாறு' (History of Soviet Russia) எனும் நூலில், ஆளுமைகள் (personalities) என்ற ஐந்தா வது இயலில், வரலாற்றில் தனிநபர் வகிபா கம் தொடர்பாகப் பொதுக் கருத்தாக்கம் ஒன்றை உருவாக்குகிறார். அதில் அவர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

'வரலாற்றின் நிகழ்வுகள் தனிநபர்களின் சித்தத்தில் இருந்து வரும் முடிவுகளால் தொடக்கப்படுகின்றன. இருந்தாலும் தனி நபர் சித்தம் என்பது அத்தனிநபர்கள் செயற் படும் வரலாற்று நிலைமைகளால் உருவாக் கப்படுவதுதான். அவர்கள் எதை முடிவு செய்கிறார்கள் என்பதை இந்த வரலாற்று நிலைமைகள் தீர்மானித்துவிடுகின்றன.' (கார், ஈ.எச்., 2011:49)

மேற்படி கூற்றிலிருந்து வரலாற்று நிகழ்வு களின் உருவாக்கக் களம் தனிநபர்களின் சிந்தனைகள், தனிநபரின் சிந்தனைகள் அவர்கள் வாழும் காலத்து வரலாற்று அம்சங்களால் உருவாக்கப்படுகின்றன, தனி நபர்களின் கருத்துநிலைத் தெளிவு, வரலாற்று அம்சங்களால் தீர்மானிக்கப்படுகி றது போன்ற முடிவுகளுக்கு வர இயலுகிறது.

தனிநபரின் கருத்துநிலையும், கருத்துநிலைவழிச் செயற் பாடுகளும் அவர்களின் விருப்புத்தேர்வாக இருப்ப தில்லை என்பதால், காலனியப் புலமையாளர் ஒருவரது சரிதையை எழுதும்போது, காலனிய காலம் அரசியல், சமூக, பொரு ளாதார, பண்பாட்டு அம்சங்களது நடைமுறைகள், முரண்கள் மற்றும் இடையீடுகள் முதலாய அம்சங்களைக் கவனத்திற் கொள்வது அவசியமானது.

ஈ. எச். கார், சமூகத்திலிருந்து தனிநபரைப் பிரிக்கமுடியாது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அவர் பின்வரு மாறு குறிப்பிட்டார்.

'ஒவ்வொரு மனிதனும் வரலாற்றுக் காலத்திலும் அல்லது அதற்கு முந்திய காலத்திலும், ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்திற்கு உள்ளே பிறக்கிறான். அவன் மிகவும் தொடக்க காலத்திலிருந்து சமூகத்தினால் உருவாக்கப்படுகிறான்... சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ள தனிநபரால் பேச முடி யாது, சிந்திக்க முடியாது என்ற கருத்துச் சரியானதே.' (கார், ஈ.எச்., 2011: 2)

மேற்படி கூற்றின்வழி நோக்கினால், புலவர் ஒருவர், சமூகச் சக்திகளின் உருவாக்கமும் அச்சக்திகளின் விளைபொருளா கவும் அமைகிறார். புலவரைப் பற்றிய வரலாற்று எழுத்துக் கரிசனை என்பது, அவர் கடந்தகாலச் சமூகச் சூழலில், அச்சூழலின் தூண்டுதற் கருவியாக எவ்வாறு செயலாற்றினார் என்பதைப் பொறுத்து அமையும். ஒரு சமூக வரலாற்று நிகழ்வாகப் புலவரையும் அவரது சாதனைகளையும் அவரது வரலாற்றையும் பார்ப்பதுதான் வரலாறுசார் பயன்மிகு செயற்பாடாக அமையும். காலனிய காலத்தில் புலவர் சரிதை களை எழுதியோரும், காலனிய காலச் சமூகத்தின் தயாரிப் பாளர்களில் ஒருவர். அவர் தனது காலச் சமூகத்தில், நிகழ்கால மனிதராக இருக்கிறார் எனும் உண்மையை மறந்து விடக்கூடாது.

காலனிய காலச் சரிதவியலாளர் ஒருவர், ஒரே நேரத்தில் காலனி எதிர்ப்புச் சமூக உறுப்பினராகவும் நாடு, பிரதேசம், சாதி, இனம், வர்க்கம் முதலாய ஒன்றுக்கு மேற்பட்ட சமூகப் பிரிவுகளின் உறுப்பின ராகவும் விளங்கினார் என்ற அக்கறையோடு அவரை அணுக வேண்டும். அவர் தனது நிகழ்காலத்தில் எவ்வாறு உருவாகினார், சமூக ஆளுமை யாக எவ்வாறு மாறினார், ஏன் அப்படிச் சிந்தித்தார், ஏன் அப்படி எழுதினார், ஏதற்காக அப்படிப் பொருள் கொண்டார், அவருடைய மதிப்பீடு ஏன் அவ்வாறு அமைந்தது, அவரது எதிர்வினை யாற்றலுக் கான உள்நோக்கம் எதுவாக இருக்கலாம், அவர் பேசாத அல்லது எழுதாத அம்சங்க ளின் பின்புலம் என்ன, சிலரது வரலாறு ஏன் எழுதப்படாமல் போனது அல்லது எழுதிய வற்றுள் உள்ள புகைமூட்டம் என்ன, எதற் காக அவ்வாறு கட்டமைக்கப்பட்டது போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடைதேடும்போது, அவர் வாழ்ந்த கால நிகழ்காலத்தின் பக்கங் களைத்தான் புரட்ட வேண்டும். ஒற்றை வார்த்தையில் கூறுவதாயின், காலனிய காலச் சரிதவியலாளர் ஒருவர்மீதான விசாரிப்புகள் யாவற்றுக்குமான பதில்களை, அவர் வாழ்ந்த நிகழ்காலச் சூழலே வைத்திருக் கிறது. ஒருவிதத்தில் வரலாறு என்பது, கடந்தகால ஆளுமைகளைப் பற்றிய கேள்விகளை கடந்தகாலத்திடமே கேட்பதுதான். தனிநபர் வரலாற்றைச் சமூக வரலாற்றிடம் விசாரித்தறிவதுதான்.

●

ஈழத்தில், புலவர்கள் குறித்த வரலாற்று நூல்களின் எழுகையோடுதான், புலவர்களின் கவிதைகளையும் தேடித் தொகுக்கும் முயற்சி கால்கொள்ள ஆரம்பித்தது. காலனிய ஈழத்தில், புலமை மரபுகளை எழுதவேண்டிய தேவையின் விளைவாகப் புலமையாளரின் வரலாறு எழுதும் முறை உருவாகிற்று. இதனால்தான், முன்னொருபோதும் இல்லாத வாறு புலவர் வரலாறு பற்றிய நூல்கள் ஈழத்தில் அதிகம் எழுந்தன. புலவர்களின் வரலாற்றை எழுதுவது என்பது, குறித்த புலவரின் சிந்தனைப் பள்ளி சார்ந்த பங்களிப்பையும், அதன் வரலாற்றையும் எழுதுவதாகக் கணிப்புப்பெற்றது. புலமை மரபு என்பது புலவர் மரபுகளிலிருந்தே உருப் பெற்றது. இதன் திரட்சியே, ஈழத்துப் புலமை மரபுகளின் வரலாறு என இன்று அடையாளம் பெறலாயிற்று. இலக்கியம், இலக்கணம், தத்துவம், வைத்தியம், சோதிடம், தர்க்கம் அனைத்தும் நிரம்பிய அறிவுத் திரட்சியே காலனிய ஈழத்தில், புலமையாகக் கருதப்பட்டது.

காலனிய காலத்துக்கு முன்னர் எழுத்துநிலைப்பட்ட புலவர்

வரலாறு ஈழத்தில் இருக்கவில்லை என்றே தோன்றுகிறது. காலனிய ஈழத்தில் புலவர்களை, நாமாவளி அடிப்படையில் வரிசைப்படுத்தல் மெல்ல மெல்ல ஆரம்பிக்கிறது. பிரபந்தங்களில் இடம்பெறும் குரவ வணக்கச் செய்யுட்களும் சிறப்புப் பாயிரங்களும் நூலாக்கியோன் மரபின் மேன்மை கூறும் தொடக்கநிலைப் பதிவுகளாய் அமைந்தன. புலவர்க ளின் நூல்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துகை யில், அவர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளும் இடம் பெறலாயின. இவற்றால், புலவர்களது கவிதைகளைத் தொகுக்கும் ஆர்வம் மேலோங்கலாயிற்று. மரபுக் கல்விப் பள்ளிகளிலும் மிசனரிப் பாடசாலைகளிலும், ஈழத்துப் புலவர்களது நூல்கள் கற்பிக்கப்படலாயின. பாடப் புத்தகங்க ளில், ஈழத்துப் புலவர்களது செய்யுட்கள் இடம்பெறலாயின. இவை யாவும், ஈழத்தில் புலவர் வரலாறு எழுதுகைக்கும், புலவர் பலரது செய்யுட்களைத் தொகுக்கும் முயற்சிக்கும் ஊக்கிகளாய் அமைந்தன எனலாம்.

காலனிய காலத்தில், தமிழ்நாட்டு நரசிங்கபுர வீரசாமி முதலியார், 'யாழ்ப்பாணம் ஒரு சிறுநூலையேனும் ஒரு சிற்றுரையையேனுஞ் செய்குநரில்லாத தேசம்' (ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, 1996:142) எனக் குறிப்பிட்டு எழுதிய பிரசுரம் ஒன்று, நாவலரின் கடுமையான கண்டனத்திற்கு உள்ளானது. 'நல்லறிவுச் சுடர் கொளுத்தல்' என்ற தலைப்பில், முதலியாரின் பிரசுரத்தை நாவலர் கொளுத்திப்போட்டார். யாழ்ப்பாணத்தின் புலமைத்திறனையும் அதன் வரலாற்றையும், விரிவாகவும் ஆழமாகவும் உரைத்துப் புத்தி புகட்டியிருந்தார் நாவலர். நாவலரது இந்த முயற்சியை ஈழத்துப் புலவர் வரலாறு எழுதுகையின் ஒரு தொடக்கப் புள்ளியாக நாம் குறித்துக்கொள்ளலாம். அதன் தொடர்ச்சியாகப் புலமையாளர் பலரும் புலவர்களின் வரலாறுகளை எழுதுவதிலும் அவர்களது கவிதைகளைத் தொகுப்பதிலும் அக்கறை காட்டினர்.

●

ஈழத்தில், புலவர் பலரின் சரிதக் குறிப்புகளைத் தருவதிலும், கவிதைகளைத் தேடித் தொகுப்பதிலும் முன்னோடியாக விளங்குபவர், 'நியாய இலக்கணம்' (1850) எனும் நூலின் ஆசிரியரும் காலனியத் தமிழ்ப் புலமையாளரும், முத்துக் குமார் சிதம்பரப்பிள்ளை என இயற்பெயர் பூண்டவருமான வில்லியம் நெவின்ஸ் (William Nevins 1820 - 1889) என்பவரே. அவர், 'செந்தமிழ் ஆசிரியரின் சில நூல்களிலே தெரிந்து கொண்ட இலக்கிய சங்கிரகம்' (The Classical Reader or Selections from Standard Tamil Authors) என்ற பெயரில் அமைந்த பாடநூல் ஒன்றை உருவாக்கினார். இந்நூல், வட்டுக் கோட்டை மிசனரியால், வித்தியாசாலைப் பயிற்சிநெறியின் பொருட்டு, 1847-ஆம் ஆண்டு, யாழ்ப்பாணம் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியாகியது. புலவர் பலரது செய்யுட்களை, முதன்முதலில் திரட்டித் தரும் இந்நூலின் 'முகவுரை' வருமாறு.

'இலக்கிய சங்கிரகம் என்னும் இந்நூல், முக்கியமாயும் பிரதானமாயும் வட்டுக்கோட்டையிலுள்ள வித்தியாசாலையின் பயிற்சிக்காகவே இயற்றப்பட்டது. இத்தேசத்தாருக்குள் மிசியோன் வேலை முயற்சிகளுக்குப் பக்குவப்படுகின்ற வாலிபர், செந்தமிழ் நடைகளை நன்குணர்ந்தவர்களாய் வருவதே, முக்கியமான விஷயம் என்பதை மேற்சொல்லிய வித்தியாசாலையின் பராபரிப்புக்காரர் நெடுங்காலமாகக் கண்டு ணர்ந்தனர். இவ்வூரிலுள்ள செந்தமிழ் நூல்களைச் சாராமல், கொண்ட நோக்கத்தை அதிக வாய்ப்பாய் முடிப்பது எவ்வா றெனத் தோன்றிலது. தமிழ் நூல்களுமோ, அவற்றினுட் பொதிந்திருக்கும் சன்மார்க்க விபரீதமும், அஞ்ஞான விலா சமுமான பொருட்டுறைகளினிமித்தம் திரட்டிப் பார்க்கு மிடத்து, முற்றும் அங்கீகரித்தற்கு இடனானவைகள் அல்ல. ஆனதால், தமிழ் நூல்களை முற்றும் விலக்கி வைப்பது, அன்றேல் அவற்றிற் சிலவற்றைத் தெரிந்துகொண்டு கற்பிப் பதே ஏற்ற சேமமான வழியாகத் தோன்றினது. இவ்விருவழியுட் பின்னைய வழியே நன்மை எனத் தெரிந்துகொள்ளப்பட்டது. இது சேமம் மாத்திரம் அல்ல. அதிக யோக்கியமுமானது என விளங்கிற்று.

வித்தியாசாலையில் உள்ள மாணாக்கரின் மனோகரணங்க ளைத் திருத்தவும், தமிழை நன்றாய் விளங்கிப் பேசி ஒருவாறு அதன் இலக்கண சம்பந்த முதலியவைகளையுந் தெளியும்படி உணர்த்தவும், முற்றும் இவ்வூரின் முறையாய்க் கற்பதால் எங்கும் ஏறிச் செறிந்திருக்கின்ற நஞ்சை மீட்டற்கான ஔஷதத்தை ஒருமட்டுக்கு அம்மாணாக்கரின் மனங்களிலே புகட்டவும், ஓர் ஏதுவாய் வருவிக்கும்படியாகவே. இந்நூலை வித்தியாசாலையிலே கற்பிக்கும் வகையிற் கொண்ட நோக்கமாயினது. இந்நூலானது, எத்திறத்த வித்தியாரம்ப சாலைகளிலேயும் உபயோகமானதாய் இருக்கும் என்று நம்புகிறோம்' (1847:iii)

மேற்குறித்த முகவுரைப் பகுதியானது, வித்தியாசாலைக் கல்விப் பயிற்சியும் பொருட்டும், அதனூடாகச் சமயப் பிரசாரகர்களைத் தயார்படுத்தும் பொருட்டும், சைவத்தி லிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறிய மாணவர்களை இலக்குப் பயனாளர்களாகக் கொண்டு, இத்திரட்டு உருவாகியதை உறுதிப்படுத்துகிறது. பாரதம், நைடதம், கந்தபுராணம், காசி காண்டம், இராமாயணம், நீதிநெறி விளக்கம், நாலடியார், திருக்குறள், பெரிய புராணம் ஆகிய நூல்களின் செய்யுட் பகுதிகள் இத்திரட்டில் உள்ளடங்கின. எனினும், இப்பகுதி கள், 'சன்மார்க்க விபரீதமும், அஞ்ஞான விலாசமுமான பொருட்டுறைகள்' கொண்டவை எனக் குறிப்பதால், எதிர் நிலைச் சமய வியாக்கியானத்திற்கான கல்வியூட்டலே, திரட் டின் நோக்கம் என்பது தெள்ளிதில் புலனாகிறது. ஆகையால், 'சேமமானதும் யோக்கியதையானதும் நஞ்சை மீட்கும் ஔஷதமானதுமாக' இத்திரட்டு அமைந்திருக்கிறது. ஈழத்துப் புலவரது செய்யுள் ஒன்றுகூட, இத்திரட்டில் இடம்பெற வில்லை. எதிரும் புதிருமான காலனியச் சமய விவாதங்கள், மேற்குறித்த நூற் பொருண்மைகளை அடியொற்றிக் கட்டமைக்கப்பட்டமையே அதற்குக் காரணம் எனலாம். எவ்வாறாயினும், புலவர் பலரின் செய்யுட்களைத் தொகுப்பதி லிலும் புலவரது குறிப்புகளை வரைவதிலும் முன்னோடி முயற்சியை ஈழத்தில் ஆரம்பித்து வைத்தவர் வில்லியம் நெவின்ஸ் அவர்களே என்பதில் ஐயுறலுக்கு இடமில்லை.

●

நெவின்சுக்கு அடுத்தபடியாக இத்தகைய திரட்டு முயற்சியில் இறங்கியவர், சைமன் காசிச்செட்டி (1807 - 1860). அவர் ஆங்கிலத்தில் எழுதிய 'தமிழ்ப் புளூராக்' (The Tamil Plutarch Containing A Summary Account of The Lives of The Poets and Poetesses of Southern India and Ceylon from the Earliest to the Present time, with Select Specimens of Their Compositions) 1859-ஆம் ஆண்டு வெளிவந்தது. இதனை Jaffna: Ripley & Strong என்ற நிறுவனம் வெளியிட்டது. இந்த

நூலின் இரண்டாம் பதிப்பு 1946-ஆம் ஆண்டு வெளிவந்தது. இதனை, கொழும்பு ஜெனரல் பப்ளிஷர்ஷ் லிமிடெட் வெளியிட்டது. செட்டியவர்களின் வரலாறையும் பணிகளையும், ஆய்வாளர் ஞானம் பாலச்சந்திரன் அவர்கள் தாம் எழுதிய, 'சைமைன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள்' (2015) என்ற நூலில் செம்மையாகத் தந்துள்ளார். செட்டியவர்களின் புளூராக் நூலின் இரண்டாம் பதிப்பிற்கான அணிந்துரையில் சுவாமி விபுலானந்தர் கூறும் பின்வரும் செய்தி கவனிக் கத்தக்கது.

'இந்தப் படைப்பிற்கு ஆசிரியர் வழங்கிய பெயர், பண்டைய கிரேக்க மற்றும் ரோமின் உயர் மானுடர்களின் இணையான வாழ்க்கையை எழுதிய, புகழ்பெற்ற ஆசிரியருக்கு ஓர் அஞ்சலியாக இருக்கலாம்' (16.12.1946)

சைமன் காசிச் செட்டி அவர்கள், தமிழுக்கு நன்கொடையாக, 'தமிழ்ப் புளூராக்' (The Tamil Plutarch) என்பதை அளிக்க, ஊக்கியாக இருந்தவர், கிரேக்க வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் Plutarch என்பவரே எனப் புலனாகிறது. ஐரோப்பிய நாகரித்தின் தொட்டில் எனப் புகழ்பெறும் தொல்சீர் கிரேக்க மற்றும் ரோமானிய வாழ்க்கைச் சரித நூலினூடாக உந்தப் பெற்றமையாலேயே, தமது நூற்பெயரின் பின்னொட்டாக கிரேக்க ஆசிரியரின் பெயரை செட்டியவர்கள் இட்டார் எனத் தோன்றுகின்றது. இதன் மூலமாக, தமிழில் ஒரு புது முயற்சி யைத் தொடங்கும்போது அவருக்கிருந்த, பரந்து விரிந்த உலக வரலாற்றுப் பார்வை புலனாகிறது. தமிழ்ப் புலவர்களும் சீமான்கள்தான்! தமிழ்ச் செல்வத்தை ஆண்ட சீமான்கள்! அந்தச் சீமான்களின் சரிதைதான் தமிழ்ப் புளூராக்!

சைமன் காசிச்செட்டி அவர்கள், இந்த நூல் முயற்சியை ஆரம்பித்து, விடயதானங்கள் இல்லாமையால், கைவிட எண்ணியதை அவரது முன்னுரை உணர்த்துகிறது. ஆங்கி லத்தில் அமைந்த அந்தப் பகுதியின் தமிழாக்கம் வருமாறு.

'வலிமைமிக்க சாதனமான பத்திரிகை, மற்றைய இடங்களைப் போலவே, இந்தியாவிலும் மிகப்பெரிய ஆசீர்வாதத்தை நிரூபித்துள்ளது. ஒருபுறம் பண்டைய பூர்வீக இலக்கியத்தின் எச்சங்களை மறதியிலிருந்து மீட்பதன் மூலமும், மறுபுறம் ஐரோப்பியக் கலை மற்றும் அறிவியல் பற்றிய ஏராளமான வெளியீடுகளால் அதை வளப்படுத்துவதன் மூலமும் நமது புலவர்களின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை மக்களுக்கு வழங்குவது எனது நீண்டகால நோக்கம். ஆனால், பண்டைய அல்லது நவீன தமிழில் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள் இல்லை. விடயதானங்களைப் பெறுவதில், அவர்க ளுக்கு ஏற்பட்ட சிரமங்களே அதற்குக் காரணம். நான் கணக் கிட்டதைவிடவும் அவை அதிகமானவை. இந்த முயற்சியைக் கைவிடலாம் எனக் கிட்டத்தட்ட முடிவு செய்தேன்.' (1859:v)

இத்தகைய ஒரு சூழலில்தான், Plutarch எழுதிய Parallel Lives என்பது அவருக்குக் கைகொடுத்திருக்க வேண்டும். கிரேக்க, ரோமானியக் கதைகளைத் தழுவி, வாழ்க்கை வரலாறு வடிக் கும் முயற்சி போன்ற ஒரு முயற்சியை, அவர் தமிழ்ச் சூழலில் மேற்கொண்டார். ஆங்கிலத்தில் அமைந்த அவரது கூற்றின் தமிழாக்கம் வருமாறு.

'கீழைத்தேய மக்களிடையே நிலவும் வாழ்க்கை வரலாறு பற்றிய கதை மரபுகள், அகமகிழ்வுக்குரிய கற்பனையான மற்றும் அலங்காரமான சேர்க்கைகள், கவனமாகச் சேகரிக் கப்பட்டு, அவதானமாகப் பிரிக்கப்பட்டால், விரும்பிய தகவல் களை வழங்கும் என நம்பினேன். ஆழ்ந்த நம்பிக்கையால், அந்த அறிவு மூலத்தில் என் கவனத்தைச் செலுத்தத் தூண்டப் பட்டேன். இத்தகைய எல்லாச் சீரின்மைகளின் விளைவு இப்போது மக்கள் முன் உள்ளது. இந்தப்படைப்பு இந்த வகையான எனது முதல் முயற்சியாக இருந்தாலும், எனது விழிப்புணர்வையும் மீறிய பல தவறுகளுக்கும் உட்பட்டதாக இருக்கலாம். இதற்காக நான் வாசகர் மற்றும் விமர்சகரின் அன்பைக் கோருகிறேன். (1859:v)

ஈழத்தைப் பொறுத்தவரையில், தமிழ்ப் புலவர் சரிதங்களைத் தொகுத்து அகர வரிசையில் கூற எழுந்த முதன் முயற்சியாக, சைமன் காசிச் செட்டியின் முயற்சி விளங்குகிறது. இது ஆங்கில மொழியில் எழுதப்பட்டது. அகஸ்தியரிலிருந்து யாழ்ப்பாண நாயனார் வரை 196 புலவர்களின் வரலாற்றுக் குறிப்புகளை 138 பக்கங்களில் இந்நூல் விபரிக்கிறது. புலவர்களுடன் தொடர்பான அறிஞர்கள் பற்றியும் வருவதால் எல்லாமாக 202 ஆளுமையாளர்களை இந்நூல் விபரிக்கிறது என்பார் பொ. பூலோகசிங்கம் (2001:xiii-xiv). இதில் 189 புலவர்கள் தமிழ்நாட்டவர்கள். 13 புலவர்கள் ஈழத்தவர்கள். ஈழத்துப் புலவர்களில் சேனாதிராயர், சின்னத்தம்பி ஆகிய இருவருக்கும் ஒவ்வொரு பாடல் இடம்பெற்றுள்ளது.

தமிழ்ப் புளூராக்கின் இரண்டாவது பதிப்பிற்கு, சுவாமி விபுலானந்தர் ஆங்கிலத்தில் எழுதிய அணிந்துரையில், இந்த நூலைத் தமிழ்ச் சூழலின் முதலாவது முயற்சியாக அடை யாளம் காண்கிறார். அத்துடன், தமிழ் இலக்கியக் கல்விக்குப் பயன் சேர்க்கும் நூலாக இது அமைகிறது எனக் கூறுவதோடு, தமிழ்க் கவிதைகளைச் செம்மையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் நூலாசிரியரின் மொழித் தேர்ச்சியையும் வியக்கிறார். அதனைத் தமிழ்ப்படுத்தி இங்கு தரலாம்.

'தென்னிந்தியா மற்றும் இலங்கையின் கவிஞர்கள் மற்றும் கவிஞர்களின் வாழ்க்கைச் சுருக்கமான விவரணையை சைமன் காசிச்செட்டி என்பவர் எழுதிய தமிழ்ப் புளூராக் முதன் முறையாக 1859-இல் வெளிப்படுத்தியது... தமிழ் இலக்கி யத்தைக் கற்கும் மாணவர்கள் நிச்சயமாக அதைப் படிப்பதன் மூலம் மகிழ்ச்சியையும் பயனையும் பெறுவார்கள். எடுத்துக் காட்டப்பட்ட தமிழ்க் கவிதைகளின் சிறந்த ஆங்கில மொழி பெயர்ப்புகள் ஆசிரியரின் ஆங்கில மொழியின் தேர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. (16.12.1946)

●

அ. சதாசிவம்பிள்ளை அவர்கள் (J.R. Arnold, 1820 - 1896) எழுதிய பாவலர் சரித்திர தீபகம் 1886-ஆம் ஆண்டு வெளிவந்தது. ஆங்கிலத்தில் The Galaxy of Tamil Poets எனும் பெயரினை அது பெற்றிருந்தது. இந்நூலின் வரலாற்று முக்கியத்துவத்தை, பொ. பூலோகசிங்கம் அவர்கள் 'தமிழ் மொழியில் வெளிவந்த முதலாவது தமிழ்ப் புலவர் சரிதநூல் பாவலர் சரித்திர தீபகமாகும்' (2001: xii) எனக் குறிப்பார். இந்நூலில் 410 புலவர்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவர்களுள் 82 புலவர்கள் ஈழத்தவர்கள். 328 புலவர்கள் தமிழ்நாட்டவர்கள். இந்த நூலை எழுதியதன் பின்னணி குறித்து, தாம் எழுதும் 'பாயிரம்' என்ற பகுதியில், அ. சதாசிவம்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'ஆங்கிலேயர் வரவோடு அவள், தலையை நிமிர்த்திக் கண்ணீர் துடைத்து மணக்கோலங்கொண்டு தாலியை எடுத்துத் தன் கழுத்திற் தொடுத்தாள். மிஷனரிமார் ஒருபாலும் அரசாட்சியார் மறுபாலுமாய் அவளுக்குத் தாதியரும் தோழியருமாகி அக்கம் பக்கம் பவனிவர, அச்சியந்திரசாலை ஒருபுறமும் வித்தியாசாலை மறுபுறமுமாய் நின்று கைலாகு கொடுத்து உடன் செல்ல, குருச்சந்திரயோகம் பிறந்ததால் அவளும் ஓய்யாரமாய், மயிலஞ்சாயலோடு சர்வாபரண அலங்கிருதமாய் அன்ன நடை நடந்து கன்னல் மொழி கூறி, மறுபடியும் பழையபடியே யாரையும் வசீகரணப்படுத்தத் தொடங்கினள். தேடுவாரின்றிச் செல்களுக்கு உணவாய் மூலைக்கு மூலை துயின்று பூசணம் பிடித்துக் கிடந்த புத்தகங்களை எடுத்துப் பரோபகாரிகளும் தேசோபகாரிகளும் தொடைத்துக் காற்றுப்பட வைத்துக் கரலிகித அபத்தம் போக்கி யந்திரங்கள் மூலமாய் வெளியிட்டனர். சவாசு! சந்தோசம்!

ஆயின், அம்ம! அம்ம! ஓர் பெருங்குறை கண்டோம். எத்துணைக் கிரந்தங்கள் அச்சியந்திரவழியாய் வெளிவந்தும், எத்துணை நூல்கள் தினோதயம் கண்டும் அன்னோ! அவ்வந் நூல்களைத் தந்து, பூத உடம்பு இறந்தும், புகழுடம்பு இறவாது வைத்துப் போன புலவர்களின் சரிதசங்கிரகமொன்றை இது வரை யாரும் செய்திருக்கக் காணோம்! காலஞ்சென்ற செல்வச் சீமானாகிய சைமன் காசிச்செட்டித்துரை ஒன்று தந்தனராயினும் ஆங்கிலபாடை கற்றார்க்கன்றி மற்றோர்க்கு அது உபயோகப்படாது போயிற்று. அன்றியும் அவர் தந்தது கசுசு (144) பேர் சரிதம் மாத்திரமே.

ஆதலினாலன்றோ இப்பாவலர் சரித்திர தீபத்தை ஏற்றி, அந்தகாரக்குப்பாயம் போர்த்து அஞ்ஞாத வாசஞ் செய்த பாவலர் நாமங்களைத் தனித்தனி ஒன்றொன்றாய்த் துருவிப் பொறுக்கி, அரிவரிப்படுத்தி அச்சீமான் தந்த தொகைக்கு மேட்படப் பின்னும் இருநூற்றுப் பதினான்கு சேர்த்து மொத்தம் சக0 (410) பாவலர் நாமங்களைத் தந்தோம்.' (சதாசிவம் பிள்ளை, அ., 1886:iii)

மேற்குறித்த கூற்றிலிருந்து, அ. சதாசிவம்பிள்ளைக்கு முன்னோடியாக விளங்கியவர் சைமன் காசிச்செட்டியே என்பது புலனாகிறது. ஆங்கிலேயர் வருகை, அதனால் அறிமுகமாகிய அச்சியந்திரம், அதனால் உருவாகிய விரிந்த தமிழ் அச்சு வெளி, அவற்றால் புதிதாகத் தோன்றிய நூற் பதிப்புப் பழக்கம், அவற்றைப் பயன்படுத்தி மிசனரிகள் மேற்கொண்ட கல்விப் பணிகள், புதிதாகத் தோன்றிய வித்தியாசாலைகளின் பாடநூலாக்கச் செயற்பாடுகள் போன்றவை, பாவலர் சரித்திர தீபகத்தின் எழுகையைத் தீர்மானித்ததை, பாயிரப் பகுதி வாயிலாக அறியமுடிகிறது. ஆகையால், 'பூத உடம்பு இறந்தும், புகழுடம்பு இறவாது வைத்துப் போன புலவர்களின் சரித சங்கிரகம்' என்ற நிலையில், பாவலர் சரித்திர தீபகத்தை சதாசிவம்பிள்ளை எழுதினார் என அறியமுடிகிறது. சைமன் காசிச்செட்டி, தமிழ்ப் புளுராக்கை ஆங்கிலத்தில் எழுதியதால், ஆங்கிலம் கற்காதவர்களுக்கு உபயோகமற்றதாய் இருந்தமையால், அஞ்ஞாத வாசஞ் செய்த புலவர் நாமங்களை அகரவரிசைப்படுத்தி, சைமன் காசிச்செட்டி வரிசைப் படுத்திய புலவர்களையும் உள்வாங்கி, தமது நூலை அவர் உருவாக்கினார் என அறியமுடிகிறது. பாவலர் சரித்திர தீபகம், புலவர்களின் வரலாறுகளையும், அவர்கள் பாடிய பாடல் களிலிருந்து ஒரு சில பாடல்களையும் கொண்ட மைந்தது.

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் (1855 - 1922) எழுதிய 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்ற நூல் 1916-ஆம் ஆண்டு வெளியாகியது. இந்த நூல் 'இராமநாதபுர... ராஜ ராஜேஸ்வர சேதுபதி மஹாராஜா அவர்களின் செந்தமிழ்ப் பரிபாலன விருப்பமும் சிரத்தையும் நோக்கி' எழுதப்பட்டது என்பதை நூலின் முதற்பக்க முகப்புத் தெரிவிக்கிறது. இதன் முதலாவது பதிப்பு யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டது. முதற்பதிப்பில், தமிழ்நாடும் ஈழமும் உள் ளடங்கலாக 172 புலவர்களது சரிதக் குறிப்புகளும் அவர்களது செய்யுட்களும் இடம்பெற்றுள்ளன. குமாரசுவாமிப் புலவர், தமது நூலுக்கு எழுதும் 'உபக்கிரமணிகை'யிலிருந்து ஒரு பகுதியை இங்கு நோக்கலாம்.

'புலவர் கதைகளுட் சில சில பாகமும், அதனோடு சம்பந்தமுடைய சிலசில கவிகளும், பிரபந்தநாமாதிகளும் வரல் நோக்கி இதனைச் சரித்திரம் என்றாம்... இச்சரித்திரம் வித்தைக்கண் விருப்புடைய பாலகர்பொருட்டுச் செய்தது. பூரணம் பெறச் செய்த ஒரு சரித்திரமன்று. வித்தையின் விருத்திக்கு நன்கு பயன்படாமையும் விரிந்து நீளுதலும் நோக்கித் தெரிந்த சரித்திரங்களுள்ளும் சில பல சரித்திரங்களை வரைந்து சேர்த்திலம். புலவர்களுள்ளும் இலக்கிய இலக்கண வுணர்ச்சியிலே தக்கவர் என்றும், நூலுரைகள் செய்தலிலே மிக்கவர் என்றும், பல்வகைக் கவிகளையும் பாடுதலிலே வல்லவர் என்றும் எமக்குப் புலப்பட்ட புலவர்களையே பெரும் பாலும் ஈண்டுக் கூறினாம். சரித்திரம் நன்கு புலப்படாப் புலவர்களுட் பலர் நாமங்களை இதன் முடிவிற் காட்டினாம். அவைகளையும் நோக்கி ஆராய்க.' (1951:6-7)

மேற்குறித்த பகுதி, புலவர் வாழ்க்கைக் குறிப்புகள், அவற்றோடு தொடர்புற்ற கவிதைகள், அவர்களாக்கிய பிரபந்தப் பெயர்கள் ஆகியவற்றைக் கூறுவதன் காரணம் நோக்கியே, புலவர் தமது நூலைச் சரித்திரம் எனக் குறித்தார் என்பதையும், கல்வி நோக்கம் கருதியே இந்நூலாக்கம் இடம்பெற்றது என்பதையும், இலக்கிய இலக்கண உணர்ச்சித் தகைமை, நூலுரையாக்கப் புலமை, பல்வகைக் கவிபாடும் திறமை ஆகிய மூன்றையும் அளவுகோல்களாக்கியே நூலுள் புலவர்கள் அடக்கப்பெற்றார்கள் என்பதையும் சரித்திரம் அறிய இயலாத புலவர்களே நூலின் இறுதியில் அகரவரிசையாகக் குறிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது. அரசர் மற்றும் பிரபுக்கள் புலவர்களுக்குச் செய்த உபசாரங்களை அறிய உதவுதல், பல்வகை நூல்கள், சொல்லணிகள், பொருளணிகள் அறிய உதவுதல், புலவர்களையும் அவர்களது நூல்களையும் தேடிக் கற்க உதவுதல், நன்னெறிக்கண் நிற்க உதவுதல், தமிழ் ஆராய்வோருக்குப் பரிசீலிக்க உதவுதல். பாடஞ் சொல்லவும் பா எழுதவும் வழிகாட்டுதல் ஆகியவற்றையும் சரித நூல்களின் பண்பும் பயனுமாகப் புலவர் குறிப்பிட்டுள்ளார் (1951: 6-7).

புலவரது உபக்கிரமணிகையை முழுவதுமாக வாசிக்கும் போது, அவர் புலமை தொடர்பாகக் கூறுபவை, வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளது புலமை இலக்கணத்தோடு பொருந்திச்செல்வதை அவதானிக்க முடிகிறது. புலவரது உபக்கிரமணிகையில், சரிதவாக்கத்தின் சிரமம் குறித்த பல செய்திகள் புலப்படுகின்றன. இவ்விடத்தில், 'புலவர் சிலருடைய நாடு, நகர், குலம், சமயம், காலம், நூலுரிமை, கவி,

கவிப்பாடம், கதை முதலியவைகளிலே சரித்திரகாரர் பலர் தம்முள்ளே முரணுவர்' (1951: 8) எனும் செய்தியையும், 'சரித்திரகாரர் பலர் ஒருவர் சென்ற வழியே ஒருவர் சேறலைத் தழுவிச் சென்றமையானும், வேறு வழி தெரியாமையானும் புல வர் சரித்திரங்களில் இங்கனமாய் மாறுபாடுகள் சம்பவித்தல் பெரும்பான்மையாகும்' (1951: 12-13) எனும் செய்தியையும் குறிப்பிடலாம். புலவர் தமது நூலுக்கான தரவுகளைப் பெற்ற வாற்றையும், விரிவாகவே தமதுரையில் குறிப்பிடுகிறார். (பார்க்க: 1951: 14-18)

தமிழ்ப் புலவர் சரித்திரத்தின் ஆசிரியர் அ. குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள் 1922-இல் காலமானார். அவர் காலமாகி 29 ஆண்டுகளின் பின்னர், அதாவது, முதற்பதிப்பு வெளிவந்து 35 ஆண்டுகளின் பின்னர், அவரது புதல்வர் வித்வான் கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், தமது தந்தை யார் குமாரசாமிப் புலவர் எழுதி வெளியிட்ட நூலிலே, மேலும் 26 புலவர்களது சரிதக் குறிப்புகளையும் செய்யுட்களையும் உள்ளடக்கி, 208 புலவர்களின் சரித்திரமாக அதை விரிவாக்கி, 1951-ஆம் ஆண்டு இந்த நூலின் இரண்டாவது பதிப்பை வெளிக்கொணர்ந்தார். இது கொக்குவில் சோதிட பரிபாலன மடம் ச.இ. சிவராமலிங்கையரால், சோதிடப்பிரகாச யந்திர சாலையில் அச்சிடப்பட்டது. இவ்விரு பதிப்புகளிலும் யாழ்ப் பாணத்தரசர் காலத்திலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரையும் வாழ்ந்த ஈழத்துப் புலவர்களில், 37 புலவர்களின் சரிதங்களும் அவர்களது தேர்ந்த செய்யுட்களும் இடம்பெற்றுள்ளன.

வித்வான் கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், தாம் 1951-ஆம் ஆண்டு வெளியிட்ட இரண்டாவது பதிப்பின் முகவுரையில், 'முதலாம் பதிப்பிற் (1916) சேர்க்கப்படாத புலவர்களுள் 1916-ஆம் ஆண்டுக்கு முன் வாழ்ந்த இருபத் தறுவருடைய சரித்திரங்கள் புதிதாக இப்பதிப்பிற் சேர்க்கப் பட்டுள்ளன' என்கிறார். அவரது தந்தையார் 1916-ஆம் ஆண்டு வெளியிட்ட முதற்பதிப்பு வெளிவந்த கால எல் லையை மீறாது அதற்குள் நின்று செயற்பட்டிருக்கிறார் என அவர் தெரிவிக்கிறார். அதாவது, தந்தையாரது நூல் வெளி வந்த காலம் வரையும் வாழ்ந்து புகழுடம்பெய்திய புலவர் களில், தந்தையாரது நூல் உள்வாங்காத புலவர்களை, தந்தையார் வழிநின்று தனயன் சேர்த்துள்ளார் என்ற உன்ன தத்தைப் புரிந்து கொள்ளலாம். இது, மூலநூல் எழுதியோனின், தொகுத்தோனின் நெறிமுறையைக் கண்ணியப்படுத்தி, ஏற்றுக் கொண்டு, அதன்வழி நடக்கிற ஒரு புலமை நேர்மை. இந்த நேர்மை, ஈழத்தில் வாழ்ந்த அக்காலப் பண்டிதப் பரம்பரை யினரிடம் இருந்த ஒரு உன்னத ஒழுகலாறு. இது நேர்மை மாத்திரமன்று, புலமைசார் ஒரு தொகுப்புநெறிக் கடமை. ஒருவர் செய்த பதிப்பைத் திருத்திய பதிப்பாக வெளியிடும் போது, முதற்பதிப்பில் நூலாசிரியர் கொண்ட நோக்கத்தின் தாரதம்மியத்தைச் சரிவரப் புரிந்துகொண்டு, அவர் சரிதம் செய்த அல்லது தொகுத்த, கால எல்லையை மீறாது, அதற்குள் நின்று அதை மீள்பதிப்புச் செய்யவேண்டும் எனும் புலமை அறத்தையே அவரது கூற்றுத் தெளிவித்து நிற்கிறது.

•

மட்டக்களப்பு புளியநகர் ச. பூபாலபிள்ளை அவர்கள் (1856 - 1921) எழுதிய தமிழ் வரலாறு என்ற நூல் 1920-ஆம் ஆண்டு வெளிவந்தது. தமிழ்ப் புலவர் சரித்திரத்தின் முதலாம் பதிப்பு (1916) வெளிவந்து, நான்கு ஆண்டுகளின் பின்னர் ச. பூபாலபிள்ளையின் நூல் வெளிவருகிறது. இன்னொரு வித மாகச் சொன்னால், தமிழ்ப் புலவர் சரித்திரத்தின் இரண்டாம் பதிப்பு (1951) வெளிவருவதற்கு 31 ஆண்டுகளுக்கு முன்னர் அவரது நூல் வெளிவந்துவிட்டது.

தமிழ் மொழி, இலக்கிய, இலக்கண வரலாற்றில், இந்த நூலை முன்னோடி முயற்சியாகக் கொள்வோரும் உளர். இந்த நூலை இராமநாதர் அருளம்பலம் என்பவர், 'மட்டுநகர் சுத்தரத்வைத யந்திரசாலை' அச்சகத்தில் பதிப்பித்து வெளியிட்டார். ஆங்கிலத்தில், தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்பட்டுவந்த காலனியத் தமிழ்ச் சூழலில், தமிழில் எழுதப்பட்ட, இத்தகைய, தமிழ் மொழி மற்றும் இலக்கிய வரலாற்று நூல் அதிக கவனிப் பைப் பெற்றது. அக்கவனிப்பை, ஈழநாடு மற்றும் தமிழ்நாட்டுப் புலவர்கள் தமக்குள் பரிமாறிக்கொண்ட பல கடிதங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அவர்களது கடிதப் போக்கு வரத்துச் செய்திகள் பலவற்றை, இப்போது எம்வசமுள்ள கடிதச் சேகரிப்புக் கிடங்கில் இருந்து எடுத்துக் காட்டி எழுத இயலும். அவ்வாறு எழுதினால். இந்த வியாசம் இன்னும் நீளலாம் என்ற அச்சத்தில், இதை இந்தளவோடு நிறுத்தி, வரலாற்றுக்குத் தேவையான செய்தியாக ஒரு கடிதத்தை இங்கே நாம் வாசிக்கலாம்.

மட்டுநகர் ச. பூபாலபிள்ளை அவர்கள், மட்டக்களப்பு என முகவரியிட்டு, 05.01.1920 அன்று சுன்னாகம் அ. குமார சுவாமிப் புலவருக்கு எழுதிய கடிதம் வருமாறு.

ஸ்ரீ.ஆ. குமாரசாமிப்பிள்ளை அவர்களுக்கு

அன்பார்ந்த ஐயா,

தமிழ் மாணவர்களுக்கும் பிறர்க்கும் உபயோகப்படும்படி 'தமிழ் வரலாறு' என்னும் ஒரு நூலை எழுதினேன். ஸ்ரீ.இ. அருளம்பலம் அவர்கள் அதனை அச்சிடுகிறார்கள். இந் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் ஒன்று வேண்டப்படுகிறது. இலங்கையிலுள்ள தமிழ் வித்துவ சிரோமணிகளுள் தற்காலம் தாங்களே தலைமையானவர்கள் என்று யாவரும் கருதுவதால் பரோபகாரப்பொருட்டு வெளிப்படுத்தும் இத்தகைய நூல்க ளைப் பரிசோதித்து மதிப்புரை கொடுப்பது தங்கள் கடமை யாகும். தங்கள் சிறப்புரை நூலையுங் கண்ணியப் படுத்தும். பிரகடன விஞ்ஞாபனத்தைக்கொண்டு நூலின் விபரங்கள் தெரிந்து கொள்ளலாம்... புத்தகம் முடிந்த அதன்பின் தங்கள் கண்ணோட்டத்திற்கு அனுப்பிச் சிறப்புப் பாயிரம் பெறுவதா யின், புத்தகவேலை மிகவும் சுணங்கும். வெளிவரவேண்டிய காலம் சுணங்கிவிட்டது. ஆகையால் சீக்கிரம் வேலை முடித் துப் புத்தகம் வெளிவர வேண்டும். இதுவரையில் அச்சிட்டு முடிந்த நூறு பக்கங்கள் வேண்டுமாயின் தங்களுக்கு அனுப் பிவைப்பேன். தயவுசெய்து ஒரு சிறப்புப் பாயிரம் எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.'

மேற்குறித்த கடிதப் பரிவர்த்தனையின் முக்கியத்துவம் என்ன. அதை நோக்குவோம். இக்கடிதத்தை வெறுமனே சிறப்புப் பாயிரம் கோரும் ஒரு கடிதம் எனக் கடந்து செல்ல முடியவில்லை. இக்கடிதம் ஏதோ ஒரு வரலாற்றுச் செய்தி யைச் சொல்கிறது. புலவர் சரிதை (வரலாறு) எழுதிய ஒரு வரிடம், தமிழ் இலக்கிய வரலாறு எழுதுபவர் கேட்கும் பாயிரம் என இதனை நாம் வாசிக்க வேண்டும். இது ஒரு வரலாற்றுப் பயணத்தை உணர்த்துகிறது. புலவர் சரிதை எழுதுதலும் இலக்கிய வரலாறு எழுதுதலும் ஏறக்குறைய ஒரே காலத்தில்

ஆரம்பிக்கும் நிகழ்வுகள் என்பதை நாம் உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்தால், 'தனிமனித ஆளுமைகளின் வரலாற்றுத் திரட்சிதான் சமூக வரலாறு' என்பதற்கொப்ப, தமிழ்ப் புலவர் பலரது வரலாறுகளின் திரட்சிதான், தமிழ் இலக்கிய வரலாறு - தமிழ்ப் புலமை வரலாறு - தமிழ் அறிவாராய்ச்சியின் வரலாறு என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இன்னும், புலவர் வரலாறு எழுதும் பழக்கமும் தமிழ் மொழி மற்றும் இலக்கிய வரலாறு எழுதும் பழக்கமும் ஒன்றுடனொன்று கூடி ஒத்துழைக்கின்ற (collaboration) ஒரு அறிவுழைப்பு இயக்கச் செயற்பாட்டை, ஈழத்துத் தமிழ்ச் சூழலில் நாம் முதன்முதலாக அடையாளங்காண முடியும். அத்துடன், ஒன்றோடொன்று தொடர்புபட்ட, இரு புலமைத் துறைகளின் சந்திப்பையும், சங்கமத்தையும் வரலாற்றுக் கண்கொண்டு வாசிக்கும்போது, ஒன்றினை ஒன்று நாடுவதையும், ஒன்றினால் ஒன்று நிகழ்வதையும், ஒன்றினால் ஒன்று பயணிப்பதையும் உணர முடியும்.

புலவர் வரலாறு - புலமை வரலாறு - நூல் வரலாறு - மொழி வரலாறு - இலக்கிய வரலாறு என்பவற்றின் எழுகை வரலாற்றில் சமாந்தரமாக நிகழ்ந்திருப்பதை அறிய முடியும். இது ஒரு சட்டகம் போட்டுக் காட்டும் நிகழ்வு அல்ல. வரலாறு ஒழுங்கமைக்கும் நிகழ்வு, இது. பல புலமைப் பள்ளிகள் கலந்துறவாடல். அவற்றின் தமிழ்ப் பணிகள் கைகுலுக்கித் தழுவுதல். புலமைச் சரித வரலாற்றிடம், மொழி மற்றும் இலக்கிய வரலாறு என்னும் பிள்ளை, அங்கீகாரம் கோரும் நிகழ்வே இந்தக் கடிதம். இத்தகைய சூழலில்தான், ச. பூபால பிள்ளை அவர்களின் நூலின் முக்கியத்துவம் புலனாகிறது. இந்த நூல், தமிழின் அனைத்துத் துறைகளையும் அளவளாவி, தமிழின் வரலாற்றை, எழுதிச் செல்கிறது. இந்த நூலின் அரைப் பாகமாய் அமையும் 'இலக்கியவியல்' எனும் பகுதியின் இறுதியில், 12 ஈழத்துப் புலவர்கள் குறித்த சரிதைக் குறிப்புகளும் செய்யுட்களும் இடம்பெற்றுள்ளமையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. இப்போது, இலக்கிய வரலாறு எனும் பெருநீரோட்டத்தில், புலவர் பலரது வரலாறுகளும் அவர்களது படைப்புகளும், அவற்றின் வரலாறுகளும் கலந்தும் கரைந்தும் போய்விடுவதைக் காணமுடிகிறது. வரலாறு என்பதே வரலாறுகளால் உருவாவதுதான்!

(தொடரும்...)



Sutharsan.S@thaiveedu.com

சிந்தனைக் களம்
(இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்

Zoom ID: 893 6475 6425 Passcode: 499 033



சிறப்பு நிகழ்வு : 12



உரைப் பொருள்:

'இசைத்தமிழ் வரலாற்றில் சீர்காழி மூவர்'

உரையாளர்:

'கலைமாமணி' Dr. அரிமளம் சு. பத்மநாபன்
(தமிழிசை ஆய்வாளர்)



25 ஏப்ரல் 2026 சனிக்கிழமை 9:00pm-11:00pm (கனடா-ரொறன்ரோ)
25 ஏப்ரல் 2026 சனிக்கிழமை 6:00pm-8:00pm(கலிபோர்னியா)

26 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை 6:30am - 8:30am (இலங்கை, இந்தியா)
26 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை 11:00am-1:00pm(சிட்னி)

website: www.chinthanaikkalam.org **E-mail**: chinthanaikkalam@gmail.com

தமிழில் முன்னோடிப் பெண் எழுத்தும்

பண்டிதை அசலாம்பிகை அம்மையார் நாவல்களும்

கால சுப்ரமணியம்

tg.theeban@gmail.com

முன்னோடிப் புனைகதைப் படைப்பாளிகளும் பத்திரிகைகளும்:

மணிக்கொடி (1933 - 50) பத்திரிகையில் புதுமைப் பித்தன் (1906 - 48), மௌனி (1907 - 85), கு.ப. ராஜ கோபாலன் (1902 - 44), ந. பிச்சமூர்த்தி (1900 - 76), ந. சிதம்பர சுப்பிரமணியன் (1912 - 77), சி.சு. செல்லப்பா (1912 - 98) போன்றவர்கள் நவீனத் தமிழ்ச் சிறுகதையின் போக்கையும் அமைப்பையும் தீர்மானித்து சிறு கதைகளை எழுதினார்கள். தமிழ்ச் சிறுகதையின் புதுமலர்ச்சிக்கு களம் அமைத்தது மணிக்கொடி பத்திரிகை என்பதால் மணிக்கொடி காலம் சிறுகதைகளின் பொற்காலம் என்று கருதப்படுகிறது. உலகச் சிறுகதை இலக்கியத்தில் சிறுகதை வடிவத்தையும் களத்தையும் நிலைநிறுத்திய முன்னோடிகள் என்று எட்கர் ஆலன் போ, ஓ. ஹென்றி, மாப்பசான், அன்டன் செகாவ் போன்றவர்களை முதன்மையாகக் குறிப்பிடுவது போல், தமிழ் சிறுகதையை நிலை நிறுத்திய முன்னோடிகள் என்று மேலே கூறிய மணிக்கொடி எழுத்தாளர்களைக் குறிப்பிடலாம். இவர்களில் உலகத்தரத்துடன் இணை வைக்கக்கூடிய சிறுகதைகளை எழுதியவர் புதுமைப்பித்தன்.

அதே மணிக்கொடி பத்திரிகையில் சுமார் 18 பெண் எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள் என்றும் இவர்களில் பெரும்பாலோர் மணிக்கொடியால் கொண்டு வரப்பட்ட 'அத்தனையும் ஸ்திரீகள்' என்ற சிறுகதைச் சிறப்பிதழில் எழுதியவர்களே. இவர்களில் மிகச் சிலரே அவ்வப்போதும் தொடர்ந்தும் எழுதியிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. இவர்களில் நமக்கு இன்றும் தெரியவருபவர்கள் வை.மு. கோதைநாயகி (1901 - 60), கு.ப. சேது அம்மாள் (1908 - 2002), எஸ். கமலாம்பாள் (கமலா விருத்தாசலம், 1917 - 95), எஸ். விசாலாட்சி (மங்கை: 1946 - 50, குங்குமம்: 1948 இதழ்களின் ஆசிரியை) போன்ற படைப்பாளிகள் மட்டும் தாம்.

மணிக்கொடி வகை எழுத்துக்கள் பிற்காலப் பெண் படைப்பாளிகளை ஓரளவே பாதித்துள்ளன என்று தான் சொல்லவேண்டும். மணிக்கொடியை விட அன்றைக்குப் பிரபலமாக விளங்கிய ஆனந்த விகடன் (1928-), கல்கி (1941-) பத்திரிகைப் பாணி எழுத்து வகையே அக்காலத்தின் பெரும்பாலான பெண் எழுத்தாளர்களின் படைப்பாற்றலைப் போர்த்தியிருந்தது என்றே சொல்லலாம். இடைப்பட்ட சுதேசமித்திரன் (1891 - 1970), கலைமகள் (1932-) பாணியையும் இவர்கள் அதிக அளவில் கைக்கொண்டார்கள் என்றே தெரிகிறது.

பெண் எழுத்துக்கு முதன்மை தந்தும், பெண்கள் மட்டுமே அதிகம் எழுதியதுமான பத்திரிகைகளாக, சுகுணபோதினி (1883 - 88), மஹாராணி (1887), மாதர் மித்திரி (1887 - 88), பெண்மதி போதினி (1891), மாதர் மனோரஞ்சனி (1899 - 1917), சக்ரவர்த்தினி (1905-16), ஸ்ரீவாணீ விலாஸினீ (1905), கல்பதரு (1917), ஸ்திரீ தர்மம் (1917-36), தர்ம ஜோதி (1930), தமிழ் பெருமாட்டி (1934), கிரகலட்சுமி (1937), குங்குமம் (1948) போன்ற பத்திரிகைகள், தேசவிடுதலைக்கு முன்பாக, பெண்களின் முன்னேற்றத்திற்கும் பெண் எழுத்துக்கும் முக்கியத்துவம் தந்து வெளிவந்த பத்திரிகைகள் என்று அறியமுடிகிறது.

அமிர்தவசனி (1860), மாதர் மித்திரி (1887 - 88), பெண் கல்வி (1900), தி இந்தியன் லேடீஸ் மேகசின் (1901-38), தமிழ்மாது (1906), மாதர் போதினி (1911), தமிழ் மகள் (1926), ஹிதகாரிணி (1909-15), சிந்தாமணி (1924 - 30?), தமிழரசி (1929), ஜகன் மோகினி (1935 - 60), கிரகமணி (1936), மாதர் மறுமணம் (1936), நந்தவனம் (1940), மங்கை (1946 - 50), புதுமைப் பெண் (1947) ஆகிய பத்திரிகைகள், பெண்களால் பெண்களுக்கு முதன்மை கொடுத்து நடத்தப் பெற்றவை என்றும் தெரியவருகிறது.

தொடக்க கால நவீனப் புனைகதைகளை வெளியிட ஆரம்பித்த பத்திரிகைகள் விவேகசிந்தாமணி (1892), மாதர் மனோரஞ்சனி (1899 - 1917), சக்ரவர்த்தினி (1905), ஸ்ரீவாணீ விலாஸினீ (1905), விவேகபோதினி (1908), ஹிதகாரிணி (1909), சிந்தாமணி (1924), ஆனந்தபோதினி (1915) ஆகியவை. பெண் விடுதலை பற்றிய ஆரம்ப எழுச்சிகள் நடைபெற்ற காலகட்டம் இது. இப்பத்திரிகைகளில் பண்டிதை அசலாம்பிகை அம்மையார் போன்ற சில பெண்கள் கட்டுரைகள் எழுதிவந்தாலும் கதைகளை எழுதியவர்கள் மிகக் குறைவே.

•



கமலா விருத்தாச்சலம்
(எஸ். கமலாம்பாள்)



வை.மு.கோதைநாயகி
அம்மாள்

முன்னோடிச் சிறுகதைகளில் பெண் எழுத்தின் பங்கு:

தமிழில் சிறுகதை வடிவம் எவரால் முதலில் நிலைநிறுத்தப் பட்டது என்பது குறித்து விவாதங்கள் உள்ளன. வ.வே.சு. ஐயரின் (1881 - 1925) மங்கையர்க்கரசியின் காதல் என்னும் கதைத் தொகுதியில் உள்ள 'குளத்தங்கரை அரசமரம்' என்னும் கதையே முதல் தமிழ்ச் சிறுகதை என்பதே இன்றைய இலக்கிய வரலாறு கண்டடைந்த முடிவு.

வ.வே.சு. ஐயருக்கு முன்பே 'சரிகைத் தலைப்பாகை' (நற் போதகம், 1887), செல்வகேசவராய முதலியார் (அபிநவக் கதைகள்), அ.மாதவையா ஆங்கிலத்தில் எழுதிய தமிழ்க் கதைகள் (1903), பாரதி ('துளஸீபாய்' - 1906, 'ஆறில் ஒரு பங்கு', 1910 - 11), பண்டிதை விசாலாட்சி அம்மாள் ('கல்பகம்', 1911), அம்மணி அம்மாள் ('சங்கல்பமும் சம்பவமும்', 1913) போன்றோரின் நவீன சிறுகதைகள் பிறந்துவிட்டன என்ற கண்டுபிடிப்புகளும் வெளிவந்துள்ளன. ஆனால், தாகூரின் 'காடேர் கதா' ('படித்துறையின் கதை') என்ற வங்கக் கதை யின் பாதிப்பில் எழுந்த கதையாக 'குளத்தங்கரை அரசமரம்' இருந்தாலும், நவீன தமிழ்ச் சிறுகதையின் வடிவமும் உள்ள டக்கமும் சரியாக அமைந்தது இந்த வ.வே.சு. ஐயரின் 'குளத் தங்கரை அரசமரம்' என்ற சிறுகதையிலேயே என்று நிலை நாட்டிவிட்டார்கள்.

ஆரம்பத்தில் கதைகளை வெளியிட்ட முன்னோடிப் பத்திரிகை யாக விளங்கிய விவேகசிந்தாமணி நிறுத்தப்பட்டவுடன், விவேகபோதினி (1908 - 32) பத்திரிகை தோன்றியது. வ.வே.சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' கதையை முதன்முதலில் (1915) அறிமுகப்படுத்தியது விவேகபோதினி ஆகும். இந்தக் கதை வ.வே.சு. ஐயரின் மனைவி பெயரிலேயே வெளிவந்தது. அதை தமது கம்ப நிலையம் வெளியீடாக மங்கையர்கரசியின் காதல் என்ற கதைத்தொகுப்பு நூலில் (1917 - 18) தன் பெயரில் வெளியிட்டார் வ.வே.சு. ஐயர். இந்தத் தொகுப்பு நூலில் வெளியான ஆண்டு இல்லை. ஆனால், கம்ப நிலை யம் வெளியீடுகளாக இதற்கு முன்னும் பின்னும் வந்த பிற நூல்களின் வெளியீட்டு ஆண்டை வைத்துக்கொண்டு, இந்த நூல் 1917 - 18 வெளிவந்திருக்கலாம் என்று தீர்மானிக்கிறார் கள். எனவே, தமிழ்ச் சிறுகதை நூற்றாண்டு விழாவும் தமிழக அரசு சார்பிலும் இலக்கிய அமைப்புகள் பலவற்றிலும் 2017-இல் நடைபெற்றுவிட்டது.

ஆனால், 1879 - 1917 என்ற காலகட்டத்தில் தமிழ் நாவல் வரலாற்றிலும் சிறுகதை வரலாற்றிலும் சில பெண் எழுத்தாளர் கள் கவனத்துக்குரிய சில படைப்புகளை வெளியிட்டுள்ளார் கள் என்ற தகவல்கள் சரிவர இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்படவில்லை. சிறுகதையின் பொற்காலமாகக் கருதப் படும் மணிக்கொடி காலத்தில் அந்த மணிக்கொடி பத்திரிகை யில் சுமார் 20 பெண் எழுத்தாளர்கள் சிறுகதைகளை எழுதி யிருக்கிறார்கள். அவர்களில் இன்றும் நினைக்கப்படுபவர்கள் என்றால், புதுமைப்பித்தனின் மனைவியான எஸ். கமலாம் பாள் (கமலா விருத்தாசலம்), கு.ப. ராஜகோபாலனின் தங்கை யான கு.ப. சேது அம்மாள் ஆகிய இருவர் மட்டும்தான். அதற்கான காரணம் புரிகிறது. மணிக்கொடி காலகட்டத்தில் பிற பத்திரிகைகளில் எழுதிய பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் பற்றியோ எந்த முறையான தகவல்களும் முன் வைக்கப்படவில்லை.

அம்மணி அம்மாள் 1913-இல் விவேகபோதினி மாத இதழில் 'சங்கல்பமும் சம்பவமும்' என்ற கதையை எழுதியுள்ளார். வடிவம், மொழி ஆகியவற்றைக்கொண்டு பார்த்தால் அவர் தான் தமிழின் முதல் சிறுகதையாசிரியர் என்று சொல்ல வேண்டும் என்றும் 'சிறுகதைப் பொருளிலும் உத்தியிலும் ஒரு புதுமையைப் புகுத்தினார்' என்றும் இன்றைக்குச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். அவரைப் பற்றிய வேறு தகவல்கள் தெரிவதில்லை. எனவே, அவர் உண்மையில் பெண் எழுத் தாளர்தானா அல்லது அந்தக்கால வழக்கப்படி, குறிப்பாக விவேகபோதினி பத்திரிகையின் வழக்கப்படி, அந்தப் பெய ரில் வேறு யாரும் எழுதினார்களா என்று உறுதிப்படுத்தக்கூட முடியவில்லை. அதுவும் ஒரு தழுவல் உருவகக் கதையாகத் தான் தோன்றுகிறது. அவரது பெயரில் கிடைக்கும் இரண்டு மூன்று சிறுகதைகள் மூலமாகவும் அவரது தனித்தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை. அம்மணி அம்மாளின் இந்த மிகச்சில கதைகளில் வெளிப்படையாகவே அவை தழுவி எழுதப்பட்டவை என்பது தெரிகிறது.

அக்காலப் பெண் படைப்பாளிகளைப் பற்றி வை.மு. கோதை நாயகி அம்மாளின் ஜகன்மோகினி பத்திரிகையில் வெளிவந்த ஸ்த்ரீ எழுத்தாளர்கள் என்ற தொடர் கட்டுரைகளில், முன்னோடி களான அம்மணி அம்மாள், பண்டிதை விசாலாட்சி அம்மாள் ஆகியோர் பற்றி ஏதும் இல்லை.

அநுத்தமா, எழுபதுகளின் இறுதியில் எழுதிய பெண் படைப் பாளிகள் பற்றிய நா. பார்த்தசாரதியின் தீபம் இலக்கிய இதழ்க் கட்டுரை ஒன்றில், அம்மணி அம்மாளின் இரு கதை களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அதிலும் தவறாக, 'சங்கல் பமும் சம்பவமும்' சிறுகதையை நாவல் என்று கூறியுள்ளார். மற்றொரு குறுநாவல் பற்றியும் குறிப்பிடுகிறார். அதுவும் இன்று கிடைப்பதில்லை.

அம்மணி அம்மாளுக்கு முன்பே புனைகதை இலக்கியத்தில் பண்டிதை விசாலாட்சி அம்மாள், மலைமகள், தாமரைப் பெண் போன்ற நாவலாசிரியர்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்களில் பண்டிதை விசாலாட்சி, 1915-க்கு முன்பே பல

நாவல்களையும் சில சிறுகதைகளையும் எழுதிவிட்டார். தமது ஹிதகாரிணி பத்திரிகையில் அவர்தான் 'ஹிந்து சகோதரி' ('உறுதி', ஒக்ரோபர் 1910) என்ற பெயரில் ஒரு கதையை எழுதியிருக்கவேண்டும் என்றே நான் நினைக்கிறேன். ஏனெனில், 'ஓர் இந்து சகோதரி' என்ற பெயரில் ஹிதகாரிணி பத்திரிகையில் (1909 - 10) நான்கு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவை பத்திரிகையாசிரியர் எழுதியதாகவே இருக்கவேண்டும். அடுத்து 'கல்பகம்' (டிசம்பர் 1911) என்ற சிறுகதையைத் தன் சொந்தப் பெயரிலேயே தனது ஹிதகாரிணி பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார் பண்டிதை. கல்பகம் என்ற பெயரில் சிறுகதைத் தொகுப்பு ஒன்றும் வெளிவந்திருக்கலாம் என்று தெரிகிறது. ஆனால் அது இன்று கிடைக்கவில்லை. பண்டிதை விசாலாட்சி அம்மாளைத்தான் முதல் பெண் சிறுகதையாசிரியர் என்று கூற வேண்டும்.

பெண் எழுத்து பற்றிய ஆய்வாளர் இரெ. மிதிலா, இந்த 'கல்பகம்' சிறுகதையைப் பற்றிக் கூறும் தகவல்களைப் பார்ப்போம்: பதின்மூன்று வயதான கல்பகம் என்ற சிறுபெண், நாற்பத்தைந்து வயது கிழவனை, அதுவும் பல பெண்களுடன் சமூக விலக்கான உறவு கொண்டிருந்தவனை மணந்து, எவ்விதம் அவதிப்படுகிறாள் என்பதே இச்சிறுகதை. கல்பகம் என்ற பெண்ணின் கதையை விசாலாட்சி அம்மாளே நேரில் வாசகரிடம் சொல்வது போல் அமைந்துள்ளது. விவாகம், சம்சாரம், சகோதரியை சந்தித்தல், என்னுடைய பிரார்த்தனை என நான்கு உட்பகுப்புகளைக் இக்கதை கொண்டுள்ளது. இச்சிறுகதையின் நீண்ட முன்னுரையில் கதை உருவான விதத்தை விசாலாட்சி அம்மாள் விவரிக்கிறார்:

'ஆரிய சகோதர சகோதரிகளே!

1911 வருசம் டிசம்பர் மாதம் 7 தேதி இரவு 12 மணிக்கு நான் படுத்து நித்திரை செய்யலானேன். அதுவரையில் வீட்டு விசயமாய் ஏதோ பேசிக்கொண்டிருந்தேன். தூக்கம் வந்த நேரம் தெரியாது. கண் விழித்துக் கொண்டேன். மணி மூன்று முறை அடித்தது. மூன்று மணி என்று அறிந்தேன். அதுவரையில் நான் கண்ட கனவு ஆச்சர்யத்தை விளைக்கும் என்று தெரிந்துகொள்ளவில்லை. ஓர் அழகிய யுவதி என் அருகில் உட்கார்ந்து கண்ணீர் பெருக தன் வாழ்நாளின் சம்பவங்களைச் சொல்லி அழுதாள். அவளுடைய களங்கமற்ற முகமும் சத்விசயங்கள் அடங்கிய ஹிருதயமும் வயதுக்கு மிஞ்சின விவேக விசார சக்தியும் வைராக்ய விரதமும் ஞானத்தில் அபிமானமும் என் மனதை வசமாக்கிக் கொண்டன. விழித்தேன். என் கண்கள் நான் படுத்திருந்த மாடியை ஓர் முறை பார்த்து, 'காணவில்லையே?' என்ற வருத்தத்துடன் சோர்ந்தன. மனம் பதைத்து 'எவ்விதமாயினும் ஆகுக. கிரகித்த விசயங்களை வீணாக்கா வண்ணம் எழுதி வெளியிடுவது உசிதம்' என்று தூண்டிற்று. அதின் அபீஷ்டப்படியே 'கல்பகம்' என்ற இந்தப் புஸ்தகத்தை வரைந்து முடித்தேன். என்னுடைய பிரிய சோதர சோதரிகள் இதைப் படித்து ஆலோசிப்பார்களாக.'

என்ற இம்முன்னுரை, வ.வே.சு. ஐயர் தம் கதைகளுக்கு எழுதிய 'பூர்வ பீடிகை'க்கு முன்னோடி போல் அமைந்துள்ளது.

•

பண்டிதை விசாலாட்சி அம்மாள் எழுதிய நாவல்களும் பெண் எழுத்தும்:

ஆரம்ப காலத்தில் கிருபை சத்தியநாதன் (சுகுணா - 1892 & கமலா - 1894), ராஜாத்தி அம்மாள் (ஞானப்பிரகாசம், 1897), பண்டிதை விசாலாட்சி அம்மாள் (1902 - 15), தேவகுஞ்சரி அம்மாள் (விஜயலட்சுமி - 1907, கர்நாடக யோகினி கதைகள் - 1917), தாமரைப் பெண் (கோமளம் காஞ்சியாத்திரை - 1909, பிரேமகாந்தன் - 1912), மலைமகள் (அமிருதவல்லி - 1910, முரளீதரன் - 1914), மீனாட்சிசுந்தரம்மாள் (ஜெயசீலன் - 1915) போன்றவர்களும் பின்பு வி. பாலாம்பாள் (சாணக்கிய சாகசம் - 1914 & சிந்தாமணி இதழ், 1923-), மூவலூர் ராமாமிர்தம் அம்மாள் (1863 - 1962), வை.மு. கோதைநாயகி அம்மாள் (1901 - 60), செய்யூர் சாரநாயகி அம்மாள் (மனோரஞ்சனி இதழ், 1918- & சம்சார சந்நியாசி - 1937), கி. சரஸ்வதி அம்மாள் (1901 - ? & நிழலும் ஒளியும் - 1949), குகப்ரியை (1902 - 70), குமுதினி (1905 - 86), டி.பி. இராஜலட்சுமி (1911 - 64), ஜெயலட்சுமி ஸ்ரீநிவாசன் (1911 - 2011), வேங்கட லட்சுமி (மோகினி - 1946), கமலா பத்மநாபன் (1913 - 45), எம்.எஸ். கமலா (1922 - ?), கி. சாவித்திரி அம்மாள் (1922 - 73) போன்ற பெண் படைப்பாளிகள் பலர் எழுதியிருக்கிறார்கள். இவர்களில் திரில்லர் வகையில் முதன் முதலில் நாவல் தொடர் எழுதிய செய்யூர் சாரநாயகி அம்மாள் என்பவர் வடுவூர் துரைஸ்வாமி ஐயங்காராக இருக்கலாம் என்று தெரிகிறது. (தன் தந்தையின் இந்த அவதானத்தையும் ஊகத்தையும் முதலில் வெளியிட்டவர் அரவிந்த் சுவாமிநாதன் என்ற ஆய்வாளர். வை.மு. கோதைநாயகிக்கு போட்டியாக இப்படி வடுவூரார் செய்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது). ஓரிரு சுமாரான படைப்புகளை மட்டுமே பிரசுரம் செய்து, தொடர்ந்து களத்தில் நிற்காத கஜாம்பிகை ('கௌரி', சிறுகதை - 1907 & ஞானாம்பாள் - 1920 - நான்காம் பதிப்பு), தஞ்சம் ('மன்னிப்பு' - 1943 & தாகூரின் மாயாவிநோதினி தமிழாக்கம் - 1948), காசினி வி. விசாலாட்சி (1899 - 1978), கௌரி அம்மாள் (1913 - 87 & கடிவாளம் - 1949), ஆர்.எஸ். ருக்மணி ('பெண் ஜன்மம்' - 1945 & வாண்டா வாசிலெப்ஸ்கா'வின் தமிழாக்கம் காதல் - 1946), ஆர்.எஸ். ஞானாம்பாள் (மலர்ந்த மனம் - 1960), எஸ். விசாலாட்சி (மங்கை இதழாசிரியர், 1947-) என்று வரிசையில், உடனடியாக நினைவுக்கு வராத இன்னும் சில பெண் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள்.

பண்டிதை விசாலாட்சி அம்மாள் எழுதிய நாவல்களாக லலிதாங்கி (1902), ஜலஜாட்சி (1902), தேவி சந்திரப்ரபா (1913 இ.ப.), ஆனந்தமகிளா (1903), நிர்மலா (1903), ஹேமாம்பரி, சரஸ்வதி (1909), கௌரி (1906), ஞான ரஞ்சனி (1907), சுஜாதா (1908), வனசுதா (1909), விராஜினி (அ) தீரத்தால் வென்ற தயாமதி (1909), ஆரியகுமாரி (1910), ஸ்ரீகரி, வேதாவின் லோகனம் (1910), ஜெயத்சேனா (1911), மகிசுதா (1911), ஸ்ரீமதி சரசா (1911), ஜ்வலிதாங்கி (1911), இரட்டைச் சகோதரர், உமா, ஜோதிஷ்மதி, மகேசஹேமா, ராஜப்ரபா (1914), சாதனா (1915) முதலானவற்றைக் கூறலாம். விசித்திர வைத்தியன் இவருடைய சிறுகதைத் தொகுதி ஆகும்.

விசாலாட்சியின் இந்தப் படைப்புகளில் இப்போது கிடைப்பவை பாதிப் பகுதியே. லலிதாங்கி - 1902, தேவி சந்திரப்ரபா - 1903, ஆநந்தமகிளா - 1903, கௌரி - 1906, விராஜினி (அ)

தீரத்தால் வென்ற தயாமதி - 1909, வனசுதா - 1909, ஆரிய குமாரி - 1910, ஜ்வலிதாங்கி - 1911, ஜெயத்சேனா - 1911, ராஜப்ரபா - 1914 முதலிய பத்து நாவல்களை மட்டும் தேடிப் பிடித்து, பிரதி எடுத்துச் சேகரித்து வைத்திருக்கிறேன்.

அதேபோல 1920-இல் விசாலாட்சி அம்மாள் என்ற படைப் பாளி எழுதிய சிறுகதை 'மூன்றில் எது?' என்பது, 'வடிவ அளவில் முக்கியமான ஒரு முன் உதாரணம் என்றும் சிறு கதைக்குரிய அன்றாடத்தன்மை, நேரடிச் சித்தரிப்பு முதலி யவை கொண்ட நல்ல கதை இது' என்று மதிப்பிட்டு, இவரைப் பண்டிதை விசாலாட்சியாகத் தவறாக நினைத்து ஆங்கிலத் தில் மொழிபெயர்த்துப் பதிப்பித்ததும் நடந்திருக்கிறது. ஆனால் இந்த விசாலாட்சி என்பவர், தமிழில் அதன் ஆரம்ப காலத்தில் எழுதிய மூன்று விசாலாட்சிகளில் (பண்டிதை, காசினி, மங்கை) அ. மாதவையாவின் மகளான காசினி விசாலாட்சி என்பதை நான் அந்த ஆங்கில நூலின் பதிப் பாசிரியரான திலீப்குமாருக்குத் தெரிவித்து, இரண்டாம் பதிப் பில் திருத்தியமைக்கவும் முறைப்படுத்தியுள்ளேன். எனவே தமிழில் பெண் எழுத்து என்பது நூற்றாண்டுக்கும் மேற்பட்ட கால வரலாறு கொண்டது. புனைகதைப் படைப்பு என்பதற்கு மட்டும் இங்கு முக்கியம் தரப்படுவதால் அவ்வகைப் பெண் எழுத்து பற்றி மட்டும் இங்கு கவனம் கொள்ளலாம்.
ஆரம்ப காலத்தில் கிருபை சத்தியநாதன் (சுகுணா - 1892, கமலா - 1894), ராஜாத்தி அம்மாள் (ஞானப்ரகாசம் - 1897) எழுதியவை மட்டும் தெரியவருகின்றன, இதில் ஞானப்பிர காசம் நாவல் கிடைப்பதில்லை. பண்டிதை விசாலாட்சயின் (1902 - 26) சமகாலத்தில் தேவகுஞ்சரி அம்மாள் (விஜய லட்சுமி - 1907, கர்நாடக யோகினி கதைகள் - 1917), தாம ரைப் பெண் (கோமளம் காஞ்சியாத்திரை - 1909, பிரேம காந்தன் - 1912), மலைமகள் (அமிருதவல்லி - 1910, முரளீ தரன் - 1914), மீனாட்சிசுந்தரம்மாள் (ஜெயசீலன் - 1915), அம் மணி அம்மாள் போன்றவர்கள் எழுதிவந்திருக்கிறார்கள்.

கிருபை சத்தியநாதன் என்ற முதல் பெண் எழுத்தாளரின் நாவல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை என்றாலும் தமி ழில் சி.எல்.எஸ். கிறிஸ்துவ அமைப்பால் தமிழில் கொண்டு வரப்பெற்றுவிட்டன. ஆங்கிலத்தில் எழுதப்பட்டாலும், தமிழ் வாழ்வையும் தமிழ் பண்பாட்டையும் சித்திரிப்பதால் அவை தமிழ்ப் புனைகதை இலக்கிய வரலாற்றில் இணைந்தவை யாகவே கருதப்படவேண்டும் என்பதுதான் இன்றைய இலக் கிய வரலாற்று வரைவியல் ஆய்வாளர்களின் உறுதிப்பாடு.

அடுத்துத் தெரிய வருகிறவர் ராஜாத்தி அம்மாள் (ஞானப்பிர காசம், 1897). விவேகசிந்தாமணி, ஞானபோதினி போன்ற ஆரம்ப காலப் பத்திரிகைகளில் வெளிவந்த விபரங்கள் மூலம் தெரியவந்த நாவல்களில் ஒன்றே ராஜாத்தி அம்மா ளின் ஞானப்பிரகாசம். இலங்கையின் சுவாமி சா. ஞானப்பிர காசர் (1875 -1947), வி.மி. ஞானப்பிரகாசம் (பரமார்த்த குருவின் கதை, 1975 பதிப்பு) போன்று கத்தோலிக்கக் கிறிஸ் தவ சமயத்தைச் சேர்ந்த குருமார்கள், ஞானப்பிரகாசம் என்ற பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சிதம்பரம் கோயி லில் ஒரு ஞானப்பிரகாசக் குளம் உண்டு. யாழ்ப்பாணத்தி லிருந்து ஞானப்பிரகாசம் (1911) என்ற சைவம் சார்ந்த ஒரு பத்திரிகை வந்திருக்கிறது. எனவே இன்று பார்க்கக் கிடைக் காத, தகவலாக மட்டுமே அறியப்படும் ராஜாத்தி அம்மாள் (ஞானப்பிரகாசம், 1897) நூலைக் குறித்து எதையும் சொல்ல முடியவில்லை. நாவலேதானா என்றும் கூட உறுதிப்படுத்த முடியவில்லை. ராஜாத்தியம்மாள் என்ற பெயர் இந்துப் பெயர் போல் இருந்தாலும் பிற மதத்தவரின் புனைபெயராகவோ இயற்பெயராகவோ செல்லப் பெயராகவோ இருக்க வாய்ப் புகளே அதிகம். ஞானப்பிரகாசம் என்ற பெயரும் கத்தோலிக் கக் கிறிஸ்தவப் பெயரா, அத்வைத சைவப்பெயரா, ஆண் பால் பெயரா, பெண்பால் பெயரா என்று தெரியவில்லை. எனவே முதல் நாவலாசிரியரான வேதநாயம் பிள்ளை என்ற கத்தோலிக்கர் என்றாலும் சர்வசமய சமரசம் கொண்டவர். தமது பிரதாபமுதலியர் சரித்திரம் (1879) நாவலில் நேரடியா கச் சமயப் பிரச்சாரம் செய்யாதவர். முதல் பெண் நாவலா சிரியரான கிருபை சத்தியநாதன் என்ற புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவரை ஒட்டிய காலத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவப் பெண்மணி ஒருவர் இந்த நாவலை எழுதியிருக்கலாம். நாவல் முன்னோடிகள் வரலாற்றில் ஐந்தாவது இடத்தில் குறிப் பிடப்பெறும் தி.ம. பொன்னுச்சாமி பிள்ளை 1920-இல் ஞானப் பிரகாசம் என்ற நாவலை எழுதியிருக்கிறார். இவர் தமது சைவப் பிரச்சாரத்தைத் தமது எல்லா நாவல்களிலும் தனி ஒரு அத்தியாயத்தை ஒதுக்கி எழுதுபவர் என்ற பெயரைப் பெற்றவர்.

1970-களில், பெண் எழுத்தாளர்கள் கூட்டம் திடீரென பத்தி ரிகை உலகில் படையெனப் பிரவேசித்த காலமும் பிறந்தது. எல்லா வெகுஜனப் பத்திரிகைகளும் புதிதாக எழுதவந்த பெண் எழுத்தாளர்களுக்கு முதன்மையளித்தன. கல்கி போன்ற பத்திரிகைகளில் ஒரு இதழுக்கு ஆறு கதைகள் என்று கணக் கிட்டால், அதில் மூன்று கதைகள் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

எனவே, முன்னோடிகளைத் தொடர்ந்தும் பிற்காலத்திலும் (1935 - 75) எழுதிய கு.ப. சேது அம்மாள் (1908 - 2002), கிருத் திகா (1915 - 2009), கமலா விருத்தாசலம் (1917 - 95), சித்தி ஜுனைதா பேகம் (1917 - 1998), லட்சுமி (1921 - 1987), சரோஜா ராமமூர்த்தி (1921 - 1991), அநுத்தமா (1922 - 2010), ராஜம் கிருஷ்ணன் (1925 - 2014), ஹெப்சிபா ஜேசுதாசன் (1925 - 2012), விந்தியா (1927 - 1999), ஆர். சூடாமணி (1931 - 2010), ருக்மணி பார்த்தசாரதி (1957 முதல் எழுதும் ஆர். சூடாமணி யின் சகோதரி), சி.ஆர். ராஜம்மா (தேன்துளி - 1967), ப. விசா லம் (1932 - 2022) போன்றோரது புனைகதைகள் இன்று குறிப் பிடத் தகுந்தவையாகக் கருதப்படுகின்றன. இவர்களில் கிருத் திகா, நாவல்களில் சாதனைகளைப் படைத்தவர். நவீனத்துவ காலத்தின் மேதமை கொண்ட முதல் பெண் படைப்பாளர்.

அம்பைக்கு முன் அம்பைக்குப் பின் என்று யுகசந்தியாக வைத்துப் பெண் எழுத்தைப் பிரிக்கலாம். இன்றுள்ள பெண் ணிய எழுத்தாளர்கள் அம்பை (1944-), காவேரி (1947-), சிவ காமி (1957-), பாமா (1958-), தமிழ்நதி (1966-), சு. தமிழ்ச் செல்வி (1971-), வெண்ணிலா (1971-), குட்டி ரேவதி (1974-), தமயந்தி (1975-), போன்ற புனைகதை எழுத்தாளர்களையும் மலர்ந்து வரும் மிக இளந்தலைமுறை எழுத்தாளர்களையும் பற்றி இன்று விரிவாகவும் விவரமாகவும் எல்லோருக்கும் தெரியும்.

பெண்ணியம், பெண்மை சார்ந்த கதைகள், கட்டுரைகள்,

ஆய்வுகள் பற்றிப் பரவலாக இன்று பேசப்படுகிறது. பின் நவீனத்துவப் பார்வையிலும் பெண்ணியப் பார்வையிலும் பெண் எழுத்துக்கள், பலரையும் இப்போது திரும்பிப் பார்த்து, கவனம் கொள்ள வைத்துள்ளன. பெண் எழுத்தாளர்கள் என்று பிரித்துப் பார்க்கும் அரசியல், ஆண் எழுத்தாளர்கள் பெண் எழுத்து பற்றி வைத்திருக்கும் பார்வை, பெண்ணிய எழுத்தாளர்களின் பெண்ணிய எழுத்தின் நிலை போன்றவை களுக்குள் இப்போது இங்கே செல்லப் போவதில்லை.

பெண்ணியம் என்ற சொல் Feminism என்ற சொல்லின் இன் றைய தமிழாக்கம். மிதவாதப் பெண்ணியம், தீவிரப் பெண்ணி யம், பின்நவீனத்துவப் பெண்ணியம் என்றெல்லாம் பாகுபடுத்தி இதைப் பார்க்கலாம். பெண்ணின் முன்னேற்றத்திற்கும் மேம் பாட்டிற்கும் வெளிப்பாட்டுக்கும் வழிவகுக்கும் செயற்பாடுகள் அனைத்தையும் இது குறிக்கிறது. பெண்ணின் தாழ்வுற்ற நிலையை மாற்ற முயலும் அனைத்துப் போராட்ட முறை களையும் உள்ளடக்கி, மனித சமூகத்தில் பெண்ணுக்கு மனித மதிப்பு கிடைக்கப் பாடுபடுவது, பெண் என்பதால் ஒருவர் எதிர்கொள்ள நேரும் துயரங்களையும் தடைகளையும் களையப் பாடுபடுவது, வாழ்வின் எல்லாத் தளங்களிலும் ஆண், பெண் இருபாலரும் இணையானவர்களே என்ற சமத்து வக் கருத்தை உருவாக்கப் போராடுவது என்றெல்லாம் எளிமைப்படுத்தி விளக்கலாம். புனைவுகளின் மூலம் இவை களை வரலாற்று நடைமுறையில், அழகியல் வீச்சோடு, எதார்த்தமாக மனதில் பதியவைத்துக் கூர்மைப்படுத்துவது பெண் எழுத்து.
'ஆண், பெண், சிறுவர், சிறுமியர் ஆகிய எல்லோரும் நிராட் சேபமாகப் படிக்கும்படி அறிவையும் புத்தியையும் வளர்க்கக் கூடிய வழியில் நாவல்களை எழுதுவதில் தாங்கள் புருஷர் களுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை நமது சகோதரிகள் (நாவல் ஆசிரியைகள்) காட்டிக் கொள்ள முன்வருவது ஒரு சுபசூசகம் என்றே நாம் கருதுகிறோம்.' (சுதேசமித்திரன், 31.8.1935)

என்ற ஆரம்ப காலப் பெண் எழுத்தைப் பெரியமனது வைத் துப் பாராட்டிய போக்கு இருந்துள்ளது.

பொதுவாகவே பெண் எழுத்தாளர்களால், புதிய மாற்றம் கொண்டுவரப்பட்டதாகவோ, ஆண்களுக்கு ஈடாக, சக்தி வாய்ந்த எழுத்துகளை வெளியிட்டுவந்ததாகவோ காணமுடிய வில்லையே என்ற குற்றச்சாட்டு, இப்பொழுது, தேய்ந்து மறைந்துவிட்டது. மதம் சார்ந்த நமது வாழ்க்கை மரபுகள், நாம் கொண்டிருக்கிற பாரம்பரிய மதிப்பீடுகள், சடங்காசார வழிமுறைகள் இவைகளை எல்லாம் மீறிய தனக்கான தனித்த அழகியலைக் கொண்ட, தெளிவான மாற்றம் எழுத்தில் பிரசன்னம் கொள்ளுமானால், நிச்சயம் அந்த எழுத்து வெற்றி பெற்று நிலைபேறு அடையும் என்று கூறலாம்.

பெண்கல்வி, பெண்ணுக்கு இழைக்கப்படும் வன்முறை, குழந்தை மணக் கொடுமை, பாலியல் பலாத்காரம், பெண் ணின் கைம்பெண் பிரச்சினை, பிள்ளைப்பேறும் அறியாமை யும் தான் பெண்ணை அடிமைப்படுத்தும் காரணிகள் எனும் நிலையில், பெண் விடுதலை நோக்கில் என்று அறிந்தும் அறியாமலும் எழுதப்பட்ட பெண் எழுத்துக்கள் நிரம்பவே ஆரம்ப காலத்தில் வந்துள்ளன.



மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட பெண் எழுத்து:

1879 - 1917 என்ற காலகட்டத்தில் தமிழ் நாவல் வரலாற்றிலும் சிறுகதை வரலாற்றிலும் சில பெண் எழுத்தாளர்கள் கவனத் துக்குரிய சில படைப்புகளை வெளியிட்டுள்ளார்கள் என்ற தகவல்கள் சரிவர இலக்கிய வரலாற்றில் பதிவுசெய்யப்பட வில்லை. அக்காலப் பெண் படைப்பாளிகளைப் பற்றி வை.மு. கோதைநாயகி அம்மாளின் ஜகன்மோகினி பத்திரிகையில் வெளிவந்த 'ஸ்த்ரீ எழுத்தாளர்கள்' என்ற தொடர் கட்டுரை களில், முன்னோடிகளான கிருபை சத்தியநாதன், ராஜாத்தி அம்மாள், பண்டிதை விசாலாட்சி அம்மாள், மலைமகள், தாமரைப்பெண், தேவகுஞ்சரி அம்மாள், அம்மணி அம்மாள் ஆகியோர் பற்றி ஏதும் இல்லை.

வ.வே.சு. ஐயர், தமிழின் முதல் நவீன சிறுகதையாகக் கருதப் படும் 'குளத்தங்கரை அரசமரம்' சிறுகதையை 1915-இல் எழுதியதாகப் பாராட்டப்பெறுகிறார் என்ற விவரத்தை முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். பண்டிதை விசாலாட்சியின் 'கல்பகம்' (1911) சிறுகதை அதற்கு முன்பே வெளிவந்துவிட்டது என்ப தும் வ.வே.சு. போலவே பண்டிதையும் ஒரு பெண்ணின் பிரச் சினையைத்தான் நவீனச் சிறுகதையாகப் படைத்திருக்கிறார் என்பதையும் இலக்கிய அழகியல் நோக்கில் இந்த இரு கதை களுக்கும் சில வேறுபாடுகள் இருந்தாலும் அய்யருடைய

தாகூர் தழுவல் போன்ற பிரச்சினை, பண்டிதையின் சிறு கதைக்கு இல்லை என்பதும் கருத்தில் பதிய வேண்டிய விஷயங்கள்.

பண்டிதையின் எழுத்து பாணியை அறிமுகப்படுத்தும் விதத்தில், 2025 முதல் நான் பதிப்பித்து வரும் 'முன்னோடிப் பெண் எழுத்து' நூல் வரிசையில் முதலாவது நாவல்களாக ஆரிய குமாரி, ஜெயத்சேனா என்ற இரண்டு நாவல்களை மட்டும் விரிவான விமர்சன ஆய்வு முன்னுரையுடன் மறுபிரசுரச் செம்பதிப்பாகக் கொண்டுவந்திருக்கிறேன். எனது ஆலோசனையின் பேரில் பண்டித விசாலாட்சியின் நாவல்களைத் தம் டாக்டர் பட்ட ஆய்வுக்காக எடுத்துள்ள திருமதி கோகில வாணி, 'லலிதாங்கி', 'ஆநந்த மகிளா', 'கௌரி' என்ற மூன்று நாவல்களை இப்போது பிரசுரித்திருக்கிறார்.

•

அபூர்வ சிந்தாமணி:

நவீனத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடிப் பெண் எழுத்தாளர்களில், நாவலாசிரியராகவும் பத்திரிகையாசிரியராகவும் பதிப்பாளராகவும் 'ஹிதகாரிணி' பண்டிதை விசாலாட்சி அம்மாள் (1881-1926) முதல் இடம் (1902-26) பெறுகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பத்திரிகைகளில் எழுதியதன் மூலம் தெரியவரும் விசாலாட்சிகளில் மூன்று பேர், சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள். இதில் பண்டிதை விசாலாக்ஷி அம்மாள் (1881-1926) முதல்வர். இரண்டாவது விசாலாட்சி, சக்தி வை. கோவிந்தன் பிரசுரித்ததும் முதலில் குகப்ரியையின் ஆசிரியத்துவத்தில் வந்ததுமான மங்கை என்ற புத்தகத்திரட்டு, மாத இதழாக மாறியபோது ஆசிரியராகப் பொறுப்பேற்ற எஸ். விசாலாக்ஷி என்பவர். இவர் சங்கு சுப்ரமணியத்தின் தங்கை என்பதும் சில சிறுகதைகளையும் கட்டுரைகளையும் எழுதியவர் என்பதற்கு மேல் இவரைப் பற்றி அதிகம் தெரியவில்லை. பத்திரிகை உலகில் அவரால் தமையன் மூலம் செல்வாக்குப் பெற முடிந்திருக்கிறது என்பது அவரது சுமாரான சில எழுத்துகள் மூலமும் பெரிதாகப் பாராட்டமுடியாத பத்திரிகையாசிரியைத்துவத்தின் மூலமும் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், அக்காலகட்டத்தில் எஸ். விசாலாட்சியின் பணியும் போற்றத்தக்கதே. மூன்றாவது விசாலாட்சி, அ. மாதவையாவின் மகளான 'காசினி' விசாலாட்சி அம்மாள். இவர் பஞ்சாமிர்தம், சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைகளில் சில கதைகளையும் சமையல் குறிப்புகள், அழகுக் குறிப்புகளையும் சில கட்டுரைகளையும் எழுதியவர்.

பண்டிதை விசாலாட்சியைப் பற்றிய சில தகவல்களை அவரது 'ஹிதகாரிணி' பிரசுர விளம்பரங்கள் மூலமாகவும் 'பிரஜாநுகூலன்' எஸ்.ஜி. இராமாநுஜலு நாயுடுவின் குறிப்புகள் மூலமாகவும் 'லோகோபகாரி' பத்திரிகையைப் பற்றி ஆராய்ந்து கட்டுரை எழுதிய பெ.சு. மணி மூலமாகவும்தான் தெரிகிறது. டாக்டர் இரெ. மிதிலா (பெண் எழுத்து), டாக்டர் மு. பழனியப்பன் (விடுதலைக்கு முந்தைய பெண்களின் நாவல்கள்) ஆகிய இன்றைய ஆய்வாளர்கள் மேற்கூறியவர்களின் தகவல்களையொட்டியே தம் குறிப்புகளை எழுதியிருக்கிறார்கள். எனவே பண்டிதையின் வாழ்க்கை பற்றி மிகச் சில செய்திகளே நமக்குக் கிடைத்துள்ளன.

(நண்பர் ஆர்.ஆர். சீனிவாசனின் சகோதரி கோகிலவாணி கார்த்திகேயன், சென்னை திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டத்துக்குச் சேர்ந்தபோது, அவருக்கு பண்டித விசாலாட்சி அம்மாளின் படைப்புகளை ஆய்வுக்கு எடுக்க வழிகாட்டி, அவர் மூலம் ரோஜா முத்தையா நூலகத்தில் விசாலாட்சியின் நாவல்களைப் பிரதியெடுக்க வைத்தேன். ஆய்வாளர்களுக்கே இந்த நூலகங்கள் போன்றவை எளிதில் ஆய்வு மூலங்களைப் பெற ஒத்துழைக்கின்றன. லண்டனில் காலனிய கால தமிழ் நூல்களைப் பற்றி ஆங்கிலத் துறையில் டாக்டர் பட்ட ஆய்வு செய்யும் ஆதவன் என்ற நண்பர் மூலம் பிரிட்டிஷ் நூலகத்தில் சில அபூர்வமான நூல்களைப் பிரதி செய்ய முடிந்தது. இங்கு இல்லாத பண்டிதை விசாலாட்சியின் சில நூல்கள் பிரிட்டிஷ் நூலகத்தில் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அங்கும் ஹிதஹாரிணி கிடைக்கவில்லை. அரசு ஆவணக் காப்பகத்திலிருந்த இரண்டு ஹிதஹாரணி தொகுப்புகளை இரெ. மிதிலா பார்த்திருப்பதாகத் தெரிகிறது. அந்த இரு தொகுதிகளில் இன்று தமிழின் முதல் இரு சிறுகதைகளும் இருந்த முதல் தொகுப்பை நான் எவ்வளவு தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. மாயமாய் மறைந்துவிட்டது.)

பண்டிதையின் நூல்கள் இலக்கிய ரீதியில் இவ்வளவு சிரமப்படுதலுக்குத் தகுதியானவை தாமா என்றால், இலக்கிய வரலாற்றியல் - சமூகவியல் - பெண்ணியல் நோக்கில் இவை முக்கியமானவை என்றே சொல்வேன்.

•

பண்டிதை விசாலாட்சியின் வாழ்வும் படைப்பும்:

1881-ஆம் ஆண்டு வெங்கட்ராமய்யர், சுப்புலட்சுமி தம்பதிகளுக்கு ஒரேயொரு மகளாக விசாலாட்சி பிறந்தார். எங்கு பிறந்தார் என்று தெரியவில்லை. அநேகமாக மைசூர் சமஸ்தானத்திலாக இருக்கலாம். நல்ல இசைப் பேரறிஞராக விளங்கிய வெங்கட் ராமய்யர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, எட்டயபுரம், இராமநாதபுரம், மைசூர் ஆகிய சமஸ்தானங்களில் வித்வானாக இருந்திருக்கிறார். மைசூர் மன்னரின் சபையில் ஆஸ்தான வித்வானாகவும் விளங்கினார். தம் மகளைக் கல்வியில் சிறந்தவளாக்கினார். தமிழ், கன்னடம், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ந்தவளாக்கினார். வீணை, ஓவியம், தையல் போன்ற லலித கலைகளில் வல்லவளாக்கினார். வழக்கம்போல் சிறுவயதிலேயே விசாலாட்சிக்கும் அவர் அத்தை மகனுக்கும் திருமணம் நடந்தது. சில நாள்களிலேயே கணவன் ஏதோ நோயின் காரணமாக அகால மரணமடைந்துவிட்டான். எனவே, பதினான்கு வயதிலேயே கணவனை இழந்தவரானார் விசாலாட்சி. அந்நிலையிலும் பல எதிர்ப்புகளைச் சமாளித்து, பெண்களுக்கான மைசூர் மகாராணி கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். அந்தக் கல்லூரியிலேயே ஆசிரியையாகப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்த போதும் அதை அவர் ஏற்கவில்லை.

விசாலாட்சிக்கு இளமையிலேயே பத்திரிகைகள், புத்தகங்கள், நாவல்கள் படிப்பதிலும் கதை எழுதுவதிலும் அதிக ஆர்வம் இருந்தது. நாவல் எழுதுவது பெண்களுக்கு அழகல்ல என்ற எண்ணம் உடையவர் அவரது தந்தை வெங்கட்ராமய்யர். இதனையும் மீறி, 'லலிதாங்கி' என்ற நாவலை எழுதி,

அன்றைக்கு முதன்மையான பத்திரிகையாக இருந்துவந்த லோகோபகாரி வார இதழுக்கு அனுப்பிவைத்திருக்கிறார். அந்த இதழ் சுமார் 1900 வாசகர்களைப் பெற்றிருந்ததாக அதன் 1932-ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு இதழில் ஒரு குறிப்பு உள்ளது. லலிதாங்கி நாவல், பத்திரிகையில் தொட ராக வெளிவந்ததா என்று தெரியவில்லை. ஆனால், 1902-ஆம் ஆண்டில் லலிதாங்கி நாவல் லோகோபகாரி பிரசுரப் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. எழுதியவர் பெயர் லோகோ பகாரியின் ஸ்தாபகரும் பிரபல நூலாசிரியருமான வி.நடராஜ ஐயர் என்றே பிரசுரமாகியிருந்தது. அன்றைக்குப் பெண்கள் எழுதுவது அரிதாகவும் நடராஜ ஐயரின் நடைச் சிறப்பும் பெயரும் சிறப்புப்பெற்றதாகவும் இருந்ததே இதற்குக் காரண மாகலாம். லலிதாங்கி பிரசுரமான இரண்டு மாதங்களில் நாவலின் இரண்டாயிரம் பிரதிகளும் விற்றுத் தீர்ந்தனவாம். ஆசிரியைக்குச் சேர வேண்டிய தொகையினை நாவல் வெளி யீட்டாளர் உடனடியாக வழங்கினார். இதனால் விசாலாட்சி அம்மாளின் பெயர் பரவி, பணவரவும் ஏற்பட்டது. இதற்கு அடுத்ததாக 'ஜலஜாட்சி' நாவலும் இப்படியே வெளிவந்தது. அதுவும் அமோக வரவேற்பைப் பெற்றது. விசாலாட்சிக்குக் கிடைத்த புகழ், பணம் இரண்டையும் கண்ட தந்தை இவரது நாவல் எழுதும் முயற்சிக்குத் தடையாக இருக்கவில்லை. தம் எழுத்துப் பணிக்கு மைசூரைக் காட்டிலும் சென்னை ஏற்ற இடம் என்பதை விசாலாட்சி உணர்ந்து, கிடைக்கவிருந்த கல்லூரி ஆசிரியர் வேலை விட்டு, 1902-இல் சென்னைக்குக் குடிபெயர்ந்து, லோகோபகாரியில் உதவி ஆசிரியையாகச் சேர்ந்ததாக இராமாநுஜலு நாயுடு தெரிவித்துள்ளார். அக் காலத்தில் கணவனை இழந்த ஒரு பெண் இவ்வாறு தனித்து வாழ்வது புதுமையும் சவாலும் நிறைந்த காரியமாகும்.

நடராஜ ஐயரின் அயராத உழைப்பு, விசாலாட்சி அம்மாளின் எழுத்துத்திறமை ஆகியவற்றால் இவ்விதழ் வளர்ந்தது. சில ஆண்டுகளில் நடராஜ ஐயர் உடல் நலம் குலைந்தது. அவர் இறந்த பின்பு ஓராண்டிற்கு பத்திரிகை வெளிவரவில்லை. பின் னர் வைத்யநாத ஐயர் என்பவர் இவ்விதழின் உரிமையாள ராக ஆனார். இவருக்கும், விசாலாட்சி அம்மாளுக்கும் அடுத்த ஓராண்டிற்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனவே விசா லாட்சி அம்மாள் அவ்விதழ்ப் பணியில் இருந்து விலகினார். நடராஜ ஐயர் காலத்திலிருந்து விசாலாட்சி காலம் வரை நடந்த லோகோபகாரி பத்திரிகையின் இதழ்கள் ஒன்றுகூடக் கிடைக்கவில்லை என்று பெ.சு. மணி தெரிவிக்கிறார்.

1909-ஆம் ஆண்டில் 'ஹிதகாரிணி' பத்திரிகையைத் தொடங் கினார் விசாலாட்சி. குறைந்த சந்தாத் தொகையினை நிர்ண யித்து, இலாபம் கருதாது அதன் மூலம் தமக்கான சமூக சேவையைச் செய்து வரலானார். அந்த இதழோடு 'ஞானசந் திரிகா' என்ற மற்றொரு இதழையும் இவர் நடத்தினார். நடராஜ ஐயரால் நடத்த முடியாமல் நின்று போயிருந்த இதழ்தான் இந்த 'ஞானசந்திரிகா'.

1911 - 1912-ஆம் ஆண்டுகளில் விசாலாட்சியின் தாயும் தந்தையும் அடுத்தடுத்து மறைந்தார்கள். அப்போது பத்து வயதுள்ள ஒரு சிறுவனைத் தத்து எடுத்து, அவன் மூலம் தந்தைக்கு இறுதிக் கடன்களை நிறைவேற்றியுள்ளார். 1915 வரை ஹிதகாரிணி இதழ் வெளிவந்துள்ளது.

1902-இல் எழுதத் தொடங்கி, நாவல் உலகிலும், பத்திரிகை உலகிலும் முடிசூடா ராணியாகத் திகழ்ந்த விசாலாட்சி அம் மாள், உடல்நலக் குறைவால், 1926-இல், 42-ஆம் வயதில் காலமானார். அவரது மறைவைக் கண்டு மிகவும் மனம் வருந்தி, அவரது எழுத்துத் திறமையைப் போற்றி எஸ்.ஜி. இராமாநு ஜலு நாயுடு தனது அமிர்தகுணபோதினி இதழில் எழுதியது: 'அவரை (விசாலாக்ஷி அம்மாள்) ஒரு ஞானாசிரியை என்றும் சொல்லலாம். இளமை முதல் ஞானபக்தி வைராக்கியங்களில் சிறந்து நின்றார். அதி பால்யத்தில் பர்த்தாவை இழந்து தமது வாணாள் முற்றிலும் தபஸ்வினி போன்றும் காலங்கழித்தார். ஸங்கீதத்தில் அவருக்கிருந்த ஞானம் அபாரமானது. அதை நேரிற் பார்த்தவர்கள்தான் சொல்ல வேண்டும். கன்னடம், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் இந்நான்கு பாஷைகளிலும் நன்கு தேர்ந்தவர். இவரால் எழுதப்பட்ட நாவல்கள் ஒரு முப்பதுபோல் இருக்கலாம். தர்க்கத்தில் மிகவும் வல்லவர். இத்தகைய பிரபாவங்கள் கொண்ட இந்த மாது சிரோமணி யார் தமது 42-வது பிராயத்தில் சென்ற ஒக்ரோபர் மாதம் 25-ஆம் தேதியன்று சென்னை ராயப்பேட்டையிலுள்ள தமது லலிதா விலாஸ மாளிகையில் காலஞ் சென்று விட்டாரென்று அறிய மிகவும் துக்கிக்கின்றோம். 'விசாலாக்ஷி' எனும் ஞானா சிரியை அஸ்தமனமானதால் அவரால் அறிவுச்சுடர் கொளுத் தப்பட்ட நாம் இப்போது இருளில் அகப்பட்டு விழிக்கின்றோம், நம்முடைய வியஸனத்தைப் பரிகரிப்போர் யார்? பகவானே! உம்முடைய யோசனையும் காரியமும் அற்ப மனி தர்களாகிய எங்களால் அறிய முடியுமோ? மிகச்சொற்ப வயதில் அதி சீக்கிரத்தில் ஜீவன் பிரிந்தது பரம துக்கத்துக் கிடம். பத்திரிகை உலகத்துக்கும், முக்கியமாய் ஸ்திரீ ஸமூகத்திற்கும் அவரது அந்தியம் அளப்பரிய பெரும் நஷ்டமாகும். ஞான கலா விலாஸினியான இவ்வம்மையின் எதிர் பாராத வியோகத்தை நினைக்குந்தோறும் எம்முடைய மனம் துக்கத்தால் மூடப்படு கிறது. ஆகவே, இச்சமயம் எதுவும் எழுதத் தோன்றவில்லை. அவரது குடும்பத்தாருக்கு நமது அநுதாபம்.'

பண்டிதையின் காலத்தில் எழுதிவந்த மலைமகள், தாமரைப் பெண் ஆகியோருக்கும் அவருக்கும் இடையிலான சில தொடர்புகளை மட்டும் தேவை கருதி இங்கே பார்க்கலாம்.

தாமரைப்பெண்ணின் நாவல்கள் எதுவும் இப்போது கிடைப் பதில்லை என்பதால், தாமரைப்பெண் என்ற புனைபெயரில் எழுதிய ஒரு பெண் எழுத்தாளரைப் பற்றிய பண்டிதையின் பார்வையைச் சிறிது விரிவாகவே இங்கு பார்த்து விடுவோம்.

ஹிதகாரிணி இதழில் புஸ்தக வரவு பகுதியில் 'தாமரைப் பெண்' என்ற எழுத்தாளர் எழுதிய 'கோமளம் காஞ்சி யாத் திரை' என்ற நாவலின் மதிப்புரை ஒன்று, ஆசிரியரின் சமூக, சாதிப் பின்னணியைக் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. அத் துடன் நாவலின் சிறப்பினைப் பட்டியலிட்டு அதன் மூலம் ஆசிரியரை ஊக்கப்படுத்தியுள்ளது.

கோமளம் காஞ்சியாத்திரை: இப்பெயர் கொண்ட ஒரு அழகிய புஸ்தகம் 'தாமரைப்பெண்' என்ற நாமம்பூண்ட பிராமண மாதால் எழுதப்பட்டு வெளிவந்திருக்கிறது. இதில் ஹிந்துக் களின் ஸ்தல யாத்திரை புத்ர வாத்ஸல்யம், பதி பக்தி, குரு பக்தி, தெய்வ பக்தி, குமாரர்களின் கிருகிணிகளை நடத்தும் உத்தம மார்க்கம், வித்யா சாதனம் முதலியவைகள் விசேச

மாய் அடங்கியுள. ஸ்ரீவைஷ்ணவர்களின் சம்பிரதாயங்களும் அவர்களின் அபிப்பிராயங்களும் சகோதர பிரீதி வாத்சல்யங் களும் உத்யோக விமர்சைகளும் விவரமாய் எழுதப்பட்டிருக் கின்றன. நமது நாட்டு ஸ்திரீகள் உத்தம வித்யாப்யாசம் செய்து தங்கள் புத்தியை சத்விசயத்தில் வெளியிட்டுக் காட்டு வது மிக சிலாகிக்கத்தக்கதே ஆகும். நாகரீக காலத்து ரமணி கள் தங்கள் காலத்தை வீணில் கழிக்காமல் தங்களைப் போன்ற சகோதரிகளுக்கும் மக்களுக்கும் தேசத்துக்கும் நன்மை தரும் விசயத்தில் செலவிடுவார்களானால் நமது நாடு அதிசீக்கிரத் தில் அபிவிருத்தியடையும் என்பதில் சந்தே கமுண்டோ? படித்ததற்கு அடையாளமாய் கிரந்தம், உபந்யா சம், உபாத் யாயனி முதலிய தொழில்களை நமது சகோதரிகள் கையாடி வருவார்களாகவும். புஸ்தகம் சுமார் 200 பக்கம் கொண்டதா யும் 8 அணா விலையுடனும் தமிழ்நாட்டு சகோதர சகோதரி கள் அவசியம் வாங்கிப் படித்து கிரந்தகர்த்தினியை புரோத் சாகப்படுத்துவார்கள் என்று நம்பியிருக்கிறோம். (ஹிதகாரிணி, ஜூன் 1909)

இதில் பெண் கல்வியும் எழுத்தறிவும் மத, சமயப் பிரதிகளைக் கற்று அதன்படி நடந்து அதையே பிற பெண்களுக்குப் போதிக்கப் பயன்படுவது உன்னதமாகக் காட்டப்பட்டிருப் பதைக் காணலாம். தாமரைப் பெண்ணின் மற்றொரு நாவ லின் அறிமுகமும் ஹிதகாரிணியில் புஸ்தகங்களின் வரவு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பிரேமகாந்தன்: இது கோமளம் காஞ்சி யாத்திரை எழுதின தாமரைப்பெண்ணால் தமிழில் வரையப்பட்ட ஓர் கதையாகும். தற்கால நாகரிகமும், ஸ்நேகத்தின் பலனும், தர்மத்தை எண்ணி வாழ்பவருக்கு நன்மையே கிட்டுமென்பதும், ஸ்திரீபுருசர் களின் மனம் ஒன்றுபட்டால் மனிதர்களால் மாற்றமுடியாமல் தம்பதிகளின் இஷ்டம் போல் மணம் செய்து தீரவேண்டும் என்பதும் இதில் அடங்கியுள. இதன் விலை 12 அணா. வாங்க விரும்புவோர்கள் ஹிதகாரிணி ஆபீசுக்காவது அல்லது கிரந்தகாரரிடமாவது பெற்றுக்கொள்ளலாம். (ஹிதகாரிணி, ஏப். 1912)
இவ்விதம் ஓர் பெண் எழுத்தாளரின் படைப்பிலக்கிய முயற்சி களைத் தொடர்ந்து ஹிதகாரிணி ஆசிரியர் விசாலாட்சி அம் மாள் ஊக்குவித்ததும் ஆதரித்ததும் அக்காலகட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதவேண்டும்.

மலைமகள் என்ற பெண் எழுத்தாளர் பற்றி பண்டிதை ஏன் எதுவும் சொல்லவில்லை என்று தெரியவில்லை. மலைகளின் அமிருதவல்லி (1910) நாவலின் ஆசிரிய முன்னுரையில் 'இப் புத்தகத்தை அச்சிடுவதற்கு மிகுந்த சிரமமெடுத்துக் கொண்டு பல விதத்திலும் உதவி செய்த மாது ஸ்ரீ பண்டிதை விசா லாட்சி அம்மாள் அவர்களுக்குக் கடவுள் அனுக்கிரகம் பரிபூரணமாய் உண்டாகும்படி. பிரார்த்திக்கிறேன்.' என்று நன்றி தெரிவித்துள்ளார்.

மலைமகள், தனது முன்னோடியான பண்டிதை விசாலாட்சி யின் நாவல்கள் பற்றியும், தம் முரளீதரன் நாவலில் பாத்திரத் தின் கூற்று மூலம் கவனப்படுத்தியுள்ளார். ஒரு பெண் எழுத் தாளர் தமது கதையில் இடம்பெறும் கதாபாத்திரம் ஒன்றின் மூலம் சமகால, சற்று மூத்த மற்றொரு பெண் எழுத்தாளரைத் தம் கதையோட்டத்தில் சாமர்த்தியமாகப் புகுத்திக் குறிப்பிடு வதையும் மதிப்புரையாகவே கொள்ளலாம் :

'வந்தவர், நாற்காலியின் பக்கத்தில் வந்து 'குட் ஈவினிங்' என்று கூறவே, அவள் திடுக்கிட்டு எழுந்து நின்றாள். 'என்ன, வந்தவனைக்கூடத் திரும்பிப்பாராமல் வாசிப்பு மிகப் பிரமாத மாக இருக்கிறதே! அப்படி ஸ்வாரஸ்யமாய் என்ன படித்துக் கொண்டிருந்தாய்?' என, அவள், 'நன்னாருக்கு, காலம்பர போட்டுண்டு போன உடுப்பைக் கூட கழட்டி வைக்காமல் இதென்ன கேள்வி? இது விசாலாட்சி அம்மாள் போட்ட புஸ்தகம் என்று மத்தியானம் ஒருத்தன் வாசலில் விலைக்கும் கொண்டு வந்தான். அவளும் நம்பளைப் போல பொம்மனாட்டி தானே, என்னதான் எழுதியிருக்கிறாள் பார்ப்போம் என்று வாங்கினேன். படிச்சவாளுக்கும் படியாதவாளுக்கும் வித்தியா சமில்லையா? அப்போ கையிலெடுத்தவள் இப்போ நீங்கள் வந்தப்புறம்தான் மூடினேன். போருமா விபரம்? இனிமேலாகி லும் உடுப்பு கழற்றலாமா?' என்றாள். (முரளீதரன், பக்கம் - 9.)

மலைமகளைப் பற்றி, 'முன்னோடிப் பெண் எழுத்து' வரிசை யில் மலைமகளின் முரளீதரன் நாவலைப் பதிப்பித்து, முன் னுரையில் பல தகவல்களை அளித்துள்ளேன். தேவையா னோர் அங்கே மற்றதைக் காணலாம்.

●

ஆரியகுமாரியும் ஜெயத்சேனாவும்:

இனி நான் மறுபிரசுரம் செய்த பண்டிதையின் இரு நாவல் களைப் பற்றி மட்டும் விரிவாகப் பார்க்கலாம். எனக்குக் கிடைத்த பண்டிதை விசாலாட்சி அம்மாளின் நாவல்களில், ஓரளவு அவரை பிரதிநித்துவம் செய்யும் படைப்புகளாக 'ஆரியகுமாரி' (1910), 'ஜெயத்சேனா' (1911) ஆகிய இரு படைப்புகளைத் மட்டும் தேர்ந்தெடுத்ததற்கு சில நியாயங் களைக் கூறலாம் என்றாலும், இன்றைய வாசகர்களை குறைந்தபட்சம் இவை வாசிக்க வைக்கும் என்பதே எதிர் பார்ப்பாகும். அவரது முதலிரு நாவல்களும் சுவாரஸ்ய மானவை என்றாலும், அவை வங்க நாவல்களின் பாதிப்பில் எழுந்தவையாக இருக்கலாம் என்றும் எழுத்துப் பயிற்சிக்காக முயன்றிருக்கலாம் என்றும் சந்தேகம் எழுகிறது. என் வசம் உள்ள அவரது பிற்கால நாவல்களில் ஆரியகுமாரி, ஜெயத் சேனா, ராஜப்ரபா ஆகியவையே படிப்பதற்கு ரசமானவையாய் எளிமையானவையாய் சிறுநாவல்களாய்த் தோன்றின.

- **ஆரியகுமாரி (1910):**

ஜி.சி. லோகநாதம் பிரதர்ஸ் - கார்டியன் அச்சுக்கூடத்தில் 1910-இல் முதல் பதிப்பாக வந்த ஆரியகுமாரி நாவல் 2000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

யஷ்வந்தபுரா என்ற இடம் பெங்களூருவின் வடமேற்குப் பகுதி யில் இருப்பது. ஆரியகுமாரி நாவலில் முதல் பக்கத்திலேயே வரும் கடிதம் ஒன்றில் எசவந்தபுரம் என்று இடம் தெரிவிக் கப்பட்டிருப்பதிலிருந்து, கதைக்களமாக இந்த ஊர் அமைந் திருப்பதை ஊகிக்கலாம். மேலும் மைசூரில் வளர்ந்தவர் விசாலாட்சி அம்மாள் என்பதால் இந்த இடம் கதைக்களமாக விளங்குவதன் காரணம் புரிகிறது. புதுநகரம் என்று பின் பகுதிக் கதையில் வருவது பெங்களூருக்கு அருகில் உள்ள

ஒரு நகரமாகலாம். பண்டிதையின் ஆரம்பகால நாவல்களில் வங்காள ஊர்களே பெரிதும் வந்திருக்கின்றன. சிலசமயம் ராஜபுதனம், அரிதாக சென்னை போன்ற நகரங்களும் வருவதுண்டு. மற்றபடி முன் நாவல்களின் வழக்கம் போல், வங்காளத்திலும் கர்நாடகத்திலும் தமிழகத்திலும் அதிகம் புழங்கும் கிருஷ்ணகுமார், ஹரிகுமார், ஆத்மநாதன் காலாந்தகன், களிங்கசேனன், சகடகன், பிங்களகன், துச்சீலன், பீமன், மோகனதாஸ், கிருஷ்ணதாஸ் போன்ற வடமொழிப் பெயர்களே ஆரிய குமாரி நாவலிலும் வருகின்றன.



பருவமெய்தாமை காரணமாக, மனதளவில் கணவன் மனைவியாக வரித்துக்கொண்டு வாழ்ந்தாலும் வெளிப்படையான திருமணம் நடக்க ஓர் ஆண்டு இருக்கும் நிலையில் காதலன் சாஸ்திரப் படிப்புக்காக தீவிரப் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்துடன் இமயமலைப் பகுதிக்குச் செல்ல நேர்ந்துவிட்டதால், அவனைப் பிரிய மனமில்லாமல் முரண்டு பிடிக்கிறாள் காதலி. கதை ஆரம்பத்தில் இந்தப் பிடிவாதப் போக்கு வாசகருக்கு சலிக்கக் காட்டப்படுவதன் நோக்கம், கதையின் பிற்பகுதியில் பிரிந்திருக்கும் கட்டாயத்துக்கு ஆளான அவளை வில்லனாக வரும் ஆத்ம நாதன் பலவிதத் தொல்லைகளை விளைவிக்கும் போதே விளக்கம் பெறுகிறது.

பண்டிதை விசாலாட்சி அம்மாளின் நாவல்களை நான் பதிப்பித்த முறை பற்றி இங்கே சிறிது சொல்லவேண்டும். கிரந்த எழுத்துகள் பலதையும் ஆசிரியை அக்கால வழக்கப்படி வடமொழிச் சொற்களுக்காகப் பயன்படுத்தியிருக்கிறார். அவைகளில் இன்று அவசியமற்ற உறுத்தலாகத் தெரியும் ஸ, க்ஷ (ச, ட்ச) ஆகிய இரு வரி வடிவங்களை மட்டும் உச்சரிப்பு மாறவில்லை என்பதால் கூடிய வரை தவிர்த்திருக்கிறேன். மற்ற கிரந்த எழுத்துக்களை அப்படியே விட்டிருக்கிறேன். லோகோபகாரி ஆசிரியர் வி. நடராஜ ஐயர் (1895 - 1906) வடமொழிச் சொற்களை மிதமற்றுக் கலந்து எழுதும் நடைக்குப் பிரசித்தி பெற்றவர். அவருடைய வழிகாட்டுதலைப் பெற்ற விசாலாட்சி அம்மாள் தாமும் இடைக்கால நாவல்களில் அளவுக்கதிகமாகவே வடசொற்களைக் கலந்திருக்கிறார். அதற்காகவும் மரபான பெண்ணின் பெருமையைச் சித்தரித்த தற்காகவுமே சிருங்கேரி பீடத்தால் பண்டிதை என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறார். ஆனால், பிற்காலத்தில் தம் ஆரம்பகால நாவல்களினைப் போலவே வடசொற்களையும் கிரந்த வடிவங்களையும் மிதமாகவே கையாண்டிருக்கிறார்.

பண்டிதை விசாலாட்சியின் நாவல்கள், பிள்ளையார் சுழியாக 'ஓம் நடராஜாயை நம:' 'ஓம் லலிதாம்பிகாயை நம:' என்று தொடங்கி, 'ஓம் தத் ஸத்:' என்று மங்களம் பாடி நிறைவை அடையும். ஆரியகுமாரி நாவலும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆரியகுமாரி நாவலில் 'பரிச்சேதம்' என்று அத்தியாயங்கள் குறிக்கப்பட்டுள் ளன. பரிச்சேதம் என்றால் சிறுபகுதி (Part / Division). பண்டிதையின் சில பிற்கால நாவல்களில் மட்டும் இப்பகுப்பைப் பார்க்கலாம்.

பதி சேவையே பெண்ணின் பிறவிப் பயன் என்பதான கதைக் கருக்களே விசாலாட்சி அம்மாளால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்கால வழக்கம் இதை மீறியதுமல்ல. கணவனைப் பிரிந்து பரிதவித்திருத்தல், அதனால் மற்றவர்களால் அவளுக்கு வரும் சங்கடங்கள், கணவன் இடையில் மாயமாக மறைந்து விடுதல், மாறுவேடத்தில் வந்து தேவையில்லாமலே பல சாகசங்களைச் செய்து முடிவில் அவளை ஆட்கொள்ளுதல் என்ற கதையோட்டமே விசாலாட்சி அம் மாளின் நாவல்களின் அனைத்து நாவல்களிலும் தொடர்ந்து வருகிறது. ஆரம்ப நாவல்களில் பெண்ணும் பிரதாப முதலியார் சரித்திர ஞானாம்பாள் போல மாறுவேடங்கொண்டு சாகசங்கள் புரிகிறாள். ஆனால், பிற்கால நாவல்களில் பெண்ணின் சாகசத்துக்குப் பதில் ஆணின் மாறுவேட சாகசமே பிரதானமாகிறது. விசாலாட்சி அம்மாள் கணவனை இழந்ததுவும் மண வாழ்க்கை கனவானதும் அதைப் பற்றிய கற்பனை உலகம் விரிந்ததும் பெண்கள் கல்லூரியில் படித்ததும் பிறகு தனித்துத் துணிச்சலாகச் சென்னை வந்து, எழுத்து, பத்திரிகை, பதிப்பு, விற்பனை என்று சாகசங்கள் புரிந்ததும், அவரது நாவல் கதைக் கருக்களில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தின என்ற ஆராய்ச்சி விமர்சனம், படைப்பியலின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதாகத் தோன்றினாலும் சிறிதே கவனத்துக்குரியது தான்.

இருண்டகால நாவல்கள் என்று சொல்லப்படுபவைகளை பல மடாதிபதிகளும், தமிழ்ப் பண்டிதர்களும், ஜட்ஜுகளும், அரசாங்க உயர் அதிகாரிகளும், ஆராய்ச்சி அறிஞர்களும், கல்வியாளர்களும் புகழ்பெற்ற அரசியல்வாதிகளும் பலபடப் பாராட்டி வரவேற்று ஆரத்தி எடுத்திருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்ப் பண்டிதர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் ரெயினால்ட்ஸ் வகை ரொமான்ஸ்களையே இலக்கியமாக ஆராதித்திருக்கிறார்கள். அந்த வகையினத்திலேயே தாங்களும் எழுதியிருக்கிறார்கள். ஆரம்பகால நவீன இலக்கியத்தின் மீதான ரசனை, விமர்சன அளவுகோல்கள் அவ்வளவுதான். அடுத்து பத்திரிகைத் தொடர்கதைகள் தாம் ஆதிக்கம் செலுத்தின. பிற்காலத்தில் தான் வெகுஜன எழுத்து, ஜனரஞ்சக எழுத்து, சீரிய இலக்கிய எழுத்து என்ற பாகுபடுத்தல்கள் பிறந்தன.



சிருங்கேரி சங்கர மடாதிபதி சதானந்த சரஸ்வதி சுவாமிகள் விசாலாட்சி அம்மாளின் நிர்மலா நாவலைச் சிலாகித்துப் பாராட்டுதல்களைத் தெரிவித்திருக்கிறார். அப்பாராட்டை பிரக்யாதி பெற்ற ராயபகதூர் நரஸிம்ஹ ஐயங்கார், லோகோபகாரியின் சப் எடிட்டருக்கும் எடிட்டருக்கும் அறிவித்திருக்கிறார். சிருங்கேரி மடம்தான் விசாலாட்சி அம்மாளுக்கு பண்டித ரத்னா என்ற பட்டத்தையும் வழங்கியிருக்கிறது என்றும் தெரிகிறது. இவரைப் போலவே அசலாம்பிகை அம்மையார் போன்ற சில பெண் எழுத்தாளர்கள் பண்டிதை பட்டத்தை வாங்கியிருக்கிறார்கள். விசாலாட்சி அம்மாள் பிறகு பண்டிதை என்ற பட்டத்தையும் நாவலிஸ்ட் என்ற பட்டத்தையும் தொடர்ந்து தம் நாவல் முகப்புகளில் பயன்படுத்தியுள்ளார்.

- **ஜெயத்சேனா (1911):**

ஆரியகுமாரி நாவலின் கதைக்களத்தை ஏறக்குறைய ஒத்தது தான் ஜெயத்சேனா நாவலின் கருக்களமும். இரண்டிலும் மாண்டுபோனதாகக் கருதப்பட்ட கணவர்கள், மாறுவேடத்தில் வந்து சாகசங்கள் புரிந்து தம் நாயகிகளை மீண்டும் அடைந்து அவர்களை பதிசேவை என்ற மோட்சசாதனத்தைக் கைக்கொள்ளவைக்கிறார்கள். ஆரியகுமாரியில் வில்லனை அடக்குதல் அவனது கொள்ளையரை அடக்குதல் என்ற சாகசங்கள் தேவைக்கு அதிமாக உண்டு. ஆனால் ஜெயத்சேனாவில் அந்த தீர சாகசங்கள் இல்லாமல் சரச சாகசங்களே உண்டு.

கல்பாவதி என்ற பெயர் மைலாப்பூர் கபாலீச்வரர் சமேத கற்பகாம்பாள் என்பதில் பிறந்திருக்கிறது. கல்பாவதி-ரவிகேசரி, ஹரேசன்-மனோன்மணி, சுந்தரி-ரகுநாதன், ஜீவநாதன்-ஜெயத்சேனை என்பன பாத்திரப் பெயர்கள். மகாபாரதத்திலும் புராணங்களிலும் ஜெயத்சேனா (வெற்றி+படை) பெயரில் பல ஆண்கள் வருகிறார்கள். ஜராசந்தனின் மகன் ஜெயத்சேனா. ஒரே ஒரு பெண் பெயரும் ஜெயத்சேனா என்று வருகிறது. நாவல் தலைப்பு ஜெயத்சேனா என்றிருந்தாலும், கதையின் உள்ளே சில சமயம் ஜெயத்சேனை என்ற பெயரும் வருகிறது. பண்டிதை தமது நாவல்களுக்கு இன்று விசித்திரமாகத் தெரியும் சமஸ்கிருதப் பெயர்களையே வைத் துள்ளார்.

'கல்பாவதீ! நீ என்ன சொல்லுகிறாய்? உனக்கு விவாகம் செய்ய எண்ணியிருக்கிறேன். உன் தந்தை ஆசார சீர்திருத்தக்காரராய் இருக்கிறாராம். கல்யாணம் செய்யக்கூடாது என்று தடுக்கிறார். 20-வது வயதில் நீ இஷ்டப்படும் புருசனுக்கு உன்னைத் தாரைவார்த்துத் தரப் போகிறாராம் உன் பிதா! பிராம்மண ஜாதியில் பிறந்து கன்யாதானம் செய்து கொடாமலிருப்பது மகா பாபம்... 30 வயதுள்ள ஓர் அழகிய மாதுவான மனோன்மணி என்ற தாய், தாம் அருமையாய்ப் பெற்றெடுத்த பனிரண்டரை வயதான மகளிடம் இப்படிச் சொல்லிக் கொண்டிருப்பதாக நாவல் தொடங்குகிறது. இந்தப் பாணி, பின்பு வை.மு. கோதைநாயகி அம்மாள் தம் எல்லா நாவல்களிலும் பயன் படுத்திய தொடக்க உத்தி.

புருசனோடு வாழ்ந்து புத்திரர்களைப் பெற்று மாமி மாமனைப் பணிந்து நாத்தி ஓரகத்திகளுடன் நேசமாயிருந்து நற்பெயரை எடுப்பதே ஸ்திரீகளின் கடமை என்ற மரபான மனம் உள்ளவள் அந்தத் தாய். இரண்டாம் தாரத்தை ஏற்றுக்கொள்ளும் முதல் தாரம் பண்டிதையின் நாவல்கள் பலதிலும் வருகிறாள்.

தேடித்தேடி அலைந்தாலும் தமது ஜாதிக்குள்ளிருக்கும் பிள்ளைகளுக்குத் தானே தன்னைப் பிற்காலத்தில் மணம் செய்து கொடுக்க நினைத்திருக்கிறார் தந்தை என்றே மகள் நினைக்கிறாள். தாயின் சகோதர சகோதரிகள் அவள் வீட்டுக்கு வருகிறதில்லை. அவளை ஜாதியிலிருந்து நீக்கிவிட்டதாகத் தெரிவிக்கிறார்கள். பிராமண வகுப்பில் வைதவ்யம் அடைந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள சட்ட விதிகளை அளவிடப் போமா? - என்று, ரவிகேசரி இறந்ததாகச் செய்திவந்தபோது, நாவலில் இரண்டு பக்கத்துக்கு கணவனை இழந்த பெண்களுக்கு நிகழும் கொடுமைகளைப் பற்றி விவரிப்பு வருகிறது.

விதவைத் திருமணம் சட்டபூர்வம் ஆக்கப்பட்டது (1856). சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் கலப்புத் திருமணம் அனுமதிக்கப்பட்டது (1872). பெண்ணுக்குக் குறைந்தபட்சத் திருமண வயது 12 ஆக உயர்த்தப்பட்டது (1891). இவை சட்டங்கள்தானே? நடைமுறை இன்றும் வேறுதானே? எனவே பல்லாரியில் வசிக்கிற, உலகம் தெரியாமல் ஆசார சீர் திருத்தம் பேசும் கணவனுக்குத் தெரியாமல், தார்வாரிலுள்ள அவனுடைய சகோதரி குடும்பத்துடன் கூட்டுச் சேர்ந்து, மாமன் மகன் ரவிகேசரிக்கு ரகசியத் திருமணம் செய்விக்கிறாள் தாய். படிக்க வெளிநாடு சென்ற ரவிகேசரி திரும்பி பம்பாய் வந்திறங்கிய போது, கொள்ளை நோயால் இறந்து விட்டதாகச் செய்தி கிடைக்கிறது. மரணத்திலிருந்து டாக்டர் ஒருவரால் தப்பிய ரவிகேசரி, உருத்தெரியாமல் உடல் மாறியிருந்ததால் ரவிகேசரியின் ஆருயிர் நண்பன் ஜீவநாதனாக, தற்போது சென்னையில் இருக்கும் கல்பாவதியைச்

சந்திக்கிறான். தான் மரணமடையப்போவதாகவும் ஜீவநாத னையே திருமணம் செய்து சந்தோசமாக வாழும்படியும் கணவன் எழுதிய கடிதத்தைக் கண்டு திகைக்கிறாள் கல்பா. மீண்டும் பம்பாய் சென்று அதே டாக்டர் மூலம் பழையபடி நல்ல உருவத்தையடைந்த ரவிகேசரி, திரும்பி வந்து, தான் ஜெயத்சேனா என்பவளைத் திருமணம் செய்துகொண்டதாகக் கூறி, தம் வீட்டு விருந்துக்கு கல்பாவின் குடும்பத்தார் அனை வரையும் அழைத்து, ஜெயத்சேனா என்ற பெயரில் வடித்து வைத்திருந்த கல்பாவதியின் சிலையைக் காட்டி, மறுபடியும் தம்பதிசமேதராய் ஆகிறார்கள். பதிசேவை பக்தியின் மகத்து வத்தை அவள் தம் சிநேகிதிகளுக்கு பிரசங்கம் புரிவதுடன் மங்களமாகக் கதை முடிகிறது.

பண்டித விசாலாட்சி அம்மாளால் 1909-இல் தொடங்கப்பட்ட ஹிதகாரிணி என்ற இதழ்ப் பெயர் அன்றைய புழக்கத்தி லிருந்த ஒரு சொல்லாகவே தெரிகிறது. அம்பேத்கர் (பகிஸ் கிருத ஹிதகாரிணி சபை), கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு (ஹிதகாரிணி சமாஜம்) போன்றோர் தொடங்கிய அமைப்பு களில் இப்பெயரின் சாயலைக் காணமுடிகிறது. ஹிதகாரிணி என்பதன் பொருளாக கன்னட அகராதி - a woman who comforts, brings solace, welfare, etc. - என்று கூறுகிறது.

லோகோபகாரியில் துணையாசிரியராகப் பணியாற்றிய அனு பவம், விசாலாட்சி அம்மாளுக்குத் தாமே ஓர் இதழைத் தொடங்கி அதற்கு ஆசிரியர் பொறுப்பும் ஏற்று நடத்தும் துணிவையும் நம்பிக்கையையும் திறத்தையும் வாசக மனப் போக்கை உணர்ந்து செயல்படும் சாதுரிய உத்திகளையும் கொடுத்துள்ளது எனக் கூறலாம்.

பண்டிதை விசாலாட்சி அம்மாளின் ஹிதகாரிணி பத்திரிகை பற்றி அவரது நாவல் புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விளம் பரம்:

'இத்தலைப்பெயர் கொண்ட ஒரு மாசப் பத்திரிகை, பண்டிதை விசாலாட்சியம்மாளால் எளிய செந்தமிழ் நடையில் எழுதப் பட்டு அழகிய புஸ்தக ரூபத்துடன் வெளியாகிறது. இதன் வருஷ சந்தா ரூ.1-10-0 ஆகிறது. இதற்குச் சந்தாதாரராகும் ஒவ்வொருவருக்கும் பண்டிதை விசாலாட்சியம்மாளால் எழு தப்பட்டுள்ள அதி மனோகரமான ஜெயத்சேனா புத்தகம் இனாம் கொடுக்கப்படும். இனாம் புஸ்தகத்துக்குள் உறுதி மொழிச் சீட்டை வைத்து ஒரு ரூபா பத்தணா சார்ஜு செய்து வி.பி. மூலம் வசூலிக்கப்படும். ஹிதகாரிணியில் உள்ள விடயங்கள் அதிமதுரமானவை. அநாவசியமான சமாசாரங் கள் இல்லாத, நமது நாட்டு ஸ்திரீ புருஷர்களுக்கு அத்யா வசியமான பத்திரிகையாகும். சிறுவர், சிறுமிகளின் புத்தி தீட்சண்யம் அடையும்படி நீதி விடயங்கள் அடங்கியிருக் கின்றன. விருத்தர்கள், ஞானாபேட்சிகளுக்கு மிகப் பிரயோ ஜனத்தைத் தரக்கூடியது. ஒரு முறை ஹிதகாரிணியைப் படித்தால் அதன் அருமை தெரியும். மாதம் மாதம் குறித்த தேதிக்குள் பத்திரிகை வெளியாய் சந்தாதாரர்களின் ஹஸ் தங்களை அலங்கரிக்கும். மத தூஷணை, ராஜத் துவேஷம், பர நிந்தை முதலிய விரோத விடயங்கள் ஹிதகாரிணியில் வெளிவரா. தேச சேமம், ஜனங்க நன்மை, வித்யாபிவிர்த்தி, இகபர சாதகமான முக்கிய விடயங்கள், மகான்களின் திவ்ய சரித்திரங்கள், வேதாந்த ரகசியம், பலதேச வர்த்தமானம், மகிமை பெற்ற ஸ்தலங்களின் மூல காரணம், சத்தியத்தின் மகிமை, தர்மத்தின் பெருமை, பரோபகாரத்தின் பலன், ஆசாரத்தாலுண்டாகும் ஆரோக்கிய பாக்கியம், ஈசுவர பக்தி, இத்யாதி விஷயங்கள் வெகு அழகாயும் ரசமாயும் எழுதப் பட்டு ஹிருதயாநந்தத்தை விளைத்துக் கொண்டிருக்கும். மோகபாசத்தால் அலையும் மனதை ஓர் நிலையில் நிறுத்தும் மார்க்கத்தைப் போதிக்கிறது. டிம்மி நான்கு பாரம் கொண் டது. உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் முத்துக் கோர்த்தது போல் புதிய எழுத்துக்களால் அத்யத்புத விசயங்கள் அடங் கப் பெற்று ஹிதகாரிணி சோபிக்கும். 32 பக்கம் கொண்ட ஹிதகாரிணி வருச முடிவில் சுமார் 400 பக்கங்களுள்ள ஒரு அழகிய புத்தகமாய் ஜ்வலிக்கும் என்பதற்குத் தடை யுண்டோ? இதன் சந்தாதாரர்களுக்கு 8 அணா பெறுமான சத் விடயங்கள் அடங்கப் பெற்ற ஒரு அழகிய கதைப் புத்தகம் ஒவ்வொரு வருசமும் இனாம் கொடுக்கப்படும். ஜனங்கள் படித்து ஆனந்திக்க வேண்டும் என்பதே எமது நோக்க மானதால் குறைந்த சந்தாவும் புரோத்சாககரமான புத்தகமும் ஏற்படுத்தப்பட்டன. ஆரிய சிரோமணிகளும் பாஷாபிமானி களும் வித்யாபிலாசிகளும் கனதனவான்களும் இதை அன் போடு ஏற்று எமது பிரயத்தனம் சார்த்தகம் ஆகும்படி செய்வார்களென்று நம்பியிருக்கிறோம். புத்தகத்தின் விலை யாகிய 8-அணாவைக் கழித்தால் பத்திரிகை வருசம் முடிய ஒரு ரூபாவுக்கு வருமென்பதை நாம் சொல்லவும் வேண் டுமோ? ஹிதகாரிணியில் ஆறு மனோகரமான உத்தம ரமணிகளின் சரித்திரம் வெளியாகும். அவைகளின் பெயர் - ராஜசேகரி, கல்பவல்லரி, கவிகுஞ்சரி, லாவண்யரேகா, இந்திர நீலா, ரசிகவசனி. அநேக வருச காலம் ஹிதகாரிணி பிர யோசனப்படும் என்பதற்குச் சந்தேகமுண்டோ? விதேச சரித் திர வர்த்தமானங்கள் வெகு சுவாரஸ்யமாயிருக்கும். ஆரிய குல சிரோமணிகள் ஹிதகாரிணியை அபிமானித்து ஆதரிக் கும்படி பிரார்த்திக்கிறோம்.'

ஹிதகாரிணியைப் பற்றி மிக விரிவாகவே, ஆரியகுமாரி புத்தகத்தின் பின் இணைப்பில் தகவல்களைத் தந்துள்ளேன். என்னிடமுள்ள பண்டிதையின் பிற எட்டு நாவல்களைப் பற்றியும் பின்பொருமுறை விரிவாக எழுதுவேன்.

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் அபூர்வ சிந்தாமணியான அவருக்கு ஒரு இடத்தை ஒதுக்கிப் பெருமைப்படுவதை இன்றைய விமர்சகர்கள் வழக்கமாகக் கொள்ளவேண்டும். குறைந்தபட்சம் வை. மு. கோதைநாயகி அம்மாளுக்குக் கொடுக்கும் பாராட்டுக்களையாவது இவருக்கும் கொடுக்க வேண்டும்.



Kaala.Subramaniam@thaiveedu.com



- கிருங்கை சேதுபதி

புதுவையில் புதுமைச் சித்தரான பாரதி

இளமை உத்வேகமும், இலட்சிய வெறியும், விடுதலை வேட்கையும் உள்நின்று உந்தப் புரட்சி வீரராகப் புதுவைக் குள் புகுந்த பாரதியாருக்குப் பத்திரிகைப் பணியே முதன் மையாக இருந்தது. அதற்குப் பின்புலமாக நாட்டு விடுதலை ஓங்கிநின்றது.

திலகர் தலைமையை ஏற்ற புரட்சியாளர்களின் செயல் மைய மாகப் புதுவையை ஆக்க நினைத்த பாரதியார், ஸ்ரீஅரவிந்த ரையும், வ.வே.சு. ஐயரையும் விரைந்து வரவழைத்துக்கொண் டார். எண்ணம், எழுத்து, இயக்கம் எல்லாமும் விடுதலையை மையம் கொண்டதாகவே அமைந்தது. புரட்சிப் படைக்கு இளைஞர்களைத் திரட்டும் அளவிற்குப் பல்வேறு தொண்டர் கள் துணையாகி நின்றார்கள். எல்லாமும் ஆஷ் கொலைக் குப் பிறகு, செயல் குறைந்து கிட்டத்தட்ட நின்றே போனது. ஆங்கிலேய ஒற்றர்களின் கண்காணிப்பிற்கும், அவர்களின் சதிகளுக்கும் ஈடுகொடுப்பதில் காலத்தைச் செலவழிக்க வேண்டிய கட்டாயம். 'இந்தியா' முதலான இதழியல் இயக்கம் முற்றாக நின்ற நிலையில், அரவிந்தர் யோகத்தில் ஒடுங்கி னார். பாரதியார் படைப்புத் தவத்தில் இறங்கினார். புதுவை யில் வாழ்ந்த சாமியார்களின் தொடர்பினால், சித்த மனோ பாவம் அவரை மெத்த ஆட்கொள்ளத் தொடங்கியது. அதற் குக் குவளைக் கண்ணனின் கூட்டும் முக்கிய காரணம்.

•

யாப்பொழுங்கோடு செய்யுள் புனையும் கவிராயர்களின் மரபி லிருந்து முற்றிலும் மாறுபட்ட பாரதியின் பாடல்களின் புதுமை யும் பொதுமையும் பொலிந்தன. தேசபக்திக்கு நிகரான தெய்வ பக்தி உணர்வு ஓங்கியது. கூடவே, சித்த மனோபாவமும் இணைந்தது.

முன்னிக் கவிதை வெறி மூண்டு நனவழியப் பொங்கிப் பிரவ கித்த சொற்களின் கூட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய குறுங்காவியங்களை, ஈன்றெடுத்தது. வாசிப்பும், வாழ் வின் நேசிப்பும், புறவயமாகக் கண்டவற்றை அகவயமாக்கிப் பெற்ற அனுபவமும் அவரைக் கண்ணன் பாட்டுகளைப் பாட வைத்தன. கூடவே அவரிடமிருந்து பிறந்த குறும் பாடல்களில் தத்துவச் செறிவும், தன்னிகரற்ற தரிசனப் பாங்கும் ஒளிர்ந்தன.

எளிய சொற்களில் பல அரிய உணர்வுகளைப் பொதிந்த வண்ணம் பிறந்த பாடல்களைச் செவியேற்றவர்கள் பலர், பாடல் இலயத்தில் ஆழ்ந்த அவர்களால் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண வாய்க்கவில்லை. ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண விழைவோர்க்கு, அவர்தம் கம்பீரக் கானக் குரல் கேட்க முடியவில்லை. ஆனாலும், கேட்டவர்கள் சொல்லியவண்ணம் பாரதியாரின் பாடலுள் புகுகிறபோது, அவரின் மகாகவித்துவ தரிசனம் யாவர்க்கும் வாய்த்துவிடுகிறது.

அப்படியான உணர்வு நிலையில், பாரதி பாடிய 'யோகசித்தி' என்னும் வரம் கேட்கும் பாடல்களின் நிறைவாய் அமைந்த மூன்று பாடல்களை வாசிப்புக்கு உட்படுத்தினால், அவை, சராசரிப் பாடல்களில் இருந்து விலக்கம் பெற்று, 'பாரதி அறு பத்தாறு' பாடல்களின் வரிசையில் வைத்துச் சிந்திக்க வைக் கின்றன.

•

முதற்பாடல், சித்தர்கள் செய்யும் இரசவாதத்தை முன்வைக் கிறது. கூடவே, சித்தர்கள் செய்து காட்டும் சித்தாடல்களைச் சுட்டிச் செல்கிறது.

- கல்லை வயிரமணி ஆக்குதல்
- செம்பைக்கட்டித் தங்கம் எனச் செய்தல்
- வெறும்புல்லை நெல் ஆகப் புரிதல்
- பன்றிக்குட்டியை, ஆண் சிங்கம் ஆக்குதல்
- மண்ணை வெல்லத்(து)இனிப்புவரச் செய்தல்

ஆகிய ஐந்து சித்தாடல்கள் இப்பாடலில் இடம்பெறுகின்றன. இவை சித்தர்களின் இரசவாதச் செயல்களாகவும் அற்புதங்க ளாகவும் சித்தர்களின் வரலாற்றில் சுட்டப்பெறுகின்றன.

இவையெல்லாம் பாரதி செய்ததாகவோ, செய்யக் கற்றதா கவோ, செய்ய விரும்பியதாகவோ பதிவில்லை. அவையெது வும் அவரது நோக்கங்களாக இருக்கவும் இல்லை என்பதை இப்பாடலின் இறுதியடிகள் உறுதி செய்கின்றன.

இந்த இடத்தில் இவை தொடர்பான என் அனுபவச் செய்திக ளையும் சொல்லிவிடுகிறேன். என் இளவயதில், கண்கட்டி

வித்தை செய்யும் தெருக் கலைஞர்கள், மண்ணைச் சருக்க ரையாக்கித் தந்ததையும், காய்ந்த மாங்கொட்டையில் இருந்து புதிய மாங்கன்றினைத் தோன்றச் செய்ததையும் கண் டிருக்கிறேன். இரசவாதம் செய்த சித்தர்களின் செயலைக் கண்டவர்கள் சொல்லவும் கேட்டிருக்கிறேன்.

இந்தச் செப்படி வித்தைகளில் பாரதியாருக்கு நாட்டமில்லை. இவற்றுள் இருக்கின்ற விஞ்ஞானத் தன்மையைக் கொண்டு, மரபணு ஆராய்ச்சிகளின் மூலமாக, அறிவியல் ஆராய்ச்சி களது வளர்ச்சிகளின் காரணமாக இவற்றுக்கு இனமான புதி யவற்றை உருவாக்கலாம் என்ற நம்பிக்கை இப்பாடலின் அடி நாதமாக இருக்கிறது. (அதற்கான நம்பிக்கை நாற்றங்கால் களாக, பாரதியின் சமகாலத்திலேயே ஜகதீச சந்திர வஸு உள்ளிட்ட அறிஞர்கள் ஈடுபட்டிருப்பதையும் கருத்தில் கொள்ளலாம்.) கருத்து ரீதியான புரிதல் இது. ஆனால், இது கவிதையல்லவா? அதற்குக் கூடுதலான உணர்வும் உள்ள டக்கமும் இருக்கவே செய்யும். கவித்துவ நோக்கில் பின் வரும் சொல்லாடல்களுக்குத் தனி விளக்கம் உண்டு.

●

கல் - வயிரமணி, செம்புக்கட்டி - தங்கம், வெறும் புல் - நெல், பன்றிக்குட்டி - ஆண் சிங்கம், மண் - வெல்லம். இவையாவும் புறத்தே தரும் காட்சிப்பொருள்கள். இவற்றுள் உள்ளே துலங் கும் கருத்துப் பொருண்மை வேறு. அற்பத் தனத்தில் இருந்து, அற்புத நிலையை நோக்கிய நிலையில் மானுட ஆன்மாக் களை உய்விப்பது இதன் நோக்கம். இவற்றை முன்வைத்து, பின் சொல்லப்போகும் பாரதியின் கனவுக்கு 'என' என்பது இணைப்புச் சொல்லாகிறது. இத்தகு விந்தைச் செயல்களில் புறத்தே வித்தை காட்ட விரும்புகிற தெருக்கூத்தாடியல்லர் பாரதி. தேசத்தை இவ்விதம் உய்விக்கத் திட்டமிடும் விஞ் ஞான மெய்ஞ்ஞானி. அதனால்தான், இத்தகு விந்தைகள் தோன்றிட இந்நாட்டின் தொல்லைகள் தீர்த்து, உயர்வு, கல்வி, வெற்றி சூழும் வீரம், அறிவாண்மை ஆகியவற்றின் துணை யோடு, சேர்த்த செல்வங்களாலும், செய்யும் தொழில்களா லும், நாட்டைச் சூழ்ந்த கலியைப் போக்கி, அதன் புகழை உலக அரங்கில் நிலைநிறுத்த விழைகிறது பாரதியின் கவியுளம்.

கல்லாய், மண்ணாய், செம்பாய், அற்பப் புல்லாய், பன்றிச் சேயாய் (இருக்கவும் செய்த) - இப்பாரத மக்களைத் துச்ச மாய் எண்ணும் மிலேச்சர்களுக்கு முன்னால், இவர்களை வயி ரமணிகளாகவும், தங்கக் கட்டிகளாகவும், இவை நிகர்த்த பொன்னிறம் கொண்ட நெல் முதலான தானிய மணிகளாக வும், ஆண் சிங்கங்களாகவும், வெல்லத்தனைய இனிமை உடையவர்களாகவும் உயர்த்திக் காட்டக் கல்வியையும் அவ் வழி பெறும் அறிவாற்றலையும் அதன்வழி தோன்றும் ஆளு மையையும், வெற்றி தரும் வீரத்தையும் துணைகொள்ளச் சொல்கிறார். இவை மனித வளர்ச்சி. நாட்டின் வளர்ச்சிக்குப் பொருளாதார வளர்ச்சியும் அதற்குத் தேவையான தொழில் களின் பெருக்கமும் அவரது அடுத்தகட்ட திட்டங்களாக அமைகின்றன.

இவற்றைச் செயற்படுத்த, உள் ஆற்றலை ஒருமுகப்படுத்த முனைகிறார், பாரதி. அதற்குப் பக்தி மார்க்கம் துணை செய் கிறது. அவருக்குப் பழகிய பராசக்தி உபாசனை வலுவூட்டு கிறது. நேரே பராசக்தியை நோக்கி, 'அடி தாயே இவை உனக்கு அரியதாகுமோ?' என்று உரிமையோடு வினவுகிறார். - இவை

நாடும் படிக்குவினை செய்து - இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு(ம்) ஓங்கக் - கலி
சாடுந் திற(ன்)எனக்குத் தருவாய் - அடி
தாயே! உனக்(கு) அரிய துண்டோ?

என்பது பாரதியின் வாக்கு. அதாவது, 'இவற்றை நாடும் படியான செயல்கள் செய்து இந்த நாட்டவர் புகழ் எங்கும் ஓங்கிடக் கலியினைச் சாடும் திறமையை எனக்கு அருள் வாய்' என்று கேட்கிறார். இது பாட்டுத்திறத்தாலே இந்நாட்டு மக்களுக்கு நலம் பாலிக்கச் செய்கிற பாரதியின் நாட்டம்.

இந்த நாட்டம் மட்டும் போதுமா? நிலைநிறுத்த உரிய வழிகளை யும் உய்த்துணர்ந்து சொல்ல வேண்டாமா? இதற்கு அடுத்த நிலையில் அவரிடமிருந்து வேண்டுதல்கள் பிறக்கின்றன.

- மதிமூடும் பொய்மை இருள் எல்லாம் என்னை முற்றும் விட்டு அகல வேண்டும்.
- ஐயம் தீர்ந்துவிடல் வேண்டும்.
- புலைஅச்சம் போய் ஒழிதல் வேண்டும்

இவை மூன்றும் தனித்தனியான வேண்டுதல்கள். என்றாலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில் உள்ளவை.

சத்திய தரிசன நோக்கில் புலனாகும் உள்ளுணர்வை - புறச் சூழலின் தாக்குதலால் மதியாகிய அறிவை - முழுக்க மூடும் பொய்மை இருள், இல்லாது அழித்துவிடச் செய்யும். எனவே, என்னை - என் மதியை முற்றுகையிடும் இப்பொய்மை இருளானது என்னைவிட்டு முற்றாக அகலும்படியாகச் செய் தல் வேண்டும். ஒருவேளை அவை முற்றிலும் அகன்றாலும், இன்னும் சுற்றி நிற்கிறதா என்கிற ஐயமும், தான் நினைப்பது சரியாக நடக்கிறதா என்ற ஐயமும் தோன்றிவிடும். அதனை யும் தீர்த்துவிடல் வேண்டும். இவையெல்லாம் நிகழ்ந்த பிறகு, என்னால் இவை செய்ய முடியுமா? என்ற அற்பத்தனமாக அச்சம் வந்து சூழ்தல் செய்யும். அதையும் ஒழிக்க வேண்டும் என்று நிதானமாக நினைத்து நினைத்துப் பார்த்து, மெதுவாக மெதுவாகக் கேட்க வேண்டிய நிலையில் ஒருவித சலிப்புக்கு ஆளாகிவிடுகிறது கவிமனம்.

அதனால், 'இவ்வாறு யோசித்து யோசித்துப் பையப் பையச் சொல்வதற்கெல்லாம் எனக்கும் உனக்கும் நேரம் இல்லை. பிள்ளை தாயிடம் கேட்டா பெறவேண்டும்? கேளாது கொடுப் பவள்தானே தாய்.

எனவே, இந்த, நவீன பாரதப் போர்க்களத்தில் செயல் முற்றும் அற்ற நிலையில், அருச்சுனனைப் போல் நிற்கும் எனக்குக் கண்ணனாக இருந்து உபதேசம் செய்து காரியங்கள் அனைத் துக்கும் துணையாக நிற்க வேண்டும்.

முந்தைய பாரதப் போரில் விஜயனை முன்வைத்து பாண்டவர் களுக்குக் கண்ணன் மீட்டுத் தந்தது, இழந்த நாட்டை. இப் போதைய சூழலில், 'நீ கண்ணனாக இருந்து என்னை அருச்சு னனின் நிலையில் இருத்தி, இந்த வையகத்திற்கே தலைமை தாங்கும் மாண்பினைத் தருதல் வேண்டும்' என்று ஒருமுறை, பல முறை எனும் குறுகிய எண்ணிக்கையில் இல்லாமல் பல கோடி முறை தொழுது, காளியை, வலிய சாமுண்டியை,

ஓங்காரத் தலைவியைத் தன் இராணியாக பாவித்து வணங்கி பாரதி வேண்டுகிறார்.

இவ்வாறு, சித்தநிலை திரியாது செய்பணியில் தலைநிற்கத் திட்டமிடும் பாரதியின் யோக சித்தியின் இறுதி மூன்று பாடல் களில் மேலோட்டமான சித்த மனோபாவமும், உள்ளோட் டமாக, வளர்ச்சியை நோக்கிய செயல் திட்டமும் துல்லிய மாகத் தெரிகின்றன.

இனி, இப்பாடல்களைப் பார்க்கலாம்.

•

கல்லை வயிரமணி ஆக்கல் - செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல் - வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல் - பன்றிப்
போத்தைச் சிங்கஏ றாக்கல் - மண்ணை
வெல்லத்(து)இனிப்புவரச் செய்தல் - என
விந்தை தோன்றிட இந்நாட்டை - நான்
தொல்லை தீர்த்(து)உயர்வு கல்வி - வெற்றி
சூழும் வீர(ம்)அறி வாண்மை.

கூடுந் திரவியத்தின் குவைகள் - திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் - இவை
நாடும் படிக்குவினை செய்து - இந்த
நாட்டோர் கீர்த்திஎங்கு(ம்) ஓங்கக் - கலி
சாடுந் திற(ன்)எனக்குத் தருவாய் - அடி
தாயே! உனக்(கு) அரிய துண்டோ? - மதி
மூடும் பொய்மைஇருள்எல்லாம் - எனை
முற்றும் விட்(டு)அகல வேண்டும்.

ஐயம் தீர்ந்துவிடல் வேண்டும் - புலை
அச்சம் போய் ஒழிதல் வேண்டும் - பல
பையச் சொல்லுவ(து)இங் கென்னே! - முன்னைப்
பார்த்தன் கண்ணன் இவர் நேரா - எனை
உய்யக் கொண்டருள வேண்டும் - அடி
உன்னைக் கோடிமுறை தொழுதேன் - இனி
வையத் தலைமையெனக் கருள்வாய் - அன்னை
வாழி! நின்ன தருள் வாழி!

ஓம் காளி! வலிய சாமுண்டீ!
ஓங்காரத் தலைவி! என் இராணி!

என்று முடிகிறது பாடல்.

'வரங்கேட்டல்' என்று தலைப்பிட்டு எழுதிய இப்பாடல்களை, அச்சுக்கு அனுப்புகிறபோது, 'யோக சித்தி' என்று தலைப்பிட் டிருக்கிறார், பாரதி.

வரங்கேட்க வேண்டும் என்ற நினைப்பில் எழுதத் தொடங்கிய இப்பாடல்களின் வளர்ச்சி, பாரதியைக் கவிஞர் என்ற நிலையி லிருந்து மேலுயர்த்தி, யோகத்தில் ஆழ்த்திவிடுகிறது. சக்தியை முன்னிறுத்திச் சித்தத்தை ஒருமுகப்படுத்துகிறார். அவருக்குள் பதஞ்சலி யோக சூத்திரம் வந்து மலர்கிறது.

'யோகம் என்பது சித்த விருத்திகளை அடக்குதல்.(சூத்திரம் - 2)' கூடவே, அவர் வியாக்யானம் செய்த தொடர்களும் வந்தி ருக்க வேண்டும்.

'சித்த விருத்திகள் என்பன சித்தத்தின் இயக்கங்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கினையும் சேர்த்து மனி தருக்குள்ளே அந்தக் கரணம் (உட்கருவி) என்று சொல்லுதல் வேதாந்த சாஸ்த்திர முறை. அவையனைத்தையும் ஒன்றாக் கிச் சித்தம் என்று சொல்வது யோக சாஸ்த்திர வழக்கு. பார்வை என்னும் தொழிலுக்கு, வெளிக்ன். உட்கருவி சித்தம். இப்படியே அனைத்திற்கும் கொள்க. எனவே, எனது சித்தத் தைத் தவிர, எனக்கு உலகம் வேறு இல்லை. நான் ஒரு யானையைப் பார்க்கும்போது, புறத்தே நிற்கும் யானையை நான் பார்க்கவில்லை. அது காரணமாக என் சித்தத்துள் விழும் யானைச் சித்திரத்தையே நான் அறிவேன். எனக்கு உலகம் எனது சித்தமேயாதலால், என் சித்தம் எனக்கு வசப்ப டும்போது உலகம் எனக்கு வசமாய்விடும்.'

'அப்போது காண்பவன் தன் வடிவத்தில் நிற்கிறான்' (சூத்திரம் - 3), 'மற்றப்பொழுது விருத்திகளின் வடிவை ஏற்பான்' (சூத் திரம் - 4) என்கிற சூத்திரங்களுக்கு,

'காண்பவன் ஆத்மா. சித்தச் செல்களை அடக்கியபோது, ஆத்மா தன் நிஜ சொரூபத்தில் இருப்பது என்பது சூத்திரத் தின் பொருள். 'மற்றப் பொழுது' என்றால், சித்த விருத்தி களை அடக்காதபோது, ஒருவர் முதலையைப் பற்றி எண்ணு கையில், அவருடைய ஆன்மா முதலை வடிவம் பெற்று நிற்கும். 'நீ எண்ணுகிறபடியே ஆகிறாய்' - 'யத் பாவயஸி தத் பவஸி' என்றும், 'மனம் போல் வாழ்வு' என்றும் முன்னோர் சொல்லியிருப்பது எதிர்காலத்தை மட்டும் சுட்டுவதன்று. நிகழ் காலத்திலும் உண்மை. எப்போது உன் மனம் எதை நினைக் கிறதோ, அப்போதே நீ அதுவாகிறாய்.'

இந்த விளக்கங்களுடன் பாரதியாரின் 'யோக சித்தி' பாடல் களைப் படித்தால், பாரதியாரின் சித்த மனோபாவமும் தேச, தெய்வ பக்தி மனோபாவமும் நன்கு புலப்படும்.

பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரங்கள் படிந்த மனத்தின் பக்தி உணர்வாக, இப்பாடல்கள் பிறந்திருப்பதை உணர்த் தும் விதமாக 'யோக சித்தி' என்ற தலைப்பினை இட்ட பாரதி, இப்பாடலின் ஆசிரியராகிய தன் பெயர் தராது, 'ஓர் உத்தம தேசாபிமானி' என்று தனக்குப் பெயர் சூட்டிக்கொண்டும் இருக்கிறார்.

தன்னை ஒரு சித்தன் எனக் கண்டு காட்டுகிற இடங்களில் ஒன்றாக இந்த இடத்தை நினைக்க வைக்கிற இப்பாடல், மகாகவி பாரதியாரை, தேசியக் கவி என்ற நிலை கடந்த சர்வ தேசியக் கவியாக உயர்த்திக் காட்டுகிறது.

காரணம் இந்தப் பாடலைத் தத்தம் மொழிகளில் பெயர்த்துப் படிக்கும் எத்தேசத்தவரையும் ஓர் உத்தம தேசாபிமானியாக் கிவிடுவதோடு, அவரது சித்தத்தையும் ஒருமுகப்படுத்தி யோகப் பயிற்சி தந்து யோகியாக்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

sethupathi@thaiveedu.com





கம்பனின் கருவூலம் திறந்து...

- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

> ***நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களும், அறமற்ற வழியில் திறை வசூலிப்பவர்களும், பிறன்மனை விழைபவர்களும், அறக்கடவுளால் தண்டிக்கப்படுவர் என்ற கருத்தை மாரீசன் வாயிலாகக் கம்பர் காட்டுகிறார்.***

சென்ற மாதத் தாய்வீடு இதழில் கம்பராமாயணம், ஆரணியகாண்டத்தின் 7-ஆவது படலமாகிய மாரீசன் வதைப் படலத்தில் சூர்ப்பணகைக்கும் இராவணனுக்குமிடையே நடந்த உரையாடல்களின் இறுதியில், 'மூவுலகத்துக்கும் தலைவனாகிய நீ இவ்வாறு வருந்தவேண்டியதில்லை. நீ அங்கு சென்று சீதையைக் கவர்ந்துவா,' என்று சொல்லிவிட்டுச் சூர்ப்பணகை அம்மாளிகையைவிட்டு நீங்கிச் செல்கிறாள். சீதை மீதான காமம் இராவணனை மேலும் இறுகப் பற்றிக்கொள்ளத் தன்னையே மறந்து நின்றவன், இறந்தவர் மீண்டும் உயிர் பெற்று எழுந்ததைப் போலத் தன்னிலைக்கு மீண்டவன், தனது காமத்தீயைத் தணிப்பதற்கு ஏதுவாகச் சந்திரகாந்தக் கற்களைக் கொண்டு ஒரு மண்டபம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஏவலாளர்களுக்குப் பணிக்கிறான். அவன் சொன்னதை மனதால் உணர்ந்த தேவதச்சனாகிய விசுவகர்மா உடனே விரைந்துவந்து ஆயிரம் கால்கள் கொண்ட அழகான மணிமண்டபத்தை அமைத்துக் கொடுக்கிறான். மயன் என்னும் இத்தேவதச்சன் இராவணனின் மனைவியாகிய மண்டோதரியின் தந்தை என்பது இதிகாசச் செய்தியாகும். அவன் சமைத்த மண்டபத்தின் அமைப்பைக் கம்பர் இவ்வாறு வருணிக்கின்றார்:

காந்தம் அமுதின்துளிகால்வனகாலமீனின்
வேந்தன் னொளியன்றியுமேலொடுகீழ்விரித்தான்
பூந்தென்றல் புகுந்துறைசாரளமும் புனைந்தான்
ஏந்தும் மணிக் கற்பகச் சீதளக் காவிழைத்தான்

கம்ப. ஆரணிய. 716

காலமீனின் வேந்தன் ஒளி அன்றியும் - காலத்தைத் தெரிவிப்பனவாகிய விண்மீன்களுக்குத் தலைவனாகிய சந்திரனது ஒளி இல்லாதவிடத்தும், காந்தம் அமுதின் துளிகால்வன - அதிலிருந்து அமுதம் போலும் இனிய நீரின் துளிகளை வெளியே உமிழ்வனவானசந்திரகாந்தக் கற்களை, மேலொடு கீழ்விரித்தான் - அம்மண்டபத்தின் மேலும் கீழும் பரப்பினான், பூந்தென்றல் புகுந்துறைசாரளமும் புனைந்தான் - மலர்களின் நறுமணத்தைச் சுமந்துவரும் தென்றற் காற்று உள்நுழைந்து உலாவரக்கூடியதாகச் சாளரங்களையும் அழகாக அமைத்தான், ஏந்தும் மணிக் கற்பகச் சீதளக் கா இழைத்தான் - வேண்டுவார்க்கு வேண்டியவற்றைக் கொடுக்கக் கூடிய அழகிய குளிர்ந்த கற்பக விருட்சங்கள் அடங்கிய சோலையொன்றையும் அம்மண்டபத்தைச் சுற்றி அமைத்தான்.

சந்திரனின் ஒளிபடாத வேளையிலும் அவற்றிலிருந்து பெறப்பட்ட நீரைச் சொரியும் இயல்பினை உடையவை சந்திரகாந்தக் கற்கள் எனப்படுகின்றது. காமத்தின் வேட்கை மேலிட்டதால் சந்திரனின் ஒளியையே வெறுத்த இராவணனின் மேனியைக் குளிர்விப்பதற்கு அதன் ஒளி இல்லாமலே குளிர்ச்சியை ஏற்படுத்தும் சந்திரகாந்தக் கற்களைக்கொண்டு மண்டபம் அமைக்கப்பட்டதாகக் கம்பரின் கற்பனை விரிகிறது. வானத்திலே சாதாரணமாகக் காணப்படுகின்ற தாரகைகளே அல்லாமல், காலவரையறைகளைப் புலப்படுத்துகின்ற அசுவினி ஆகிய இருபத்தேழு விண்மீன்களையும் குறிப்பதற்குக் காலமீன் என்றும் கூறினார். தெய்வ மகளிர் இருபக்கங்களிலும் மணிவிளக்கு ஏந்திநிற்க இராவணன் அம்மண்டபத்தைக் காணவருகின்றான்.

ஊறோசைமுதற்பொறியாவையுமொன்றினொன்று
தேறாநிலையுற்றதொர் சிந்தையன் செய்கையோரான்
வேறாயபிறப்பிடைவேட்கைவிசித்ததீர்ப்ப
மாறோருடலுற்றெனமண்டபம் வந்துபுக்கான்

கம்ப. ஆரணிய. 720

ஊறு ஓசைமுதற் பொறியாவையும் - தொட்டுணர்வு, ஓசை முதலிய பொறிகள் எல்லாம், ஒன்றின் ஒன்று - ஒன்று போலவே மற்றதும், தேறாநிலைஉற்றதொர் சிந்தையன் - தெளிவடையாத நிலைமையை அடைந்தவனாக, செய்கை ஓரான் - செய்யவேண்டுவது இன்னது என்று அறியாதவனாகி, வேட்கைவிசித்ததுஈர்ப்ப - ஆசை வலியப்பிடித்து இழுக்க,

வேறாயபிறப்பிடை - மறு பிறப்பிலே, மாறோர் உடலுற்றுஎன - மற்றோர் உடலை அடைந்ததைப்போல, மண்டபம் வந்து புக்கான் - அந்த மண்டபத்துள் வந்து புகுந்தான்.

காம வேதனையால் ஐந்து புலன்களினதும் உணர்ச்சி அழிந்து செய்வதறியாத இராவணன், இறப்பின்போது ஐம்பு லன்களின் அறிவழிந்து செய்வதறியாது தடுமாறும் உயிரா னது வேறொரு பிறப்பைஅடைதல் போலத் தானிருந்த இடத் தைவிட்டுச் சந்திரகாந்த மண்டபத்தை அடைந்தான் என்பது உவமை நயத்தோடமைந்த கம்பரின் கற்பனைச் சிறப்பாகும்.

சந்திரகாந்தமண்டபத்துள் நுழைந்த இராவணன் அங்கே தளிர்களாலும், மலர்களாலும் அமைக்கப்பெற்ற பூம்படுக் கையைச் சேர்கிறான். அங்கே சாளரங்களினூடாக நறுமணம் மிக்க தென்றல் வந்து வீசுகின்றது. அத்தென்றலின் தீண்ட லைத் தாங்கமாட்டாதவனான இராவணன் கண்களில் நெருப் புக் கொதிப்போடு வாயில் காவலரை அழைத்து,தென்றலை இங்கே அனுப்பிய காற்றரசனைப் பிடித்துச் சிறையில் தள் ளுங்கள் என்கிறான். வாயிற் காவலர்கள் அவனுக்குச் சமாதானம் கூறுகிறார்கள்.

காற்றினோன் றன்னைவாளாமுனிதலிற் கண்டதில்லை
கூற்றுவந் தென்னையின்னேகுறுகுமாற் குறித்த வாற்றாற்
வேற்றருங் கருங்கட் சீதைமெய்யருள் புனையே னென்றால்
ஆற்றலால் அடுத்ததெண்ணுமமைச்சரைக் கொணர் திரென்றான்

கம்ப. ஆரணிய. 726

காற்றினோன் தன்னை வாளாமுனிதலில் கண்டதில்லை - வாயுதேவனாகிய காற்று அரசன் மீது வீணேசினம்கொள் வதில் பயன் எதுவுமில்லை, குறித்தவாற்றால் - நான் கருதி யபடி, வேல் தருங் கருங்கண் சீதைமெய்யருள் புனையேன் என்றால் - வேல் போன்ற கூரிய கண்களையுடைய சீதையின் உண்மையான காதலைப் பெறமுடியாது போவேனானால், கூற்றுஇன்னேவந்துஎன்னைகுறுகுமால் - கூற்றுவன் இப் பொழுதே வந்து என்னைச் சேரப்போகின்றான், ஆற்றலால் அடுத்தது எண்ணும் அமைச்சரைக் கொணர்திர் என்றான் - ஆதலால், அடுத்துச் செய்யத்தக்க காரியங்கள் என்ன என்ப வற்றைத் தமது அறிவாற்றலால் கூறவல்ல அமைச்சர்களை அழைத்துவாருங்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிடு கிறான்.

இனி வெவ்வேறு செயல்களில் முயல்வதில் பலனில்லை என்று உணர்ந்த இராவணன் அமைச்சர்களை அழைத்து வரக் கட்டளையிடுகிறான். தனது மனதில்பட்ட சீதையின் உருவெளித் தோற்றத்தில் பொய்யருளைப் பெற்றது பயன் படாமையால், அவளது மெய்யருளைப் பெறவேண்டும். பெறாது போனால் இறப்புத்தான் முடிவாகும் என்று அவளின் மெய்யருளை அடையும் வழிகளை அறிந்துகொள்ள அமைச் சர்களை அழைக்கின்றான் என்பது கம்பரின் சிந்தனைத் திறன். அமைச்சர்கள் விரைந்து அவனிடம் வந்து சேர்கிறார் கள். இராவணன் அமைச்சர்களுடன் ஆலோசித்துவிட்டு ஒரு விமானத்திலேறித் தனது மாமனான மாரீசன் தவம் செய்து கொண்டிருந்த இடத்திற்குச் செல்கிறான். மாரீசன் அவனை எதிர்கொண்டு உபசரித்து 'நீவந்தகாரியம் என்ன?' எனக்கேட் கிறான்.

அவனுக்கு விடை கூறுவதாக ஐந்து செய்யுள்களைக் கம்பர் படைத்துள்ளார். எனது வீரத்துக்கும், புகழுக்கும், வசைநேர்ந் துவிட்டது. வலிமையற்ற மானுடர் புதிதாக வலிமையுடையவர் களாக மாறிவிட்டார்கள். உன்னுடைய மருமகளான சூர்ப் பணகையின் மூக்கை அறுக்கும் எல்லைக்கே வந்துவிட் டார்கள்.





வெப்பழியாதென் னெஞ்சமுலந்தேன் விளிகின்றேன்
ஒப்பழிவென்றேபோர்செயலொல்லேனுடன்வாழும்
துப்பழிசெவ்வாய் வஞ்சியைவௌவத் துணை
கொண்டிட்டு
இப்பழிநின்னாற் றீரியவந்தேனிவணென்றான்

கம்ப. ஆரணிய. 734

வெப்புஅழியாது - இவ்வாறான வசைகளால் எழுந்த கொதிப் புத் தணியாமல், என் நெஞ்சம் உலந்தேன் - எனது மனம் அழியப்பெற்றேன், விளிகின்றேன் - மரண வேதனைப் படு கின்றேன், ஒப்புஅழிவுஎன்றே போர்செயல் ஒல்லேன் - அந்த மானிடர்கள் எனது வீரத்துக்கு ஒப்பானவர்கள் அல்லர் என்ப தால் அவர்களோடு போர் செய்வதற்கு விரும்பவில்லை, உடன் வாழும் - அவர்களுடன் வாழுகின்ற, துப்பு அழி செவ்வாய் வஞ்சியை - பவளமும் ஒப்பாகாமற் கெடும்படி யான சிவந்தவாயையுடைய வஞ்சிக் கொடிபோன்ற மெல்லி யளை, வௌவத் துணைகொண்டிட்டு - கவர்ந்து வருவதற்கு உன்னைத் துணையாகக்கொண்டு, இப்பழிநின்னாற் தீரிய வந்தேன் இவண் என்றான் - ஏற்பட்ட இந்தப் பழியை உன் னால் தீர்த்துக்கொள்ள எண்ணி இவ்விடத்துக்குவந்தேன் எனகிறான்.

எளியவர்களான மனிதர்களைச் சமமாகக்கொண்டு போரிடு தல் தனது புகழுக்குக் கேடானது என்றும், தன்னுடன் பிறந்த மகளை அவர்கள் மானபங்கம் செய்ததற்கு ஈடாக அவர்க ளுடன் வாழும் மகளைக் கவர்தல் மூலமாக அவர்களால் ஏற்பட்ட பழியைத் தீர்த்துக்கொள்ளலாம் என்றும் அவனது துணையை நாடிவந்ததாக இராவணன் கூறும் காரணத்தைத் தர்க்கரீதியாகக்கம்பர் இங்கே எடுத்துவைத்திருக்கின்றார். இவ்வாறு இராவணன் சொன்னவற்றைக் கேட்கப் பிடிக்காமல் மாரீசன் அவனுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை 12 அழகான செய்யுள்களில் கம்பர் படைத்தள்ளார். அவற்றுள் சில.

நாரங் கொண்டார்நாடுகவர்ந்தார் நடையல்லா
வாரங் கொண்டார் மற்றொருவர்க்காய் மனைவாழுந்
தாரங் கொண்டாரென்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங் கண்டாய் கண்டகருய்ந்தாரெவரையா

கம்ப. ஆரணிய. 739

நாரங் கொண்டார் நாடுகவர்ந்தார் - தம்மிடத்தே அன்பு கொண்டுள்ளாரது நாட்டைக் கவர்ந்து கொண்டவரும், நடை யல்லாவாரங் கொண்டார் - நீதிநெறிக்கு ஒவ்வாதவாறு குடிக ளிடமிருந்து இறைவரிப் பொருளை வலிய அறவிட்டவரும், மற்றொருவர்க்காய் மனைவாழுந் தாரங் கொண்டார் - வேறு ஒருவருக்கு உரிமையாய் அவர் வீட்டில் வாழுகின்ற அவரின் மனையாளைத் தம்வசப் படுத்திக் கொண்டவரும், என்றிவர் தம்மைத் - ஆகிய இவர்களை, தருமந்தான் ஈருங் கண்டாய் - தருமதேவதைதானேஅறுத்து அழிக்கும் என்பதை அறி வாயா?, கண்டகர் உய்ந்தார் எவரையா - ஐயனே! இவ் வாறான கயவர்களில் உய்வடைந்தவர் எவர் இருக்கிறார்? எவருமில்லை என்பதாம்.

நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களும், அறமற்ற வழியில் திறை வசூலிப்பவர்களும், பிறன்மனை விழைபவர்களும், அறக்கடவுளால் தண்டிக்கப்படுவர் என்ற கருத்தை மாரீசன் வாயிலாகக் கம்பர் காட்டுகிறார். மாரீசன் அறநெறிகளைப் பலவாறு எடுத்துரைத்தும் இராவணன் கேளாதவனாக மாரீசன் மீதுசினம் கொள்கிறான்.

கங்கைசடைவைத்தவனொடுங்கயிலைவெற்போர்
அங்கையினெடுத்தஎனதாண்டொழின் மணித்தோள்
இங்கொர் மனிதர்க்கெளியவென்றனையெனத்தன்
வெங்கணெரியப்புருவமீதுறவிடைத்தான்

கம்ப. ஆரணிய. 747

கங்கைசடைவைத்தவனொடும் - கங்கை நதியைத் தனது சடையில் தரித்தவனான சிவபெருமானுடனே, கயிலைவெற்பு ஓர் அங்கையில் எடுத்த - கைலாயமலையை ஒரு உள்ளங் கையினால் எடுத்த, எனது ஆண் தொழில் மணித்தோள் - என்னுடைய வலிமைமிக்க அழகிய தோள்கள், இங்கு ஓர் மனிதர்க்கு எளியது என்றனை - இப்பொழுது ஒரு மனி தனுக்கு இளைத்தனவாகும் என்று சொன்னாயா?, எனத் தன் வெங்கண் எரியப்புருவம் மீது உறவிடைத்தான் - என மாரீசனை நோக்கிக் கூறித் தனது கொடிய கண்கள் நெருப் புப் போல் எரியவும், புருவங்கள் நெற்றியின் மேல் செல்லு மாறு நெரித்துப் பெருஞ்சினம் கொண்டான்.

சிவபெருமானுடைய கயிலை மலையையே உள்ளங்கையால் எடுத்த எனது ஆண்மை இச்சிறுமானிடர்க்கு எளியதாமென் றாயேஎன்று தனது இரு கண்களிலும் சீற்றத்தீப் பற்ற புரு வங்களை நெரித்து இராவணன் மாரீசன் மீது சினத்தைக் கக்கினான். மாரீசன் இராவணனுக்கு மீண்டும் அறிவுறுத்து வதாக மேலும் 7 செய்யுள்கள் வருகின்றன. இறுதிச் செய்யுள் இவ்வாறு வருகின்றது.

வேதனைசெய் காமவிடமேலிடமெலிந்தாய்
தீதுரைசெய் தாயினையசெய்கைசிதைவன்றோ
மாதுலனுமாய்மரபின் முந்தையுறவந்தேன்
ஈதுரை செய்தேனிதனைஎந்தைதவிர் கென்றான்

கம்ப. ஆரணிய. 755

வேதனைசெய் - துன்பத்தைத் தருகின்ற, காமவிடம்மேலிட மெலிந்தாய் - காமமாகிய நஞ்சு அதிகரித்ததால் நீ வாட்ட முற்றாய், தீதுரைசெய்தாய் - கொடிய இவ்வார்த்தைகளைக் கூறினாய், இனையசெய்கை சிதைவன்றோ - இத்தகைய காரியம் அழிவுக்குக் காரணமாகும் அல்லவா?, மாதுலனு மாய் மரபின் முந்தையுற வந்தேன் - உனக்கு மாமன் முறை யாகவும், உனது குலத்தில் மூத்தவனாகவும் வந்துள்ள நான், ஈதுரை செய்தேன் - இந்த உறுதிமொழியைக் கூறினேன், இதனை எந்தை தவிர்க என்றான் - அப்பா, இந்தத் தொழிலை நீ விட்டு விடு என்று மாரீசன் இராவணனுக்கு மேலும் அறிவுரை கூறுகின்றான்.

'காம வேதனையின் மேலீட்டால், உனது பேராற்றலைப் பெரி தாக மதிக்காமலும், உனது தங்கையை மாபங்கப்படுத்திய வர்களைப் புகழ்தேனென்றும் என்மீது சீற்றம் கொள் கிறாய். எதிரிகளின் வல்லமையைக் கருதாது இராமனின் மனைவி யைக் கவர்வேன் என்று தீயது உரைத்தாய். இது உன் அழிவுக்கே காரணமாகும். உனது குலத்தில் மூத்தவனும், மாமனுமாக இருப்பதால் உனக்குச் சார்பாகப் பேசாமல் இந்த உண்மையான உறுதிமொழியைச் சொன்னேன். இத்தீச் செயலை விட்டிடுக!' என்று மாரீசன் இராவணனுக்குப் பலவாறு அறிவுரை கூறியும் இராவணன் கேட்பதாக இல்லை. மாரீசன், தனது தாயான தாடகை கொல்லப்பட்ட பின்னர் இராமனை எதிர்க்கப்போய் அவனது அம்பிலிருந்து தப்பித்துக் கொள் ளக் கடலுக்குள் சென்று ஒளிந்துகொண்டவன். இரமனுடைய வில்லின் ஆற்றலை அறிந்தவனாதலால் அவனுக்குப் புத்தி மதி கூறுகின்றான். எதனையும் காதில் வாங்கிக்கொள்ளாத இராவணன் மாரீசனுடன் மேலும் சினந்துகொள்கிறான். 'உன் தாயைக் கொன்றவனைப் பழிதீர்க்கக் கருதாமல் மானங் கெட்டு வாழ்கின்றாயே! உன்னை ஆண்மை உள்ள ஒருவனாக நினைத்தலும் தகுதியன்று. எனது விருப்பத்தை நிறைவேற்ற நீ உதவவில்லை என்றால், நான் உன்னை என் வாளால் இப் பொழுதே வெட்டி வீழ்த்தி என் மனக்குறையைமுடிப்பேன்' என்று இராவணன் சினந்து கூற, மாரீசன் அடங்கிப்போகிறான்.

உன்வயின் உறுதிநோக்கியுண்மையினுணர்த்தினேன்மற்று
என்வயினிறுதிநோக்கியச்சத்தாலிசைத்தேனல்லேன்
நன்மையுந் தீமையன்றோநாசம்வந் துற்றபோது
புன்மையினின்றநீராய் செய்வதுபுகறிஎன்றான்

கம்ப. ஆரணிய. 761

உன்வயின் உறுதிநோக்கி - உனது நன்மையைக் கருதி, உண்மையின் உணர்த்தினேன்மற்று - உண்மையினை உனக்கு எடுத்துச் சொன்னேனே அல்லாமல், என்வயின் இறு திநோக்கி அச்சத்தால் இசைத்தேன் அல்லேன் - எனக்குத் தீமை வருமென்று கருதி அதற்காக அஞ்சி இதை நான் கூற வில்லை, நன்மையும் தீமை அன்றோ நாசம்வந்து உற்ற போது - கேடு வந்து சேர்கின்ற காலத்தில் நல்லதும் தீயதா கத்தான் தோன்றும், புன்மையின் நின்ற நீராய் செய்வது புகறி என்றான் - என்றாலும், அற்பமான காரியத்தில் மனத்தைச் செலுத்தியிருப்பவனே! நான் செய்ய வேண்டுவது என்ன என்பதைச் சொல்வாயாக என்கிறான் மாரீசன்.

நாசம் வந்துஉற்றபோது நன்மையும் தீமை அன்றோ என் கின்ற கம்பரின் சொற்றொடர் 'விநாசகாலேவிபரீதபுத்தி' என்னும் பழமொழியை உணர்த்தி நிற்கிறது. மாரீசன் தான் செய்ய வேண்டுவது என்ன எனக் கேட்டபோது இராவணன் மகிழ்ச்சியுற்று அவனைக் கட்டித் தழுவுகிறான்.

ஆயவ னனைய கூற வரக்கர்கோனையநொய்துன்
தாயையா ருயிருண் டானையான்கொலச் சமைந்து
நின்றேன்
போயையாபுணர்ப்பதென்னேயென்பதுபொருந்திற்றன்றோ
மாயையால் வஞ்சித் தன்றோவௌவுதலவளை யென்றான்

கம்ப. ஆரணிய. 764

ஆயவன் அனைய கூற - மாரீசன் அவ்வார்த்தைகளைச் சொல்ல, அரக்கர்கோன் - இராவணன் அவனை நோக்கி, ஐய நொய்துன் தாயைஆருயிர் உண்டானை - ஐயனே! உன் தாயான தாடகையின் அரிய உயிரை எளிதிலே பறித்த வனான இராமனை, யான்கொல்லச் சமைந்து நின்றேன் - கொல்லுவதற்கு நான் சித்தமாக இருக்கிறேன், போயையாபு ணர்ப்பதென்னேஎன்பது - ஐயனே! போய்ச் செய்யவேண் டுவது என்ன என்று நீ உடன்பட்டுக் கேட்பது, பொருந்திற்று அன்றோ - தகுதியானதே, மாயையால் வஞ்சித்து அன்றோ வௌவுதல் அவளை என்றான் - மாயையினால் அச்சீதையை வஞ்சித்துக் கவர்ந்து வருவதுதான் செய்யத்தக்கது என்றான். நீமாயையினால் அவளை வஞ்சிக்க நான் அவளைக் கவர்ந் துவருவேன் என்றும் பொருள் கொள்ளலாம்.

தனக்கு இறுதிக்காலம் கிட்டிவிட்டது. இராவணன் ஏவியதைச் செய்வதன்றி வேறொன்றும் செய்வதற்கில்லை என்று நினைத்த மாரீசன் இராவணனது வேண்டுகோளுக்கு இசைகின்றான். அவன் இராவணனை நோக்கி 'நான் என்ன மாயம் செய்ய வேண்டும்' எனக் கேட்க, 'நீ பொன்மயமான மானாகச் சென்று சீதையை மயக்குக!' என இராவணன் கூறுகிறான். அதற்கு மாரீசன் உடன்படுகிறான். பின்னர், என்ன திருப்பங்கள் ஏற் படப் போகின்றன என்பவற்றை கம்பரின் கவிச்சுவையோடு அறிந்து அனுபவிக்க மாரீசன் வதைப்படலத்தின் இறுதிப் பகுதியோடு அடுத்த இதழ்வரை காத்திருப்போம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

தமிழ்வலை - 126

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-126 வினா

இடமிருந்து வலம்

3 சூனியம்
4 இஸ்ரேல் பிரதமர்
5 தெருவின் கீழ் குறுக்கே நீர் பாயும் வாய்
7 வாழைவகை
8 அகதி
11 வீமனால் கொல்லப்பட்ட அசுரன்
12 படைமுகாம்
13 தலையெழுத்து
14 புல்வகை
15 பண்டை எகிப்திய அரச கல்லறையில் தமிழில் பொறிக்கப்பட்ட பெயர்

மேலிருந்து கீழ்

1 சவுக்கு
2 காமன்
3 சன்மானம்
4 மீன்வகை
6 பேர்போன தமிழக அருவி
7 பேர்போன ஈழத்துக் கோயில்
9 பேர்போன தமிழ்க் கவிஞர்
10 பொழுது
12 அரை
14 வேந்தன்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை-125-க்கான விடைகள்



தமிழ்வலை-125 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்

விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ
சபா குகநாதன், பாரிஸ்,
உமா கதிர், ஏஜக்ஸ்.
இராசாத்தி தேவதாஸ், ரொறன்ரோ.
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்

பரிசுபெறும் போட்டியாளர்

சபாநாதன் கண்மணி,
வவுனியா.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிவுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.





மழுபக்கம்

- மண்டைதீவு கலைச்செல்வி -

அவளை அவனுக்கு நிறையவே பிடித்திருந்தது. ஒரு கணம் பார்த்த மாத்திரத்திலேயே அடித்து வீழ்த்தி விட்டாள். இத்தனை காலமும் இதயம் முழுக்க நிறைந்திருந்து பிரிவுத் துயரில் அவனைத் தவிக்க வைத்து... அவனுடைய எதிர்காலத்தைப் பற்றி கொஞ்சமும் யோசிக்க முடியாமல்... சுழல் காற்றுப் போல் அவனை புரட்டி புரட்டி போட்டு... உள்ளத்துக்குள் நுழைந்து ஊடுருவி... உணர்வுகளில் கலந்து இரத்தத் தோடு சதையுமாக ஐக்கியப்பட்டு... நீ எங்கே... நீ எங்கே எனத் தேடி, பல இரவுகள் நித்திரையின்றி தவித்து... களைத்து... வாழ்க்கையா இது சீ வேண்டாம் என வெறுத்து... அம்மா பேசும் திருமணத்துக் கெல்லாம் வேண்டாத காரணம் சொல்லி ஒதுக்கி பின்பு ஒரு முனிவன் போல் திரிந்து... மூச்செல்லாம் பிரியா பிரியா என்றாகி இருந்த முகிலன் இன்று இந்தக் கவினாவை கண்டவுடன் மூச்சற்றுப் பேச்சற்று அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அப்படியென்றால் முகிலன் உண்மையாகவே பிரியாவை மறந்துபோனானா ? இத்தனை காலமும் பிரியாவின் நேசிப்புக் களோடு... பிரியா மட்டும் தான் வாழ்க்கை... பிரியாதான் உலகம், பிரியாவை நினைத்துக் கொண்டே இந்தப் பிறவியை வாழ்ந்து முடித்து விடலாம் என நினைத்துதான் வாழ்ந்து கொண்டிருந்தான்.

அம்மா அவனின் கடவுள். அவருடைய பேச்சை அறிவுரைகளை அனுசரித்து நடப்பவன் தான். அம்மா கண்ணீர் விடுவதை... சோர்ந்து போவதை... முகிலன் விரும்பவில்லை தான்.

சில வேளைகளில் அம்மாவின் அன்பையே பிரியாவின் ஆழமான காதல் வென்று நிற்கும். பிரியாவின் உதடு பிரியாத சுழித்த புன்னகை... ஆயிரமாயிரம் கதை சொல்லும் குடை போன்ற இமைகளைக் கொண்ட மருண்ட விழிகள்... பிரியா அமைதியாக நடந்து சென்றதை அவன் அறிவு தெரிந்த நாளிலிருந்து பார்த்ததில்லை. 'ஏய் பொம்புளைப் பிள்ள மாதிரி நடந்து போடி' என பிரியாவின் அம்மா அடிக்கடி சொல்லுவதை அவனும் கேட்டுச் சிரித்திருக்கிறான். வேக நடைப்போட்டியில் பங்குபற்றுபவள் மாதிரி குடு குடுவென நடப்பாள். இடைக்குக் கீழே நீண்ட அவள் கருங்கூந்தல் அவள் நடைக்கு தாளமிட்டு ஜதி சேர்த்து நிற்கும். பாடசாலை நாட்களில் அந்தக் கூந்தலை அழகாய் வாரி இரண்டு பின்னலாய்ப் பின்னி மடித்துக்கட்டி இருப்பாள். படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரி. எல்லாத் துறைகளிலும் தானே முன்னுக்கு வரவேண்டும் என நினைக்கும் பிடிவாதக்காரி. ஓர் அண்ணன் ஒரு அக்கா. அந்த இருவரோடும் நித்தம் பல செல்லச் சண்டைகள் பிடிப்பாள். அம்மா அப்பாவோடு தாம் தூமென்று துள்ளித் குதித்து தனக்கு வேண்டியதை யெல்லாம் சாதித்துக் கொள்வாள். பிரியாவின் சிறுபிராயம் தொட்டு பெரியவளாகிய காலம்வரை அவளுடைய சகல செயற்பாடுகளையும் முகிலன் அறிந்து வைத்திருந்ததிற்கு காரணம் அவன் பிரியாவின் அண்ணன் விதுரனின் உயிர் நண்பன் என்பதால்தான். அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு முகிலன் போய் வருவான். ஒரே ஊர் என்பதால் இரண்டு குடும்பத்துக்கும் பழக்கமும் இருந்தது.

முகிலன் அவர்கள் வீட்டுக்கு போகின்றபோது பிரியாவின் குடும்பத்தவர் எல்லோருமே அன்பாக உபசரிப்பார்கள். விதுரன் ஒரு நாள் கூட முகிலனைச் சந்திக்காமல் இருக்க மாட்டான். முகிலனுக்கு பிரியாவின் அட்டகாசமான செயல்பாடுகள் குறும்புத்தனம் இதெல்லாம் பிடிக்கும். அவன் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எழுதிவிட்டு இருந்த காலத்தில் பிரியா சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு உயர்தரத்தில் கணிதப் பிரிவில் படிப்பதற்கு வகுப்புக்கு போய்க்கொண்டிருந்தாள்.

அந்த நேரத்தில் தான் இறுதி யுத்தம் உச்சக்கட்டத்தை நோக்கி போய்க்கொண்டிருந்தது. வீட்டுக்கு ஒருவர் என்ற கட்டாய ஆள் சேர்ப்பு எல்லா ஊர்களிலிலும் அறிவிக்கப்பட்டது. அதற்கான பரப்புரைகளும் நடத்தப்பட்டன. இதுபற்றி விதுரனும் முகிலனும் பேசிக்கொண்டிருக்கும் போது பிரியாவும் சேர்ந்து கொண்டாள். அவள் இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு வீட்டுக்குள் போய்விட்டாள். பிரியாவின்

முகத்தில் அன்று ஒரு பேரமைதி குடி கொண்டிருப்பதை முகிலன் கவனிக்கத் தவறவில்லை. அவன் பிரியா மேல் கொண்ட காதலை சொல்வதற்கு பல நாட்களாய் தவம் கிடந் தான். நாட்டு நிலையும் மிக மோசமாகிக்கொண்டு வந்தது. விமானக்குண்டு வீச்சுக்களும் இரவு பகல் பாராது ஷெல் வீச் சுகளும் இடம் பெயர்வுகளும் தொடர்ந்த வண்ணம் இருந் தவேளை... மனித மரணங்கள் மலிந்து வீட்டுக்கு வீடு செத்த வீடுகள் தாராளமாக நடந்தன. விதுரனை முன்பு சந்தித்தது போல் சந்திக்க முடியாதிருந்தது முகிலனுக்கு. எல்லாவற்றை யும்விட பிரியாவைப் பார்க்க முடியவில்லையென பெரிதும் வருந்தினான் முகிலன். அவனுடைய பெற்றோர் முகிலன் வெளியில் போய் வருவதை விரும்பவில்லை. முகிலனின் ஓர் அக்காவும் இரண்டு அண்ணாவும் வெளிநாட்டில் இருந்த படியால் முகுந்தனை கட்டாய ஆட்சேர்ப்பில் சேர்த்து விடு வார்கள் எனப் பயந்து அவன் பெற்றோர் அவனை வீட்டுக்குள் ஒளித்து தான் வைத்திருந்தார்கள். ஏதாவது சாமான்கள் வேண்ட வேண்டுமென்றால் கூட முகிலனின் அப்பாதான் வெளி யிலே போய் வருவார்.

திடீரென ஒரு நாள் சைக்கிளில் பிரியா முகிலன் வீட்டுக்கு வந்தாள். முகிலனுக்கும் அவனுடைய அப்பா அம்மாவுக்கும் மிகப் பெரிய ஆச்சரியமாய் இருந்தது.

முகிலன் தாடி மீசையோடு இருப்பதைப் பார்த்து பிரியாவுக்கு சிரிப்பு வந்தது. பரிதாபமாகவும் இருந்தது. தன் சைக்கிள் கரி யிலும் கூடையிலும் வைத்துக்கொண்டு வந்த பைகளை முகிலனின் அம்மாவிடம் கொடுத்தாள்.

'அன்ரி இதுக்குள்ள மரக்கறி கருவாடு, சீனி, மாப்பெட்டி என்டு கொஞ்சம் சாமான்கள் அம்மா தந்துவிட்டவா... வெளியில் கொஞ்சம் பிரச்சனையாய் தான் இருக்கு... முகிலன் அண் ணாவை ஒரு இடமும் விட வேண்டாமாம்... அப்பாதான் இதைக் கொண்டுவர இருந்தவர். நான் போறன் எண்டு வேண்டிக் கொண்டு வந்திட்டன்.'

'ஐயோ கடவுளே ! ஏனம்மா உனக்கு வீண் சிரமம் ?'

'இல்ல இல்ல... பிடியுங்கோ நான் போட்டு வாறன்...'

'பிரியா போறியோ' முகிலன் விழுந்தடித்துகொண்டு கேட்டான்.

'ஓம்... நான் உங்களையெல்லாம் பாத்திட்டு போவோமே எண்டுதான் வந்தனான். போய்ட்டு வாறன்.' பிரியா முற்றத்தில் நின்று தன் சைக்கிளின் ஸ்டாண்டை காலால் தட்டிக்கொண்டே முகிலனை திரும்பி பார்த்து புன்னகைத்தாள். முகிலன் எழுந்து அவளருகே வந்தான். அவன் விழிகள் லேசாக கலங்கி இருந்தது.

'பிரியா...'

'ம்'

'என்னை. மறந்திடாத...'

'என்னது... விளங்கேல்ல...' அவனை ஆச்சரியமாய் நிமிர்ந்து பார்த்தாள் பிரியா.

'உனக்கு விளங்கி இருக்கும் எல்லாம்' அவன் மிக ரகசியமா கச் சொன்னான். அதை அவள் புரிந்து கொண்டாளா ? இல்லை புரிந்து கொண்டும் புரியாதது போல் போனாளா ? இந்த நேரத் தில் இது தேவையில்லாத பேச்சு என நினைத்தாளா ஒன்றும் புரியவில்லை முகிலனுக்கு. அடக்க முடியாத ஏதோ உணர் வுகளை அடக்குவதை போல அவளின் அந்த அமைதியான புன்னகை காட்டிக்கொடுத்தது. அவள் போய்விட்டாள். வீட் டுக்குப்போகவில்லை.

அன்று மாலை நேரம் வெளியே போய்விட்டு வந்த முகிலனின் அப்பா 'பிரியா இயக்கத்துக்கு போட்டாளாம்...' தலையை குனிந்துகொண்டு சொன்னார்.'

'ஐயோ கடவுளே அதுக்குத்தான் இஞ்ச வந்தவளா ?'

முகிலனின் அம்மா கேட்டாள். முகிலனுக்கு இடி விழுந்தது போல் இருந்தது. மூச்சடித்தது. கத்தி அழ வேண்டும் போல் இருந்தது. அதன் பின் நாட்கள் வேகமாக நகர்ந்தது போல் அவனுக்கு இருந்தது. தனிமையும் அவளின் நினைவும் உதிர்த்து போன கடைசிப் புன்னகையும் நேரங்களை விழுங் கியது.

ஒரு கூட்டுக் குருவிகள் போல் வாழ்ந்த ஊர் மக்கள் சிதறி நாலுபக்கங்களாய் இடம்பெயர்ந்து யார் எங்குள்ளனர் என்று தெரியாமல் போயினர். கடைசி யுத்தம் மனித உடல்களை தின்று தீர்த்தது. முகிலனும் போராட்டத்தில் வலிந்து சேர்க்கப் பட்டான். ஒரு தடவை முகிலன் பிரியாவை விசுவமடுச் சந்தி யில் எதேச்சையாக சந்தித்தான். கதைக்க முடியவில்லை. தனிப் பச்சை உடையில் மிக கம்பீரமாய் மிடுக்காய் இருந்தாள். இடுப்புப்பட்டியும் கரும் கூந்தலின் இரட்டைப் பின்னலும் இன் னும் இறுமாப்பாய் காட்டின. அவள் அப்போதும் அழகாய் இருந்தாள். அதே உதட்டைச் சுழித்து சிரிக்கும் சிரிப்போடு கைகாட்டிக் கொண்டு போய்விட்டாள்.

அதன் பின் பிரியாவை அவன் பார்க்கவில்லை. முகிலனின் அப்பா ஷெல் பட்டு இறந்து போனார். இறுதியுத்தத்தின்போது தெய்வாதீனமாய் உயிர் பிழைத்து அம்மாவோடு முகாம் களில் இருந்து பின்பு கொழும்பு வந்து, தன் சகோதரங்களின் உதவியுடன் லண்டனுக்கு வந்து விட்டான். அம்மாவும் அவ னோடு தான் இருக்கிறார். நாற்பது வயதை அண்மிக்கும் முகிலன் தன் மனதில் பிரியாவையே நினைத்து வாழ்கிறான்... பல தீவிர தேடலின் பின் விதுரனின் தொடர்பு கிடைத்தது. பிரியா உயிரோடு இல்லையென்பதை விதுரன் உறுதியாகச் சொன்னான். இன்னும் மனம் நொறுங்கிப் போனான். தன் உயிர் மட்டும் தப்பி இருப்பதை நினைத்து அருவருத்துக்கொள் வான். எப்போதாவது கொள்ளும் அமைதியான தூக்கத்தை பிரியாவின் இறுதிப்புன்னகை வந்து குழப்பி கொல்லும். எழுது வான். அவளை நினைத்து அவளிற்காக எழுதுவான். அவன் வரிகளில் காதல் கருக்கொண்டு நிற்கும். சேராக்காதலின் வலிகளை சுமந்து நிற்கும். ஆங்காங்கே நரை விழுந்த தலை முடியை வளர்த்து கட்டி விட்டுருந்தான். இலண்டனின் அவ னது அறையில் பிரியாவின் அடையாள அட்டைக்காக எடுத்த புகைப்படம் ப்ரேம் செய்யப்பட்டு மேசையில் இருக்கிறது. பார்த்துக்கொண்டே இருப்பான். பார்க்கும் போதெல்லாம் அவனது மனது பதின்ம வயதுகளில் தவழ்ந்து கொள்ளும்.

பல வருடத்துக்கு முகிலனின் திருமணத்தைப் பற்றி அம்மா வும் அவன் சகோதரர்களும் பேசாமல் தான் இருந்தார்கள்.

அம்மா அவனைத் திருமணத்திற்காக இறைஞ்சி கேட்டாலும், பல திருமணங்களை அவனாகக் குழப்பியது போக மிகுதி தானாகக் குழம்பியது. 'பொம்பிளை வீட்டுக்காரர் ஒரே கோல் எடுத்துக்கொண்டே இருக்குதுகள் டா... உன்னையும் அந்த பிள்ளைக்கு தெரியுமாமடா... தயவு செஞ்சி இந்த பிள்ளைய ஆச்சும் வேண்டாமெண்டு சொல்லாத' என்ற அம்மாவின் ஆக்கினையின் பேரால் இப்பொழுது அவன் கவினாவைப் பெண் பார்க்க வந்திருந்தான்.

அவளும் இறுதி யுத்தம் முடிந்தபின் இலங்கையில் இருந்து வந்தவள் தான். சாறி உடுத்து... பூ வைத்து... பொட்டு வைத் தெல்லாம் வரவில்லை. சாதாரணமாய் ஒரு ஜீன்ஸ் தொள தொள ரீ சேட்... கழுத்தோடு தவழும் முடி. நிதானமான... கனி வான பார்வை... அவளைப் பெண் பார்க்க வந்திருக்கிறோம் என்பதை மறந்து சினேகமாக மற்றப் பெண்களில் இல்லாத ஏதோ ஓர் ஈர்ப்போடு உரையாடினான் முகிலன். நாட்டிலே நடந்த சம்பவங்கள்... தங்கள் ஊர்களைப் பற்றி தெரிந்தவர் களைப் பற்றி கதைத்தார்கள். அவர்கள் இருவரும் நண்பர் கள் ஆகிவிட்டார்கள் என்பதை உணர்ந்து இரண்டு பெற்றோர் களும் சந்தோசப்பட்டார்கள். 'தியா' என்ற பெயரில் அவனுக் குப் பிடித்த கவிதைகளை முகநூலிலும் இணைய சஞ்சிகை யிலும் எழுதுபவர் இந்தக் கவினா தான் என்பதை அவள் மூலமாகவே தெரிந்து கொண்டபின் இருவரின் பேச்சுக்கள் இன்னமும் நீடித்தது. இருவரும் தாங்கள் வேலை செய்யும் இடங்களைப் பற்றி பேசிக்கொண்டதோடு போன் நம்பர்களை யும் பரிமாறிக் கொண்டார்கள். என்னதான் சரளமாய் கதைத் தாலும் அடிக்கடி அமைதியாகிக் கொள்ளும் முகிலனின் மன நிலையை நன்றாக அறிந்தவள் போல பேசினாள் கவினா. அன்றைய சந்திப்பு முடிந்துகொள்ள அடுத்தடுத்த சந்திப்புக ளுக்கு தீவிரம் காட்டினாள் கவினா.

லண்டன் நகரின் ஒரு குளிர்கால மாலைநேரத்தில் பூங்காவில் சந்திக்க வருவதாய் சொன்ன கவினாவிற்காக காத்திருந்தான் முகிலன். கவினாவின் நடையும் தோரணையும், பிரியாவை பச்சை உடையில் பார்த்ததை நினைவூட்டியது. அமைதியா கிக்கொண்டிருக்கும் பூங்காவில் ஆங்காங்கே ஓடி விளையா டிக்கொண்டிருக்கும் சிறுவர்களின் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிந்தது. பேசத்தொடங்கினார்கள். 'நான் உங்களிட்ட ஒண்டு சொல்ல வேணும்' என்று ஆரம்பித்தான் முகிலன்.

'யாரைப்பற்றி... பிரியாவை பற்றியா' என்று கேட்டாள் கவினா.

'உங்களுக்கெப்புடி தெரியும், அம்மா சொன்னவாவா...' என் றான் முகிலன்.

'இல்லை எனக்கெல்லாம் தெரியும்...' என்றாள்.

'அதான் எப்புடி...'

'எங்க இருந்து தொடங்கிறது எண்டு தெரியல்லையே' என்றாள் கவினா. எதுவுமே புரியாமல் வியந்து பார்த்துக்கொண்டிருந் தான் முகிலன்.

'என்ர பெயர் கவினா. இயக்கப் பெயர் கவியரசி. சோதியா படையணில நிண்டனான். உங்கட நிறையிசையோட நல்ல நண்பி, அதாவது பிரியாவோட பெஸ்ட் ப்ரண்ட்' முகிலன் விறைத்தபடி கவினாவை பார்த்தான். அவள் தொடர்ந்தாள்.

'பிரியா உங்களப்பற்றி நிறையச்சொல்லி இருக்கிறாள், கடை சியா உங்கள விசுவமடுவுல கண்டவள். அப்ப நானும் கூட நிண்டனான். அவளுக்கு ஒரே ஒரு ஆசை தான் இருந்தது. சண்டை எல்லாம் நிண்டு திரும்ப ஒரு சமாதானம் வந்தா, எல் லாத்துக்கும் ஒரு தீர்வு வந்தா, இந்த ஆயுதம், சீருடை எல் லாத்தையும் கழட்டி வைச்சிட்டு உங்களை கல்யாணம் கட்டி வாழோணும் எண்டது தான்'

'அவள் ஆனந்தபுரச் சண்டைல வீரச்சாவு. நான் சொட்டுல தப்பிட்டன். கருகிக்கிடந்த எங்கட நிலத்துல அவள் கனவு களும் கருகிப்போய்ட்டு' என்றவள் கண்களை துடைத்துக் கொண்டாள். முகிலனால் எதுவும் பேச முடியவில்லை. ஒரு சிறிய பிள்ளையை போல அழ ஆரம்பித்த முகிலனை அணைத்துக்கொண்டாள் கவினா. அடக்கி வைத்த துக்கத்தை கண்ணீராய் கொட்டினான் அவன்.

'பிரியா குடும்பம் எனக்கு நல்ல பழக்கம், நான் உங்களப் பற்றி கேட்டபோது விதுரன் அண்ணா தான் சொன்னவர். எங்கட வீட்ல உங்கள மாப்பிள பார்க்க சொன்னதும் அவர் தான். திரும்ப திரும்ப அத வற்புறுத்தி உங்கட அம்மாட்ட சொன் னது நான் தான் 'இருவரும் கண்ணீரோடு சேர்ந்து அன்பையும் பரிமாறி ஆறுதல் சொல்லிக்கொண்டனர். முகிலனின் தோளில் சாய்ந்தபடி இருந்த கவினாவின் அமைதியை 'ஹலோ... ஹலோ' என்ற ஒரு சிறு பெண் பிள்ளையின் சத்தம் குழப்பியது.

'ஹலோ...' ஒரு ரோசாப்பூ நிற ஜாக்கெட்டுட்டன், அவள் கையில் வைத்திருந்த பூவை இருவரையும் நோக்கி நீட்டிய படி நின்றிருந்தாள் அந்த குட்டி தேவதை.

'ஓ... தாங் யூ' என்றபடி முகிலன் கையில் வேண்டிக்கொண் டான். கண்ணீரை துடைத்துக்கொண்டான்.

'பிரியா... டைம் ஆச்சு... கம் ஒன்... வீட்ட போகணும்' சொல் லிய படி அவளை பின் தொடர்ந்தாள் அவளது அம்மா.

'ஓ... தமிழா' ஆச்சரியத்துடன் கேட்டாள் கவினா.

'ஆமா'

'இலங்கையா'

'இல்ல... தமிழ் நாடு'

'என்ன பெயர் சொன்னீங்க' தனக்கு பிரம்மை இல்லை என் பதை உறுதி செய்யக்கேட்டான் முகிலன்.

'பிரியா' சிரித்துக்கொண்டே விடைகொடுத்தாள் பிரியா. எங்கே போய்விட போகிறாள் பிரியா. இதோ இந்த பூங்காவின் ஆச னத்தில், எனிமேல் அவர்கள் நடக்க போகும் தெருக்களில், பகிர்ந்து கொள்ளும் அன்புகளில், அவனையும் அவளையும் இரசித்தபடி அவர்களோடே பயணிக்கத்தான் போகிறாள் பிரியா என்னும் நிறையிசை.



Kalaichelvi@thaiveedu.com

மா. சித்திவினாயகம்

முலையறுகாதை!

பெண் துயரப் பெருங்கதை - 14



தாய்மண்ணைப் பிரிந்த சோகப் பெருமூச்சுகளோடு, கவலையெனும் கார்மேகக் கடலில் மூழ்கியபடி தவித்துக் கொண்டிருந்தனர் அக்கப்பல் பயணிகள். அதுவொரு சொகுசுப் பயணம் அல்ல. உப்புக் காற்றும், இயந்திரப் புகையின் நெடியும் இணைந்து குமட்டலைத் தர, செம்பகம் தளர்ந்து கணேசன் தோளில் சாய்ந்தாள்.

தன் கவலையை மறக்க, ஆற்றுக்கால் பகவதியை மனக் கண்ணில் நிறுத்திக் கணேசனிடம் பேசத் தொடங்கினாள். சிறந்த கதைசொல்லியான அவளுக்கு பகவதி என்கிற கண்ணகியம்மனில் கொள்ளைப் பிரியம். கண்ணகியில் மீளாப் பக்தி கொண்டவள் செம்பகம்.

கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கிவிட்டு, நற்றிணை குறிப்பிடும் 'ஒருமுலை அறுத்த திருமாவுண்ணி'யாக அவள் வந்து சேர்ந்தது எங்கள் சேர நாடுதான். ஒருவேளை, அந்த வீரத்தின் எச்சத்தால்தான் மார்பை அறுத்தெறியும் துணிச்சல் கேரள நங்கேலிக்கும் வந்திருக்குமோ?' என்றாள் செம்பகம்.

மதுரையை எரித்த பதினான்காம் நாள், சேர நாட்டு எல்லையிலுள்ள கொடுங்காவலூர் அருகமைந்த 'வண்ணாத்திப் பாறை'யை அடைந்து, அங்கேயே அவள் தெய்வமாகி விண்ணகம் சென்றதாக வரலாறு. அவளே இன்றும் தமிழக, கேரள எல்லையின் காவல் தெய்வமாக நின்று காக்கும் 'இடுக்கியம்மன்' எனும் பகவதி.

ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமியன்று, கோவலன், கண்ணகித் திருவிழாவைத் தரிசிக்க அங்கே மக்கள் கூட்டம் அலைமோதும் என செம்பகம் விவரித்துக் கொண்டிருக்கையில், குறுக்கிட்டான் கணேசன்.

'கண்ணகி சேர நாட்டினில் கடவுளாகினாள் என்கிறாய் நீ. ஆனால் கண்ணகி மார்பை அறுத்தெறிந்துவிட்டு இலங்கை வந்து பல இடங்களில் தங்கி பத்தாம் பளையான வற்றாப் பளையில் தரித்திரிந்து இறுதியில் கதிர்காமத்தில் கடவுளாகினாள் என்கின்றார்களே உண்மையா' என்றான் கணேசன் கேலியாக. செம்பகம் அவனை ஏளனமாகப் பார்த்தபடி, 'நீ மட்டுமென்றில்லை. உன் ஆண் சமூகம் எப்போதும் ஏதோ ஒரு புரளியைப் பெண்களுக்கு எதிராகக் கிளப்புவதையே வேலையாக வைத்திருக்கின்றீர்களே என்றாள் !' செம்பகம் கோபமாக...

சில நிமிட மௌனத்தின் பின் செம்பகமே தொடர்ந்தாள்.

'ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள்' என்பது பெருமையல்ல; அவளை முன்னேற விடாமல் பின்னால் தள்ளிவைத்த ஆணாதிக்கத்தின் தந்திரமான நாடகமது. அடிப்படையில், தன் மேலாதிக்கத்திற்கு அச்சுறுத்தலாய் மாறும் ஒவ்வொரு பெண்ணையும் இந்தச் சமூகம் ஏதோ ஒரு வகையில் நிராகரித்துக் கொண்டே இருக்கிறது. பெண்ணின் அடக்குமுறையே இந்தப் பொல்லாத சமூகத்தின் ஆணிவேர். ஆணாதிக்கம் என்பது வெறும் அதிகாரம் அல்ல; அது தமக்குக் கீழே ஒருவரைத் தட்டிய மர்த்துவதில் இன்பம் காணும் கொடிய நோய்.

பெண்ணின் அறிவாற்றலை விட அவளது 'அடக்கமே' இங்கே தகுதியாகப் பார்க்கப்படுகிறதென்கிற பெரும் பொய்யிலும், புனைவிலும் உருவான உலகமிது.

கிரேக்கத்துப் பண்டோராவின் பெட்டியாகட்டும், பைபிள் சொல்கிற ஏவாளின் ஆப்பிளாகட்டும், உலகத்தின் அத்தனைத் துயரங்களுக்கும் பெண்ணையே காரணமாக்கி, அவளைப் 'பாவத்தின் ஊற்றுக்கண்ணாக'ச் சித்தரிப்பதுதான் இந்தச் சமூகம் காலம் காலமாகக் கட்டமைத்த பெரும் பொய். இது திட்டமிட்ட வரலாற்றுப் பிழை. நிலவுக்கும் செவ்வாய்க்கும் மனிதன் சென்றாலும் கூட, ஒரு தகுதியற்ற முட்டாள் ஆண்மகனைத் தலைவனாக ஏற்கும் சமூகம், அறிவார்ந்த பெண்ணைச் சிம்மாசனத்தில் அமர்த்தத் தயங்குவது நாம் பேசுகிற நாகரிகத்தின் தோல்வி.

சீதை முதல் திரௌபதி வரை அத்தனை பேரையும் அக்னிப் பிரவேசத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கிய வரலாறு ஆணாதிக்கம் ஏற்படுத்திய இதிகாச வரலாறு, இன்றைக்கும் சாதாரணப் பெண்களின் வாழ்வில் 'நீதி' என்ற பெயரில் இந்தக் கொடூரங்களே பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

பெண் என்பவள் ஆணாதிக்கத்தின் பலிபீடம் அல்ல; அவள் ஒடுக்கப்பட வேண்டியவளும் அல்ல. அவளைத் தட்டிய மர்த்த நினைக்கும் சமூகம் தன் வளர்ச்சியையே தானே தட்டியமர்த்திக் கொள்கிறதென்பதை இங்கு உணர்ந்தவர்களாக இந்த ஆணாதிக்க சமூகம் இல்லை என்று பொரிந்து தள்ளினாள் செம்பகம்.

ஆனால் கணேசனும் விடுவதாயில்லை. 'பெண் இனப் போராளியான கண்ணகியைப் பத்தினியாகவும், தெய்வமாகவும் காட்டத் துடிக்கிறார்களே தவிர, அவள் பட்ட துயரத்தையோ, போரின் உக்கிரத்தில் மார்பைத் திருகி எறிந்த அந்தப் போராட்டச் செய்தியையோ சொல்லும் ஒரு சிலையைக் கூட ஏன் எங்கும் வைக்கவில்லை?' என்று காட்டமாகக் கேட்டான்.

'அது உங்களை நீங்களே கேட்க வேண்டிய கேள்வி' என்றாள் செம்பகம்.

தொடர்ந்து அவன் கேட்ட கேள்வி சிந்திக்க வைத்தது. 'துயரங்களைச் சுமந்த இயேசுவை ஆணி அடிக்கப்பட்ட சிலுவையோடு காட்டித் தொழுகிற இந்த உலகம், பாடுகள் பட்ட கண்ணகியின் அந்த ஒற்றை முலைக்கோலத்தைச் சிலையாக வைக்கத் தயங்குவது ஏன்? கண்ணகிக்கு வரலாற்றுப் பெருமை செய்தவனாகச் சொல்லப்படுகின்ற சேரன் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்து, கங்கையில் நீராட்டி வஞ்சி மாநகரில் கண்ணகிக்குக் கோயில் எழுப்பினான் என்கிறார்கள். ஆனால், அவன் வடித்த சிலையிலாவது அந்தப் போராளி கண்ணகி ஒற்றை மார்போடு இருக்கிறாளா? இல்லையே!'

கணேசனின் கேள்விகள் இப்போது ஆணாதிக்கத்தின் மொத்தச் சாயத்தையும் அவன் வாயாலேயே வெளுக்க வைத்தது.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என முழங்கும் சிலப்பதிகாரத்தை உண்மை யிலேயே இவர்கள் மதித்திருந்தால், பின்னாளில் நங்கேலி ஏன் தன் மார்பை அரசிற்கு எதிராக அறுத்தெறிய வேண்டிய நிலை வந்திருக்கும்? நாம் ஏன் இன்று அகதிகளாய்க் கப்பல் ஏறித் தஞ்சம் தேடி அலைய வேண்டும்? முதலாளித்துவம் ஏன் நம்மைத் தொடர்ச்சியாகச் சுரண்ட வேண்டும்? நம்பூதிரி களின் கொடூர நயவஞ்சகங்கள் நம்மை ஏன் நசிக்க வேண்டும். அனைத்திற்கும் காரணம் ஆண்களே என்றாள் செம்பகம்.

இயலாமையின் கனத்தோடு ஒரு நீண்ட பெருமூச்சை வெளியிட்டான் கணேசன்.

உண்மையில் பாண்டியன் மகளா கண்ணகி?

'...சிலப்பதிகாரம் தவிர தமிழகத்திலும், கேரளத்திலும் வழங்கும் வாய்மொழி மரபிலும், எழுத்து மரபிலும் கண்ணகி பாண்டியனின் மகள் என்றுதானே கதை எழுதியுள்ளார்கள்' செம்பகம் என்றான் கணேசன்.

'பாண்டிய மன்னுக்குப் பிறந்த குழந்தை கொடிசுற்றிப் பிறந்ததால் மன்னனுக்கு ஆகாதென்று சோதிடர் ஆருடம் கூறியதால் குழந்தையைப் பெட்டியில் வைத்து ஆற்றில் மிதக்க விட்டனர். ஆற்றில் மிதந்து சென்ற குழந்தையை மாநாய்க்கன் எனும் புகார் நகர வணிகன் எடுத்து வளர்த்து அவளைக் கோவலனுக்கு மணம் செய்து வைக்கிறான். பதினாறு வயதுடைய கோவலனுக்கும், பன்னிரண்டு வயதுடைய கண்ணகிக்கும் திருமணம் நிகழ்கின்றது.' இது புகழேந்தி எழுதிய கதை.

செம்பகம் வியப்போடு கணேசனைப் பார்த்தாள். அந்தக் கதை கூட பெண்ணை வேண்டாப் பொருளாய் எறிகிற ஆண்களின் வேடிக்கைக் கதைதான்.

'அதிகார வெறி கொண்டு, அறம் பிழைப்பவர்களுக்குத் தெய்வமே எமனாக வரும் என்பதெல்லாம் பொய்த்துப்போன கலிகாலத்தில் வாழ்கிறோம். இன்று கொள்ளையர்களுக்கே இந்த உலகு வசப்பட்டிருக்கிறது. வல்லமையுள்ளவனுக்கு, அதிலும் வல்லமையுள்ள ஆணிய வாதிகளுக்கே இந்த வையகம்' என்று சொல்லியபடியே கணேசனின் தோளில் செம்பகம் ஆழ்ந்த உறக்கமாய்ப் போனாள்.

ஆணோ, பெண்ணோ பிறந்த மண்ணிலிருந்து வேரறுக்கப் பட்டு, வாழ்வின் அர்த்தத்தைத் தொலைத்துவிட்டுப் புலம் பெயர்ந்த அந்நிய மண்ணில் மாண்டு போவது ஒரு பெருஞ் சாபம். பெண்ணாகப் பிறந்த கண்ணகியும் அப்படித்தான் அகதியாகப் புலம்பெயர்ந்து இலங்கையில் மடிந்தாளோ? கணேசனின் மனதிற்குள் அந்த உணர்வே எதிரொலித்துக் கொண்டிருந்தது.

இராமர் கட்டிய அணைக்கு சமாந்தரமாக, கப்பல் மன்னாரை நோக்கித் தாவிச் சென்று கொண்டிருந்தது. மழை சூல்பெற்ற மேகங்கள் வானைக் கறுப்பாக்கின. எங்கும் இருள் கவிய, ஒரு பெரும் புயலுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கின. கடற்பெரு வெளியில் பெரும் சத்தத்துடன் கடல் அலைகள் கொந்தளித்தன. திடீர் திடீர் என்று வானத்து மின்னல் கண்களைக் கூச வைத்தது.

இடியோசையில் திடுக்கிட்டு விழித்த செம்பகத்தின் உள்ளம் அச்சத்தால் நடுங்கியது. எதனையும் சட்டை செய்யாமல் கப்பல் அலைகளைக் கிழித்துக்கொண்டு விரைந்தது. திடீர் மின்னல்கள் வானைப் பிளந்து கண்களைக் கூசச் செய்தன. கப்பல் ஏறும் வரை மக்களைக் கெஞ்சிக் கூத்தாடி ஏமாற்றிய அந்த கங்காணி, இப்போது ஓர் அதிகாரத் தோரணை மிக்க வனாக உருமாறியிருந்தான். ஏறியவர்கள் அனைவரும் தன்னிடம் அகப்பட்ட அடிமைகள் என்பது போல அவன் அவர்களை அதிகாரம் செய்தான். பயணித்தோரின்

குழந்தைகளை இரக்கமின்றித் தள்ளிவிட்டான். முதியோரைத் தகாத சொற்களால் நிந்தித்தான். எப்போதும் மதுவின் போதையில் தள்ளாடிக்கொண்டிருந்த அவன், கோட்-சூட் அணிந்த வெள்ளைத்துரையின் ஏவல் நாயாக இருந்தான். துரை சொல்வதை மறுபேச்சின்றி கும்பிடு போட்டுச் செய்து முடிக்கிற அடிமை அவன்.

கப்பலின் ஒரு மூலையில் நின்றவாறு, அந்தத் துரை செம்பகத்தை ஜாடை காட்டி ஏதோ பேசிக்கொண்டிருந்தான். 'அக் கேரளக் குட்டி மசியுமா?' - துரையின் கேள்விக்கு, 'மசிய வைக்க வேண்டியதுதான்' என மறுபேச்சின்றிப் பதிலளித்தான் கங்காணி.

'அப்போ அவள் கணவன்?'

'கணேசனைத் தீர்த்துக்கட்டிவிட வேண்டியதுதான். அவன் தேவையற்ற ஆணி' என்றான் கங்காணி குரூரமாக.

தொடர்ந்து, 'இங்கிலாந்துப் பாலியல் சந்தைக்காக ஏற்கெனவே ஐம்பது பெண்கள் கப்பலின் அறையினுள் இருக்கிறார்கள்' எனத் துரையிடம் விசுவாசத்தைக் காட்டினான் கங்காணி.

'மிக்க நல்லது! அவர்களைத் தலைமன்னாரிலிருந்து வேறு கப்பலுக்கு மாற்று. கேட்டால் 'பெண்களுக்கு முதலிடம்' என்று சொல். அவர்களைப் பின்னர்தான் மலையகத்தில் ஆண்கள் சந்திக்க முடியும் என்று ஒரு கதையைச் சொல்லி வை.'

'கவலைப்படாதீர்கள் துரை, நான் பார்த்துக் கொள்கிறேன். எல்லாம் சரியாக நடக்கும்' என்ற கங்காணியை விட்டுவிட்டு, துரை கீழ் தளத்திற்குச் சென்றான்.

அடிமைகளை எவர் வேண்டுமானாலும் எதுவும் செய்யலாம். ஏனென்று கேட்பதற்கும் இந்த அநீதிகளைத் தட்டிக் கேட்கவும் எவரும் அங்கு இல்லை. கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பேச்சுரிமை என்பவை ஒவ்வொரு மனிதனின் பிறப்புரிமை என்கிற பிரெஞ்சியப் புரட்சிகளெல்லாம் நடந்து முடிந்த போதும் இன்னமும் இங்கு இந்த அடிமைத் தனம் சற்றும் மாறவில்லை. 'இம்மென்றால் மரணம், ஏனென்றால் சிறை' எனும் அடக்குமுறையாளர்களின் இரும்புக் கரங்களுக்குள் நசுக்கப்பட்டுக் கிடந்தனர் இங்கு மக்கள்.

இருப்பினும், தமிழர்கள் எங்கு சென்றாலும் அந்த மண்ணைப் பொன்னாக மாற்றும் உழைப்பால் உலகை வியக்க வைப்ப வர்கள். அவர்கள் புலம்பெயர்ந்த நிலமெல்லாம் தமிழ் மணம் கமழ்ந்தது; அவர்கள் கால் பதித்த இடமெல்லாம் கலைகள் தழைத்தன.

பச்சைப்பசேலெனப் படர்ந்து கிடக்கும் கண்டிச் சீமையின் மலைச் சரிவுகளில், தேயிலைக் கொழுந்துகளைப் பறித் தபடி நம் மக்கள் சிந்திய குருதி கலந்த வியர்வை அந்த மண்ணுக்கு வளம் சேர்த்தது. 'காவாத்து' வெட்டும் சத்தங்களுக்கு இடையே அவர்கள் பேசிய தமிழ், அந்த மலைக்காற்றோடு கலந்து இன்றும் ரீங்காரமிடுகிறது. தம் வாழ்வாதாரத்திற்காகச் சென்ற இடங்களிலும், தங்களின் வேர்களை மறக்காமல் அழகிய தமிழிலேயே அடையாளங் களைச் சூட்டி மகிழ்ந்தனர்.

உடல் உழைப்பைத் தாண்டி, தங்களின் பாரம்பரிய கலைகளையும் அவர்கள் தங்களோடு சுமந்து சென்றார்கள். அந்திப் பொழுதில் களைப்புத் தீரப் பாடிய நாட்டார் பாடல்கள், ஆடிய கூத்துகள் மற்றும் வழிபாட்டு முறைகள் எனத் தமிழ்ப் பண்பாட்டை அந்நிய மண்ணிலும் ஆழமாக நட்டனர்.

காலம் மாறினாலும், தலைமுறைகள் கடந்தாலும், தங்கள் மொழியையும் பண்பாட்டையும் சிதையாமல் காப்பதில் தமிழர்கள் இணையற்றவர்கள். உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும், அங்கே ஒரு சிறு தமிழ் உலகைப் படைத்து, தமிழைத் தங்களின் மூச்சாகக் கொண்டு வாழ்பவர்கள் அவர்கள். மண்புழுவாக உழைக்க நேர்ந்தாலும், மாண்புடைய தமிழராகவே அவர்கள் இன்றும் நிமிர்ந்து நிற்கிறார்கள். அதிலும் மலையகம் சென்றவர்கள், தங்கள் வலிகளையும் கனவுகளையும் சுமந்தபடி, தங்களுக்கே உரித்தான நாட்டார் பாடல்களைப் புனைந்து பாடித்தான் வைத்துள்ளார்கள்.

'கூனி அடிச்ச மலை...
கோப்பி கன்னு போட்ட மலை...
அண்ணனப் புதைச்ச மலை...
அந்தாத் தெரியுது பார்!'

என அண்ணனை அந்த மலைச்சரிவுகளில் பறிகொடுத்த சோகத்தைக் கூடப் பெருங்குரலெடுத்துப் பாடித் தீர்த்தார்கள்.

'கோணக் கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
பழம் ஒன்று தப்பிச்சின்னு
பூட்சு காலால உதைச்சான்யா சின்னதுரை!'

எனத் துரைகளின் அராஜகத்தையும், கங்காணிகளின் அயோக்கியத்தனத்தையும் வெறும் வலிகளாக மட்டும் சுமக்காமல், அவற்றை வாய்ப்பாடல்களாக்கித் தங்கள் குமு றல்களைப் பதிவு செய்தார்கள். கோப்பி, தேயிலை, ரப்பர் தோட்டங்களில் செந்நீர் சிந்தி உழைத்த அவர்கள், அந்தத் துயரத்தைத் தங்கள் பேச்சு மொழியிலேயே பாடி வைத்தார்கள்:

'பாழுக்கு மரமெதற்கு...
பார்க்கலாம் இங்கு வந்தால்...
பாலுக்கு மரமிருக்கும்
பட்டைதனை வெட்டி வெட்டி
கூலிக்காய் தமிழ்க் குருதி
ஆறாய்ப் பெருகுகிறதே!
காலுக்குச் செருப்புமில்லை...
கண்டதேதும் இங்கில்லை!'

இந்தக் கண்ணீர் வரிகளை இன்னார்தான் எழுதினார்கள் என்கிற எந்த வரலாற்றுப் பதிவும் இல்லை. ஆனால், யாரோ ஒரு பாட்டாளி பாடிய அந்த ரத்த சாட்சியத்தை, சந்ததி சந்த தியாகப் பாடித் தங்கள் மொழியையும் வலியையும் அவர்கள் தக்க வைத்திருக்கிறார்கள்.

இப்படி கூலி அடிமைகளைச் சுமந்து செல்லும் கப்பல்களில், நீதி கேட்பவர்கள் கடலுக்கே இரையாக்கப்படுவார்கள். குடும்பம் குடும்பமாகக் கப்பல்கள் அப்படியே கடலில்

மூழ்கடிக்கப்பட்ட கருப்பு வரலாறுகள் உண்டு. வெறும் காப்புறுதிப் பணத்திற்காக, உயிருள்ள மனிதர்களோடு கப்பல்களை வேண்டுமென்றே மூழ்கடித்த கொடுமைகளும் நிகழ்ந்தன. இந்த அகதிகளின் கதறல்களையும், அடிமை களின் ஓலங்களையும் கேட்பதற்கு எவரும் நாதியற்ற சூழலே நிலவியது.

இருந்தும், அந்தக் கப்பலில் பயணம் செய்தவர்கள் எல்லோரும் மிகுந்த அன்னியோன்யமாகப் பழகினார்கள். அங்கே சாதிப் பிளவுகளோ, உயர்வு தாழ்வோ இல்லை. ஒருவித அச்சத்தோடும் நம்பிக்கையோடும் ஒருவருக்கொருவர் புன்னகைத்துக்கொண்டார்கள். சமமாக அமர்ந்து தாயம் விளையாடினார்கள்; சாப்பிட்டார்கள். துயரங்களைப் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் உதவியாக இருந்தார்கள். உண்மையான அன்போடு பழகிப் பார்த்தால் பகைவன் கூட நண்பன்தான் என்பது அங்கேயே நிரூபண மானது. ஆனால், அவர்கள் கப்பலை விட்டு இறங்கி அந்தத் தோட்டத்தின் மலைகளுக்குள் காலடி எடுத்து வைத்த பின், மீண்டும் பழையபடி மாறிவிடுவார்களோ என்கிற அச்சமும் ஒருபுறம் நிலவியது.

கப்பலின் இரைச்சலுக்கு நடுவே, சமையலறை எடுபிடியாக இருந்த அந்தக் கிழவி ஏதோ ஒரு ராகத்தை முனகியபடி இருந்தாள். கிழவி ஏற்கனவே மலைநாட்டில் இருந்து திரும்பி வந்து கப்பலில் உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபடுகிறாள்.

செம்பகம் தன் கூந்தலை வாரிச் சிங்காரித்துக் கொள்வதைக் கண்டதும், அருகே வந்த கிழவி சொன்ன சொற்கள் செம்பகத்தின் இதயத்தில் முள்ளாய்த் தைத்தன.

'அடியே... சிங்காரிச்சதெல்லாம் போதும்! உன் அழகே உனக்கு வினையாகப் போகப் போகுது. அந்தக் கரையில் காத்துக் கிடக்கும் கொடுமைகளை நான் என்னவென்று சொல்வேன்? அங்கே உங்களுக்கு எந்தப் பச்சையு மில்லைடி..' - கண்களைத் துடைத்தபடி கிழவி முன்னால் நகர, செம்பகத்தின் மனம் கலக்கமுற்றது. அந்தக் கிழவி சொல்லத் துடிக்கும் மர்மம் என்ன?

முன்னால் சென்ற கிழவி, இப்போது தன் கணீர்க் குரலில் கிராமிய ராகம் இழையோடப் பெருங்குரலெடுத்துப் பாடத் தொடங்கினாள்.

'ஊரான ஊரிழந்தோம்...
ஒத்தப்பனைத் தோப்பிழந்தோம்...
பேரான கண்டியிலே - என்
பெத்த தாயை நான் தொலைத்தேன்!'

அட்டைக் கடியும், கரடுமுரடான மலைப் பாதைகளும், கால்களைப் பதம் பார்க்கும் கற்களும் நிறைந்த கண்டியின் துயரத்தை அவள் பாட்டிலேயே விவரித்தாள்.

'சொந்த ஊரில் வீடிருக்க, பழனிச் சம்பாச் சோறும் எருமைத் தயிரும் இருக்க, ஏனடி செல்கிறாய் இந்தக் கண்டிச் சீமைக்கு?' என்கிற அவளது கேள்வி, பயணிகளின் நெஞ்சில் ஒரு கனத்த மௌனத்தைப் பரப்பியது.

'கண்டி கண்டி எனச் சொல்லாதீங்க...
கண்டிப் பேச்சைப் பேசாதீங்க...
கண்டியிலே படும் பாட்டை - நான்
கண்டவாறே சொல்லுகின்றேன்!

ஓடி ஓடிக் கொழுந்தெடுத்தேன்
ஒரு கூடை கொழுந்தெடுத்தேன்
பாவி கணக்குப் புள்ள
பத்தாது என்கிறானே

கூடையிலே கொழுந்துமில்ல
கொழுந்தெடுக்கச் சிந்தையில்ல
கங்காணி சொன்ன சொல்லு
கண்ணீரைக் கொட்டுதடி..

ஈரல் கருகுதையா
இரு தொடையும் நோகுதையா
நினைத்துப் படுத்தாலும்
நித்திரையோ வருகுதில்லை

கண்டிக்கு வந்தமுன்னு
கனக்க நகை போட்டமுன்னு
மஞ்சக் குளிச்சமுன்னு
மனிசா மக்கா யாருமில்லே'

எனத் தொடங்கிய கிழவி, தேயிலைத் தோட்டத்தில் நடக்கும் சுரண்டலைத் தன் பாடலால் படம்பிடித்துக் காட்டினாள். ஓடி ஓடி ஒரு கூடை நிறையக் கொழுந்து பறித்தாலும், பாவி 'கணக்குப்பிள்ளை' இன்னும் பத்தவில்லை என்று அதிகாரத்தோடு கத்துவதையும், கூடை நிறையக் கொழுந்து இருந்தாலும் அதைச் சுமக்கத் தெம்பில்லாமல் கங்காணியின் சொற்களால் கண்கள் நீர் சொரிவதையும் பாடினாள்.

கண்டிக்கு வந்து கனக்க நகை போட்டோம் என்றும், மஞ்சள் குளித்துச் சுகமாக வாழ்ந்தோம் என்றும் சொல்லிக்கொள்ள அங்கே ஒரு மனிசருமில்லை என்கிற அந்தச் சோகப் பாட்டு, கப்பலில் இருந்தவர்களை உலுக்கியது.

தாங்கள் போகும் இடம் ஒரு சுவர்க்கமல்ல, அதுவொரு நரகம் என்பதை அந்தக் கிழவியின் குரல் அவர்களுக்கு முன்கூட்டியே உணர்த்தியது.

இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த நாய்பிடி நாகநாதி கிழவியை படு தூசணங்கலந்து பேசினான். வெள்ளைக்காரன் கப்பலில் வேலை பார்க்கிறது, பிறகு அவனைக் குறை சொல்லுறது, உனக்கு நாய்ப் புத்தி என்றான். கிழவி அவனை முறைத்தாள். நாய்பிடி நாகநாதிக்கு திருச்சியில் வெள்ளைக்காரர்கள் எனப்படும் இந்தக் கொள்ளைக்காரர்கள் துவக்கும், சுடுவதற்கு உரிமமும் கொடுத்திருந்தார்கள். கட்டாக்காலி நாய்களைச் சுடுவதற்கும், வெள்ளையர்கள் வளர்க்கிற உயர்ரக நாய்களை, உள்ளூர் நாய்கள் வந்து புணர்ந்து விடாதபடி நாய்ப் புனிதம் பாதுகாக்கவும் இவன் தான் சரியான ஆள் என்று நாய்களைச் சுட நியமிக்கப்பட்ட வெள்ளைய அடிமை அவன்.

வெள்ளைய நாய்களை, உள்ளூர் நாய்கள் புணரக்கூடாது என்பதிலிருக்கிற திமிர்த்தனப் புனிதம் உள்ளூர்ப்

பெண்களை வெள்ளையர்கள் வன்புணர்வு செய்வதில் இருப்பதில்லை. இப்போ நாய்கள் அரிதாகிப் போகத் தோட்ட வேலைக்கு நாகநாதி மலையகம் போகின்றான். ஆனால், அவனுக்கு இன்னமும் வெள்ளைய விசுவாசம் விட்டுப் போகவில்லை.

போதாக்குறைக்கு தன் கரகரத்த குரலால்,

'தன்னான தாதினம் தன்னானே
தன்னான தாதினம் தன்னானே
வெள்ளிக் குஞ்சரம் வீசுங்கடி -பெண்காள்
வெள்ளிக் குஞ்சரம் வீசுங்கடி
பாவப்பழம் போல நம்மய்யா கங்காணி
பல்லு வரிசையைப் பாருங்கடி'

என்று தாளந் தட்டிப் பாடத் தொடங்கினான்..

'திண்ணையை திண்ணையை கூட்டுங்கடி - அந்த
தெருவுத் திண்ணையை கூட்டுங்கடி
நம்மய்யா கங்காணி சாஞ்சிருக்க
நல்லாய்த் திண்ணையை கூட்டுங்கடி'

என்று கங்காணிகளுக்கு செம்பு தூக்கி நின்றான் நாய்பிடி நாகநாதி.

'கோப்பி பழுத்திருச்சு
கொண்டு போக நாளாச்சு
சீமைத்தொரைகளெல்லாம்
சிரித்திடுக யன்னலிலே

செடியே செடிக் கொழுந்தே
சின்னத்துரை டீக் கொழுந்தே
வாரணச் செடிக் கொழுந்தே
வந்திட்டாரே நம்ம தொரை

அரிசி கொடுத்த துரை
ஆக்கித் தந்த எங்க துரை
சேலை கொடுத்த துரை
சிரிச்சாராம் யன்னலிலே...'

என்று துரைமாரின் புகழையே போற்றிப் பாடினான் நாய்பிடி.

'கடலோட கடலுரச
கடலுத் தண்ணிய மீனுரச
உன்னோட நானுரசக் கிழவி
உலகம் பொறக்கலியே'

என்றான் நாய்பிடி... கிழவியைப் பார்த்து நக்கலாக...

கேட்டுக் கொண்டிருந்த பயணிகள் கிழவியைப் பாடும்படி கேட்டு வற்புறுத்தினார்கள்...

கிழவிக்கு அவன் பாடிய பாட்டுகளால் கடும்கோபம்...

'கோணக்கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சின்னு
உதைச்சாண்டா உங்க தொரை'

என்றவுடன் சனங்கள் கை தட்டினார்கள்.

'குடிக்கப் பாலும் கொப்பளிக்கப் பன்னீரும்
அடுக்கடுக்காய் காசும் தாறனெண்டான் கங்காணி
குடிக்கக் கூழுக்கும் வழியற்றுப் போனோமடா
பரதேசி'

என்று நாய்பிடி நாகநாதியோடு மல்லுக்குப் போனாள் கிழவி.

'காற்சட்டை போட்டு, கைகளை உள்ளே விட்டு
கண்ணைச் சிமிட்டி
கங்காணியைக் கைக்குள் போட்டு
காரியம் பார்ப்பான் சீமைத்தொரை
அடி அளந்து வீடுகட்ட - நம்ம
ஆண்டமனை அங்கிருக்க
பஞ்சம் பிழைப்பதற்குப்
பாற்கடலைத் தாண்டி வந்தோம்
பஞ்சம் பிழைக்கலியே- நம்ம
பசி இன்னும் தீரலியே...

சீரான சீமைவிட்டுச்
சீரழியக் காடு வந்தோம்
கூடை தலைமேலே
குடி வாழ்க்கை கானகத்தில்
காலையில நெர பிடிச்சு
காட்டுத் தொங்கல் போய் முடிஞ்சும்
கூடை நிறையலியே
கூனப்பய தோட்டத்திலே'

என்று வஞ்சினத்தோடு பாடினாள் கிழவி.

'தோணி வருகு துண்ணு
துறைமுகங்கள் காத்திருந்தேன்
தோணி கவுந்திருச்சே
துறைமுகமே கலங்கிடிச்சே...'

கிழவி எழுந்து தன் வேலை பார்க்கப் போயிற்று. நாட்டுப் புறப் பாடல்கள் மானிட அனுபவத்தின் நேர்த்தி, மானிட வலியின் சாட்சியங்கள். மனிதரோடு மனிதரை ஒன்று சேர்த்து அவர்களது துன்பத்தை, இன்பத்தை பகிர்ந்து கொள்வது. கற்றோர்க்காகப் புலவர்கள் ஆக்கிய புரியா இலக்கியங்களை விடவும், பாமரமக்களே ஆக்கி அவர்களாலேயே காலங்கால மாகக் காப்பாற்றப்பட்டு வருகிற நாட்டார்பாடல்கள் நம் எளிய மக்களை எழுச்சியுற வைப்பவை.

கப்பல் பேரிரைச்சலோடு சமுத்திரப் பெரும் பூதமென விரைந்து கொண்டிருந்தது.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

பறவைமனம்



— ஆதிலட்சுமி சிவகுமார்

நெஞ்சுக்குள் நிரம்பித் தழும்பும் நினைவுகளைத் தாங்கியபடி ஏரிக்கரைக்கு வந்திருந்தாள் வசந்தி. காற்றின் வேகத்திற்கு ஏற்ப அலைகளை உற்பவித்தபடி நகர்ந்துகொண்டிருந்தது அந்தச் சிற்றேரி.

இராஜகம்பீரத்தோடு அலைகளின்மேல் அமர்ந்தபடி உல்லாசமாய்ப் பயணிக்கும் ஒற்றைவெள்ளை அன்னப் பறவை. குளிரோ வெயிலோ பூகம்பமோ அந்தப் பறவைக்கு தடைவிதிப்பதில்லையென எண்ணிக் கொண்டவளாய் பரந்துவிரிந்து கிடக்கும் ஏரிக் கரையோர இருக்கையில் அமர்ந்திருக்கிறாள் அவள்.

நீச்சலுக்கு வருவோர் எத்தனை தடைவைகள் கலக்கினாலும் தானாகவே தெளிந்துபோகிற இந்த ஏரியை அவள் பாராட்டிக்கொள்வதுண்டு. ஏரிக்குள் நெளிந்து நெளிந்து அசையும் பெருமரங்களின் நடனத்தைப் பார்த்து இரசிக்க அவளுக்குப் பிடிக்கும்.

சிறுவர்களுக்கு மட்டுமல்லாது தனித்தலையும் முது மனங்களுக்கும் ஆறுதல் தருகிறது இந்தச் சிற்றேரி. மாலை வேளைகளில் பூஞ்சைக் கண்களுடன் ஏரியை இரசிக்கும் முதியவர்களைப் பார்த்திருக்கிறாள் வசந்தி. சின்னஞ்சிறு படகுகளை ஓட்டும் பயிற்சியாளர்கள்.

ஆண்டுக்கு ஒரு முறை இந்த ஏரியில் படகுப்போட்டி நடைபெறும். படகுப் போட்டியை வசந்தி ஒருமுறையேனும் தவறவிட்டதில்லை. அப்போதெல்லாம் கைகளைப் பிணைத்தபடி ஏரிக்கரையில் நடப்பதற்கோ, இரசிப்பதற்கோ அவளுக்கொரு துணையிருந்ததை அவள் வலியோடு நினைத்துப்பார்த்தாள்.

உடல்வளையாத நரைதிரையுற்ற முதியவர் ஒருவர் ஊன்றுகோலின் பாதுகாப்போடு அவளருகாக மெல்ல மெல்ல நடந்து போகிறார். முகத்தை மட்டும் பார்த்தால் ஒரு தவமுனிபோலத் தெரிந்தார் அவர். எண்பதுக்கு மேற்பட்ட வயதிருக்கலாம் எனத் தோன்றியது அவளுக்கு.

எண்பது தொண்ணூறு வயதைத் தாண்டிய பின்னரும் சுவர்களுக்குள் முடங்கிப்போகாமல், பிள்ளைகளுக்கோ உறவுகளுக்கோ சுமையாகாமல் வாழ்க்கையை உன்ன தமாக்கும் பல மனிதர்களை இங்கேதான் பார்ப்பதாக அவள் எண்ணிக்கொள்வதுண்டு.

எங்களின் முதுமைதான் இளமையின் ஆட்டங்களுக்கு முற்றுப்புள்ளிவைத்து, எங்கள் மனிதர்களைப் பதப் படுத்துகிறது என நினைத்துக்கொண்டாள் வசந்தி. இளமைக்குக் கண்களில்லை. அது கனத்த காற்றைப் போல மனிதர்களை உலுப்பிவிடுகிறது. கனதியானவை மட்டும் அசைவதில்லை எனக் கணக்கிட்டுக்கொள்கிறாள்.

tg.theeban@gmail.com

அவளுக்கு முன்பக்கமாக சற்றுத் தொலைவில் உயர்ந்து நின்ற தேவாலயக் கோபுரம் உச்சியில் சிலுவையொன்றைத் தாங்கிக்கொண்டிருந்தது. கனத்துக் கிடந்தவெள்ளை மேகக் கூட்டம் ஒன்றைக் காற்று ஆற்றின் அந்தப்பக்கமாய் தள்ளிக் கொண்டிருந்தது. ஆற்றுக்கு மேலே வட்டமடிக்கும் நீர்க் காகங்கள். ஆங்காங்கே கருவிகள் ஏந்திய காவலர்களைப் போல பெருமரங்கள் நிலையாய் நின்றுகொண்டிருந்தன. தேவாலயத்தை ஒட்டியமைந்திருக்கும் கோப்பி அருந்த கத்தில் சில மனிதர்கள் ஏரியை வேடிக்கைபார்த்தபடி கோப்பியைச் சுவைத்துக்கொண்டிருக்கிறார்கள். இடுப்பில் காசுப்பை அணிந்த இரு இளம்பெண்கள் பரிமாறுவதிலும், கணக்கு முடிப்பதிலும் வேகமாகச் செயற்பட்டுக்கொண்டி ருப்பது தொலைவுப் படமாகத் தெரிகிறது.

ஒருவித குளிர்மையோடும் சேற்றின் மென்வாசனையோடும் தன்நாசிகளில் நுழைந்த தென்றலை வசந்தி கண்களை மூடி உள்ளெடுத்துக் கொண்டாள். தான் தேடிய தனிமை இதுவாகவே இருக்குமோ என்று மனது நினைத்துக்கொண்டது. இது அறிவால் வந்த ஞானமல்ல. தொடர்ச்சியான ஏமாற்றத்தால் தனக்குள் திணிக்கப்பட்ட ஞானம் என நினைத்துக்கொண்டாள்.

நான்கு அறைகளைக்கொண்ட வீடு. வீட்டுச் சுவரளவு நீளத்தில் தொலைக்காட்சிப் பெட்டி. ஒருகாலத்தில் பிள்ளைகள் நான் நீ என அடிபட்டு விளையாடிய விளையாட்டுக் கருவிகள். பெரிதாக்கப்பட்டு சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் அவளுடைய திருமண ஒளிப்படம். கழுத்து நிறைந்த பூமாலையும் கற்றை மீசையுமாக அவன் அவளருகில். அவை எதுவும் தராத மனஅமைதியை இந்த ஏரி அவளுக்குத் தந்துவிடுகிறது.

நீரோட்டத்தில் அடித்து வரப்படும் பசிய இலைகளாய் மனம் எதையெதையோவெல்லாம் நினைவுக்குள் இழுத்துவந்து சேர்த்தது. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக குவிந்து கிடக்கும் கறுப்பும் வெள்ளையுமான நினைவுப் பருக்கைகள். உரித்தெறிய முடியாமல் வேரூன்றி அவமானங்களைத் தரும் வலிகள் அவை என அவள் உணர்ந்துகொண்டாள்.

முள்ளுப்படுக்கையில் கழிந்த அல்லது கழித்த இரவுகளின் ஏக்கங்கள். ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் தனித்திருந்து அழுதுகொட்டிய நாட்கள். நினைவுவரும் நேரமெல்லாம் ஐயோ தோற்றுப்போனோமே என்றுணர்ந்து கழிவிரக்கம் கொண்ட பொழுதுகள். எவருமறியாமல் அழுதுதீர்த்த இரவுகள்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் துள்ளும் கன்றுக்குட்டியாய்... ஏதுமறியாமல் உசுப்பிவிடப்பட்ட ஏதோவொரு குருட்டு நம்பிக்கையோடு... வந்திறங்கியவள். இன்று வழிதவறிய பயணியாய் தத்தளிக்கும் தன்நிலை அவளை வருத்துவதாக உணரமுடிகிறது அவளால்.

சுந்தரேசன் என்கிற அவளின் ஆதிமனிதன். அவளை எல்லா வகையிலும் வியப்படையவைத்து ஆட்கொண்ட ஆண்மகன். அந்த ஆதிமனிதனின் காதலிலும் கதகதப்பிலும் பிணைந்திருந்த நாட்கள். அவனுக்காகவே தன்னை அர்ப்பணித்திருந்த நாட்கள். உருகி உருகி அவனுக்காகவே வாழ்ந்த நாட்கள். அவனில்லாவிடில் தன் உலகமே அஸ்தமித்துவிடும் என எண்ணியிருந்த பேதைமை.

இந்த ஏரிக்கரையில் தானும் தன்னுடைய ஆதி மனிதர் கிறங்கிப்போய் காதலின் உந்துதலில் எத்தனை மனக் கோட்டைகளைக் கட்டினார்கள் என நினைத்துப்பார்த்தாள். உள்ளே ஆறாத புண்ணொன்று சுண்டிச்சுண்டி வலிப்பதை உணர்ந்தாள். எல்லாமே ஒற்றைத் துரோகத்துக்குள் பெயரழிக்கப்பட்ட நிலை...

‘உன்னை ஒரு முறை நேரில் பார்த்துப் பேச விரும்புகிறேன்... வாய்ப்புத் தரமுடியுமா ?’

முப்பது ஆண்டுகள் உயிர்த்துணையாய் அவளுடன் வாழ்ந்தவன். வாழ்தலின் சான்றாக இரண்டு உயிர்களைத் தந்தவன். அவனின் சிறு பிரிவைக்கூடத் தாங்கிக்கொள்ள முடியாதவளாக, அவனின் நிழல்போலக் கூடித்திரிந்தவள். எல்லாவற்றிலும் எப்போதும் அவனுக்கு ஈடுகொடுத்து வாழ்ந்தவள்.

ஒரு தாயைப் போல பரிவுகாட்டி... ஒரு நல்ல தந்தையைப் போல அறிவுணர்த்தி, குழந்தையைப் போல அவனிடம் குழைந்து... சில பொழுதுகளில் அடம்பிடித்து... காதலால் அவனை வீழ்த்தி... அவனின் உச்சிமயிர் பற்றி இழுத்து... சிற்பியாயிருந்து அவனைச் செதுக்கி... வாழ்க்கையின் சாக சங்களாயிருந்த காலம்... பெருமூச்சோடு வானம் பார்த்தாள்.

அவனிடமிருந்த புலமையைக் கண்டறிந்து, அம்மிக்கல்லாயக் கிடந்தவனை அடிக்குமேல் அடி அடித்து, நகர்த்தி... உயர்த்திச் சிறகு பூட்டியவள். சிறகு முதிர்ந்த பிறகு... உச்சம் தொட்டு உயரப் போன பிறகு...

பதின்மூன்று ஆண்டுகளாய் ஒரு தேன் வண்டைப்போல எங்கோ எதையோ தேடிப்போனவன். இப்போது ஒரு வாய்ப்புக் கேட்கிறான் பேசுவதற்கு. பிரிதலும் இணைதலும் அத்தனை இலகுவானதா என்ன... தன் உதடுகளைப் பற்களால் நெரித்துக்கொண்டாள்.

தன்னிடம் பேசுவதற்கு என்ன இருக்கிறது என அவளுக்குப் புரியவில்லை. எரிமலைக் குழம்பாய்க் கொதித்த மனதை மெல்ல மெல்ல இறுக்கி, பிடிமானங்களை வேருடன் விட்டெறிந்து வெற்றுப் பாறையென இறுகிய பின் பேசுவதற்கு தன்னிடம் ஏதுமில்லை என்பதுதான் தனது நிலையென அவளுக்குப் புரிந்தது.

எதைப் பேசப்போகிறான் அவன் ? இறந்துபோன காலத்தை உயிர்ப்பிக்க முயற்சிக்கிறானா... முடியுமா இனி... சில்லுச் சில்லாய் உடைத்துப் போட்ட மனதை அவனால் ஒட்டவைத்து விடத்தான் முடியுமா... கடவுளே வந்து காலில் வீழ்ந்தாலும்

நடக்கவியலாத காரியமல்லவா...

கால முதலையின் வாயில் சிக்கி, வாழ்வின் அர்த்தங்கள் எல்லாம் நசுங்கி இறந்தபின் ஏன் இந்தக் கேள்வி. தன்னை ஆசுவாசப்படுத்திய ஆகர்சித்த அவனின் புலமையில் ஆழ்ந்து அவள் தன்னையே மறந்தநிலையில், தொடர் வண்டியொன்று தான் இழுத்துவந்த பெட்டியைக் கழற்றி விட்டுப் போவதுபோல இயல்பாகத்தானே போகமுடிந்தது அவனால்.

ஒரு வார்த்தை... ஒரு காரணம்... ஒரு சிறுசச்சரவு... ஒரு கருத்து முரண்... வாய்த்தகராறு... சுடுசொற்கள்... எதுவுமில்லாமல் பிரிந்துபோன உறவு. ஏன் என்ற கேள்விக்குப் பதிலேதும் இல்லாமல் அல்லாடிய காலங்கள். உறக்கத்தில் மரணித்தவள் போல ஒடிந்துபோன உணர்வு...

சுழற்காற்றுப்போல வீசிய துன்பத்தில் சிக்கிச் சிதறுண்டு, திக்கற்று நின்றவள். உறவுகளும் நெருங்கிப் பழகியவர்களும் காட்டிய வெறுப்பில் வெந்து சாம்பலாகி... மருத்துவக் கண் காணிப்பில் குளிசைகளே வாழ்வென்று கிடப்பவளிடம் என்னதான் யாசிக்கப் போகிறான் அவன்...

தன்னால் மொட்டையடிக்கப்பட்ட மரத்திடம் எதற்காக நிழல் தேடுகிறது அந்த மனிதமனம்...

அவளுக்குள் பழிவாங்கும் எண்ணம் எதுவும் ஏற்பட்டதில்லை என்பதாக அவள் எண்ணிக்கொண்டாள். இறுகிய பாறையில் விழுகின்ற மழையின் துளிகளைப்போல சுரணையற்றுப் போயிருந்தது அந்தக் கேள்வி.

ஆயிரம் ஆயிரமாய் நண்டுகள் துளைப்பதுபோல கேள்விகள் துளைத்துக்கொண்டிருந்தன வசந்தியை. அவனைத் தோழமையாகச் சாயக்கொடுத்த அவளின் தோள்கள் வலி யெடுத்தன. நெஞ்சுக்கூடு பற்றி எரிந்தது. காதலும் கூடலும் களிப்புமாக நகர்ந்துபோன வாழ்க்கையின் நாட்கள் கனவு போலத் தோன்றின. பூமலர்ந்த செடியை வெட்டி வீழ்த்திய துயரம் அலைக்கழித்தது. ஒன்றும் ஒன்றும் ஒன்றென்று வாழ்ந்த வாழ்க்கையின் கணக்குப் பிழைத்துப்போனது. அது உயிருள்ளவரை ஆற்றமுடியா வலி.

அவன் இப்படிச் சமநிலையற்றுப் போவான் என்று அவள் நினைத்ததே இல்லை. எது அவனைக் குழப்பி ஆட்டம் காணவைத்ததென்று நினைத்துப் பார்க்கமுடியவில்லை. எல்லாம் நன்றாகத்தானிருந்தது. எந்தப் பிசிறுமில்லாத வாழ்வின் நகர்வுக்கோட்டில் எங்கே கோணல் உருவான தென்று தன்னால் உணர்ந்துகொள்ள முடியவில்லையே என்ற மனத்தாக்கம் அவளை உருட்டி எடுத்தது.

பதின்மூன்று ஆண்டுகள்... நினைத்துப் பார்க்கவே நடுங்க வைக்கும் வலிகள். அழுது அழுதுமரத்துப்போன கண்களும் கன்னங்களும். யாரோடும் பகிர்ந்துகொள்ளமுடியாத ஆறாத புண்களாய் ஆகிப்போன துயரம். எதனாலும் நிரப்பமுடியாத தாகிப்போன மனவெளிப்பள்ளம்.

இரண்டு பிள்ளைகளின் ஏக்கங்கள். அவர்களிடமிருந்து வெளிவரும் நெருப்புத் துண்டங்களைப் போன்ற கேள்விகள். பதில் சொல்லமுடியாத தவிப்போடு மௌனமாகிப்போன நாட்களின் உறுத்தல்கள்.

பிரிந்துசென்றவனைக் கேள்வி கேட்காமல் தனித்து நின்றவளைக் குற்றம்சாட்டிய மனிதர்கள். ஆளுக்கொரு தராசுடன் அவளை நிறுத்து நிறுத்து எடைபோட்ட அவலம் அவளுக்குள் ஆழமாகப் பதிந்துபோனது.

அவள் கண்களை மூடி ஒருகணம் ஒரேயொருகணம் எல்லாக் கசப்புகளையும் விழுங்கிக்கொள்ள எத்தனித்தாள்.

அவள் முன்னால் ஏதோவொரு வாசனை. பழக்கப்பட்டு மறக்கடிக்கப்பட்டுப்போன வாசனை அது. தலையை உலுப்பிக் கொண்டாள்.

‘என்ன இது ? நான் மனநோயாளியாகிவிட்டேனா ?...’

கண்களை மெதுவாகத் திறந்தாள். அவளின் முன்னே ஆறு சலசலப்பின்றி மெதுவாக நெளிந்துகொண்டிருந்தது.

‘ஓ... இது ஆற்றின் மணமா ?... அல்லது ஓர் ஆணின் மணமா ?...’

‘வசூ... வசுவம்மா...’

திடுக்கிட்டுப்போய்த் திரும்பினாள் வசந்தி. ஒருகணப் பொழுது கால்கள் வலிமையற்றுப்போன உணர்வு. தொண்டைக் குழி காய்ந்துபோனது. அவளால் எதையும் நினைத்துப் பார்க்கமுடியவில்லை. பதின்மூன்று ஆண்டுகாலத் துயரும் படச்சுருளாய் விரைந்தன.

மாறுவேடத்தில் வந்திறங்கிய கந்தர்வனைப்போல...

என்ன இது... ஒருகணத்தின் உறைவு. உதறிக்கொண்டு விழிப்புற்றாள்.

‘ஓ... வாழ்வு கசந்துபோய் இந்தப்பக்கமாக காற்று அள்ளி வந்ததோ...’

தொண்டைவரை வந்த வார்த்தைகள் வீரியம் இழந்துபோக... அவளின் பார்வை தாழ்ந்தது. வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சி மகிழும் குரூரமானவளல்ல தான் எனத் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

‘ஒருக்கால் பார்க்கவேணும் எண்டு மனம் அடம்பிடிச்சுது வசிம்மா...’

அவனின் தோற்றம் அவளைத் திடுக்கிடச் செய்தது. தன்னை விடவும் இரண்டு ஆண்டுகளே மூத்த அவன் மிகவும் கிழப் பருவமடைந்திருப்பது அவளை உறுத்தியது. வெண்மை யாலான தாடி. பஞ்சுபோலத் தலைமுடி. கண்கள் சுருங்கிச் சிறுத்திருந்தன. பற்களில் மஞ்சட் கறைபடிந்து... எந்தக் குண்டலத்தை யாசித்து வந்திருக்கிறானோ...

'நாடகம் விடும் நேரம்தான் உச்சக்காட்சி நடக்குதம்மா...' என்ற வாழ்வே மாயம் திரைப்படத்தின் பாடல் வரிகள் ஏனோ அவளுக்கு நினைவில் வந்தன.

'இரண்டுவருடத்துக்கு முன்னால அவள் இறந்திட்டாள்...'

அவன் சொல்லும் அந்த அவள் யாரெனப் புரிந்து கொண்டாள் வசந்தி.

'எல்லாருக்கும் சாவு ஒரு நாள் வாறதுதானே... நீயும் நானும் கூடச் சாகப் போறவர்கள் தான்...'

தொண்டைக்கு வெளியே வரமறுத்து அடம்பிடித்து இறுகிக் கொண்டன வார்த்தைகள்.

அவனிடம் வேற்று மனிதனாக எண்ணிக்கூட எதையும் பேச முடியாதிருந்தது.

'சாப்பிட்டியா வசு... என்னை இந்தக் கேள்வியைக் கேட்க ஆருமில்லாத நிலையிலை... இப்ப யாரைப் பார்த்தாலும் இந்தக் கேள்வியைக் கேட்கத் தோன்றுது...'

'பிள்ளைகளும் போனபிறகு தனித்துப் போயிட்டாய் போல...'

'என்னைப் பொறுத்தவரைக்கும் எல்லாம் முடிஞ்சுபோச்சு... மரங்களுக்கு வேணுமெண்டால் வசந்தகாலம் வரலாம்... ஆனா மனிசருக்கு... அதுவும் எனக்கு வராது... வரவும் தேவையில்லை...'

அவன் எதுவும் பேசவில்லை. காற்று இன்னமும் மேகக் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டேயிருந்தது.

'நான் இப்ப முதியோர்களுக்கான இல்லம் ஒன்றிலை இருக் கிறன்... அங்கை என்னை நல்ல வடிவாப் பார்க்கிறார்கள்... பரிசோதிக் கிறார்கள்... ஆனா மாதத்தில ஒரு தடவைகூட வந்துபார்க்க உறவுகளில்லை... இஞ்சபார்... இதுதான் என்ர சாப்பாடு... உலகத்தில இருக்கிற எல்லா நோய்களும் வந்திட்டுது... இந்த மருந்துகள் உடலுக்கு... ஆனா மனதுக்கு... எதுவும் இல்லை...'

அவன் தனது துணிப்பையில் இருந்த மருந்துப்பெட்டியைக் காட்டினான். அதற்குள் பல்வேறு வகை நிறங்களில் மாத்திரைகள் நிறைந்திருந்தன.

'உன்னட்ட ஒன்று கேட்கத்தான் வந்தனான்...'
அவளின் நெற்றி நரம்புகள் புடைத்துப்போக இப்போது அவனை நிமிர்ந்து நெற்றிக்கு நேரே பார்த்தாள் வசந்தி. அவனின் நெற்றியின் ஓரமாக ஆழமான தழும்பு ஒன்றிருந்தது.

ஒருகாலத்தில் அவளை வசீகரம் செய்த கம்பீரமான அவனது உடல் தளர்ந்திருந்தது. விரல் நகங்கள் வளர்ந்திருந்தன. கால்களில் கொளுவியிருந்த காலணிகள் தோலுரிந்திருந்தன.

'நான் இறந்துபோனதாக அறிந்தால் என்னுடலைப் பார்க்க வருவாயா வசு...' குரலில் தளதளப்புத் தெரிந்தது.

அவள் பதறிப்போகவில்லை. அமைதியாக அவளின் பார்வை ஆற்றின்மீது நிலைத்திருந்தது.

பதின்மூன்று ஆண்டுகளின் பட்டறிவுகள் அவளைச் செதுக் கியிருந்தன. ஆனால் அவை பழிக்குப்பழிதீர்க்கத் தூண்ட வில்லை. அவள் எதுவுமே பேசாதிருந்தாள். இந்த அமைதி சம்மதத்தைக் குறிப்பதல்ல என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவும் கூடும் என நினைத்துக்கொண்டாள்.

நேரம் கடந்துகொண்டிருந்தது. தேவாலயத்தின் மணி ஐந்து தடவைகள் ஒலித்து ஓய்ந்தது. இனிப் பறவைகள் கூடையும்... மந்தைகள் பண்ணைகளைத் தேடி விரையும்... மனிதர்களும் எங்கெங்கோ உறையத் தொடங்குவர்... தொடருந்து ஒன்று கடகடத்த படி வேகமாகப் போய்முடிந்தது.

அவனுக்கு அவளின் நீண்ட அமைதி ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கவேண்டும்...

இருக்கையைவிட்டு எழுந்து நின்றான்.

'நான் போயிட்டுவாறன்...' மொட்டையாய் முணுமுணுத்தான்.

அவளுக்குள் புதிதாக பிரிவுத் துயரமோ குற்றவுணர்ச்சியோ ஏதுமில்லை. அவளின் தலைகூட அசையவில்லை.

மெல்ல நடுங்கும் கால்களுடன் ஒற்றை வழியில் நடந்து போய்க்கொண்டிருந்தான் சுந்தரேசன். முதுகில் சிறு கூனலும் தெரிந்தது. எதுவும் அவளின் கவனத்தைச் சிதைக்கவில்லை.

அவள் ஏரியைப் பார்த்தாள். நெளியும் அலைகளின் நடுவே ஒற்றை அன்னப்பறவை இன்னமும் தனியாக நீந்திக் கொண்டிருந்தது.

Aathiluxmy.S@thaiveedu.com





போலிப் பாட்டியும் பேத்தியும்

ஈற்றாலோ கல்வீனோ

தமிழில்: என்.கே. மகாலிங்கம்



(ஈற்றாலோ கல்வீனோ 1923-1985, இவர் கியூபாவின் சான்டியாகோவில் பிறந்து இத்தாலியில் வளர்ந்த இத்தாலிய இனத்தவர். அவருடைய தாய் இத்தாலியை நினைவுறுத்தும் வகையில் ஈற்றாலோ என்ற முதல் பெயரை அவருக்கு வைத்தார். தாய் ஒரு தாவரவியல் பேராசிரியர். தந்தை விவசாய மும் தாவரவியலும் கற்றவர். அவர்கள் முதலில் மெக்சிக்கோவில் வாழ்ந் தனர். பின் கியூபாவிற்குச் சென்றனர். கடைசியில் திரும்பவும் இத்தாலிக்கே சென்றனர்.

ஈற்றாலோ கல்வீனோ ஓர் ஊடகவியலாளர். சிறுகதைகள், நாவல்கள், கட்டு ரைகள் எழுதியவர். மிகுகற்பனை, தொடர் உருவகம், பின்நவீனத்துவப் பரி சோதனைகளைக் கலந்து எழுதியவர். அதற்காக அவர் இருபதாம் நூற் றாண்டில் பெரிதும் கொண்டாடப்பட்ட எழுத்தாளர். Our Ancestors, Cosmi-comics, Invisible Cities, If on a winters night a traveler ஆகியவை

இவருடைய முக்கியமான இலக்கியப் படைப்புகள். அதில் கொஸ்மிகொமிக்ஸ் சிறுகதைத் தொகுப்பு. பிரித்தானியா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் இவர் மிகவும் புகழ் பெற்ற இத்தாலிய எழுத்தாளர். பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டவர். இவர் நாட்டார் கதைகளையும் எழுதிப் பார்த்தவர். இத்தாலியில் நாட்டார் கதைகள் அரிது என்றும் அதனால் தன் சிறுகதைத் தொகுதியில் இரண்டு கதைகளை எழுதிவெளியிட்டார். அவற்றில் ஒன்று இது. லிற்றிள் றெட் றைடிங் போன்ற கதைகள் இத்தாலியில் அரிது என்று தன் குறிப்பில் எழுதியிருக்கிறார்.

இவர் இரண்டாம் உலகமகாயுத்தத்தின்போது எதிர்ப்பு இயக்கத்தில் பங்குபற்றினார். அதன்பின் பொதுவுடமை இயக்க பருவ இதழ்களில் வேலை பார்த்தார்.)

* * *

தாய்க்கு, மா அரிப்பதற்கு ஒரு அரிதட்டு தேவைப்பட்டது. தாய் தன் சின்ன மகளை அழைத்து, உன் பாட்டியிடம் போய் அவளிடம் உள்ள அரிதட்டை வாங்கிவா என்றாள். மகளும் தன்னுடன் எடுத்துச் செல்வதற்கான சிற்றுண்டி தயாரித்தாள். அதில் மோதிர வடிவிலான கப் கேக்குகளும், எண்ணெயுடன் சேர்ந்த பாணும் இருந்தன. பின் அவள் தன் பாட்டி வீட்டுக்குப் பயணமானாள்.

போகும் வழியில் ஜோர்டான் ஆறு குறுக்கிட்டது.

‘ஜோர்டான் ஆறே, நான் போக வழி விடுவாயா ?’ என்று அவள் ஆற்றைக் கேட்டாள்.

‘ஓம், விடுகிறேன். ஆனால் உன்னிடம் உள்ள மோதிர வடிவிலான கேக்குகளை எனக்குத் தருவாயா ?’ என்றது, அது.

ஜோர்டான் ஆற்றுக்கு மோதிர வடிவிலான கேக் சாப்பிட மிகவும் விருப்பம். அதுவும் அதை நீர்ச்சுழியில் சுற்றிச் சாப்பிட மிகவும் பிடிக்கும்.

சிறுமியும் தன்னிடமிருந்த மோதிர வடிவ கேக்குகளை ஜோர்டான் ஆற்றில் வீசினாள். ஆறும் அவற்றை ஏற்றுக் கொண்டு, தன் நீரைதாழ்த்தி அவளைப் போவதற்கு வழி விட்டது.

பின் சிறுமி றேக் என்ற கதவடிக்கு வந்தாள்.

‘றேக் கதவே, நான் போக வழி விடுவாயா ?’என்று அதனிடம் கேட்டாள்.

‘ஓம், உன்னுடைய எண்ணெய் சேர்த்த அந்தப் பாணைத் தந்தால் நான் வழி விடுகிறேன்,’ என்றது, அது.

றேக் கதவுக்கு எண்ணெய் சேர்த்த பாணைச் சாப்பிட நல்ல விருப்பம். ஏனென்றால் அதனுடைய சக்கரங்கள் கறள் பிடித்துப் போய் விட்டன. அவற்றுக்கு எண்ணெய் விட்டால் சக்கரங்கள் நன்றாகச் சுழன்று கீச்சுக் கீச்சுச் சத்தம் வராது என்று அது நினைத்தது.

அந்தச் சின்னஞ் சிறிய சிறுமி தான் வைத்திருந்த எண்ணெய் சேர்த்த பாணை அதனிடம் கொடுத்தாள்.

கதவு திறந்தது. அவள் உள்ளே போனாள்.

அவள் பாட்டி வீட்டுக்குச் சென்றபோது பாட்டி வீட்டின் கதவு பூட்டிக் கிடந்தது.

‘பாட்டி, பாட்டி, நான் உள்ளே வரக் கதவைத் திறந்துவிடு,’ என்று சத்தமாகச் சொன்னாள்.

‘நான் கட்டிலில் படுத்திருக்கிறேன். எனக்குச் சுகமில்லை. நீ யன்னலால் வா,’ என்றாள் பாட்டி.

‘என்னால் அதில் ஏறி உள்ளே வரமுடியாது,’ என்றாள் சிறுமி.

‘அப்படியென்றால் பூனையின் கதவால் வா,’ என்றாள் பாட்டி.

‘அதற்குள்ளால் என்னால் நுழைய முடியாது,’ என்றாள் சிறுமி.

‘சரி, கொஞ்சம் பொறு,’ என்று சொல்லிவிட்டு, ஒரு கயிற்றை மேலே இருந்து கீழே விட்டாள். அதில் அவளை யன்னல் மேலால் இழுத்தாள் பாட்டி. பாட்டியின் அறை இருட்டாக இருந்தது. கட்டிலில் ஒரு மனிதரைப் பிடித்து உண்ணும் அரக்கி கிடந்தாள். பாட்டியைக் காணவில்லை. அரக்கி பாட்டியை சாப்பிட்டுவிட்டுக் கிடந்தது. பாட்டியைத் தலையிலிருந்து கால் வரை அப்படியேசாப்பிட்டுவிட்டது. பல்லை மட்டும் சாப்பிடவில்லை. பல்லை ஒரு கூழ்ப் பானைக்குள் போட்டிருந்தது அரக்கி. பாட்டியின் காதுகளைப் பொரிப்பதற்காக ஒரு சிறிய தாச்சிக்குள் போட்டிருந்தது.

‘பாட்டி, அம்மா உன்னிடம் அரிதட்டை வாங்கி வரச் சொன்னாள்’ என்றாள், சிறுமி.

‘இப்போ நேரம் சென்றுவிட்டது. நாளைக்கு அதைத் தருகிறேன். இப்போ வந்துபடு,’ என்றாள் பாட்டி.

‘பாட்டி, எனக்குப் பசிக்கிறது. முதலில் எனக்கு உண்ண உணவு வேணும்,’ என்றாள் பேத்தி.

‘கொதிக்கும் பானைக்குள் பயறு வேகிறது. அதை எடுத்துச் சாப்பிடு,’ என்றாள் பாட்டி.

பாட்டியின் பல்லை அரக்கி பானைக்குள் தான் போட்டி ருந்தது. பேத்தி, பானையைக் குடைந்து அதற்குள் கிடந்ததை எடுத்துவாய்க்குள் வைத்துக்கொண்டு சொன்னாள்,' பாட்டி, இது கடிக்க முடியாமல், கல்லுப் போல இருக்கிறது.'

'சரி, அப்போ, பொரிக்கும் தாய்ச்சிக்குள் பணியாரம் இருக்கிறது, அதை எடுத்துச் சாப்பிடு,' என்றாள்.

பொரிக்கும் தாச்சிக்குள் காதுகள் கிடந்தன. பேத்தி அவற்றை ஒரு முள்ளுக் கரண்டியால் குத்திப் பார்த்துவிட்டு, 'பாட்டி, இவை முறுமுறுப்பாக இல்லை,' என்றாள்.

'அப்போ, படுப்பதற்குக் கட்டிலுக்கு வா, நாளைக்குச் சாப்பிடலாம்,' என்றாள் பாட்டி.

சிறுமி கட்டிலில் ஏறி பாட்டிக்குப் பக்கத்தில் படுத்தாள். அப்போது பாட்டியின் ஒரு கையைப் பிடித்துப் பார்த்தாள். 'ஏன் பாட்டி, உன் கை முழுவதும் ஒரே மயிராக இருக்கிறது,' என்று கேட்டாள்.

'அது அப்படித்தான். மோதிரங்கள் பலவற்றைப் போட்டி ருந்தேன். அவை அழுந்தி அப்படியாகிவிட்டது,' என்றாள்.

பேத்தி, பாட்டியின் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தாள். 'பாட்டி, ஏன் உன்னுடைய நெஞ்சிலும் அதிக மயிர் இருக் கிறது,' என்றாள்.

அதற்கு, 'என் கழுத்தில் நீளமான சங்கிலிகள் போட்டி ருந்தேன். அவை அழுந்தி அப்படி காய்த்துப் போய் விட்டன,' என்றாள்.

பேத்தி பாட்டியின் இடுப்பைத் தொட்டுப் பார்த்தாள். 'பாட்டி, ஏன் உன்னுடைய இடுப்பிலும் கனக்க மயிர் இருக்கிறது,' என்றுகேட்டாள். 'நான் என்னுடைய உள் சட்டையை இறுக்கமாகப் போட்டிருந்ததால் அங்கே தழும்புகள் வந்து விட்டன,' என்றாள்.

பேத்தி பாட்டியின் வாலைத் தொட்டுப் பார்த்தாள். அவளுக்கு வால் இருக்க நியாயமில்லை. அப்படி அவளுக்கு வால் இருந்ததை நான் ஒருநாளும் பார்த்ததில்லை. அப்படி என்றால் இது மனிதர்களைத் தின்னும் அரக்கியாகத்தான் இருக்கவேணும் என்று நினைத்துக் கொண்டு, 'பாட்டி, நான் நித்திரைகொள்ளுவதற்கு முன் கீழே போய் ஒன்றுக்கு இருக்கவேணும்,' என்றாள்.

அதற்கு பாட்டி சொன்னாள்: 'கீழே போய் தானியக் களஞ்சி யத்தில் இருந்துவிட்டு வா. நான் உன்னை பொறிக் கதவால் கீழே இறக்கி விடுகிறேன். நீ போய் வந்தபின் அதை நான் மேலே இழுக்கிறேன்,' என்றாள் அரக்கி.

பேத்தியை ஒரு கயிற்றில் கட்டி கீழே இறக்கிவிட்டாள். கீழே இறங்கியவுடனே அவள் தன்னைக் கட்டியிருந்த கயிற்றைக் கழற்றிவிட்டு, அதைக் கொண்டுபோய் அதில் ஒரு மறி ஆடொன்றைக் கட்டிவிட்டாள். மேலே இருந்த பாட்டி, 'நீ போன வேலை முடிந்ததா ?' என்று கேட்டாள்.

'ஒரு நிமிசம், பாட்டி.' பேத்தி ஆட்டை நன்றாக இறுக்கிக் கட் டியபின், 'பாட்டி, எல்லாம் முடிந்தது. என்னை மேலே இழுங்கள்,' என்றாள்.

அரக்கி இழு இழு என்று கயிற்றை மேலே இழுத்தாள். 'மயி ருள்ள அரக்கியே! மயிருள்ள அரக்கியே!' என்று கத்தி விட்டு களஞ்சியக் கதவைத் திறந்துகொண்டு ஓடிப் போனாள், பேத்தி. அரக்கி ஆடு கட்டியிருந்த கயிற்றை மேலே மேலே இழுத்தாள். கடைசியாக ஆடு மேலே வந்து சேர்ந்தது. அரக்கி கட்டிலைவிட்டு இறங்கி சிறுமியைத் துரத்திக் கொண்டு ஓடினாள்.

சிறுமி றேக் கதவை அடைந்தபோது, அரக்கி தூரத்தில் இருந்து, றேக் கதவை அழைத்தாள். 'றேக் கதவே அவளை உன் கதவால் போகவிடாதே! போகவிடாதே!'

றேக் கதவு அதற்குப் பதில் சொன்னது. 'சிறுமி எனக்கு எண்ணெய் பூசிய பாண் தந்தவள். அதனால் அவளை நான் போக விடுவேன்,' என்றது.

சிறுமி ஜோர்டான் ஆற்றை அடைந்தபோது அரக்கி ஆற்றைப் பார்த்துக் கத்தினாள். 'ஜோர்டான் ஆறே! ஜோர்டான் ஆறே! அவளை உன்னைக் கடந்துபோக விடாதே!' என்றாள்.

அதற்கு ஜோர்டான் ஆறு பதில் அளித்தது. 'அவளை நிச்ச யமாக போகவிடுவேன். அவள் தன்னிடம் இருந்த மோதிர வடிவ கேக்கை எனக்குத் தந்தவள்,' என்றது.

அரக்கி ஜோர்டான் ஆற்றின் ஊடாகப் போகமுயன்றபோது ஜோர்டான் ஆறு தன் நீரைத் தாழ்த்தி அதைப் போகவிட வில்லை. அதனால் அரக்கி ஆற்றின் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டாள். ஆற்றின் அடுத்த கரையோ ரத்தில் நின்ற சிறுமி அரக்கியைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தாள்.

mahalingam.k@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC



- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial

சுமையான கடன்கனை சுகமான அனுபவமாக்கிட



Raj Subrayam AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000 Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA

Free Home Evaluation.
No Cost. No Obligations



RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN
SELVARAJAH
Sales Representative

416-992-4474

கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

Corporate Bankruptcy	Bankruptcy	Consumer Proposal
$ 5000 to $7000 + HST	$1800 - $3000 + HST	Zero fee

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

"Empowering Financial Freedom"

309-80 Corporate Drive

Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**

Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

creditsolutioncentre@gmail.com





"

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

BUY OR SELL

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

POWER BROTHERS REAL ESTATE



UTHAYAN BROKER SIVARAJAH — 416.301.5555
RAJ BROKER SIVARAJAH — 416.843.3333
KUMAR SALES REPRESENTATIVE SIVARAJAH — 416.453.7777

@uthayansivarajah @uthayansivarajah

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED

INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

MORTGAGE FINANCIAL

Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

SUBRA
MORTGAGE SOLUTIONS



புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



Residential Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

Commercial Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com

Powered by MORTGAGE ALLIANCE

WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | First National Financial LP | radius financial
RFA | Equitable Bank | Home Trust | RMG mortgages | MCAP

O: 1-844-878-2721 | F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்











HOMELIFE HIGHER STANDARDS HomeLife/Future Realty Inc. Brokerage GRAND MASTER CLUB 2021

Chairman's Club Award Winner 2015

Chairman's Club Award Winner 2017

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016

Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Opereated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | **INTEGRITY** | **PROFESSIONALISM**

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272





NO MEDICAL
UP TO $500,000

- $0 first month's premium
- No medical exams
- Simple and straightforward
- 18-80 years can apply

MEDICAL INUSRANCE FOR SUPER VISA

100% REFUND IF VISA DENIED



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

Life100 INSURANCE & INVESTMENTS INC.
La Capitale iA Financial Group

Are you getting Million Dollar advice

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...



வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்
கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
நம்போ தர்மலிங்கம்



KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623

Rambo Tharmalingam
Mortgage Agent Licence # M08006679

5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5

647-290-3416 / 416-543-1111

Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS

EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA

REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA



For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873

SRI LANKA'S BEST CLEARING FACILITIES

COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308

KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59

BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302

OUR AGENTS ACROSS CANADA

Head Office
(905) 673-9873
Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393
Brampton/Mississauga/Halton /Peel region
Neel (647) 891-9445
Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569
Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280
Montreal
Gana (514) 573-0093
Edmonton/Calgary
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com
Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com

United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com



நியூ
ரங்கனாஸ் நகைமாடம்



- சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
- பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- தங்க நகை அடகு சேவை குறைந்த வட்டி வீதம்
- புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்



647-702-2159 | MARKHAM & STEELES YELLOW BUILING

6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6

Daniels FirstHome at Markham & Sheppard

Starting from $299,000

OPENING ON NOVEMBER 6TH



ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?

CONTACT ME FOR REGISTRATION & MORE INFO

416-556-4881

HOMELIFE HIGHER STANDARDS
*Independently owned & operated

HomeLife/Champions Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com

RAVEEN VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE

"Serving With Dignity, Compassion and Excellence"

WELL GUARD INSURANCE
220 Commerce Valley Dr W Suite 480,
Thornhill, ON L3T 0A8

LOTUS Funeral and Cremation Centre Inc.
121 City View Dr, Etobicoke,
ON M9W 5A8.



Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com

Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...



KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623

Kethes Sivasubramaniyam
Licence # M08006105 Mortgage Agent
416-873-5780

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION



Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills



Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca

Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca

1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere

Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எங்களாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Professional Corporation
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
BBA, LLB, LLM
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION «
REAL ESTATE «
FAMILY «
CORPORATE «
EMPLOYMENT «
WILLS & ESTATE «
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX ROYAL PROPERTIES
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
nandakandasamy@gmail.com
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான
கார்பறுதிக் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
President & C.E.O.
416-666-1120
PH28 - 4168 Finch ave. E. Scarborough, ONM1S 5H6

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- தயாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Amazon
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6 WWW.YASMILES.CA

உலகின் முன்னணி காணி,
வீடு விற்பனை நிறுவனமான
RE/MAX முதல் தடவையாக
யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk